உ


சிவமயம்

திருக்களர்
ஸ்ரீ பாரிஜாத வனேஸ்வர சுவாமி
தலபுராணம்
மூலமும் உரையும்.

1965

முதற் பதிப்பு 1965,

முத்தமிழ்ச் செல்வி அச்சகம், 1/65; பிராட்வே, சென்னை-1




திருக்களர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் ஆலயத்தின்
இராஜகோபுரம், திருக்குளம்.


[illegible]

[illegible]






திருக்களர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் ஆலயத்தின்
வெளித் தோற்றம்.




திருக்களர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் ஆலயத்தின்
உள் தோற்றம்.

[illegible]

[illegible]





திருக்களர் ஸ்ரீ அமிர்தவல்லி அம்பாள் ஆலயத்தின்
உள் தோற்றம்

24-1

உ

சிவமயம்

முகவுரை

கடல்புடை சூழ்ந்த பூவுலகிலே இடமகன்ற பரத கண்டமே அறமுதலிய உறுதிப் பொருள்கள் எல்லா வற்றையும் அடைதற்குறு துணையாகும் என்பது உலக மறிந்த தொன்றாகும்.

இத்தகைய பரதகண்டத்தில், தென்றமிழே எங்கும் ஓங்கி வளர்ந்து மிளிர்ந்தது என்பது நுண்புலமுடைய வர் கண்ட காட்சியாகும். நாளடைவில் அச்சீரிய செந்தமிழ், பரத கண்டத்தின் தென்னகத்தை வளரு மிடமாகக் கொண்டு நிலவுகின்ற தென்பதும் உலகம் அறிந்த தொன்றாகும்.

இத் தமிழகத்தில் வழிபாடு புரிந் துறுதிபெறும்படி அறவாழி யந்தணனாகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் சிவதலங்கள் மிகப் பலவாகும்.

அவற்றுள் காவிரியாறு வளங்கொடுக்க நலம் கொடுக்குஞ் சோழவள நாட்டிலே உள்ள சிவதலங்கள்

பலவாகும். அத்தலங்களுட் பெரும்பாலன சம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் மூவர் முதலிகளாற் பாடப் பட்டனவாகும். அவ்வாறு பாடப்பெற்ற பதிகள் பல வற்றுள் திருக்களர் என்னும் சிவப்பதியும் ஒன்ருகும். அப்பதியிலுள்ள சிவலிங்கப்பெருமான் துறவறச் செம்ம லாகிய தூர்வாச முனிவர்பெருமானுல் நிலே நாட்டி வழி படப் பெற்றவராவார்.

இப்பதியிலே முற்றத்துறந்த முனிவர் பெருமானுகிய தூர்வாசர் முதலிய முனிவர்கள் பொருட்டும் உள்ளத் துறவுடைய பிறமுனிவர்கள் பொருட்டும் சிவபெருமான் ஒரு தேவயாண்டுவரை பேராடலே ஆடிக் காட்சி அளித் தனர் என்ப. அக்காட்சியை ஸ்ரீ தூர்வாச முனிவர் பெரு மான் இன்றும் எதிரே நின்று கண்டு இன்புறுகின் றனர்.

இத்திருக்களர்த் திருக்கோயில் நீண்ட நாட்களின் முன்னர்த் தருமபுர மடத்தாரால் போற்றப்பட்டு வந்த தாக அறியப்படுகின்றது. அக்காலத்திறுன் அம் மடாலயத் தொடர்புடைய களப்பாள் ஸ்ரீ ஆதியப்பன் என்னும் அருந்தமிழ்ப் புலவரால் ஆரிய மொழியிலிருந்து இத்திருக்களர்ப்புராணம் நானூற்றுப்பதிெைரு பாடல் களாக மொழி பெயர்க்கப்பட்டது.

இத்திருக்களர்த் திருக்கோயில் பின்னர் நீண்ட நாட்களாகப் பழுதடைந்திருந்ததைக் ஸ்ரீ கோயிலூரில் அக்காலத்தில் ஞானதேசிக மூர்த்திகளாக எழுந்தருளி இருந்த ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக மூர்த்திகளிடம் சில அன்பர்கள் சென்று தெரிவித்து வேண்ட அத்தேசிக மூர்த்திகள் நாட்டுக்கோட்டை நகரதனவணிகருதவி யிஞலே பெரும் பொருளேச் செலவிட்டுப் புத்தம் புதுக்

கோயிலாக அமைத்துத் திருக்குளங்களையுந் திருத்தி, மறைய வரில்லம்; வேதக்கிடைகள், ஆனிலையம், நந்தன வனம், மடாலய முதலியவற்றையும் அமைத்துக் கும்பா பிடேகஞ் சிறக்கச் செய்து திருவிழாச் செய்வதற்குரிய வாகனங்களையும் ஐந்து தேர்களையுமியற்றித் திருவிழா வையுஞ் சிறக்கச் செய்து விதேக முக்தியை அடைந் தார்கள் என்பதும் நாடறிந்த புலமாகும்.

அந்தக் கோயிலூர் ஸ்ரீமுத்து ராமலிங்க ஞான தேசிக மூர்த்திகள் மடாலயத்தில் எழுந்தருளி இருந்த அந்த ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் ஷ திருக் கோயிலின் திருப்பணியைச் செய்வதற்குச் சில ஆண்டு களின் முன்னர் நற்றிணை உரையாசிரியராகிய தமிழறிவு சான்ற பின்னத்தூர் ஸ்ரீ நாராயணசாமி ஐயரவர்கள், திருக்களர். மு. சாமிநாத உபாத்தியாயரவர்களின் முயற்சியால் களப்பாள் ஸ்ரீ கு. சீனிவாச முதலியாரவர் கள் ஷ திருக்களர்ப்புராணத்தை அச்சிடுவதற்காவன வற்றைச் செய்ய ஏடுகளிலிருந்தெடுத்தெழுதிப் பிழையற அச்சிட்டார்கள் என்பது ஷ ஐயரவர்களெழுதிய முக வுரையால் அறியப்படுகின்றது.

அறநிலையப்பாது காப்புத்துறை ஆணையரும் பக்த சிரோன்மணியுமாகிய திரு. உத்தாண்டராம பிள்ளை யவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஷ புராணத்தை மீண்டும் ஷ திருக்களர். கோ. ஆ. வீர. மடாலயம் ஸ்ரீ மகா. கிருஷ்ணனந்தசாமி அவர்கள் மடாலயத்தின் பொருளைக்கொண்டு அச்சிடத் தொடங்கி அதற்கோர் பொழிப்புரை இருந்தால் நலமாகுமென அடியேனிடம் தெரிவித்தார்கள். அடியேன் திருவையாறு. அறுபத்து மூவர் மடத்துத் தலைவரும் சிதம்பரம். கோ. சித. மடலா

யத்தலைவர். ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகளின் சீடரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதருமாகிய ஸ்ரீ பண்டித. சித. நாராயணசாமிகளிடம் தெரிவிக்க அவர்கள் இயைந்து எழுதிய பொழிப்புரை முதலிய உரைகளுடன் ஷை கிருஷ்ணனந்த சுவாமிகள் அச்சியற்றி இருக்கின்றார்கள்.

ஷை புராண உரை எளிய நடையில் யாவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது. புராணம் இயற்றிய ஆசிரியர் கருத்திற்கிணங்கச் சைவ சித்தாந்த கோட்பாடுகளை விடாமல் வேதாந்த சித்தாந்த கோட்பாடுகளுக்கும் மாறுபடாமல உரை இயற்றி இருப்பது போற்றத்தகுந்ததாகும்.
ஷை சித. நாராயணசாமிகள், கோயிலமைப்பு, தேரமைப்புக்களைப் பற்றிய விடயங்கள், தாண்டவ வகைகளின் விளங்கங்கள் முதலியன இன்னும் விளக்கமாக எழுதல் வேண்டும். புலப்பட்ட அளவில் எழுதி இருக்கிறேன். தெரிந்தவர்கள் அறிவுறித்தினல் பின்னர் வெளியிடலாம் என்றார்கள். இதனால், ஷை சித. நாராயணசாமி அவர்களின் அடக்கமுடைமை முதலிய பண்புகள் அறியப் படுகின்றன.

இப்புராணத்தையும் இவ்வுரையையும் பல அலுவல்களுக்கிடையில் அலுப்பின்றி அச்சிடுவித்தவர்களாகிய வேதாந்த சித்தாந்த சாத்திரங்களில் நுண்மாணுழை புலம் உடைய ஸ்ரீ மகா. கிருஷ்ணனந்த சுவாமி அவர்கள் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக குருமூர்த்திகளின் திருவருளால் பல்லாண்டுகளாக வாழ்ந்து இன்னோரன்ன நற்பணிகளைச் செய்து உதவிசெய்வார்களாக என அக்குருமூர்த்திகளின் திருவடிகளை வந்தித்துச் சிந்தித்து வாழ்த்துகின்றனன்.

இப்புராணமும் அதன் உரைகளுமாகியவற்றுடன் ஷ்ரி கிருஷ்ணனந்த சுவாமிகள் எழுதிய திருக்களர் ஆண்டவராகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக மூர்த்திகளின் சரித்திரச் சுருக்கமும் சேர்த்து அச்சிடப் பெற்றுள்ளது.

இங்ஙனம்,

மகா. கோவிந்தஸ்வாமி.

ஸ்ரீ நாராயண தாண்டவேஸ்வர ஸ்வாமி ஆலயம்

நன்னிலம்.

தஞ்சை மாவட்டம்.

உ

ஸ்ரீ கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

மூலம் மட்டும் அச்சிட்ட முதல் பதிப்பின் முகவுரை.

கடல்புடைசூழ்ந்த நெடுநிலவரைப்பில்
ஏனாட்டிய புகழ்ச் சோணாட்டிடையே
மூவா முக்கண் மூர்த்தி யோவா
ஆடல் கொண்டருளிய பாடல் சால் சிறப்பின்

மருக்கிளர் பொழில் சூழ் திருக்களரென்னுந், திவ்ய க்ஷேத்திரத்திற்கு 'அருந்தமிழ்த் திறந்தேர் ஆதியப்பன்' என்பவராலியற்றிய இப்புராணம் மிக்கசிதைவுற்ற பிரதி ஒன்று எனக்குகிடைக்கப்பெற்று அதனைப் பெயர்த்து எழுதிவருங்காலத்தில் திருக்களரிலிருக்கும் **மு. சாமிநாத உபாத்தியாய** ரென்பவரிதனைக் கேள்வியுற்று அடுத்த களப்பாள் ஸ்ரீமாந் கு. ஸ்ரீநிவாஸமுதலியாரவர்களிடத்தில் தெரிவித்து அவர் முயற்சியால் என்னிடம்வந்து இப்புராணத்தை அச்சிடுதற்காவனவற்றைச் செய்ததுமன்றி இன்னம் இரண்டு ஏட்டுப்பிரதிகளும் சேகரித்து என்னிடம் கொடுத்தனர்; அம்மூன்றுபிரதிகளையும் ஒருசேரவைத்துப் பரிசோதிக்கும்போது சிலவிஷயங்கள் விளங்காமலே பிழைபட்டவண்ணமாகவிருந்தன; அதனையறிந்த பின்னத்தூர் ப்ரஹ்மஸ்ரீ **ஸா. சுந்தரசாஸ்திரிகளவர்கள்** தம்மிடமிருந்த திருக்களர் ஸம்ஸ்கிருதபுராணப்பிரதி ஒன்றனை அன்போடு உதவினார்கள்; அதனைக்கொண்டு ஒருவாறு திருத்தி அச்சிட்டனன்.

இதன்மத்தியில் யான் நேரில் முற்கூறிய திருக்களருக்குச் சென்றபொழுது அவ்வூர்க்கோயிலிலுள்ள செப்பேட்டுச் சாதனங்களையும் அக்கோயிலிலெழுதப்பட்டுள்ள சிலாசாதனங்களையும்நோக்கி அவற்றையுஞ் சேர்த்து வெளியிட்டால் பண்டைக்காலத்து விஷயங்கள் சில புலப்படுமென்றெண்ணி அங்ஙனமே சிதைவுற்றவையன்றி மற்றவற்றை எழுதி இதனோடுசேர்த்துப் புராணவசனச் சுருக்கமும் எழுதி அச்சிட்டிருக்கிறேன்.

மேற்கூறிய சாதனங்கள் வடவெழுத்து விரவப்பெற்றிருந்தமையால் தமிழ்மாத்திரம் பயின்றோர் வாசித்தற்கு இயலாதென்று அவற்றைத் தமிழெழுத்தாகவேமாற்றி எழுதியிருக்கிறேன்.

யான் திருத்தியவற்றில் பிழைகள் மிக்கிருப்பனவாயினும் அவற்றை அறிவுடையோர் பொறுத்தருளும்படி வேண்டுகிறேன்.

சுபகிருது ஞு ஆடிமீ கருஉ } **அ. நாராயணசாமி ஐயன்.**
பின்னத்தூர்.

மூலம்மட்டும் அச்சிட்ட முதற்பதிப்பின் பகுதி.

நூலாசிரியர்:—இவர் தருமபுரவாதீனம் அழகிய சிற்றம் பலதேசிகர் காலத்தவரென்று சிறப்புப்பாயிரத் தாலறியப் படுதலின் (உஉ) வதுபட்டம் அழகியசிற்றம்பல தேசிகர் தொடங்கி (க0) பட்டம் நடந்திருப்பதால் உத்தேசம் 200 வருஷத்துக்கு முற்பட்டவரென்று சொல்லலாம். அக்காலத்தில் திருக்களர் க்ஷேத்திரம் தருமபுர வாதீனத்தார் விசாரணையிலிருந்ததென்று தெரிவதால் அவர்கள் கட்டளையிட்டபடி இவர் பாடினரென்று சிறப்புப்பாயிரத்திற் கூறியதும் அமைவாகவே யிருக்கிறது. மற்றும் இவரது சரித்திரமானது இன்னம் பலவித்வான்கள் சரித்திரத்தோடு வெளிவரக் கூடுமெனில் அக்காலத்திலறிந்து கொள்க.

திருக்களர்:—இவ்வூர் தஞ்சாவூர் ஜில்லா மன்னர்குடித் தாலூகாவைச்சார்ந்தது; மன்னர்குடியிலிருந்து திருத்துறைப் பூண்டிக்குப்போகிற ரோட்டின் (11) வது மயிலிற் பிரிந்து முத்துப்பேட்டைக்குச் செல்லுகிற மார்க்கத்தில் மூன்றுவது மயிலிலும் திருத்துறைப்பூண்டி ரெயில்வேஸ்டேஷனிலிருந்து மேற்கே (5) மயில் தூரத்திலுமுள்ளது.

சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த தேவாரப்பதிகம் பெற்றுள்ளது.

பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்.

" மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி
மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம்
பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப்
பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக்
கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறியுள் ளிட்ட
கனகமதில் திருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித்
திருமறைக்கா டதன்மருங்கு சென்று சேர்ந்தார்"
(576)

என்றசெய்யுளால் ஆளுடையபிள்ளையார் இவ்வூர் வழியே திருமறைக்காட்டுக்குச் சென்றருளினாரென்றும் ஷெ புராணம்.

"பொன்னிவளந் தருநாடு புகுந்து மிக்க
பொருவில்சீர்த் திருத்தொண்டர் குழாத்தி னோடும்
பன்னகப்பூ ணணிந்தவர்தங் கோயி லூறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச் சென்று
கன்னிமதில் திருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் பாதாளீச் சுரமும் பாடி
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க் கரையணைந்தார் முந்நூன் மார்பர்".
(896)

என்ற செய்யுளால் ஆளுடையபிள்ளையார் மதுரையி லிருந்து மீண்டு சோழநாடு புகுந்து இவ்வூர்வழியே சென்றருளினரென்றும் தெரிகிறது. இவ்வூரின் பிரதிநாமங்கள்:—களரி, கற்பகவனம், தருவனம், பாரிஜாதவனம், மந்தாரவனம். என்பன.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த
க்ஷேத்திரக்கோவை.

"மண்ணிப்படிக்கரைவாளொளிபுற்றூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிறப்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளாக்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே." (6)

இதனுள் மந்தாரமென்பது திருக்களரிணைப் போலும். இவற்ருலும் புராணகதைகளாலும் இத்தலத்தின்சிறப்பை ஆராய்ந்தறிந்து கொள்க.

திருக்களர்

செப்பேட்டுச்சாதனங்கள்.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன்முடித்தலையுங்கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு-26வது திருக்களர் முளைத்த நாயனர்கோயில் திருவாபரணத்துக்கு முதல் குடிணைக்கல்லிடை திருக்கோளகை (1) ம், இதன் மேல் பர்மமும் உட்பட வு அரையேஅரைக்கால் மாறி பொன் நூற்றொரு கழஞ்சரை இதன்விளிம்பிற்றிரைத்த வெள்ளி

பதினாறு கழஞ்சேமுக்கால். திருவோதாரமாலை பொற்பூபதினாறினால் வு இ மாறிபொன் பன்னிருகழஞ்சு. திருவுத்தரியம் (1) னால் வு அரை மாறிபொன் இருகழஞ்சே நாலுமஞ்சாடியும் ஆறுமா. திருப்பிறை (1) னால் வு முக்கால் மாறி பொன் முக்கால். கன்னபுஷ்பம்(3) னால் வு பொன் இரு கழஞ்சேகால். திப்பட்டிகை பலகை (1)னால் வு வ. மாறி பொன் அறுபத்து நாற்கழஞ்சரை இதன்விளம்பிற்றிரைத்த வெள்ளி பத்தொன்பதின் கழஞ்சரையே நாலுமஞ்சாடியும் ஆறுமா. இதனுள் பலவிடத்துந்தைத்த இடை ஆறரைப் பலம். அன்னியுடையாரிட்ட பொற்பூ (1) னால் பொன் கழஞ்சு, இது கோத்தவெள்ளிக்காறை (1) னால் வெள்ளி அரைக்கழஞ்சு 21 வது மாளிகைமூல பண்டாரத்தினின்றும் வந்த திருப்பட்டம் (1)னால் பொன் ஏழுகழஞ்சேகால். திருப்பள்ளியறை நாச்சியாக்கு சாத்துகிற சிவதாலிசமமணி (1)னாலும் பொன் இரண்டுமஞ்சாடியும் நாலுமா. இதுமாற்று வு அரை இது கோத்தகாறை (1)னால் வெள்ளிக்கால் திருமங்கலநாண் சமதாலி சமகொக்குவாய் ப அரை கண் உட்பட 9 மாறி பொன்கழஞ்சு. அரவாபரண தேவர்க்குச் சாத்தியருள 23வது பொதிமங்களமுடையான் இராசாண்டானான சோழவிச்சாதரப் பல்லவதரையர் செய்வித்த திருவாசிகை (1) னால் வப மாறி பொன் இருநூற்றைம்பத்து ஐங்கழஞ்சேகாலே மூன்றுமஞ்சாடியுமஞ்சுமா:— அபிஷேகம்(1) னால் 9அரை மாறிபொன் பதினாறுகழஞ்சரை. இத்தேவர் திருவாரம் (1) னால் 9வ மாறிபொன் நாற்கழஞ்சே முக்காலே இரண்டுமஞ்சாடியும் ஏழுமா. இவர் திருத்தோடு (2)னால் வு வ. மாறிபொன் முக்கழஞ்சு. இவர் நாச்சியார் அபிஷேகம் (1)னால் வு மாறி பொன்பதினன்கழஞ்சு. இவர்திருவாரம்(1)னால் வு அரை மாறிபொன் இருகழஞ்சேகால். இவர் தோடு (2)னால் வு அரை மாறிபொன் இருகழஞ்சு திருவட்டமணி (24) னால் வு அரைமாறி கழஞ்சரை. திருவட்டமணிவடம்(1)னால் மணி 30 னால் வு அரைமாறி

பொன்கழஞ்சே இாண்டுமஞ்சாடியும் நாலுமா.திருவட்டமணி வடம் (1)னல் மணி 40னல் வு மாறிபொன் ப முந்திரியின் கீழ் இரண்டுமா திருவட்டமணிவடம் (1) னல்மணி 40னல் வுமாறி பொன்இருகழஞ்சு. திருச்சிலம்பு ஒரிணையினல் வு முக்கால். மாறி பொன் நாற்கழஞ்சு. நிறைதவஞ்செய்த நாச்சியாருக்கு சாத்தியருள திருவையாவுடையாரிட்ட திருவ பிஷேகம்(1)னல் 9மாறி பொன்பதினைங்கழஞ்சரை. திருநெற் றித்திரணை (1)னல் வு அரைமாறி பொன் ஐங்கழஞ்சேகால். திருமங்கல நாண்சமதாலி கடைத்தோறுட்பட வு அரைமாறி பொன்கழஞ்சு. திருத்தாவடம் (1)னல் மணி (41)னல் 9 மாறி பொன்கழஞ்சு. திருக்கைச்சரி (4)னல் 6 மாறி பொன் இருகழஞ்சே முக்காலே மஞ்சாடி, வெள்ளிமணி 35 னல் வெள்ளி முக்காலே இரண்டுமஞ்சாடியு மூன்றுமா. வெள்ளிக் காறை (1) னல் வெள்ளி முக்காலே இரண்டுமஞ்சாடி இதில் கோத்ததாலி (1)னல் வு அரைமாறிபொன் அரைக் கழஞ்சு. திருத்தோடு (2) னல் வு முக்கால் மாறிபொன் கழஞ்சரை. திருவாரம் (1) பொன்.............................. சிரச்சக்கரம் (1)னல் 9 மாறிபொன் இருகழஞ்சு. திருக்கண் டாவளி (2)னல் 9 மாறிபொன் முக்கால் உடையார்க்கு திருமஞ்சனத்துக்குச் சாத்தியருள உடையார் சோழவிச் சாதரப் பல்லவதரையர் இட்ட திருவுத்தரியம் (1) னல் முக்காலே நாலுமஞ்சாடியும் ஆறுமா. மாற்றுகாசுமித் திருவாசிகைப்புரிமத்தில் பாம்பு (1) னல் பொன்கழஞ்சே முக்காலே இரண்டுமா.

2. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் குலோத்துங்க சோழதெவர்க்குயாண்டு இருபத்தெட்டாவது இராசேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களருடைய மாதேவர்க்கு அமாவாசி அரவாபரணதேவர் திருவிழா வெழுந்தருளுகைக்கு அற்றைநாளில் தேவர் பெரும் திரு வமுதுசெய்விக்கவும் ஸ்ரீ மூலத்தானமுடையார் அமுதுசெய்

தருளவும் அற்றைநாளில் தேவரடியாரை அமுதுசெய்விக் கவும் நென்மலிநாட்டு தண்ணீர்க்குன்றமுடையார் சிவன் தில்லைநாயகன் பக்கல்கொண்ட நம்பிசெய்த உபயமாவது இக் கோயில் சிவப்பிராமணர்களில் திருவெண்காடன் பட்டனும் காசியவாக்காருயிலமுளைச்சானும்-கௌசிகன் ஆதித்தன் ஆடவல்லானும் உள்ளிட்ட சிவப்பிராமணரும் இவர்பக்கல் இவ்வாட்டை வைகாசி மாசத்து நாங்கள் பொலியூட்டுக்கொண்டமுதல் நெல்லு அறுபதின் கலத்துக்கு கலத்துக்கு முக்குருணியாக பலிசைப்பொலியும் நெல்லு பதினைஞ்சுகலத்துக்கும்செலவாக அமாவாசிதோறும் கலனே முக்குறுணியாக சந்திராதித்தவரைமுகநின்றேமே செயக்கடவோமாகவும். இவ்வூர் அரவாபரண நாடு நீதபாதமான திருச்சிற்றம்பலக்காலான் அரவாபரணன் இயபாநாதனம் ஆடவலான் அன்புருவனான பத்தகநாயக பிச்சனும் அரவிகுதக்குரகனான நாற்பத்தெண்ணாயிரப் பிச்சனும் கத்தன்கங்கைகொண்டானான சிவசரணசேகர மூவேந்த வேளானும் இவை சிவன் தில்லைநாயகன் பக்கல் நாங்கள் உப்பயம்பண்ணிப்பொலியூட்டுக்கொண்ட நெல்லு நூற்றுஇருபதின் கலத்துக்கும் கலநெல்லுக்கு முக்குறுணி யாக ஒராட்டை நாளைக்குப் பலிசைநெல்லு முப்பதின்கலம் அமாவாசி ஒன்றுக்கு நெல்லு இந்த கலநெல்லில் பதக்காகத் தேவர் அடியார் மூலமங்கலம் அமுது செய்விக்கக்கட வோம் எங்களில் அனைவரும் சந்திராதித்தவரை ஸ்ரீமாஹேச்சுரர் பிகணபெற்றமாஹேசுவரக்காணியாநிற்க யினவாரெழுக.

3. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவர்க்குயாண்டு இருபத்தெட்டாவது நானூற்றெண்பதில் இராசேந்திரசோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக் களர் முளைத்த மாதேவர்க்கு அமாவாசி எழுந்தருளி தேவரடியாரை அமுதுசெய்விக்கச் சுங்கந்தவிர்த்தருளின

குலோத்துங்க சோழதேவர்க்கு இடுபத்தெட்டாவது தண்ணீர்க்குன்றமுடையான் சிவன்தில்லைநாயகன் பக்கல் இத்தேவர் திடுமடைக்கத்திடுக்கும் ஆண்டார்கள் உபயமாக் கொண்டநெல்லுக்கு அமுது செய்விக்கும்படி முன்புவெட்டின செப்பேட்டுப்பட்டியில் உபயங்கொண்டு அமுதுசெய் வித்துவயுகிற ஆண்டார்களில் ஆண்வழியற்றுப் பெண் வழியான கொத்துக்கு, அமுதுசெய்விக்கும்படி கனகரார்யரும் ஸ்ரீமாஹேசுவரர் அறுதிபண்ணுகிற இடத்துப்பொலியூட்டுப் பெண்வழியும் வருமென்று ஸ்ரீ மாஹேசுவரர் நிச்சயித்த மையில் இப்படிச்சம்மதித்துப் பெண்வழியிலார் இட்ட திட்டப்படி ஆடவல்லான் பூர்வசிவன் பத்தகநாயகப் பிச் சன்மகளைக்கொண்டகண்பெற்ருன், மன்றுநிறைந்தாளுன், அன்பர்க்கடியான் அமுதுசெய்விக்கும்பேர் மூன்று. இவன் கொழுந்திமகன் தேவன் மாரன் உள்ளிட்டார் அமுதுசெய் விக்கும்பேர் மூன்று ஆண்வழி திருச்சிற்றம்பலக்காலான் அமுது செய்விக்கும் ஐஞ்சுகூருட்டிரருண்பேரால் போட எந்நாளும். அமுதுசெய்விக்க.

4. ஸ்வஸ்தி ஸ்ரீ

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன் பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடுந்

5. தொடர்வன வேலிப் படர்வன வாசியுஞ்
சுள்ளி சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையு
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடகமும்
பொருகட லீழத் தரசர்த முடியு
மாங்கவர் தேவிய ரோங்கெழின் முடியு

முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திரனாரமுந்
தெண்டிரை யீழ மண்டல முழுவது
மெறிபடைக் கேரளன் முறையிற் சூடுங்
குலதன மாகிய பலர்புகழ் முடியுஞ்
செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவுஞ்
செருவிற் சினவி யிருபத் தொருகா
லரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
யிருத்திய செம்பொற் றிருத்திய முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடும்
பீடிய லிரட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்வட வெல்லை மதுரைமண் டலமுங்
காமிடை தருவள நாமணைக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமு
மயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் றொல்குலத் திந்திர தனை (யனை)
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையுங்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்

பூசுரர் சேர்நற் கோசலை நாடுந்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணாகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தெக்கண லாடமுங்

கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமுந்
தொடுகழற் சங்கு வொட்டல் மஹிபாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமு

நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையு
மலைகடல் நடுவட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசயோத் துங்க பன்ம
னாகிய கடாரத் தரசனை வாசியம்

பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பெருக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப் போர்த்தொழில் வாயிலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமு

நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றொன்மலை யூரு
மாழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமுங்
கலங்கா வல்வினை யிலங்கா சோகமுங்
காப்புறு நிறைபுனன் மாப்பப் பாளமுங்

காவலம் புரசை மேவிலிம் பங்கமும்
விளைப்பைந் தூறுடை வளைப்பந் தூறுங்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமுந்
தீதமர் வல்வினை மாதமா லிங்கமுங்
கலாமுதிர் கடுந்திற லிலாமுரி தேசமுந்

தேனக்க வார்பொழின் மாநக்க வாரமுந்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமு

மாப்பொரு தண்டாற் கொண்டகோப் பரகேஸரிவர்மரான உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழதேவர்க்குயாண்டு இருபதின் எட்டாவது [அருமொழிதேவர் நாட்டுப்புறங் கரம்பைநாட்டு ஸங்கூருக்களத் திருக்களர் மஹாதேவர் தேவதானம் நிலம் இறையிலியாகவும் வந்த நிலவணையர சுற்றும் சிதக்குறவு உள்ளடங்கா வீரபாண்டியனறலையும் சோலை சாலையும் லங்ககயும் தண்டார் கொண்டசரராஜ கேசரிவர்மரான உடையார் ஸ்ரீ ராஜ ராஜதேவர்க்குயாண்டு 20ஆவதுஅதரமாநாகநாயகனுன மஹிபால குலகாலப்பிராமணருக்குருமணப்பிச்சன் உடையார்க்கு முன்பு திரவார்திரை செயும் பிராமணந்தேவனும் தாமண்டப் பிச்சன் சேதனி வந்தங்கொண்டு செயும்பிராமணன் தாவனுமாக இரவாகுள × கு இ கவ ஆகள ஒ ரரரரரய ரரஅரையா விட்டநி × வகுத்தறுப்பு திருவாணை || o]

இவ்விஷயங்கள் செப்பேடு ஐந்திலிருந்தெடுக்கப்பட்டன. பிராகெட்டுக்குள்ளடங்கியவை செப்பேட்டில் விளக்கமாகத் தெரியவில்லை.

சிலாசாதனங்கள்.

சுவாமி சந்நிதி பெரியமண்டபம் உட்பக்கம் மேலைச்சுவர் வடபக்கம்.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர்க்குயாண்டு 3 வது இராஜேந்திர சோழவள நாட்டுப்புறங்கரம்பைநாட்டு உடையார் திருக்களருடையாயர் கோயிற்காணியுடைய சிவப்பிராமணரில் கௌசிகன் ஆட விடங்கப்பட்டனும் இக்கோத்திரத்துப் பஞ்சவன் மஹா தேவிப்பட்டனுள்ளிட்டோமும் அரவாபரணப்பட்டனுள்ளிட் டோமும் நியாயபரிபாலப்பட்டனும்ஆலாலசுந்தரப்பட்டனுள் ளிட்டோமும் சிவபட்டனும் மூவாயிரப்பட்டனுள்ளிட்டும்இவ் வணைவரும் இக்கோயில் ஸ்ரீ மஹேஸ்வரக் கண் காணி சிறுகுடையான் மறைதேடும்பொருள் பேரம்பலக்கூத்தர் பக்கல் நாங்களுடையமாகத்திருநந்தாவிளக்கெரிக்கக் கைக் கொண்டகாசு-ா-இக்காசு நூறுக்கும் நாள் ஒன்றுக்கு பொலிசையால்வந்த எண்ணெ யாழாக்குக்கொண்டு நித்த மொரு திருநந்தாவிளக்குச் சந்தி ராதித்தவரை செலுத்தக் கடவோமானோம் இவ்வணைவோரும்.

மஹாமண்டபம் தென்புறம் வெளிச்சுவர்.

(2) ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ குலோத் துங்க சோழதேவர்க்குயாண்டு 4வது இராஜேந்திர சோழ வளநாட்டுப் புறங்கரம்பைநாட்டு பிர்மதேயம் ஸ்ரீ குலோத் துங்க சோழச்சதுர்வேதிமங்கலங்கடக நாயிறுமுதல்......... கிராம காரியம் செலுத்துகிற கூட்டப்பெருமக்கள் எழுத்து இந்நாட்டுத்திருக்களருடையார் கோயிலில் தானத்தார் கண்டு இந்நாயனுர் கோயிலில் கருணாகரத்திருமண்டபத் துக் கீழைத்திருவாசல் தென்பக்கம் எழுந்தருளியிருக்கும்

மூவாயிர விநாயகப்பிள்ளையாருக்கு (4)வது முதல் ஊர்க் கீழிறையிலியாகவிட்ட எங்களூர்ப்பிடாகை திருச்சிற்றம்பல நல்லூர் ஸ்ரீ பிரும்மாவாஸ்துவுக்குக் கிழக்கு, ராஜாதிராஜ வாய்க்காலுக்குத்தெற்கே மூன்றுங்கண்ணுற்றூரறலாத்துண் டத்துவடக்கடைய நிலமூன்றுமா நீக்கி இதன்தெற்க்கு நாங்கள்நீர்வார்த்தநிலம் இரண்டுமா. இந்நிலம் இரண்டு மாவால்வந்த மடக்கு ஊரிலோரட்டும் இறுக்கக்கடவோ மாகவும்; இந்நிலத்தால்வந்த மடக்குக்கு ஆண்டாண்டு தோறும் ஊரமாயிந்தக்கடமையிலே அந்தராயத்துக்கு இவ்வூரில் தேவர்கள் சிவநாமத்து எழுதினநிலங்கள் அந்தராயம் இறுத்தபடி இறுத்து அல்லாதது பிள்ளை யாருக்குத் திருப்படிமாற்றுக்கு உடலாவதாகவும்; இந்நிலம் இவ்வாண்டுமுதல் கைக்கொண்டு இந்த நியோகப்படி கல் வெட்டிக்கொள்ளக்கடவதாகச் சொன்னோம்.

இதன் மேற்கு

ஸ்வஸ்திஸ்ரீ இராஜேந்திர சோழவளநாட்டுப் புரங் கரம்பை நாட்டுத் திருக்களருடையார் கோயிலில் தேவகண் மிகளுள்ளிட்ட பலமணியந்தக்கரமாகக்கண்டு உடையார் கோயில் ஸ்ரீமாஹேச்வரக்கண்காணியும் திருப்பதிகக்காணியும் நம்தேவாரத்துக்குத் திருப்பதிகம்பாடும் பெரியான்றனித் தேடும் பொருளான் அருளங்கயினனுக்கு அவன் வம்சத்தார்க் கும் காணியாகக் கண்காணிக்கச்செய்யக் கடவன்; இவனி றித்தி னவன்கண்காணிப்பட்டுப் பட்டுச் செய்யப்பண்ணி இப்படி கணிவட்டம்பண்ணுக; இத்திருவாய்மொழிந்தருளின திருமுகப்படி. சுவஸ்தி.

இதன் மேற்கு மேல்

—※—

4. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேஸ்வரன் அரியராயவிபாடன் பாஷைக்குத்தப்புவராதகண்டன் மூவராயர்கண்டன் ஸ்ரீ வீரஅரிஹரஉடையார் குமாரன் ஸ்ரீ வீர விருப்பண்ண உடையார் இராச்சியம்பண்ணியருளாநின்ற சகாப்தம் ௲.... ...... மேல் செல்லாநின்ற ஸ்ரீமுகவரு மகரநாயிற்று அமர பக்ஷத்து சோதியும் நவமியும்பெற்ற ஞாயிற்றுக்கிழமைநாள் இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத்திருக் களருடையார் அடைந்தார்க்கருள் செய்யாநின்ற நாயனுர் கோயில் திருக்களர் முளைத்த உடையார் திருமடத்து முதலி களும் தனிமாஹேசுரரும் உள்ளுக்கோயில் மாஹேசுரரும் கைக்கொள்முதலுக்கு..................மந்தாகாரரும் எல்லோரும் நிறைவறநிறைந்து குறைவறக்கூடிக் கருணாகரத்திரு மண்டபத்தில் வந்திருந்து ஜெயசிங்க குலகாலவளநாட்டுத் தானவநாட்டுக் கண்டியூரில் காணியுடைய ஆண்டார்களில் மண்ணகமுடையான் வனத்தான திருநட்டப்பெருமாள் முன்னால் பிறசோற்பத்திவருஷம் க்ஷாமத்திலே இக் கோயிலுக்கு முதலும் இந்நாபனுர் பூசையும் சூனியமாய்த் திருப்பணியும் இன்றிப் பரில்ரமுங்குலைந்து போகையில் இந்நாளிலே இத்திருநட்டப்பெருமாள் தன்னுடைய முதலிலே நானூறு பணமும் இட்டுப் பூசையும் திருப் பணியும் நடத்திப் பரிகரமுஞ்சேர்த்துக் குடியும்அமர்த்திப் பயிர்செய்வித்து நடத்திப்போதுகையில் உடையார் அடைந் தார்க்கருள்செய்த நாயனுர் திருவாய்மலர்ந்தருளி சண்டே சுவரத்திருமுகங்கொடுத்தருளின மாடாபத்தியம், உட்கண்

காணி, இராசியம், எழுத்து, இலச்சினை இவையும்கொடுத்து இவனுக்குக்கொடுத்த மனையாவது சந்நிதித்தெருவில் தெற்கு வாஸ்து முடிந்தமனையும் இந்தமனைக்குஉரித்தான புழைக் கடைதெற்குஓடையளவும் இதில்மேனேக்கிய மரமுங் கீழ் நோக்கிய கிணறும் மற்றும் எறப்பிய பட்டசமுறகப் பிராப்தியும் சந்திராதித்தவரையும் காணியாட்சியாகப் பெறக்கடவனுகவும்; இந்தக்காணியாட்சி இவனுக்கு தானுதியும் விற்று ஒற்றிக்கிரையங்களுக்குரித்தாவதாகவும்; இப்படிக்கு நாயனுர் அடைந்தார்க்கருள் செய்த நாயனுர் திருவாய்மலர்ந்தருளி சண்டேசுவரத் திருமுகங்கொடுத்தருளினது ஸ்வஸ்திஸ்ரீ

இதன் கீழ்

5. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்குயாண்டு 12-வது திருக்களரிலிருக்கும்வெள்ளாட்டி **சொறின் செல்கலென்** திருக்களருடைய மஹாதேவர்க்கு சனி யெண்ணெய்க்காப்புச்சாத்தப்பொலீயூட்டு இக்கோயிலில் சிவப்பிராம்மணர் உய்யக்கொண்டான்பட்டனும் மஹா தேவப்பட்டனும் தருணேந்துசேகரப்பட்டனும் மூவாயிர சோகியும் அரவாபரணப்பட்டனும் நாற்பத்தெண்ணுயிரப் பட்டனும் இவ்வனைவரும் மேயசனிதோறும் ஆழாக்குத் திருவெண்ணெக்காப்பும் மஞ்சள் நெல்லிமாக்காப்பும் திருவமுதரிசி நானுழியும் கறியமுது ஐம்பலமும் நெய் யரெப்பிடியும்......ருஇத.........பிடும்தயிர் உரையும் பாக்கு நாலும் இலைஎட்டும் உப்பும் சந்திராதித்தவரை செலுத்தக் கடவர்களாகக் காசு ஐஞ்சும் கொடுத்துப்பொலியூட்டுச் செய்தேன் **சொறின்செல்கலென்**

இதன் மேற்கு மேல்.

6. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கிரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்குயாண்டு 11-வது இராஜேந்திரசோழவளநாட்டுப் புறங்கரம்பைநாட்டுத் திருக்களர் முளைத்ததேவர்கோயில் காணியுடையசிவப்பிராம்மணர் கௌசிகன் அரவாபரணப்பட்டனும் இராராப்பட்டனும்சிறுபட்டனும் கொதுகுலப்பட்டனும் உய்யக்கொண்டான்பட்டனும் மூவாயிரப்பட்டனும் பஞ்சவன் மாதேவிப்பட்டனும் இவ்வனைவோரும் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேலமலைப்பழையனூருடையான் வேத வன உடையான் கருணாகரத்தேவராண்டார் கோனூர் பக்கல் நாங்கள் பழையனூர் உபயமாகத் திருக்களரில் விளக்கெரிக்கைக்குக்கைக்கொண்ட காசு நூறு இக்காசு நூறுங்கைக்கொண்டு இக்காசால்வந்த பலிசைக்கு நித்தம் உழக்கெண்ணெய்கொண்டெரிக்குந் திருநுந்தாவிளக்கொன்றுஞ் சந்திராதித்தவரை எரிக்கக்கடவோமானோம் இவ்வனைவோரும்

இதன் கீழ்.

7. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரன் ஆரியராச விபாடன் பாஷைக்குத் தப்புவராதகண்டன் மூவராயர்கண்டன் ஸ்ரீவிரபூபதிஉடையார் பிருதுவிராச்சியம்பண்ணியருளாநின்ற சகாப்தம் 1343ன்மேல் செல்லாநின்ற சார்வரிஷு மிதுனநாயிற்று அமரபக்ஷத்துப் பிரதமையும் மங்களவாரமும் பெற்றமூலத்தினம் இராஜேந்திர சோழவளநாட்டுபுறங் கரம்பைநாட்டுத் திருக்களர் நாயனுர் அடைந்தார்க்கருள் செய்யாநின்ற திருக்களருடையார்கோயில் முதலிகளும் மாஹேசுரரும் தேவகன்மிகளும் வைகாசித்திருநாளில் திருத்தேருடையான் திருமண்டபத்தில் நிறைவறநிறைந்து குறைவறக்கூடி ஆதிசண்டேசுரதேவர் திருவாய்மலர்ந்தருளின படிக்கு கண்ணுப்பெருமாள் மானங்காத்தபிச்சற்குப் பல முதல் கண்காணி காணியாட்சிகொடுத்த இந்நாள்முதல்

இக்கோயில் பலமுதல் கண்காணித்துடைத்தும், இலச்சி ணையும், இராசயமும் இவர்க்குக் காணியாட்சியாகக்கொடுத் தருளினமைக்குக் கோயிலில் பெரும்பலசுவந்நிறங்களும் தெற்கில்திருவீதியில் இவர்க்கு சாமநாயகமாகக்கொடுத்த மணைக்குக் கிழக்குமனை ஒன்றும் மணைப்புழக்கடையும்மேல் நோக்கியமரமும் கீழ்நோக்கிய கிணறும் ஸர்வமான்யமாகச் சந்திராதித்தவரையும் அனுபவிக்கக்கடவராகவும். ஒற்றிவிக் கிறையங்களுக்கும் உரித்தாகக் கோவிலுக்குத் திருப்பணி நடாத்தில்ஒடுக்கினவெள்ளைபணம்உா இப்பணம் இரு நூறும்கொண்டு.........நடத்த செலவப்ப............மடத்தில் முதலிகளுமாஹேஸ்வரரும் உள்ளூர்(தான)த்தாரும் கோயிலி லுள்ள பரிகரத்தாருங் கல்வெட்டிக்கொடுத்தமைக்கு இது பன்மாஹேசுவரர் இரக்ஷையாகக் கல்வெட்டினேன். இவ்வூர் காணியுடைய சிற்பரில்பத்தராவி சோழமண்டல ஆசாரியன் எழுத்து.

அர்த்தமண்டபம் தென்புறம் வெளிப்பக்கம்.

8. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் ஸ்ரீ இரா ஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு 2-வது இராஜேந்திர சோழவளநாட்டுப்புறங்கரம்பைநாட்டு திருக்களருடைய நாய ஞர்கோயிற் காணியுடைய சிவப்பிராம்மணரில் கௌசிகன் ஆடவிடங்கப்பட்டனுள்ளிட்டு சிவநாமதேவிபட்டனுள்ளிட் டோமும் அரவாபரணப் பட்டனுள்ளிட்டோமும் மூவாயிரப் பட்டனுள்ளிட்டோமும் காசிபன் நாற்பத்தெண்ணுயிரப்பட் டனுள்ளிட்டோமும் இவ்வனைவோரும் இந்நாயனர் திருக் களர்முளைத்த உடையார் திருத்துறைப்பூண்டியுடையார் கோயில் மடபதி திருத்துறைப்பூண்டியுடையானும் திருமாளி கைப்பிச்சர் பக்கல் நாங்கள் உடையார் திருக்களர் விளக் கெரிக்கைக்குக்கொண்டகாசு -60-இக்காசு அறுபதுங்கைக் கொண்டு ஆண்டுதோறும்வந்த பொலிசைகொடுத்த உழக்கு எண்ணெய்கொண்டு எரிக்குந் திருநுந்தாவிளக்கு சந்திராதித்தவரை எரிக்கக்கடவோமானோம் இவ்வனைவரும்.

மஹாமண்டபம் தென்பக்கம் வாசற்கீழ்பால் திரணைவரி.

9. ஸ்வஸ்தி ஸ்ரீ மஹாமண்டலேசுவரன் ஆரியராஜவிபாடன் பாஷைக்குத் தப்புவராதகண்டன் மூவராயகண்டன் பூர்வ தக்ஷிணபச்சிம ஸமுத்திராதிபதி ஸ்ரீ விருப்பண்ண உடையார் பிருதிவிராச்சியம்பண்ணியருளாநின்ற சகாப்தம் 1343 மேல் செல்லாநின்ற சார்வரிவருஷத்து மகரநாயிற்று பூர்வபக்ஷத்து உத்திரமுந் துவாதசியும்பெற்ற வெள்ளிக் கிழமைநாள் திருக்களர்உடையார் அடைந்தார்க்கருள்செய்த நாயனுர் திருவாய்மலர்ந்தருளி சண்டேசுவரத்திருமுகக்காணி கொடுத்தருளின இக்கோயிலுக்குப் பூர்வீகக்காணியுடையவர்கள் பூருவீகண்கணைத்தரும? இல்லாத தொழிலாளியில் இந்தநாளில் இக்கோயிலிக்குப் பூஜகர்இன்றி வீரப்பிரதாப வளநாட்டு திரிபுவனமாதேவியில் பாரத்வாஜிதி திந்நாதீஸ்வர முடையான் விக்நேஸ்வரபண்டிதன் மன்றிற்குனிக்கும் பெருமாளுக்கு பூசைக்காணியும் சைவாசாரமைக்கும் கொடுத்தருளின பொன் இருபதும் இவனுக்குக்கொடுத்தருளின மனையாவது சந்நிதிக்குக்கீழைச்சரகில் தலையில் வாஸ்து முடிந்தமனையும் இம்மனைக்குரித்தான மற்றுமுள்ள பிராப்தியும் சந்திராதித்தவரையும் பெறக்கடவனுகவும்; இந்தக் காணியும் மனையும் இவனுக்கு தானுதி மனவிற்று ஒற்றிக்கிரையங்களுக்கு உரித்தாகக்கடவதாகவும் இப்படிக்குச்சண்டேசுவரநாயனுர் திருமுகங் கொடுத்தருளினது. ஸ்வஸ்திஸ்ரீ.

மஹாமண்டபம் வடபுறம் வெளிப்பக்கம்.

10. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்குயாண்டு ஆருவதின் எதிராமாண்டுளால் எ0கல் இராஜேந்திர சோழவளநாட்டுப்புறங்கரம்பைநாட்டு பிர்மதேயம் ஸ்ரீகுலோத்துங்கசோழச்சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் எழுத்து இந்நாட்டு நென்மலி நாட்டுத் திருக்களரில் உடையார் முளைத்த நாயனுர்கோயில்

தானத்தார்கண்டு இந்நாயனுர்கோவில் ஆஞயமாக நாகங் குடையார் மண்டையாழ்வார் எழுந்தருவித்த உடையார் திருவாலவாயுடையார் உலகுடையபெருமாள் திருமேனி கல்யாணத் திருமேனியாகவும் க்ராம்யஸுவ்ந திஹிதமாகப்? பூசைகொண்டருளவும் இந்நாயனுருக்கு பூசைக்கும் திரு வமுதுபடிக்கும் உடலாகப்பெரியதேவர்க்கு முப்பத்தொன்பது ஸபையார்க்கு? கருணகரப்பிரியன் அனுபோகம் எழுதி ஸபா வினியோகத்துக்குடலாக இவன்காட்டின நெல்லாலடக்கிலே இவ்வூர்ப்பிடாகை திருச்சிற்றம்பலநல்லூரில்காவனூர்கிழவன் ஆட்கொண்டான் முளைத்தான் பக்கல் இந்நாயனுர் திரு நாமத்துக் காணியாக விலைகொண்ட பிரமாணப்படி ஸரஸ் வதிக்குக்கிழக்கு இராஜாதிராஜ வாய்க்காலுக்குத் தெற்கு 56சதுரத்துண்டத்து கண்டெதுஉட்பட நிலம் மூன்றுமாமுக் காணிமுந்திரி; இதில்தென்கிழக்கடைய குளமும் கரையும் நிலங்கலந்தவாற்ருல் நீர்நிலைசெம்பாதிஉட்பட நிலம் (காணி) நீக்கி நிலம் மூன்றுமாவாரைமுந்திரி; 63 சதுரத்து வடமேற் கடைய நிலம் (ப) இதில் வடக்கடைய அரைமாமுந்திரியின் கீழரையே இரண்டுமாவும் ஆ நிலம்நாலுமா அரைக்காணி யின் கீழரையே இரண்டுமாவினல் தரபப்டிமடக்கு நிலம் அரைக்காணி இம்மடக்குநிலம் அரைக்காணியும் இவ வாண்டு பசானமுதல் இந்நாயனுர்க்கு சந்திராதித்தவரையும் இறையிலியாகக்கொடுத்தோம்; இம்மடக்குநிலம் அரைக் காணியும் இந்நியோகப்படியே கல்வெட்டிக்கொள்ளப் பண்ணுகவென்று எழுதி ஊர்க்கணக்கு கருணகரப்பிரியனும் பெருங்குறிப்பெருமக்களும் எழுத்திட்டது.

இதன் கீழக்கு.

11. ஸ்வஸ்திஸ்ரீ கோ மாறவன்மா திரிபுவனசக்கிரவர்த் திகள் குலசேகரதேவர்க்குயாண்டு 41-வது பங்குனிமாதம் மூன்ருந்திய்திநாள் இராஜேந்திர சோழவளநாட்டுப் புறங் கரம்பைநாட்டு அகரம் பிரும்மதேயத்தாரும் நாட்டாரும் எழுத்து: இந்நாட்டுஎழுக்குடிமக்களுக்குநாற்பத்தொன்ருவது

முதல் உடைமையும் கூட்டும் வர்க்கமும் கொள்ளும்படிக்கு எழுபத்தொன்பது வளநாட்டுப் பதினெண்பூமிப் பூம்புகாரகர் கற்பகச் சமையச் சக்கரவர்த்திகளுக்குக் கல்வெட்டிக் கொடுத்தபரிசாவது களப்பாள் அகரம் ஸ்ரீ சுத்தவல்லி சதுர் வேதி மங்கலமும் முடிவழங்கு சோழசதுர்வேதி மங்கலமும் 41-வது முதல் கொள்ளும்படி புறக்கடமை. மாத்தால் தருக்கும் ஒருபூ குடிப்பற்றுக்கும் ஒருபணமும் மறுவுக்கும் குடிக்கடையீட்டுக்கும் அரைப்பணமும் (ந)ாட்டுகள் வர்க்கத் துக்கு மாக்கலமும் புறவெட்டி கொட்டைக்கூலியுள்பட கார் மறுவும் ஒரு பூ குடிப்பற்றுக்கும்மாத்தால் கலநெல்லும் கொடுத்து முதலானநெல்லுக்குப் பிடாகைதோறும் கை விலைப்படிக்கு நாடோறும் தரவெழுதவும். இப்படிச்செலவான பணத்துக்குப் பணமொன்றுக்கு நானாழி-இ படித்துக் கணக் குப்பார்க்கவும், கணி காணிநிலத்துக்கு நிலத்துக்குப்பொ....ல மாத்தால் நாலில் ஒன்றுகழித்து மேல்வாரத்துக்கூட்டி மேல் வார இ பெருங்குடிகள் விலக்கவும்; நெட்டாள் ஊஞ்ஞெபாதிப் படியும் 41வதுவரை கணக்குப்பார்த்து உடையத்தலையகங் கூட்டாமல் கணக்குப்பார்த்துத் தொகையீடுதரவும்; மனைப் பணம் மாப்பணத்துவரவும் ஆண்டுதோறும் வைக்காமல் இதநோக்கை யீடுதரவும்; ? நாட்டுச்சம்மாதந்தவிரவும்; அடைப்பு கொரடு ஓழியவும்; படையலனவுடன் அந்தா தொழியவும் இதன்வகையும் துண்டத்தூர்வகையும் நாணலூர் வகையும் வரிசையுறநலத்துக்கு அணியநிலத்துக்கும் தணக் கும் ஒரு பூ குடிப்பற்றுக்கும் குடிமைக்கும் மாத்தால் ஒரு பணமும் பணமாக்கொள்ளவும்; மறுவுக்கும் கடையீட்டுக்கும் குடிமைக்கும் மாத்தால் அரைப்பணமும் கொள்ளவும். இவை திருச்சிற்றம்பலமுடையான் பட்டர் எழுத்து. இவை நார சிங்கன் திருச்சிற்றம்பலப்பட்டர் எழுத்து.

பெரும்பலமதூர்வகைக்கு 41-வது கார்முதல் வரிசைப் படியும் புள்ளிப்படியும் மேல்வாரமுதலாய நெல்லுக்குக் கலத் துக்கு நானாழி நெல்லு கொள்ளப்புறக்கடமைக்குக்காருக்கும் ஒரு பூவுக்கும் மாத்தால் ஒரு பணங்கொள்ளவும்; மறுவுக்கும்

கடையீட்டுக்கும் மாத்தால் அரையாக வத்தபாரங்கொள்ள அரிசியெடுத்த ஆளுக்குச்சாதம் செலவிடவும்; படையிலன் வழிக்கூடாதொழிய இந்நாடி மற்றுள்ளவை மற்றுள்ள வகைக்கு அற்றபடி. இவைசிங்கப்பிரான் பட்டார் எழுத்து.

சிங்கப்பிரான்பட்டர் காணித்தொகை மாப்பணம் மனைப் பணம் வேலிப்பணம் மடம் யேறப்பட்டனவும் தவிர திண்டத் தூர் அங்கராயர்பற்றும் ஆறுங்கூர் உடையார்பற்றும் 41வது கார்முதல் கொள்ளும்படி மாத்தால் கலம் கொள்ளக்குடிமைப் பணம் காசு ஒன்றுபடி -உ- பணம்மூன்று மறுவுக்கு அரைப் பணமும் புறக்கடமைக்குடியீட்டுச்கு அரைப்பணமும் வர்க் கத்துக்குக்கொள்ளக் கண்காணித்து நிலத்துக்கு நாலில் ஒன்றுவாரமிடவும்; நெல்கூட்டுவர்க்கம் முன்பணங்கொடுத் துக்கொள்ளவும்; இப்படிக்கூட்டிள நெல்லுகள் வாசிக்குக் கல்த்துக்கு முந்நாழிநெல் கூட்டிக்கொள்ளவும்; மறுவுமொரு பூவும் காணித்கொக்கை நெல்மநத்துக்கொள்ளவும்; பற்ருத நிலத்துக்குக் கண்காணித்து நாலில் ஒன்று வாரமிடவும்; இந் நிலத்துக்கு குடிமை கூட்டுவன தவிரவும்; குடி யுடன்படப் புள்ளிபார்த்த நிலத்துக்குச் செய்த்தலையிலே புள்ளிக்கையீடு எழுத; வரிசைப்படி நிலத்துக்கு வரிசைபேசி அடைஓலை எழுத; குறைந்தஊர்கள் குடிமைப்பணம் குறைந்தபடி கொள்ள; நாள்வட்டம் கைவிலைவிற்றபடி தரவெழுதித்தர நெட்டாள்கணக்குக் குடிமக்ன் ஊஞ்ஞபாதிப்படக்கிடந்த சிகை அகத்துண்டம் கட்டாதொழிய; ஆண்டுதோறும் ஆனி மாதத்தேநேரக்கையீடு கொடுக்க; ஊர்வழிவனையில் புனைக் கொள்ளாப்புறப் புனைக்கொள்ளாதொழிய, இப்படிக் கண்டூர் சிங்கபிரான்எழுத்து ஸ்ரீ கர்னபட்டர்எழுத்து தருவுடைய மருவுடையான்பட்டர் எழுத்து அங்கராயர்எழுத்து ஆறுங் கூருடையார் எழுத்து.

நத்தவகை காணித்தொகையுள்பட்ட ஊர்கள் வரிசைப் படியும் மதி(ப்புப்ப)டியுங் கண்காணிப்படியும் மேல்வார முதலான நெல்லும் கூட்டுவதுகு, மாத்தால் காலமாக வந்த

நெல்லும் இப்படிமுதலானநெல்லுக்குகலத்துக்கு முந்நாழியாக வாசி நெல்லுங்கூட்டிக்கொள்ள: காரும் ஒரு பூவும் பயிர் செய்தநிலத்துக்கு குடிமைக்கு முக்காலாகவந்தபணம் பணமாக்கொள்ளவும்; செலவுக்குக் கைவிலை விற்றபடியே தான்வட்டம்தரவும், கைச்சாத்துப்பெறவும்; ஆண்டுதோறும் உறுதிமுறிபெறவும்; புறப்புணைகொள்ளுவதொழிய; ஊர்சேரப் புணைகொள்ள; குடிக்கடையீடு கடையீட்டுப்படிசெய்ய; நீக்கிநின்ற உபாதிகழித்து. இப்படிக்கு சிங்கப்பிரான்பட்டர் எழுத்து. ஸ்ரீகர்னபட்டர் எழுத்துஒன்புரை வரதராஜப்பட்டர் எழுத்து. விக்கிரமபாண்டிய பிரமராயர் எழுத்து. டுனெய சிரம்பட்டர்எழுத்து. எழுதூன்ற வரதராஜப்பட்டர் எழுத்து.

மணைப்பணத்தொகை வரிசைப்படி நிலத்துக்கும் உடன் வாரப் புள்ளிபார்த்த நிலத்துக்கு மேல்வாரமும் குடிமைக்கு மாத்தால் காரும் ஒருபூவிம் குடிக்கடமைக்கு மறுவுக்கும் மாத்தால் அரைந்பணமும் குடிக்கடையீட்டுக்கு அரைப் புணங்கொள்ளவும், இப்படிவந்தபணத்துக்கு நெல் கூட் டாமல் பாகமாகக்கொள்ளவும்; கூட்டுவர்க்கத்துக்கு மாத் தால் கலநெல்லுக்கொள்ளவும்; இப்படிமுதலான நெல்லுக்கு கலத்துக்கு நானழியாகவந்த நெல்கூட்டிக்கரௌள்ளவும்; காரும் மருவும் ஒருபூவும் குடியுடன்படாத நிலத்துக்கு கண் காணித்து நாலில் ஒருவாரமிடவும்; இந்நிலத்துக்கு குடிமை கூட்டுவது தவிரவும்; மாப்பணம், ஊர்ப்பணம், பணவட்டம். வேலிப்பணம் நாட்டு-4 மாதமற்றும் எப்பேர்ப்பட்டவர்க் கமுந்தவிரவும்; குடியுடன் பட உடன்வரப்படாதநிலத்துக்கு கசய்த்தலையிலே புள்ளித்தரவுஎழுதவும்; கைவிலைவிற்றபடி விலைபேசத்தரவெழுதவும்; விதைமுதலிட்டதுமுதல் கொள்ள வும், அரிசி குற்றவேண்டில் கருவூலச்செலவிடவும்; ஆண்டு தோறும் நெல்தரவெழுதவும்; வரிசைநிலத்துக்கு வரிசைபேசி அடையோலையெழுதவும்; ஊர் தோறும்வணையில் புணைகொள் ளவும்; புறப்புணைகொள்ளாதொழியவும்; 41-வது கணக்குக் கார்வரைபார்த்து ஏற்றமுள்ளது அக்கணத்தே செலவிடவும்; நெட்டாள்த்தேவை ஊஞேபாதி கொள்ளவும்; தமக்கிடை

யீட்டுப்படி கொள்ள; குடிமைக்கு அரைப் பணங்கொள்ள: கூட்டுவர்க்கத்தவர். இப்படிக்குக்கண்டு சிங்கப்பிரான்பட்டர் எழுத்து. இவைகிருஷ்ணப்பட்டர்எழுத்து. இவை திருவிடை மாரன்பட்டர் எழுத்து. இவை நல்லூர் பெரும்புறக்கடன் பட்டர் எழுத்து. இவை காமடி செட்டுசோங்கமன்பட்டர் எழுத்து. இவை இராயுரிக்கோட்டை திருவரங்கராயபட்டர் எழுத்து.

இதன்கிழக்கு சோபனமண்டம் வடபுறம் வெளிப்பக்கம்.

12. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கட்பன்மரான திரிபுவனசக்கர வர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ வல்லபதேவர்க்குயாண்டு இருபத் தஞ்சாவது மேஷநாயிற்று பூர்வபக்ஷத்து ஏகாதசியும் சனிக் கிழமையும் பெற்றமகத்து நாள் பாண்டிமண்டலத்து மிழலைக் கூற்றத்துத் தெக்கூருடையான் சோழமண்டலத்து இராஜேந் திரசோழவள நாட்டுப் புறங்கரம்பை நாட்டுத் துண்டத் தூர்வகையில் செந்திக்கோட்டமான பஞ்சநதவாண நல்லூர், வேங்கூர், நத்தவகையில் பள்ளிச்சந்தம், திருக்களர்ப்பற்றிற் சேர்ந்த பண்ணியூர், பரம்பைக்குடி, இக்காணியுடைய உடையான் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு அகம் புடையாள் கண்ணுடை நாச்சியோக.........டாழிநாட்டு அரசு வரகூருடையான் னெங்குந்தேவர் சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்குத் காணிவிபரப் பிரமாணம்பண் ணிக்கொடுத்த பரிசாவது:— முன்னாள் இராஜரான வீர பாண்டியத்தேவர் துலுக்கருடன் வந்த நாளிலே தெக்கூருடை யாரும் இவருடைய தம்பிமாரும் அனைவரும் அடியாளற்றும் செத்துங்கெட்டும்போய் அலைந்து உள்ளம் வெள்ளத்தாலும் கலகத்தாலும் பாழுமாய் இக்ருகிற அளவிலே எங்கள் முதலி யார் சூரிய தேவர்காணியாட்சி விடாமல் நன்று நடத்திப் போகிற அளவில் பண்ணியூரிலே சிதையுன்டென்றும் இது தரவேணுபோகிறமென்றும் புதுஹூருடையார் குலசேகரப்பிரம ராயர் காரியத்துக்கு வந்த நென்மலியுடையாரும் திருக்கை

வேலு முதலியாரும் கிளிஞலூர் கிழவரையும் இவர்களைச் சாமந்தனர் காரியப்பேரழைத்துக்கொண்டுபோய் காணிக்கை தரவேணும் சூரைவரிதரவேணுமென்றும், சிதையுட்பட எண்ணூறு பணம் தரவேணுமென்றும், இவர்களைச்செல்கலிலே கொண்டுபோயறையிலே வைத்து எங்கள் முதலியார் சூரிய தேவரை உம்முடையபேரால் கோட்டகத்துக்கும் உங்கள் மருமகனர் தாயமங்கலமுடையார் செல்வப் பிள்ளையார் பேரா லே பள்ளிச்சந்தத்தில் ஒன்று பாதிக்கும் வேங்கூரில் நிலவிழுக் காட்டுக்கும் ஆக இருநூறுபொன்னு. ஆயிரம்பொன் * யார் இவர் சகாயம் புதுஆடையார் எண்ணூறுபணமும் கிளிஞலூர் கிழவர் பேராலே ஆயிரம்பணமும் குளத்தூருடையார் பேருக் கும் எங்கள்பேருக்கும் ஆயிரம்பணமும் கோட்டகம் பள்ளிச் சந்தஊர்களாலே எண்ணூறுபணமும் ஆக எங்கள் பேராலே ஆயிரத்தெண்ணூறு என்றும் மற்றுள்ளபேர்களாலுள்ள பணமும் ஆக இப்பணத்துக்குப்பொருள் முன்னிலேஇட்டுப் போய் இப்பணமுதலாக்க வேணுமென்றபடியாலே இந்தப் புதுஆருடையார் கிளிஞலூர்கிழவர் குலசேகரப்பிரமராயர் காரியப்பேர் திருநெல்மலியுடையார்க்கும் எங்கள்முதலியார் சூரியதேவரைப்புணைக்கொண்டு இவர்களையும் பேராள ருடனே காட்டிக்கொடுத்து இவர்களும் தங்கள்காணியும் பணங்களும் விற்றுத் தங்கள்பேரால் காணிப்பணம் சிலவிறுத் தவளவில் சென்று புணைக்கழியாதபடியாலேயும் எங்கள் பேராலுள்ள பணமும் வாஞதராயர்பேரால் முன்னிலேப் படியே இவரும் எங்களைக்கொண்டே சிலவிறுப்பித்து இருஞ்சிதையும் எங்கள் முநலியாரை உம்முடையவழியாக விட்டு அவர்களைக்காட்டித்தந்துபோமென்று நெடுநாள் பட விடாதொகையில் இவரும் காவலாகச் சிறையில் இருந்து மேல் சித்தப்படி.

* இவ்விடத்தில் பொருத்தமாகத் தோன்றுத விபரம் திருப்பணியில் பிரித்து வேலைசெய்திருப்பதால் தவறுண்டி ருக்கலாமென நினைக்கக்கூடியதாக விருக்கிறது.

குறிப்பு:- அநேக சாதனங்கள் அழிபட்டும், திருப் பணியில் பலவிடங்களில் பிரித்துவைத்துக் கட்டப்பட்டும். சிதைவுற்றமையால் முற்றும் எடுத்தச்சியற்றக்கூடவில்லை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்களர்புராண வசனச்சுருக்கம்.

முதலாவது
அநுகூலச்சருக்கம்.

உலகமெல்லாம் படைத்தருளிய பிரமாவின் புத்திரரிற் சனற்குமார முனிவரென்பவர் ஓர் ஆசிரியர்முகமாகச் சிவதல மான்மியங்கேட்டுப் பிறவித்துன்பம் நீக்கக்கருதி, ஸ்ரீகைலாச மலைக்குச்சென்று திருநந்திதேவரைத் தரிசித்துத், தன் உள்ளக்கருத்தை நிகழ்த்தியவளவில் நந்திதேவர் மகிழ்ந்து நின்போலும் சிவபக்தியுடையவர்க்கே அத்தகைய மான்மியத்தைக் கூறவேண்டுமாதலால் யான் அறிந்தவற்றைச் சொல்லக்கேட்பாயாக;

சம்புத்தீவத்து விளக்கமுற்ற சிவதலங்கள் பலவற்றுட் சிறந்த தலங்கள் நூற்றெட்டென்பர்; அவற்றுள்ளுஞ்சிறந்தன அறுபத்தெட்டுத் தலங்களாகும்; இவ்வறுபத்தெட்டனுள் சிவபிரான் திருநடனம்புரிந்தருளிய தலங்கள் எட்டென்பர்; அவ்வெட்டுத்தலங்களுள் பாரிசாதவன மான்மியத்தைக் கூறுகிறேனென்று சொல்லலுற்றனர்.

இரண்டாவது பாரிசாதவனச்சருக்கம்.

மகாநதி ஏழனுட்சிறந்த காவிரிநதியின் தென்பால் ஆரூரென்னுந் திவ்யக்ஷேத்திரத்திற்கு நிருதித்திசையிலுள்ள இத்தலத்தில் முன்னம் துருவாசமுனிவர் தேவருலகத்திலிருந்து பாரிஜாதவிருக்ஷத்தைக் கொணர்ந்து வைத்து வளர்த்து அதன் கீழ்பால் ஒரு தடாகமுண்டாக்கி அத்தடாக மிருத்தி

கையைச் சிறிதெடுத்து முற்கூறிய பாரிஜாததருமூலத்திட்டு இலிங்கவடிவமாக அமைத்தும் பூசித்துத் துதித்தலும் முழு முதற்கடவுள் அவ்விலிங்கத்தினின்றுந்தோன்றிக் காட்சி கொடுத்தருளி நினக்கு வேண்டுவனவற்றைக் கேளெனத் துருவாசமுனிவர் துதித்து எந்தாய்! யான் பிறரைச்சபித் தால், எனக்குத் தவம்மிகும்வண்ணம் வரந்தருளென அங் ஙனமே கொடுத்து அண்டிநந்தார்க்கருள்செய்யுநாயனுராகிய சிவபெருமான் இலிங்கத்துள் மறைந்தருளினர். அதுமுதல் இத்தலத்திற்குப் பாரிசாதவனமெனப்பெயராயிற்று.

பின்னர் துருவாசமுனிவர் கட்டளைப்படி மயனென்னுந் தேவதச்சன் ஆகமவிதி வழுவாது சிவபெருமானுக்கும் அம் பிகைக்கும் மற்றப் பரிவாரதேவர்களுக்கும் அவ்வவர்க்குத் தக்கபடி ஆலயங்களும் மேல்பால் நிருத்தசபையும் அவ்வவ் வாலயங்களுக்குரிய பிம்பங்களும் துவசத்தம்பம், மகாரதம் முதலியனவும் அமைத்து முனிவரிடம் விடைபெற்றுத் தன் னிடஞ்சென்றனன்.

துருவாசமுனிவர் மயனுலமைத்தபிம்பங்களை அவ்வவற் றிற்குரிய ஆலயங்களில் பிரதிஷ்டித்து எம்பெருமானுக்கும் பரிவாரதேவர்களுக்கும் சித்திரைமாதத்தில் உற்சவம்புரிந்து துதித்தலும் கருணையங்கடலாகிய சிவபெருமான் திருவருள் சுரந்து தோன்றிநினக்கு இன்னம் யாதுவேண்டுவதென முனிவர் பலகால் வணங்கித்துதித்து இச்சபையின் கண்ணே யான் கண்டுய்ய நடனம்புரிந்தருள வேண்டுமெனப் பரமபதி முனிவ! கந்தமாதனமலையிலிருக்கின்ற அறுபதினுயிர முனிவ ரும் என்னைத்தரிசனம்செய்யும்பொருட்டு பர்த்மகற்பத்தில் இங்குவருவார்கள் அவர்களுக்கும் நினக்கும் குமாரக் கடவு ளால் உபதேசஞ்செய்விக்கப்படும். அப்பொழுதுயாம் நடனக் காட்சியளிப்போமென்றுரைத்து மறைந்தருளினர்; முனிவ ரும் எம்பிரானைப்பூசித்துக்கொண்டு அத்தலத்திலேயே இருந்தனர்.

மூன்ருவது நிருத்தச்சருக்கம்.

வியாஸர் முதலாகச் சங்கு ஈருகச்சொல்லப்பட்ட முனிவர்யாவரும் முக்கட்பெருமான் துருவாசமுனிவருக்கு அருளிச்செய்தமையறிவுற்றுத் தாங்களும் அக்காட்சியைப்பெற விரும்பிப் பாரிசாதவனம்வந்து அதன் ஒரு குரோச எல்லைக்குள் ஆங்காங்கு வைகித் தங்கள் தங்கள் பெயரால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்துறையுங்காலை மேற்கூறியபடி பாத்ம கற்பம்வருதலும் கந்தமாதனத்து அறுபதிஞயிர முனிவர்களும் பாரிசாதவனம் வந்து துருவாசமுனிவரைப் புகழ்ந்தேத்தி அத்தலத்திலே தங்கினுர்கள். அப்போது நிருத்த சபையின் கண்ணே ஸகலதேவரும் கொண்டாடக் கருணைமூர்த்தியாகிய சிவபெருமான் பிரமதாண்டவமென்னும் நிருத்தனம் புரிந்தருளினுர் பின்னர் குமாரக்கடவுள் துருவாசர் முதலிய முனிவர்களுக்குப் பஞ்சாக்ஷரமந்திரோபதேசமும் அதன் மகிமையும் புகன்றருளினுரென்று சொல்லி அப்பால் திருக்களர்த்தலமகிமையைச்சிறிது கூறியருளினுர்.

நான்காவது பஞ்சாக்ஷரச்சருக்கம்.

சனற்குமாரமுனிவர்ஐய! கந்தமாதனமுனிவர்களுக்கும் துருவாசமுனிவருக்கும் அறுமுகப்பிரான் உபதேசித்தருளிய பஞ்சாக்ஷர மந்திரத்தின் பேதங்களும் அவற்ருற் பெறும் பயன்களும் அடியேற்குச் சொல்லியருளவேண்டுமென நந்திதேவர் முனிவ! அம்மந்திரம் ஐவகைப்படும். அவையாவன:-

(1) சுத்த பஞ்சாக்ஷரம் 5. (2) அதனுேடு பிரணவஞ் சேர்ந்தது 6. (3) அவற்ருேடு ஸம், யம், சேர்ந்தது-8. (4) ஷ ஸம், யம், இரண்டுதரம் சேர்த்துக்கூறப்படுவது-10. (5) ஷ மூன்றுதரம்சேர்த்துக்கூறப்படுவது 12. இவை முறையே (1) மோக்ஷமளிப்பதும் (2) போகமோக்ஷமளிப்பதும், (3) காமியம்தருவதும் (4) வறுமை முதலாயின தவிர்ப்பதும், (5)நன்மைபயந்து வசீகரமாக்குவதுமாம். (இவற்றின் தியானமுதலியவற்றின் விரிவை 10-முதல் 14-

வரையிலுள்ள செய்யுட்களிற்காண்க.) இனி யந்திரம் சொல்லப்படுகிறது. மத்தியில் ப்ரணவத்தையெழுதிச்சுற்றிச் சதுரமாக இரேகைகீறிஇதனைச்சூழச் சந்திரபீஜமாகிய ( ) என்ற அக்ஷரத்தை வரைந்து அவற்றின்மேல் சுற்றிலும் (ஸள)என்ற கலாபீஜத்தையெழுதி அக்கலாபீஜத்தைச் சூழ 40 முதலிய (51) எழுத்துக்களை (இதுமாத்ருகை)எழுதி அவற்றைச்சூழ மீட்டும் கலாபீஜத்தை எழுதி அவற்றைச் சூழப் பிரணவஞ்சேர்ந்த பஞ்சாக்ஷரத்தையெழுதி அவற்றைச்சூழ ஹ்ரீம் (இது மாயாவேஷ்டனம்) என்ற அக்ஷரத்தை வரைந்து அமைப்பது பஞ்சாக்ஷரத்துக்குரிய யந்திரமாகும். இவ்வியந்திரத்தைத் தங்கத்தகடு, வெள்ளித்தகடு, பூர்ஜ பத்திரம் இவற்றிலொன்றில் அமைத்து அணிந்துகொண்டு சந்தியாவந்தனம் செய்யத் தீவினையனைத்தும் நீங்குபென்பர். இத்தகைய பஞ்சாக்ஷர உபதேசம்பெற விரும்புவோர் திருக்களரில் விளங்கும் குமாரக்கடவுளைப்பூசித்து உபதேசம் பெற வேண்டும்; இம்மந்திரத்தைப் பரமபதியாகிய முக்கண்மூர்த்தி முருகவேளுக்கு உபதேசித்தனர். அவர்இம்மந்திரத்தை (25) விதமாக விரித்து முனிவர்களுக்கு உபதேசித்தருளினர்; அவையெல்லாம் விரிப்பிற் பெருகுமாதலின் அவற்றிற்சிறிது நினக்குச்சொன்னேன்; அம்மந்திரத்தைத் திருக்களரில் எம்பிரான் சந்நிதியிற் செபித்தால் அதனாலுண்டாகும் பலனுக்களவில்லை. இன்னமும் கேட்பாயாகவென்று மாலாதாரகன் சரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினர்.

ஐந்தாவது மாலாதாரகச்சருக்கம்.

முன்னொருகாலத்து ஒன்பது வருஷம் வரையில் மழை பெய்யாமல் உலகமெங்கும் பஞ்சமுண்டாகியது; வற்கட மிகுதியாற் பாரிஜாதவனேச்சுரருக்குப் பூசைமுதலியன இன்றி அக் கடவுளாலயமுஞ்சிதைவுற்றது. அக்காலத்தில் ஆங்காங்குப் பற்பலவேடர்கள் கொள்ளைகொண்டு உயிர் வாழத்தொடங்கினர்கள்; அவர்களுள் ஒருவேடன் எவ்விடத்துங் கரவுசெய்துவரும்பொழுது எதிரிலே தோன்றிய

இப்பாரிஜாதவனம்புகுந்து பலமிருகங்களைக்கொன்று வேட்டையாடிவருவோன் அங்குச்சிதைவுற்றிருந்த அவ்வாலயத்தை நேர்க்கி அன்றிரவு அங்கேதங்குவதற்கு நினைத்துச் செல்லும்பொழுது இடையில் எதிர்ப்பட்ட சோலையிலுள்ள மலர்களைக்கொய்து ஒருமாலைதொடுத்து அதனைத்தான் சூடிக்கொள்ளக்கருதிக் கையிற்கொண்டு சென்று அவ்விடத்தில் வைத்தலும், வைத்தமாலையின்கீழ் மறைந்திருந்த எம்பிரான் திருவுருவத்தின்மீது சூடியதுபோலாயிற்று; அவ்வேடன் அன்று அங்கேதங்கி மற்றைநாள் தன்னூர்சென்று சில்நாளிலுயிர்துறந்து ஈசனுக்கு மாலையணிந்ததன் பயனால் கலிங்க தேயத்தரசனுக்குப் புத்திரனாகப்பிறந்து மாலாதாரகனெனும் பெயரோடு முன்னுணர்ச்சியும்பெற்று வளர்ந்து அரசமாதைமணந்து நாண்கு புத்திரரைப்பெற்று முன்னவனுக்கு அரசளித்துத் தான்வேண்டும்பொருளோடு பாரிஜாதவனம்புகுந்து ஆலயத்தைப் பண்டுபோற்புதுப்பித்துப் பூசனைகளைக் குறைவறநடத்தி நெடுநாளிருந்து முத்தி பெற்றனன்.

முனிவ! மற்றொருகாலத்தில் இந்திரன்முதலாகிய தேவர்களும் வசிட்டாதிரிஷிகளும் அத் திருக்களரை அடைந்து ஐந்து குரோசஎல்லைக்குள் தங்கி ஆங்காங்குத் தத்தம் பெயராலிலிங்கமமைத்துப் பூசித்துப் பேறுற்றனர்.

தீர்த்தநாமம்.

திருக்களரெல்லைக்குள் ஒருசிறியகுழியில் நீரிருந்தாலும் அந்நீர் கங்கையினுஞ் சிறந்ததாகும். சந்நிதியில் துருவாசமுனி உண்டாக்கிய தடாகத்தை உலோக்கியதீர்த்தமென்ப; அத்தீர்த்தம் மிகுந்த சிறப்புடையது.

ஆலயத்துக்குத்தென்பக்கத்தில் பிம தீர்த்தமென்றோர் தடாகமுண்டு; இத்தீர்த்தத்தில் பண்டு அநேகமுனிவர் மூழ்கி நற்கதியைப்பெற்றனர்.

ஆலயத்துக்கு மேலைப்புறத்தில் உருத்திரதீர்த்தமென்றோர் தடாகமுளது; அதனிற் கற்பாந்தத்தில் பற்பல உருத்திரர்கள் மூழ்கி நற்கதிபெற்றனர்.

ஆலயத்துக்குவடபால் ஞானதீர்த்தமெனப் பெயர்பெற்ற ஒருதடாகமிருக்கிறது. அதனிலாடினோருக்கு ஞானமளிப்பதனுல் அப்பெயர் பெற்றது. இத்தடாகங்களிலாடினவர் அடையும்பேற்றிற்கு எல்லையில்லையென்று அவற்றின் மகிமைகளையும் விரித்துக்கூறிப்பின்னர் மகாரதன் சரிதம் கூறத்தொடங்கினுர்.

ஆருவது மகாரதன் புத்திரப்பேற்றுச்சருக்கம்

சனற்குமார! பாண்டிநாட்டை அரசுபுரிந்த மகாரத பாண்டியனென்பான் புத்திரப்பேரின்றிக் கவலையுற்று அமைச்சன் தருமகீர்த்திபால் நிகழ்த்த மந்திரி அரசே! நீ கவலைகொள்ளவேண்டாம் சோழநாட்டுள்ள திருக்களரென்னு ந் தலத்தினை அடைந்து ஆங்கு ஆனந்தநடனமாடுங் கடவுளுக்குப் பூசைசெய்து வழிபடின் நீ நினைத்தவனைத் துங் கைகூடும்; முன்னர்யான் மகப்பேறின்றிக்கவன்றுசுமந்து முனிவர் அநுக்கிரகித்தபடி அப்பதியை அடைந்து பூசித்து அப்பேற்றினை அடைந்தேன்; நீயும் அவ்வண்ணமே புரிந்தருள்கவென அரசன்மகிழ்ந்து வேண்டும்பொருள்கொண்டு பரிவாரங்கள் சூழ்ந்துவர மனைவியோடு பிரயாணமாகிப் பல சிவதலங்களை தரிசித்துச்சென்று திருக்களரினையடைந்து ஆங்கு மார்க்கண்டமுனிவர் கூறியவண்ணம் கடவுளை வழிபட்டுத் தானமுதலாயினவற்றைச் செய்துறையுநாளில் அரசன்மனைவி கருப்பமுற்று சுபதினத்திலிரண்டு புத்திரரைப் பெற்றனள். மன்னவன்மகிழ்ந்து அந்தணர்க்கு நிதிவழங்கிப் புத்திரர்க்கு முறையே சிவதத்தனென்றும் தேவதத்தனென்றும் பெயர்புனைந்து ஈச்சுரன் பூசைக்குவேண்டு நிலமுதலாயினவற்றைக் கொடுத்துத் தன்னுடு புகுந்து வாழ்ந்திருந்தனன். இத்தகையபேறுபெற்ரேரளவிலரென்றுரைத்தருளினர்.

ஏழாவது தீர்த்தமான்மியச்சருக்கம்.

நந்திதேவர் இவ்வண்ணங் கூறுதலும் அயலிலிருந்த சூதமுனிவர் சனர்குமாரமுனிவரைநோக்கி நந்தியெம் பெருமான்கூறியவையன்றி இன்னம் தீர்த்தமான்மியமென் பதொன்றுண்டு. அதனை யானறிவேனென. முற்கூறிய தீர்த்தங்களின் மான்மியங்களும் அவற்றிலாடவேண்டிய நாட்களும் ஆங்குச்செய்யவேண்டிய தானவியல்பும் அத் தீர்த்தங்களிலாடுதலாலெய்தும் பயனும் ஈசுரன் பூஜைவிசே ஷமும் அடியார்சிறப்புமுதலாயினவும் விரித்துப்புகன்றனர்.

சுபமஸ்து.

உ

கணபதி துணை.

திருஞான சம்பந்த சுவாமிகளருளிச் செய்த

திருக்களர்த்தேவாரம்.

பண்-சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்

நீருளார்கயல் வாவிசூழ்பொழி னீண்டமாவய லீண்டுமா
றேரினார் மறுகில் விழாமல்கு திருக்கள [மதிற்
ரூருளாரிடு பிசசைபேணு மொருவனேயொளிர் செஞ்சடைம்
யாரநின் றவனே * யடைந்தார்க் கருளாயே. 1 [மதி

தோளின்மேலொளிநீறு தாங்கியதொண்டர்வந்தடிபோற்ற
தாளினார் வளருந் தவமல்கு திருக்களருள் [மிண்டிய
வேளினேர்விசை யற்கருள்புரி வித்தகாவிரும் பும்மடியாரை
யாளுகந் தவனே யடைந்தார்க் கருளாயே. 2

பாடவல்லநன் மைந்தரோடு பனிமலர்பல கொண்டுபோற்றி
சேடர்வாழ் பொழில்சூழ் செழுமாடத் திருக்களரு [செய்
ணீடவல்ல நிமலனேயடி நிரைகழல்சிலம் பார்க்கமாநட
மாடவல் லவனே யடைந்தார்க் கருளாயே. 3

அம்பினேர்தடங் கண்ணினாருட னாடவர்பயின் மாட
செம்பொனார் பொழில்சூழ்ந் தழகாய திருக்களரு [மாளிகைச்
ளென்புபூண்டதோர் மேனியெம்மிறை வாவிணையடி போற்றி
கன்புசெய் தவனே யடைந்தார்க் கருளாயே. 4 [நின்றவர்க்

---

* இக்கோயிலிலுள்ள சிலாசாசனங்களில் 'அடைந்தார்க் கருள் செய்யாநின்ற நாயனார்' என்றும் 'அடைந்தார்க்கருள் செய்தநாயனார்' என்றும் சிவபெருமான் திருநாமம் வரையப் பட்டிருத்தல் காண்க.

கொங்குலாமர்ச்சோலைவண்டினங் கிண்டிமாமது வுண்டிசை
தெங்குபைங் கமுகம் புடைசூழ்ந்த திருக்களருண் [செயத்
மங்கைதன்னேடுங்கூடியமண வாளனேபிணகொண்டொர்
[கைத்தலத்,
தங்கையிற் படையா யடைந்தார்க்கருளாயே. 5

கோலமாமயிலாலக்கொண்டல்கள் சேர்பொழிற்குலவும் வய
சேலிளங் கயலார் புனல்சூழ்ந்த திருக்களரு [லிடைச்
ணீலமேவிய கண்டனே நிமிர் புன்சடைப்பெரு மானெனப்
யாலநீ ழலுளா யடைந்தார்க் கருளாயே. 6 [பொலி

தம்பலம்மறி யாதவர்மதி ருங்குமால்வரை யாலழலெழத்
திண்பலங் கெடுத்தாய் திகழ்கின்ற திருக்களருள்
வம்புலாமலர் தூவிநின்னடி வானவர்தொழக் கூத்துகந்தபே
ரம்பலத் துறைவா யடைந்தார்க் கருளாயே. 7

குன்றடுத்தநன் மாளிகைக்கொடி மாடநீடுயர் கோபுரங்கண்
சென்றடுத் துயர்வான் மதிதோயுந் திருக்களரு [மேற்
ணின்றடுத்துயர் மால்வரைத்திர டோளிஞலெடுத் தான்ற
யன்றடர்த்து கந்தா யடைந்தார்க் கருளாயே 8 [னீண்முடி

பண்ணியாழ்பயில் கின்றமங்கையர் பாடலாடலோ டாரவாழ்
தெண்ணிலா மதியம் பொழில்சேருந் திருக்களரு [பதி
ளுண்ணிலாவிய வொருவனேயிரு வர்க்குநின்கழல் காட்சி
லண்ணலாய வெம்மா னடைந்தார்க் கருளாயே 9 [யாரழ

பாக்கியம்பல செய்தபத்தர்கள் பாட்டொடும்பல பணிகள்
தீக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள் [பேணிய
வாக்கினுன்மறை யோதிஞயமண் டேரர் சொல்லிய சொற்க
[ளானபொய்
யாக்கிநின் றவனே யடைந்தார்க் கருளாயே. 10

இந்துவந்தெழு மாடவீதி யெழில்கொள்காழிந் நகர்க்கவுணி
செந்துநேர் மொழியா ரவர்சேருந் திருக்களரு [யன்
ளந்தியன்னதோர் மேனியானை யமரர்தம்பெரு மானைஞான
பந்தன்சொல் லிவைபத்தும் பாடத்தவ மாமே. 11 [சம்

திருச்சிற்றம்பலம்.

திருக்களர்ச்சாசன அரும்பொருள் விளக்கம்

குலோத்துங்கசோழன் — இவன் சாலிவாகன சகாப்தம் 1100-ல் பட்டடத்துக்குவந்த மூன்ருவது குலோத்துங்கசோழன்; இவன் காலத்திலேதான் ஒருசிற்றரசனுகிய திருவேகம்பமுடையான் அமராபரணன் சீயகங்கனது அவைக்களத்தில் பவணந்திமுனிவரால் 'நன்னூல்' இயற்றி வெளியிடப்பட்டது; கலிங்கத்துப் பரணியின் தலைவனுமிக்குலோத்துங்கசோழனே; இவனையே விசயதரனென்பார். இவ்வரசனுக்குரிய "புயல்வர.........மண்வளரப், புலியாணை" என்னும் வஞ்சிச்சீரானியற்றியுள்ள கட்டுரை ஒன்று திருவுசாத்தானக்கோயிலில் வரைந்திருக்கிறது.

குடிஞைக்கல் — நிறுத்தலளவைக்குறியகல்; இதனைக் குடிஞை யென்பதுமுண்டு.

வு — வரவு.

கழஞ்சு — ஒன்றேகால் வராகனிடை.

மஞ்சாடி — மஞ்சாடிக்கொட்டையினளவு. இதனையே யானைக்குன்றிமணியென்ப.

ஓரனை — இரண்டு.

ஆட்டை — வருஷம்,

இராஜராஜதேவர்—இப்பெயர்பெற்ருேர் பலராயினும், இவ்வரசன் சாலிவாகனசகாப்தம் 930-ல்அரசாண்ட முதல் இரர்ஜராஜச்சோழன்.

திருமன்னிவளர — இது இராஜேந்திர சோழதேவன் கட்டுரை. அவ்வரசன் வேற்றரசர்களைப் போரில் வென்றமையும் வெற்றியாற்பெற்ற நாடுகளையும் தொகுத்துக்கூறுகின்றது. இதனை "திருமன்னிவளர விருநிலமடந்தையும், போர்ச்செயப் பாவையுஞ் சீர்த் தனிச்செல்வியும்" 'இன்னுஞ்சில செய்யுளும் ஆசிரியப்பா வெண்பாவோடு மாறுகொண்டு போலி வெண்பாவாகும்.' என்பர் வீரசோழிய உரையாசிரியர் வீரசோழியம்யாப்புப்படலம்(19)-ம் சூத்திரவுரை.

இராஜேந்திரசோழதேவன் — இவன் முதல் இராஜ ராஜச்சோழன்மகன் இ வ னை யே முதலிராஜேந்திரச் சோழனென்பார். இவன் மகள் அம்மங்கைதேவியார் மகனே முற்கூறிய மூன்ருவது குலோத்துங்க சோழ னென்பான்.

அந்தராயம் — விக்கினம் ; கெடுதி.

சதுர்வேதிமங்கலம் — அக்கிரகாரம்.

படிமாற்றுக்கு உ ட லா க — ப டி க் க ட் ட லை க் கு ஆதாரமாக.

பரிகரம்— பரிவாரம்.

ஸ்ரீ வீர விருப்பண்ணஉ டை யா ர்—இ வ ர் இன்ன வமிசத்தைச் சேர்ந்தவரென்று புலப்படவில்லை.

வீரபூபதியுடையார் — ஷை

சுவந்நிறம்— சுவதந்திரமென்றிருக்கவேண்டும்.

ஸ்ரீ விருப்பண்ணஉடையார் மு ற் கூ றி ய வ ரா த ல் வேண்டும்.

கோ மாறவன்மா குலசேகரதேவன் — மாறவன்மா வென்பது பாண்டியர்க்கன்றி ஏனையோர்க்கின்மையின் இவன் பாண்டியனே. இதனுல் இடையில் சிலகாலம் இச்சோழநாடு பாண்டியர்களின் ஆட்சியிலிருந்த தாகத் தெரிகிறது. அ தி வீ ர ரா ம பா ண் டி ய ன் இந்நாட்டில் சு த் த வ ல் லி வளநாட்டுத் த னி யூ ரென்னும் பூர்வநாமமுள்ள ம ன் ஞ ர் குடியை வடக் கெல்லையாக அதன்தெற்கிலுள்ள பாகமெல்லாம் தான்கைக்கொண்டு தன்பெயரால் அதிவீரராமன் பட்டினமென ஒருநகரமமைத்து அதிலிருந்துஅரசாண் டனனென்பது பிரசித்தமாகையால் இதனையே சான் ருகக்கொள்ளலாம்.

களப்பாள்— இது திருக்களருக்குமேல்பால் (2) மயிலி லுள்ளது. ஏ ழு கூ று க ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கூற்றுவநாயனுர் அவதரித்த தலமிதுவே, முதன் முதல் அவ்வேழுகூற்றினையும் தாம் உடையராய்

ஆண்டமைபற்றி அப்பெயர் பெற்றனர் போலும். இவ்வூரைக்களந்தையென்பார். இதிலுள்ள ஆதித்தேச்சுரர்கோயில் கருவூர்த் தேவராலருளிச்செய்த திருவிசைப்பாப்பெற்றுள்ளது;. பராங்கதசோழன் மக்கள் மூவருள் மூத்தகுமாரன் சாலிவாகன சகாப்தம் 877—ல் அரசாண்ட இராஜாதித்த சோழனல் இவ்வாலயங்கட்டுவித்து அவனது பெயராலேயே பிரதிஷ்டிக்கப்பட்டது. பிற்காலத்தில் தொண்டைநாட்டிற் சிலர் அந்நாட்டில் மரூஉமொழியாற் களந்தையென்னும் பெயருடைய ஓரூரிலுள்ள சிவாலயத்தை ஆதித்தேச்சரமெனப்பெயர் புணர்ந்து அதுவே திருவிசைப்பாப்பெற்றுள்ள தலமென்பார்; கருவூர்த்தேவர் இக்களந்தைக்கு அணித்தாயுள்ள முகத்தலையைச்சார்ந்த பன்னகதெருப் பன்னகாபரணேச்சுரத்தையும் கோட்டூர் சாட்டியக்குடி முதலியவற்றையும் பாடினதன்றி இவர் சோழநாட்டிலுள்ள தலங்களையே பெரும்பாலும் பாடியிருப்பதாலும் தொண்டைநாட்டிற் பிரபலமான பற்பல தலங்களிருக்க அவற்றையெல்லாம் பாடாமல் சிறிதும் புலத்துருத அக்களந்தையைப் பாடவேண்டுவதின்மையாலும், தொண்டைநாட்டார் கூற்றுப்போலியென்ணர்க.

பெரும்பலமதூர்—பெருருவடமருதூர்.

முடிவழங்கு சோழசதுர்வேதிமங்கலப்— இது கோயிற்களப்பாளிலுள்ள அக்கிரகாரத்துக்குப் பூர்வநாமம்.

ஒருபூ— நிலத்தில் ஒருபோகம் ஸாகுபடிசெய்தல்.

கருவூலம்— பொக்கிஷம்.

வல்லபதேவன்— இவன் இன்னவமிசத்தைச் சார்ந்தவனென்று விளங்கவில்லை; சகாப்தம் 1370—ல் விஜயநகரத்தை அரசாண்ட இரண்டாவது தேவராயனுடையசேனுதிபதி வல்லபதேவனென்பானொருவனுளன் அவன் தஞ்சாவூரிலிருந்தனனென்று அறியப்படுகிறது. அவனே வல்லபதேவனெனில் ஜாதி பிராம்மணன் மதம் சைவம் காலம் முற்கூறியதே தந்தை ஸௌந்தரேச்சுரன் ஆச்விலாயனஸூத்திரத்தினன்.

உ

சிவமயம்.

திருக்களர்ப் புராணம்.

பாயிரம்.

வலம்புரி விநாயகர்.

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற் றுளிணைவணங்கல் செய்வாம். (1)

பூக்களுட் சிறந்த தாரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற இலக்குமி தேவியானவள் (தன் செல்வம் நல்வழியிலே யீட்டப்பட்டு நல்வழியிலே செலவிடப்படுதலால்) என்றும் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கின்ற திருக்களரென்னுந் திருவூரிலே நிலைபெற்றருள்கின்றவரும், தேனொழுகுகின்ற கொன்றைப் பூ மாலையைச் சூடிய செந்நிறமான சடையையுடையவரான சிவபெருமானுடைய இடது பாதித்திருமேனியிற்றங்கியிருக்கின்ற அழகிய பூங்கொம்பை யொத்த உமையம்மையார் பெற்றெடுத்தவருமாகிய வலம்புரி விநாயகப் பெருமானுடைய அழகிய செந்தாமரை மலரை யொத்த செந்நிறமும் மென்மையும் அழகும் வாய்ந்தவையும் செம்பொன் போன்று அருமையானவையுமாகிய இரு திருவடிகளையும் வணங்குவோமாக.

மா—சிறந்த, பெரிய எனப்பொருளுரைப்பினுமாகும். வைகும்—தங்கும். இதழி—கொன்றை. வேய்ந்த—அணிந்த. காமர்—அழகு. களிறு—ஆண்யானை. வண்ணம்—அழகு; நிறம். வலம்புரி விநாயகர்—வலதுபக்கமாகத் துதிக்கையை

வளைத்து வைத்த விநாயகர். வழிபடுவார்க்கு விரும்பும் வெற்றியைத்தரும் விநாயகர் எனினும் அமையும். (வலம்—வெற்றி) வலம்புரி விநாயகர் திருக்களர் ஸ்தல விநாயகர்.

பாரிசாத வனேசர்.

நீர்கொண்ட செழுங்கமல வயல்குழவு திருக்களரு ணெடிய
[வானக்
கார்கொண்ட திருமேனிக் கண்ணனுநான் முகத்திறையுங்
[ககனத் தோருந்
தார்கொண்டு தொழநடஞ்செய் தடியரித யத்திலகுந் தண்
[ணிலாவிண்
டேர் கொண்ட பிறைச்சடிலத் தெம்பிரான் பூங்கழற்கு
[ளிறைஞ்சி வாழ்வாம், (2)

நீர் நிறையப் பெற்றவைகளும், செழுமையான வெண்டாமரை செந்தாமரைகளை யுடையவைகளுமாகிய வயல்கள் (நல்ல விளைபயிர்களோடு) விளங்குகின்ற திருக்களரென்னுந் திருவூரின் கண்ணே, ஓங்கி வளர்ந்ததும், மேகம்போலக் கருமை நிறம் கொன்டதுமாகிய திருமேனியையுடைய திருமாலும்,நான்கு திருமுகங்களையுடைய பிரமனும் தேவலோகத்தார்களும் பூமாலைகளைக் கொண்டு (வந்து சூட்டி) மனமொழி மெய்களால் வழிபட்டு நிற்கப் பிரமதாண்டவம் என்னுந் திருக்கூத்தைச்செய்து, அடியவர்களுடைய இருதய தாமரை மலரில் என்றும் எழுந்தருளி விளங்குகின்றவரும், குளிர்ந்த நிலாவை வீசி எழுச்சி படைத்த பிறைச்சந்திரனை யணிந்த சடாமுடியையுடையவரும். எங்கள் தலைவருமாகிய பாரிஜாதவனேசுரருடைய செந்தாமரை மலர் போன்றவையும், வீரக்கழலை யணிந்தவையுமாகிய திருவடிகளை வணங்கி (துன்பமில்லாத இன்புருவாக) வாழ்வோமாக.

கமலம்—தாமரை, ககனம் என்பது ஈண்டுத் தேவலோகம். வாழ்தல்—என்றும் ஒருபடித்தாகத் தங்குதல்; பூ என்பதைக் கழலுக்காக்கிப் பொலிவுடைய கழல் எனினுமாம். விள்ளல்—மலர்தல். 'விண்டு' என்பது மலர்த்தி என்னும் பொருடந்து நிற்கிறது; அந்தரப்பாவிதணிசந்தமானதால். ஏர்—எழுச்சி; அழகு.

அமுதவல்லியம்மையார்.

பலவகை யண்ட மெல்லாம் பானிலாக் கற்றை சுற்றி
யிலகிய தரள மாக்கி யிளமுலைக் கணியும் பேதை
யுலகெலா மகிழ்ந்து போற்றுந் திருக்கள ருவந்து மேவு
மலைமக ளமுதவல்லி மலரடி வணக்கஞ் செய்வாம்.

பலவகையாகவுள்ள அண்ட கோளகங்கள் எல்லாவற்யும் சந்திரனுடைய பால் போலும் வெண்மையான நிலாவாகிய நூற்கற்றையினாலே வரிந்து, விளங்குகின்ற முத்துவடங்களாக வாக்கித் தன்னுடைய இளங் கொங்கைகளிலே அணிகின்ற சிறுமியாரும் உலகமுழுவதும் விரும்பிப் புகழப்பெறுகின்ற திருக்களரிலே (சிறந்தபயன் தருதலிற் சிறத்தலால்) மகிழ்ந்து எழுந்தருளியிருக்கின்றவரும் மலையரசனுக்குத் திருமகளாக அவதரித்தவருமாகிய **அமுதவல்லி** என்னும் உமையம்மையாருடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்குவோமாக.

அண்டங்கள் ஐம்பூதங்களால் வேறுபடுதலின் பலவகை அண்டம் என்றனர். வரிந்து—கட்டி. அம்மையாருடைய விராட்டு வடிவத்தை நினைந்து பாடிய பாட்டாகுமிது.

விநாயகக்கடவுள்.

மருமல ரணையில் வைகு மடந்தையு முலக மீன்ற
வருமறைக் கிழவ னுவி னமலையும் வணங்கும் பைம்பொற்
றிருமலை மகட்கு முக்கட் டேவற்கு மருமை யாகித்
தருவனத் துறையுந் தெய்வத் தந்தியைச் சிந்தை செய்
[வாம் (4)

மணங்கமிழ்கின்ற செந்தாமரை மலராகிய திருவணையிலே தங்குகின்ற திருமகளும், உலகத்தைப் படைக்கின்றவரும் நான்கு வேதங்களை யோதவும் ஓதுவிக்கவுமுரியவரு

மாகிய பிரமதேவருடைய நாவிலே தங்கியிருகின்ற தூய்மையான நாமகளும் (சரஸ்வதியும்) வழிபடுகின்ற பசும் பொன் வடிவாகவுள்ள இமயமலையரசன் திருமகளான உமையம்மையாருக்கும், மூன்று திருவிழிகளையுடைய தேவாதி தேவராகிய சிவபெருமானுக்கும் பெறுதற்கரிய திருக்குழந்தையாகிப் பாரிஜாதவனமாகிய திருக்களரிலே எழுந்தருளியிருக்கின்ற தெய்வக்களிருகிய விநாயகப் பெருமானை என்றும் தியானிப்போமாக.

மரு—மணம், 'தரு' என்பது இங்குப் பாரிசாத மரத்தையுணர்த்திற்று. தந்தி—தந்தத்தையுடைய; (கொம்புடைய) ஆண்யானை, அதுவே 'களிறு' என வழங்கப்படும். '**அருமை**' என்பது அருமையாகப் பெறுதற்குரிய பொருள் மேனின்றது. 'ஈன்ற' என்றமையால் அதனை நாமகளுக் கடையாகக் கொள்ளினுமாம்.

குமாரக்கடவுள்.

உரைதரு மறையுஞானத் துண்மையுங் கங்கை நன்னீர்த்
திரைபொருஞ் சடிலத் தெம்மான் செவியமு தொழுகக் கேட் [பக்
கரையிலா வனந்த கோடிக்கலையுணர்ந் தியம்பி னேனை
வரைபக வெறிந்த வைவேன் மதலையை மனத்துள் வைப் [பாம். (5)

எல்லா நூல்களாலும் புகழப்படுகின்ற (புகழமைந்த) பிரணவ மந்திரத்தையும், தத்துவஞானத்திற்கு விடயமாகிய அம்மந்திரப்பொருளையும் அலைகள் மோதுகின்ற தூய்மையான நீரையுடைய கங்கைநதி தங்கப்பெற்ற சடாபாரத்தையுடைய எங்கள் தலைவரான சிவபெருமான், அமுதம் ஒழுகினாற் போலச் செவி குளிரக் கேட்டருளும்படி, அளவற்ற பல கோடி கலைகளையெல்லாம் இயல்பாக வுணர்ந்து, விளக்கியுரைத்தருளியவரும், கிரௌஞ்ச கிரியென்னும் அசுர வடிவான மலைபிளந்தழியும்படி கூர்மையான வேற்படையை

அதன்மேலே எறிந்த குழந்தையுமாகி இளையபிள்ளையா ரான முருகப்பெருமானை உள்ளத்தில் நிலைக்கச்செய்வோமாக. உண்மை என்பது மெய்ப்பொருளையுணர்த்திற்று. மறை— மந்திரம். உரைதரல்—புகழ்தல், இனி உரைதரு என்பதற்கு எல்லாப் பொருளையுமுரைக்கின்ற எனப்பொருள் கொண்டு மறை என்பதற்கு வேதம் எனப்பொருளுரைத்தலுமாகும். அப்படிக்கொள்ளும்போது எல்லாவற்றையு முரைக்கின்ற வேதங்களையும், வேதங்களாலுணர்த்தப் படுகின்ற தத்துவ ஞானத்தையும் எனவுரைக்க. எல்லா நூல்களையு முணர்ந் தால் அவற்றின் சாரமான பிரணவத்தையும் அதன் மெய்ப் பொருளையுமுணர்த்தல் பொருந்து மென்பார். "அனந்த கோ டி......,.....யுணர்ந்து" என்றார்.
வரை—மாலை பக—பிளவுபட வை—கூர்மை.

கலைமகள்.

ஆரண நான்கு மோரா றங்கமு மலகி லாத
காரணங் காட்டு ஞானக் கலைகளுந் தாளுய் நின்ற
வோரணங் கிளைப்பூ மேலோன் றனதுநா வுறையுந் தெய்வ
வாரணங் கிளமென் கொங்கை மயிலினை வணக்கஞ் செய்
[வாம் (6)

நான்கு வேதங்களும், வியாகரண முதலிய வேதாங்கங் களும், உலகின் தோற்ற முதலியவற்றிற்குக் காரணமும் ஆன் மாக்களின் பந்த மோட்ச காரணமுமிவையென விளங்கப் பல படியாகக் காட்டுகின்ற ஞான சாத்திரங் களும் ஆகிய எல்லாமும் தாமாகவே ஆகி நிலை பெறுகின்ற தெய்வமும், கச்சுப் பிதிரும்படி பருக்கின்ற இளமையான மெல்லிய கொங்கைகளையுடைய மயில் போன்ற சாயல் வாய்ந்த அம்மையாருமாகிய நாமகளை (சரஸ்வதிதேவியை) வணங்குவோமாக.

அணங்கு—தெய்வப்பெண். வார்—கச்சு. அணங்கு தல்—வருத்துதல்.

ஆளுடைய பிள்ளையார்.

தெண்டிரைப் புவியி னோங்கிச் சேயிதழ்க் கமலத் தண்ண
லெண்டரு மறைக்கு மேலா யிலங்கவா சவனு மாலு
மண்டரு மறிதற் கெட்டா வரனருள் விளைப்ப வோதித்
தண்டமிழ் விளக்குங் காழித்தலைவனை வழுத்தல் செய்வாம்.
(7)

தெளிந்த அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற இப் புண்ணிய பூமியிலே தலைசிறக்க விளங்கிச் செந்நிறமான இதழ்களையுடைய தாமரை (செந்தாமரை) மலரிலே எழுந்தருளியிருக்கின்ற தலைவராகிய பிரமதேவர், மேன்மையுடையனவாகக் கருதி ஓதுகின்ற வேதங்களுக்கு மேலான வேதமாக விளங்கும்படியும், இந்திரனும் (அப்பிரமதேவரும்) திருமாலும் தேவர்களும் அறிதற்கரிய தன்மையுடைய சிவபெருமான் ஓதுவார்க்கெல்லாந் திருவருள் பாலிக்கும் படியும் தேவாரத்தை (திருக்கடைக் காப்பை) திருவாய் மலர்ந்தருளி இனிய தமிழ்மொழியைச் சிறந்ததாக விளக்கியருளியவரும், சீர்காழியிலே தோன்றியவரும், நஞ்சைவசமய குரவருமாகிய திருஞான சம்பந்தப்பெருமானை (ஆளுடைய பிள்ளையாரை) வாயாரப் புகழ்வோமாக.

நீரின் தெளிவு, அலைகளுக் கேற்றப்பட்ட தென்க தெண்மை—தெளிவு, இனி, நீரின் வெண்மையை அலைகேள காட்டுதலால் அங்ஙனங் கூறினர் எனினுமாம்; அங்ஙனங் கூறுதல் மரபாதலால். **'தெண்டிரை வளாகத்து'** எனச்சான்றோர் செய்யுள்களில் வணங்குதல் காண்க.
வாசவன்—இந்திரன்.

ஆளுடைய அரசு.

உலகெலா மெனப்பாடென் றடியர்தமக் குரைபகர்ந்த வொருவன் ருனே, யலகிலா முதுமறைக்கு மறிவரிய பரஞ்சுட ரென் றறிவானேக்கி, நிலைநிலாப் புன்சமயத் தமணெழுக்க நெறிமுழுது நீக்கு ஞானத், தலைமைசால் வாகீசர் தாண் மலரை யெமதுசிரந் தரித்தல் செய்வாம்.

சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியவர்களின் வரலாற்றை, அநபாய சோழன் கேட்டுக் கொண்டதற் கேற்ப விரித்துப்பாடுவதற்கு நடராஜப்பெருமாளுகிய தனது திரு வருளை யெதிர்நோக்கி நிற்கும் பொழுது சேக்கிழார் பெருமானுக்கு **"உலகெலாம்"** எனத் தொடங்கிப் பாடுக எனக்குறிப்பித்து 'உலகெலாம்' என்னுந் தொடரைத் திரு வாய் மலர்ந்தருளிய, (அசரீரியாகச் சொல்லியருளிய)ஒப்பற்ற இறைவனே அளவிலாத வேதங்களாலு மறிதற் கரிய சிவபரம் பொருளாகுமென்று தம்மறிவினுலே நுணுகித் தெரிந்து நிலை யற்ற இழிந்த சமயமாகிய சமண சமயத்திலேயுள்ள பொய் யொழுக்க நெறிகள் எல்லாவற்றையும் நீக்கி விட்டுச் சைவ சமய ஒழுக்க நெறியை மேற்கொண்ட ஞானமுதிர்ச்சி யுடையவராகிய திருநாவுக்கரசர் பெருமானுடைய (ஆளு டைய அரசருடைய) திருவடித் தாமரை மலர்களை எங்களு டைய தலைகளிலே அணியாகச் சூடிக் கொள்வோமாக.

அமண்—சமணர் **"உலகெலாமெனப் பாடென் றடியர்தமக் குரைபகர்ந்த வொருவன்ருனே"** என்பது **"சிவபெருமான்ருனே"** என்பதையே குறிப் பித்து நிற்கின்றது. அடைகொளியை யுணர்த்தலிலேயே நோக்குடையதாக வந்ததன்றி அடைப்பொருளையு முணர்த் தலில் நோக்குடையதாக வரவில்லை என்க; சேக்கிழார் காலமும் ஆளுடைய அரசர்காலமும் வேருதலால்.

ஆளுடைய நம்பி.

தர்திவ ரளகச் செவ்வாய்த் தடமுலைப் பரவை தன்பா
லாதியம் பரமன் ருனே யரையிருட் போழ்தி லன்பாற்
றூதுசென் றருளப் பாடுஞ் சுந்தர மூர்த்தி பொற்ருட்
பாதுக மெமது சென்னிக் கணியெனப் பணித்தல் செய்வாம்.
(9)

(பூக்களை யெப்பொழுதுஞ் சூடுதலால்) அப்பூக்களின் மகரந்தப்பொடிகள் படிந்த கூந்தலையும், செந்நிற இதழ்களை யுடைய (உதடுகளையுடைய) வாயையும், அடி பரந்து குவிந்து வளர்ந்த கொங்கை களையும் உடைய பரவை நாச்சி யாரிடத்தில் எல்லாவற்றிற்கும் முழுமுதற்கடவுளான சிவ பரம்பொருளே நடுநிசியில் அன்பினுலே, தூதுவராகச் சென் றருளும் படியாக அவர்மேலே புகழ்ப்பாடல்களைப் பாடி யருளிய சுந்தரமூர்த்திசுவாமிகளின் பொன்போலச் சிறந்த திருவடிகளிற் பூணுகின்ற பாதுகைகளை எங்களுடைய தலை களுக்கு அணிகலமாகச் சூடிக்கொள்வோமாக.

இவர்தல்—ஏறுதல். அது இங்குப் படிதலை யுணர்த்தி நின்றது.

அளகம்—கூந்தல். பணித்தல்—அமைத்தல். பாதுகம்— காப்பாற்றுவது. (கட்டைமிதியடி) **"பாதுகா"** என்பது, நபும்ஸகலிங்கமாகக் கூறப்படினுங் குற்றமர்காது எனக் கருதியதால் **பாதுகம்** எனக் கூறப்பட்டதென்க.

ஆளுடைய அடிகள்.

ஒழுக்கநெறி யுணராத புத்தரெலா முரையடங்கி யூம ராக,
விழுத்தகுநான் மறைப்பிரம ஞமகளை முனிந்துமுடி வேந்த
னீன்ற, வழுக்கின்மட மாதினெடும் பதிகமுரைத் துயர்ஞால
மகிழ மேனுட், டொழத்தகைய மணிமன்றிற் பவந்தவிர்க்கு
மடிகளையாந் துதித்தல் செய்வாம். (10)

முன்னொரு காலத்தில் உண்மையான சைவ ஒழுக்க நெறியை யறியாதவர்களாகி (இலங்கையிலிருந்து வந்து) சிதம்பரத்தையடைந்து பொன்னம்பலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற நடராஜப்பெருமானை யெடுத்துவிட்டுத் தங்கள் புத்தரை நிலைநாட்டுவோம் என்னுங்கருத்துடன் வாதஞ் செய்யவந்த புத்தர்களனைவரும் பேசுதற்கு முடியாத ஊமர் களாக ஆகும்படி சீரமைந்த நான்கு வேதங்களுக்குமுரிய பிரமதேவன் நாயகியாராகிய சரசுவதிதேவியாரை நோக்கி (சிவபெருமானுணையாக நீவிர் இப்புத்தர்கள் நாவிலிருந்து பொய்யுரை சொல்லாமல் நீங்குவீராக எனக்) கோபத்துடன் சொல்லி நீங்கும்படி செய்து ஈழநாட்டரசன் பெற்ற நல்ல மகள் ஊமையாக இருந்தவளைப் பேசும்படி செய்து உயர்ந் தோர்கள் எல்லாரும் மகிழும்படியாக அவளிடத்தில் பதிகத் தையும் சொல்லி மனமொழி மெய்களால் வழிபடத்தக்க தாய அழகிய அப்பொன்னம்பலத்திலேயே பிறவியொழியும்படி அந்நடராஜப் பெருமானிடத்திரண்டறக்கலந்தருளிய மணி வாசகப் பெருமானுகிய அடிகளாரை யாம்புகழ்வோமாக.

விழுத்தகு நான்மறை என்பது வினைத்தொகை. விழுத் தகு என்பது திருத்தகு என்பது போலப்பகுதியாக நின்று. விழுப்பம் தகுதியாக அமைந்த என்னும் பொருள் தருகின் றது. நாமகள்—சரஸ்வதி. வழுக்குஇல்—குற்றமில்லாத. பவம்—பிறப்பு. மணி—அழகு. மணிமன்று—மணிகள் பதித்த பொன்னம்பலம் எனினுமாம். புத்தர்கள் வழுக் குடையராதலின் அவரிடத்தில் பதிகத்தை யுரையாமல் குற்ற மற்றவளாக அரசன் மகளிருத்தலால் அவளிடத்தி லுரைத்தார் என்பதாம். புறந்தூய்மையின்மையோடு பொய்ந்நெறியை மெய்ந்நெறியாகக் கொள்ளல், வழுக்காகும்.

குரு

கல்லிலையா னிழலமர்ந்து நால்வர்க்குஞ் சுகர்தமக்குங் கனிவாற்பாடு, மல்லல்வயற் றிருவாத வூரருக்கு முபதேசம் வழங்கி மீண்டுந், தொல்லுலகி லந்தணனும் வடிவாகித்

தோன்றியருள் சுரந்த நோக்கால், வல்வினைதீர்த் தெமை யாண்ட சாம்பசிவ குருவினடி வணக்கஞ்செய்வாம். (11)

இலைகள் நெருங்கிய கல்லாலமரம் குருந்தமர முதலிய மர நிழல்களிலே ஞானாசாரியராக எழுந்தருளியிருந்து சனகர் முதலிய நால்வருக்கும், சுகப்பிரமத்திற்கும், அன்பினுற் கனிவோடு பாடிய, வளப்பம் பொருந்திய, வயல்களையுடைய திருவாதவூரிலே பிறந்த மணிவாசகப் பெருமானுக்கும், ஞானோபதேசம் செய்து மறுபடியும் பழமையான இந்தப் பூவுலகிலே ஒரு பிராமண வடிவங்கொண்டு வெளிப்பட்டு வந்து திருவருள் பெருக்கிய திருநோக்குடன் தீயவினைகளை யெல்லாம் போக்கி எங்களை யடிமைகொண்டருளிய **சாம்ப சிவனார்** என்னுந் திருப்பெயரையுடைய குரு மூர்த்திகளின் திருவடிகளை வணங்குவோமாக.

கனிவால்—கனிவொடு; இளகிய திருவுள்ளத்துடன். இலைக்கல்லானிழல் எனப்பிரித்து உரைக்கப்பட்டது. உபலக்கணத்தால் குருந்து முதலியன கொள்ளப்பட்டன; பின் வருவனவற்றை நோக்கி என்க.

'அந்தணர்' என்பது காரணங்கருதும் பொழுது துறவறத்தினரைக் குறிக்குமெனினும் இடுகுறியாகப் பனவ குலத்தினரைக் குறிப்பதாலும் துவதறத்தார் என்பதைப் புலப்படுத்த, வேறு அடையின்றி அந்தணன் என்றுமட்டும் கூறுதல், மரபன்மையாலும் ஈண்டு **அந்தணான்** என்பது பனவகுலத்தினன் எனச் சாம்பசிவனரைக் குறித்து விளக்க வந்ததெனவே கோடல்தகும்.

சிவனடியார்கள்.

சிவசின்னந் தஃணப்பெற்ருேர் சிவன்கழற்பூ சஃனபுரிந்தோர் சிவநாமத்தைப், பவநந்தப் புகன்றிடுவோ ரரனடியார் தமக் கினிய பத்தி பூண்டோர், புவனங்கள் புகழ்கயிலேச் சிவபுர மாங் கதிபுக்கோர் புகுவோரென்னு, மிவர்தங்க டிருவடிப்பூங் கமலமல ரெமதிதயத் திருத்தல் செய்வாம். (12)

(சிவனடியாராதற்குரிய விபூதி முதலிய) சிவச்சின்னங் களேப் பெற்றணிந்தவர்களும், சிவபெருமானுடைய திருவடி களேப் பூசிக்கின்றவர்களும், சிவபெருமானுடைய திருப்பெயர் களேப் பிறப்பொழியும்படி அன்புடன் சொல்லுகின்றவர்களும், சிவனடியார்களிடத்தில் நல்ல அன்பைக் கொண்டு விளங்கு பவர்களும், உலகமெல்லாம் புகழும்படியான கைலே மலே யாகிய சிவபுரத்தை யடைந்தவர்களும், அதனே அடைவதற் குத் தகுதியுள்ளவர்களாக இருப்பவர்களுமாக உள்ள இந்தச் சிவனடியார்களுடைய திருவடிகளாகிய பொழிவு தங்கிய தாமரைமலர்களே எங்களுடைய உள்ளத்திலே தங்கும்படி செய்வோமாக. (தியானிப்போமாக)

அத்தகைய சிவனடியார்களே நேரேபார்ப்பதால், ''இவர் தங்கள்'' என அண்மைச்சுட்டாற் கூறினர். **'எமது சிரம்' 'அது சென்னி' எமதிதயம்** என்பனவற்றில் வரும் **எமது'** என்னும் உருபு, ஒருமையில் நோக்கமின்றிக் கிழமை யில் மட்டும் நோக்குடையதாக நின்ற தென்க. அன்றிச் சாதி யொருமை வாசகமாகவந்த தெனினுமாம். உயர்வுப் பன்மையில் எம் என்பது வந்ததெனினும் பொருந்தும்.

அவையடக்கம்.

இலங்குமா தவன்றுயிலும் பாற்கடலை யொருதுரும்பி லிணக்கி
யூருஞ், சிலம்பிநூ லினைப்பிணைத்துக் கடைந்தமுதம் பெறு
மொருவன் செய்கை போலாம். வலந்தநூல் பலவுணர்ந்து
வாய்த்தவறி வாலடங்கி மலமோர் மூன்றுந், தொலைந்தபே
ரறிவாளர் முன்னர்யான் றமிழ்பாடத் துணியு மாறே. (13)

அறம் பொரு ளின்பம் வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களையும் அவற்றிற்குச் சாதனமாக வுள்ளவற்றையும் கூறுகின்ற பல நூல்களையும் கற்றதனாலுண்டாகிய அறிவினாலே அடங்க வேண்டிய முறைப்படி யடங்கி மூன்று மலங்களும் நீங்குதற்குக் காரணமாகிய சிவஞானம் பெற்ற சிவ ஞானிகளின் முன்னிலையில் யான் திருக்களர்ப் புராணத்தைத் தமிழினால் பாடுவதற்குத் துணியுந் தன்மையானது, நீலமேகம் போல விளங்கும் திருமகள் நாயகனாகிய திருமால் அறிதுயில் புரிகின்ற திருப்பாற்கடலை ஒரு சிறிய துரும்பை மத்தாகச் செய்து அதிலே நாட்டி, ஊர்ந்து செல்லும்படியான சிலம்பிப் பூச்சியின் நூலைக் கடையும் கயருகக் கட்டிக் கடைந்து அமிழ்தத்தைப் பெறுவதற்கு விரும்புகின்ற ஒருவனது தன்மையை ஒக்கும்.

வலத்தல்—சொல்லுதல். துரும்பில் இணக்கி—துரும்பைக் கொண்டு மத்தாக அமைத்து. மலமூன்று — ஆணவம், மாயை, கன்மம் எனக் கூறப்படுமும் மலங்கள். மலம் விக்ஷேபம் ஆவரணம் என்பனவுமாகும்.

வலந்த.........................பேரறி வாளர்" என்றது தருமை யாதீனத்திலக் காலத்திருந்த துறவறப் பெரியார்களைக் குறிக்கின்றது. இது, **"ஆய்வார் பசுபதி பாசத்தின்"** என்னும் சம்பந்த சரணாலய சுவாமிகளின் திருப்பாவை நினைப் பூட்டுகின்றது.

சிறப்புப்பாயிரம்.

கருணைமிகு நந்தியுரைப் படிசூத மாமுனிவன் கழறு மாறே
தருமைவரு மழகியசிற் றம்பல சற் குருவருளே தரித்து நாளு
முருகனெனக் கலையுணர்ந்த சரவணமா முனியருளான்
மொழிகென் றேத, விருநிலத்தி லுயர்களந்தை யாதியப்பன்
பசுந்தமிழா லியம்பல் செய்தான் (14)

தருமபுர ஆதீனத்தில் மகா சந்நிதானமாக எழுந்தருளி யிருக்கின்ற அழகிய சிற்றம்பல ஞானதேசிக சுவாமிகளின் திருவருளைப் பெற்று என்றும் முருகப் பெருமானைப் போலச் சகல கலை நூல்களை முணர்ந்தவராக விளங்குகின்ற சரவண முனிவர் எனப் பெயர் படைத்த பெரியார், அருள் மிகுந்த நந்தியம் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய முறை தவறாமல் சூத மகா முனிவர் திருவாய் மலர்ந்தருளியபடி த திருக்களர்ப் புராணத்தைப் பாடுக என்றருளிச் செய்ய, (அம் மொழியைச் சிரமேற் கொண்டு) அகன்ற இந்தப்பூ வுலகத்திலே சிறந் தோங்குகின்ற களந்தை ஆதியப்பன் என்ற பாவலர் இனிய எளிய தமிழ்ப் பாவினால் பாடினார்.

'பசுமை' என்பது இனிமை எளிமைகளை யுணர்த்தி நின்றதென்க. 'களந்தை,' என்பது 'களப்பால்' என்பதன் மரூஉப் போலும். 'களப்பால்' என்னுமூர் திருக்களர்ப் பக்கமிலுள்ள ஊராகும்.

முதலாவது
அனுகூலச்சருக்கம்

முந்து பூதலம் புனலெரி யனிலம்வான் முதலா
விந்து சேகரன் றிருவரு ளாற்றரு மிறையோன்
றந்த நால்வரு ளொருவன்மா தவமுடைத் தலைவன்
சிந்தை தூயனுன் மறையெலா முணர்ந்திடும் திறலான். (1)

சந்திரனையணிந்த திருமுடியையுடைய சிவபெருமானு டைய திருவருளாலே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூத முதலிய எல்லாப் பொருள்களையும் படைக் கின்ற பிரமதேவன், முன்பொரு காலத்தில் தனது மனோ

சங்கற்பத்தால் புதல்வராகப்பெற்ற நான்கு முனிவருக்குள்ளே ஒருவர், சிறந்த தவமுடையவர் ; நான்கு வேதங்களையும் முற்றப் பொருளோடு தெளிய அறிந்த அறிவு வல்லமையுள்ளவர் என்னும்படி விளங்கினர்.

முந்து—முன்னொரு காலத்தில், இனி **முந்து** என்பதற்கு **"பிருதுவி"** என முதலில் எண்ணப்படுகின்ற எனினுமாம் பிரமன், ஐம்பூதங்களையும் ஐம்பூதகாரியங்களையும் படைக்கின்றவனாதலால் **"பூதலம் புனலெரியனிலம் வான் முதலா"** என்றனர். தூய்மை — பாபமின்மை. சிந்தை தூயன்—சித்தசுத்தியுடையவன்.

அன்ன மாதவன் றன்மையா முறைப்பதெ னரன்று
பின்னு மீங்கிவ ணுயின னென்னலாம் பெயரோ
வுன்ன ருஞ்சனற் குமரனுங் கன்னவ னொருநா
ளின்னல் வல்வினைப் பிறவிவே ரறுப்பதற் கெண்ணி. (2)

அத்தகைய மாதவராகிய முனிவருடைய தன்மைகளை யான் எடுத்துத் தனித்தனியாக விளக்குவதெதற்கு. 'அருந் தவராக விளங்குஞ் சிவபெருமானே மேலும் இவவுலகில் இத் தவசியாகத் தோன்றி வந்தார்' என்று சொல்லத்தக்கவர். அவர் பெயரோ எண்ணியளவிடற்கருமையான தன்மைகளையுடைய சனற்குமாரன் என்னும் திருப்பெயராகும். அவர் ஒரு நாள் துன்பந்தர வல்ல இருவினைகளை யீட்டுதற்குரிய பிறப்பிற்குக் காரணமாகிய மும்மலங்களையும் ஒழிப்பதற்கு எண்ணங்கொண்டு.

பிறரும் **"தாழ் சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே"** (புலநானூறு) எனச் சிவபெருமானைத் **தவன்** எனக் குறித்தல் காண்க.

முண்ட காசனத் திறைவனுந் திருமகண் முயங்குந்
தண்டு ழாய்நறை கமழ்புயத் தமலனுந் தரள
மண்டு தெண்டிரைப் புவனமுங் ககனமும் வணங்கு
மண்டர் நாயக னுறைதிருக் கயிலைவந் தடைந்தான். 3

தாமரை மலரை உறையுமிடமாக கொண்ட பிரம தேவனும், இலக்குமிதேவி தழுவும்படியான குளிர்ந்த துளப மணம் மணக்கின்ற திருத்தோள்களையுடைய நிர்மலனாகிய திருமாலும், முத்துக்களோடு கரையை வந்து மோதுகின்ற தெளிந்த அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூவுலகத்தார்களும், தேவலோகத்தார்களும் வணங்கும்படியான, தேவாதி தேவனாகிய சிவபெருமான் உரைகின்ற கயிலைமலைக்கு வந்து சேர்ந்தார்.

முண்டகம்—தாமரை. "முண்டகம், திரை, புவனம் ககனம்" என்னும் இவைகள், ஆகுபெயர்களாக முறையே மலரையும், கடலையும் பூவுலகத்தாரையும், தேவலோகத் தாரையுமுணர்த்தின.

வெள்ளி மால்வரை யெய்திய முனிவரன் வியப்பாய்க்
கள்ளு லாமலர்க் கொன்றையான் முன்றிலிற் கடுப்பாற்
றள்ளி வேத்திரத் தாலிமை யவர்களைத் தடுக்கும்
வள்ளல் பாலுற மருவினன் வணங்கினன் மகிழ்வால். 4

வெள்ளிவடிவான உயர்ந்த கயிலை மலையை அடைந்த முனிவர்கள் தலைவராகிய சனற்குமார முனிவர் வியப்பை யடைந்தவராய்த் தேன் ததும்பி யொழுகும் படியான கொன்றைமலர் மாலையை யணிந்த சிவபெருமானுடைய திருவாயிலிலே பிறம்பினாலே (அடித்துத்)தள்ளித் தேவர்களை யுள்ளே விரைவாகச் செல்லாமல் தடுத்து, (அமைதியாகச் சென்று) தரிசிக்கும்படி செய்கின்ற அருள் வள்ளலாகிய நந்தியம் பெருமானருகிலே போய் நிற்பதற்காக மெல்லச் சென்று மகிழ்ச்சியோடு வணங்கினார்.

மால்—உயர்ச்சி. முன்றில்—இல்முன். இல்முன் முன்றில் எனமருவியது; இல்வாய் என்பது 'வாயில்' என மருவியது போல. வீட்டின் முன்னிடம் என்பது அதன் பொருள். இவ்வாறு வருவனவற்றை இலக்கணப்போலி மொழிகள் என்பர். கடுப்பால்—வேகமாகச் செல்லுதலால். கடுப்பால்—கோபத்துடன் என உரைப்பினுமாம்.

ஆர்வ மீக்கொள வந்தணன் வணங்கலு மறிவாற்
சீரி யோர்புகழ் நந்திவா னவனருள் சிறந்து
தேரு மாதவ நின்வர வுரையெனத் திளைக்கும்
வேரி நாண்மல ரோன்றரு முனிவரன் விளம்பும். 5

அன்புமேலிட்டு விளங்க, அழகிய தன்னளியை யுடைய சனற்குமார முனிவர் வணங்குதலைச் செய்தலால் அறிவினாலே மேம்பட்டவர்களான பெரியோர்கள் புகழ்ந்து கொண்டாடும் படியான நந்தியம் பெருமான், தனித்த அருள் கொண்டு, தேடிவந்த மாதவனே உன்னுடைய வருகைக்குக் காரணம் என்ன? அதைச் சொல்லுக என்று சொல்லவும், தங்கி யனுபவிக்கின்ற தேனொழுகும்படியான தாமரை மலராகிய ஆசனத்தை யுடைய பிரமதேவனுக்கு மானச புதல்வரான அம்முனிவர் பெருமான், சொல்லத் தொடங்கினார்

சிறத்தல்—தனித்தல் தேர்தல்—தேடுதல். தெளிதல் எனப்பொருள் கொள்ளுதலுமாகும். அங்ஙனமாயின் 'தேரு மாதவ' என்பதற்கு எல்லாராலுந் தெளிவாக அறியப்படுகின்ற மாதவனே எனப் பொருள் கொள்ளல் நேரும். 'தேரும்' என்பதற்கு மலமறத் தெளிந்த உள்ளத்தையுடைய எனப் பொருள் கொள்ளுதலு மாகும்.

தண்ணளி—கிருபை. வணங்கலும் என்பதில் உம்மை வினையெச்சப் பொருடந்து நிற்கின்றது; "**காண்டலி துவே செய்யுர்**" என்புழிப் போல.

ஐய நீதெரி சித்திடின் முத்தியை யளிக்கு
மெய்ய ருட்சிதம் பரநகர்ப் பெருமையும் விமலன்
பய ராவணைக் கண்ணனும் பிரமனும் பரவி
ய்ய முன்னடம் புரிந்தது மன்றுநீ யுரைத்தாய். 6

சுவாமி! தேவரீர், தரிசித்த மட்டில் வீடு பேற்றையளிக்கின்ற மெய்ம்மையான, அருளைப்பெறுவதற்கு நிலைக்களமாக விளங்கும் சிதம்பரத்திரு நகரத்தின் பெருமையையும், நிர்மலனாகிய சிவபெருமான், படம் விரித்துக் கிடக்கின்ற பாம்பணையிற் பள்ளி கொண்டருள்கின்ற திருமாலும், பிரமதேவனும், (எல்லாத்தேவர்களும், முனிவர்களும், மற்றைய பூவுலகத்தார்களும்) புகழ்ந்து துன்பங்களினின்றும் நீங்கி யின்பம் பெறும்படி (அங்கே) முன்னர்த் திருக்கூத்தாடிய செயலையும் அன்றொரு காலத்தில் திருவாய் மலர்ந்துறைத்தருளினீர்.

அன்று கேட்டியான் புனிதனு யினனுன தருளா
லின்று மாலயற் கரியவன் றருவனத் திலகு
மன்று ளாடியாந் தெரிசனை வழங்குவோ மகிழ்வா
லென்று கூறின னெனுமுரை கேட்டன னினிதின். 7

அப்பொழுதடியேன் காதாரக் கேட்டுத் தூயவனாக ஆயினேன். இப்பொழுது தேவரீர் திருவருள் செய்து, திருமால், பிரமன் இவர்களாலே அறிதற்கரியவரான சிவபெருமான், யாம், பாரிசாதவனமாகிய திருக்களரிலே விளங்கும் படியான பேரம்பலத்திலே பலமுனிவர்கள் பொருட்டும், தேவர்கள் பொருட்டுமாகத் திருக்கூத்தைச்செய்து, அக்கூத்தின் காட்சியை எல்லாருங் கொள்ளச்செய்வோம்; என்று துருவாச முனிவருக்கு கூறி, அவ்வாறே திருக்கூத்தாடிக் காட்சியளித்தார்; என்பதைக்கூற மனமகிழக் கேட்டேன்.

ஆடி—ஆடுதலைசெய்து 'ஆடி' என்பதைப் பெயராகக் கொள்ளினுமாகும். அவ்வாறு கொள்ளும்போது மாலயற் கரியவனாகிய மன்றுளாடி எனப் பொருளுரைக்க.

தெரிசனை காட்சி.

அந்த மாக்கதை கேட்பதற் காதர வடைந்தே
னெந்தை கூறுகென் றருந்தவன் பின்னுமீ திசைப்பான்
பந்த வல்வினைப் பிறவியின் வேரினைப் பறிப்பான்
வந்த வெற்குநீ யளிப்பதுன் றன்மையின் வழக்கால். 8

அந்தப்பெரிய வரலாற்றை விளக்கமாக கேட்பதற்கு அன்பு கொண்டேன். ஆதலால் எம் குருபரா அவ் வரலாற்றை (விரிவாகத்) திருவாய் மலர்ந்தருள்வீராக; என்று சொல்லி, மீண்டும் அவ்வரிய தவமுனிவர் சொல்லத் தொடங்கினவராகிப் பந்தத்தை தரக்கூடிய கொடிய இருவினைகளின் பயன்களை யனுபவிக்கத் தோன்றிய பிறவிகளுக்குக் காரணமாக வுள்ளவற்றை யொழிக்குங்கருத்தோடு அடைந்த அடியேனுக்குத் அருள்புரிவது தேவரீரது இயல்புக்குரிய செயலாகும்.

ஆல்—அசை. கட்டுரை சுவைபட நின்றது

தவமி லாதவ ராயினுந் தனையடைந் தவரை
யவல நீக்கியாங் கவர்தமை யளிப்பதுன் னறமும்
புவன மூன்றினு மறிகலாப் பொருளுனக் குளதோ
சிவன ருட்டிற நீயலா லுலகிலார் தெரிப்பார். 9

தேவரீரை வந்தடைந்தவர்கள், அருள் செய்வதற்குரிய தவமில்லாதவர்களாக இருந்தாலும் அவர்களை அவர்கள் குற்றத்தையெல்லாம் திருவருளுக்கிணைலே நீக்கிப் புனிதர்களாக ஆக்கி அருள் புரிவது தேவரீர் நுமக்குரிய தருமமெனக் கொள்ளுங் கருத்துடையவராவீர். மூன்றுலகங்களிலும் தேவரீரால் அறியமுடியாத பொருள் ஏதேனுமுண்டோ ஆதலால் சிவபெருமானுடைய திருவருட்பாகுபாட்டைத் தேவரீரையல்லாமல் வேறெவர்கள் அறிவிப்பார்கள்.

தவம்—புண்ணியம். தனை என்பது இடைக்குறையாய் முன்னிலைப் பொருளையுணர்த்திற்று. வழக்குவலியுடைமையால். அவலம் என்பது அவலத்தைத்தரும் குற்றத்தின் மேனின்றது. வருத்தமெனினுமாம்.

நறிய கொன்றையான் பெருமையுங் கீர்த்தியு நலனு
மறிவை நீயத னுலுனை யன்பினுற் கேட்பான்
குறுகி னேனரன் காதையி லொருபொருள் கூறச்
சிறிது கேட்பினு முத்திவந் துறுமெனுந் தெளிவால். 10

சிவபெருமானுடைய வரலாற்றுப் பகுதியில் ஒரு வரலாற்றும் பொருளை, தெரிந்தவர்கள் சொல்ல அதிற் சிறிதளவு கேட்டாலும் வீடு பேறு தானே வந்தடையும். என்பதைத் தெளிவுறஅறிந்தபடியினுல், நல்ல கொன்றைப் பூமாலையைச் சூடிய அச்சிவபெருமானுடைய பெருமையையும், புகழையும் நல்ல பண்புகளையும், செயல்களையும் தேவரீர் நன்றுக அறிவீராதலால் தேவரீரிடத்து அன்புடன் தருவன (திருக்களர்) வரலாற்றைக் கேட்பதற்குத் தேவரீரை வந்தடைந்தேன்.

நறிய—நல்ல; குற்றமற்ற. அதாவது காம காரணமாகாத வாசனையையுடைய எனினுமாகும்.

குறுகுதல்—நெருங்குதல்; அடைதல்.

அன்ன காதையை யன்பினு லுரைத்தரு ளடிகேள்
பொன்னி லங்கிய புரிசடைப் பரமனே பொருவு
முன்னே யான்புகழ்ந் துரைப்பதற் கியலுமோ வுரவோ
யென்ன வின்னண முனிசொல நந்தியு மியம்பும். 11

சுவாமிகளே! சிவ ஞானச் செல்வரே! அத்தகைய சிவ பெருமானுடைய வரலாறு பலவற்றுள் தருவனத்துள் அவர். திருக்கூத்துக் காட்சியளித்தருளிய வரலாற்றைத் தேவரீரது அருளினாலே உரைப்பீராக பொன்னைப்போல விளங்குகின்ற முருக்குண்ட சடையையுடைய பரமனாகிய சிவபெருமானை யொத்த தேவரீரை எளியேன் புகழ்ந்து சொல்வதற்கு முடியுமோ என்று இவ்வாருகச் சனற்குமார முனிவர் செர்ல்ல வும் நந்தியம் பெருமானும் சொல்லத்தொடங்கினார்.

அடிகள்—எல்லாவற்றிற்கு முதலாகவுள்ள பரத்தை இத் தகைய தெனத் தெளியவுணர்ந்தவர். அடி—மூலம்.

உரம்—திண்மை. அஃதறிவையுணர்த்தும் என்பதை "**உரனென்னுந் தோட்டியான்**"(வள்ளுவர்)என்பத னுலறிக. புரி—முருக்கு.

வேறு

முனிவரி லுயர்ந்த மூதறி வுடையோய் முண்டகப் பொகுட் டில்வீற் றிருக்குந், தனி முதற் கடவு ளறிவரும் பரமன் சக மெலா நிறைதலாற் றயங்கும். புனிதனு லயமெப் புவனமு மெனினும் போதமெய்த் தொண்டர்நெக் குருகிக், கனியுமன் பதனுற் றவத்தினல் யோகக் காட்சியாற் கடவுளங் குவக்கும் 12

முனிவருக்குள்ளே சிறந்த முதிர்ந்த அறிவினையுடைய வரே தாமரை மலரின் கொட்டையின் மீது எழுந்தருளி யிருக்கின்ற ஒப்பற்ற சிருட்டி கர்த்தரான பிரமதேவராலு மறிதற்கரிய தேவர்கள் தலைவரான சிவபெருமான், உலக மெல்லாம் நிறைந்திருத்தலாலே எல்லாவுலகும் அவருடைய ஆலயமாக விளங்குமானுலும், சிவஞான முடையவரான உண்மையான அடியார்கள், மனநெகிழ்ந்துருகிக் கசிதற்குக் காரணமாகிய அன்பினுலேயும். தவத்தினுலேயும், உள்ளத் தையொடுக்கி நோக்கும்படியான யோகக் காட்சியினு லேயும் எங்கெங்கே சிறந்து விளங்குகின்றுர்களோ அவ்வவ் இடங்களை யெல்லாம் தாமுறைகின்ற ஆலயமாக மாற்ற மனங்கட் கெட்டாத அச்சிவபெருமான் விரும்பி யருள்வார்.

போதம்—ஞானம். சிவஞானமுடையவர்கள், தமக்குண்டாகிய அந்த ஞானம் திடமாதற் பொருட்டு **ஆலயந் தானு மரனெனத் தொழுமே"** (சிவஞான போதம்) என்றபடி இறைவனை வழிபடுவாரென்க. இனிப்போத எனப் பிரித்து 'நிறைய்' எனப் பொருள் கொள்ளுதலுமாம்: **"போத மெஞ்ஞான நலஙர் பெறற் பொருட்டே"** (தொல்—சொல். சேனவரையர் பாயிரம்) **"அதனளவும் போத"** (திருக்குறள் பரிமேலழகருரை) என்புழிப் போல. சிருட்டி கருத்தராதலின், பிரமன் **"தனி முதற் கடவுள்** என உபசரிக்கப்பட்டார். **"எவ்வழி நல்லவராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறநானூறு)** என்பதை **இப்பா** நினைப்பிக்கின்றது.

அவ்விட முழுது மரனினி துறையு மாலய மெனப்படு மவற்று, ணல்வனந் தீர்த்த நதிதவ மிவற்று னலமிகு மோரொரு தலத்தி, னிவ்வயிற் கருணைத் திருக்கணேக் கருளி யேத்தினோர் தமக்கெலா மிரங்கி, நவ்வியங் கரத்தோ னுங்கவர்க் கியைந்த நல்வரம் பலபல நல்கும். 13

அவ்விடங்களெல்லாம் சிவபெருமான் மகிழ்வுடன் எழுந்தருளி யிருக்கின்ற ஆலயங்கள் என்று சொல்லப் படுகின்றன. அவ்வாலயங்களுக்குள்ளே, நல்ல வனங்கள் தீர்த்தங்கள் நதிகள் தவங்கள் ஆகிய இவற்றின் மூலமாக நன்மை பெருகுதலாற் சிறந்த ஒவ்வொரு தலங்களின் கண்ணும் மானைத் தாங்கிய திருக்கையையுடைய அச் சிவபெருமான் வந்து வழிபடுகின்றவர்களுக் கெல்லாம் இரக்கங்கொண்டு கருணை விழியைச் சாத்தியருளி அவரவர்களுக்குப் பொருத்தமான மிகப் பல்வாகிய நல்ல வரங்களை ஈந்தருளுவார்.

தலங்கள் வனங்களாற் சிறத்தலு முண்மையாலே தான் தலவிருக்ஷ மின்னதெனக் குறிக்கப்படுகின்றது என்க. நவ்வி—மான்.

விரும்புநல் வரங்க ளாங்கவர்க் களிப்ப மிகுந்தவத் தலத்துளும் விளங்கித், திருந்திய மனத்தி லார்வமீ தூர வடியர்சே வித்தின்பந் தெவிட்ட, விருங்கடற் புவன முதலிய பூத மெவற்றையு மழித்து நின் றெரியுட், புரிந்திடு நிருத்த னன்பினு னடிக்கும் புண்ணிய தலமள விலையால். 14

பெரிய கடல் சூழ்ந்த பூவுலக முதலிய எல்லா வுலகங்களையும் அழியும்படி பெரு நெருப்பூட்டி, அந் நெருப்பின் கண்ணே நின்று, திருக்கூத்தாடிய இறைவன், அடியவர்களுக்கு அவர் விரும்புகின்ற நல்லவரங்களை யீதலால் சிறந்த தலங்களாக விளங்கு மத்தலங்களுள்ளேயும், உயர்ந்தனவாக

விளக்கமுற்று, அடியவர்களெல்லாம் தங்கள் தூய்மையான மனங்களிலே அன்பு பெருகும்படி வழிபட்டு இன்பம் பெருகப் பெற்று மகிழும்படி திருவருளினாலே திருக்கூத்தியற்றப் பெறுகின்றத் தலங்கள் அளவிறந்தனவாக வுள்ளன.

நல்வரம்—துன்பங்களை யொழித்தற்குரிய வரங்கள்.

அலகிலப் பதிக்கு ளோங்கிய பதிகள் சிலவுள வவற்றை
யென் குரவன், மலவிரு ளிரிய வுரைத்தன னெனக்கு
மறைநெறி யொழுக்கமுந் தருமத், தலைமையும் பரமன்
றிருவடிக் கன்புந் தகுதியும் வழாதமர் தவத்தோய், நல
னுறு காத லன்பினு லுனக்கு நவையற மொழிகுவன்
வகையால். (15)

வேத நெறியினின்றும் தவருத ஒழுக்கமும், தருமத்திலே தலைசிறந்து நிற்றலும், சிவபெருமானுடைய திருவடிகளை வழிபடுதலில் பேரன்பும், சிவ தலவரலாற்றைக் கேட்டற்குரிய மற்றைய தகுதியுமாகிய இவற்றினின்றும் வழுவாமல் தங்குதற்குரிய புண்ணியவானே அளவில்லாதனவாக வுள்ள, இறைவன் திருக்கூத்துக் காட்சியளிக்கும் தலங்களுக்குள்ளேயும் சிறந்தனவாகச் சிலதலங்கள் இருக்கின்றன. அவற்றை எம் மாச்சாரியரான சீகண்ட உருத்திரர் ஆணவ மலமகன்றொழியும்படி அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருளினர். யானும் நின்பால் வைத்த நன்மை பொருந்திய மிகுந்த அன்பினாலே அவற்றை வகைபடச் சொல்லுவேன்.

ஒழுக்கம் என்பது தம்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய சிறப்பாகிய நல்வினைகளை யுணர்த்திற்று. தருமம் என்பது எல்லாருக்கும் பொதுவாகச் செய்யத்தக்க பொய்யுரையாமை முதலிய நல்வினைகளை யுணர்த்திற்று.

தகுதி—சிரத்தை முதலியனவுடைமையால் கேட்டற்குரிய நிலைமை. "காதல், நண்பு" என்பன ஒரு பொருட்

கிளவிகளாக நின்று மிகுந்த அன்பு எனப் பொருள்பட நின்றன; காதல் வேறு நண்பு வேறு என நின்ருலும் அன்பையு முணர்த்து மாதலால் என்க. இனி அன்பினுலே யேற்பட்ட நண்பினுலே என வுரைப்பினுமாகும்.

இப்பெருங் காதை நின்னிக ரடியார்க் கியம்பிட வேண்டு மைந் தெழுத்துந், தப்பற வுரைத்து நீறிடா தவர்க்குஞ் சங்கரற் கன்பிலா தவர்க்கு, முப்பரம் பொருட்கு முதல் வனை யிகழ்ந்து முகுந்தனே முதலிய தேவை, யொப்பி லாப் பரமென் றுரைக்குநீ சருக்கு முரைக்கின் மா பாதக முறுமால். (16)

இறைவன் திருக்கூத்தாடுந் தலவரலாருக உரைக்க இருக்கின்ற இந்தப் பெரிய வரலாருனது நின்னையொத்த அடியவர்களுக்குச் சொல்லத் தகுந்த தொன்ருகும். அப்படிச் சொல்லத்தக்க வரலாற்றைப் பஞ்சாக்கரத்தை வழுவாம லுச்சரித்துத் திரு நீறணியாதவர்களுக்கும், எல்லாச் சுகத்தையும் அன்பர்களுக்குச் செய்தருளுகின்ற சிவபெரு மானிடத்திலன்பு செலுத்தாதவர்களுக்கும், பிரமன், மால், உருத்திரன் ஆகிய மேலான மூன்று தேவர்கட்கும் முதல்வ ரான சிவபெருமானை இவன் பரம்பொருளல்லன் என்று இகழ்ந்துவிட்டுத் திருமால் முதலிய தேவர்களை நிகரற்ற பரம்பொருள் என்று சொல்லுகின்ற இழி சனங்களுக்கும் சொன்னல் மகா பாதகம் வந்தடையும்.

இந்திரன் முதலிய மற்றைய தேவர்களைக் காட்டிலும் பிரமன் முதலிய மூவரும் மேம்பட்டவராதலால் "முப்பரம் பொருட்கும் என்றனர்.

பாதகம்—பாபம்.

திருவெண்ணீ றணியா ருருத்திர வக்கந் தரித்திடார் சிவ மறை புகலா, ருருகியா தரவா லரன்றனை நினையா ரோதிய வாரணத் தொழுக்க, மருவிடா ருரிய தங்குலத்

தியற்கை வழுக்கினோ ரீங்கிவர் மனித, ருருவுள ரெனி னுஞ் சாதியிற் கலப்பா யுதித்தவர் நரகிலங் குதிப்பார்.
(17)

வெண்மையான திருநீற்றைப் பூசாதவர்களும், உருத்திராக்ஷத்தை அணியாக அணியாதவர்களும், மங்கலகரமான வேதங்களை விரும்பாதவர்களும், அன்பினுலே யுருக்கமுடன் சிவபெருமானைச் சிந்திக்காதவர்களும், உயர்ந்த பிராமணர் முதலிய மூவருணத்தாரு மோதுதற்குரிய நூலாகச் சொல்லப்படுகின்ற வேதங்கள் விதிக்கின்ற ஒழுக்க நெறியைப் பொருந்தாதவர்களும், தங்கள் வருணங்களுக்குரியதாகக் கருதப்படுகின்ற தன்மங்களினின்றும் நீங்கினவர்களும் (பிறகுலத்திற்குரிய தன்மங்களை மேற்கொண்டவர்களும்) ஆகிய இவர்கள் இங்கே மக்களுக்குரிய வடிவமுடையயவர்களாகக் காணப்பட்டாலும், பின்னர் மறுமையில் சங்கரசாதியிலே தோன்றி ஒரு தர்மத்திற்குமுரியவர்களல்லராகப் போதலால், பதிதர்களாகிப்பின் நரக லோகத்தில் தோன்றித் துன்புறுவார்கள்.

புகலுதல் — விரும்புதல். வேதமோதுதற்குரியவர், விரும்பியோதலும் ஓதற்குரியரல்லாதவர் வேதங்களை மெய்ந் நூலாக விரும்பி நிற்றலும் வேண்டுமென்பதாம்.

குலவொழுக்க மாகிய சிறப்பொழுக்கம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது; என்பதைக் குறிக்க, ஆரணத் தொழுக்க மருவிடார் என்றவர் மீண்டும், "*உரியதங் குலத் தியற்கை வழுவினோர்.*" என்று வலியுறுத்துவாராயினர், பொய்யாமை முதலிய பொதுவொழுக்கம் போதும்; சிறப்பான வொழுக்கம் வேண்டாம் என்பார் பலர் காணப்படுதலால் என்க.

ஓலமென் றுததி யாலம்வந் துடற்ற வும்பரு முனிவரும் வெருவி, ஞாலமுண் டவனே சரணென லொளித்து நவைசெயும் வேழமொன் ருதி, மூலமென் றழைக்கப் புறப்படுந் திகிரி முகுந்தனே பரமெனக் கால, காலனை

யிகழ்ந்தோ ருயர்குல மெனினு மிழிகுலத் தவரெனக் கரைவார். (18)

திருப்பாற் கடலிலே தோன்றி ஆலகால விடமெழுந்து துன்புறுத்தும்பொழுது, தேவர்களும் முனிவர்களும் அஞ்சி னவர்களாகி உலகத்தை விழுங்கினவனுகிய திருமாலே சரணுக இருத்தலே மறைத்துச் சிவனைக் குறித்து ஓலமிட்டு அவனையே பரம்பொருளாகக் கருதும்படிக் குற்ற முறுத்தி னுர்கள். அவர்கள் மறைத்ததைக் கஜேந்திரன் என்னும் யானையொன்று வெளிப்படுத்த வெளிப்பட்டு எழுந்தருளி வந்த சக்கராயுதத்தையுடைய திருமாலே பரம்பொருளா வார். சிவன்பரம் பொருளல்லன் என்று கால காலனுகிய சிவபெருமானை யிகழ்ந்தவர்கள், பிறப்பால் உயர்குலத்தின ராயினும்இழிந்த குலத்தவராகச் சான்ருேர்களாலே சொல் லப் படுவார்கள்.

ஓலமிடல்—அபயக் குரலிடல். நவை—குற்றம். நவை செய்யும் என்பது "போலியுணர்வோர் மகிழ்வெய்தும்" (மகாராஜாத் துறவு) என்பது போலத் தேவரையு முனிவ ரையும் போலியுணர்வினராகக் கருதலால் அவர் விலங்கா யினர். அதற்கேற்ப செய்யும் என்னுமுற்று வந்தது. பல்லோர் படர்க்கையில் வந்ததில்லை யென்க. "போலி யுணர்வினர் விலங்காதல்" விலங்கொடு மக்களனையர் (திருக்குறள்) என்பதனுல் அறிக. தொல்காப்பியரும் செய்யுமென்னு முற்றை "பலர்வரை கிளவி" என்றமை யால் அது பலர்பால் குறித்து வராதென்பது, தெளிவு. போலிவுணர்வினர், மக்களே யாயினும் விலங்கினத்துள் பலவின் பாலாகக் கருதப் படலால் செய்யு மென்னுமுற்று அவரைக் குறித்தலால் வழுவாகா தென்க. 'புறப்படும்' என்பதனுல் வெளிப்பட்டு எழுந்தருளி வரல் பெறப்பட்ட தென்க.

வேறுரை

என்று மொலியோடு கூடுதலாலே ஆர்கலி எனப்படு கின்ற திருப்பாற்கடலிலே தோன்றிய ஆலகால விஷ

மெழுந்து வந்து துன்புறுத்தலாலே தேவர்களும், முனிவர் களும் அஞ்சினர்வர்களாகி, யுலகத்தை யுண்டருளிய திரு மாலே பற்றுக்கோடாவார் என்று வரவும், அவர்கட்குத் தான் பரம்பொருளாக இருத்தலை வெளிப்படுத்தாமல் தன் னிற் கீழானச் சிவனைக்கொண்டு அவர்களைக் காப்பாற்றச் செய்து மறைத்துங்கூட இயல்பாகத் துன்பஞ்செய்யு மியல் புடைய ஒரு யானையானது 'ஆதிமூலமே' என்றழைக்க அப்பொழுது தன் பரத்துவம் வெளிப்படும்படி சக்கராயுதத் துடன் எழுந்தருளிவந்த அந்தத் திருமாலே பரம்பொரு ளாவான். அவன் ஏவல் வழி நிற்கும் சிவன் பரம்பொரு ளாகான் என்று காலகாலனாகிய சிவபெருமானை யிகழ்ந்து சொல்கின்றவர்கள், பிறப்பால் உயர்ந்த குலத்தினரானா லும் இழிந்த குலத்தினராகவே பெரியோர்களாற் கருதிக் கூறப்படுவார்கள்,

இப்பாட்டு "நலத்தின் கணாரின்மை" என்னுந் திருக் குறளை ஞாபிக்கின்றது. இவ்வுரைக்கு "ஓலமொன்றுததி" என்னும் பாடம் பொருந்தும். இவ்வாறே முன்பதிப்பி லுள்ளது.

திருத்திய நீறு முருத்திர வக்கத் தெரியலுந் தரித்
துமூ விலேவே, லொருத்தனை யிதயத் திருத்தியைந்
தெழுத்து மொருமையா லுணர்பவ ரவர்பாற், கருத்துற
வழுத்து மன்பினே ரிவரைக் கதமுடைச் செருக்கினாற்
கழறி, யுருத்தவர், பொருவி லுயர்குல மெனினு மிழிபிறப்
பினரென வுரைப்பார். (19)

தூய்மையாக வடிகட்டி நறுநாற்ற மூட்டிய வெள்ளிய திருநீற்றையும் உருத்திராக்ஷ மாலையையும் அணிந்து, மூன்று தலைகளையுடைய சூலாயுதத்தைத் திருக்கையிலே தாங்கிய ஒப்பற்ற பரம்பொருளாகிய சிவபெருமானை உள் ளத்தில் பதியும்படி செய்து ஏகாக்கிர சிந்தையுடன் பஞ்சா க்ஷரத்தைப் பொருளறிந்து ஜெபிக்கின்றவர்களும், அச் சிவனடியார்களிடத்தில் நெஞ்சாரும்படி துதிக்கும்படியான

அன்புடையவர்களுமாகிய அடியவர்களேயும் அடியார்க்கடிய வர்களாக வுள்ளவர்களேயும் கோபத்துடன் கூடிய செல்வச் செருக்கினுலே இடித்துரைத்து மனம் வருந்த வெகுண்ட வர்கள், ஒப்பற்ற உயர்ந்த சாதியினராஞலும் அவர்கள் இழிந்த சாதியினராகவே சொல்லப்படுவார்கள்.

வேறு

போத நீற்றினேப் புனேந்துள்ளோர் கண்டிகை பூண்டோ
ராதி யாயபஞ் சாக்கர மோதுவோ ரறிவான்
மாதொர் பாகனேப் போற்றினே ரிவர்க்கெலாம் வருண
பேத மில்லேயென் றுரைப்பர் நூன் முறைதெரி
பெரியோர். (20)

'நூல்களிலே சொல்லுகின்ற முறைகளே நன்ருக அறிந்த பெரியோர்கள் நிறையத் திருநீற்றை அலங்கார மாக அணிந்தவர்களும் உருத்திராக்க மாலேயை அணிந்த வர்களும், தலேமையான ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஜெபிப்போர் களும், நல்ல உணர்ச்சியுடன் உமையொரு பாகராகிய சிவபெருமானே வழிபடுவோர்களும் ஆகிய இவர்கள் எல் லோரும் எக்குலத்திலே பிறந்தவர்களாஞலும் ஒரு குலத் திலே பிறந்தவர்களாகவே அதாவது உயர்ந்த குலத்திலே பிறந்தவர்களாகவே வேற்றுமையில்லாமல் கருதப்படுவார் கள் என்று சொல்லுவார்கள்.

வேறு

அந்தண ரரசர்கள் வணிக ராயினும்
பிந்தின ராயினும் பிறையு லாமுடி
யெந்தைபஞ் சாக்கர மியம்பு வாரெனி
லிந்திரன் மாலய னவர்க்கி ணேயிலார். (21)

பிராமணர்களாக இருந்தாலும், அரசர்களாக இருந்தா லும், வைசியர்களாக இருந்தாலும் வேளாளர்களாக இருந்தாலும் சரி சந்திரன் விளங்கும்படியான சடாமுடியை

யுடைய எந் தந்தையாராகிய சிவபெருமானுக்குரிய பஞ்சாக்கரத்தை ஜெபிப்பார்களேயானுல் அவர்கள் இந்திரன் பிரம்மா விஷ்ணு இவர்களோடு ஒப்பாகாமல் அவர்களுக்கு உயர்ந்தவர்களாக ஆவார்கள்.

பிந்தினர்—வேளாளர். மூவரிற் பிற்பட்டவர். பஞ்சாக்ஷர ஜெபம் இந்திரன் முதலியோர்க்கு மெட்டாத இறைபத மடைவித்தலால் இவ்வாறு கூறுகின்றனர். 'பிந்தினர்' எனப் பொதுப்பட நிற்றலால் சைவநெறி நிற்கும் வேளாளரும் பிறரும் கொள்ளப்படுவர்.

எக்குலத் தாயினு மெந்தை நீற்றினே
டக்கமா லிகைபுனை யவர்க டோன்றிடி
லக்குல முயர்குல மக்கு லத்துளோர்
முக்கணு னருளினுன் முத்தி யெய்துவார். (22)

எந் தந்தையாராகிய சிவபெருமானுடைய திருநீற்றையும் உருத்திராக்க மாலையையும் அலங்காரமாக அணிகின்றவர்கள், எந்தக் குலத்திலே பிறந்தாலும் அந்தக் குலம் உயர்ந்த குலமாகும். அந்தக் குலத்திலே பிறந்தவர்கள் மூன்று திருவிழிகளையுடைய சிவபெருமானுடைய திருவருளினுலே வீடு பேற்றைப் பெறுவார்கள்.

மாலிகை—மாலை. மாலிகை என்பது இங்குச் சிறுமாலை யென்றபடிவராமல் மாலையென்னும் பொருளிலே வந்ததென்க.

ஆற்றருந் துயர்மிகுத் தாபத் தெய்தினு
நீற்றணி யமலனுக் கன்பு நீங்கினேர்
பாற்றரும் பெரும்பொரு ளணுவும் பற்றிடா
மாற்றருந் தீவினை பயக்கும் வாய்மையால். (23)

பொறுத்தற் கருமையான துன்பத்தை மிக வுண்டாக்கிக் கொண்டு ஆபத்து வந்து சேர்ந்த போதிலும், திரு

நீற்றை யணிந்து விளங்கும் மலரகிதனுகிய சிவபெருமானிடத்தில் வைத்த அன்பை விடலாகாது. அத்தகைய அன்பில்லாதவர்களுக்கு நற்பொருள்களை யுரைத்தல் கூடாது. ஒருவாறுரைத்தாலு மஃது அவர்கள்பால் நில்லாமற் போய்விடும். போதலோ டவர்களுக்குத் தீமையையு முண்மையாக வுண்டாக்கி விட்டுச் செல்லும்.

இது, 'கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே' (கம்பர்) என்பதை ஞாபிக்கின்றது. இங்குத் 'தரும்' என்பது உரைக்கும் என்னும் பொருளது ஆகும். வரும்பாவில் 'ஈந்து' என்பதும் 'உரைத்து' என்னும் பொருளுடையதே யாகும்.

இறை அன்பிலாதவர்களுக்கு, கண்ணப்ப ரிறைச்சியை யூட்டினர் தன் கண்ணைப் பறித்திறைவருக்கப்பினர் என்றுரைத்தால், தன் கண்ணைப் பறித்தப்பினர் என்பதை விடுத்து இறைச்சியை யூட்டினர் என்பதை மட்டும் தங்கயமைக்குணத்தால் உட்கொண்டு ஏன் நாமிறைச்சியை யூட்டினலென்ன அவரே தின்று ஊட்டினரென்றல் நாமும் ஏன் தின்னல்கூடாது, நிவேதித்தல்கூடாது தின்னலாம் ஊட்டலாம் எனக் கொண்டு நெஞ்சு போனவாறு தீய வழியிற் புகுந்து துன்புறுவார்களாதலால் அன்பிலாதவர்களுக்கு அதுபோன்ற நற்பொருள்களை யுரைத்த லாகாது என்பார். 'அன்பு நீங்கினேர் பாற்றரும்...பயக்கும்" என்றனர்.

"அன்பு இலார் பால்தரும் பெரும்பொருள்" எனப் பிரிக்க. ஈண்டுப் பெரும் பொருளென்றதும் பின்பாவில் 'வான்பொருள்' என்றதும் சிவகதையை யுணர்த்தினவாகும். உலகப்பொருள்கள் போலாது சிவ வரலாருகிய பொருள் மெய்ப்பொருளாகிய பயனை யீவதாதலால் அவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டது என்க. இது கல்வியை "நற்பொருள்" (சீவக சிந்தாமணி) 'அரும்பொருள்' (இலக்கணக் கொத்துரை) "கேடில்விழுச் செல்வம்" (திருக்குறள்) எனக்கூறல் போலக் கூறியதாகும் என்க.

இனிச் சிவகதை, பொருள் சேர்க்கதை யாதலால் அவ்வாறு கூறினர் எனலுமாகும். பொருள்—மெய்ம்மை.

பூந்தள வுறுமுகைப் பொம்மன் மென்முலை
யேந்திழை பாகனு மீசற் கன்பிலா
மாந்தர்கட் கணுவள வெனினும் வான்பொரு
ளீந்தவர் ரவுரவத் தெய்து வாரரோ. (24)

பொலிவு தங்கிய முல்லை யரும்புகளாலாகிய மாலையை யணிந்த பருத்த மெல்லிய தன பாரங்களை யுடையவரும், ஆபரணங்களை யணித்தவருமாகிய உமாதேவியாரை ஒரு பாதித் திருமேனியிலே கொண்டு விளங்கும் சிவபெருமானிடத்து அன்பிலாத மனிதர்களுக்குத் தக்க சிவவரலாற்றுப் பொருள்களை அணு அளவுரைத்தாலும் உரைத்தவர்கள் ரௌரவம் என்னும் நரகத்தை யடைவார்கள்.

அதிகாரிகளல்லாதவர்களுக்குரைத்தால் உரைக்கப் பட்டவர்களுக்குத் தீமையைப் பயத்தலேயன்றி உரைத்தவர் கட்கு மது தீமையைப் பயக்கு மென்பதாம்.

இறைவன் ஒருவனிருக்கிருன் அவன் தண்டிப்பான் என்று நம்பி அன்பு செய்பவர்தாம் தீயவழியில் போக மாட்டார்கள். அன்பில்லாதவர்கள் தீயவழியிற் போவார் கள் என்பது பொருள்.

பெறலரு மானிடப் பிறவி யேய்ந்தவர்க்
குறுதியா மூதிய முலகில் யாதெனி
லிறுதியி லியாவையு மிறுக்கு மெல்லையி
லறிவனுக் கொருமையா லன்பு பூண்பதே. (25)

(ஆதலால்) பெறுதற்கருமையான மானிடப்பிறவியைப் பெற்றவர்களுக்கு உலகத்தி லடையத்தக்க ஊதியப் பொருள் (பயன்) எது என்ருல் யுகாந்த காலத்தில் எல்லாப்

பொருள்களையும் அழிக்கும்படியான அளவற்ற அறிவு வடிவினனாகிய சிவபெருமானிடத்தில் ஒரே படியான அன்பை மேற்கொள்ளுதலே யாகும்.

உறுதி—அடையத்தக்கது. ஊதியம்—பயன். இறுத்தல்—அழித்தல்.

மன்னிய வானவர் மற்று ளோர்க்கெலா
முன்னவன் றனக்குறும் பத்தி யான்முயன்
றுன்னரும் பூசையா லன்றி யோய்விலாச்
சென்மமு மரணமுந் தீர்க்க லாகுமோ. (26)

நிலைபெற்ற பிரமன் முதலிய தேவர்களுக்கும், மற்றையவர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானை யடைதற்குத் தகுந்த அன்பினாலே முயற்சித்துச் செய்கின்ற கருதுதற்கரிய சிவ பூசையினாலே யல்லாமல் மற்றைய செயல்களாலே முடிவு இல்லாமல் வருகின்ற பிறப் பிறப்புக்களை நீக்க முடியுமோ (முடியாது.)

வேறு

இன்னண மியமபியகு ணஞ்சரிதை யெல்லா
நின்னரு கிருப்பது நினைந்துமொழி கின்றே
னன்னர்மறை நூன்முறை நவின்றுயர் தவத்தோய்
முன்னுரை யியற்கையொழி வோர்க்குமொழி
யேனல். (27)

மிகவும், வேதங்களும், வேத வழிவந்த நூல்களும் சொல்லுகின்ற முறை தவருமல் விடாது நடந்துயர்ந்த தவசியே! இவ்வாறு யான் சொல்லிய குணங்களும், செயல்களும் நின்னிடத்திலே இருத்தலால் அப்படி இருத்தலை எண்ணிப் பேசுகிறேன். முன்னே சொல்லிய இயல்புகள் இல்லாதவர்கட்கு ஒன்றும் சொல்ல மாட்டேன்.

சரிதை—செயல். நின்னருகு—நின்னிடம்; நன்னர்—மிக. நவின்று—பழகி. இயற்கை—இயல்பு.

என்றுபுக லித்திற மியம்பமுனி கேளா
வொன்றிய மனத்துவகை யுற்றெதிர் வணங்கி
மின்றிகழ் சடைக்கடவுண் மேயதல மெல்லா
மின்றினி துரைத்தியென நந்தியு மிசைப்பான் (28)

இவ்வாறு விரும்பத்தக்க இத்தன்மைகளை எடுத்துச் சொல்லவும் சனற்குமார முனிவர் கேட்டு ஒருமைப்பாடுடைய மனத்திலே மகிழ்ச்சியை யடைந்து நந்தியம் பெருமான் முன்பாக வணங்கி மின்னலைப் போல விளங்குகின்ற சடையையுடைய சிவபெருமான் விரும்பித் தங்குகின்ற தலங்களெல்லாவற்றையும் இப்பொழுது நன்றாக சொல்லியருள்வீராக என்று கேட்டுக் கொள்ளவும் நந்தியம் பெருமானும் இனிமையாகச் சொல்லத் தொடங்கினர்.

மேய — விரும்பித்தங்கிய. மேவுதல் — விரும்புதல். மனங்குளிர மொழிதலால் 'இசைப்ப' என்றனர்.

வேறு

திரமுறு கனக மேருமால் வரைக்குத் தென்றிசை
நாவலந் தீவிற், பரவருந் தரும மனைத்தையும் பயக்கும்
பாரத கண்டத்திற் றிரைபாய், சுரநதி முதலா வருநதி
மருங்கிற் றுறுவனந் துன்றிய மலையி, லரனினி துறையுந்
தலங்கணூற் றெட்டா மவனியிற் கதியரு டலங்கள். (29)

நிலையானதும் பொன்வடிவமானதும் பெரியதுமாகிய மேருமலைக்குத் தென்திசையிலேயுள்ள நாவலந் தீவின் கண்ணே புகழத் தக்கவையும், செய்தற் கருமையானவையுமாகிய தர்மங்களெல்லா வற்றையும் உண்டாக்கும்படியான பரத கண்டத்தில் தேவ நதியாகிய கங்காநதி முதலியனவாகச் செல்லுகின்ற நதிகளின் ஓரங்களிலும், அடர்ந்த வனங்கள் பொருந்திய மலைகளிலும் சிவபெருமான் மகிழ்வோடு எழுந்தருளியிருக்கப் பெற்றவையும், பூமியிலே அன்பர்களுக்கு வீடு பேற்றை யளிக்க வல்லவையுமாக விளங்குகின்ற தலங்கள் நூற்றெட்டாகும்.

"துறுவனம்" என்பதற்கு அடர்ந்த வனங்களிலும் எனவும் பொருள் கொள்ளலாம்.

"ஸ்த்ரம்" என்பது **'திரம்'** என ஆகியது. மால்—பெருமை. வரை—மலை. 'பரவு அரும்' எனப் பிரிக்க. புகழ்தற்கரிய எனப் பொருள் கூறலுமாகும். கதி—வீடு.

இனையநற் றலத்து ளரன்றனக்குரிய வியற்கையா
யெவர்க்கும் வல்வினையை, நினையுமுன் பகற்றுஞ் சிவ
தல மறுமத் தெட்டுள விவையெலா நின்பாற், றனிவிதந்
தோதிப் பின்னர்நீ கேட்ட சங்கையுத் தரமெலாம் பகர்
வேன், முனிவகே ளென்னுச் சிலாதன்மெய்ப் புதல்வ
னவையெலா முறைமுறை மொழிவான். (30

முனிவனே இன்னுங் கேட்பாயாக மேற்கூறப்பட்ட நூற்றெட்டும் அவை போன்றவையுமாகிய தலங்களுக்குள்ளேயும் சிவபெருமானுக்குரியனவாகச் சிறந்த இயல்புடையனவாகி, வந் தணுகின யாவருக்குங் கொடிய வினைகளை நீக்க வேண்டுமென நினைப்பதற்கு முன்னதாகவே நீக்கி விடும்படியான சிவதலங்கள் அறுபத் தெட்டிருக்கின்றன அவை எல்லாவற்றையும் தனித்தனியாக நினக்கு எடுத்துச் சொல்லிப் பின்னர்க் கேட்ட வினவிற்கேற்ற விடைகளெல்லா வற்றையும் விளக்கமாகச் சொல்லுவேனென்று சிலாதல முனிவருக்கு உண்மைப் புதல்வரான நந்தியம் பெருமான், அத்தலங்க ளெல்லாவற்றையும் முறையாகச் சொல்லத் தொடங்கினர்.

விதத்தல்—தனியாக எடுத்துக் கூறல். **'நினையுமுன்'** என்பது **"வருமுன்னர்க்காவாதான்"** (திருக்குறள்) என்பது போல நின்றது. பகர்தல்—பிரித்து விளக்கிக் கூறல். இனைய—இவைபோன்ற. நூற்றெட்டுத் தலங்களைப் பின்னரெடுத்துக் கூறுகின்றாரே யொழிய அறுபத்தெட்டு இவையெனக் குறிக்கும் பாக்களைப் பாடவில்லை. அவை இவராற் பாடப்பட்டுப் பின்னர் விடப்பட்டன என்பதற்கு மிடமில்லை; **"இவற்றின் மிக்கா மேன்மை, யோங்கிவரு**

காவிரிமா நதியின் றீர்த்தத் துயர்தலமோ ரறுபத்தெட் டுளவாமந்தப், பாங்குறுதல மவற்றில்'' எனத் தொகுத்தே கூறியனமதலா லென்க.

கண்ணுதலோன் கயிலையெனச் சிறந்துறையுங் காசி
கருதுபிர யாகைபிதிர் கட்குமுத்தி யளிக்கும்
விண்ணவர்க டொழுங்கயைகே தாரம்புட் கரஞ்சீர்
மிகுநந்தி வர்த்தனம்வர்த் தனமுனிவர் விரும்பு
மெண்ணரிய காளகூ டாதனநான் மறையு
மேத்துகபி லாச்சிரம மிடரொழிக்க வெவரு
நண்ணியநன் மயூரவா கனத்தான மளகை
நங்கோம தீச்சுரமா நலம்பெருகு நகரம். (31)

நெற்றி விழியை யுடைய சிவபெருமான், கைலைமலையி லெழுந்தருளி யிருத்தல் போலச் சிறப்பாக எழுந்தருளி யிருக்கின்ற காசி, உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற பிரயாகை பிதிரர்களுக்கு முத்தியைக் கொடுக்கும்படியான தும் தேவர்கள் வந்து தொழும்படியானது மாகிய கயை திருக்கேதாரம், புஷ்கரம், சிறப்பம் மிகுந்த நந்திவர்த் தனம், முனிவர்கள் விரும்பி வழிபடுகின்ற முனிவர்த்தனம், அளவிடற்கரிய பெருமை வாய்ந்த காளகூடம், என்னுந் தலம், நான்கு வேதங்களும் புகழும்படியான கபிலாச் சிரமம், துன்பங்களைப் போக்குவதற்காக எல்லாரும் வந்து சேருகின்ற நல்ல மயூர வாகனத்தானம், அளகை நன்மை பெருகும்படியான நகரமாகிய நமது கோமதீச்சுரம்,

அக்கினிசை லேச்சுரம்வா னவர்க்குவரம் பயக்கு
மானசம தக்கினீச் சுரமலக்கண் டவிர்க்கு
மிக்குளகோ கன்னமொடு பிருகுகச்ச மழியா
வீடளிக்கும் பரமசிவன் விண்டுவுடன் கூடி
யொக்கவுறை யரிகரேச் சுரமெனுமித் தலங்க
ளுலகெலா மியற்றியளித் தூழியினிற் றுடைப்போன்

செக்கரிளம் பிறைச்சடையிற் றிளைத்தெரியுந் தரங்கத்
தீம்புனன்மா நதிக்கரையிற் சிறந்ததிருத்
தலமே. (32)

அக்கினி சைலேச்சுரம், தேவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற வரங்களைக் கொடுத்தருளுகின்ற பெருமை வாய்ந்த **சமதக்கினீச்சுரம்,** வருவார் துன்பங்களைப் போக்குந் தன்மை மிகுந்துள்ள **கோகன்னம், பிருகுகச்சம்** அழியாத முத்தியைக் கொடுக்கும் படியானதும் சிவபெருமான் திருமாலோடு சேர்ந்து தங்கியின்புறும் படியானதுமாகிய **அரிகரேச்சுரம்** என்று சொல்லும்படியான இத் தலங்கள் உலகமெல்லா வற்றையும் படைத்து நிலைபெறச் செய்து யுகாந்த காலத்தில் அழிக்கு மியல்பு வாய்ந்த சிவ பெருமானுடைய செவ்வானம் போன்றதும் இளஞ் சந்திரனைத் தாங்கியது மாகிய சடையிலே தங்கிப் பெருகி அலைகளை வீசியோடி விளங்கும் படியான இனிய நீரையுடைய பெரிய கங்கா நதிக் கரையிலே சிறந்து விளங்குந் தலங்களாகும்.

செக்கர்—செவ்வானம். திளைத்தல்—இன்புறல்.

விப்பிரர்சூழ் பற்பரேச் சுரம்விமலேச் சுரம்வான்
வியக்கும்விசா லேச்சுரமா னந்தபத்தி ரமத்த
மொப்பிறுங்கேச் சுரம்வேத்தி ராரணியம் பாரி
லுயர்வீர பத்திரம்பிப் பிலவனம்வா னுவக்குஞ்
செப்பிடுமா காசநகர் புகழரம்பேச் சுரமேற்
றிகழிந்த்ரேச் சுரம்புட்ப வனமறைக டெரிக்கு
மிப்புவியின் மிகுபாதா ளேச்சுரமித் தலங்க
ளிலகியகோ தாவரியி னிருமருங்கிற் றலமே. (33)

வேத மோதுகின்ற வேதியர்கள் சூழ்ந்துறைகின்ற **பத்பரேச்சுரம். விமலேச்சுரம்,** தேவர்கள் வியந்து கொண்டாடும்படியான **விசாலேச்சுரம், ஆனந்தபத்திரமத்தம்** ஒப்பற்ற **துங்கேச்சுரம் வேத்திராரண்யம்** பூவுலகத்திலே உயர்ந்து விளங்கும்படியான **வீரபத்திரம், பிப்பிலவனம்**

தேவர்கள் விரும்பி வழிபடுகின்றதும் உயர்வுடையதாகச் சொல்லப் பெறுவது மாகிய **ஆகாசநகரம்**, யாவரும் புகழும்படியான அரம்பேச்சுரம், மேன்மையுடையதாக விளங்கும்படியான இந்திரேச்சுரம், புஷ்பவனம், வேதங்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லும்படியானதும் இந்தப் பூவுலகத்திலே மேலானது மாகிய பாதாளேச்சுரம், என்ற இத்தலங்கள் விளக்கமான கோதாவரி நதியின் இருபக்கத்திலும் விளங்குகின்ற தலங்களாகும்.

வேத்திரம்—பிரம்பு. விப்பிரர்—வேதியர், பிப்பிலவனம்—அரசமரவனம். அரம்பேச்சுரம்—வாழைவனச் சிவதலம்.

வாய்த்தகா ளாஞ்சரங்கா ளாமுகேச்சு ரஞ்சீர்
மகிபத்தி ரேச்சுரம்வாய் வீச்சுரங்கர் வேச
மாய்த்தமலந் தணிக்கடியு மறையிருத்தேச் சுரமேல்
வரமளிக்குந் தும்புரீச் சுரமமல மான
வேய்த்தரள நிரையிலகுந் திருச்சயிலம் விளங்கும்
வியன்றிருக்கண் டேச்சுரம்வா மனன்மேவாச் சிரமந்
தூயத்தவர்சே ரக்கினிசா லேச்சுரம்வ ராகேச்
சுரமிவைகள் கண்ணனதி சூழ்கரைமேற் றலமே. (34)

எல்லா வளங்களும் (இயல்பாக) அமைந்த **காளாஞ்சரம்** காளாமுகேச்சுரம், விருப்பம் பொருந்திய **மகிபத்திரேச்சுரம்**, வாய்வீச்சுரம் கர்வேசம், துன்பத்திலழுத்துகின்ற மலத்தைப் போக்கும்படியான வேதங்களிற் கூறப்படுகின்ற **இருத்தேச்சுரம்**, மேலான வரத்தைக் கொடுக்குந் தன்மையுடைய **தும்புரீச்சுரம்**, குற்ற மற்ற மூங்கில முத்துக்கள் வரிசையாகக் கிடந்து விளங்கும்படியான **ஸ்ரீசயிலம்** மேன்மை விளங்கும்படியான **ஸ்ரீ கண்டேச்சுரம் வாமனுச்சிரமம்**, தூய்மையான தவசிகளுறைகின்ற **அக்கினிசாலேசுரம் வராகேச்சுரம்** என்னுமித்தலங்கள் கிருஷ்ணநதியினிரு மருங்கும் பொருந்திய கரைகளில் விளங்கும் தலங்களாகும்.

'மறையிருத்தேச்சுரம்' என்பதை இருந்தபடியே மூல பதிப்பிலொருவர் எழுதியுள்ளார். **'மாய்த்தமலம்'** என்பதற்கு இன்புருவாகிய இறைவனை யடைய விடாது கெடுத்த மலம் எனவும் பிரத்யக பின்ன பிரம மாகிய தன்னை யறிய விடாது கெடுத்த மலம் எனவும் பொருள் கூறலாம். மறையிருத்தேச் சுரம் என்பதை மறை இருத்தேச் சுரம் எனப் பிரித்தேன். அதுபற்றி நன்ருய்ந்து தெரிதல் வேண்டும். இருது என்பது இருதுக்களின்தேவைகள் எனப்பொருள் படும் என்பது என்றுணிவு.

உயர்ந்திசைக்கு மாகாளேச் சுரங்கலிங்கேச் சுரம்வா
னுவந்தேத்தும் பதரிவன முரகர்முனி வர்களு
நயந்துரையு மவிமுத்தேச் சுரம்புவன முழுது
நவின்றிறைஞ்சு சுக்கிரிவேச் சுரமிவைக ளுளுந்
தயங்குபுனற் றுங்கபத்திரித் தடங்கரைமேற் சிறப்பாந்
தலமாகும் விருபாக்கந் தனையெயொப் பில்லா
வயங்குமணி நித்தவிலக் குமீச்சுரமா தவத்தோர்
வைகுமதங் கேச்சுரமா லேச்சுரத்தோ டின்னும். (35)

எல்லாத் தலங்களுக்குள்ளேயும் உயர்ந்து விளங்குதலாலே புகழ்ந்துரைக்கப் பெறுகின்ற **மாகாளேச்சுரம், கலிங்கேச்சுரம்,** தேவர்கள் விரும்பித் துதிக்கப் பெறுகின்ற **பதரிவனம்,** நாகலோக வாசிகளும் முனிவர்களும் விரும்பித் தங்கும்படியான **அவிமுத்தேச்சுரம்,** உலகம் யாவையும் புகழ்ந்து வணங்கப் பெறுகின்ற **சுக்கிரீவேச்சுரம்,** என்னுமித்தலங்கள் எப்பொழுதும் துங்கப் பத்திரா நதியின் விசாலமான கரைமேலே சிறப்போடு விளங்கும் தலங்களாகும். **விருபாக்ஷம்,** தனக்கு ஒப்பில்லாததும் விளங்குகின்ற மணிகளிழைக்கப் பெற்ற திருக்கோயிலையுடையதும் என்று முள்ளதும் ஆகிய **இலக்குமீச்சுரம்** பெருந்தவமுடையவர்கள் தங்கப்போகின்ற **மதங்கேச்சுரம்** **மாலேச்சுரம்,** இவற்றின் மேலும்,

மாலேச்சுரம் என்பது விஷ்ணுவீச்சுரம் எனப்படும் போலும்,

திருக்கோடி சங்கரமா ரண்ணியகா னனமுஞ்
சிறந்தமா தவிவனமுந் திகழனங்கேச் சுரமும்
விருப்பான வசிட்டாச்சி ரமஞ்சிருங்கேச் சுரமும்
விமலனுறை சம்பாதிக் காமுமுயர் வீசும்பிற்
றருக்கொடுசெல் சடாயுத்தா னப்பரியஞ் சாலந்
தரநகரு மெறிதிரைக டமனியமுங் கரியின்
மருப்பிலகு நித்திலமும் வரன்றியரு கெறியா
வருபம்பை நதிமருங்கின் மருவுசில தலமே. (36)

ஸ்ரீ கோடிசங்கரம், ஆரண்ணியகான்னம், சிறப்பான மாதவிவனம, விளங்கும் அனங்கேச்சுரம், விரும்பிய வற்றைத் தருகின்ற வசிட்டாச்சிரமம். சிருங்கேச்சுரம், மல முத்தரான சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற சம்பாதீச்சுரம், உயர்ந்த ஆகாயததில் செருக்கோடு சென்ற சடாயுத்தானப்பரியம், சாலந்தரநகரம் என்ற இத்தலங்கள் மலைகளில் உள்ள பொன்களையும், யானைக் கொம்புகளிலிருந்து உதிர்ந்த ஒளிவிடுகின்ற முத்துக்களையும் அரித்து எடுத்து எறியுமியல்புடையனவாக வருகின்ற பம்பா நதிக் கரையில் பொருந்திய சிவதலங்களாகும்.

ஆரண்ணிய கானனம்? ஆரண்ணிய என்பதை ஆர் அண்ணிய எனப் பிரித்து ஆத்தி, மரங்கள் பொருந்திய எனப் பொருளுரைத்து ஆத்தி மரவனம் எனக் கொள்ளலாமோ, என ஐய மேற்படுகிறது.

ஆர்=ஆத்தி, திருக்கோடிசங்கராரண்ணியகானனம் என்பதை திருக்கோடி சங்கராரணியம் கானனம் எனப் பிரித்து எழுதியுள்ளார் மூலப்பதிப்பில் ஒருவர்.

பரையுவக்கும் பார்ப்பதீச் சுரமும்மேலான
பாராவ தேச்சுரமும் வாரிபத்ரேச் சுரமும்
புரையறுகா ளேச்சுரமுந் திருக்கமலேச் சுரமும்
புகலரிய வக்கினிகெர்ப் பேச்சுரமும் புலவ

ருரைசெய்சமீ வனஞ்சரா சனஞ்சரணீச் சுரம்பா
ருயர்ந்தயாக் கியவற்கேச் சுரம்யோகேச் சுர மு
மரனுறையு முமைகருப்பேச் சுரமுமுனி வரருக்
கருள்பனசேச் சுரம்வடவா ரணியமொடு
பின்னும். (37)

உமாதேவியார் விரும்பி வழிபட்ட பார்வதீச்சுரம், மேன்மை பொருந்திய பாராவதேச்சுரம், வாரிபத்ரேச்சுரம், குற்ற மற்ற காளேச்சுரம், திருக்கமலேச்சுரம், சொல்லுதற்கரிய (பெருமை வாய்ந்த) அக்கினி கொப்பேசுரம், தேவர்கள் வந்து தங்குகின்ற சமீவனம், சராசனம், சரணிச்சுரம், பூவுலகில் மேலான யாக்கியவல்கேச்சுரம், யோகேச்சுரம், சிவபெருமானுறைகின்ற உமாகர்ப்பேச்சுரம், முனிசிரேட்டர்களுக் கருள்பாலிக்கின்ற பனயேச்சுரம், வடவாரணியம், என்னுமிவைகளோடு மேலும்,

பாராவதம்=புரு—பனசம்=பசனே

காரளிக ளிசைபயிலு மசுமந்த கவனங்
கருதுமே காந்தநக ரங்கரபேச் சுரமும்
பாருயரத் தீச்சுரமும் பலசவனப் பதியும்
பைங்கதலி வனமுநறைப் பன்மலர்த்தா திலகு
மேரியன்மா தளேவனங்கர்ச் சூரகா னனமு
மிருங்கதலி வனங்காமேச் சுரமுமிட ரரிக்குஞ்
சீரிலகுங் களங்கரகி தேச்சுரமும் பரவுந்
திருப்பசுப தீச்சுரமுந் திருக்கறுக்குந் தலமாம். (38)

கரிய வண்டுகள் அடிக்கடி இசை செய்கின்ற அசுமந்த கவனம், (உயர்வாக கருதப்படுகின்ற ஏகாந்தநகரம், கரபேச்சுரம், பூமியிலுயர்ந்த அத்தீச்சுரம், பலசவனம் என்னுந்தலம், பசுமையான கதலிவனம், தேனொழுகுகின்ற பல மலர்களின் மகரந்தப் பொடிகள் சிதறி விளங்குகின்ற

அழகு பொருந்திய **மாதளைவனம்**, **கர்ச்சூரவனம்**, **பெருங்கதலிவனம்**, **காமேச்சுரம்**, துன்பங்களைப் போக்கும் படியான விழுப்பம் விளங்கும் **களங்கரகிதேச்சுரம்**, எல்லாருந் துதிக்கின்ற **திருப்பசுபதீச்சுரம**, என்னு மிவைகள் தரிசிப்பாருடைய குற்றங்களை யெல்லாம் போக்கும்படியான தலங்கலாகும். (இவைகளோடு)

அசுமந்தகம்=சோதிமரம், பலாசம்=புரசு, கர்ச்சூரம்=ஈஞ்சி, பலாசம் பலசம் எனக் குறுகிற்று.

இட்டுறுமுன் றுயரகற்றுங் கேடில்பய னளிக்குங்
　　கிரகணியேச் சுரத்தொடுமேற் கிளந்தபல கருமம்
பெட்புறுதன் புனற்பரிகா நதிக்கரையிற் றலமாம்
　　பேசுமடி யவர்தமக்குப் பெரும்பதவி யளிக்கு
மட்டிலகுந் திருக்காளத் தீச்சுரமு மரனூர்
　　மருவுதிரு வேங்கடமும் வாய்ந்தகுக வனமு
மிட்டமுறுங் காகோல நகருமிமை யவர்க
　　ளேத்தேக பருப்பதமு மெழிற்றாரேச் சுரமும். (39)

வந்து அடைதற்கு முன்னரே வருபவர்களின் துன்பங்களைப் போக்கத் தக்கதும் அழிவில்லாத பயனைத் தரத் தக்கதும் (நிரதிசய நித்தியானந்தத்தைத் தரத்தக்கதும்) ஆகிய **கிரகணியேச்சுரம்**, என்னுந்தலமும், முன் சொல்லிய துன்ப மகற்றல் இன்பந்தர லாகிய பல செயல்களை (முழுகுவார்களுக்கு) விரும்பி அளிக்கக்கூடிய குளிர்ந்த நீரையுடைய பரிகாநதிக் கரையிலே யுள்ள தலங்களாகும். புகழ்ந் துரைக்கின்ற அடியவர்களுக்கு (இம்மையிலும், மறுமையிலும்) பெரும் பத்விகளைக் கொடுக்கத் தக்கதும், (சோலைகளில்) தேனொழுகி விளங்கப் பெறுவதுமாகிய **திருக் காளத்தி**, சிவபெருமான் தங்கிய **திருவேங்கடம்**, (திருப்பதி) (எலலா வளங்களும்) பொருந்திய **குகவனம்**, அடியார்களுக்கு இஷ்டமானவை எல்லாம் நிறைவேறும் படியான **காகோகநகர்**, தேவர்கள் ஏத்துகின்ற **ஏகபர்வதம்**, எழுச்சியையுடைய **தாரேச்சுரம்**,

ஆனவயி ராவதமுந் தீர்த்தகிரி நகரு
    மருட்பிரமேச் சுரமுமிறை யமர்ந்தபணிச் சுரமும்
வானவர்கள் பயிலப்ர வனமுமலர் வயல்சூழ்
    மாரக்கண்டேச் சுரமுமுகில் வளையுமுயர் காவிற்
றேனருந்திச் சிறகரளி செவ்வழிகள் பாடச்
    சிறந்தசங்க மேச்சுரமும் பரவுசெம்பொ னாரம்
பூநிறையுங் குழைகண்முகந் தெறிதருகல் லோலப்
    பொன்முகரிக் கரைமருங்கிற் பொருந்தியமா
                                        தலமே. (40)

நன்மை தருவதற்காக, அமைந்த அயிராவதம், தீர்த்தகிரிநகரம், அருள் செய்யவல்ல பிரமேச்சுரம், இறைவனாகிய சிவபெருமான் விரும்பித் தங்கிய பணிச்சுரம், தேவர்கள் என்றுந் தங்கும்படியான அப்பிரவனம், விரிந்த வயல்கள் சுற்றி விளங்குகின்ற மார்க்கண்டேச்சுரம், மேகங்கள் வந்து சூழுகின்ற உயர்ந்த சோலைகளிலே இறகுகளோடு கூடியவண்டுகள் தேனைப் பருகி செவ்வழிப் பண் முதலிய பண்களைப் பாடும்படி சிறந்து விளங்குகின்ற சங்கமேச்சுரம், என்னு மிவைகள் விரிந்துகிடக்கின்ற சொம்பொன்னையும், முத்துக்களையும், நிறைந்த பூக்களையுடைய தழைக்கொப்புகளையும் வாரி எறிகின்ற அலைகளையுடைய பொன்முகரிநதிக்கரையிடத்தில் பொருந்தி விளங்குகின்ற சிறந்த தலங்கலாகும்.

பணி = பாம்பு. அப்பிரம் = பொன். கல்லோலம் = பெரிய அலை. அயிராவதம் = அயிராவதேச்சுரம்.

(வேறு)

பதரிவனஞ் சுரகண்டேச் சுரமே லானோர்
    பகர்தன்மேச் சுரமுன்ன தாச லஞ்சீ
ருதவுகுக மலையுமதிர் திரைப்பா லாறு
    முயர்நதியின் கரைத்தலமா மும்பர் போற்றுஞ்

சிதைவறுமங் கலவமிசங் காம கூடந்
தீதறுகல் யாணபுர*நான்குந் தேரி
லதிகமெனுந் தலமுலகி னதிக்கு மேன்மை
யான பொன்னிக் கரைத்தலவா மறிவின்
மிக்கோய். (41)

பதரிவனம், சுரகண்டேச்சுரம், பெரியோர்கள் புகழ்கின்ற தர்மேச்சுரம், உன்னதாசலம், விழுப்பந்தருகின்ற குகாசலம், என்னும் இவைகள் பேரொலி செய்கின்ற அலைகளையுடைய பாலாறு என்னும் உயர்ந்த நதிக்கரையிலுள்ள தலங்களாகும். தேவர்கள் போற்றுகின்ற அழிவற்ற மங்கலவம்மிசம், காமகூடம், குற்றமில்லாத கல்யாண புரம், என்னுமிம் மூன்றும் உற்று நோக்கினுல் உலகத்தில் மிக மேலானவைகளாக விளங்கும் (இத்தகைய இவைகள்) புண்ணிய நதிகளுக்குள்ளே மேலானதாகத் (தென்றிசையில் ஓடுகின்ற) பொன்னி யென்கின்ற காவிரி நதிக்கரையில் உள்ள தலங்களாகும், அறிவின் மிகுந்த சனற் குமரனே!

ஈங்கணியம் பியவொருநூற் றெட்ட தாகு
மித்தலமன் றியுமிவற்றின் மிக்கா மேன்மை
யோங்கிவரு காவிரிமா நதியின் றீர்த்தத்
துயர்தலமோ ரறுபத்தெட் டுளவா மந்தப்
பாங்குறுநற் றலமவற்றிற் பரமா னந்தப்
பாண்டரங்க நாடகத்தின் பரிசு காட்டித்
தீங்குறுவல் வினையகற்றி யிறைவன் மேவுந்
திருப்பதியெட் டவற்றின்பேர் தெரியக் கேட்டி (42)

இங்குச் சொல்லிய தலங்கள் நூற்றெட்டுத் தலங்களாகும். இத்தலங்களை யல்லாமல் இவற்றினும் மேம்பட்டனவாக மேன்மைகள் வளரப் பெறுகின்ற காவிரி நதித் தீர்த்தஞ் செல்லுமிடத்தில் உயர்ந்து விளங்கும் தலங்கள் அறுபத் தெட்டிருக்கின்றன. அந்த நல்ல அறுபத்தெட்

* நான்கென்று பிரதிகளிற் காணப்படுகிறது — மூன்றென்றிருக்க வேண்டும்.

டுத் தலங்களுக்குள்ளேயும் பரமானந்தத்தைத் தருகின்ற **பாண்டரங்கக்கூத்தின்,** தன்மையைக் காட்டித் துன்பந் தருகின்ற கொடிய வினைகளைப் போக்கிக் கொண்டு சிவபெருமான் தங்குகின்ற திருத்தலங்கள் எட்டிருக்கின்றன அவைகளின் பெயர்களை விளங்கும்படி கேட்பாயாக.

பாண்டரங்கம், கொடுகொட்டி, காபால மென்று மூன்றுஞ் சிவபெருமானுடுங் கூத்தாதலால் கீழே கூறப்படும் கூத்து விகற்பங்களெல்லாம் பாண்டரங்க மென்பதிலடங்குமென்னுங் கருத்தால் *''பாண்டரங்க நாடகத்தின் பரிசு காட்டி''* என்றனர் போலும். அன்றிச் சிவபெருமான் தானுடுகின்ற ஆடலின் தன்மையைக்காட்டியெனப் பொதுவாக வந்ததெனினுமாகும்.

பரிசு = தன்மை. கேட்டி = கேட்பாய்

அல்லல்வினைப் பவமாற்றி யடியார்க் கெல்லா
மானந்தப் பெருவாழ்க்கை யளிக்குஞ் செம்பொற்
றில்லைவனம் வெண்காடு பாரி சாதந்
திருவளர்தென் கமலையொடு சீரார் கூட
லெல்லையின்மா மறைசொல்பாதா ளீச்சு ரத்தோ
டிடைமருதூர் குடந்தையிவை யிறைவ னுடுந்
தொல்லைநக ரெனவிளம்பிப் பரம னுடுந்
தொழிற்றிறமு மீதெனவே சொல்ல லுற்றான். (43)

முத்தாபங்களையும் தருகின்றவையும் வினைப்பயனுக வருகின்றவையுமாகிய பிறவிகளை யடியவர்களுக்கு வராமல் நீக்கிப் பேரானந்த வடிவாகிய மோட்ச வாழ்வைக் கொடுக்கின்ற செம்பொன்னம்பலத்தையுடைய *தில்லைவனம்* (சிதம்பரம்) *திருவெண்காடு* பாரிசாதவனம் (திருக் களர்) எல்லாச் செல்வமும் பொலிகின்ற *தென்கமலை* (திருவாரூர்) மேன்மை பொருந்திய *கூடல்* (மதுரை) அளவற்ற சிறந்த வேதங்கள் புகழும்படியான *பாதாளீச்சுரம்.* (அவிநாசி) **திருவிடைமருதூர்** குடந்தை (கும்பகோணம்) என்னு

மிவைகளாகும். இவைகள் சிவபெருமான் திருக்கூத்தாடுகின்ற பழமையான நகரங்களாகுமென்று சொல்லி அப்பெருமான் ஆடுகின்ற கூத்தின் வகைகளும் இவையாகுமென்று சொல்லத் தொடங்கினர்.

வேறு

தேசுறுந் தில்லைச் சித்திர கூடத் திறமையிற் புண்ணிய
யத் துருவா, மாசின்மந் தார வனமணிச் சபையில்
வான்புக ழிடைமருதூரிற், பேசுநற் றலமாங் கும்பகோ
ணத்திற் பெருவர மளிக்கும் வெண் காட்டி, லாசில்பல்
லுயிர்க்கு மிறைவனு மொருவ னனந்தத் தாண்டவம்
புரிந்தான்.

(44)

விளக்க மமைந்த தில்லைச் சித்திர கூடத்திலுள்ள மேன்மை பொருந்திய பொன்னம்பலத்திலும் புண்ணிய வடிவாகிய குற்றமற்ற மந்தாரவன மென்கிற **திருக்களரிலுள்ள** பேரம்பலத்திலும் சிறந்த புகழபடைத்த திருவிடை மருதூரிலும் உயர்வுடையதாகப் புகழப்பெறுகின்ற கும்பகோணத்திலும் பெரியவரங்களைக் கொடுக்கும்படியான திருவெண்காட்டிலும் பல சீவர்களுக்குந் தலைவராகிய குற்றஞ் சிறிதுமில்லாத ஒப்பற்ற சிவபெருமான் ஆனந்தத்தாண்டவம் என்னுந் திருக்கூத்தைச் செய்தார்.

சிதம்பரக் கோயிலுக்கு சித்திரகூடம் என்னும் பெயருண்மை "*தில்லைத் திருச்சித்திர கூடம் சென்று சேருமனே*" (திரு மங்கை யாழ்வார்) என்பதனுலும் பெறப்படும். ஆனந்தத் தாண்டவம் என்பது பஞ்ச கிருத்தியங்களையும் ஒரு சேரச் செய்தலைக் காட்டுந் தாண்டவமாகும்.

தென்றிருக் கமலைச் சித்ரபீ டத்திற் றியாகவி
னோதநம் பெருமா, ளென்றெடுத் துரைக்கும் பெயருடை
யீச னினிதினு சனநடம யர்ந்தான், சென்றுறுமால
வாயெனு மதுரைச் சிவதலத் தினிலருள் சிறப்பத்,

துன்றிநின் றயன்மால் பணிசெயப் பரமன் சுந்தரத்தாண்
டவம் புரிந்தான்.

(45)

தென்னாட்டிலுள்ள கமலையென்னும் பெயருடைய திருவாரூரில் உள்ள சித்திர பீடத்திலே "நம் தியாக விநோதப் பெருமான்" என்று நூல்களும் சான்றோர்களும் உயர்த்திப் புகழ்கின்ற திருப்பெயருடைய சிவபெருமான் எளிதாக இருந்தாடும் திருக்கூத்தை (ஆசன; அசபா நடனத்தை) செய்தருளினார். அடியவர்கள் தங்கள் துன்ப நீங்குவதற்காகச் சென்று தங்கி வழிபாடு செய்யும்படியான ஆலவாய் என்கின்ற மதுரையாகிய சிவராஜதானியிலே வெள்ளியம்பலத்திலே திருவருளானது சிறப்பாகத் தங்கட்கு வந்து சேரும் பொருட்டுப் பிரமனும் திருமாலும் வேண்டும் பணிகளைச் செய்து வழிபடச் சுந்தரத் தாண்டவம் என்னும் திருக்கூத்தைச் செய்தருளினார்.

தியாக விநோதர்=ஈதலையே பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடையவர்; தியாகராஜர். விநோதம்=பொழுது போக்கும் விளையாட்டு.

சிவபெருமான் சந்தியா தாண்டவமென்னும் இன்புறுத்திக் காத்தலைக் குறிக்குங்கூத்தை மதுரையிலாடினாரெனப் புராணங் கூறுகின்றது. அத்தாண்டவம் இன்புறுத்திக் காத்தலைக் குறிப்பதால் சுந்தரத்தாண்டவமெனவு வழங்கப்பெறும் போலும்.

சுந்தரப் பெயரா நதிக்கரை மருங்கிற் றுதியவி நாசியாந் தலத்திற், பந்தவல் வினைக டீர்த்தபா தாளீச் சரமுதற் றிருப்பதி யதனி, லிந்துவும் பணியு மிதழியு நதியு மிலகிய புரிசடை யிறையோன், றந்திர மென்னு மூர்த்ததாண் டவத்தைச் சதுமுகத் தோன்றொழ நடித்தான்.

(46)

சுந்தரயாறு (நல்லாறு) என்னும் நதிக்கரையின் பக்கத்தில் விளங்குகின்ற புகழமைந்த **அவிநாசி** யென்கின்ற தலத்தின்கண்ணே பந்தத்தைத் தரக்கூடிய கொடிய இருவினைகளையும் வழிபடுபவர்களுக்குப் போக்கியருளுகின்ற பாதாளீச்சுர மென்கின்ற மேன்மை பொருந்திய திருக்கோயிலில் சந்திரனும், பாம்புகளும், கொன்றை மலரும், கங்கா நதியும் விளங்குகின்ற முருக்குண்ட சடைமுடியையுடைய தலைவராகிய சிவபெருமான் தனக் கோரலங்காரத்தைத் தருவதாகக் கருதுகின்ற ஊர்த்துவ தாண்டவம் என்னும் திருக்கூத்தைப் பிரமன் தொழும்படி ஆடியருளினார்.

தந்திரம்=காளியை வெல்லும் உபாயம் எனலுமாம்.
முதல்தலம்=மேன்மைபெற்ற கோயிற்றலம்.

ஈண்டெடுத் துரைக்கு மெண்டல மவற்று ளியற்றருந் தவத்தினோ ரெவர்க்கும், வேண்டுறு மடியார் தமக்கு மெஞ் ஞான்றும் வேலைக டொறுமெழுந் தருளி: நீண்ட வார் சடையான் பலமறை வடிவாய் நிறையருட் சத்தியோ டினிதிற், காண்டகு நடனம் புரியுமித் தலங்கள் காசினி தனிற்சிறப் பாமல். (47)

இங்கே எடுத்துச் சொல்லிய எட்டுத் தலங்களிலும் செய்தற்கரிய தவங்களைச் செய்கின்ற நிட்காமத் தவசிகளுக்கும், போகங்களை விரும்பி வழிபடுகின்ற அடியவர்கட்கும் எந்த நாளிலும் காலை முதலியகாலந்தோறும் நீண்ட ஒழுங்கான சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளி நின்று பல வேதவடிவாகவுள்ள அருட்சத்தியோடு கூடி எளிதாகக் காணத்தக்க திருக் கூத்தைச் செய்தருளுகின்றார். ஆகையால் அத்தலங்கள் பூவுலகிலே சிறந்த தலங்களெனக் கருதப்படும்.

வார்—நேர்மை.

அருட்சத்தியோடு கூடாத சுத்தநிலையில் பஞ்சகிருத்தியமும் அவற்றின் சூசக நடனமுமின்மையால் "**சத்தியோடினிது காண்டகு நடனம் புரியும்**" என்றருளினர்.

இஃது "அவையே தானேயா யிருவினையிற்
போக்கு வரவுபுரிய ஆணையின்
நீக்கி மின்றிநிற்கு மன்னிறையே

(சிவஞானம் போதம்)

என்பது முதலியவற்றால் புலனாகும் : மாயோ பாதியோடு கூடிய காரணப் பிரமமே சகத்தின் படைப்பு முதலிய வற்றிற்குக் காரணமென்பர்; வேதாந்த சித்தாந்த மரபின ரும் என்க.

இத்தலங் களிலே காரண மனந்த மியம்பிடிற் பெருகுமிங் கிவற்றைக், கைத்தலத் திலகு நெல்லியங் கனிபோற் காட்டினேன் றிருகுத்துநன் கருத்தா, லுத்தம நீமுற் றவத்தினாற் கேட்கப் பெற்றனை யும்பர்கோ னெனினுஞ், சித்தியா ஞான சிவதல மேன்மை கேட்ப தற் கெய்துமோ தெரிக்கில் (48)

மேற்கூறிய தலங்களிலே இறைவன் சிறப்பாகத் திருக்கூத்தைச் செய்வதற்குரிய காரணங்கள் பலவுள்ளன. அவற்றை யெல்லாஞ் சொல்லத் தொடங்கினால் விரிந்து விடும். ஆதலால் அவற்றை யெல்லாந் தொகுத்து அங்கை யில் நெல்லிக் கனிபோல விளங்கக் காட்டினேன். உத்தம னாகிய நீயும், நல்ல கருத்தோடு முன்செய்த தவத்தின் மகிமையினாலே கேட்கப் பெற்றாய். விளக்கமாகச் சொல்லப் புகுந்தால் எளிதாகச் சித்திக்காத சிவஞானத்தைத் தருதற் குரிய சிவதலத்தின் மேன்மையைக் கேட்பதற்குத் தேவேந் திரனாலும் வாய்க்குமோ? (வாய்க்காது)

மடனறத் தெரிந்து முத்தழ லோம்பு மறையவர் சந்நிதா னமுங்கோட், படவர வறுகு நறைபிழி யிதழிப் பனிமலர் மிலைச்சிய பவளச், சடைமுடிப் பெருமான் றணிப்பெருங் கோயிற் றானமுஞ் சந்திமண் டபமு, மிடர் கெட முறையா லிக்கதை யினிதி னியம்பிடு மிடனெனத் தகுமால். (49)

அறியாமை நீங்கும்படி விளக்கமாகத் தெரிந்து ஆகவனீயம் தக்ஷிணாக்கினீயம் காருக பத்தியம் என்னுமூன்று வகையான அக்கினியை வளர்த்து வழிபடுகின்ற வேதியர்களுறைவிடத்தி லவர்கள் முன்பிலேயும், நஞ்சினால் பிறருயிரைக் கொள்ளும்படியான நச்சுப்பற்களோடு கூடிய படத்தையுடைய பாம்புகளும் அறுகம் புற்களும் தேனையொழுக்குகின்ற குளிர்ந்த கொன்றை மலரும் ஆகிய இவற்றை யணிந்திருக்கின்ற பவளம் போலச் செந்நிறமான சடாமுடியை யுடைய சிவபெருமானுடைய ஒப்பற்ற பெரிய கோயிலுள்ளேயும், சந்தியா வந்தனஞ் செய்கின்ற மண்டபங்களிலேயும் துயரம் நீங்கும் படியாக விதிப்படி இச்சிவ புராணக் கதை படிக்கத் தக்கது. ஆதலா லவ்விடங்களே இப் புராணம் படிக்கத் தக்க இடங்க ளென்றறிவாயாக.

ஆகவனீயம்—யாகத்தில் கிழக்கிலுள்ள அக்கினி.

தக்ஷிணாக்கினீயம்—யாகத்தில் தென்பக்கமுள்ள அக்கினி.

காருகபத்தியம்—இதுவும் யாகாக்கினியி லொரு வகையாகும்.

ஆதிநா யகனா மரன்றிருச் சரிதை யானவிக் காதை
யாம் புராணம், போதனான் மறைக்கு மேலதா மிந்தப்
புராணமுற் றோதினு மிதனிற், பாதியா யினுமோர்
பாடலா யினும்பத மெனினும், தீதற வுரைப்போர்
கேட்குநர் கயிலை சேர்ந்துவீ டடைகுவர் திண்ணம். (50)

எல்லா வுலகிற்கும் ஆதி தலைவனாக வுள்ள சிவபெருமானுடைய திருவரலாறாகிய இப்புராணமானது தாமரை மலரிலெழுந் தருளியிருக்கின்ற பிரம னோதுகின்ற நான்கு வேதங்களுக்கும் மேலானதாகும். குற்றமின்றி இந்தப் புராணமுழுவதையும் சொன்னாலும், இதிற்பாதியை சொன்னாலும், ஒரு சருக்கத்தைச் சொன்னாலும், ஒரு பாட்டைச் சொன்னாலும், ஒரு பதத்தைச்சொன்னாலும்

கேட்டாலும் தவருமல் கைலமலையைச்சேர்ந்து அழிவின்றிய இன்பவீட்டை யடைவார்கள்.

ஆனவிக் காதை கேட்கில்யா ரேனு மவரவர் விரும் பிய தடைவார், தீனராம் வறிஞர் கேட்கின்மற் றவர்க் குச் செல்வமுற் றிடுமகப் பெருத, பானலங் கருங்கட் கோதையர் கேட்கிற் பாலரை யினிதினிற் பயப்பார், வானுறு பூத மலகையிக் காதை கேட்குநர் பேர்சொல மறுகும். (51)

பெருமை யமைந்த இந்தச் சிவ புராணத்தை கேட் டால் யாராக இருந்தாலும் சரி, அவரவர் விரும்பியவற்றை யெல்லாம் அவரவர்களடைவார்கள். எளிமையான வறியவர் கள் கேட்டால் அவர்களுக்குச் செல்வம் வந்து சேரும். பிள்ளைப் பேறில்லாத நீலோற்பல மலரைப் போன்ற கருமையான கண்களையுடைய மாலை யணிந்த மகளிர்கள் கேட்பார்களேயானுல் குழந்தைகளை யெளிதாகப் பெறுவார் கள். இப் புராணத்தை அன்போடு கேட்பவர்கள் பேரைச் சொன்ன மட்டிலேயே ஆகாயத்தில் உலவுகின்ற பூதங் களும் பிசாசுகளும் மனம் கலங்கி யோடிவிடும்.

மறுகுதல்—சுழலுதல்.

எனவருள் சிறப்பச் சிலாதனற் புதல்வ னியம்பலு மன்பினு லிறைஞ்சி, மனநெகிழ்ந் துருகி மெய்ம்மயிர் பொடிப்ப வழுத்திநான் முகன்றரு மறையோ, னினையநற் றலத்திற் றருவனத் தியல்புஞ் சிற்சபை மேன்மையு மெனக்கு, நினைவுற வுரைத்தி யென்றலு மினைந்து நிமலனு நந்தியீ துரைப்பான். (52)

என்று அருள் சிறக்கும்படி சிலாதல முனிவர் புதல்வ ராகிய நந்தியம் பெருமான் இனிமையாகக்கூற நான்கு முகங்களுடைய பிரமனீன்ற புதல் வராகிய சனற்குமார முனிவர் வணங்கி மனங்கட்டு விட்டுருகப் பெற்று உடம்பில்

மயிர்க்கூச் செடுக்கப் புகழ்ந்து மேற்கூறிய தலங்களுக்குள்ளே பாரி ஜாதவன தலத்தின் தன்மையையும் அங்குள்ள சிற் சபையாகிய பேரம்பாலத்தின் மேன்மையையும் அடியேனுக்கு மனதிற் பதியும்படி திருவாய் மலர்ந்தருள்வீராக, என்று கேட்க சொல்வதற கொருப்பட்டு மலரகிதராகிய அந் நந்தியம் பெருமானும் பின் வருவதைச் சொல்லுவா ராயினர்.

கரணமோர் நான்கு மின்னுயிர்க் கியைந்த கருவியு மறிவினற் கயிலே, வரையில்வீற் றிருக்கு முக்கணெம் பெருமான் வயத்தவாக் கியமுது மறையோய், தருவனத் திலகுஞ் சிற்சபை மேன்மை சாற்றுவன் யானுனக் கதனை, யிருளறக் கேட்டி யதிற்றெரி சனமு மினியுனக் கெய்துமென் றுரைத்தான், (53)

இனிமையான ஆன்மாவிற்குரிய கருவிகளாக அமைந்த அந்தக் கரணமொரு நான்கையும் ஞானேந்திரியமாகிய புறக் காரணங்களையும் விவேகத்தினலே கயிலை மலையிலே இணையின்றி எழுந்தருளியிருக்கின்ற சோம சூரியாக்கினியென்னு மூன்று விழிகளையு முடைய எம் தலைவராகிய சிவ பெருமான் வயமாக நிலைக்கும்படி செய்த பழமையான வேதங்களை ஓதியுணர்ந்த அந்தணனே பாரிஜாதவனத்திலே விளங்குகின்ற சிற் சபையின் மேன்மையை யான் உனக்குச் சொல்லுவேன், அந்த மேனமையைக் கலக்கமின்றி விளக்கமாகக் கேட்பாயாக. கேட்பாயானல் பின்னர் அச் சபையில் உனக்கு நடனக் காச்சியும் கிடைக்கும் என்று சொல்லியருளினர்.

எல்லா வற்றையும் பார்க்கிலும் தானே தனக் கினியதாகை முடிதலால் "இன்னுயிர் என்றருளினர். வீற்றிருத்தல்—இணையின்றி யிருத்தல். இருள் அறல்—கலக்கம் நீங்கல். கலக்கம், சந்தேக விபரீதங்கள்.

ஈண்டியம் பியநற் காதையை முறையா விசைப்பவ ரிசைத்திடு மொழியைப், பூண்டவன் பதனற் கேட்பவ

ரெவரும் போகமும் போதமு மடைவார், காண்டகு கமலப் பொகுட்டில்வீற் றிருக்கும் பிரமனுங் கண்ணனு முதல்வ, னீண்டமா முடியு மடியுமே யறியார் நிமலன்றன் சரிதையார் தெரிப்பார். (54)

இங்கே சொல்லியருள்கின்ற புராணத்தை விதிப்படி உரைக்கத்தக்கவர்கள் உரைக்கின்ற மொழியை, சிறப்பாக அடைந்த அன்பினுலே விரும்பிக் கேட்பவர்கள் எல்லாரும் இம்மை மறுமைகளில் விரும்பிய போகங்களையும் மோட்சத்திற்குக் கருவியாகிய சிவஞானத்தையும் அடைவார்கள். காட்சிக் கினிய தாமரை மலரின் பொகுட்டில் எழுந்தருளி யிருக்கின்ற பிரம தேவனும் திருமாலும் அநாதி தலைவ ராகிய சிவ பெருமானுடைய நீண்ட பெரிய முடியையும் அடியையுமே அறியாதவர்களானுர்கள். அப்படியிருக்க, அப்பெரு மானுடைய வரலாறுகளை விளக்க மாகத் தெரிந்து சொல்லவல்லவர்களாக யாரிருக்கிருர்கள். (என்று சொல்லி)

நிமலன்—மலமற்றவன்

அனுகூலச் சருக்கம் முற்றிற்று.

சிவமயம்

திருக்களர்ப் புராண உரை.

இரண்டாவது பாரிசாதவனச் சருக்கம்

மங்கலஞ் சிறந்த பாரிசா தவன மான்மிய முரைப் பதற் கியைந்த, புங்கவன் கமலப் பூங்கழல் வணங்கிப் போதமே வியசனற் குமாரன், அங்கண்மா ஞாலம் புகழ் தரு வனத்தின் அமைதியா வையுமியம் பெனலும், திங் கண் வாண் முகமும் இதயமு மலர நந்திவா னவனிவை செப்பும். (1)

நன்மைகள் எல்லாம் சிறப்பாக அமைந்த பாரிசாத வனமாகிய திருக்களரின் மேன்மையைச் சொல்லதற்கு, ஒப்பியருளியவரான தூய திருவுள்ளமுடைய நந்தியம் பெருமானுடைய, தாமரை மலரை யொத்த வீரகண்டாமணி பூட்டிய திருவடியை வணக்கஞ் செய்து, தெளிந்த அறிவு டையவ ரான சனற் குமார முனிவர், நல்ல இட மகன்ற பெரிய பூவுலகத்திலே உள்ளவர்கள் புகழ்கின்ற பாரிசாத வனமாகிய திருக்களரின் இயல்புகள் எல்லாவற்றையும திருவாய் மலர்ந்தருள் வீராக என்று கேட்டுக் கொள்ளவும் அந்நந்தியம் பெருமான் தம்முடைய சந்திரனை யொத்த ஒளிபடைத்த முகமும் மனமும் மகிழ்ச்சியினாலே மலர்ந்து விளங்கும்படி இருந்து கீழ்வருவனவற்றைச் சொல்லியருளு கின்றார்.

தருவனம், பாரிசாதவனம், மந்தாரவனம் என்பன வாக வருவனவெல்லாம் திருக்களரையே குறிப்பனவாகும். "**மந்தாரம்;**' என்பது வேறாக இருந்தாலும், '**தரு**' என்பது பொதுவாக இருந்தாலும் '**தெய்வதரு**' என்ற ஒப்புமையால் பாரிசாத தருவை யுணர்த்து மென்க. '**தரு**' என்பது காரண இடுகுறியாக தேவ தருவை யுணர்த்து மென்க.

புகழ் தருவனத்தின் எனப்பிரிக்க,

தென்பழ னுகுத்த தேறலுந் தருவின் செழுமலர்க் குழைகளுந் தெய்வ, நன்மணித் திரளுந் தரளமு அகிலும் சாந்தமு நாகவெண் மருப்பு. மின்னவிர் கனகக் குவை களு மணைந்து விரிதிரை தாவுகா விரியா முன்னிய நதி யொன் ரேரெழு நதிக்குண் முதன்மையா மொழிதரு நதியாம். (2)

செழிப்புடைய பழங்கள் விழுதலாலே சிந்திய சாருகிய தேனையும் மரங்களினின்றும் உதிர்ந்த பூக்களோடு கூடிய தழைகளையும் குற்றமற்ற மேன்மையான மாணிக்கமுதலிய மணிகளின் கூட்டத்தையும், முத்துக்களையும், அகில் மரங் களையும், சந்தன மரங்களையும், யானைகளின் வெண்மையான கொம்புகளையும், ஒளிவிடுகின்ற பொன் குவியல்களையும் தழுவிக்கொண்டு விரிகின்ற அலைகளோடு ஓடுகின்ற காவிரி யென்று கருதப்படுகின்ற ஒரு நதியானது ஒப்பற்ற நதி களுக்குள்ளே முதன்மை பெற்றதாகச் சொல்லப்படுகின்ற நதியாகும்.

வெய்முத்து யானைக்கொம்பு முத்து முதலிய இவைகள் மலைகளில் மிகுதியாகக்கிடத்தலால் 'தரளமும்' எனமுத்துக் கள் பிரித்துக் கூறப்பட்டன. நாகம்—யானை. கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, சிந்து, நருமதை, காவிரி, என்பன ஏழு நதிகளாகும்.

இனையமா நதியின் மருங்கில்வா னவரு மிருடியர் குழாங்களுஞ் சுருதிப், பனவரு மகலார் புண்ணிய முழு தும் பயத்தலாற் பல்லுயிர்க் குதவி, தனையருள் காதன் மிக்கவிந் நதியிற் றண்புன லமலமா யுலகிற், புனிதமா யநாதி யாயதெக் காலும் பொருவிலாப் போகமே யளிக்கும். (3)

(புண்ணிய மெல்லாவற்றையும் தன்னையடைந்தவர் களுக்குத் தருவதாக இருத்தலால்,) தேவர்களும், முனிவர் கூட்டங்களும், வேதமோதுகின்ற பிராமணர்களும் மேலே

கூறிய தன்மைகளை யுடைய பெரிய அக்காவிரி நதியின் பக்கத்தைவிட்டு நீங்க மாட்டார்கள். பலவுயிர்களுக்கும் உணவாகவும், உணவின் காரண மாகவு மாகி உதவியைச் செய்தருள்வதற் குரிய அன்புமிகுந்த இந்தக்காவிரி நதியின் கண் ணுள்ள குளிர்ந்த நீரானது குற்ற மற்ற தாகியும், புனிதத் தன்மையைப் பருகுவார்க்கும் குளிப்பவர்க்கும் கொடுப்பதாகியும், அநாதி காலந்தொடங்கி யுள்ள தாகியும் எந்தக் காலத்திலும் தான்செல்லும் மிடமெங்கும் ஒப் பில்லாத எல்லாப் போகத்தையுங் கொடுக்க வல்ல தன்மை யுடைய தாகியும் விளங்கும்.

பனவர்—பார்ப்பனர்.

இந்தமா நதியிற் றீம்புனல் பருகி லியாவரு மிகழ் மது வருந்த, வந்தபா தகம்போ மப்புனன் மூழ்கில் வல்வினை முழுவது மாயுஞ், சந்தன டவிக ளோங்கிய சையத் தடவரைச் சாரலே முதலாச், சிந்துவி னளவுந் திரைபரந் தெழுமித் திருநதிப் பெருமையார் தெரிப்பார். (4)

மேற் கூறிய காவிரிநதியின் இனிமையான நீரைக் குடித்தால், எல்லாராலு மிகழப்படுகின்ற கள்ளைக்குடித்த லால் ஏற்படுகின்ற பாவங்கள் நீங்கிவிடும், அந்நீரிலே மூழு கினுல், செய்த கொடிய வினைகள் முற்றும் மாய்ந்துவிடும். சந்தனக் காடுகள் வளர்ந்து விளங்குகின்ற விரிந்த சைய மலையின் சாரலைத், தோன்று மிடமாகக் கொண்டு அங்குத் தோன்றிச் சமுத்திரமுடிய அலைகளோடு விரிந்து ஓடுகின்ற இந்தக் காவிரித் திருநதியின் பெருமையை யார்தாம் முற்ற விளக்கவல்லவ ராவார்கள்.

ஆயவிந் நதியி னிருகரை மருங்கி லமரர்கின் னரர ருண் முனிவர், தூயவிஞ் சையர்கள் சித்தர்க ளுரக ரெனுமிவர் தொல்லுருக் கரந்து, மாயையின் வடிவம் வேறெடுத் தினிதின் வைகுவ ரிருடிகண் மலர்தூய்,

நேயமுற் றிறைஞ்ச விலிங்கமா முருவாய் நிலவணி மவுலியு நில்வும். (5)

மேலே சொல்லிய இயல்புகளுடைய இந்தக் காவிரி நதியின் இரண்டு கரை யோரத்திலும் தேவர்களும், கின்னரர்களும், அருளோடுகூடிய முனிவர்களும், தூயவர்க ளான வித்தியாதரர்களும், சித்தர்களும், நாகலோக வாசிகளும் ஆகிய இவர்கள் தங்களுடைய சக்தியினல் பழைய வடிவங்களை மறைத்து, வேறு வேறுவடிவங்களைக் கொண்டு, சுகமாகத் தங்குவார்கள். ரிஷிகள் மலர்களைத்தூவி அன்போடு வழிபடும்படி, சந்திரனை யணிந்த சடாமுடியை யுடைய சிவபெருமானும், இலிங்க வடிவங்கொண்டு அந்நதிக் கரைகளிலங்கங்கே விளங்குவார்.

இறைஞ்சல்—வணங்குதல். மவுலி—முடி. நிலவணி மவுலி, அன்மொழித் தொகை யாகு பெயர். வேண்டிய படியே செய்து கொள்ளும் சக்தியை ,'மாயை'' என்றனர்.

பெண்ணெரு பாக னிலிங்கநல் லுருவாய்ப் பெட்புறத் தரிசனமருளிப், பண்ணவ ரமர ரேனையோ ரெவர்க்கும் பரிவொடு மேற்கதி பயப்பத், தண்ணளி புரியு மித்திரு நதியின் சார்கரை மருங்குள தலங்க, ளெண்ணரும் பெருமை யிந்நதிக் கிணையா விருப்பவோர் நதிகளு மில்லை. (6)

உமாதேவியா ராகிய மங்கையை யோர் பங்கிலே கொண்டருளியவராகிய சிவபெருமான், இலிங்க வடிவங் கொண்டு எல்லாரும் வழிபட்டு மகிழும்படி காட்சி யளித்து, கந்தருவர் முதலிய தேவயோனிகளுக்கும், அமரர்களாகிய தேவர்களுக்கும் பிறர்க்கும் இரக்கத்துடன் மேலானகதியை அளிப்பதற்குத் தண்ணளி செய்தருளுகின்ற சிவதலங்கள் இந்தக் காவிரி நதியின் ஓரமாக அடைந்த கரைகளின் பக்கத்தில் இருக்கின்றன. ஆதலால் அளவில்லாத பெருமையை யுடையஇந்தக் காவிரி நதிக்கு ஒப்பாக இருப்பதற்கு வேறு ஒரு நதியுமில்லை.

இத்தகைய காவிரியின் றென்பா லோங்கி
யிந்திரன்மா லயனமர ரெவர்க்கு மேலா
முத்திதருந் தருமகேத் திரமா மூவர்
முழுமுதலோன் கமலையெனு முதன்மைத் தான
மத்தலத்தி னிருதியுறுந் திசையி லோரொன்
றரையான யோசனைவிட் டப்பான் மேவு
மெத்தலமும் பரவுதரு வனமே மேலோ
ரியற்றருமா தவமியற்று மியற்கைத் தாமால். (7)

மேற்கூறிய இயல்புகளை யுடைய காவிரி நதியின் தென் பாகத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரராகிய மூவர்கட்கு முழு முதற் கடவு ளாகிய சிவபெருமான், தமக்கு முதன்மை யான தலமாகக் கொண் டெழுந்தருளியிருக்கின்ற கமலை யென்கின்ற திருவாரூர்க்கு ஒன்றரை யோசனை தூரத்திற்கு அப்பால் நிருதி திசையிலே எல்லா வுலகத்தாரும், வந்து புகழ்ந்து வழிபடுகின்ற '**பரிசாதவனம்**' என்பதொன் றுண்டு. அச் சிவ தலம், எல்லா வகையாலும் சிறப்புற் றுயர்ந்து, இந்திரன், மகாவிஷ்ணு, பிரமா முதலிய எல்லா ருக்கும் மோட்ச மளிக்கும் படியான புண்ணிய க்ஷேத்திர மாகப் பொருந்தி விளங்குகின்றது. அஃது உயர்ந்தவர்கள், செய்தற் கரிய பெருந்தவங்களைச் செய்தற்கேற்ற வியல் புடைய தாகவும் விளங்குகினறது.

மேலோர்—உயர்ந்தவர்; செயற்கரியன செய்யத் தக்கவர். பொருள் முடிபிற் கேற்பச் சொற்களைப் பிரித்துக் கூட்டல் நேர்ந்தது.

வேறு

இன்ன பொன்னிணர்கொள் பாரிசாதவன மெத்த லத்தினு முயர்ச்சியாய்ப், பன்னு நான்மறைவ லோர்கண் மாதவர்கள் பழுதில் விண்ணவர்கள் பரிவினு, லுன்னு சைவநெறி வல்ல வுத்தமர்க ளிவரெ லாமுறைவ தாழி நாண், மன்னு காலையினும் வதிவ தித்தரு வனத்தியல் புகல வொண்ணுமோ. (8)

இத்தன்மையையுடைய பொன்மய மான பூங் கொத்துக்களைக் கொண்டு விளங்குகின்ற பாரிசாத வன மாகிய சிவதல மானது எல்லாச் சிவ தலங்களுக்கும் மேலானதாகக் கொண்டு. எல்லாப் பொருள்களையு மெடுத்து விளக்கும்படி யான நான்கு வேதங்களைப் பொருளோடு ஓத வல்ல வராகிய பிராமணர்களும், பெரிய தவசிகளும், குற்ற மற்ற தேவர்களும், எல்லாராலும் அன்போடு மேலானதாகக் கருதப்படுகின்ற சைவாகம நெறியிலே, செல்ல வல்லவர்களாகிய சைவவுத்தமர்களும் வசிக்கத் தக்க தலமாகும்: யுகாந்தகாலம் வந்த பொழுதும் அழியாமல் தங்குவது மாகும். ஆதலால் இந்தப் பாரிசாத வனத்தலத்தின் இயல்புகளை எவரும் எளிதாக எடுத்துச் செல்ல முடியாது.

இணர்—பூங்கொத்து. பரிவு—அன்பு.

வேறு

எழில் வாய்ந் திலகு மிவ்வனத்தி லின்சொல் மழலை யஞ்சுகத்தோ, டொழியா திசைக்கு மாகமமு மிருதிப் பொருளு முயர்மறையும், வழுவா துரைக்கும் வரிச்சுரும் புண் மலர்ப்பைங் கோட்டி லிளம்பூவை, யுழைசே ரிசைப் பூங் குயிலவைகேட் டுரையுத் தரங்கள் சிலகூறும். (9)

அழ கியல் பாகப் பொருந்தி விளங்குகின்ற இந்தப் பாரிசாத வனத் தலத்தின்கண்ணே இனிமையான இளங் குதலை மொழிகளைப் பேசுகின்ற அழகிய கிளிகளோடு, வரிக்கோடுகளையுடைய வண்டுகள் தேனை யுண்ணுகின்ற மலர்களோடு கூடிய பூங்கொம்புகளிலே தங்கி யிருக்கின்ற நாகணவாய்ப் பறவைகளும் சேர்ந்து, இடைவிடாம லங்கு முழங்கும் படியான சைவ ஆகமங்களின் பொருள்களையும், ஸ்மிருதிகளின் பொருள்களையும் எல்லாவற்றிற்கும் உயர்வான வேதங்களின் பொருள்களையும் வழுவின்றிச் சொல்லிக்கொண்டிருக்கும். அவைகளின் பக்கத்திலேயிருந்து கூவுகின்ற நல்ல இசையையுடைய பொலிவான குயில்கள் (கூவுமோசைகள்) கிளிகளும் பூவைகளும் சொல்லு மாகம

முதலியவற்றின் பொருள்களைக்கேட்டுப் பதிலுரைக்குஞ் சில பதிலுரைகள் போல விளங்கும்.

சுகம்—கிளி. பூவை—நாகணவாய்ப்பறவை. உழை —பக்கம்.

புலவுண் டுவக்கும் வரிப்புலியும் புல்வா யினமு மொருசாரிற் குலவுந்தறுகட் பிறையெயிற்றுக் கொலை யேனமும் வெவ்வாய்ஞமலி, பலவு மொருபாற் பயிலும் விடப் பாந்தட் பகுவா யணையாக, வெலிகண் டுயிலு மரிமாவு மிபமு மொருபா லினிதியங்கும். (10)

அவ்வனத்திலே புலாலை (இறைச்சியை)த்தின்று மகிழும்படியான வரிப்புலிகளும், புற்றின்னும் மான் கூட்டங் களும் ஒருபக்கத்தில் கூடியுறையும். அஞ்சாமையையும், இளம்பிறைபோன்ற வளைந்த தந்தங்களையும் கொல்லுந் தொழிலையுமுடைய பன்றிகளும், கொடிய வாயையுடைய பல செந்நாய்களும் ஒரு பக்கத்திலே கூடியுறையும். நஞ்சையுடைய பெரும் பாம்புகளின் பிளந்த வாயைப் படுக்கையாகக் கொண்டு எலிகள் படுத்துறங்கும். சிங்கங் களும், யானைகளும் ஒருபக்கத்திலே கூடிக் குலவி யுறையும்.

புல்வாய்—மான். ஏனம்—பன்றி. பாந்தள்—பெரும் பாம்பு, அரிமா—சிங்கம். இபம்—யானை. புல்வாய் —புல்லைத் தின்னும் வாயுடையது.

உகிர்வா ளுறுத்தி மதகரியி னுயிருண் டுவக்குஞ் சொரிகுருதிப், பகுவாய்த் தறுகட் கேசரியெண் பணைக் காற் பறவை யொடு துயிலும், புகழா வரவி னெடுகீரி விளையாட் டெயதும் பொருந்தியவண், மகிழ்வா ளுழு வை முலைத்தீம்பால் வரமான் மறியுண் டிறுமாக்கும். (11)

நகமாகியவாளை யழுத்தி மதங்கொண்ட யானையின துயிரைப் போக்கி மகிழுகின்றனவும், (பிறபிராணிகளின் உடலை, யுயிரோடுதின்னலால்) இரத்தம் ஒழுகுகின்ற பிளந்தவாயை யுடையனவும், அஞ்சாமையை யுடையனவு

மாகிய சிங்கங்கள் பருத்த எட்டுக் கால்களையுடைய சிம்புட் பறவைகளோடு கூடித் தூங்கும். எல்லாருங்கண்டு வெறுத் திகழும்படியான பாம்புகளோடு கீரிகளும் கூடி விளையாடும். அவ்விடத்திலே மகிழ்ச்சியுடன் பொருந்தி யுறைகின்றவைக ளாகிய வாள்கள்போன்ற வரிகளோடு கூடிய புலிகளின் முலைகளிலே இனியபாலை நல்லமான் கன்றுகள் பருகிச் செருக்கித் திரியும்.

புலிகள்பாயும் போது வாலை முருக்கியடித்துப் பாயு மாதலால் **"வாலுழுவை"** என்றனர். மான்கள் அஞ்சிய இயற்கை யுடையவனவாகியும் முனிவர்களால் விரும்பத் தக்கனவாகியுமிருத்தலால் **"வரமான்"** என்றனர். உழுவை —புலி. வரம்—மேன்மை. உகிர்—நகம். குருதி—இரத்தம். உறுத்தல்—அழுத்தல்; பதித்தல்.

பொங்கும் பிரசத் துளிதூங்கும் பொலன்ரு தவிழ்க் கும் பசுங்கோட்டிற், செங்காற் றவள வோதிமமுஞ் சிறைமென் கிளியும் பூவைகளு, மங்குன் முழக்க மென முழங்கு மறைமா முனிவர் பன்னியர்க, ளங்க ணழைப்ப முன்றிலுறு மவரோ டினிதின் விளையாடும். (12)

நிறைய ஊறுகின்ற மலரின் தேன்துளிகள் தொங்கப் பெறுகின்றவைகளும், பொன்போன்ற மகரந்தப் பொடிகள் சிந்தும்படி மலர்களை மலரும்படி செய்கின்றவைகளு மாகிய பசுமையான பூங்கொம்புகளிலே தங்குகின்ற சிவந்த கால் களையுடைய வெண்ணிறமான அன்னப்பறவைகளும், (நல்ல) இறகுகளையுடைய மெல்லிய கிளிகளும், நாகண வாய்ப் பறவைகளும் மேக முழக்கம்போல வேதங்களை முழங்குகின்ற பிறப்பொழுக்கத்தால் உயர்ந்த முனிவர் களுடைய கற்புடைய மனைவிமார்கள் அவ்விடத்தில் அழைக்க, வந்து எல்லா வாயில்களிலும். அவர்களோடு அஞ்சுத லில்லாமல் விளையாடும்.

பிரசம்—தேன். அவிழ்த்தல்—மலரச்செய்தல். தவளம்— வெண்மை. ஓதிமம்-அன்னப்பறவை. மங்குல்-மேகம். முன் றில்-இல்முன். வாயில்-இல்வாய். இல்முன் என்பது மூன்றில்

எனவும் இல்வாய் என்பது வாயில் எனவு மருவி இலக்கணப் போலி மொழிகளாயின. மக்கள் மொழிகளைக் கிளந்தபடியே கிளத்தலால் "மென்கிளி" என்றனர். காரன்னமுமிருத்தலால், தவள வோதிமம், என்றனர்.

இறையிற் கழியும் புழுமலத்தா லியன்ற வுடலந் தனைப்பெருக்கு, முறுதி கருதி யூனயின்ற தீயோ ருரோமந் தொறுமூசி, நிறுவித் தசையீர்ந் தழலோங்கு நிரயத் தழுத்து மறலியெனு, மறிவுற் றேயோ வருந்தாதூ னறுகு கறிக்கு மடுபுலியும், (13)

நொடிப் பொழுதிலே அழியுந் தன்மை யுடையவைகளும் புழுக்களாலேயும், மலங்களாலேயும் அமைக்கப்பட்டனவைகளுமாகிய உடம்புகளை வளர்க்கும்படியான நலத்தை யெண்ணி இறைச்சியைத்தின்ற தீயவர்களை எமன் அவர் மயிர்க்கால்களெல்லாவற்றிலும் தப்பாமல் ஊசிகளைச் செலுத்தித் தசைகளைக்கிழித்து நெருப்புப் பற்றி யெரிகின்ற நரகத்திலே அமிழும்படி செய்வான்; என்று அறிந்த அறிவினலோ, யாரையும் கொல்லுகின்ற இயல்பை யுடைய புலிகளும் (அவ்வனத்தில்) இறைச்சியைத் தின்னமல் அறுகம்புல்முதலிய புல்லுகளைக் கடித்துத் தின்கின்றன?

இருந்தாற்போல அழியுந்தன்மையை யுடைமையால் "இறையிற் கழியும்" என உடம்புகளின் நிலையின்மையை குறித்தனர். "நீரில் எழுத்தாகு யாக்கை" (நீதிநெறி விளக்கம்) என நீதிநூலார் கூறுதலுங்காண்க. இறைப்பொழுது என்பார் இறை என்றனர். இறை என்பது சிறுமையை யுணர்த்து முரிச்சொல். உறுதிஎன்பது நலத்தை யுணர்த்திற்று. ஈர்தல்—வகிர்தல். மறலி—எமன். நிரயம்—நரகம்.

உணர்வில் விளங்கும் பறவைகளு மொழுக்க முயன்று பகைநீங்கிப், பணிவு மருளு மெய்திடினிப் பாரிசாத வனத்தானத், தணுகு மாந்தர் பெருமியல்புக் கள

வொன் றுளதோ வாதலினற், பிணிசெய் பிறவி வேர்
களைந்து பெருவாழ் வளிப்ப தித்தலமே. (14)

இப் பாரிசாத வனத்திலே பகுத்துணரும் உணர்வில்லாத விலங்குகளும் பறவைகளும் நல்லொழுக்கத்தைச் செய்து பகையில்லாமல் பணிந்து நடக்கும் இயல்பையும் உயர்ந்த அருளையு முடையவைகளாக இருக்குமானல் அங்கே தங்குகின்ற மனிதர்கள் அடையக்கூடிய நல்ல தன்மைகள் இவ்வளவு என்று சொல்லுதற்கு ஓரளவுடையன ஆகுமோ! ஆகா; ஆதலால் இத்தலமானது துன்புறுத்துமியல்புடைய பிறவிகளின் காரணமான அஞ்ஞானத்தை அடியோடு போக்கித் துன்பமேயில்லாத இன்பப் பெருவாழ்க்கையாகிய வீடுபேற்றை யளிக்க வல்லதாகும்.

இங்குப் பிணியென்பது, துன்பத்தை யுணர்த்திநின்றது. பிறவிக்குவேர் அஞ்ஞானமேயாகும் என்க. பிறவிக்குவேர், ஆணவமல முதலிய மலங்கள் எனினுமாகும். "ஒடுங்கி, மலத்துளதாம்" என்கின்றது சிவஞானபோதம் முயன்று என்பது, செய்து என்னும் பொருள் தருகின்றது.

அளவில் போகத் தொடுபோக மருளு மிடனு யணி
மேவி, யொளிபெற் றரிய புண்ணியகேத் திரமா யுயரித்
தெளியும் விரதத் துருவாச னிமையோருலகிற்
சென்றணைந்து தலமதனிற், மிளிருங் கனகப் பூந்தருவை
மேனுட் கொணர்ந்திங் கமைத்தனனல். (15,

அளவற்ற போகங்களையும் சிவ ஞானத்தையும். தங்கி வழி படுகின்றவர்களுக்குக் கொடுத்தருள்கின்ற தலமாகப் பொருந்திப் புகழ்பெற்றுப், பெறுதற்கு அருமையான புண்ணியச் சேத்திரமாக வுயர்ந்த இந்தப் பாரிசாத வனத் தலத்தின் கண்ணே தங்கித் தெளிந்த விரதானுட்டானத்தை யுடையவராகி விளங்கிய துருவாச முனிவர் பெருமான் 'தேவலோகம் போய்ச் சேர்ந்து ஒளிருகின்ற பொன்மயமானதும், பூக்களோடு கூடியதுமான பாரிசாதத்தருவை எடுத்துக்கொண்டுவந்து இத்தலத்தில் நிலைபெற நாட்டினர்.

க்ஷேத்திரமென்பது, கேத்திரம் எனத்தற்பவமாயிற்று இதில் ஷகாரங்கெட்டது.

வேறு

இமையவர் தன்மை யெய்திய முனிவ னித்தரு
வமைத்திடு முன்னுங், கமையுறு புவியி லுத்தம தலமக்
கற்பக வனமுறுந் தான, மமையுமத் தலத்தி லத்துரு
வாச னரன்றிருப் பூசனை கருதி, நம ரெலா முய்யத் தன்
றிருப் பெயராற் றீர்த்தமொன்றாக்கின னயப்பால். (16)

தேவர்களி னியல்பை யடைந்த முனிவராகிய துருவாசர் இந்த மேலேகூறிய பாரிசாதத் தருவைக் கொண்டுவந்து நிலைநாட்டுதற்கு முன்னரேயும், பொறுமையை இயல்பாகவுடைய பூவுலகின்கண்ணே, பாரிசாதமரம் பொருந்திய இந்தத்தலமானது, உத்தமதல மாகவே விளங்கியதாகும். அவ்வாறமைந்த இந்தத் தலத்திலே அந்தத் துருவாச முனிவர்பெருமான், சிவ பெருமானுடைய பூசைக் காக வேண்டி நம்மவர்க ளெல்லாரும் உச்சீவிக்கும்படியாக விருப்பத்தோடு துருவாச தீர்த்த மென்று வழங்கும்படி தனது திருப்பெயரை வைத்து ஒரு புண்ணிய தீர்த்தத்தை யுண்டாக்கினார்.

க்ஷமை, 'கமை'யென வடமொழியாயிற்று. 'அகழ்வாரைத்தாங்கு'த லியல்பாகலின் 'கமைவுறுபுவி' என்றனர்.

அந்தநற் றீர்த்த வேலையிற் புனித மாமிருத் திகை
தனைக் கொணர்ந்து, கொந்தவிழ் பசும்பொற் பூந்தரு
வடியி னுன்மறை கூறியவிதியாற், றந்தவே திகையின்
மணலினு லிங்கந் தனைவகுத் தாகமந் தவறு, திந்திரன்
பரவு பரமனைத் தாபித் தியற்றினன் பூசனை யினிதின்.
(17)

மேலே கூறிய நல்ல துருவாச தீர்த்தத்தின் கரையிலேயுள்ள தூய்மையான மண்ணைக் கொண்டுவந்து, கொத்தாக

மலர்கின்ற பசும் பொன் மயமான பூக்களையுடைய பாரிசாதத் தருவினடியிலே நான்கு வேதங்களும் சொல்லிய முறைப்படி, அமைத்த பீடத்தின் மேலே மணலினலே சிவலிங்கத்தைச் செய்து வைத்து அதிலே இத்திரன் வழிபடுகின்ற பரமசிவனை நிலை நாட்டிச் சிவாகம விதிப்படி நன்ருகப் பூசை செய்தார்.

இந்திரன் என்பது இந்திரன் முதலிய தேவர்களெல்லாரையுங் கொள்ள நிற்கின்றது. வேலை--கரை. மிருத்திகை—மண். கொந்து—கொத்து.

மீண்டுமா யிடையி லிமாசலத் துதித்த மெல்லிய றிருவுருவாக்கி, யாண்ட நூல் விதியாற் பதிட்டைசெய் தமுதவல்லியென் ளெருபெய ரமைத்து, வேண்டுறு மடியர் பணிசெய வுமைக்கு மேதகு பூசனை யியற்றி, யீண்டிய பிரம கற்பமா மாயு ளெய்திய முனிவர னிருந்தான். (18)

மறுபடியும், அளவுமிகுந்தபிரமகற்பம் வரையிலுமாயுளையடைந்த முனிவர்கள்தலைவரான துருவாசர் அவ்விடத்திலே இமயமலையிலே தோன்றிய மெல்லியளாகிய பார்வதி தேவியாரது திருவடிவமொன்றை யமைத்துப் பெரியோர்கள், கையாண்டுவந்த ஆகம சாத்திர முறைப்படி அவ்வுமையம்மையாரை நிலைநாட்டி **அமுதவல்லி** என்கின்ற ஒப்பற்ற பெயரை அவ் வம்மையாருக்கு வைத்துப் போக மோச்சங்களை விரும்புகின்ற அன்பர்கள் வழிவழி யாகப் பணிகளைச் செய்து அப்போக மோச்சங்களைப் பெற்றுய்யும் படியாக அவ் வுமா தேவியாருக்குச் சிறந்த பூசைகளைச் செய்துக் கொணடிருந்தார்.

பிரதிஷ்டா என்னு மாரியம் **பதிட்டை** என வடமொழியாயிற்று. பிரதிஷ்டா = நிலைபெறுத்துதல்; நிலைநாட்டல்.

"**வேண்டுறுமடியர் பணிசெய**" என்பதற்குத் (தன்னை விரும்பி வந்தடைந்த மாணவர்கள்) தனக்கு வேண்டிய அல்லது பூசைக்கு வேண்டிய பணிகளைச் செய்ய எனக் கூறினுமமையும்.

நினைந்துபற் பலகா லார்வமீக் கொள்ள நெஞ்ச நெக் குருகியா தரவாற், கனிந்தறி வயர்ந்து மெய்ம்மயிர் பொடிப்பக் கட்புனல் சோரநாக் குழற, மனங்கவர் காம மாதியா வுரைக்கு மாசிரு மூன்றையு மகற்றி, யனங்கவே ளுடலம் பொடிபட விழித்த வரன்வெளிப் படும்வகை துதித்தான். (19)

துருவாச முனிவர் மேற் கூறியபடி பூசித்துக் கொண்டிருந்து அன்பு மேலிடப் பல தடவையாக அச் சிவலிங்கப் பெருமானை எண்ணி யெண்ணி மனமிளகிக் கட்டு விட்டுருகப்பெற்று விருப்புடன் அறிவு சோர்ந்தவராக உடம்பிலே மயிர்க்கூச்சிடவும் கண்களிலே நீர் ஒழுகவும் நாவானது தளுதளுக்கவும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் என்னு மாறு குற்றங்களையும் நீக்கி, மன்மதனுடைய வுடம்பானது எரிந்து சாம்பலாகப் போகும்படி, நெற்றிக் கண்ணைத் திறந்துவிட்ட சிவபெருமான், உருவத் திருமேனி கொண்டு வெளிப்பட்டுத் தோன்றும்படி துதி செய்தார். (புகழ்ந்தார்).

ஆர்வம்=பேரன்பு. நெகுதல்=உடைதல், கனிதல்= ரஜோதமோ குணங்களால் வன்மையுருது சத்துவகுணத்தால் மென்மையாதல். ஆதரவு=விருப்பம்.

மந்திர விதியா லினையன புகழ்ந்து மங்கலப் படிவமா யிலகு, மிந்துசே கரனை நாடொறு முனிவ னிறைஞ் சலும் யாவரு மியற்ரு, வந்தமின் மறையோன் றவத்தினற் பெருகு மன்பினு னம்மணலிலிங்க, முந்துபா தலத்தினளவும்வே ரூன்றி முழுமுத லிலிங்கமாயின தால். (20)

விதிப்படி வேத மந்திரங்களை எடுத்து மேலே சொல்லிய தன்மைகளோடு கூடியன வாகப் புகழ்ந்து மங்கள வடிவராக விளங்குகின்ற சந்திர சேகரராகிய சிவ பெரு மானைத் தினந்தோறும் இடைவிடாமல் துருவாச முனிவர் வணங்குதலைச் செய்யவும் ஒருவராலும் செய்யப்படாதவையும், அழிவற்றையு மான வேதங்களைப்படித்து அவ்வேத நெறி

யிலே நிற்கின்றவரான அம்முனிமுவர் பெருமானுடைய தவத்தினலேயும், அவருள்ளத்திலே நிறைகின்ற அன்பினலேயும், அந்த மணலாலமைத்த இலிங்கமானது கீழ்நிலத்திலே முந்தியதாக விளங்கும் பாதாளலோகம் வரையிலும் அடிப்பாகத்தைச் செல்லும்படி செய்து முழு முதல்வராகிய சிவபெருமானை வழிபடுதற்குரிய சிறந்த இலிங்கமாக விளங்கியது.

வேத மந்திரங்களாலே விதிப்படி மேலே சொல்லிய 'நெஞ்ச நெக்குருகுதல்' முதலிய தன்மைக ளுண்டாகப் புகழ்ந்து என இருக்கின்ற படியே உரைப்பினும் பொருந்தும். இனையன = இந்தத்தன்மைகளோடு கூடினவகா; இந்தத் தன்மைகளுண்டாக. படிவம் வடிவம். சேகரம் = முடி. இந்து = சந்திரன்.

ஆனதோ ரிலிங்கப் பெருமையைக் கருதி யன்பினெஞ்சநெக் குருகி, நான்மறை முனிவன் பன்முறை வணங்கி நவிற்றரும் பூசனை யயர்ந்து, வானவர் முதலர் மற்றுளோ ரெவரு மகிழ்வுற வொருமையா வழுத்தி, மேன்முறை யனந்த மாம்பல கற்ப காலமுந் தொழுமற வேலை. (21)

அந்தத் தன்மையோடு கூடிய ஒப்பற்ற சிவ லிங்கத்தின் பெருமையை எண்ணி அன்பினலே நெஞ் சுடைந்துருகப்பெற்று, நான்கு வேதங்களையு மோதியுணர்ந்தடங்கிய துருவாச முனிவ ராகிய அற வாழி யந்தணர், பல தடவை வணங்குதலைச் செய்து, சொல்லுதற் கரிய பூசையைச் செய்து தேவர்கள் முதலாக வேறுள்ளவர்களான எல்லாரும் மகிழ்ச்சியை யடையும்படி மன வொருமையுடன் துதித்து மேலான முறைப்படி மிகப் பலவான கற்ப காலம் வரையில் வழிபடு வாராயினர்.

நவிற்றல் = சொல்லுதல். நவிற்ற அரும் என்று பிரிக்க. அறவேலை = அறக்கடல். என்றது துருவாசமுனி

வரையென்க, வானவர் முதலா மற்றுளா ரெவரும் மகிழ்வுற=தேவர்கள் முதலாக தனக்கு வேருகவுள்ளவர்களெல்லோரும் பின்னர் வழிபட்டு எளிதிலே போகமோச்சங்களைப் பெற்று மகிழும்படி.

அம்முனி புரியுந் தவத்தினற் பரம னருளனு மதியினற் கமஞ்சூன், மைம்முகி றவழும் பாரிசா தவனம் வளர்திருக் களருண் மற் றெவருந், தம்மில்வேற் றுமையாம் பகையுள தெனினுந் தம்பகை தவிர்த்தறந் தவரு, திம்மையிற் பயக்கு மரும்பெற லொழுக்க மியைந்தன ரியற்றருந் தவத்தோய். (22)

செய்தற் கரிய தவத்தை யுடைய சனற்குமாரனே, அந்தத் துருவாச முனிவர் செய்கின்ற தவத்தினலேயும், சிவபெருமானுடைய அருளோடு கூடிய அனுமதியினலேயும் நிறைந்த நீர்க்கருவைக் கொண்டுள்ள கரிய மேகங்கள் ஊர்ந்து செல்லுகின்ற பாரிசாத வனமாகிய திருக்களரின் கண்ணே, உறைகின்ற யாவரும் ஒருவருக்கொருவர் குணஞ் செயல் உருவ முதலியவற்ருல் ஏற்படும் வேறுபாடாகிய பகையையுடையவர்களாக இருந்த போதிலும் தமக்குப் பகையாகவுள்ள **அரிசட்வர்க்க மென்னும்** காமம், வெகுளி முதலிய உட்பகைகளை நீக்கித் தந் தமக்குள்ள அறவொழுக்கங் களினின்றுந் தவறு படாமல் அந்தப் பெறுதற்கரிய அற வொழுக்கங்களைப் பொருந்தினவர்களாக விளங்கினர்கள்,

அநுமதித்தல=சம்மதித்தல். துருவாச முனிவர், திருக்களராகும் இவ்வூருக்கு சேருகின்றவர்களும் தத்தம் வருணத்திற்கும் நிலைகளுக்கும் உரிய ஒழுக்கங்களிற்றவருது அவற்றைப்பற்றி யொழுகல் வேண்டு மெனவுந் தவஞ் செய்தலாலும், அத் தவத்திற்கேற்ப அவ்வாருகுக எனச் சிவபெருமான் சம்மத மிருப்பதாலும் என விளக்கங் கொள்க. தவம், என்பது இங்கேசரியை முதலியவற்றையும் குறித்து நிற்கின்றதென்க.

. கமம்=நிறைவு. சூல்=கரு. மை=கருமை. முகில்= மேகம். தவழுதல்=ஊர்தல். சில வுறுப்புப்பட ஊர்தலே தவழுதல் என்பர்.

இத்திறம் பலகா லருமையின் முனிவ னியற்றிடு
பூசனைக் கிரங்கி
மத்தமு மதியும் புனைபுரி சடையு நீற்றெளி வண்ணமு
நான்கா
மத்திருப் புயமு மான்மழுக் கரமுமணிமுகத்
தழகுமெய் யருளான்
முத்திதந் தளிக்கு முக்கணும் விளங்க முழுமுதற்
பரமனங் கெழுந்தான். (23)

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், இவ்வகையாகத் துருவாச முனிவர் பலதரம் அருமையாகச் செய்த பூசையைக் குறித்துத் திருவுளம் இரங்கியவராக ஊமத்தம் பூவையும், சந்திரனையும் அணிந்துள்ள முருக்குண்ட சடாபாரமும் அணிந்துள்ள வெண்மையான திருநீற்றினழகும், நான்காகிய அழகிய தோள்களும், மானையும் மழுவாயுதத்தையுமேந்திய திருகைகளோடு (அபய வரதமுடை கைகளும்) மாணிக்க மணிபோன்று பளபளப்புள்ள திருமுகத்தினழகும், உண்மையான திருவருளாலே அன்பர்களுக்கு முத்தியைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுங் கருவியாகிய, மூன்று திருவிழிகளும் வெளிப்பட்டு விளங்கும்படி அங்கே அம்முனிவர்கண்ணெதிரே தோன்றியருளினர்.

நாடுமா தவனங் கெழுந்தருள் கயிலை நம்பனைக்
காண்டொறு மிறைஞ்சிப், பாடினன் வியந்தான் றுள்ளி
னன் றுள்ளிப் பன்முறை பின்னரும் பணிந்தா, னடினன்
கரத்தாற் றுளமிட் டுருகி யாங்கவ னம்புயத் திருத்தாள்
சூடினன் றலைமே லிருகணீர் பொழியத் தொழுந்தொறுங்
காதலாற் றுதித்தான். (24)

சிவ பெருமான் எப்பொழுது வெளிப்பட் டருளுவாரென்று கருதிக் கொண்டிருந்த பெருந் தவசியாகிய துரு

வாச முனிவர் அங்கே எழுந்தருளிய கைலாச பதியாகிய அச்சிவ பெருமானைப் பார்க்கும் பொழுதெலலாம் வணங்கி ஓகோ புண்ணியம் ஓகோபுண்ணியம் என்பது போலவரும் ஆனந்தப்பாடல்களைப் பாடினார். அதிசயித்தார். குதித்தார். குதித்துப் பின்பும் பலதடவை வணங்கிக்கையாலே தாள மிட்டு ஆடினார். அவ்விடத்திலே மனங்கசியப் பெற்று, அச் சிவ பெருமானுடைய திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தந் தலை மேலே சூடிக்கொண்டார். கும்பிடும் பொழுதெல் லாம் அன்பினாலே இருகண்களினின்றும் நீர் பெருகி வழி யும்படி துதி செய்தார்.

நம்பன்—பெரியோன் "நம்புபெருமை,, (தொல்) எனக் கூறல் காண்க. வியத்தல்—அதிசயித்தல்.

ஈறின்மா தவனின் றித்திறம் பரவி யேத்தலு மிறைவனு மகிழ்ந்து, வீறுசான் முனிவ வெவ்வரம் பெறநீ விரும்பினை யவ்வர மளிப்பேங். கூறுநீ வேட்ட வரமென முனியுங் கொந்தழன் மெழுகென வுருகி, யாறுபோல் விழி யிற் றுளிபுன லொழுக வன்பினாற் றொழுதிவை யுரைப் பான். (25)

அழிவில்லாத பெருந் தவத்தையுடைய துருவாச முனிவர், இவ்வகையாகத் துதித்து வணங்குதலைச் செய்ய வும் நம் தலைவராகிய சிவபெருமானும் மகிழ்ச்சி யடைந்து பெருமை நிறைந்த முனிவனே எந்த வரத்தைப் பெறு வதற்கு விரும்பினாயோ அந்த வரத்தை யளிப்போம். விரும் பிய அதைநீ சொல்லுவாயாக என்று திருவாய்மலர்ந்தருள அம் முனிவரும் மிக்க நெருப்பிலே பட்டமெழுகைப் போல அன்பினால் மனமுருகி விழிகளிலிருந்து துளிக்கின்ற நீரா னது யாறுபோலப் பெருகி வழியும்படி கும்பிட்டுக் கீழ் வரு வனவற்றைச் சொல்லத் தொடங்கினார்.

வீறு—தனிமை; பெருமை. சாலுதல்—நிறைதல். '**கொந்து**' என்பது கொத்தை யுணர்த்துவதாய் ஈண்டு மிகுதியை உணர நின்றது. '**துளி**' என்பது ஈண்டு ஒழுகு தலை யுணர நின்றது.

ஐயநீ புவனத் தலகில்பல் லுயிர்க்கு மறிவுமா யவ் வுயிர்க் குயிராய், வெய்யவல் வினையா யவ்வினைப் பய னாய் மேவினை நான்பெற விரும்பும், பொய்யினல் வரங் கள் கேளெனப் புகன்ருய் போதமில் புன்மையேன் புரி யுஞ். செய்கையுன் செயலே யன்றியெற் குளதோ திருவு ளத் துலகெலாந் தெரிந்தோய். (26)

திருவுள்ளத்திலே உலக மெல்லாவற்றையுந் தானாக (பொதுவாகவுஞ் சிறப்பாகவும்) அறிந்தவரான சுவாமியே தேவரீர் உலக மெல்லாவற்றுள்ளேயு மிருக்கின்ற அள வில்லாத பலவகையான சீவர்களுக்கு முரிய அறிவாகவும் அச் சீவர்களுக் கெல்லா மாதார மான சீவனாகவும் கொடிய வன்மையான வினைகளாகவும் அவ்வினைகளின் இன்பதுன் பங்களாகிய பயன்க ளாகவும் ஆயினீர் அடியேன் பெற விரும்புகின்ற மெய்ம்மை யான நல்ல வரங்களைக் கேட்பா யாக என்று இனிமையாக மொழிந்தருளினீர் அறிவில்லா எளியேன் செய்யும் படியான செயல்களெல்லாம் தேவரீ ருடைய செயல்களே யல்லாமல் அச்செயல்கள் என் ஆற்ற லாற் செய்தவை களாகுமா?

புகலுதல்—இனிமையையாகக் கூறல்.

சிதாபாசர்களாகிய சீவர்கட்கு அதிட்டானமான கூடத்த பிரமத்தையன்றி அறிதல் கூடாமையால் "**பல்லுயிர்க்கு மறிவுமாய்**" எனவும் அதிட்டானமாகிய கூடத்தப் பிரமத்தை விட்டுச்சிதாபாசர்களாகிய சீவர்கட்கு நிலை பேறின்மையால் "**உயிர்க்குயிராய்**" எனவுங் கூறியருளி னர். '**உயிர்கள்**' என்றது சிதாபாசர்களையேயாம். இவ் வாறுரைப்பர்; வேதாந்த சித்தாந்த மரபுடையார்.

அறிவிக்க அறிகின்ற ஆன்மாக்களாகிய சீவர்கட்கு அறிவிக்குமிறைவனில்லாதிருப்பின் அறிதல் கூடாமையின் "**பல்லுயிர்க்கு மறிவுமாய்**" எனவும் உடம்பு இயங்குதற்கு உயிர்கள் போல உயிர்களியங்குவதற்கு இறைவனுள்ளிருந் தியக்குதலால் '**உயிர்க்குயிராய்**' எனவுங் கூறியருளினர். இவ்வாறுரைப்பர் சைவ சித்தாந்த மரபுடையார்.

மயக்கமுண்டான விடத்தில் பழுதையிற்றேன்றும் பாம்பு பழுதையை விட்டு வேருக இல்லாதது போல அதிட்டமான சிவத்தை விட்டு ஆரோபமான வினைகளும் அவற்றின் பயன்களும் வேருக இல்லாமையால் "**வினையாய் அவ்வினைப் பயனும் மேவினை**" என்றருளினர். என்பர் முன்மரபினர்.

"இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து அவ்வப்பொருள்களாகத் தோன்றுதலாலும் அவனையின்றி யெப்பொருளுமியங்காவாகையாலும் "**வினையாய் அவ் வினைப்பயனும்**' என்றருளினர் என்பர் சைவசித்தாந்த மரபினர்.

எனப்பல புகன்று பின்னரு முனிவ னிறைவனை நோக்கியான் சாபந், தனைச்சொல்லி லெனக்குத் தவ மிகச் சாபத் தொழிலய லோர்க்குமா தவங்க ளனைத்து மன்றகல வரமரு ளெனவாங் கவன்றனக் கவ்வர மருளி, நினைப்புறு மன்ப ரிதயபுண் டரிகத் தமளியி னிமலனு மகன்ருன். (27)

இவ்வாறு பலபடியாகச் சொல்லி மறுபடியும் அத்துருவாச முனிவர் நந் தலைவ ராகிய சிவபெருமானைப் பார்த்து அடியேன் பிறர்க்குச் சாபமிட்டால் அடியேனுக்கு அச்சாபத் தினுலே தவம் மிகும்படி யாகவும் மற்றையவர்கள் சாப மிட்டால் அவர்களுக்குச் சாபமிடுதலால் முன்னிருக்கும் தவமுழுதும் அழியும் படியாகவும் வரத்தைக் கொடுத்தருளல் வேண்டுமென்று சொல்ல அப்பொழுது அத்துருவாச முனிவருக்கு அவர் விரும்பிய அவ்வரத்தை யீந்து எப்பொழுதும் நினைக்கின்ற அடியவர்களுடைய திருவுள்ளத் தாமரை மலராகிய அணையிலே அவர்கள் நினைக்கின்ற வடிவத்துடன் தங்குகின்ற மலரகிதராகிய சிவபெருமானும் அங்கே தங்குவதற்கு மறைந்தருளினர்.

புண்டரிகம்—தாமரை. அமளி—அணை; படுக்கை. அகலுதல் என்பது ஈண்டு மறைதலை யுணர்த்திற்று.

கறைமிடற் றமல னவ்வர மளிப்பக் காமமே முதலிய வாறு, மிறை தவிர்த் துயர்ந்த முனிவரன் விரத மிக்குற மனுவொரா யிரத்தி, னிறுதியி னளவும் பாரிசாத தவனத் திறையவன் றிருவுள முவப்ப, மறையின் மந் திரத் தான் முறைமுறை பரவி வாசமா யவ்வயின் வசித்தான்.
(28)

நஞ்சுக் கறையை யுடைய திருக்கழுத் துடையவரான நிர்மலச் சிவபெருமான் அம்முனிவர் கேட்ட அவ்வரத்தை யீயவும் காம முதலாகவுள்ள ஆறு பகைகளேயும் நீக்குதலா லுயர்வுடையவரான அம்முனிசிரேட்டர் விரதங்களே மிகுதியாகப் பொருந்தும்படி செய்து ஆயிரம் மன்வந்தர முடியுமளவும் அந்தப் பாரி சாத வனத்துத் தலைவராகிய சிவபெருமான் திருவுள்ளம் மகிழும் படியாக வேதங்களின் மந்திரங்களாலே பலமுறை யாகத் துதித்து அவ்வனத்தையே உறை விடமாகக்கொண்டு அவ்வனத்திலேயே உறைந்தார்.

மிறை—பகை. 'மனு' என்பது மனுவின் ஆயுளே யுணர்த்துகின்றது. ஆயிரமான மனுக்களின் ஆயுள்வரையி லும் என்றபடியாம்.

அரும்பெறற் றவத்தின் மேன்மையாற் றருக்கிப் பின் னரம் முனிவெகுண் டலர்மே, லிருந்தவன் றிருமா லிந்திர னமர ரெண்டிசைப் பாலரிங் கிவரைப், பொருந்துமோர் திரண மெனநனி யிகழ்ந்து போதனுக் கலகிலாப் புவி யுட், டிருந்துபூ சனையின் ருகவென் றுடன்று தீத்தகு சாபத்தை விளேத்தான். (29)

பெறுதற்கரிய தவத்தின் பயனுகந் பெற்ற வரத்தினுலே செருக்கையடைந்து பின்னர் அந்தத் துருவாச முனிவர் சினந்து செந்தாமரை மலர் மேலே தங்கியிருக்கின்ற பிரம தேவன், திருமால், இந்திரன், மற்றைய தேவர்கள், எட்டுத் திக்குப்பாலகர்கள் இவர்களெல்லாரையும் கீழே கிடக்கின்ற துரும்பைப்போலக் கருதி மிகவும் இகழ்ச்சி

செய்து தாமரை மலரிலே தங்குகின்ற அம்பிரம தேவனுக்கு விரிந்த பூவுலகத்திலே திருத்த மானபூசை யில்லாமற் போகட்டும் என்று வெகுட்சி கொண்டு கொடிய தன்மை யுடைய சாபத்தை யிட்டார்.

வெகுண்டு—கோபித்து. (சாபமிடுதற்குக் காரண மிங்குக் கூறப்படவில்லை.) 'திருந்து' என்பது பூசைக்கேற்ற அடை.

அன்றவ னிழைத்த சாபமுற் றதனு லம்புயத் தவன் றனக் கின்னம், பொன்றலில் புவனத் தவரெலாம் பரிவிற் பூசனை யாற்றிடார் புவிமேன், மன்றலங் கமலப் புதுமல ரமளி வானவன் கோயிலு மில்லை, வென்றுதம் புலனை யரனருட் பெறுவோர் வெறுப்புறிற் கெடாதவ ருளரோ. *(30)*

அன்றைக்கு அத்துருவாச முனிவரிட்ட சாபத்தை யடைந்ததினாலே, தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவனுக்கு இதுவரையிலும், அழியும் வரை நிலை பெறுகின்ற பூவுலகத்தார்கள் எல்லாரும் அன்புடன் பூசையைச் செய்ய மாட்டார்கள். (அதுவே யுமன்றிப்) பூவுலகத்திலே மணந்தங்கிய தாமரைமலர் வாசனாகிய அப்பிரம தேவனை நிலைநாட்டிப் பூசிக்கும் கோயிலுமில்லை. (ஆதலால்) ஐம்புலன்களிலும் மனஞ்செல்லாமலடக்குதலாகிய வெற்றியைப் பெற்று சிவபெருமானுடைய அருளைப் பெறுகின்ற சிவனடியார்கள் வெறுத்தால் கெடாதவர்களு மிருக்கின்றார்களா (இலலை)

மிடையிருள் சீத்துத் தெறுகதிர் பரப்பும் வெய்யவா னிரவிமண் டிலமு, மிடர்மிக நடுக்குற் றிவன்றவத் தழலா லெய்த்திடு மிந்திரனிமையோர், படரில்பண் ணவர்கள் பாதலத் துரகர் திசைதொறு மிவன்பெயர் பகரி, லுட லும்வெம் பயத்தாற் கரப்பர்பேய் பூதமீங்கிவ னேக்குமு னொளிக்கும், (31)

அடர்ந்த இருளைப் போக்கிச் சுடும்படியான கிரணங்களை விரிக்கின்றதாகிய வானத்திலே செல்லுகின்ற வெப்பமான சூரிய மண்டிலமும் துன்பம் மிகும்படியாக நடுநடுங்கி இத்துருவாச முனிவருடைய தவமாகிய நெருப்பினுலே சோர்வையடையும். தேவேந்திரன், துன்பமில்லாத தேவர்கள், பாதாள உலகத்திலேயுள்ள நாகர்கள் ஆகிய இவர்கள் இம்முனிவர் பெயரைச் சொன்னுல் வருத்தும் படியான கொடிய அச்சத்தினுலே திக்குகள் தோறும் போய் மறைவார்க்ள். பேய்கள்; பூதங்கள், எல்லாம் இவர் பார்க்கு முன்னர் இவரைக் கண்ட மட்டிலேயே ஓடி ஒளிந்து விடும்.

மிடைதல்=நெருங்குதல். சீத்தல்=செதுக்கல். அது போக்குதலைக் குறிப்பித்து நிற்கின்றது. தெறுதல்=சுடுதல் இரவி=ஞாயிறு. (சூரியன்) உடலுதல்=கோபித்தல். அது வருத்துதலை யுணர நிற்கின்றது. உரகர்=நாகர். கரத்தல்= மறைதல்.

ஏலவார் குழலி பாகனுக் காளா முனிவர னின்னவா றொழுகுங், காலையி லொருநாண் மயனெனுந் தெய்வ கம்மியன் றனைவர வழைத்து, மாலிரு ளரக்கும் விளங்கொளிப் பசும்பொ னுனவ மணிநிரை குயிற்றி, யாலமுண்டிருண்ட கண்டனுக் கினிதி னுலய மியற்றென வறைந்தான். (32)

மயிர்ச்சாந்து பூசப்பெற்ற நீண்ட கூந்தலையுடைய வுமை யம்மையாரை ஓர் பாகத்திலே கொண்டருளிய சிவபெருமானுக் கடிமையாக இருக்கின்ற முனிசிரேட்டராகிய துருவாசர் இப்படி ஒழுகுகின்ற பொழுது ஒருநாள் மயன் என்ற தெய்வத் தச்சனை வரும்படி செய்து, பொருள்களை யறியாதபடி செய்கின்ற பெரிய கண்ணிருளைப் போக்கும் படியான விளக்கமான வொளியையுடைய பசும் பொன்னுலே நவமணிகளை வரிசையாகப் பதித்து நஞ்சைப் பருகியதாலிருணிறம் படைத்த திருக்கழுத்தை யுடைய சிவபெருமானுக்குக் கோயிலை அமைப்பாயாக வென அழுத்தமாகச் சொன்னுர்.

ஏலம்=மயிர்ச்சாந்து, வார்=நீண்ட. கம்மியன்= தச்சன். ஆலம்=விடம். அறைதல்=வற்புறுத்திக்கூறல்.

வேறு

ஆயசொற் றலைமேற் கொண்டாங் கமரர்கம் மியனு மோங்கி
மீயுயர் பாரி சாத வனநாப்பண் விமலன் வைகப்
பாய்கதிர்ப் பரிதி கோடி யுதயமால் வரையின் பாங்கர்ச்
சேயொளி விரிக்கு மாபோற் செம்பொனின் விமானஞ் செய்தான். (33)

அழகிய அந்தச் சொல்லைத் தலைமேலே தாங்கும் பொருள்போல வுயர்வாகக் கொண்டு தெய்வத் தச்சனும் வளர்ந்து மேலே யுயர்ந்த பாரிசாத வனத்தின் நடுவே மலரகிதனாகிய சிவபெருமான், உறைவதற்கு விரிந்த கிரணங்களையுடைய பல கோடிக்கணக்கான சூரியர்கள் பெரிய உதயகிரியின் பக்கங்களிலே செவ்வொளியை விரித் தாற் போலக் கிரணங்களை விரித்து விளங்கும்படி செம் பொன்னாலே ஒரு விமானத்தை யமைத்தான்.

ஆய்=அழகு. சிவபெருமானுக்கு "ஆலய மியற்றுக" என்றமையால் அஃது ஆய சொல்லாயிற்று. இனி அகரச் சுட்டு அந்த எனத்திரிதல் போல 'ஆய' எனத்திரிந்து, சுட்டி நின்றது என்னலுமாகும். மீ=மேல்.

விண்ணுறும் பதவி நீங்கி மேற்கதி பெறுதல் வேண்டிக்
கண்ணகன் புவியின் மேலாங் கற்பகப் பொதும்பர் மேவித்
தண்ணில வெறிக்கு நாளுங் கோட்களுந் தயங்கு மாபோன்
மண்ணிய வயிரத் திண்கான் மண்டபம் பலவுஞ் செய்தான். (34)

குளிர்ந்த நிலவை வீசுகின்ற நட்சத்திரங்களும் நவக் கிரகங்களும் மேலுலகங்களாகிய பதவிகளை விட்டு உயர்

வான முத்தி நிலையை யடைதல் கருதி, இடமகன்ற பூவுல கிலே உயர்ந்த தலமாகிய பாரிசாதவனத்தை யடைந்து (அங்கெழுந்தருளியிருக்கும் சிவபெருமானலயத்தில்) ஆலய உறுப்புக்களாக விளங்குகின்றன என்று சொல்லும்படி பல வகை மணிகளமைய, மாசறக் கடைந்து எடுக்கப்பட்ட திண் ணிய வயிர மணிக்கால் நிறுத்திய பல மண்டபங்களைச் செய்தான்.

கற்பகப் பொதும்பர்=பாரிசாதவனம். பொதும்பர்= சோலை. நாள்=நட்சத்திரம். கோள்=கிரகங்கள். மண் ணிய=கழுவிய; சாணைபிடித்து மாசகற்றிய.

மின்றிரண் டிலங்க வண்ட கோளகை மேல தாகத்
துன்றிய சடிலங் காட்டிச் சுவணமால் வரைபோன் மண்மேல்
வன்றிறற் சூல மேந்தி யிறுதியின் மாதோர் பாக
னின்றன னென்னத் தோன்று நிரைமணிச் சிகரஞ் செய்தான் (35)

செவ்வொளிதிரண்டு விளங்குதலால் நெருங்கிய சடா பாரத்தைக் கருதும்படிசெய்து, பொன்வடிவான பெரிய மேருமலைபோல அண்டகோளங்களுக் கெல்லாமேலோங்கி நிற்றலால் மிக்க வலிமையையுடைய சூலப்படையைக் கையிற் பிடித்து அழிவற்ற உமையொரு பாகராகிய சிவபெருமான் பூமியிலே (நிமிர்ந்து) நின்றார் என்று கருதும்படி தோன்று கின்றவரிசையாக மணிகளையழுத்திய பொற் கோபுரத்தை இயற்றினன்.

ஒளிதிரண்டு சாய்தல், சடைபோலவும் செம்பொன் மேரு மலைபோல நிமிர்ந்து நிற்றல் சிவபெருமான் சூல மேந்தி நிமிர்ந்து நிற்றல் போலவும். இராஜ கோபுரம் தோன்றும்படி வரிசையாக மணிகளை யழுத்திப் பொன்னு லமைத்தன னென்பதாம். 'இறுதியில்' என்பதற்கு இறுதிக் காலத்தில எனினுமாகும்.

படிகளே ழிணையு மோலப் பரவையே ழிணையுஞ் சூழ்ந்த
தடநெடுங் கிரிபோ னீண்டு தாரகை யுலகின் காறு,

மிடையும்வெண் கொடிமீ தோங்க வியன்மணித் திரளின் கற்றை
புடைதொறுந் தயங்கப் பைம்பொற் புரிசையோ ரேழுஞ் செய்தான். (36)

ஏழு பூவுலகங்களையும், முழங்குகின்ற ஏழு கடல்களையும் சுற்றி விளங்குகின்ற விரிந்த நீண்ட சக்கர வாளமலைபோல உயர்ந்து நட்சத்திர மண்டலம் வரையிலும் நெருங்கி விளங்கும் படியும் வெண்மையான கொடிகள் மேலே யோங்கி விளங்கும் படியும், பெரிய மணிக்குவியலின் கூட்டமானது இடங்கள் தோறும் விளங்கும்படியமைத்து பசும்பொன் மயமான ஏழுமதில்களையும் செய்தான்.

பூவுலகம் ஏழுபிரிவாக விளங்குதலால் "படி ஏழினை யும்" என்றனர். உப்புக்கடல் பாற்கடல் முதலிய வாகக்கடல் களும் ஏழுபிரிவாக இருத்தலால் "பரவை ஏழினையும்" என்றனர். கடல் விரிந்து கிடத்தலால் "பரவை" எனப் பட்டது. பூமி கடலுக்கு இடையிடையே படிந்து (பொருந் திக்) கிடத்தலால் 'படி' எனப்பட்டது. அல்லது உயிர்கள் நல்வினை தீவினைகளைச் செய்து மற்றைய வுலகங்கட்குச் செல்லுதற்கிடமாக இருத்தலால் 'படி' எனப்பட்ட தெனினு மாம். 'ஓராழி வெய்யவன் சூழுல கேழுவந்து" (திருவரங் கத்தந்தாதி) என்பது முதலியவற்ருற் படி, ஏழாதல் காண்க.

ஆவரணம் ஏழையு நீக்கிற், சிவதரிசனங் கிட்டும் என் பதற்காக ஏழுமதில்கள் அமைத்தனர் என்பதாம்.

பவளமு முழுமா ணிக்கப் பன்மணித் திரளு மேன்மே
லவிரொளி பரப்ப நன்பொற் குறடும்வே திகையு மாக்கிக்
குவலயத் திழியும் பொற்பூங் கற்பகக் குழைக டோறுந்
தவழ்பசுங் குழவித் தென்ற றயங்குசா ளரமுஞ் செய்தான். (37)

பவள மணிகளும் பெரிய பலவகையான மாணிக்க மணிகளின் கூட்டங்களும் மேன்மேலாக விட்டு விளங்கு

கின்ற ஒளியை நாலுபக்கமும் விரிக்கும்படி பதித்து மாசற்ற பொன்னுலே குறடுகளும் வேதிகைகளுமாகிய வற்றைச் செய்வ தோடு பூவுலகத்திலே வந்து சேர்ந்த பொன்மயமான பூக்களையுடைய பாரிசாதத்தருவின் தழை களெல்லாவற்றிலும் ஊர்ந்து திரிகின்ற இளந்தென்றற் காற்ருனது உள்ளே வருவதற்குரிய "பல் கணிகளையும்" அம்மதில்களிலே அமையும்படி செய்தான்.

குறடு என்பது சகதி, கண்டம், பட்டியல் என்பன வற்றின் சேர்க்கையைக் குறிக்கும். வேதிகை=குறட்டிற்கு மேலே யமைந்த திண்ணை.

இப்பரி சியற்றி யீசற் காலய மிதனுள் வெவ்வே
ருெப்பிலேங் கரன்வேள் கால வயிரவ ஞெடுதண் டீச.
னெப்புவி களுக்குங் கண்ணு மிரவியோ டங்கத் தேவர்
செப்பிய திசையின் பால ரிவர்க்குமா லயங்கள்
செய்தான். (38)

பாரி சாதவனப் பெருமாஞகிய சிவபெருமானுக்குக் கோயிலை, மேற் கூறியபடி செய்து இக்கோயிலிலுள்ளே தனித்தனியாக இணையின்றியவராகிய ஐந்து கைகளை யுடைய விநாயகர், முருகக்கடவுள், காலவயிரவக் கடவுள், சண்டீசுரர், பூவுலகிலுள்ள எல்லாருக்கும் பொருள்களை விளக்குதலால் கண்ணுக விளங்குகின்ற சூரியன், திக்குப் பாலகர்கள் என்று சொல்லப்படுகின்ற தேவர்கள் முதலிய பரிவார தேவதைகளுக்கும் ஆலயங்களைச் செய்தான்.

'அங்கு' என்பது அசை. ஒரு ஓடு என்பன எண்ணுப் பொருளில் வந்தன.

அயர்வறு பசும்பொற் கோயி லின்னன வமரர் நாட்டின்
மயன்வகுத் தமைத்து முன்சொன் மாதவனுணை
யான்மேல்
வியன்மறை விதியான் முன்சொல் விநாயக ஞதி யாகப்
பயிலுறு தேவர்க் கெல்லாம் பலவிதப் பதிட்டை
செய்தான். (39)

ஒரு சோர்வுமில்லாத பசும்பொன் வடிவான கோயிலை மேலே சொல்லியபடி தேவர் நாட்டுக் கம்மியனுகிய **மயன்** என்பவன் பல பிரிவுபடுத்திச் செய்து, முன்னே, கோயில் களை யமைக்க வென்று சொல்லிய மாதவராகிய துருவாச முனிவராணைப் படியும் பின்னர் விரிந்த வேதாகம விதிப்படி யும் முன்னே கூறப்பட்ட விநாயகர் முதலியவர்களாக நீங்காதென்றுந் தங்குகின்ற தேவர்கள் எல்லா ருக்கும் பலவிதமான பிரதிஷ்டைகளையும் செய்தான்.

அயர்வு=சோர்வு; மறதி. அயர்விஞலே ஒரு குறைவு மில்லாது அமைக்கப்பட்ட பசும் பொற்கோயில் என்பார்,

''*அயர்வறு பசும் பொற் கோயில்*'' என்றருளினர். பயிலுறு=விடாது என்றும் தங்குகின்ற.

'*மறை*' யென்பது ஆகமத்தையும் தழுவ நின்றது பிரதிஷ்டை, யந்திரப்பிரதிஷ்டை மந்திரப் பிரதிஷ்டை முதலிய பலவாக இருத்தலின் ''*பிரதிஷ்டை பலவும்*'' என்றனர். பலதெய்வங்களையும் மானசீகமாகக் கர்ப்பக் கிரகத்தைக் கூறுபடுத்தி அமைத்தலு மதன்கண்ணொரு பிரதிஷ்டையாக அடங்கும்.

ஏற்றுமத் தேவர்க் கெல்லா மித்திறம் பதிட்டை செய்த
மாற்றரும் புகழ்மைத் தெய்வ மயன்றனை முனிவ னேக்கி
மேற்றவத் தயனுங் காண வியக்குஞ்சிற் சபையொன் றின்னே
நாற்றிசை முழுதும் போற்ற நடேசனுக் கியற்று கென்ருன். (40)

நிலை நாட்டக்கூடிய அந்த விநாயகர் முதலிய தெய்வங் களுக்கெல்லாம் மேலே சொல்லியபடி பிரதிட்டையைச் செய்த நீக்க முடியாத புகழுக்குரிய நல்லதன்மைவாய்ந்த மயனைத் துருவாச முனிவர் பார்த்து நடேசப் பெருமானுக் குப் பழந்தவத்தையுடைய (படைததலில் வல்ல) பிரமனுங் கண்டு அதிசயிக்கும் படியான ஒரு சிற்சபையை இப் பொழுதே நான்கு திசையிலுள்ள எல்லாரும் துதிக்கும்படி இயற்றுக என்று கூறினர்.

"மேற்றவம்" என்பதற்கு மேலானதவம் என்றுரைப்பினுமாகும். வியத்தல்—இறும்பூதுறல். பிரதிட்டை—சடங்குகள்.

வேறு

அன்ன வாசகங் கேட்டலு மமரர்கம் மியனதற் கியைந்தரி தாய, மன்னு மாதவ முனிவரன் மகிழ்வுற மலரயனெனச்செய்வான் மதித்து, மின்னி லங்கிய வயிரநற் றூணிரைத் தொளிர்தர மேவிய நான்கு, பன்ம ணிக்கொடு முடியுறப் பசும்பொனுற் பலவிதழ் நாற்பதும் வனைந்து. (41)

அம் முனிவர் சொல்லியருளிய திரு மொழியைச் செவியாரக் கேட்டவுடன் தெய்வத் தச்சனுகிய மயன் அவர் திருமொழிப்படி செய்வதற் கொருப்பட்டு, செய்தற்கரியதும் நிலைபெற்றதும் சிறந்ததுமாகிய தவத்தையுடைய துருவாச முனிவர் திருவுள்ளம் மகிழ்ச்சியடையும்படி, தாமரை மலரிலே எழுந்தருளி யிருக்கின்ற பிரமதேவன் போலச் செய்வதற் கெண்ணி ஒளி விளங்குகின்ற நலல வயிரமணித் தூண்களை வரிசையாக நிறுத்தி அவற்றின் மேலே விளங்கும்படி அமையப்பல மணிக்கற்கலாலே நான்கு சிகரங்களை அமைத்து அவற்றைச் சுற்றிப்பசும் பொன்னுலே நாற்பதாகிய பல இதழ்களையும் அழகுபட அமைதது.

ஒளிர்தர மேவிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம். சிகரம் என்றது போதிகையை என்க. கொடுமுடி என்று பாவிற்கூறியது மதனையே.

எய்த ரும்பிரத் தாரத்ர யமுமெழி லிரணிய கருப்பமு மியற்றிப், பைய ராமணிக் கற்றைகான் றெளிதரும் படிகொள்வே திகைமுறை புனைந்து, துய்ய செஞ்சுடர்த் தம்பமு நிறுவியோர் சூழலிற் பலகதி ரணைத்துங், கையினுலயன் வகுப்பதொத் திலகிய கனகமன் றமுமுளதாக்கி. (42)

அடைதற்கரிய பிரஸ்தாரம் மூன்றும், உயர்வாகக் கூறப்படுகிற பொன்மயமான கர்ப்பக்கிரகமும் ஆகிய அவற்றைச் செய்து அமைத்து படத்துடன்கூடிய நாகரத்தினத் தொகுதிகள் ஒளியைவிட்டு விளங்கும்படி கொண்ட வேதிகையை நல்ல முறைப்படி யமைத்து, மாசற்ற செவ்வொளியை விடுகின்ற பொற்கொடி மரத்தையும், நிறுத்தி, ஓர்பக்கத்தில் பல சூரியர்களைக்கொண்டு பிரமன் தன்கை வன்மையாலே செய்ததைப் போலவிளங்கும்படி கனக சபையையு முண்டாகச் செய்து

பிரஸ்தாரம்—மேற்கோப்பு' '*பிரஸ்தரம்*' என்பது பிரஸ்தாரம் என நீண்டது. அஃது உத்தரம், கபோதம், வியாழம் என மூன்ருக அமைதலின் திரயம் எனப்பட்டது. திரயம்—மூன்று. வேதிகை—பீடம்.

ஆன பன்மணி துவன்றிய கனகமா வம்பலத் தலகில்பே ரின்ப, ஞான நாடகம் பயின்றிடு நடேச்சுரன் றனக்குநான் மறைவிதியதறைற், பேன வெண்டிரைப் பாற்கட லமளியி லறிதுயில் புரிதரு பெருமான். ருன்வணங்குறச் சபையினைப் பதிட்டிக்கு முறைப்படி யியற்றியத் தலத்தில். (43)

நுரையும் வெண்மையான அலையும் (நிறைந்த) திருப்பாற் கடலாகிய படுக்கையில்ல அறிதுயில் செய்கின்ற பெருமானுகிய திருமாலுங்கண்டு வணங்கும் படியாக பல மணிகள் நெருங்கி விளங்குகின்ற பெரிய அந்தந் பொன்னம்பலத்திலே அளவிடற்கரிய பேரின்பத்தையும் தத்துவஞானத்தையும் அளிக்கும்படியான திருக்கூத்தப் பெருமானை வேதவிதிப்படி நிலைகொள்ளச் செய்வதற்குரிய முறைப்படி அந்தச்சபையை யமைத்து.

பரவு மெந்திர ராசனை விதிமுறை பதிட்டைசெய் தன்னத னுப்பண், விரவு மந்திர ராசனை யமைத்தவனடுவுற விதியினை நோக்கி, யுரைகொள் காமரா சியவெந் திரம்வகுத் துருப்பெறு முயிர்தொரு மொன்ருய்த், திரிவி

லாதுறை முழுமுதற் கியைந்ததோர் சிற்சபை யின்ன ணஞ் செய்தான். (44)

உயர்வாகக் கொண்டு எல்லாருந் துதிக்கும்படியான பஞ்சாக்கர யந்திரத்தை நிலைநாட்டி அதனடுவே மந்திர ராஜனாகிய பஞ்சாக்கரத்தை நிலைநிறுத்தி அவற்றின் நடுவே சாத்திர விதியை நன்றாகக் கருதிப் புகழமைந்த காமராசியம் என்ற எந்திரத்தை யமைத்து, உடமபைப் பெறுதற்குரிய உயிர்கள் முழுதும் ஒரே பொருளாக தவறாமல் உறைகின்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்குரிமையான சிற் சபை ஒன்றனை மேற்கூறியபடி செய்தான்.

தேவர் கம்மிய னியற்றுமம் முழுமணிச் சபையினைத் தெரிவுற நோக்கிப், பாவ வல்வினை போக்கிய முனிவரன் மகிழ்தலு மயனடி பணிந்து, சீவ நாயக னாடே சனுக் குருச் செய்திட வேண்டுமென் றிசையப்பப், பூவி னான் முக னனையமா முனிவரன் மயன்றனைப் பார்த்திது புகல் வான், (45)

தன்பாலும் தன்னை வந்தடைந்தவர் பாலு நிகழாமல் பாவமாகிய கொடிய வினைகளை போக்கிய துருவாச முனிவர் தேவலோகத் தச்சனாகிய மயன் முழு மணிகளை யமைத்துச் செய்த அந்தச் சபையை மனதிற்கு விளக்கமாகும்படி நன் றாகப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவும், அம்மயன் அம்முனி வர் திருவடிகளை வணங்கி, பசுபதியாகிய திருக்கூத்தப் பெருமானுக்கு (எல்லாரும் வணங்கும்படி) திருவுருவம் செய்தல் வேண்டும் என்று சொல்ல, தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற நான்கு முகங்களையுடைய பிரமனை யொத்த முனி சிரேட்டராகிய அத்துருவாசர் அத்தெய்வத் தச்சனைப் பார்த்துக் கீழ்வரும் விடயத்தைச் சொல்லத் தொடங்கினர்.

வரன் = சிரேட்டன்.

வேறு

பொருவரும் விதிநூல் விஞ்சையிற் றெரிந்த புலமை யோய் நன்றுநீ புகன்ருய், திருநடம் புரியு மீசனுக் குரு வம் வேண்டுநீ செய்யென வதுகேட், டுருகியா தரவான் மாண்டொழிற் றெய்வ கம்மிய னியற்றுவா னுவந்தா, னருவமா யுருவாய்ப் பல்லுயிர்க் குயிரா மவன்றனக் குருவம்யார் வகுப்பார். (46)

ஒப்பற்ற சிற்ப விதிநூல் வித்தையிலே நன்ருக அறிந்த அறிவை யுடையவனே நீ நன்ருகச் சொன்னுய். திருக்கூத்தைச் செய்தருளுகின்ற சிவபெருமானுக்கு அவர் செய்தருளுகின்ற திருக்கூத்தைக் காட்டுந் திருவுருவம் வேண்டியது இன்றியமையாததே யாகும். ஆதலால் நீயே செய்க எனறு அவர் சொல்ல, மாட்சியோடு சிற்பத் தொழில் செய்யவல்ல தெய்வத் தச்சனுகிய அவர் அம்முனிவர் செய்கவெனச் சொல்லிய அதனைக் கேட்டு அன்பினுலே மன முருகி அத்திருவுருவத்தைச் செய்வதற்கு விரும்பினுன். அருவமாகவும் உருவமாகவும் (அருவுருவ மாகவும்) பல உயிர்களுக்கெல்லாம் ஓருயிராகவும் விளங்கு கின்ற அச்சிவபெருமானுக்கு அத்தெய்வத் தச்சனைவிட வேறு யார் உருவத்தை யமைக்க வல்லவராவார்கள்.

'பல்லுயிர்க்குயிர்' என்றது அதிட்டான நிலையைக் குறித்தது என்க. இறைவன் எல்லா வுயிருஞ் சிற்றறி வுடையனவாகலானவற்றை யுடம்பாகக் கொண்டு அவற்றை யியக்குவித்தலின் "பல்லுயிர்க்குயிர்" என்ற னர் எனவுங் கூறலாம்,

சுடருமிழ் பருதி யாயிர கோடி யொருங்குறத் தோன்றிய தென்னப், படரொளி பரப்புங் கோடிமாற் றிலகு பசும்பொனுங் கிருபது துலாத்தான், முடிவில்பற் பலவா மிலக்கண முளதா முகுந்தனும் பிரமனு மங்க, ணடிமுடி யிவையென் றெளிதினிற் காண நடேசனுக் கோருரு வமைத்தான். (47)

ஒளியை வீசுகின்ற ஆயிரங்கோடி சூரியர்கள் ஒன்ருகக் கூடித் தோன்றிஞற் போல விரிகின்ற ஒளியை எங்கும் விரிக்கும்படியான கோடியளவான மாற்றையுடைய இரு பது துலாமளவுள்ள பசுமையான பொன்ஞலே, அளவிடற் கரிய மிகப் பலவான இலக்கணங்களமையத் திருமாலும் நான்முகனும் முன்னர்க் காஞமல் மயங்கிய அடியுமுடியு மிவையென்று அப்போது எளிதாகக் காணும்படி திருக்கூத் தப் பெருமானுக்கு அவன் திருக்கூத்தைக்காட்டும் ஒரு திரு வுருவத்தை யியற்றிஞன்.

துலாம் = ஐந்து வீசை கொண்ட அளவு.

இலக்கணம், சாமுத்திரிகா இலக்கணம்.

தொழுகுலத் துரவோன் மகிழ்வுற வமரர் கம்மியின் சோதன மயர்ந்து, விழைமறையாள ரருளிற்சக் கரப் ரத் தார்பூ ருவமுதல் விதியால், வழுவகல் வாத்து பூசனை முதலாம் விதானத்தி னலவண் வனைந்த, வெழுதரு மெழில்கொ ளத்திரு வுருவி னிறைவனைப் பதிட்டை செய் திப்பால். (48

பிராமண குலத்திலே பிறந்தவராகிய துருவாச முனி வர் திருவுளமகிழும்படி, தெய்வத் தச்சஞகிய மயன் பிம்ப சோதனஞ் செய்து விரும்பத்தக்க (நல்லொழுக்கம் வாய்ந்த நல்ல அருளோடு கூடிய வேதியர்களைக் கொண்டு சக்கர பிரஸ்தார பூருவ முதலாகவுள்ள விதிப்படி குற்றமில்லாத வாஸ்து சாந்தி முதலான விதானங்களிஞலே அங்கே செய்த எழுதிக் காட்ட முடியாத அழகைக் கொண்ட அந்த நடராஜ வடிவத்திலே (மூர்த்தத்தில்) திருக்கூத்தராகிய சிவபெருமானை நிலைநாட்டிப்பின்னர்

சக்கரப்பிரஸ்தாரம்—சக்கரத்தைப் படிய வைத்தல். பிம்பசோதனம்—செய்த வடிவத்தில் மறுவகற்றல். 'பூர் வம்' முதல் என்பன ஒரு பொருட் கிளவிகளாய் ஒரு பொரு

ளையே யுணர்த்தும் ஒரு பொருட்பன் மொழிகளாய் வழக்கு வழிப்பட்டு வழுவமைதியாயின. விதானம்—வகை.

ஐங்கரன் முதலாம் வானவர் சோமாக் கந்தனன்மற் றெவர்க்குமா முறையாற், பொங்கெழிற் படிவம் பலபல வகுத்துப் பதிட்டையும் புரிந்துபுங் கவற்குச், செங்கதி ராழி யொன்பது மிரந்த்ர மொன்பதுஞ் சிறப்பவொன் பதுகாற், றங்குமா மணித்தேர் மானிடப் பிரமா ணப்படி சமைத்தனன் பின்ன. (49)

ஐந்து கைகளையுடைய விநாயகப் பெருமான் முதலாகச் சோமாஸ்கந்தர் இறுதியாகவுள்ள பிற எல்லாத் தெய்வங் களுக்கும் பொருந்து முறைப்படி, அழகு பொங்கத்தக்க திரு வுருவங்கள் பலவற்றைச் செய்து அத்தெய்வங்களை அவ் வுருவங்களில் பிரதிஷ்டை செய்து, பாரிசாதவனே சுரர்க்குச் சூரியனைப் போன்ற சக்கரங்கள் ஒன்பதும் ஒன்பது இடை வெளிகளுஞ் சிறப்பாக அமையும்படியும் ஒன்பது கால்களில் தங்கும் பெரிய மணிகள் ஒலிக்கும்படியான தேர் ஒன்றை மானிடப் பிரமாணப்படி செய்தான் அதன்பின்னர்.

கால்=உருளை, இப்பொழுது சிற்பிகள் வைத்திருக்கும் முழக்கோல் மானிடப் பரிமாணக் கோலாகும். ஆனதால் மானுங்கோலென மரூஉவாக வழங்குதல் காண்க.

முராரிகே தனமு முறைமறைப் பிரமன் முதனிய தேவர்கே தனமும், பொராவருஞ் சமரிற் புறங்கொடுத் திரியப் போந்தது புவனகோ டிகளுஞ், சராசர முழுது மழியும்வே லையினுந் தனியுயிர்த் திடுவதித் தகைய, பரா வரு மிடபப் பதாகையொன் றியற்றி யின்னன பணி யெலா மயர்ந்தான். (50)

திருமாலின் கருடக் கொடியும் தேவருலகங்ளில் தங்கு கின்ற பிரமன் முதலிய தேவர்களின் அன்னக்கொடி முத லிய கொடிகளும் சண்டையிட வந்த போரிலே புறங்

கொடுத்து ஓடும்படி செய்து நிலைபெற்றதும், எல்லாப் புவனங்களும் சராசரப் பொருள்களனைத்தும் அழிகின்ற ஊழி முடிவிலும் அழியாமல் சீவித்துக்கொண்டிருப்பதுமாகிய பெருந்தகுதி வாய்ந்த புகழப்படுகின்ற ரிஷபம் எழுதிய ரிஷபக்கொடி யேற்றும் கொடிமரத்தையும் நாட்டி இவ்வாறு பல பணிகள் எல்லாவற்றையுஞ் செய்தான்.

முராரி—முரன் என்னுமசுரனைக் கொன்றவன்; திருமால். உறை—தங்குகின்ற. பொரா—பொர; சண்டையிட. கொடியுடையார் தோல்விகளைக் கொடிகளின் மேலேற்றிக் கூறல் மரபு. சிவபெருமான் என்று மழியாது நிலை பெறுதலின் அவர்கொடியும் அழியாது நிலைபெறுவதாயிற்று.

செயலரும் பதிட்டை விதியினிற் றவறு மற்றுள குற்றமுந் தீரப், பயின்மணிக் கோயி லியற்றியாங் கதனிற் றன்பெய ரிலிங்கமாப் பண்ணி, யியல்பெறப் புரிந்து பெருந்தவ னருளா லேடவிழ் மலரய னெனலா, மயன் முக மலரத் தவத்துரு வாசன் விடைதர வானுல கடைந்தான்.

செய்தற் கருமையான பிரதிஷ்டைக்குரிய விதிகளிலின் படி செய்யும்பொழு தேற்படுந் தவறுகளும், வேறு குற்றங்களும் நீங்குவதற்கு ஒரு மணிகளிழைத்த கோயிலை யமைத்து அக்கோயிலிலே தன் பெயரையுடைய சிவலிங்கமொன்று பொருந்தி விளங்கும்படி செய்து இப்படிப் பெரிய தவத்தையுடைய துருவாச முனிவரதருளாலே எல்லாவற்றையும் நல்ல தன்மைகள் பொருந்தச் செய்து, இதழ்கள் விரிந்த தாமரை மலரின் மேலெழுந்தருளியிருக்கின்ற பிரமதேவன் என்று சொல்லும்படி விளங்குகின்ற அம்மயனது முகமலரும்படி அந்தத் தவமுடைய துருவாச முனிவர் விடை கொடுக்க (அதனைப் பெற்று அவன்) தேவருலகத்தை யடைந்தான்.

இம்முறை மயன்செ யாலய மதனுட் டெய்வவிக் கிரகமற் றெவையு, மெய்ம்மையா யகிலப்பல்லுரு வனைத்

தும் வியாபியாம் பரிசினல் வியாபித், தம்முறை தேவ ராய்மகிழ்ந் தமர்ந்தா னருந்தவ முனிவனுக் கன்பான், மும்மலந் தவிர்த்து மேலனுக் கிரகம் பண்ணுவான் முழு முதற் கடவுள், (52)

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் இந்தப்படி மயன் செய்தமைத்த கோயிலின் கண்ணே அங்குள்ள தெய்வ விக்கிரக மெல்லாவற்றுள்ளும், உண்மையாக எங்குமுள்ள பல வடிவங்களிலும் வியாபித்திருக்குந் தன்மைப்படி வியாபித்து அவ்வியாபித்த முறையினல் அந்தத் தேவர்களாகவும் (தனித்தும்) துருவாச முனிவாசருக்கு அருளினலே மூன்று மலங்களேயும் போக்கி தன்னேடிரண்டறக் கலந்தின்புருவாக அமரும்படி மேலான அநுக்கிரகத்தைச் செய்யும்பொருட்டு மகிழ்ச்சியுடன் தங்கினர்.

முழுமுதல் = தனக்கொரு முதலில்லாமல் தானே எல்லா வற்றிற்கு முதலாதல். இனி ஒவ்வொருவகைக்கு ஒவ்வொருவர் முதலாதல்போல இன்றி எல்லாவற்றிற்கு முதலாதலின் "முழுமுதல்" எனப்பட்டனர்; பாரிசாதவனத் திறைவர் எனலுமாகும்.

எல்லையில் பெரும்பே றெமக்கருள் பரம னின்னண முறையு நாட் பரவிற், செல்கதி யளிக்கும் பாரிசா தவனத் தெம்பிரான் றிருவுளஞ்சிறப்ப, நல்லறந் துதிக்கும் வசிட்டனே முதலா மிருடிய ரால்விழா நடத்த, மல் லன்மா தவத்தா னுயர்துரு வாச வரமுனி முயன்றனன் மகிழ்வால். (53)

அளவில்லாத பெரிய பேற்றினே எங்கட்கருளுகின்ற பரம்பொருளான சிவபெருமான் இவ்வாறு எழுந்தருளி யிருக்கின்ற நாளில், துதித்தால் துதிப்பவருக்குச் சென்றடைந்துய்யும் படியான வீடு பேற்றைத்தருகின்ற பாரிசாத வனப் பெருமானகிய எம்பெருமானுடைய திருவுள்ள மகிழும்படி, நல்லறக்கடவுளே புகழும்படியான (ஒழுக்கத்

திற்றவருத) வசிட்டமுனிவர் முதலிய முனிசிரேட்டர்களைக் கொண்டு, துருவாசமுனிவர் அப்பாரிசாதவனப் பெருமானுக்குத் திருவிழா நடத்துவதற்கு மகிழ்ச்சியுடன் முயற்சித்தனர்.

சித்திரை மதியில் வளர்பிறைத் திதியின் மான்றலை நாளெனுந் தினத்தி, லுத்தம வமையத் தங்குரார்ப் பணபூ ருவமுத லாப்புரிந் துவப்பாய், முத்தல மதிக்கு நான்மறை முழங்கத் தேவதுந் துபிமுறை முழங்க, வெத் தரா தலமும் புகழ்தரு வனேசற் கெழில்பெற்ற விடைக் கொடி யேற்றி. (54)

சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பக்கத்தில் (பூர்வபக்கத்தில்) மிருகசீர்ஷ நட்சத்திரத்தன்று நல்ல வேளையில் அங்குரார்ப் பண பூர்வமாகச் செய்யப்படும் கருமம் எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன்செய்து மூவுலகமும் உயர்வாகக் கருதுகின்ற நான்கு வேதங்களும் முழங்கவும், முறைப்படி தேவதுந்துபி வாத்தியமுழங்கவும் எல்லாப் பூவுலகத்தாரும் புகழும்படியான பாரிசாத வனேசுரராகிய சிவபெருமானுக்கு எழுச்சி பொருந்த இடபக்கொடியை ஏற்றி,

மான்றலை நாள் = மிருகசீரிஷ நட்சத்திரம். தராதலம் = பூவுலகம். அஃதேழு பிரிவாக வுள்ளதாதலின் ஏழ்தராதலம் என்றனர். தராதலம் என்பது ஆகுபெயராகநின்று வாழ்வாரை யுணர்த்திற்று, எழில் = எழுச்சி.

விண்டொடுந் தரள வெண்குடை தயங்க விடை நெடுந் துவசம்வானிரவி, மண்டில முரிஞ்சப் பாற்கடற் றிரைபோன் மணிகொள்சா மரைமுறை யிரட்ட, வெண்டரு மளவி லரமடந்தையர்க ணடித்திட விமையவ ரெவருங், கண்டுகண் களிப்பக் கணபதி முதலாங் கடவுளர் விழாத்தின மயர்ந்து. (55)

விண்ணுலகத்தைத் தீண்டும்படி யுயர்ந்த முத்துச்சரம் தொங்குகின்ற வெண்கொற்றக்குடை, முடிமேலே விளங்க

வும், நீண்ட இடபக் கொடியானது வானவீதியிற் செல்லும் சூரிய மண்டலத்தைப்போய் உராயவும், திருப்பாற் கடலின் கண்ணே எழுகின்ற அலேகள்போல, மணிகளிழைக்கப் பெற்ற வெண்சாமரங்கள் முறையாக இரட்டவும், சிறந்த வர்களாக மதிக்கத்தக்க மிகப்பல தேவரடியார்கள் சதுராட வும், எல்லாத்தேவர்களும், கண்குளிரக்கண்டு களிப்படைய வும் நாடோறு கணேசர்முதலிய பஞ்சமூர்த்திகளே (தொடக்க முதல் எட்டுநாளவரை திருவீதிகளில் காலேமாலே யிருபொழு தும் எழுந்தருளிவரச் செய்யும்) திருவிழாவைச் செய்து.

இரட்டுதல்=உயரத்தூக்கி இரண்டுதரஞ் சுழற்றுதல். தேவர்கள், கந்தர்வர் முதலிய பல பிரிவினராக இருத்த லால் "இமையவரெவரும்" என்றனர்,

பாதலத் துரக ஞயிரஞ் சுடிகைப் பன்மணிக் கற்றைகான் றிலங்க, வாதவன் புரவி யிரதமுந் தலே சாய்த் தயர்வுற முனமயன் வகுத்த, மேதகு கனகக் கொடிநெடுந் தடந்தேர் விழாவுமாங் கயர்ந்துசித் திரையா, மோதுநாண் மகிழ்வாற் றீர்த்தவுற் சவமு மொளிபெற வாற்றியங் குவந்து (56)

(உவமையாதற்கிய லாமையால்) பாதால வுலகத்திலே யுள்ள ஆதிசேடன் தன்னுடைய ஆயிரமாகிய உச்சிகளிலே கொண்டையாக விளங்கும் பல மணிக்கூட்டங்களேயும் கீழே யுதிர்த்துவிட்டு விளங்கும்படியும், சூரியனது குதிரைபூட்டிய தேரும் வெட்கித் தலேயைச் சாயப் போட்டுச் சோர்வு கொள்ளும்படியும் முன்னர் மயன்செய்த மேன்மையான மணிகளிழைத்துப் பொன்தகடுவேய்ந்த, கொடிகள் கட்டிய, உயர்ந்து விரிந்த திருத்தேரில் பஞ்சமூர்த்திகளேயு மெழுந் தருளி வரச்செய்யும் தேர்விழாவை ஒன்பதாநாளன்று செய்து, பத்தாநாள் சித்திரை நட்சத்திரத்தில் அத்தலத் தில் தீர்த்தர்வாரித் திருவிழாவையும் விரும்பி மகிழ்ச்சியுடன் விளக்கமாகச் செய்து.

'ஆங்கு' அசை, உற்சவம்=திருவிழா. உற்சவமும் என்பதிலும்மை இறந்ததுதழீ இயவும்மை. ஒளி=விளக்கம்

அல்லது உயிர்த்திருக்குங் காலத்திலுண்டாகும் புகழ எனினுமாம். இதனை, 'உண்ணுனெளி நிருன் ஓங்குபுகழ் செய்யான்'' (நாலடியார்) என்பதனுற்காண்க.

பற்றறத் துறந்த பண்ணவர் மறையோர் சூழ்வரப் பாரிசா தவனத், துற்றுவா ழெமது கண்ணுதற் கயிலை யொருவனை வெள்ளிடை வணங்கி, யற்பொடுங் கரத்தாற் ருளமிட் டுருகிக் காதர வாதரம் பெருகப், பெற்றநல் லறிவாற் றவத்துரு வாசன் பெரிதுவந் தேத்தினன் பின்னர். (57)

இருவகைப்பற்றையும் முற்று மில்லாதிருக்கும் படி விட்ட துறவறச் சான்றேர்களும், வேதியர்களும் சுற்றிவழிபடப் பாரிசாத வனத்திலெழுந்தருளியிருக்கின்ற எங்கள் கயிலைப் பெருமானுகிய நெற்றி விழிபடைத்த ஈடுமெடுப்புமில்லாத சிவபரம் பொருளைத் திருவீதிகளிலே வெளியிடத்தில் எருந்தருளிவர வணங்கி அன்போடு கையிலே தாளம்போட்டுக் கசிந்து மிக்ககாதல் வளர, கற்றுப்பெற்ற நல்ல அறிவுடைமையினுலே தவமுடைய துருவாச முனிவர் பெருமான் மிகவும் விரும்பிப்புகழ்ந்து நின்ருர். மேலே,

புறத்துறவு பூண்டு அகத்துறவடைய முயல்வாரும் புறத் துறவு மகத்துறவுமடைந்தாரும்' அடங்க பற்றறத் துறந்த பண்ணவர் என்ருர், எனினுமாம். துறவிகளைத்தேவர் எனல் மரபாதலால் ''பண்ணவர்'' என்ருர்; உயர்ந்தவர் என்றல் கருதி.

பரந்தொளி யிமைக்குங் கயிலையின் முளரிப் பண்ணவ னுலகினிற் பரமன், சுரந்தருள் விளைப்ப வுற்சவ மியற்று மியல்பெனத் தொன்னிலத் தெளிதின், வரந் தருங் கனகக் கற்பக வனத்தி லின்றயர் விழாவென மலரோன், புரந்தரன் முதலா விபுதர்மற் றெவருந் தவத் துரு வாசனைப் புகழ்ந்தார். (58)

விரிவாக ஒளியை விடுகின்ற (பரப்புகின்ற) வெள்ளிவடிவானகைலையங்கிரியிலேயும், தாமரை மலரிலேயெழுந்தருளியிருக்கின்ற பிரமனுடைய சத்தியலோக முதலிய மேலுலகங்களிலேயும் மிகத்திருவருளைப் பொழியும்படி சிவபெருமானுக்குத் திருவிழாவை செய்யுந்தன்மை போலப் பழைமையான பூவுலகத்தில் எளிதாக வரங்களை விரும்புவார்க்குக் கொடுத்தருளுகின்ற பாரிசாதவனத்திலும் அப்பெருமானுக்கு எல்லாமமையச் செய்த திருவிழா வாகுமிஃதென்று பிரமனிந்திரன் முதலிய தேவர்களனைவரும் தவமுடைய துருவாச முனிவரைப் புகழ்ந்தார்கள்.

பிரம லோகத்தைக் கூறியதால் மற்றைய திருமாலுலகு முதலியவைகளையும் கொள்ளல்தகும்.

விரிய என்பது விரிந்த தெனத்திரிந்து நின்றது. வினையெஞ்சுகிளவியும் வேறுபல் குறிய" (தொல்சொல்) என்பனவாகலின். இமைத்தல்=ஒளிவிடல். அஃதிங்குப் பரப்புதன் மேனின்றது.

பரவைசூழ் புவனப் பரப்பினு மோரேழ் பாதலத்
திடையினும் பரந்து, விரவுவா னகத்து மருவிய தேவர்
விஞ்சையர் கருடர்கிம் புருடர், பொருவில்கந் தருவர்
கின்னர ருரகர் தானவர் யாவரும் புரிவாய்த், துரிசக
றுருவா சன்றனை நோக்கித் தூயரா யவரவர் துதித்தார்
(59)

கடல்சூழ்ந்த பூவுலகத்திலும் பாதாளத்திலுள்ள ஏழுலகங்களிலும் விரிவாகப் பொருந்தியவர்களும் தேவலோகத்திலும் பொருந்தி வசிக்கின்றவர்களுமாகிய தேவர் வித்தியாதரர் கருடர் கிம்புருடர் ஒப்பற்ற கந்தருவர் கின்னரர் உரகர் அசுரர் முதலிய எல்லாரும் விருப்புடன் மனமாசில்லாதவர்களாக மாசற்ற மனமுடைய துருவாச முனிவரைப்பார்த்துத் தனித்தனியாகப் புகழ்ந்தார்கள்.

பரவை= கடல், துரிசு=குற்றம். உரகர்=நாகலோக

வாசிகள், யாவரும் என்றதால் மக்களும் மற்றையோரு மடங்கினர். மற்றையோர், யக்ஷ ராக்ஷஸர் முதலியோர்.

தூர்வையை நுகரு மாதவன் றவத்தின் றென்மை யாற் புரந்தரன் முளரிப், பேரெழிற் பிரமன் பதமெலா நடுங்கு மெனிலவன் பெருமையார் புகல்வார். வேரியங் கடுக்கை வேய்ந்தவ னடியார்க் கறியலா மாதலால் விரிநீர்ப், பாரின்மா னவர்கள் யாவரும் பரமன் பத்தரே யாகவிப் பாங்கால். *(60)*

அறுகம்புல்லை உணவாக தின்கின்ற மாதவராகிய துருவாச முனிவரது பழந்தவத்தினாலே இந்திரனும் பெரிய அழகுபடைத்த தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற பிரமனும் ஆகிய இவர்களுடைய பதவிகளெல்லாம் நடுங்கு மென்றால் அம்முனிவருடைய பெருமையை எவர்தாம் சொல்ல வல்லவர்கள், தேன் ஒழுகும்படியான அழகிய கொன்றை மலரையணிந்த சிவபெருமானுடைய அடியவர் களுக்கு அறியலாம். ஆதலால், கடல் சூழ்ந்த பூவுலகி லுள்ள மக்களனைவரும் சிவபக்தர்களாகும்படி, முற்கூறிய வாறு.

தூர்வை=அறுகு. புரந்தரன்=இந்திரன். வேரி= தேன். மானவர்=மக்கள். கடுக்கை=கொன்றை. வேய் தல்=அணிதல்.

அன்னநற் றவங்க ளியற்றிய முனிவ னண்டரன் விழாமுடிவதனிற், பின்னருங் களரிப் பரனையோர் கோடி மாமதியொளியொடும் பிறங்க, வுன்னுமோர் கோடி யாதவர் குழுமி யுதயமால் வரையிடை யுதித்தாங், கென்ன முன் னினன்ற னிதயபுண் டரிகத் தெக்கர ணமும்விடுத் தினிதின். *61*

அத்தகைய நல்லதவங்களைச் செய்த துருவாச முனிவர் அங்கே சிவபெருமானுக்குரிய திருவிழா முடிந்தவுடன் மேலும் திருக்களர்ப்பெருமானை ஒரு கோடி பூரணசந்திரர்

களுடைய ஒளிபோன்ற குளிர்ந்த ஒளியோடு விளங்கும்படியும் எல்லாச் சமையத்தாரும் உயர்வாகக் கருதும்படியான சூரியர் ஒரு கோடி கூடிப் பெரிய உதயமலேயில் தோன்றினுற் போல மிக்க செந்நிறத்தோடு விளங்கும்படியும் தன்னுடைய இருதய தாமரை மலரிலே வைத்து எல்லாத் தொழிலேயும் விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் தியானித்தார்.

களரி=திருக்களர். மால்=பெருமை. புண்டரிகம்=தாமரை. சூரியன் ஒளிபோலச் செந்நிறமாகப் பாவித்தாலும் சந்திரன் ஒளிபோலக் குளிர்ந்த ஒளியாகப் பாவித்தார் என்பதாம்; சிவபெருமான் திருமேனி யொளி அவ்வாறே இருத்தலால். கரணம்=தொழில்.

*மூளுமா தரவா லருந்தவ முனிவன் முன்னுமுன்
முக்கணம் பெருமான், வேளோடு நந்தி பிரமத கணங்
கள் விண்ணவர் கின்னரரியக்கர், கோளில்சூ ரியர்பன்
னிருவரெண் வசுக்கள் குலவுருத்திரர்பதி னெருவ, ராளு
கந் தனிக்கு மடியரீங் கிவர்கள் சூழ்வர வாங்கெழுந்
தனனல். 62*

பற்றியெழுகின்ற அன்பினலே, அரியதவத்தையுடைய துருவாச முனிவர் தியானிப்பதற்கு முன்னரேயே மூன்று விழிகளேயுடைய எங்கள் தலேவராகிய சிவபெருமான், முருகக்கடவுள், (விநாயகப் பெருமான்), நந்தியம பெருமான், பூதகணங்கள், தேவர்கள், கின்னரர்கள், இயக்கர்கள், நவக்கிரகங்களிலொரு வகையினராகிய சூரியர் பன்னிருவர்கள், எட்டுவசுக்கள், விளங்குகின்ற பதினெரு உருத்திரர்கள், தம்மையடுத்தவரை யடிமைகொண்டருள் புரிய வல்ல மற்றைய அடியவர்கள் ஆகிய இவர்கள், புடை சூழ்ந்துநிற்க அங்கே தொன்றியருளினர்.

மூளுதல்=பற்றியெழுதல். வேள்=முருகன். 'வேள்' எனவே விநாயகரும் கொள்ளப்படுவர்.

*எழுந்தருள் கயிலே யிறைவனேப் பரவிக்காண்டொறுங்
காண்டொறு மிறைஞ்சிச், செழுந்தவ முனிவன் மெய்ம்*

மயிர் பொடிப்ப விழிபுனல் சிதறவா னந்தம், பொழிந் திடப் பலகா னெஞ்சநெக் குருகிப் புகழ்தலு மழுவ லான் புரிவாற், றெழுந்தவ முனியை யன்பினு னேக்கிச் சொல் லின னீ தவன் றுதிப்ப. 63

செழுமையான தவத்தையுடைய அத்துருவாச முனிவர். தோன்றியருளிய கயிலைப் பெருமானுகிய சிவபெருமானை பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் துதித்து வணங்கி உரோமஞ்சிலிர்க்கவும் விழிகள் நீரைச் சிந்தவும் ஆனந்தமானது அதிகரிக்கவும் மனங்கட்டு விட்டுருகப்பெற்றுப் பலகாலும் புகழவும் மழுவாயுதத்தையுடைய சகல வல்லமை படைத்த சிவபெருமான் விருப்புடன் கும்பிட்டு நிற்குந் தவசியான துருவாசரையருளோடு பார்த்து மீண்டும் அம் முனிவர் துதிசெய்யக் கீழ்வருவனவற்றைச் சொல்லத் தொடங்கினர்.

புரிவு = விருப்பு. அன்பினல் = அருளோடு, இங்கு அன்பு என்பது அருளையுணத்திற்று. அன்றித் தனக்குரியவராகத் துருவாசரைக் கொள்ளுதலால் அன்போடு நோக்கினர் எனப் பொருளுரைப்பினுமாகும்.

சொல்லினன் ஈது அவன்துதிப்ப எனப்பிரிக்க. ஈது= கீழ்வரும் விடயம்.

அறவரி லுயர்ந்த நற்றவத் தோய்நீ யன்பினு லெமக் கடி யவனுய்ச், செறிவுறு மருளாற் பூசனை புரிந்து திவ்விய வுற்சவஞ் செய்து, பெறலரும் விரதம் பூண்டனை மகிழ்ந்தேம் யாதுகா ரணமினிப் பெறுதற், குறுவரம் யாது கருதினை புகலென் றுரைத்தனன் பின்னரு முரைப் பான். 64

துறவற சான்றோர்கட்குள்ளே உயர்வான நல்ல தவமுடையவனே நீ அன்பினுலே எமக்கு அடியவனுகி என்னுடைய மிக்க அருள் நினக் கிருத்தலால் என்னைப் பூசை செய்து நல்ல திருவிழாவையுஞ் செய்து அடைதற்கரிய விர

தத்தையுமேற் கொண்டாய், நின் செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தோம், எதன்காரணமாக மேலே அடைதற்குத்தக்கவரமாக எதைக் கருதுகின்ருய் சொல்லுவாயாகவென்று கூறியவராய் மேலுஞ் சொல்லுவாராயினர்.

அவனருளாலே அவன்ருள் வணங்க வேண்டுதலால் ''செறிவுறு மருளாற் பூசனைபுரிந்து'' என்றனர். திவ்வியம் என்பது, நல்ல என்னும் பொருளினின்றது.

ஐந்தவித் தான்ற மாதவத் தோய்நீ யவாவுறும் வரங்கண் மற் றனைத்துந், தந்துனக் கருள்வோந் தொண்டருக் குதவா வரமிலை விரைவினிற் றக்க, மந்திர முருமற் புகலென முனிவன் பின்னரும் பன்முறை வணங்கி, யிந்துசே கரன்ற னிணையடிக் கமல மேத்தியாங் கிவை யெடுத் திசைப்பான். (65)

மெய்வாய் கண் மூக்குச் செவியாகிய ஐம்பொறிகளின் வழியாகவுண்டாகும் ஐந்தாசைகளையுங் கெடுத்து மெய்யறிவு நிறைந்த சிறந்த தவமுடைய துருவாசனே நீ பெற விரும்பும் வரங்களெல்லாவற்றையும் நினக்குக் கொடுத்தருள்வோம். அடியவர்களுக்குக் கொடுக்கக்கூடாத வரம் ஒன்று மில்லையாதலால் விரைவிலே தக்க வரங்களை ஆலோசனையில்லாமல் இவை வேண்டுமென்று சொல்லுவாயாக என்று கூறவும் அத்துருவாச முனிவர் பின்னரும் பல முறை வணக்கஞ் செய்து சந்திரனைச் சூடிய சடாமுடியையுடைய சிவபெருமானுடைய இரண்டான திருவடிகளாகிய தாமரை மலர்களைத் துதித்துக் கீழ்வருவனவற்றை அவ்விடத்தில் எடுத்துச் சொல்லத் தொடங்கினர்.

ஆனல் = நிறைதல். ஆன்ற = நிறைந்த. தக்க = தக்கவையான வரங்கள். மந்திரம் = ஆலோசனை. சேகரம் = முடி. இந்து = சந்திரன். 'தக்க' என்பது வினையாலணையும் பெயர். ''தக்கவின்ன தகாதன வின்னவென்று'' (கம்பர்) என வருதல் காண்க:

சகதல முழுதும் வியாபியா யழியாச் சராசர வுயிர்க் கெலா முயிரா, யகமொடு புறமா யிருவினைப் பயனுய்ச் சுவர்க்கமா யருநர கமுமாய்த், தகைபெறு மறிவாய் மறவியாய்ப் பிரிவில் சச்சிதா னந்தவாரிதியாய், நிகரி றற் பரமா நிருமல வரந்தா னின்றரி சனத்தின்மே லுளதோ. (66)

தோன்றி நின்றழியுமுலகமெல்லாவற்றிலும் வியாபித்து நிற்பதாகியும், (பரவிநிற்பதாகியும்) உடம்புடன் கூடி இயங்குதலு மியங்காது நிலை பெறுதலுமாகிய இருதன்மைகளையுடைய உயிர்களனைத்திற்கும் அழியாத ஒரு உயிராகியும், எல்லாப் பொருள்களின் உள்ளிடத்தும் வெளியிடத்து நிலவுவதாகவுள்ளதாகியும, நல்வினை தீவினைகளாற் பெறும் பயனுகியும் சுவர்க்கமாகியும், கிட்டுதற்கரிய கொடிய நரகமாகியும், தகுதிவாய்ந்த ஞானமாகியும், அஞ்ஞானமாகியும், நீக்கமற நிலவும் சச்சிதானந்த வடிவ சமுத்திரமாகியும் ஈடு மெடுப்புமில்லாது விளங்குகின்ற தற்பரமாகியும் உள்ள நின்மலனே தேவரீருடைய காட்சிக்கு மேற்பட்ட வரமொன்றுணடோ (காட்சிகொடுத்ததே பெரியவரமன்றோ.)

இறைவன் எல்லா உயிருள்ளும் ஒன்ருகக் கலந்தும் உடனுக நின்று இயக்கியும் தன்மையால் வேறுபட்டும் நிலவுதலால் உயிர்க்கெலாமுயிரா யென்றனர் என்ப; ஆகமசித்தாந்த மரபினர்.

சகதல முழுதும் வியாபியாய் என்பதனையே பின்னர் "அகமொடு புறமாயிருவினைப்பயனுய்...... மறவியாய்" என விளக்கிக் கூறினர் என்க. மறக்கும்படி செய்தலால், அஞ்ஞானத்தை "மறவி" என்றனர்.

உயிர்கள் உடலோடு தோன்றுதலு மறைதலுமாக இருத்தலால் அவ்வாறில்லாத இறைவனை. "அழியா வுயிர்" எனக்கொள்ளக் கூறினர். இனி உலகங்களெல்லாம் காரிய வடிவை மாற்றிக்காரணவடிவ மாயையாக

ஒடுங்குதல் போலன்றிச் சீவகர்கள் சொருபங் கெடாதிருத்தலால் " *அழியா* " என்றனரெனினுமாம்.

தேச காலவஸ்து பரிச் சேதமின்றியதாகப் பரம்பொருளிருத்தலால் சகதல முழுதும் வியாபியாய் எனவும் ஆபாசர் மகளாகிய சீவர்கட்கெல்லா திட்டானமாக விருத்தலால் " *சராசர வுயிர்க் கெலாமுயிராய்* " எனவும் அத்தியஸ் தங்களெல்லாம் அதிட்டானத்திற் கன்னியமாக வுண்மை யிலின்மையால் " *அகமொடுபுறமாய்.........மறவியாய்* " எனவும். அப் பரம் பொருளின் உண்மை வடிவமிஃதா மென்பார் " *சச்சிதானந்த* " எனவும். அவை ஒரே சொருப மென்பரர் " *பிரிவில்* " எனவும். அவ்வடிவும் அளவைகளால் அளவிடற்கரிதாகியும் அண்மினேரை அகல விடாத தாகியு மிருத்தலால் " *வாரிதியாய்* " எனவும். கூறினர், என்பர் வேதாந்த சித்தாந்த மரபினர். இவ் வுரைக்குச் சகதல முழுது வியாபியாம்" என்பதற்கு, சகதலமும் (மற்றையனவும்) ஆகிய எல்லாமுமாகிய எனப் பொருள் உரைக்க.

இயல்பாக மல மின்றியவன் என்பார் "*நிருமல*" என்றனர். நீ இயல்பாக மல மின்றியவனுதலால் எனக்கு வேண்டியது இஃதாமென நீயே அறிவை யான் உரைப்பது எதற்கு? என்பது குறிப்பு. " *அகமொடுபுறமாய்* " என்பதற்கு உள்ளிடமாயும் புற இடமாயும் எனவும் பொருள் கொள்ளலாம்.

பற்பல விரத மருச்சனை யோக பாவனை யிவை யெலாம் பயின்றும், பிற்பெறு பயன்யா துன்றறி சனமாம் பேறலாற் பிறிதுவே றுளதோ, வற்புதா வுன்றன் றிருவனுக் கிரக மருள்வதே பெருவர மதன்மேற். சொற் றிடும் வரம்யா னறிகிலேன் றெரியச் சுருதிகளுரைப்பது மிதுவால். (67)

மிகப்பலவாகிய விரதங்களை யநுட்டித்தல் அருச்சித்தல் மனமொடுங்கும்படி தியானித்தல் இவை முதலிய எல்லா

நற்செயல்களையும் இடைவிடாது செய்தும் அச்செயல்களுக்குப் பயனாகப் பின்னர்ப் பெறத்தக்கது தேவரீருடைய காட்சியாகிய பேற்றைத்தவிர வேறு பேறாகிய பயனிருக்கின்றதா? அற்புத வடிவரான பெருமானே தேவரீருடைய தரிசனமாகிய அனுக்கிரகத்தைச் செய்வதே பெரிய வரமாகும். அதற்கு மேற்பட்டதாகச் சொல்லத்தக்கதாகிய வரத்தை யான் அறிகின்றேன் இல்லை. விளக்கமாக வேதங்கள் உயர்வாகச் சொல்வதும் நும்முடைய தரிசனமாகிய வரமேயாகும்.

அருள்வது=செய்வது.

பரம்பொருளைக் கண்டிளைப்பாறுதற்கே ஜபந்தபம் தியானம் முதலியன எல்லாம் வேண்டப்படுகின்றன வாதலால் இங்ஙனங் கூறினர். தரிசனம் என்பது உருவத் தரிசனமாயினும் அது மெய்ஞ்ஞானத்தையளித்து மெய்ச்சொரூப தரிசனத்தை யளிக்க வல்லதாக இருத்தலால், இதனை மெய்ச்சொரூப தரிசனமாக உபசரித்தனர்.

அலகிலா ரணங்க ளாகம புராண மருமறை மற்றுள
பலவாங், கலைகளு முனது காட்சியே பயனென் றியம்
பிடு முனிவரர் கருத்தா, னிலைபெற வுரைக்கு மொழியுமீ
தன்றி நின்றரி சனமலா வரத்திற், பலன்வறி தென்ப
ரெவருமா தலினு லெனக்கிது வேபெறும் பலனும். (68)

அளவற்ற வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் அறிதற்கரிய பல நுணுக்க விடயங்களைத் தெரிவிக்கு நூல்கள் முதலிய பல நூல்களும் தேவரீரது காட்சியே தக்கபயன் என்று சொல்லும். முனிசிரேட்டர்கள் மனதோடு, நிலைபெறும்படி சொல்லுகின்ற மொழியுமிப்படியே யாகும். இவர்களையல்லாமல் மறறையவர்களும் தேவரீருடைய தரிசனத்தையன்றி வேறு பயன்களைத் தரும்படியான வரங்களினாலே தோன்றும்பயன்கள் பயன்களாகா என்று கூறுவர். ஆதலால் இத்தரிசனமே என்னாற் பெறத்தக்க பலனாகும்.

அலகு=அளவு, முன் ஆரணம் எனவந்தமையால் பின்னர் 'அருமறை' என்பது, அறிதற்கரிய நுணுக்கமான விடயங்களைத் தெரிவிக்கும் பிரமசூத்திரம் சிவஞானபோதம் போல் வனவற்றை யுணர்த்திற்று :

ஆரண முழுது மறிவுறு நீயின் றறிவுற வீண்டெழுந் தருளுங், காரண மடிகேள் யாதெனக் குனது காட்சி யாற் பாக்கிய மனைத்தும், பூரண மாவின் றெய்திய வடி யேன் புனிதனு யினனுன தருளான், மேருவுந் திரண மெனக்கிணை யொருவர் விண்ணினு மண்ணினு முளரோ. (69)

அடிகளே! வேதங்களெல்லாவற்ருலும் இன்னதன்மை யனென்று முற்றுமுணர்ந்து சொல்லப்பெருத தேவரீர் இப்பொழுது யான் கண்டுணரும்படி இங்கே எழுந்தருளுதற் குரிய காரணம் யாதோ அறிகிலேன் அடியேனுக்குத் தேவ ரீருடைய தரிசனத்தாலே எல்லாப்பாக்கியமும் வந்து சேர்ந் தன. அடியேனும் மலரகிதனுயினேன். தேவரீருடைய திருவருள் அடியேனுக்கு வாய்த்ததாலே (பொன்வடி வான) மேருமலையும் துரும்புக்கு நிகராகும். அடியேனுக்கு நிகராக விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் எவ ரேனும் ஒருவருண்டோ? (ஒருவருமில்லை.)

பாக்கியம்=பேறு.

'அடியேனும்' என்றதில் உம்மை விவகாரத்தால் ருெக்கது.

மெல்லிய திரண மாயவென் றனக்கு வெளிப்படத் தோன்றினை யதனுற், புல்லிய னெனினு நின்னனுக் கிரனுகத் திக்குரித் தாயினேன் புரியும், பல்பெருந் தவமும் பயிலுநான் மறையுஞ் செபங்களுங் கைவரும் பலனு, நல்கின வெளியேற் குன்றரி சனத்தாலெனப்பல வின்னன நவின்று. (70)

(சருகுபோல) கனமற்ற துரும்புக்கு நிகரான எளியனாகிய அடியேனுக்கு வெளியிற்காணும்படி எழுந்தருளினீர் அதனாலே அடியேன் இயல்பாக இழிந்தவனாக இருந்த போதிலும் தேவரீருடைய திருவருளுக்குரியவனாயினேன். எளியவனாகிய அடியேனுக்குத் தேவரீருடைய தரிசனங் கிடைக்கப் பெற்றமையால் அடியேன் செய்த பல பெரிய தவங்களும் இடைவிடாமல் ஓதிய நான்கு வேதங்களும் மந்திர செபங்களும் கைகண்ட பலனைக் கொடுத்தனவாக ஆகின என்று இவ்வாறாகப்பலவற்றைச் சொல்லி.

வேதங்களை ஓதிநிற்றலும் புண்ணியச் செயலாதலால் அவையும் பலனை 'நல்கின' என்றனர்.

அளிதவ ழிதழித் தெரியல்வா னவனைப் பின்னரு மருந்தவன் வணங்கித், தெளிவுறு மறிவா லிதெடுத் துரைப்பான் சிவபுரத் திறைவனீ யென்பாற், கணைகணு யளிக்கும் பெருவர முதவக் கருதினா லஃதுரைத் தருள்பின், பெளியனீ புகலு மவ்வரங் கேட்ப னென்னலு மெம்பிரா னியம்பும். (71.

வண்டுகள் வந்து படியும்படியான கொன்றை மலர் மாலையணிந்த தேவனாகிய சிவபெருமானை மீண்டும் அரிய தவமுடைய துருவாச முனிவர் வணங்கி நின்று தெளிந்த அறிவை யுடைமையாலே இதனை எடுத்துச்சொல்லத் தொடங்கினவராய்ச் சிவபுரமாகிய கைலைமலைத் தலைவரே தேவரீர் அடியேற்கோர் பற்றுக்கோடாக நின்று நன்மையைத் தரவல்ல பெரிய வரத்தைக் கொடுப்பதற்குத் திருவுளங் கொண்டால் அத்திருவுளக் குறிப்பைக் கூறியருள்வீராக. கூறியருளின பின்னர்த் தேவரீர் சொல்லின்படி அடியேன் சொல்லும் அவ்வரத்தைக் கொடுத்தருள்வீராக வெனக் கேட்பேன் என்று சொல்லவும் எம்தலைவராகிய சிவபெருமான் சொல்லத் தொடங்கினார்.

அளி=வண்டு. தெரியல்=மாலை. இதழி=கொன்றை) அது மலரை, ஆகு பெயராக நின்றுணர்த்திற்று.

தவலரும் விரத முனிவரின் மேலாந் 'தவத்திஞே யடியவர் தமக்குப், புவிமுத லொருமூன் றுலகினு மற்றைப் புறத்தினும் பூருவங் கொடாத, வுவமையில் வரமும் பயனுமில் லெனமுன் புரைத்தன மினியுரை யுளதோ, விவணுனக் கியன்ற வரமிது வெனக்கூ றெண முனி வரனுமீ தியம்பும். (72)

கெடுதலற்ற தவ விரதங்களையுடைய முனிவர் பலருள்ளும் மேலான தவமுடைய துருவாசனே அடியவர்களாக வுள்ள நின் போல்வாருக்குப் பூலோக முதலிய மூவுலகத் திலும் மற்றைய இடங்களிலும் முன்னர்க் கொடுக்காதவை யும் இணையற்றவையுமாகிய வரங்களும் பயன்களுமில்லை யென்று முன்பு கூறினேம். இனி இவை கொடாதன இவை கொடுக்கக் கூடியன என்று சொல்லும் சொல்லுமுண் டோ இவ்விடத்தில் உனக்கு வேண்டிய வரமிது வென்று சொல்லுக என்று கூறவும் முனிசிரேட்டராகிய துருவாசரும் சீழ்வருவனவற்றைச் சொல்லத் தொடங்கினர்.

தவலரும்=கெடுதலற்ற, என்பது, இடைவிடாதியற் றியதைக் குறிக்கின்றது. இவண்=இவ்விடம். தவலரும் விரதம்=சாந்தராயண விரதமுதலியன. அருளுடையராய்க் கொல்லாமை கள்ளாமை முதலியன உடமையும் அவ்விரதங் களிலடங்கும்.

அண்ணனி கனகப் பொதுவினிற் புலிக்கா லருந்தவன் பதஞ்சலி பரவப், பெண்ணணங் கொருபான் மகிழ்வுற வமரர் பிரமன்மா லிந்திரன் பிறரு, முண்ணெ கிழ்ந் திறைஞ்ச வனுக்கிர கந்தா னுலகெலாஞ் செயும் பொருட் டுரவோ, ரெண்ணரும் பரமா னந்தநாடகமுன் பியற்றினை யந்நட மின்னும். (73)

பெருமையிற் சிறந்தவராகிய தேவரீர் தில்லைப் பொன் னம்பலத்தில் அரியதவமுடைய வியாக்கிரபாத முனிவரும பதஞ்சலிமுனிவரும் புகழ்ந்து வணங்கி நிற்கவும் தெய்வப்

பெண்கள் நாயகமாகிய சிவகாமசுந்தரியார், ஒருபக்கத்தினின்று மகிழ்ச்சியடையவும் தேவர்களும் பிரமதேவரும் திருமாலும் இந்திரனும் மற்றையவர்களும் மனநெகிழப் பெற்று வணங்கி நிற்கவும் உலகமெல்லா வற்றிற்கு மனுக்கிரகத்தைச் செய்யும் பொருட்டு அறிவுடையோரெவராலும் அளவிட்டுக் கூறுதற்கரிய பேரானந்தத்தைத் தரவல்ல திருக்கூத்தை முன்பு செய்தருளினீர் அத்திருக்கூத்தைப் பின்னரும்.

அணங்கு=தெய்வப்பெண். இறைவனுடுந் திருக்கூத்தைக் கண்டவர், மலநீங்கப்பெற்று அவனொடிரண்டறக் கலந்து அழியா வின்பதுய்ப்பராதலால் அக்கூத்தை "பரமானந்த நாடகம்" என்றனர். உரவோர்=அறிவுடையோர்.

யான்றவ மிழைக்கு மித்தரு வனத்தி னமணிக்
கற்றைகான் றிலங்கி, வான்றெருடுங் கனகச் சிகரமா
மன்றின் மலைமக ளொடு நடித் தருணீ, யான்றநல் விரத
மித்தலத் தடியே னாற்றிய தப்பொருட் டெனக்கன்,
றீன்றவா னென்னக் கரைந்துமா தவனீ தியம்பமேற்
பரமனு மிசைப்பான். (74)

அடியேன் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற இந்தப் பாரிசாதனத்தில் பலசாதி மணித்தொகுதிகள் ஒளியை விட்டு விளங்கப் பெறுவதும் பொன் னாலாகியதும் விண்ணுலகத்தைப் போய்த் தொடும்படி உயர்ந்த விமான கோபுரடையதுமாகிய பேரம் பலத்திலே இமயமலை யரசன் புதல்வியாராகிய உமையம்மையார் கண்டு பக்கத்திலே நிற்பத் தேவரீர் நடித்தருள்வீராக. அடியேன் நிறைந்த நல்ல விரதங்களை இந்தத்தலத்திலே செய்தது தேவரீர் திருநடனஞ் செய்தலைக்கண்டு களித்தற் பொருட்டேயாகும். என்று கன்றையீன்ற பசுவைப்போல மனமுருகிப் பெரிய தவமுடைய துருவாச முனிவர் அவ்வார்த்தைகளைச் சொல்லவும் மேலே, மேலானவற்றிற் கெல்லாம் மேலான சிவபெருமானும் சொல்லத் தொடங்கினர்.

சச்சிதா னந்தத் தாண்டவந் தொழுதத் தரிசனந் தனைப்பெற நாளு, மிச்சையா முனிவ வம்முறை நடன மியற்றுவோ மெனப் பின்னு மிசைப்பான், முச்சகம் பரவுங் கந்தமா தனத்தி லறுபதினுயிர முனிவர்' மெச்சிய சைவ நெறியுளார் புனிதர் மாதவம் யாவையு மிகுந் தோர். (75)

சச்சிதானந்தத் திருக்கூத்தை மனமொழி மெய்களால் வழிபட்டு அதனைக் காண்பதற்கு விருப்பங்கொண்டுள்ள முனிவனே அத்தன்மையான திருக்கூத்தைச் செய்வோம், என்று சொல்லி மேலும் சொல்லுவாராயினர். மூன்றுலகத் தாரும் புகழும்படியான, கந்த=மாதன பர்வதத்திலே, அறுபதினுயிர முனிவர்கள் உயர்ந்தோர்களால் சிறந்த தென்று புகழப்பெற்ற சைவ நெறியிலே யுள்ளவர்கள் உள்ளும் புறம்பும் தூயவர்கள் எல்லாத் தவங்களையும் மிகுதி யாகப் பெற்றவர்கள்.

காண்போரைச் சச்சிதானந்த சிவமாக்குந்தாண்டவ மாதலால், 'சச்சி தானந்தத்தாண்டவ'மென்றனர், தாண் டக மென்றது 'நடனம்' என்னும் பொருட்டாகநின்றது.

அந்தநற் றவர்கள் பாலர்தம் பாலர் சிறுவர்நற்கிளை யொடுமமர்ந்தோர், மந்திர மறையோ ராங்கவ ரெமது மாநடத் தரிசன மகிழ்ந்து, வந்தனை புரியுங் கருத்தினல் விரதம் பூண்டெமை வழுத்துவோ ரின்னோர், தந்தமர் முதலாமனைவரும் பாற்ப கற்பத்தி லிம்பரிற் சார்வார். (76)

மேலே கூறிய, நல்லதவசிகளும் அவர்களுடைய புதல் வர்களும் புதல்வர்களின் புதல்வர்களும் அவர்களுடைய புதல்வர்களும் நல்லவிரதானுட்டானங்களையுடைய மனைவி மார்களும் சுற்றத்தார்களாகிய தவசிகளுமாகத் தங்கினவர் களான. மந்திர வடிவான வேதங்களை யோதி யுணர்ந்த முனிவர்களாகிய அவர்கள், எம்முடைய திருக்கூத்துக் காட்சியைப்பெற்று மகிழ்ந்து வணங்கி வழிபடவேண்டு மென்னும் எண்ணத்தினல் காணுதற்குரிய விரதத்தை மேற் கொண்டு எம்மைத் துதிப்பவராக இருக்கின்றனர். இவர்கள்

தங்கள் எல்லாச் சுற்றத்தார்களுடனும் பாற்ப கற்பத்திலே இங்கே வருவார்கள்.

*மாலைவெள் ளருவி மணிகொழித் திழியுங் கந்தமா
தனவரை மருங்கிற், சால்புறு முனிவ ரெய்துநா ளெமது
தாண்டவ தரிசனந் தருவோ, நாலிரு திசையும் புவனமுந்
தொழுநீ யவரொடு தரிசன நயந்து, மேலுறத் துதிசெய்
தவருறு மளவு மித்தரு வனத்தினில் விரும்பி.* (77)

மாலைபோல ஒழுங்குபட ஒழுகுந்தன்மையுடைய வெண்மையான அருவிகள் மணிகளை அலைகளா லேமேலே போய்க் கீழே விழும்படி அள்ளியெறிந்து கீழே ஒழுகுகின்ற கந்தமாதன பர்வதத்திலேயுள்ள சான்றோர்களாகிய முனிவர்கள் இங்குவந்து சேரும்பொழுது என்னுடைய நடன தெரிசனத்தைக் காட்டுவேன் எட்டுத்திசையிலுள்ளவர்களும் மற்றையவுலகங்களிலுள்ளவர்களும் வழிபாடு செய்யும்படியான நீ அந்தமுனிவர்களோடு காணக்கூடிய நடனக் காட்சியை விரும்பி மேலேயடையும்படி துதிசெய்துகொண்டு அம்முனிவர்கள் வரும் வரையிலும் இந்தப் பாரிசாதவனத்தின் கண்ணே விருப்புடன் தங்கி. மாலை=ஒழுங்கு.

*பூசனை யயர்ந்து சச்சிதா னந்தப் பொதுநடத்
தரிசன மின்று, நேசமா முனிவ கண்டதாக் கருதி
நீயயிர்த் திடாதுறை வைவே, லீசனு லுனக்கு மறையுப
தேச மியற்றுவிப் போமென வியம்பி, மாசிலா விரத
முழுவதும் புரியம் மாதவற் கபயமும் வழங்கி.* (78)

பூசை செய்துகொண்டு, பேரம்பலத்திலே ஆடக்கூடிய சச்சிதானந்த நடன தெரிசனத்தை, அன்புடன் கூடிய முனிவனே நீ இன்றைக்கே பெற்றதாக எண்ணிச் சந்தேகப்படாமல் உறைவாயாக. கூர்மை பொருந்திய வேலாயுதத்தையுடைய முருகனுல் உனக்கு மந்திரோபதேசம் செய்யும்படி செய்வேன் என்று சொல்லிக் குற்றமில்லாத விரதங்கள் எல்லாவற்றையும் செய்கின்ற பெரிய தவமுடைய துருவாச முனிவருக்கு அபயத்தையும் கொடுத்து

'அபயமும்' என்றதில் உம்மை இறந்தழீயது.

வேறு

பாகசா தனன்பொன் ஞட்டிற் பாரிசா தவன நாப்ப,
ஞகலோ கத்தின் காறு நண்ணியே சுயம்பு மூர்த்த.
மாகிய சிவலிங் கத்தி னருந்தவன் பரமா னந்த,
போகவா ரிதியின் மூழ்க மறைந்தனன் கயிலேப்
புத்தேன் (79)

இந்திரனுக்குரிய பொன்வடிவான தேவலோகத்திலிருந்து கொண்டுவந்து நிலேநாட்டிய பாரிசாதவன தலத்தின் நடுவில், நாகலோகம் வரையிற் போய்ப் பொருந்தி விளங்குகின்றதும், தாஞகவே தோன்றிய மூர்த்தமுமாகிய சிவலிங்கத்தின் கண்ணே துருவாச முனிவர் பரமானந்த மாகிய போகக் கடலிலே முழுகும்படி, கயிலேமலேயிலுறையும் இறைவஞகிய சிவபெருமான் மறைந்தருளினுர்.

பாகசாதனன்=இந்திரன். சுயம்பு=தாஞகவே தோன்றுவது. மூர்த்தம்=வடிவம். போகம்=நுகர்ச்சி. வாரிதி= கடல். புத்தேள்=தெய்வம். சிவலிங்கத்திலேர் மறைந்த= என்க.

அருந்தவத் துயர்ந்தோன் பின்ன ரத்தலத் தவர்க
ளோடுந்
திருந்திய கயிலே யீசன் றேவரைக் காக்குஞ் செவ்வே
ளிரந்தவர்க் கருள்செய் முக்க ணிமயமா தெனுமின்
ஞேர்க்குப்
பொருந்திய வறிவாற் பூசை விதிமுறை புரிந்து
பின்னும். (80)

அரிய தவத்திலே உயர்ந்தவராகிய துருவாச முனிவர்; அந்தப் பாரிசாத வனத்தலத்திலே தம்முடன் உறைகின்ற தவசிகளுடன்கூடி வளங்களால் திருத்தமுடன் விளங்குகின்ற கயிலேமலேக்குரிய தலேவராகிய சிவபெருமான், தேவசேஞபதியாக அமைந்து தேவர்களே காவல் செய்கின்ற முருகக் கடவுள், வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை யீந்தருளுகின்ற மூன்று திருவிழிகளேயுடைய இமயமலேயின் திருமகளாராக அவதரித்த உமையம்மையார் என்று கூறப்படுகின்ற இத்தெய்வங்களும் மற்றைய தெய்வங்களும்

மாகிய எல்லாத் தெய்வங்களுக்கும் பொருத்தமாகப் பொருந்திய பூசைகளை நல்ல அறிவுடன் (மறதியில்லாமல்) விதிப்படி செய்து பின்னரும்

இங்கே 'இமயமாது' என்றது அமுதவல்லியம்மையாரை என்க.

ஆலய மெழுகி மீது ரன்பினு லலகு மிட்டுக்
கோலிநந் தனவ னங்கள் கொழுமல ரோடை
செய்தாங்
காலமுண் டவற்கு நாளு மபிடேக மாதி யாக
வேலுநற் கரும மாற்றி யின்னண மொழுகுங் காலை
(81)

மேன்மேலும் பெருகுகின்ற அன்பினுலே கோயிலைத் திருவலகிட்டும் சாணத்தால் மெழுகியும் நாற்புறத்திலும் நந்தனவனங்களையும் செழித்த மலர்கள் மலரத்தக்க நீரோடைகளையு முண்டாக்கி (அவைகளினின்றும் பூக்களை யெடுத்து மாலை தொடுத்தும்) இப்படி அப்டேக முதலிய வாகப் பொருந்திய சிவப்பணிகளை யெல்லாம் நஞ்சுண்டு தேவர்களைக் காப்பாற்றிய சிவபெருமானுக்கு அங்கே நாடோறுஞ் செய்து கொண்டு நிகழுங்காலத்தில்

அலகிடல் = கூட்டுதல். இன்னணம் = இப்படி.

வேறு

மேம்படு தவத்து வியாதனே முதலா மிருடிக ளனை வரும் விரவிப், பாம்பரை யார்த்த பராபர முதலா நிருமலன் பாரிசா தவன, மாம்பதி மருவி யாட்டயர் வோமென் றறைந்தது மருந்தவ னறிவாற், றீம்பரப் புரியு மொழுக்கமுங் கேட்டு மகிழ்வொடுந் தருவனஞ் சேர்ந்தார். (82)

உயர்ந்த தவமுடைய வியாச முனிவர் முதலிய இருடிகளெல்லோருங்கூடி, பாம்பை அரைநாணுகக் கட்டிய பராபரராகியும் முதல்வர் எனப்படுபவரெல்லாருக்கும் முதல்வராகியும் மலரகிதராகியும் விளங்கும்சிவபெருமான் பாரிசரதவனத்

தலத்திலே உருவுடன் வெளிப்பட எழுந்தருளிவந்து திருக் கூத்துத் திருவிளையாடலைச் செய்வோம் என்று கூறியதை யும் அரிய தவமுடைய துருவாச முனிவர் அறிவோடு குற்றங்கலவாமல் செய்கின்ற சிவப்பணிகளையும் செவியாரக் கேள்விப்பட்டு மனமகிழ்ச்சியுடன் பாரிசாதவனத்தலத் தைப்போய்ச் சேர்ந்தார்கள்.

பராபரன் = மேலானவற்றிற்கெல்லா மேலானவன் ஆட்டு அயர்தல் = கூத்தாடலைச் செய்தல். 'விரவிச் சேர்ந் தார்' எனக்கூட்டுக.

ஈங்கியம் பியநற் காதையை யுரைப்போ ரினிதுறக் கேட்பவ ரிவற்பாற், பாங்குறப் பயின்ற பண்பினோ ரின்னோர் தம்மொடும் பரிவுறப் பகர்வோ, ராங்கவர் குலத்துட்டோன்றினோ ரெவரு மளப்பரும் போகமுற் றளிகொ, டேங்கம ழிதழித் தெரியலெம் பெருமான் கயிலையி லெய்துவர் திண்ணம். (83)

இங்கே சொல்லிய நல்ல வரலாற்றைச் சொல்லு வோரும் நன்மை பொருந்தக் கேட்பவரும் இவர் களோடு பொருந்தப் பழகும் தன்மையுடையவரும் இவர் களுடன் அன்போடு உரையாடுகின்றவரும் மேற்கூறியவர் களின் குடியிலே பிறந்தவரும் ஆகிய எல்லாரும் அளவில் லாத இன்பப் போகங்களையடைந்துப் பின்னர் வண்டுகள் மொய்க்கின்ற மணங்கமழ்கின்ற கொன்றைமலர் மாலையைய ணிந்த எங்கள்தலைவரான சிவபெருமானுடைய கயிலையை யடைந்தின்ப மெய்துவார்கள் இஃதுறுதியான சொல் லாகும்.

அளி = வண்டு. தெரியல் = மாலை.

பாரிசாத வனச்சுருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் கருக.

மூன்றாவது

நிருத்தச்சருக்கம்

மாமறை தெரிக்கும் வியாதனே முதலா மாதவர் தருவனத் தடைந்து, தாமுறை புரியு மொழுக்கமுங் கந்த மாதனத் தடவரை மருங்கிற், றேமில்பன் முனிவர் வந்திழைத் ததுவுஞ் சுருதிமே லவனடித் ததுவு, மேமுறப் பிரமன் றருமுனி கேட்ப நந்திவா னவனிவை யிசைப் பான். (1)

சிறப்பினுலும் அளவினுலும் பெரிய வேதங்களை நான்கு கூருகப் பகுத்துணர்த்திய வியாச முனிவர் முதலிய பெரிய தவசிகள், பாரிசாத வனத்தலத்தைச் சேர்ந்து அவர்கள், முறையாகச் செய்த நற்செயல்களையும், அகன்ற இட முடைய கந்தமாதன மலையிலிருந்துவந்த குற்ற மற்ற பல முனிவர்கள் அங்கே சென்று செய்த நற்செயல்களையும், வேதங்களின் முடிகளாக விளங்குகின்ற உபநிடதங்களால் துணிவு கொள்ளும்படி உரைக்கப்படுகின்ற சிவபெருமான் கூத்தாடியதையும் இன்புறும்படி, பிரமதேவன் மானசீக மாகப் படைத்தருளிய சனற் குமார முனிவர் கேட்ப நந்தியம் பெருமான் சொல்லத் தொடங்கினுர்.

தெரித்தல் = வகுத்து விளக்குதல். இடைவிடாது செய்யப்படுதலால் நற்செயல்கள், 'ஒழுக்கம்' எனப்படும். 'ஏமம்' என்பது 'ஏம்' என இடை குறைந்து நின்றது; செய்யுளாதலால் 'ஏமுறக்கேட்ப' எனக் கூட்டுக. ஏமுற= இன்புற. தோம்=குற்றம். அவை காம வெகுளி முதலிய வைகள். சுருதிமேலவன் என்பதற்கு, வேதங்களுக் கெட் டாதவன் எனினுமாம்.

தன்னிகர் பசும்பூங் கற்பக வனத்திற் சார்ந்திடும் வியாதனே முதலா, மன்னமா தவரோ டுலகெலா மளிக்கு நிமித்தமா வகிலகோ டிகளின், மன்னுயிர்க் குயிரா மொருவனைக் கருதி யிரவியின் மண்டில நடுங்கப், பொன்னிலத் திமையோர் வெருவுறத் துருவா சன்பெரு மாதவம் புரிந்தான். (2)

இணையில்லாததாகிய நல்ல பூக்களையுடைய பாரிசாத வனத் தலத்தையடைந்த வியாசர் முதலிய, அத்தகைய பெரிய தவமுடைய முனிவர்கள் எல்லாருடனும், உலகத்திற் கெல்லாம் சிவபெருமான் அருள் செய்யவேண்டும் என்பதை முன்னிலையாகக் கொண்டு எங்கும் விளங்குகின்ற சீவர்கட் கெல்லாம் சீவனாக விளங்குகின்ற ஏகனுயகனாகிய சிவபரம் பொருளைத் தியானித்துக்கொண்டு (தவவெப்பத்தாலே) சூரியமண்டலமும் நடுங்கும்படியாகவும் பொன்மயமான தேவலோகத்திலேயுள்ள தேவர்கள் (நம்பதவிக்கு வந்து விடுவாரோ என்று) அச்சங் கொள்ளவும் துருவாச முனிவர் மிகப் பெரிய தவத்தைச் செய்தார்.

ஈண்டுக் 'கற்பகம்' என்றது தன்னினமாகிய பாரிசா தத்தை யுணர நின்றது; தெய்வதரு என்னும் ஒற்றுமையா லென்க. புரிதல்=விரும்பிச் செய்தல். சங்காரகாரணனாகிய ஒரே முதல்வனே, "அவனேதானே யாயிருவினையிற், போக்குவரவு புரியவாணையின், நீக்கமின்றி" நிற்பதனால் "மன்னுயிர்க் குயிராம் ஒருவனை" என்றனர். பல சீவர் கட்கு மாதாரமாக (அதிட்டானமாக) நிற்கும் பரம்பொரு ளொன்றே யென்பார் "மன்னுயிர்க் குயிராமொருவனை" என்றனர். என்ப வேதாந்த சித்தாந்த முடையவர்.

அருமறை வியாதன் கண்ணுவன் பரத்து வாசன் பார்க் கவனெனும் பெரியோன், பெரியபிங் கலன்கார்க் கியனுவ மனியன் பிருதுசு கோத்திரன் பிரமன், றருமகத் தியன்மாத் தியந்தனன் மங்கு சதசிரன் பிராதிருத் தகை சேர், கிருதுசங் கிருதி யுசிநரன் றிருவன் மவுனபார்க் கவனெனக் கிளந்தோர். (3)

அறிதற்கரிய வேதங்களையறிந்து வகுத்த வியாசர், கண்ணுவர், பரத்துவாசர். பார்க்கவர் என்னும் பெரியார், பெருமைவாய்ந்த பிங்கலர், கார்க்கியர், உபமன்யு முனிவர், பிருது, சுகோத்திரர், பிரமதேவனால் மானசீகமாகப் படைக் கப்பட்ட அகத்தியர், மாத்தியந்தனர். மங்கு, சதசிரர், பிராதிரு, தகுதிவாய்ந்த கிருது. உசிநரன், திருவன், மவுன பார்க்கவன் என விளங்கினவர்களும்.

அத்திரி யேக நேத்திரன் றூலலோசன னங்கிரா விரத, வித்தகம் புரியுஞ் சங்குமா தவனிங் கிவர்தமா

ணுக்கரும் விரவி, நித்தில் வயல்சூழ் களந்தையி னளவுஞ் சாலேகள் புடைதொறு நெருங்கப், பத்தியி னியற்றிச் சுற்ருெரு குரோசப் பரப்புற மருவினர் பரிவால். (4)

அத்திரி, ஏகநேத்திரர், தூலலோசனர், அங்கிரா, விரதமாகிய ஆற்றலே மேற்கொண்ட சங்கு என்னும் பெரிய தவசி என்று இங்குச் சொல்லப்படுகின்ற முனிவர்களும் இவர்களுடைய மாணுக்கர்களும் கலந்து, முத்துக்கள் சிந்திக்கிடக்கின்ற வயல்கள் சூழ்ந்துள்ள களப்பால் ஊர் வரையிலும் பர்ணசாலேகளே இடந்தோறும் நெருங்கிவிளங்கும்படி வரிசையாக அமைத்துத் திருக்களரைச் சுற்றிலும் ஒரு குரோச அளவும் தங்கும் இடமாக அமைய விருப்போடு தங்கினுர்கள்.

நெல், கரும்பு, சங்கு முதலியவைகள் ஈனுதலாற் சிந்திக்கிடக்கின்ற முத்துக்கள் என்பதாம். தரளம்=முத்து பத்தி=வரிசை. குரோசம்=இரண்டுமைல் அளவு.பரிவு. = விருப்பம்.

நாற்கதி யகற்றி மும்மலங் களேந்து நால்வகைத் தோற்றமுங் கடிந்து, மேற்கதி யளிப்ப வாங்கவ ரெவரும் வேறுவே றிலிங்கமுண் டாக்கிப், போற்றரும் பூசை விதிமுறை யயர்ந்தும் பொருவில்சற் குருபுகல் விதியின், பாற்பட மறையின் மேற்படுந் தெய்வ வைந்தெழுத் தையுமுறை பயின்றும். (5)

(மனிதப்பிறவி தேவப்பிறவி விலங்குப்பிறவி நரகப் பிறவியாகிய) நாலுகதிகளேயும் நீக்கி (ஆணவம் கன்மம் மாயையென்னும்) மூன்று மலங்களேயும் வேரறச் செய்து (சராயுசம் சுவேதசம் அண்டசம் உத்பிசம் என்னும்) நால்வகையான தோற்றங்களேயும் போக்கி மேலான மோட்சமான கதியை இறைவன் தங்களுக்கு அளிக்கும்படி அவ்விடத்தில் அவர்களெல்லாரும் தனித்தனியாக ஒவ்வொரு இலிங்கங்களே யுண்டாக்கிச் சொல்லுதற்கரியனவாகிய பூசைகளே விதிப்படி செய்தும் நல்ல குருபரர்கள் விதிப்படி பல பகுதியாக உபதேசித்தருளியவையும் வேத மந்திரங்களிலே மேம்பட்டவையும் தெய்வத்தன்மை பொருந்தியவையுமாகிய பஞ்சாக்ஷரத்தையும் கிரமந் தவருமல் செபித்துக்கொண்டும்

ஐந்தெழுத்தையும் இதில் உம்மை உயர்வைக் குறித்து நின்றதென்க.

'*நாற்கதியகற்றுதல், நால்வகைத் தோறறம் கடிதல்*' என்பது அவற்றில் புகவிடாமல் தடுத்தல் என்றே அல்லது அவை வராமல் தடுத்தல் என்றே பொருள் கொள்க.

போற்றுதல்=சொல்லுதல் ; புகழ்தல். விதிமுறை= ஆகம நூல்களில் விதித்தபடி, '*சற்குருபுகல்விதி*' யென்பது தனித்து செபித்தல், பிரணவம் ஸம் யம் என்பன சேர்த்துச் சரித்தல் ஆகிய முறை தவருமல் என்பதாம்! விதி=முறை. '*முறைபயின்று*' என்பது பத்துவகைக் குற்றமுமின்றிச் செபித்தலை யுணர்த்திற்று. பத்துவகைக் குற்றமிவை என்பதைப் பால்போதத்திற் காண்க.

உணர்வினு லணியு முன்பெரும் பாவம் போக்கிடு முருத்திர வக்க' மணிகொண்மா லிகையை யழகுறப் புனைந்து மறையினுற் றிருவெண்ணீ றணிந்தும், பணவர வசைத்தோன் சச்சிதா னந்த நாடகங் காண்குறும் பரிவா, லிணரிள நறும்பூங் கற்பக வனத்தின் மாதவ மெய்தியு மிருந்தார். (6)

அணிந்தாற் பெருநலம் பயக்கும் என்னுமுணர்வோடு அணியத் தொடங்கு முன்னரேயே பெரிய பாவங்களையும் நீக்கும்படியான உருத்திராக்ஷமணிகள் கோத்த மாலைகளைச் சிரசு முதலிய உறுப்புக்களில் திருவேடப் பொலிவு தோன்ற அணிந்தும் மந்திரத்தோடு வெண்மையான திருநீற்றை (உத்தூளன அவகுண்டன திரிபுண்டரமாக) அணிந்தும் படத்தோடு கூடிய பாம்புகளை இடை முதலிய உறுப்புக்களில் அரைஞாண் முதலிய அணிகலங்களாகக் கட்டிய சிவபெருமான் செய்தருளுகின்ற, சச்சிதானந்தமாக இருக்கும் நிலையைக் காண்பாருக்கு அளிக்கவல்ல, ஆனந்தத் தாண்டவமாகிய பஞ்சகிருத்திய தாண்டவத்தைக் காணவேண்டுமென்னும் விருப்போடு வாடாத பூங்கொத்துக்களையுடைய பாரிசாதவனமாகிய திருக்களரிலே பெரிய தவங்களைச் செய்து கொண்டும் இருந்தார்கள்.

அசைத்தல்=கட்டுதல்.

இறைவன் செய்தருளுகின்ற பஞ்ச கிருத்தியமும் ஆன்மாக்கள் பிறப்பிறப்பின்றிச் சச்சிதானந்த சிவமாகிய தன்னேடனன்னியமாகக்கலந்து சச்சிதானந்தசொரூபமாக அமைதற்கேயாதலின், அக்கிருத்தியங்களைத் தோற்றுவிக்கின்ற தாண்டவத்தை, "**சச்சிதானந்த நாடகம்**" என்றனர்.

"இறைவன் செய்யும் பஞ்ச கிருத்தியம், சீவர்கள் தங்களைச் சச்கிதானந்த சிவமென அறிந்து பிறப்பிறப்பின்றி இருந்தபடியே இருப்பதற்காக நிகழ்வனவாதலால் அவற்றைச் சூசிப்பிக்கின்ற தாண்டவத்தை "**சச்சிதானந்த நாடகம்**" என்றனர் என்ப வேதாந்த சித்தாந்தமுடையவர்கள்.

அவிகொளா குதிசெய் புகையிருட் படல மவிர்கதி ராயிரம் பரப்புந், தவனமண் டலத்தி னெல்லையுங் கடந்து சேறலாற் றுளிமுகி றவழு, மிவரிளம் பசும்பூங் கற்பக வனத்தி லிருடியர் தவாக்கினிக் கிடருற், றுவமையி லிரவி யொளித்தன னெனவாங் கிரவியி னொளிமழுங் கிடுமால். (7)

தேவருளவாகக் கொள்ளத்தக்க நெய் முதலிய வ்ற்றை யோமிக்கின்ற (ஓமங்களைச் செய்தலால்) எழுகின்ற புகையாகிய இருட்பரப்பானது, விளங்குகின்ற ஆயிரங் கிரணங்களையும் விரித்தெழுகின்ற சூரியமண்டலம் விளங்கும் எல்லையையுங் கடந்து போதலாலே, நீரைச்சிந்துகின்ற மேகங்கள் தவழ்ந்து செல்வதற்காகப் படிகின்ற வாடாத பூக்களோடு கூடிய இலைகளால் பசுமையான பாரிசாத வனத்திலே தங்கியிருக்கின்ற அந்த முனிவர்களின் தவமாகிய நெருப்பைப் பொறுக்கமுடியாமல் துன்பமடைந்து தனக்கு ஒப்புமையில்லாத சூரியனும் மறைந்துவிட்டான் என்று சொல்லும்படியாக அங்கே சூரியனுடைய ஒளியானது மங்குதலடைகின்றதாக ஆயிற்று.

'**இளம் பசும் பூங்கற்பகம்**' இங்கேயும் இளமை, வாடாமையைக் குறித்து நின்றது என்க. அல்லது முதிர்ச்சியின்றி என்று மிளகையாகவே நிகழும் எனக் கற்பகத்திற்கேற்றினுமமையும்; தேவலோக தருவாதலால். அவிசு = தேவருணவு.

ஓதுநான் மறையின் முழக்கினுற் றவள நீற்றெளி
பரப்பலா லுலவாப், போதமா தவத்தால் வீக்கிய சடிலச்
செந்துகிர்க் கற்றையின் பொலிவாற், றீதக னளின
வக்கமா லையுமேற் றரித்தலாற் பாற்கடல் சிவணு
மேதகு நறும்பூங் கற்பக வனத்திற் றவம்புரி யிருடியர்
ம்வெள்ளம். (8

ஓதுகின்ற நான்கு வேதங்களின் ஒலியையுடைமையா லும் திருநீற்றின் வெண்மையான ஒளியை விரித்தலாலும் மெய்ஞ்ஞானத்தைத் தருகின்ற பெரிய தவமாகிய நெருப்பையுடைமையாலும் கட்டிய சடாபாரமாகிய செம்மையான பவளத் தொகுதியின் பொலிவையுடைமையாலும் குற்றமற்ற உருத்திராக்கமாகிய தாமரை மாலையை (வரிசையை) திருமேனிகளின் மேலே (தன்மேலே) தரித்திருத்தலாலும் (தாங்குதலாலும்) மேன்மை பொருந்திய மணக்கின்ற பூக்களையுடைய பாரிசாத வனத்திலே (திருக்களரிலே) தவஞ் செய்து கொண்டிருக்கின்ற அந்த முனிவர் கூட்டமானது திருப்பாற்கடலை யொக்கும்.

வீக்கிய = கட்டிய. மேல் என்பதற்கு முனிவரை நோக்க, திருமேனிகளின் மேலெனவும் கடலை நோக்க தன்மேலே எனவும் பொருள் கொள்க. தரித்தல் என்பதும் அவ்வாறே அணிதலையும் தாங்குதலையும் கொள்ள நின்றது. அவ்வாறே மாலை என்பதும் மாலையையும் வரிசையையும் உணர நின்றது.

திருப்பாற்கடல், அலை ஒலியையுடையது வெண்மை யொளியையுடையது வடவாமுக அக்கினியையுடையது. பவளக் கொடிகளையுடையது தாமரை மலரின் வரிசைகளை யுடையது.

முனிவர் கூட்டம் வேத ஒலியையுடையது அணிந்த திருநீற்றின் வெண்மை யொளியையுடையது தவாக்கினியை யுடையது பவளம்போன்ற செஞ்சடையையுடையது தாமரை மலர்போன்ற உருத்திராக்ஷ மாலையையுடையது. என ஒப்புமை காண்க. **போத** என்பதற்கு நிறைய எனப் பொருளுரைப்பினுமாகும். அங்ஙனமாயின் நிறையப் பெரிய தவாக்கினியையுடைமையால் எனப் பொருள்படும்.

*காலமங் குணர்ந்து மழைமுகில் பொழியு மாறனெக்
கதமிலம் முனிவர், வேலைக டோறு நான்மறை விதியா
னித்திய வினையெலாம் புரியச், சூல்வளை யினங்கள் வயிறு
ளைந் தீன்ற வெண்மணிச் சோதிகான் றிமைக்குஞ், சேலு
லாம் வயல்சூழ் நாடெலா நிதிகள் சிறந்துபல் வளமுமா
யினவால்.* (9)

9. அங்கே பெய்ய வேண்டிய காலத்தை யுணர்ந்து மழை மேகங்கள் நீரைப் பொழிந்தால் எவ்வாறு வளங்கள் பெருகிச் சிறக்குமோ அவ்வாறு (வளங்கள் பெருகிச் சிறக்கும்படி) கோபமற்ற அம்முனிவர்கள் எல்லா வேளைகளிலும் நான்கு வேதங்கள் விதித்த விதிப்படி நித்திய கருமங்களை யெல்லாந் தவருமல் செய்தலால், கருக்கொண்ட சங்குக் கூட்டங்கள் வயிறு வலியெடுக்கப் பெற்று ஈன்ற வெண்மையான முத்துக்கள் ஒளியை வெளிவிட்டு விளங்கும்படியானவையும் சேல்மீன்கள் சுற்றித் திரிகின்றவையுமாகிய வயல்கள் சூழ்ந்த அந்நாடு முழுவதும் பொக்கிஷங்கள் சிறக்கும்படி பல வளங்களும் பெருகின.

சிறக்க என்பது "*வினையெஞ்சு கிளவியுல் வேறு பல் குறிய*" என்னும்படி சிறந்து என வேறுபட்டு வந்தது.

*ஈங்கிவர் புரியு மாதவப் பெருமை யொருவரா
லுரைப்பரி திவரிற், றீங்கற நுகரு முண்டிநீத் தமைந்
தோர் சிலர்புனல் பருகுவோர் சிலர்க, டேங்கிய வுதகத்
தமிழ்ந்திநிற் பவர்கள்ள் சிலர்மதி வதனமே னோக்கி,
யோங்கிநிற் பவர்கள் சிலர்சரு கருந்தி யுறுபசியொழிப்
பவர் சிலரால்'* (10)

10. இங்கே இவர்கள் (முனிவர்கள்) செய்கின்ற பெரிய தவங்களின் பெருமையானது ஒருவராலும் இத்தன்மையதெனச் சொல்லுதற்கு இயலாத தொன்ருகும். இம்முனிவர்களுக்குள்ளே நன்ருக உட்கொள்ளும் உணவை யுட்கொள்ளாமல் ஒழித்துத் தங்குவார்கள் சில பேர். நீரை மட்டும் குடித்தமைவார்கள் சில பேர். நிறைந்த நீரிலே முழுகி வெளிவராமலிருப்பார்கள் சிலபேர்சந்திரனை யொத்த முகத்தை மேலே பார்க்கும்படி தூக்கி அண்ணாந்து நிற்பார்

கள் சில பேர். உதிர்ந்த சருகுகளை யுணவாகக் கொண்டு மிக்க பசியைப் போக்குவார்கள் சில பேர்.

இருவகை புரியுஞ் சாந்திரா யணநோன் பியற்று வோர் சிலருயிர்ப் பொடுக்கித், தருவெனப் பகர நிற்ப வர் சில்லோர் தாளூற நிற்பவர் சிலர்தாட், பெருவிர லூன்றி நிற்பவர் சிலர்பஞ் சாக்கினி மத்தியிற் பிரியா, தரியநல் விரத மாற்றுவோர் சிலர்யோ கடைபவ ரல கின்மா முனிவர். (11)

11. சில பேர் உண்ணுமுணவைப் பதினைந்து பங்காகச் செய்து தேய்பிறையில் நாடோறும் ஒவ்வொரு பங்காகக் குறைத்தும் வளர்பிறையில் ஒவ்வொரு பங்காகக் கூட்டியும் உண்டு செய்கின்ற சாந்தராயண விரதத்தை அநுட்டிக்கின்றவராவார்கள். சில பேர் பிராணனை ஒடுக்கி மரம் எனச் சொல்லும்படி அசைவற்று நிற்பார்கள். சிலபேர் ஒரு பாதம் பூமியிலே பொருந்த நிற்பார்கள். சிலபேர் ஒரு பாதத்தின் பெருவிரலையூன்றி நிற்பார்கள். சிலபேர் பஞ்சாக்கினி மத்தியிலே நீங்காது தங்குகிறசெய்தற்கருமையான விரதத்தைச் செய்வார்கள். பல சிறந்த முனிவர்கள் உள்ளம் ஒடுங்க தியானஞ்செய்து இருப்பார்கள்.

ஐம்பகற் கொருகா லுண்பவ ரநேக ரறுபகற் மதிக் கொருபொழு தயின்று, வெம்பசி தவிர்ப்போ ரவரினும் பலர்மு வைந்துநாட் செலவுணல் விரும்பு, நம்புநீர் முனி வர் பலர்களின் னணநா னாவித நற்றவம் புரிந்தா, ரிம்பரெம் பெருமான் ஞானநா டகஞ்செ யமையமு மணித் தினெ ய்தியதால். (12)

12. பல முனிவர்கள் ஐந்து பகலுக்கொருதரம் உணவுண்பார்கள். அவர்களைப் பார்க்கிலும் பல முனிவர்கள் ஆறு பகலுக்கொருதரம் உணவுட்கொண்டு கொடிய பசியை நீக்குபவராவார்கள், அவர்களைப் பார்க்கிலும் பலர் பதினைந்து நாட்கள் சென்ற பிறகு உணவை விரும்புகின்றவராவார்கள். இறைவன் அருள்வானென நம்புகின்ற தன்மையையுடைய முனிவர்கள் இவ்வாறு பலர். பல வகையான தவங்களைச் செய்தார்கள். அவர்கள், இவ்வாறு

தவஙகளேச் செய்தபொழுது இங்கே (திருக்களரிலே) எம் தலேவராகிய சிவபெருமான் சிவ ஞானத்தையளிக்கும்படி யான ஆனந்தத் தாண்டவத்தைச் செய்யவேணடிய சமய மும் சமீபத்தில் வந்தது.

மிகுமணி யருவிக் கந்தமா தனமா மோஙகலின் மேவிநல் விரதம், புகரறப் புரியு மோரறு பதிஞ யிரவ ரும் புதுமதி புனேந்து, துகிரிளங் கதிர்தோய்ந் திலகிய சடிலத் தோன்றல்கற் பகவனத் தியைந்து, மகிதலந் துதிக்க ஞானநா டகஞ்செய் காலமங் குணர்ந்திவண் வந்தார். *(13)*

13. மிகுகின்ற வேய் முத்து முதலிய மணிகளே வாரிக் கொண்டு இறங்குகின்ற அருவியையுடைய '**கந்தமாதனம்**' என்கின்ற மலேயை யடைந்து நல்ல தவத்தைக் குற்றமில் லாமல் செய்கின்ற ஒப்பற்ற அறுபதிஞயிரம் முனிவர்களும் என்றும் புதிதாக விளங்கும் சந்திரனேயணிந்தும் பவளம் போல இனிய செவ்வொளியை யடைய்ப் பெற்றும் விளங்கு கின்ற சடையையுடைய சிவபெருமான் பாரிசாத வனத்திலே வெளிப் பட்டுப் பொருந்தி பூவுலகமெல்லாம் புகழ்ந்து கொண்டாடச் சிவஞானத்தையளிக்கும் ஆனந்தத் தாண்ட வத்தைச் செய்தருளும்படியான காலத்தை அங்கேயே தெரிந்து, சொல்லப்படுகின்ற இத்திருக்களருக்கு வந்தார்கள்.

மற்றைய நாடகம் போலாது இவ் இறைவனுடகம் முத் திக் கேதுவாகிய சிவஞானத்தையளித்தலால் ஞான நாடகம் எனப்படுகிறது. மற்றைய நாடகங்கள் காமம் வீரம் முதலியவற்றை யளிக்கும் என்க.

சொல்லப்படும் பாரிசாத வனத்திற்குக் கந்தமாதன பர்வதம் சேய்த்தாதலால் பாரிசாதவனம் இவண் எனப் பட்டது. எடுத்துச் சொல்லப்படுதலால் பாரிசாதவனம அண்மையதாகக் கருதப்படுகிறது. அண்மையது தன்மைக் கணடக்கப்படுதலால் "**இவண் வந்தார்**" என்றனர். இங் குச் "**செலவினும் வரவினும்**" என்னும் தொல்காப்பிய நூற்பாவில் சேனவரையர் உரைத்தவுரை நினேவிற்கு வரு கிறது.

வேறு.

நண்ணு மாதவர் தாந்துரு வாசனை நயந்தா
ரெண்ண ருந்துரு வாசனுச் சிரமமின் றெய்தி
மண்ணி னேமலம் புனிதமா யினமுனம் வகுத்த
புண்ணி யப்பய னிதுவெனுப் பின்னரும் புகல்வார். (14)

14. அங்கே வந்து சேர்கின்ற பெரிய தவமுடைய அறுபதினுயிரமுனிவர்களும் துருவாச முனிவரைக் காண விரும்பினவர்களாகி(அவராச்சிரமத்தையடைந்துஅவரைக்கண்டு,) எண்ணியளவிடற் கருமையான பெருமையையுடைய துருவாச முனிவருடைய ஆச்சிரமத்தை இன்றைக்குயாமடைந்து மலங்கள் எல்லாவற்றையும் கழுவிவிட்டோம் அதனுல் தூய்மையையுடையவர்களாயினேம் இத்தன்மை முன் முன் பிறவிகளில் யாம் செய்த புண்ணியத்தின் பயனுகும் என்று சொல்லிப் பின்னரும் சொல்லுகின்றவராக ஆயினுர்கள்.

வேறு.

இணைய மாதவற் காவிறை யாமுதற்
புனித னுனந்த நட்டம் புரியுமா
லனைய மாமுனி சீரினை யந்தமா
றனைய னுயினுஞ் சாற்றுதற் கொண்ணுமோ. (15)

15. இத்தகைய பெரிய தவ சிரேட்டராகிய துர்வாச முனிவருக்காக மகாசங்கார காரணனுகி உலகத்தோற்றத்திற்கு நிமித்த காரணனுகவும் எனறும்விளங்குகின்ற தூயவனுகிய சிவபெருமானே ஆனந்தத் தாண்டலத்தைச் செய்வார் என்ருல் அத்தகைய சிறந்த முனிவருடைய விழுப்பத்தை அந்தப் பிரகிருதிபுவன உலகத்தைக் காக்கும் திருமாலின் புதல்வரான பிரமதேவராலும் சொல்வதற்கு இயலுமா (இயலாது.)

சுத்த மாயா புவனபரியந்தம் சங்கரிக்கும் சங்கார காரணனுகி உலகத்தைத் தோற்றுவிக்கும் பரமசிவனே, ஆனந்தத் தாண்டவத்தைச் செய்வான். உருத்திரனல்லன் என்பார் "இறையாமுதல்" எனவும் அவனவ்வாருயவ

னெனினும் ஒன்றிலும் பற்ருது நிற்பான் என அவ்விறைவ னியல்பு தோன்ற 'புனிதன்' எனவும் கூறினர்.

காரியப் பிரமமன்று, உலகத்தை ஆக்கி அளித்து அழிக்குந் தடத்த இலக்கணமுடைய காரணப்பிரமமே ஆனந்தத் தாண்டவஞ் செய்தது என்பார் 'இறையாமுதல்' என்றனர் என்பர் வேதாந்த சித்தாந்த மரபினர்.

இறை=அழிப்பவன்; நிலைப்பவன்.

என்ன மாதவர் யாவரு மின்னன
பன்னி யேத்தினர் பன்முறை யத்தவ
மன்ன னீங்கிவர்க் கண்டு மகிழ்வுறச்
சொன்ன யந்துபல் காற்றுதித் தானரோ. (16)

16. என்று கூறி அத்துடனில்லாமல் மேலும் அம் மாதவர்கள் இவைபோல இன்னும் பலபடியாகப் பலதரம் சொல்லிப் புகழ்ந்தார்கள்- அந்தத் தவராசராகிய தூர் வாச முனிவரும் அவர்களைக் கண்டு அவர் புகழ்ந்ததையுளங் கொண்டு விரும்பி அவர்கள் மகிழும்படியாக பலதரம் பதி லாக அவர்களைப் புகழ்ந்து பேசினர்.

மங்கை பாகன் றிருவரு ளான்மறை
யெங்கு மோது மியல்பி னிருடியுந்
தங்கு மன்புறு தன்னடி யாரொடு
மங்க வர்க்குப சாரயிக் காற்றினன். (17)

17. உமையம்மையாரோடு கூடிய பரமசிவனுடைய திருவருளாலே வேதங்களைச் செல்லுமிடமெல்லா மோது பவரான தூர்வாச முனிவரும் தன்னைவிட்டு நீங்காமல் நிழல்போலக் கூடவுறைகின்ற குருபக்தியோடு கூடிய தன் மாணவர்களோடும் அங்குத் தன்னுச்சிரமத்தில் வந்த அந்தக் கந்தமாதன பர்வதவாசிகளாகிய அறுபதினயிர முனிவர்களுக்கும் வேண்டிய அன்னபான முதலிய எல்லா வுபசாரங்களையும் போதும் போது மென்றுரைக்கும்படி மிகச் செய்தார்.

அருட்சத்தியோடு கூடியவழியே இறைவன் ஐந் தொழிலையுமாற்றுவான் என்பதை மீண்டு மீண்டுங் குறிக் கவே "*மங்கைபாகன்றிருவருளால்*" எனவும் அவனரு

ளாலேயே அவன்ருள் வணங்க இயலுமாதலின், "திருவருளால் மறை யெங்குமோதுமியல்பினிருடி" எனவுங் கூறினர். மறை என்பது 'மந்திரம்' என்னும் பொருளையுந் தருதலால் "சிவபஞ்சாக்கரததை செல்லுமிடமெல்லாஞ் செபிக்கின்ற தூர்வாச முனிவர்" எனப் பொருள் கூறல் மிகப் பொருந்தும். இருடியும்—உம்மை உயர்வு குறித்தது - அடியாரோடும் - உம்மை. இறந்தது தழீயது.

இப்பண் பாக வியற்றிடு மாதவ
ஞெப்பி னல்லுப சார முவந்தன
ரெப்ப யன்களு மெய்தின ராமென
வப்பெ ருந்தலத் தாங்கவர் வைகினர். (18)

18. இவ்வகையாகத் தூர்வாச முனிவர் செய்த நிகரில்லாத நல்ல உபசாரத்தைப் பெற்று மனமகிழ்ந்தவர்களாகி நால்வகைப் பயன்களையும் அடைந்தவர்களாயினரென்று சொல்லும்படி அந்தப் பெருமை பொருந்திய பாரிசாதவனமாகிய திருக்களரிலேயே அவர்கள் தங்கினர்கள்.

சான்றோராகிய தூர்வாசரதருளுக்கிலக்கானமையால் "*எப்பயன் களுமெய்தினராமென*"க் கூறினர்; சான்றோர் அருளுக்கிலக்கானவர் எல்லாப்பயன்களையும் பெறுதலொருதலையாகலின்.

'**ஆம்**' என்பது ஒற்றுமைப் பொருளில் வந்தது; இவை பெயராம் என்புழிப்போல.

வதியுமா தவர்க ளனைவருங் கனக கற்பக வனேசன்மா மணிப்பொற், பொதுவிலா னந்த நடம்புரிந் தருளு மளவும்வெண் புனிதநீ றணிந்து விதியினு லரிய வுருத்திர வக்க மாலிகை விதமுறப் புனைந்தாங், கிதய—நெக் குருகி யவ்பினு லரனை யெண்ணியீங் கிவருறும் வேளை. (19)

19. அங்கே தங்கிய அறுபதினுயிர முனிவர்களாகிய இவர்களனைவரும் பொன்வடிவான பாரிசாதவனப் பெருமான் சிறந்த மணிகளழுத்திய பொன்மயமான பேரம்பலத்திலே ஆனந்தத்தாண்டவத்தைச் செய்தருளும் வரையி

னெனினும் ஒன்றிலும் பற்ருது நிற்பான் என அவ்விறைவ னியல்பு தோன்ற 'புனிதன்' எனவும் கூறினர்.

காரியப் பிரமமன்று, உலகத்தை ஆக்கி அளித்து அழிக்குந் தடத்த இலக்கணமுடைய காரணப்பிரமமே ஆனந்தத் தாண்டவஞ் செய்தது என்பார் 'இறையாமுதல்' என்றனர் என்பர் வேதாந்த சித்தாந்த மரபினர்.

இறை=அழிப்பவன்; நிலைப்பவன்.

என்ன மாதவர் யாவரு மின்னன
பன்னி யேத்தினர் பன்முறை யத்தவ
மன்ன னீங்கிவர்க் கண்டு மகிழ்வுறச்
சொன்ன யந்துபல் காற்றுதித் தானரோ. (16)

16. என்று கூறி அத்துடனில்லாமல் மேலும் அம் மாதவர்கள் இவைபோல இன்னும் பலபடியாகப் பலதரம் சொல்லிப் புகழ்ந்தார்கள்- அந்தத் தவராசராகிய தூர் வாச முனிவரும் அவர்களைக் கண்டு அவர் புகழ்ந்ததையுளங் கொண்டு விரும்பி அவர்கள் மகிழும்படியாக பலதரம் பதி லாக அவர்களைப் புகழ்ந்து பேசினர்.

மங்கை பாகன் றிருவரு ளான்மறை
யெங்கு மோது மியல்பி னிருடியுந்
தங்கு மன்புறு தன்னடி யாரொடு
மங்க வர்க்குப சாரயிக் காற்றினன். (17)

17. உமையம்மையாரோடு கூடிய பரமசிவனுடைய திருவருளாலே வேதங்களைச் செல்லுமிடமெல்லா மோது பவரான தூர்வாச முனிவரும் தன்னைவிட்டு நீங்காமல் நிழல்போலக் கூடவுறைகின்ற குருபக்தியோடு கூடிய தன் மாணவர்களோடும் அங்குத் தன்னுச்சிரமத்தில் வந்த அந்தக் கந்தமாதன பர்வதவாசிகளாகிய அறுபதினுயிர முனிவர்களுக்கும் வேண்டிய அன்னபான முதலிய எல்லா வுபசாரங்களையும் போதும் போது மென்றுரைக்கும்படி மிகச் செய்தார்.

அருட்சத்தியோடு கூடியவழியே இறைவன் ஐந் தொழிலையுமாற்றுவான் என்பதை மீண்டு மீண்டுங் குறிக் கவே "மங்கைபாகன் றிருவருளால்" எனவும் அவனரு

ளாலேயே அவன்ருள் வணங்க இயலுமாதலின், "திருவருளால் மறை யெங்குமோதுமியல்பினிருடி" எனவுங் கூறினர். மறை என்பது 'மந்திரம்' என்னும் பொருளையுந் தருதலால் "சிவபஞ்சாக்கரததை செல்லுமிடமெல்லாஞ் செபிக்கின்ற தூர்வாச முனிவர்" எனப் பொருள் கூறல் மிகப் பொருந்தும். இருடியும்–உம்மை உயர்வு குறித்தது - அடியாரோடும் - உம்மை. இறந்தது தழீயது.

இப்பண் பாக வியற்றிடு மாதவ
ஞெப்பி னல்லுப சார முவந்தன
ரெப்ப யன்களு மெய்தின ராமென
வப்பெ ருந்தலத் தாங்கவர் வைகினுர். (18)

18. இவ்வகையாகத் தூர்வாச முனிவர் செய்த நிகரில்லாத நல்ல உபசாரத்தைப் பெற்று மனமகிழ்ந்தவர்களாகி நால்வகைப் பயன்களையும் அடைந்தவர்களாயினரென்று சொல்லும்படி அந்தப் பெருமை பொருந்திய பாரிசாதவனமாகிய திருக்களரிலேயே அவர்கள் தங்கினுர்கள்.

சான்ருேராகிய தூர்வாசரதருளுக்கிலக்கானமையால் "எப்பயன் களுமெய்தினராமென"க் கூறினர்; சான்ருேர் அருளுக்கிலக்கானவர் எல்லாப்பயன்களையும் பெறுதலொருதலையாகலின்.

'ஆம்' என்பது ஒற்றுமைப் பொருளில் வந்தது; இவை பெயராம் என்புழிப்போல.

வதியுமா தவர்க ளனைவருங் கனக கற்பக வனேசன்மா மணிப்பொற், பொதுவிலா னந்த நடம்புரிந் தருளு மளவும்வெண் புனிதநீ றணிந்து விதியினு லரிய வுருத்திர வக்க மாலிகை விதமுறப் புனைந்தாங், கிதயநெக் குருகி யள்பினு லரனை யெண்ணியீங் கிவருறும் வேளை. (19)

19. அங்கே தங்கிய அறுபதினுயிர முனிவர்களாகிய இவர்களனைவரும் பொன்வடிவான பாரிசாதவனப் பெருமான் சிறந்த மணிகளழுத்திய பொன்மயமான பேரம்பலத்திலே ஆனந்தத்தாண்டவத்தைச் செய்தருளும் வரையி

லும் வெண்மையானதும் தூய்மையையுடையதுமாகிய திருநீற்றைப்பூசி விதிப்படி பெறுதற்கரிய உருத்தீராக்ஷ மாலையைப் பலவிதமாகத் தரித்து அன்பினுலே மன நெகிழ்ந் துருகப்பெற்று மும்மலங்களையும் போக்குதல் வாயிலாகப் பிறவியையும் போக்குதலால் "அரன்" என்னும் பெயர் பெறுகின்ற சிவபெருமானைச் தியானித்து அங்கே தங்கியிருக்கும் சமயத்தில்

கிழப்பசு ஈனுதகிடேரி முதலியவற்றின் சாணத்தாலன்றி விதித்தபடியுள்ள சாணத்தால் அமைக்கவேண்டிய முறைப்படி அமைக்கப்பெற்றதும் வெண்மையாகவுள்ளதுமாகிய திருநீறே எல்லாக் குற்றங்களையும் போக்கி எல்லாப் பயன்களையுந் தரவல்லதாகும் என்பதை நினைப்பூட்ட ' வெண் புனிதநீறு " என்றனர்.

உருத்திராக்ஷத்தைப் பாபிகள் அணிதற்கு வெறுப்பாராதலால் ,அவர்களுக்குப் பெறுதற்கரியனவாக அவை இருத்தலின், 'அரிய உருத்திராக்கமாலிகை' என்றனர்.

தலைக்கண்ணி கழுத்துமாலை தோட்காப்பு முதலியனவாக அணியப்படுதலின் "விதமுற" எனவும் அங்ஙனமணிதல் சிவனடியாருக்குப் பேரழகு பயத்தால் "புனைந்து" எனவும் கூறினர்.

புனைதல்=அலங்கரித்தல்.

தண்ணறும் பசுந்தோட் டளிதவழ் முளரிச் சதுமுகன் ருளமொத் திசைப்ப, மண்ணரும் வயிரக் கிரிநிகர் பஃறோள் வாணன்வன் குடமுழ வியம்பப், பண்ணமை நரம்பிற் றிவவியா ழிருவர் பல்லிசை யின்னமு துகுப்ப, நண்ணரும் புவனங் கிழியவிண் ணதிர நந்திமத் தளயொலி திளைப்ப. (20)

குளிர்ந்த மணமுள்ள மெல்லிதழ்களையுடையதும் தேன் பருக வண்டுகள் வந்து படிந்தூரப் பெறுவதுமாகிய தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவர் தாளத்தை மத்தள முதலியவற்றிற்கு ஒத்துப்போடவும், இப்பூவுலகில் சிறந்த வச்சிரமலையை யொத்த பல தோள்களாலே (கைகளாலே) வாணசுரன் வன்மையான குட

முழாவை வாசிக்கவும். இனிய ஓசை யமைந்த நரம்புகளையும் வார்க்கட்டுகளையுமுடைய யாழினிள்றும் அசுவதரர் கம்பளர் என்னு மிருமுனிவரும் பலவித இசையாகிய அமிழ்தத்தைச் சொரியவும், பெருதற்கருமையான பூவுலக முதலிய புவனங் களெல்லாம் பிளவு படவும், ஆகாய முழுவது முழங்கவு மாக நந்தியம் பெருமான் அடித்தெழுப்புகின்ற மத்தள வொலி முழங்கவும்,

பிரமதேவர் தங்கும் பூவில் வண்டுகள் மொய்த்தலில்லை யாயினும் பூவிற்கேற்ற வடையாக "அளிதவழ்" என்றனர்.

கடையுகத் ததிரு மிடியெனத் தேவ துந்துபி பன் முறை கறங்கக், கொடிபுரை மருங்குற் றரளவெண் முறு வற் குழைதவழ் கொடிய வாட் டடங்கட், பிடிநடைக் களபப் புணர்முலை யிமவான் பெண்ணணங் கின்னகை பிறங்கப், படிமுழு தளந்த சுடருமிழ் திகிரி மாதவன் முறைமுறை பரவ. (21)

யுகாந்த காலத்தில் பெரு முழக்கம் செய்கின்ற இடி போலத் தெய்வ துந்துபி வாத்தியம் பலபடியாக முழங் கவும், பூங்கோடி போன்ற இடையையும் முத்துக்களை யொத்த பற்களையும் குழையென்னு மணியை அணிந்த காதுகளை வந்து மோதுகின்ற கொடுமையான வாள்களை யொத்த விரிந்த இரு விழிகளையும் பெட்டையானை போன்ற அசைந்த நடையினையும் களபச் சாந்தணிந்த நெருங்கிய முலைகளையுமுடைய இமயமலையரசன் மகளாகிய உமையம் மையாருக்கு மகிழ்ச்சியினுலே, (அதைத் தோற்றுவிக்க) புன்சிரிப்புத் தோன்றி விளங்கவும், பூமி முழுவதை ஓரடி யாலளந்தவராகிய ஒளியை வீசுகின்ற சக்கரப் படையைத் திருக்கையிலேந்திய இலக்குமி நாயகராகிய திருமால் அடிக் கடி பலபடியாகத் துதிக்கவும்,

முறை=விதிப்படி. முறை=வரிசையாக. முறை முறை=விதிப்படி வரிசையாக எனப் பொருள் கூறலு மாகும். இனித் திருமால் என்பவர் பலராதலால் வரிசை யாகப் துதிக்க எனப் பொருள் கோடாலுமாகும்.

பணமணிச் சுடிகை யாயிரம் பரப்பும் பாதலத் துரகனு நறும்பூ, மணமலி பசும்பொற் கற்பக நாட்டின்

வலாரியுங் காண்டொறும் வணங்க, விணரொளி தருமா
தவர்கள்பன் னிருவ ரெண்டிசைப் பாலர்நின் றிறைஞ்சத்,
துணையில்வெள் விடைமேல் வருமுருத் திரர்கள் பதி
னொரு வருமுறை துதிப்ப. (22)

மணிவடிவாகிய உச்சிக் கொண்டைகளையுடைய ஆயிரம் படங்களை விரிக்கின்றவனுகிய பாதாள உலகத்திலே இருக்கின்ற ஆதிசேடனும் நல்ல பூக்களின் மண நிறைந்தவையும் என்றுமிளமையானவையும் பொன் வடிவமானவையுமாகிய கற்பகமரங்கள் நிறைந்த தெய்வலோகத்திலேயுள்ள, பலன் என்னு மசுரனைக் கொன்ற இந்திரனும் காணுந்தோறும் காணுந்தோறும் தலைவணங்கிக் கும்பிடவும், அடர்ந்த ஒளியைச் செய்கின்ற சூரியர் பன்னிருவரும் எட்டுத்திக்குப் பாலகர்களும் நின்று வணங்கவும், ஒப்பற்ற வெண்மையான ரிஷபங்களின் மேலே எழுந்தருளி வருகின்ற உருத்திரர் பதினொருவரும் வரிசையாக நின்று துதிக்கவும்,

'பசுமை' என்பது இளமையையுணர்த்துகின்றது. பலாரி என்பது வலாரி என ஆயது. வகர பகரங்களுக்கு ஓரபேதத்தன்மையிருத்தலின் (பகரத்திற்கு வகரம் போலியாக வருமாதலால்) என்க. வல + அரி = வலாரி. அரி = பகைவன். வலாரி என்பது, தீர்க்கசந்தி.

வானவர் கருடர் சித்தர்கந் தருவர் கின்னரர் மருவு
கிம் புருடர் தானவ ருரகர் நிருத்தரா காச வாசர்விச்
சாதர ருரையா மோனர்பன் னரிய வுத்தர குருவோ
ரீங்கிவர் முறைமுறை பணிய மேனகைத் திலகுந் தார
கைத் திரளும் பூதமும் விரவிமுன் றுதிப்ப. (23)

தேவர்கள் கருடர்கள் சித்தர்கள் கந்தருவர் பொருந்திய கிம்புருடர் அசுரர் நாகர் நிருத்தர் ஆகாய வாசிகள் விச்சாதரர் வாய் பேசாத மௌனிகள் சொல்லுதற்கருமையான பெருமையையுடைய உத்தர குருவிலுள்ளவர்கள் ஆகிய இவர்கள் வரிசை வரிசையாக நின்று வணங்கவும், மேலே ஒளிவிட்டு விளங்கும் நக்ஷத்திரக் கூட்டங்களும் பூதகனங்களும் கலந்து முன்னின்று துதிக்கவும்,

கின்னரர் = குதிரை முகங்கொண்ட ஓர் சாதியினர். கிம்புருடர் = குதிரையுடம்பையுடைய ஓர் சாதியினர். இவ

ரெல்லாம் தேவசாதியினராவார்கள். வித்தியாதரர் என்பது விச்சாதரர் எனத் தற்பவமாயிற்று. விச்சாதரர் வேறு கந்தர்வர் வேறு. எல்லாரும் தேவ சாதியினரே யாவர்.

பிள்ளைவெள் ளெகின மெனுநடைத் துவர்வாய்ப்
பிறைநுதற் பேரெழிற் றிருவுங், கள்ளவிழ் கூந்தற்
கலைமக ளோடு கவிரிதழ்ப் புலோமசை யணங்கும்,
வள்ளையங் குழைதோய் சேயரிக் கருங்கண் மதிநுத
லுருப்பசி முதலாங், கிள்ளையங் குதலை யரமடந் தையருங்
கிளருமன் புறத்தனி பரவ. (24)

வெண்மையான இள அன்னைப் பறவை போல நடக்கின்ற நடையினையும் பவளம் போலச் செம்மையான வாயையும் பிறைத் திங்களை யொத்த நெற்றியினையும் உடைய மிக்க அழகு வடிவான இலக்குமிதேவியும் பூக்கள் கட்டுவிட்டுத் தேனொழுகும்படி அணிந்த கூந்தலையுடைய கலைகளுக்குத் தலைவியாகிய சரசுவதிதேவியும் முருக்கம் பூவை யொத்த உதடுகளையுடைய இந்திராணியும் வள்ளைக் கொடியை ஒத்தவையும் குழையை யணியப் பெற்றவையுமாகிய காதுகளிலே வந்து பொருந்துகின்ற செவ்வரி பரந்த கண்களையும்பிறைச்சந்திரனை யொத்த நெற்றியையுடையஊர்வசி முதலிய கிளி போன்றினிய மதலை மொழிகளைப் பேசுகின்ற தெய்வப் பெண்களும் விளங்குமன்பு பொருந்தச் சிறப்பாகத் துதிக்கவும்,

மூன்றரைக் கோடி தீர்த்தமுந் தெய்வ நதிகளுந்
துகிர்க்கொடி முரித்துக், கான்றொளி விடுக்கும் வெண்
மணி வரன்றிக் கரை தொறு மெறிதிரைக் கடலும், வான்
றவப் பயனு லுருப்பல வெடுத்து விருப்பமாய் வலம்வர
மகிழ்வாற். சான்றமா தவர்கள் குழுவெலா நெருங்கித்
திசைதொறுஞ் சார்ந்துசே விப்ப. (25)

மூன்றரைக் கோடியளவுள்ள தீர்த்தங்களும் தெய்வத் தன்மை பொருந்திய நதிகளும் பவளக் கொடிகளை முறியும்படி செய்தும் ஒளியை வெளிவிட்டுப் பரப்புகின்ற முத்துக்களை அரித்தும் கரைகளெல்லாவற்றிலும் வீசுகின்ற அலைகளையுடைய கடலும் சிறந்த தவப்பயனாலே பலவுருவங்களை

மேற்கொண்டு விருப்பமுடன் வலம் வரவும், மகிழ்ச்சி யினுலே நிறைந்த முனிவர்களின் கூட்டமனைத்தும் நெருக்க மாக எல்லாத் திசைகளிலும் நின்று வணங்கவும்,

பாதல முழுவதும் பொன்னடித் துணையா வம்பர மருங்குலாப் பரந்த, மாதிர மனைத்துங் கரங்களா வயங்கத் தாரகை மாலிகை வனைந்து, மீதுயர்ந் திலங்கும் பிறைகுலா மவுலி யண்டத்தி னப்புறம் விளங்க, வாத வன் கனற்று மெரிமதி யெனுமூன் றருள்விழி சுரந்தருள் விளைப்ப. (26)

பாதாள உலக முழுதும் பொன் போன்ற அருமை யான இருதிருவடிகளாகவே விளங்கவும் ஆகாயத்தின் பக் கங்களின் விளங்கி விரிந்த திசைகள் எல்லாவற்றிலும் கைகளாகவே விளங்கவும் நக்ஷத்திரங்கள் எல்லாவற்றை யுஞ் சிறு மாலையாக அணிந்து, மேலேயுயர்ந்து விளங்கும் சந்திரனைச் சூடி விளங்குகின்ற முடியானது, அண்டத்திற்கு வெளிப்புறம் போய் விளங்கவும் சூரியன், சுடுகின்ற அக்கினி, சந்திரன் என்னும் மூன்ருகிய அருள் விழிகளும் அருளைப் பெருக்கிப் பொழியவும்,

மாலிகை = சிறுமாலை. '*விளைப்ப*' என்பது பொழி தலின் மேனின்றது.

மருவிரி முளரித் தாளிலொன் றூன்றி யொருபதந் தூக்கிவான் முகட்டிற், றிரிதரு மிரவி யாயிர முதித்தாங் கெனவுமிழ் சேயொளி பரப்பத், தருவனத் திலகு மாமணிப் பொதுவிற் சக்கரச் சுழலெனத் தயங்கப், பிரம தாண் டவஞ்செய் தருளினன் றவளப் பிறைகுலா மவுலி யெம் பெருமான். (27)

மணம் விரிகின்ற தாமரை மலர் போன்ற இரு திரு வடிகளில் ஒரு திருவடியை முயலகன் மேலே மிதித்து ஒரு திருவடியை வானத்தின் உச்சியிலே திரிகின்ற சூரியன் ஆயிரமாகத் தோன்றினுற்போல வெளி விடுகின்ற செந்நிற வொளியை விரிக்கும்படி மேலே தூக்கிப் பாரிசாத வனத் திலே விளங்குகின்ற பெரிய சிறந்த மணிகளாலமைக்கப் பெற்ற பேரம்பலத்திலே சக்கரம் சுழலுவதுபோல விளங்

கப் பிரமதாண்டவம் என்னும் நடனத்தை, வெண்மையான பிறைச் சந்திரனை யணிந்த முடியையுடைய எங்கள் தலைவராகிய சிவபெருமான் செய்தருளினர்.

பூவரும் பிரம னுயிர நயனப் புரந்தரன் புணரியை
யுழக்கித், தேவர்கட் கமுத முதவிய திகிரிச் செங்கண்மா
யவனெனுந் திறத்தோ. ரேவரு முணர வரியவா னந்த
நடம்புரி வேலையி னெவரு, மோவியப் படிவ மொத்தனர்
கரண காரிய மனைத்தையு மொழிந்தார். (28)

தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவரும் ஆயிரம் விழிகளையுடைய இந்திரனும் கடலைக் கலக்கித் தேவர்களுக்கு அமிழ்தத்தை அளித்த சக்கராயுதத்தையும் செந்நிறமான விழிகளையும் கரிய திருமேனியையுமுடைய திருமாலும் ஆகிய இவர்களும் இவர்களை யொத்த தன்மையுடைய எல்லாரும், தெரிந்து இன்புறும்படி,செய்தற்கருமையான ஆனந்தத்தாண்டவத்தை செய்யும் பொழுது அகக்கரண புறக்கரணங்களாற் செய்யப்படும் செயல்களற்று எல்லாரும் சித்திரப்பதுமைபோல அசைவற்றுப் போயினர்.

வேறு.

வெவ்வரா வுலவிய வேணி யான்புரிந்
தெவ்வுயிர் முழுவதும் மியக்கு மிந்நட
மவ்வியந் தவிர்துரு வாச னன்பினுற்
செவ்விய மனமுறத் தெரிசித் தானரோ. (29)

கொடிய பாம்புகள் உலவுகின்ற சடைமுடியையுடைய சிவபெருமான் செய்து எவ்வகைப்பட்ட உயிர்களாயினும் அவை யெல்லாவற்றையும் இயங்கும்படி செய்கின்ற இந்த நடனத்தைக் குற்றமற்ற தூர்வாசர் அன்பினேடு நேர்மையான மனம் பொருந்தும்படி தெரிசித்தார்.

அரோ—அசை.

இறைவன் செய்யும் ஐந்தொழிற்குஞ் செயப்படுபொருளாகச் சீவர்கள் இருத்தலால் "எவ்வுயிர் முழுவதுமியக்குமிந்நடம்" என்றனர்.

ஆரண முழுவதும் மாய்ந்து மேம்படு
பேரறி வாற்றரி சித்த பேர்சிலர்
வாரியிற் றிரண் முனி வரர்களுள்ளே மாலகல்
சீரிய மனத்திறை றெரிசித் தார்சிலர். (30)

கடல் போலத் திரண்டுவந்த முனிவர்களுக்குள்ளே வேதங்கள் முழுவதையுமாராய்ந்தமைந்த பெரிய அறிவிேைடு (அபர ஞானத்தோடு) தரிசித்தவர்கள் சிலபேர். சில பேர் ஐயந்திரிபின்றி விழுமிய மனத்திேைடு (பர ஞானத்திேைடு) தரிசித்தார்கள்.

"மனக்ஞானே" என்பதனுல் மனம் என்பது அறிவை யுணர்த்து மெனல் அறிக.

கந்தமா தனகிரி யகன்று கண்ணுற
வந்தமா தவர் துரு வாசன் வியாதன்பின்
முந்துமா முனிவரர் பிறரு முற்றியாங்
கிந்தவா றரனடந் தரிசித் தேத்தினர். (31)

கந்தமாதன பர்வதத்தைவிட்டு நடன தெரிசனம் காணவந்த அறுபதினுயிர முனிவர்களும் தூர்வாசரும் வியாசரும் பின்னர் அவர்களைப் போல மேம்பட்ட பிற முனி சிரேட்டர்களும் அங்கே சூழ்ந்து மேலே சொல்லியபடி சிவ பெருமானுடிய நடனத்தைக்கண்டு துதித்தார்கள்.

வேறு.

வையக முதலா மைந்து பூதமும் பிறவு மற்றத்
தெய்வமு மிறையிற் பூழி யாயிறத் திரிக்குஞ் சூலத்
தையனின் ருடு மாற்ருற் றிருக்கள ரெனும்பே ராகி
யெய்திய புவன மூன்றின் மேன்மைபெற் றிலங்கிற்
றன்றே. (32)

பூமி முதலாகிய ஐந்து பூதங்களும் அவற்றின் காரிய மாகிய பிற பொருள்களும் தெய்வங்களும் ஆகிய எல்லா மும் ஒரு நொடிப் பொழுதிலே தூசியாக ஆகி அழியும்படி சுழற்றுகின்ற சூலத்தையுடைய தலைவராகிய சிவபெருமான் நின்ருடுகின்ற தன்மையினுலே (பாரிசாதவனமானது)

திருக்களர் என்கின்ற பெயரையுடையதாகி மேன்மை பொருந்திய மூன்றுலகத்திற்கும் மேலாந்தன்மையை அடைந்து விளங்கியது.

இப்பாவினுல் இங்கே ஆடிய தாண்டவம் சங்காரத்தைக் குறிக்கும் தாண்டவமாகும் எனக் குறிக்க நேர்கின்றது. பல பாக்களில் "ஆனந்தத்தாண்டவம்" எனக் குறிப்பிடுகின்ருர். ஆனந்தத்தாண்டவமாவது பஞ்ச கிருத்தியத்தையும் சேரக் குறிப்பிப்பது என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். "பிரமதாண்டவம்" எனச் சிறப்பாக இங்கே ஆடிய தாண்டவத்தைக் குறிப்பதால், அது எல்லாக் கிருத்தியத்தையும் குறிப்பதாக இருப்பதால் பெயர் பெற்றதாகும். எனக் கருதமிடமுமிருக்கிறது. அல்லது எல்லா ஆன்மாக்களுக்குஞ் சேர ஓய்வைத் தருதலால் சங்கார தாண்டவம் பிரமதாண்டவம் எனப் பெயர் பெற்றது எனவும் ஓய்வு ஆனந்த சனகமாதலின் ஓய்வைத் தருதலால் அச்சங்கார தாணடவமே ஆனந்தத் தாண்டவமெனப் பெயர் பெற்றதெனவுங் கூறலாம்.

களர்ப்பூமியில் ஒரு பொருளின்தோற்றமுமில்லாதது போல ஒரு பொருளுந் தோன்றலின்றி ஒடுங்கி நிற்றலைச் செய்யும் சங்காரத்தைக் குறிப்பிடுந் தாண்டவத்தைச் செய்தற்குப் பாரிசாதவனம் இடமாக ஆயினமையால் **களர்** எனப் பெயர் பெற்றது என்பது பாவலர் குறிப்பாகும் போலும்.

மேலே குறிப்பிடுங்கருத்துப் பாவலர்க்குள தாயின் "சூலத்தையனின்ருடுமாற்ருல்" என்பதற்கு, சூலத்தோடு சிவபெருமான் நிலைபெற்று ஆடுந் தன்மையினுலே எனப் பொருள் கொள்ளல் நன்று.

கமலையிற் பிறந்து மேலாங் காசியி லிறந்துங் கண்ணு
லமையுறு பசும்பொற் றில்லை யம்பலங் கண்டு மன்பாய்
விமலன்வா ழுருணை நாளு முன்னியும் வீடு காண்பார்
சமைதிருக் களருள் யாதொன் றியற்றினு முத்தி
சார்வார். (33)

திருவாரூரிலே பிறத்தலாலும் காசியிலே தங்கி இறத்தலாலும் (சிதம்பரத்தில்) பெரும்பற்றப் புலியூரில் பசுமை

மையானபொன் னம்பலத்திலே நடராஜப் பெருமானைத் தரிசித்தலாலும் அன்போடு, நிர்மலராகிய சிவபெருமான் உருவாகத் தங்குகின்ற திருஅண்ணுமலையைத்தினந்தோறுந் தியானித்தலாலும் (நினைத்தலாலும்) அன்பர்கள், வீடு பேறடைதலைச் செய்வார்கள் (மோட்சமடைவார்கள்) எல்லா வளங்களும் அமைந்த திருக்களரிலே முற்கூறிய பிறத்தல் முதலியவற்றில் எதைச் செய்தாலும் மோட்சத்தை அடைவார்கள்.

காண்பார்=செய்வார். செய்வார் என்பது அடைவார் என்பதை யுணர்த்திற்றென்க; பொதுவானது, சிறப்பிற் குமாகுமாதலால். காண் என்பது செய்தலை யுணர்த்து மென்பது "**முனைவன் கண்டது**" (தொல்காப்பியம்) என் பது முதலியவற்ருலறியப்படும். "**இலங்கையிலாதவன் போகக் கண்டான்**" (திருவரங்கத்தந்தாதி) என்பது மதனை வலியுறுத்து மென்க.

அலர்தலைப் புவன மீதிற் சிவபதி யனைத்தி னுந்தண்
மலர்விரி பாரி சாத வன முதற் றலமாம் யார்க்கும்
புலைமல மூன்றும் போக்கி யிருவினைப் புணர்ச்சி நீக்கித்
தொலைவில்பே ரின்ப நல்குந் தூயவீ டளிக்கு
மாதோ. (34)

விரிந்த இடத்தையுடைய பூலோகத்திலேயுள்ள சிவ தலங்களெல்லாவற்றினுள்ளும் குளிர்ந்த மலர்கள் மலர் கின்ற பாரிசாதவன மென்னுந் தலம் தலைசிறந்ததாகும். அத்தலம் எல்லாருக்கும் இழிந்த ஆணவம் மாயை கன்மம் என்னு மும்மலத்தையும் வலியறும்படி செய்து, செய்யும் இருவினைகளால் வந்து பொருந்துகின்ற சுகதுக்கங்களையும் அவ்வாசனைகளையும் போக்கி அழிவில்லாத பேரின்பத்தைக் கொடுக்கும்படியான வீடு பேற்றை ஞானவாயிலாகத் தரும்.

மாதோ—அசை.

எல்லாப் புவனமும் விரிந்த இடமுடையதாயினும் "*அலர்தலைப்புவன*" மெனக் கண்ணூரக் கண்டதை யுள்ள படி கூறியதாகும். என்க.

இருவினைகளால் வந்து பொருந்துகின்ற சுகதுக்களை யும் வினைவாசனைகளையும் "இருவினைப்புணர்ச்சி" யென் றனர்; வினைமும் மலத்துடைங்குதலின்,

விருப்புறக் குருவின் றாரம் விழைத்தன ரேனு மாருச்
செருக்கினுன் மறையோர் பாலர் தெரிவையர்ச்
செகுத்தா ரேனு
முருத்தெழுந் தொருவன் செய்த வுதவியைக் கொன்று
ரேனுந்
திருக்கள ரடைந்தா ராயிற் றேவர்க்குந் தேவ
ராவார். (35)

விருப்ப மிகுதியால் குருவின் மனைவியைச் சேர்ந்தவர் களானுலும் நீங்காத செருக்கிலே வேத மோதும் வேதியர் களையும் இளைஞர்களையும் பெண்களையும் கொன்றவர்களானு லும் கோபித்து வந்து, ஒருவன் செய்த உதவியை மறந்து அவனுக்குத் தீமையைச் செய்தவர்களானுலும் திருக்கள ரைச் சேர்வார்களேயானுல் தேவ தேவராக ஆகிவிடு வார்கள்.

செய்த பாபத்தால் நரகலோகம் புகாமல் தேவலோகத் திலேயுள்ள தேவர்களெல்லாருங் கொண்டாடும்படியான சிறந்த தேவர்களாக ஆவார்கள் என்றபடி இனி தேவர் களுக்குத் தலைவராகவுள்ள இந்திராதி தேவர்களாவார்கள் எனினுமாம்.

முகிழ்விரி யிதழி வேய்ந்த புரிசடை முதல்வ னின்ன
தகையவாங் கனகப் பைம்பூந் தருவனச் சபையி னுப்ப
ணகிலமு முனிமுர் விண்ணே ரனைவரு மன்பி னேக்கி
மகிழ்வுற நிருத்தந் தெய்வ வருடமட் டளவுஞ்
செய்தான், (36)

மொட்டாக இருந்து விரிகின்ற கொன்றை மலர் மாலையைச் சூடிய முருக்குண்ட சடையையுடைய தலைவராகிய சிவபெருமான் இத்தன்மையான பாரிசாதவனத்தில் பொலிவு தங்கிய பொன்னம் பலத்தின் மத்தியிலே பூவுல கத்தார் எல்லாரும் முனிவர்கள் தேவர்கள் எல்லாரும் அன்

போடு பார்த்து மகிழ்ச்சியடைய நடனத்தை ஒரு தேவ வருஷம் அளவும் செய்தருளினர்.

அண்டராண் டளவுந் தாண்ட வம்புரி யண்ணல் பின்ன
ரெண்டரு மனத்தாற் றியானித் திடுந்துரு வாசன் காமத்
தண்டிரைப் பரவை நீத்த தவமுனி வரையு நோக்கிக்
கண்டிரோ வெமதா னந்த நடமெனக் கழறி ஞனல். (37)

ஓர் தேவயாண்டு வரையிலும் நடனத்தைச் செய்தருளுகின்ற தலை சிறந்தவராகிய சிவபெருமான், பின்னர் நல்ல மன மென்று கருதத்தக்க மனத்திஞலே தன்னைத் தியானிக்கின்ற துருவாசரையும் காமக்கடலைத் தாண்டிய மற்றைய தவமுனிவர்களையும் கடைக்கண்ணுலே பார்த்து எம்முடைய ஆனந்தத்தாண்டவத்தைப் பார்த்தீர்களா என்று கேட்டார்.

'*தண்டிரை*' என்பது கடலுக்கேற்ற அடையாகும். "*கழறுதல்*" என்பது ஈண்டு விஞதல் மேனின்றது; சொல்லுதல் என்னு மொற்றுமையான் என்க.

அம்மொழி யறைக் கேட்ட தவத்துரு வாச ஞதி
யெம்முனி வரர்கள் யாரு மின்பமுற் றிறைஞ்சி யன்பான்
மெய்ம்மயிர் பொடிப்பப் பொங்கி விழிபுனன் மாரி சிந்த
மைம்மறை மிடற்ரேன் கேட்ப வின்னன மகிழ்ந்து
சொல்வார். (38)

(இறைவர்) அந்த மொழியைச் சொல்லவுமதைக் கேட்ட தவமுடைய துருவாச முனிவர் முதலிய எல்லா முனிவர்களும் ஆனந்த மடைந்து வணங்கி அன்பிஞலே உடம்பிலே மயிர்சிலிர்க்கப் பெற்றும் கண்களினின்றும் நீரானது பொங்கி மழைபோல ஒழுகப் பெற்றும் கரிய விடத்தை மறைத்து வைத்திருக்கின்ற கண்டத்தையுடைய சிவபெருமான் செவிமடுத்தருளுமாறு இவ்வாறு மகிழ்ச்சி கொண்டு சொல்லத் தொடங்கினர்கள்.

அறுபகை துரந்து நீங்கா மும்மல மகற்றி நான்கா
யுறுகதி யொருவி யோரேழுற்பவந் துடைத்தார்க்கேனும்
பிறையணி யிறைவ நீசெய் பிரமதாண் டவத்தைப் பேணி
மறுவிலிந் தியத்தாற் றுய்ய மனத்திஞ லறியலாமோ.(39)

காமக் குரோத முதலிய அரிசட்வர்க்கத்தையும் நீக்கிச் சிவஞானத்தாலன்றி நீங்காத மூன்று மலங்களையும் வலி யடங்கச் செய்து நான்காகப் பொருந்திய கதிகளையும் களைந்து எழுவகைப் பிறவிகளையும் ஒழித்தவர்களுக்காவது, பிறைச் சந்திரனை யணிந்த தலைவரே தேவரீராடியருளிய பிரமதாண்டவத்தை, தீய விடங்களிலே செல்லவிடாமல் காப்பாற்றுதலால் குற்ற மற்ற இந்திரியங்களாலும் தூய்மையான மனத்தினாலும் காணுதற்கும் எண்ணுதற்கு மியலுமா.

எல்லையி லண்ட கோடி யெனுமொளிர் தரளங் கோத்து
மெல்லிடைச் சுணங்கு போர்த்த வெம்முலைக் கணியுங் கோலப்
பல்வளைத் தளிர்க்கை முக்கட் பராபரை யன்றி யுன்ற
னல்லெழிற் பரமா னந்த நடமெமக் குணர லாமே. (40)

அளவில்லாத அண்டங்கள் என்னும் விளங்குகின்ற முத்துக்களை கோவையாகக் கோத்து மெல்லிய இடையினாலே தாங்கப் பெறுகின்ற தேமல்படர்ந்த விரும்பத்தக்க முலைகளுக்கணியாக அணிகின்றவரும் அழகிய பலவாகிய வளையல்களை யணிந்த தளிர்போன்ற கைகளையுடையவரும் பராபரையுமாகிய உமையம்மையாரை யல்லாமல் தேவரீருடைய அழகிய எழுச்சியான பரமானந்தத்தைத் தரவல்ல நடனத்தை எங்களை யொத்தவருக்கு அறிதல் இயலுமா.

ஆயினு மடியோ மெங்க ளறிவினுக் கியைந்த வாற்றா
னீயுகந் தாடு மாட னெஞ்சநெக் குருகி நோக்கி
மாயிரும் பிறவிப் பௌவ மலச்சுறா விழுங்கா வண்ணந்
தீயவை தவிர்க்கு ஞானப் புணையினா னீந்திச் சென்றோம். (41)

அவ்வாறிருந்தாலும் தேவரீரது திருவடியைப் பற்றுக் கோடாகக் கொண்ட எங்களுடைய அறிவினாலே அறிதற்குத் தக்கபடி தேவரீர் விரும்பியாடுகின்ற திருக்கூத்தை மனம் நெகிழ்ந்துருகப் பார்த்து, மிகப் பெரிய பிறவியாகிய பெரிய கடலில், மலமாகிய சுறாமீன் பிடித்துட் கொள்ளாதபடி, தீயவையாகிய மும்மலங்களையும் வலியறச் செய்யும்படியான

சிவஞானமாகிய தெப்பத்திஞலே நீந்தி முத்தியங்கரையைச் சார்ந்தோம்.

'தீயவை தவிர்க்கும்' என்பதற்கு 'அஞ்ஞானமாகிய மலத்தையொழிக்கும்' எனவும் பொருளுரைப்பார்.

இருவினை கழிந்தோங் காமத் தெல்லையுங் கடந்தோநாளு
நிருமல மானேம் யாங்க ளிகழ்த்திய வபரா தத்தை
யருள்கொடு பொறுத்தி நீயென் றருமறை முனிவர்யாரும்
பரவருங் காதல் கூர்ந்து பன்முறை வணங்க லுற்ருர். (42)

பாப புண்ணிய வினைகளிலும் அவற்றின் பயன்களிலும் பற்றில்லாமையால் அவற்றினின்று நீங்கினேமாயினேம். காமமாகிய எல்லையினின்று நீங்கினேம். இவ்வாருனமையால் எப்பொழுதும் மல மற்றவர்களானேம். யாங்கள் செய்த குற்றங்களை அருளினுலே தேவரீர் பொறுப்பீராக என ஓதியுணர்தற்கரிய வேதங்களை யோதி யுணர்ந்த வல்லமையுள்ள முனிவர்கள் எல்லாரும் சொல்லுதற்கரிய அன்பு மிகுந்து பல முறை வணங்கினுர்கள்.

எம்பிரானை ஆடச் செய்தோமே அது குற்றந்தானே என்று உட்கொண்டாமையால் "யாங்களி கழ்த்திய அபராதத்தை......பொறுத்தி" என வேண்டினரென்க.

வணங்கிய முனிவர் தம்மைப் பின்னரு மகிழ்ந்து நோக்கி
யணங்கரா வணியும் வேணி யமலனீ துரைக்க லுற்ரு
னுணங்கிய வறிவின் மேலா மந்தணீர் நும்பாற் கந்த
னுணர்ந்துயர் துருவா சற்கன் றுதவிய வரத்தான்
மேவும். (43)

அவ்வாறு வணங்கின முனிவர்களைப் பார்த்துத் துன்புறுத்து மியல்பினையுடைய பாம்புகளை அணியாக அணிந்த சடாபாரத்தையுடைய நிர்மலராகிய சிவபெருமான் இதைச் சொல்லத் தொடங்கினுர். நுணுகிய அறிவினுலே மேம்பட்ட துறவிகளே நும்மிடத்தில் முருகன், நித்தியப் பொருளை யறியவேண்டியபடி யறிந்துயர்ந்த துருவாச முனிவனுக்கன்றைக்குச் சொல்லி யருளிய வரத்தின்படி வந்து சேருவான்.

பதமிகுந் தனுர்மா தத்திற் சுக்கில பக்கத் தாரூந்
திதிபுனற் கிறைநாள் கூடிற் கதியரு டினம தாகும்
வதியுமத் தினத்தின் மேவுங் குகனெழுத் தைந்தும்
வாய்த்த
விதியினு னுங்கட் கெல்லாம் விரித்துப தேசஞ்
செய்வான். (44)

உணவுப் பொருள்கள் மலியும்படியான தை மாதத்திலே சுக்கில பக்கத்தில் சஷ்டி திதியில் சதய நக்ஷத்திரம் வந்து சேர்ந்தால் அந்த நாள் நற்கதியைக் கொடுக்கு நாளாகும். அப்படித் தங்குகின்ற அந்த நாளிலே கூறியபடி சேருகின்ற முருகன், அமைந்த விதிப்படி சிவ பஞ்சாக்கரத்தை உங்களுக்கெல்லாம் விரிவாக (பலவகைப்பட) உபதேசித் தருளுவான்.

கெழுமறைக்கிறுதி யாய வைந்தெழுந் தடைவிற்கேட்டுப்
பழுதற வுணர்ந்து காமப் பரவையின் பரப்பு நீத்திட்
டழிவுருப் பரமா னந்தப் பெரும்பத மடைவீர் நீவி
ரெழுகவென் றிசைத்துப் பின்னு மெம்பிரா னியம்ப
லுற்றான். (45)

நீங்கள் விளக்கமான வேதங்களின் முடியாக விளங்குகின்ற சிவபஞ்சாக்கரத்தை முறைப்படி கேட்டுக்குற்றமில்லாமல் அந்த மந்திரத்தை யறிந்து செபித்து காமக்கடலைத் தாண்டி அழியாத மேலான சிவானந்தமாகிய பெரிய பதவியை அடைவீர்கள். எழுந்து செல்லுங்கள் என்று சொல்லிப் பின்னரும் எம் தலைவராகிய சிவபெருமான் சொல்லத் தொடங்கினர்.

பாரிலின் றுதி யாகப் பாரிசா தவனத் தோங்குஞ்
சீரிய முழுமா ணிக்கச் சிற்சபை தெரிசித் தோர்கள்
சார்வரு மெமதா னந்தத் தாண்டவந் தரிசித்தார் போற்
றரில்யா ரேனு மெய்தாச் சிவகதி யடைவர்
திண்ணம். (46)

பூவுலகத்தில் இன்று முதலாக இப்பாரித வனத்தில் உயர்ந்து விளங்கும் விழுமிய முழுத்த மாணிக்கங்களழுத்திச்

செய்யப் பெற்ற இந்தப் பேரம்பலத்தைத் தரிசித்தவர்கள் அடைதற்கரிய எம்முடைய ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்தவர்கள் போல, உற்று நோக்கினுல் மெய்ஞ்ஞானிகளைத் தவிர வேறெவரும் அடையாத சிவகதியை (மோக்ஷத்தை) நிச்சயமாக அடைவார்கள்.

என்னவீ துரைத்து வாக்கா லிவ்வர மீந்தோ மிந்தத்
தன்னிகர் புனித க்ஷேத்ரந் தனிலெனச் சாற்றி யேத்து
முன்னருந் தவத்தோர்க் கெல்லாம் விடைநல்கிக் கயிலை முன்னிச்
சின்மயப் பயனு மெங்கோன் சிவகணத் தோடுஞ் சென்முன். (47)

என்று மேலே சொல்லியவற்றைச் சொல்லி மீண்டும் தனக்குத்தானே ஒப்பானதும் தூய்மையானதுமாகிய இந்தச் க்ஷேத்திரத்திலே எம் வாக்கினுலே இவ்வரத்தைக் கொடுத்தோமென்று சொல்லிப், பலவாருகப் புகழ்கின்றவராகிய நினைத்தற்கரிய தவ வலிமைகளையுடைய முனிவர்களுக்கெல்லாம் விடை கொடுத்துவிட்டுக் கைலைமலைக்குச் செல்ல எண்ணி, சித்துவடிவமாக வுள்ளவரும் ஆன்மாக்கள் அடைய வேண்டிய இன்பப் பயனுக வுள்ளவருமாகிய எம் தலைவர் சிவ கணங்களோடும் அங்குப் போயினர்.

அந்தநாண் முதலா யாவ ராயினு மமரர் நாட்டின்
பைந்தரு வனஞ்சூழ் செம்பொற் பன்மணிச் சபையை நோக்கி
வந்தனை புரிவ ராயின் மழுவலான் வரத்தான் மாயாப்
பந்தவல் வினையை நீங்கிப் பரகதி யடைவர் மாதோ. (48)

அந்த நாள் தொடங்கி யாராக இருந்தாலும் தேவலோகத்திலிருந்து, கொண்டு வந்து நிலை நாட்டிய பசுமையான பாரிசாதவனஞ் சூழ்ந்த திருக்களரிலேயேயுள்ள பல மணிகளழுந்திய செம்பொன்னுலாகிய பேரம்பலத்தைப் பார்த்து வணங்குவார்களே யானுல் பந்தத்தைத் தரக்கூடிய கொடிவினைகளின்று நீங்கி மேலான வீடுபேற்றைப் பெறுவார்கள்.

மாதோ—அசை.

'பசுமை' என்பது இளமையையுணர நின்றது.

ஏழ்வகைப் பிறப்பிற் றோன்று மெவ்வுயி ரெனினுஞ்சேரிற்
றூழ்வறப் புனித மாக்குந் தருவனச் சபையின் மேன்மை
யூழ்முறை விரும்பிக் கேட்போ ரியம்புவோ ருலவா வின்பத்
தாழியின் மூழ்கி நாளு மழிவுறுப் போகந் துய்ப்பார். (49)

ஏழுவகையான பிறவிகளிலே பிறந்து தோன்றுகின்ற எந்தவுயிராக இருந்தாலும் தன்பால் வந்தடைந்தால் வருமவைகளை இழிவினின்றும் நீங்கும்படி தூய்மை யுடையவைகளாக ஆக்கும்படியான இப்பாரிசாத வனத்தின்கணுள்ள பேரம் பலத்தின் பெருமையை வரிசையாக முறைப்படி விருப்பமுடன்கேட்பவர்களும் சொல்லு கின்றவர்களும் என்றுங் கெடாத பேரின்ப சாகரத்தில் அமிழ்ந்தி என்றும் அழியாத அவ் வின்பமாகிய போகத்தை அனுபவிப்பார்கள்.

கும்பமா மதியில் வைகும் பூரணைத் திதியிற் கோமா
னம்பிகை யோடு மிப்பே ரம்பலத் தாடன் மேவு
நம்புமத் தினத்தின் மாலைப் பொழுதினி னயந்து சேவித்
தெம்பெரு மானைப் போற்றில் விசேடமென் றியம்ப லாமல். (50)

மாசிமாதத்திலே பௌர்ணமி திதியிலே தலைவராகிய சிவபெருமான் உமையம்மையார் காண இப்பேரம்பலத்திலே நடனஞ் செய்வார். அவ்வாருடுவாரென நம்பிக்கை கொள்ளத்தக்க அந்த நாளிலே மாலை நேரத்தில் விரும்பிச் சேவித்து எம் தலைவராகிய அந் நடராஜ மூர்த்தியைத்துதித்தால் அது பெருஞ்சிறப்பாகும் என்று சொல்லப்படும்.

இத்திற மானைப் போழ்தி லிறைவனைத் தரிசித் தாரேற்
பத்தியிற் கணிகை மார்தோண் முயங்கிய பழியும் வாயா
லித்துணை யெனக்கூறுத பாவமு மிமைப்பி லேகுந்
துய்த்திடா விடத்தி லுண்ட தோடமு மிறையிற் போமால். (51)

இவ்வகையான மாலைப் பொழுதிலே அவ்விறைவனைத் தரிசித்தார்களே யாஞல் (அவர்கட்கு) அன்பற்ற விலைமக ளிரின் தோளைத்தழுவிய பாவமும் வாயினுலே இத்துணை யனவென அளவிட்டுக்கூற முடியாத மற்றைய பாபங்களும் இமைப் பொழுதில் அழிந்து போகும். உண்ணக்கூடாத இடத்தில் உணவு உண்டதனுல் ஏற்படும் பாபமும் ஒரு நொடிப்பொழுதில் போய்விடும்.

வேறு.

அடைந்த வர்க்கருள் பாரிசா தவனத்தி லரனுறை யாலயமுன்ன,ரிடந்து,மேற்றுரு வாசனுக் கியதுவானிமை யவர் முதலினே ரெவரும், படர்ந்து சூழ்வது லோகலோ காக்கிய மெனும் பெயர் பரித்ததோர் தீர்த்த, மிடங்கொ ளப்பெருந் தீர்த்தத்தி னண்பக லெய்தியங் கதனிடை மூழ்கி (52)

நெருங்கிவந்து தரிசித்தவர்களுக் கருள்புரிகின்ற பாரி சாதவனத்திலே சிவபெருமான் தங்குகின்ற ஆலயத்தின் முன்பாகத்தில் முன்னரேயே தூர்வாச முனிவர் தோண்டி ஆக்கியதும் தேவர்கள் முதலிய யாவரும் ஸ்நாநஞ் செய்ய வந்து சூழப் பெறுவதுமாகிய லோக லோக்கியம் என்னும் பெயரைத் தாங்கிய தீர்த்த மொன்றிருக்கிறது. விரிவான அத்தீர்த்தத்திலே நடுப்பகலிற் போய் அதிலே குளித்து.

இயன்றவான்பொரு ளந்தணர்க் கீந்துபொன் னிவர் சடை முடித்துரு வாசன், வியந்து போற்றிய தருவனத் தீசனை விதிமுறை தரிசனம் புரியி, லயர்ந்த பாவமு மிரு வினைத் தொடர்ச்சியு மகன்றிடு மலகிலா வின்பம், பயந்து மேற்கதி தருமிது சத்திய மெனப்பர னியம் பினன் பரிவால். (53)

தம்மாற் கொடுப்பதற் கியன்ற சிறந்த பொருளை வேத மோதும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்துப் பொன்னிறம் படிந்த சடை முடியையுடைய தூர்வாச முனிவர் இறும்பூது கொண்டு புகழ்ந்த பாரிசாதவனத்து நாதனை விதிப்படி தரி

சித்தால், முன்செய்தமைந்த பாவங்களும் புண்ணிய பாவ வினைகளாற் றேன்றிவருதற்குரிய சுக துக்கங்களும் அவ்வினை வாசனைகளும் நீங்கும். இப்பொழுது சீவன் முத்தி யானந்தத்தைக் கொடுத்துப் பின்னர் விதேக முத்தியையும் தரும். இவ்வார்த்தை சத்திய மானதே என்று மேலான வர்களுக் கெல்லாம் மேலான நந்தியம் பெருமான் அருளாலே சொன்னர்.

'அயர்ந்தபாப' மெனவே ஒழிந்த புண்ணியமும் கொள்ளத்தக்கதே; அதுவும் பிறவிக்கேதுவாகலின். தொடர்ச்சி= சம்பந்தமானவை.

அயர்ந்த பாபம்=முன்னர்த் தீவினைகளைச் செய்தலா லவைகளின்றுந் தோன்றி யமைந்த அதிருட்டவடிவான சஞ்சித பாபங்கள். அலகிலா இன்பம்=அளவற்ற இன்பம் எனினுமாம்.

வேறு.

சிறந்ததரு வனமோங்குந் தேவர் போற்றுந்
திருக்களர்மா நகர்மேவுஞ் சிவனை யோர்கா
லறிந்துதரி சித்தனரா யினும்யா தொன்று
மறியாமற் றரிசித்தா ரெனினு மன்னோர்
செறிந்தகிளை யொடுமவர்தம் வழியு ளாய
தென்புலத்தோ ரொடுமுறையிற் சிவலோ கத்தி
லுறைந்திடுவர் சத்தியஞ்சத் தியமா மிந்த
வுரைதவறென் றேர்நரகத் துறுவ ராமால். (54)

சிறப்பாக அமைந்த பாரிசாதவனமாகிய உயர்ந்து விளங்குகின்ற திருக்களர் என்னும் பெரிய நகரிலே எழுந்தருளியிருக்கின்றவரும் தேவர்களெல்லாரும் வந்து துதிக்கப் பெறுகின்றவருமாகிய சிவ பெருமானை ஒரு பொழுது தெரிந்து தரிசித்தாலும் சிறிது மவர் பெருமையை யறியாமற்றரிசித்தாலும் தரிசித்தவர்கள் நெருங்கிய சுற்றத்தார்களோடும் அவர்களுடைய மரபிலே தோன்றிய மூதாதைகளாகிய பிதிரர்களோடும் வரிசையாக சிவலோகத்திலே போய்வசிப்பார்கள். இவ்வார்த்தை சத்தியம் சத்தியம் இந்த வார்த்தையைத் தவறுடைய தென்று சொன்னவர்கள் நரகத்தையடைவார்கள்.

புலையரொடு பொல்லாத பதித ரேனும்
பொன்னவிர்பூந் தருவனத்திற் பொருந்துஞ் செங்கே
ழிலகுமணிப் பெருங்கோயில் வைகு முக்க
ணீசனைத்தூ ரத்தனுகி யிறைஞ்சி னூரேற்
குலவுவர்முத் தியிலிதுசத் தியமாந் தீராக்
கொடியவினைப் பாவிகளுங் கோவு மாவு
மொலிகொள்பற வையுமளியும் புழுவு மேனுந்
தரிசித்தாற் சிவலோகத் துறையு மாதோ. (55)

புலையர்களாக இருந்தாலும் கெட்டவரான பாவிகளாக இருந்தாலும் பொன் வடிவாக விளங்குகின்ற பொலிவுதங்கிய பாரிசாதவனத்திலே பொருந்தி விளங்கும் செந்நிறத்தோடு ஒளிருகின்ற மாணிக்கங்களை யழுத்தியமைத்த பெரிய கோயிலிலே எழுந்தருளியிருக்கின்ற மூன்று கண்களையுடைய பாரிசாதவனேசப்பெருமானைத் தூரத்திலே நின்று வணங்கினாலும் வணங்கியவர் அழியாத மோக்ஷபதவியில் தங்குவார்கள் இஃதுண்மையாகும். எந்தப்பிராயச்சித்தத்தாலும் நீங்காத கொடிய வினைகளாலமைந்த பாபங்களையுடயவர்களும் அறிவற்ற பசுக்களும் மற்றைவிலங்குகளும் ஒலிக்கின்ற பறவைகளும் வண்டுகளும் ஊர்ந்து செல்லும் புழுக்களுமாக இருந்தாலும் அப்பாரிசாத வனேசரைமுன் செய்த புண்ணியத்தால் தரிசிக்கப்பெற்றால் சிவலோகத்திலேபோய்ச் சுகமாக அவைகளெல்லாம் அங்கே தங்குதற்குரியவைகளாத் தக்க வடிவு பெற்றுத் தங்கும்.

தொண்டர்தமக் கரனுதவாப் பொருளொன் றுண்டோ
தொல்லுலகிற் சிவனடியார் பெருமை சோதித்
தண்டர்தொழுஞ் சிவபெருமா னறிவ தன்றி
யகிலகோ டியிலொருவ ரறியார் காள
கண்டன்மிகு பெருமைதனை யவரே யன்றிக்
கருதுவா ரிலையதனாற் கமலத் தோனிற்
றெண்டிரையிற் றுயில்வோனிற் றேவர் தம்மிற்
சிவனடியார் பெரியரெனச் செப்ப லாமால். (56)

பழமையான இவ்வுலகிலே அடியவர்களுக்குச் சிவ பெருமான் கொடுக்க இயலாத பொருள் ஒன்றுண்டா (இல்லை) சிவனடியார்களுடைய பெருமையை, ஆராய்ந்து தேவர்களெல்லாரும் வழிபாடு செய்யத்தக்க சிவபெரு மான் அறிவதல்லாமல் உலகத்திலேயுள்ள ஒருவருமறி யார்கள். காளகண்டராகிய சிவபெருமனுடைய பெரு மையை அச்சிவனடியார்கள் அறிவார்களே ய [illegible]லாமல் அறியவல்லவர் வேறெவருமில்லை ஆதலால் தா [illegible] மல ரிலேயுள்ள பிரம தேவரைப்பார்க்கிலும் தெளிந்த [illegible] யுடைய திருப்பாற் கடலிலே அறிதுயில் புரிகி[illegible] மாலைப் பார்க்கிலும் மற்றைய தேவர்களைப் ப[illegible] சிவனடியார்கள் பெரியவராவார்கள் என்று சொ[illegible].

வேறு.

அநந்தமா யிரகோடிப் பிறவியிற்புண் ணியம்புரிந் தார்க் கல்லாலீசன், கனிந்துகா தலித்துருகு மிந்தமுழு மணிச்சபையின் காட்சி யெய்தா, மனந்தனி னினைப்பினு மேற் கதியளிக்கு மிச்சபையின் மகிமை யாவும், புனைந்து நூறுயிரமா முகமெனினு மனந்தனுக்கும் புகலொ ணுதால். (57)

அளவில்லாத ஆயிரங்கோடி யளவுள்ள பிறவிகளிலே புண்ணிய வினைகளைச் செய்தவர்களுக் கல்லாமல் ஏனையோ ருக்குச் சிவபெருமான், மனங்கனிந்து விரும்பியுருகி (தரிசிக் கும்படி நடனமாடப் பெற்ற) இந்த முழுமாணிக்கங்களழுத் தியமைக்கப் பெற்ற பேரம்பலக் காட்சியானது கிடைக்க மாட்டாது, அன்பின்றி மனத்தினுலே நினைத்தாலும் மேலான மோட்சத்தைக் கொடுக்கும்படியான இப்பேரம்ப லத்தின் பெருமை யனைத்தையும் தொடுத்து ஆயிரமுகமல்ல நூறுயிரமுகங்களைப் பெற்ருலும் ஆதிசேடனுக்கும் சொல்ல முடியாது.

இளம்பருதி யொருகோடி யெனவிமைக்கு மிச்சபை யின் மகிமையீச, னளங்வதறி தன்றியரி பிரமபுரந் தரர் முதலோர்க் கறிய லாமோ, கிளந்தமொழி யிவையனைத்

துஞ் சத்தியஞ்சத் தியமிதனைக் கேட்போர் கற்போ ருளங்குளிர வுரைத்திடுவோர் யாவரா யினுங்கயிலை யுறைகு வாரால். (58)

ஒருகோடி இளஞ்சூரியர்கள் போல ஒளிவிடுகின்ற இந்தச் சபையின் பெருமையைச் சிவபெருமானே அளவிட் டறியலாமே யல்லாமல், திருமால் பிரமன் இந்திரன் முத லானவர்களுக்கும் அளவிட்டறிய முடியுமா (முடியாது) சொல்லிய இச்சொற்களெல்லாம் உண்மையுண்மை. இவ் வரலாற்றைக் கற்பவர்களும், கேட்பவர்களும், தம்மனமும் கேட்போர்மனமும் குளிரும்படி (ஆறும்படி) சொல்லுபவர் களுமாகிய இவர்கள் யாவராக இருந்தாலும் கயிலையங் கிரியை அடைந்தங்கே தங்கிச் சுகிப்பார்கள்.

நிருத்தச் சருக்க முற்றிற்று

உ

சிவமயம்

நான்காவது

பஞ்சாக்கரச் சருக்கம்

பனிமதி நிலவி னவிரொளி பரப்பும் பவளவார் சடைமுடிப் பரமன், கனைகதிர் விரியும் பொற்றரு வனத்தி னுடகங் கனியநின்றுடி, முனிவரர் பரவக் காட்சியாங் களித்த வரன்முறை முழுவதும் வியப்ப, நனிவிதந் துரைத்த நந்தியை நோக்கிச் சனற்குமா ரன்னிவை நவில்வான். (1)

குளிர்ந்த இளம்பிறைச் சந்திரனுடைய வெண்மையான நிலாவொளியோடு செந்நிறமாக விளங்குகின்ற ஒளியை விரிக்கின்ற பவளம்போன்ற நீண்ட சடைகளாகிய திருமுடியுடைய பரம் பொருளாகிய சிவபெருமான், மிக்க கிரணங்கள் விரியும்படி விளங்குகின்ற பொன்வடிவான பாரிசாத வனமாகிய திருக்களரின் கண்ணே தரிசிப்பவருடைய உள்ளம் கசிந்து உருகும்படியாகத் திருக்கூத்தை நிலையாகச் செய்து, முனிசிரேட்டர்கள் துதித்து வழிபடக் காட்சி தந்தருளிய வரலாறு முழுவதையும், இறும்பூதுறும்படி (வியக்கும்படி) மிக எடுத்துச் சொல்லியருளிய நந்தியம் பெருமானைப் பார்த்துச் சனற்குமார முனிவர், கீழ் வருவனவற்றைச் சொல்லுவாராயினர்.

ஆங்கு அசை. வார் = நீண்ட. வரன்முறை = வரலாறு.

மறைகளா றங்கம் பதக்கிர மங்கண் மனுமுதன் மிருதியா கமங்க, ளறிவுறு புராண மேழெனுங் கோடிமந் திரமனைத்துமைந்தெழுத்திற், பிறவியென் றுரைப்பக் கேட்டன னா விதங்களாப் பேசரு மறைகட், கிறையென விசைக்கு மவ்வெழுத் தைந்தின் மான்மியம் விளம்புதற் கெளிதோ. (2)

வேதங்களும், ஆறங்கங்களும், பதங்களின் கிரமங்களும், மநுஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளும், ஆகமங்களும் அறியப்படுகின்ற புராணங்களும் ஏழு கோடி மந்திரங்களுமாகிய எல்லாமும், பஞ்சாக்கரத்தினின்றும் உண்டாயின என்று பெரியோர்கள் திருவாய் மலர்ந்தருளக் கேட்டிருக்கின்றேன். ஆகையால், பலவகையாகச் சொல்லப்படுகின்ற மந்திரங்களுக்கெல்லாம் தலைமையானது என்று சொல்லப்படுகின்ற பஞ்சாக்கரமாகிய அம்மந்திரத்தின் பெருமையானது எல்லாராலும் எளிதாகச் சொல்லுதற்கு உரியதாகுமா? ஆகாது.

இருக்கு, எஜுர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு. வேதங்களுக்கு அங்கமாகவுள்ளன வியாகரணம், கற்பம். ச்ந்தசு, சோதிடம், நிருத்தம். சிக்கை என ஆறுகும். சிவாகமங்கள் காமிகம் பௌடிகம் முதலிய இருபத்தெட்டு. பதக்கிரமம் = சுபந்ததிஙந்தமான சொல்வகைகள்; பதங்களை ஒலிக்கும் முறைகள். அறிவுறுபுராணம் = எளிதாக அறியத்தக்க புராணம்; வேதம் முதலியவற்றின் பொருள்களை எளிதாக அறிவுறுத்துகின்ற புராணம். எனினுமாம். அவை ஸ்காந்தம் முதலிய பதினெட்டு. சுவாகா, சுவஸ்தி, நம: வஷட், வௌஷட், பட், ஹூம் என்னும் ஏழனுள் ஏதாவதொன்றை எல்லாமந்திரங்களும் தம்மீற்றிலே (முடிவிலே) கொண்டு விளங்குதலால் "ஏழுகோடி மந்திரம்" என்றனர். இனி ஏழை முடியாக (கோடியாக) வுடையன 'ஏழு எனுங் கோடி" எனினுமாம்; முப்பத்து மூன்றை (முப்பத்து மூன்று என்னும் எண்ணிக்கையை) முடிபாகக் கொண்ட தேவரை முப்பத்து முக்கோடி தேவர் என்பது போன்ற வழக்கிது.

ஆயினும் விதிபூ ருவத்தொடு சாங்க மாம்படி மந்திரோத் தாரந், தூயமா மறையா மியந்திரோத் தாரமோடுநாற் குலத்தவர் துதிக்கு, மேயவைந் தெழுத்தும் புகன்றிடு விதமு மந்திரத் திறையின்மான் மியமு, மாயையின் முனிவர்க் கறுமுக னுரைக்கு மார்க்கமுங் கூறெனவுரைத்தான். (3)

பிறர்க்கு அப்படிச்சொல்ல முடியாததாக இருந்த போதிலும் தேவரீருக்குச் சொல்ல இயலுமாதலால் அடியேன் பொருட்டுக் கிருபையினுலே விதி தவருமல் அங்கத்தோடு கூடியதாக அமையும்படி வேறு பீஜ மந்திரங்களுடன் வெளிப்படுத்தலும் சுத்தமான மந்திரங்கள் அமைந்த சக்கரமூலம் வெளிப்படுத்தலுமாகிய இவற்றுடன் (பஞ்சாக்கரங்களைத் தெரிவித்தலோடு) நான்கு வருணத்தார்களும் ஜெபிக்கும்படி பொருந்திய அப்பஞ்சாக்கரத்தை ஜெபிக்கின்ற வகையும் மந்திரங்களுக்குள் தலைமையான அம்மந்திரத்தினுடைய பெருமையும் மயக்கமற்ற முனிவர்களுக்கு ஆறுமுகக்கடவுள் அவற்றைச் சொல்லி அருளிய தன்மையும் ஆகியவற்றைத் தேவரீர் உரைத்தருள்வீராக என்று சொன்னுர்.

உத்தாரம்=வெளிப்படுத்தல்.

உந்திநாண் மலர்மே லயன்றரு முனிவ னுரைத்தலு
மறுமுகனுவப்பா, யந்தமா தவரா மோரறு ப்தினு
யிரர்க்கர ஞணையா லறையு, மந்திர விதியு மூறைமையு
முணர்ந்து மலவிரு டுரக்குமா ஞான, நந்திவா னவனு
மகிழ்வொடு முனிவ னயப்புற வீதென நவில்வான். (4)

இப்படித் திருமாலின் திருவுந்தித்தாமரை மலரிலே தோன்றிய பிரம்தேவராற் பெறப்பட்ட புதல்வராகிய சனற்குமார முனிவர் சொல்லவும், ஆறுமுகக்கடவுள், மகிழ்ச்சியுடன் மேலே சொல்லிய அறுபதினுயிரம் முனிவருக்கும் சிவபெறுமானுடைய ஆணைப்படி, சொல்லி அருளிய பஞ்சாக்கரமந்திரவிதிகளையும் அவற்றின் தன்மைகளையும் தெரிந்து, ஆணவமல முதலிய மல இருளைப் போக்கும்படியான சிவஞானத்தைப் பெற்ற குருபரராகிய நந்தியம் பெருமானும் மகிழ்ச்சியுடன் சனற்குமார முனிவர் விரும்பும்படி (பஞ்சாக்கரத்தைச் செபிக்கு முறைமையும் அவற்றின் பெருமையுமாகியவற்றை) இவையாகுமென்று விளங்கச் சொல்வாராயினர்.

மந்திரவிதி=மந்திரத்தைச் செபிக்குமுறைமை.

ஒரு பொருளைப் பெற்றவர் பிறர்க்குக் கொடுக்கும் பொழுது அவர் நல்லவரரக இருப்பதனுல் தக்க பயனை நல்குமென்பதால் மகிழ்ச்சியுடன் கொடுப்பாரென்பதும் கொடுக்கும்பொழுது மகிழ்ச்சியுடன் கொடாதிருப்பின் அது தக்க பயனைப்பெறுவரர்க்குப் பயவாதென்பதும் புலப்பட "அறுமுகனுவப்பாய்" எனவும் "நந்திவானவனு மகிழ வொடு" எனவும் உரைத்தார். அப்படி உரைக்குமிடத்து விரும்பி முகமலர்ந்து எளிதாக உரைப்பின் கேட்போர் விரும்பி உளங்கொள்வார் என்பது போதர "முனிவனயப் புற" எனவும் உரைத்தனர்.

நன்குண முனிவ கேட்டியைந் தெழுத்து நவின்றிடிற் பேதமு மோரைந், தென்பரவ் வெழுத்தின் பகுதியா லைவதா மியம்பிடுமைந்தெழுத் தோடு, பின்பிரு மூன்று நாலிரண் டீரைந் தொருபனி ரண்டெனப் பெரிது, மின்புற வுரைக்கு மக்கர விதமுண் டைந்தெழுத் தாதியா விசைப்பார். (5)

நல்ல குணங்களையுடைய சனற் குமார முனிவனே நீ, கேட்பாயாக பஞ்சாக்கரத்தைப்பற்றிச் சொல்லத் தொடங் கினுல் அப்பஞ்சாக் கரத்தின்வகை ஐந்தாகும் என்பார்கள். அவையாவன:ஐந்தெழுத்தாக நிற்பது ஒருவகை. பின்னர் ஆறெழுத்தாக நிற்பது ஒரு வகை. எட்டெழுத்தாக நிற்பது ஒருவகை. பத்தாக நிற்பது ஒருவகை. பன்னிரண்டாக நிற்பது ஒருவகை. இவ்வாறு மிகவும் இன்புறும்படி சொல்லுகின்ற எழுத்தின் வகைகள் அப்பஞ்சாக்கரத்தை முதன்மையாகக் கொண்ட மந்திரங்களில் உண்டென்று சொல்லுவார்கள்.

சுத்தபஞ்சாக்கரம் ஐந்தெழுத்தாகவே நிற்பதாகும். அவை பிரணவத்துடன் கூடின்ஆருகும். அவ்வாறுடன் ஸம்யம் என்னு மிரண்டு இறுதியில் வரின் அவற்றுடன் கூடி எட்டாகும். பிரணவத்துடன் கூடிய பஞ்சாக்கரத்தின் பின்னர் ஸம்ஸம்யம்யம் என்னு நான்குவரப்பத்தாகும். அப்பிரணவத்துடன் பஞ்சாக்கரத்தின் பின்னர் ஸம், ஸம் ஸம், யம், யம், யம் என்னும் ஆறும் வரப் பன்னிரண்டாகும்

எனவே ஐந்தெழுத்துப் பஞ்சாக்கரம், ஆறெழுத்துப் பஞ் சாக்கரம், எட்டெழுத்தான பஞ்சாக்கரம், பத்தெழுத்தான பஞ்சாக்கரம், பன்னிரண்டெழுத்தான பஞ்சாக்கரம் என ஐந்துவகையாகப் பஞ்சாக்கரம் நிகழுமென்பதாம், இவ்வாறு செபித்தால் வெவ்வேறு பயன்கள் கிடைக்கு மெனப் பின் னர்க் கூறுவார். பிரணவம் ஸம் யம் என்பன தனித்தனி பீஜங்களாகச் சேர்ந்து நிற்றலால் ஒவ் ஒரெழுத்தெனக் கருதப்படுகின்றன போலும்.

எதுகை நோக்கி லகரம் றகரமாகத்திரிதலின்றி னகர மாகத்திரிந்த தென்க; ரன்குணமென.

கிரமமாவிருடி சந்தசு தியானங் தெய்வவங் தனத் தொடு கிளக்கும், வரன்முறை யிவற்ருற் பகர்வது முதல் யாம் வகுத்துரைத் திடுமெழுத்திவையுங், குருதிகொப் பளிக்கு நெட்டிலைச் சுடர்வேற் குழகனித் திறமியம் பின் னுங், கிருடியர் பதினு யிரர்க்கொரு முகமா வறுமுகத் தாலெவ ரெவர்க்கும். (6)

முறையாக ரிஷி, சந்தசு (தேவதை, கீலகம்) தியானம் தேவதை வணக்கங்களாகிய இவற்றுடன் செபிக்கத்தக்க வரன் முறைப்படி செபிக்கவேண்டியது முத லாக யாம் விளக்கிக்கூறிய பஞ்சாக்கரத்தை,இரத்தத்தை யுமி ழுகின்ற, நீண்ட் இலைபோன்ற, ஒளிவிடுகின்ற வேலாயுதத் தைத் திருக்கையிலே ஏந்திய அழகராகிய ஆறுமுகப் பெரு மான் அங்கே பதினுயிரம் பதினுயிரம்முனிவர்கட்கு ஒவ் வொரு முகத்தாற் கூறுபவராக (உபதேசிப்பவராக)த் திருமுகங்களை யமைத்து அவ் வாறு திருமுகங்களாலும் அவ் வறுபதினுயிர முனிவர்க ளெல்லாருக்கும் இனிமையாக உபதேசித்தருளினுர்.

இன்னண முனிவ ரெனுமறு பதினு யிரர்க்கறு முக னினி தியம்பிப், பின்னராங் சுவர்க்குச் செபித்திடும் விதி யுங் தியானமும் விதியினுற் பேறும், பன்னின னவற்றுட் சிறிதியா னுரைப்பன் பாங்குறக் கேட்டியென் றெவர்க்கு,

முன்னுறும் பிரமன் றிருமகன் றனக்கு நந்தியம் பகவனு மொழிவான். (7)

இவ்வாறு முனிசிரேட்டர்களாகிய அறுபதினுயிரம்பேருக்கும் ஆறுமுகங்களை உடைய முருகக் கடவுள் விளங்கும்படி சொல்லிப் பின்னர் அங்கே அவர்களுக்குச் செபிக்கின்ற முறையையும் தியானத்தையும் அவ்வாறு செய்கின்ற முறையினுலே அடையக்கூடிய பேற்றையும் திருவாய்மலர்ந் தருளினர். அப்பெருமான் சொல்லியருளியவற்றிலே சிறிதளவு யான் சொல்லுவேன் முறையாகக் கேட்பாயாக என்று, எல்லோருக்கும் பிதாமகனுன (பாட்டனர் ஆன) பிரமதேவருக்குப் புதல்வரான சனற்குமார முனிவருக்கு நந்தியம் பெருமானும் சொல்லுவாராயினர்.

ஆறுமுகப் பெருமான் அறுபதினுயிரம் முனிவருக்கு உரைத்தது போல நந்தியம்பெருமானும் சனற்குமார முனிவருக்குச் சொன்னுர் என்பதால் உம்மை இறந்தது தழீஇயதாயிற்று.

மோக்கசா தனமாஞ் சுத்தமாம் பஞ்சாக் கரம்பிரணவத்தொடு மொழியி, லாக்கிய போக மோக்கசா தனமாஞ் சாந்தயாந் தத்தொடு மறையி, னீக்குதற் கரிய காமிய மளிக்கு நெறியிலா வறுமையை முழுதும், போக்குமோ ரிரண்டு சாந்தயாந் தத்தோ டகமகிழ்ந்தன்பினுற் புகலில். (8)

மனமகிழ்ச்சியுடன் அன்புகொண்டு பிரணவ முதலிய பீஜங்கள் இல்லாத பஞ்சாக்கரத்தைச் செபித்தால் அது மோக்ஷ சாதனமாகும். பிரணவத்தோடு சேர்த்து அப்பஞ்சாக்கரத்தை உருவேற்றினுல் அது போகம் மோக்ஷம் இரண்டற்கும் சாதனமாகும். பிரணவம் ஸம்யம் என்பவற்ருேடு சேர்த்து உருப்போட்டால் அது காமிய சாதனமாகும். பிரணவம் ஸம் ஸம் யம் யம் என்பவற்றுடன் அப்பஞ்சாக்கரத்தை உருவேற்றினுல் அது நன்னெறியிலே செல்லாமல் தடுக்கக்கூடிய வறுமையைப் போக்குதற்குரிய சாதனமாகும்.

நம்பிக்கையோடு அன்புகொண்டு செபிக்க வேண்டும். அப்படிச் செய்தாற்றான் கூறிய பயன்களை அம்மந்திரம் அளிக்கும் என்பார் "அகமகிழ்தன்புகொண்டு" என்றனர். இது, "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" (திருஞான சம்பந்தர்) என்பதை நினைப் பூட்டுகின்றது.

செப்பிய சாந்த யாந்தமுன் றுடனே யைந்தெழுத் தையுமுறைசெபிக்கி, லொப்புறு நலனும் வசீகர மளிக்கு முணர்வினு வித்திற முரைப்போர்க், கெப்பயனரிய தாங் கவ ரகத்து ளிச்சையாம் பொருளெலா மளிக்குந், தப் பறப் புகலுஞ் சாந்தயாந் தத்தின் றன்மையை யளப் பதற் கரிதால். (9)

சொல்லிய பிரணவத்துடன் ஸம் ஸம் ஸம் யம் யம் யம் என்பவற்றையும் சேர்த்துப் பஞ்சாக்கரத்தை முறைப்படி செபித்தால் அஃது ஒப்பற்ற நன்மையாகிய வசீகரத்தைப் பெறுதற்குரிய சாதனம் ஆகும். அறிவோடு இவ்வகையாகப் பஞ்சாக்கரத்தைச் செபிப்பவர்களுக்கு எந்தப்பயன் தான் அடைதற்கு அரியதாகும். அவ்வாறு செபிப்பவர்களுடைய மனதிலே இச்சித்த பொருள்கள் எல்லாவற்றையும் அது கொடுக்கும், ஆதலால், மேற்கூறியபடி தவ-றுமல் செபிக்கும்படியான ஸம் யம் என்னும் பீஜங்களின் தன்மையை எம்மனோரால் அளவிட்டுக்கூறுதல் இயலாது.

தப்பற என்பதற்குக் குற்றல்லாமல் எனவுரைத்தலுமாகும்.

செங்கதிர் விரிக்கும் பவளவார் சடைமேற் சிறுபிறை யிலகவாளுரக, கங்கணங் கமலக் கரந்தொறு மிலக வபயமும் வரதமுங் காட்டிப், பொங்கிய புலித்தோ லரைமிசை யார்த்துப் பொலிவுறும் வடிவமாய்ப் புரக்கு, மங்கணு யகனை நினைவது விதியா மோக்கபஞ் சாக்கர மறையில். (10)

மோஷ் சாதனமாகிய சுத்த பஞ்சாக்கரத்தைச் செபிக்கும். போது, செந்நிறமான கிரணங்களைப் பரப்புகின்ற பவளம் போன்ற நீண்ட சடையின்மேலே சிறிய பிறைச் சந்திரன் விளங்கவும் ஒளியோடு கூடிய பாம்பாகிய காப்புகள் தாமரை மலர்போன்ற கைகளிலே விளங்கவும் அக்கைகளாலே அபயத்தையும் வரதத்தையும் காண்பித்து, அழகு மேன்மேல் வளருகின்ற புலித்தோலை இடையிலே கட்டி விளங்குகின்ற வடிவமுடையவராக, (ஆன்மாக்கள் அனைவரையும் அறக்கருணை மறக்கருணைகளாக நின்று) காக்கும்படியான தண்ணளி நிறைந்த திருவிழிகளையுடைய சிவபெருமானைத் தியானித்தல் முறையாகும்.

சிறுபிறை = மூன்றும்பிறை. ஆர்த்தல் = கட்டுதல்,

ஆன்மாக்கள் = சீவர்கள்.

பண்ணவ னியற்று முலகெலா மழுந்தப் படுமணி திரையெறிந் திழியுந், தண்ணதி பெருகும் வேணியுஞ் சயிலத் தையலோர் பாகமுந் தவள, வண்ணமு மாகப் பரமனைக் கருதி வாய்த்தலாற் காமிய மாகு, மெண்ணரும் போகப் பயன்றரு மிறவா முத்தியு மெய்தலா மியல்பால். (11)

(காமியசாதனமாகிய பஞ்சாக் கரத்தையும், போக மோக்ஷ் சாதனபஞ்சாக்கரத்தையும்) பிரமதேவன் படைக்கின்ற உலக முழுதும் அழுந்திவிடும்படி, பொருந்திய மணிகளுடன் அலைகளைவீசிக் கொண்டு கீழே ஒழுகுகின்ற (விழுகின்ற) குளிர்ந்த கங்கையாறு பெருகின்ற சடையும் மலையரசன் மகளாராகிய உமையம்மையார் விளங்கும் ஒரு பாதித் திருமேனியும் வெண்ணிறமும் உடையவராகச் சிவ பரம் பொருளைத் தியானித்து முறையே செபித்தலை அடைதலால் (செபித்தலால்) தானுகக் காமியம் ஆகிய அளவிட முடியாத போகங்களாகிய பயனை அளிப்பதுடன் அழியாத முத்திப்பயனை அடைதற்கும் அது சாதனம் ஆகும்.

கங்கை தங்கிய சடையும் உமையம்மையார் தங்கிய இடது பாகமும் வெண்ணிறமு முடையவராகச் சிவபிரானைத்

தியானித்துப் பிரணவத்துடன் கூடிய பஞ்சாக்கரத்தை ஸம் யம் என்னும் இரண்டு பீஜங்களும் பின்வர (ஓம் நம: சிவாய ஸம்யம் என) செபித்தால் காமியம் சித்திக்கும். கூறியபடி தியானித்து பிரணவத்துடன் பஞ்சாக்கரத்தைச் செபித்தால் போக மோக்ஷங்கள் சித்திக்கும் என்பதாம். இப்பாவால் ஆறு எட்டெழுத்துவடிவ பஞ்சாக்கரத்தை சபிக்கும் போது தியானிக்கும் முறை கூறப்பட்ட தென்க. முற்பாவில் தனித்த மோக்ஷப்பயன் கூறியதற்கேற்ப இப்பாவில் தனித் தகாமியப்பயனைச் சேரக்கூறினர். எழுத்துவகையாற் கூறினரில்லை.

பானிலா விரிக்குந் தடந்திரை யமுதப் பாகவான் பிறைச்சடை முடியுந், தேனுலாங் கமலக் கரதலத் தபய வரதமு மழகுறச் சிவனை, யானபொற் பசுந்தோட் டம்புயா தனத்தி லிருப்பதா வகமுறக் கருதி,மேன்முறை பத்தக்கரத்தையு முரைக்கின் மிடியெலாம் வேரறக் கெடுமால். (12)

பால்போல் வெண்மையான நிலவை விரிய வீசுகின்ற, பெரிய அலைகளை வீசுகின்ற கங்கையையும் சிறியசிறந்த பிறையையும் அணிந்த மேலான சடைமுடியும் தேன் ஒழுகுகின்றதாமரை மலர்போன்ற திருக்கைகளில் அபயமும் வரதமும் அழகுடன் விளங்கச் சிவபெருமானை அழகு பொருந்யதி பொன்வடிவான மெல்லிய இதழ்களையுடைய தாமரை மலரா சனத்திலே எழுந்தருளி இருப்பதாக மனதிலே பொருந்தத் தியானித்து (அழுந்தவெண்ணி) மேலே சொல்லிய முறைப்படி பத்தக்கரமாகி விளங்கும் பஞ்சாக்கரத்தை (ஓம் நமசிவாய ஸம் ஸம் யம் யம் என்பதைச்) சபித்தால் வறுமை முழுவதும் அடியோடு அழியும்.

'பானிலாவிரிக்கும்' என்பதை பிறையொடு கூட்டுக, 'அமுதம்' என்பது கங்கையைக் குறிப்பதாகும். "தானமிழ்த மென்றுணரற்பாற்று" (குறள்) என்பது முதலியற்ருல் நீர் அமிழ்தம் எனப் பெயர் பெறுதல் அறியலாம். பாகப் பிறை என இயையும். வான்=மேலான; 'சிறந்த. உயர்ந்த.

வேறு.

செல்வ நல்குமெட் டிலக்குமி யொடுமணி திளைக்கும்
பல்ல ணிக்கலன் பயிலலங் காரமும் படைத்த
மல்கு வண்ணமா நம்பனை மனமுறக் கருதிச்
சொல்லி லின்பமாம் வசியபஞ் சாக்கரச் சுருதி (13)

வசியப்பயனை அளித்தற்குச் சாதனமாகிய பஞ்சாக்கர மந்திரத்தை, எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல எட்டு இலக்குமிகளுடன், மணிகள் பதிக்கப் பெற்ற பலவகையான அணிகளால் ஏற்பட்ட அலங்காரங்களையும் பெற்று நிறைந்த அழகுடையவராகவும் பெரிதிற் கெல்லாம் பெரியவராகவும் விளங்கும் சிவபெருமானைத் தியானித்துச் செபித்தால் (ஓம் நமசிவாய ஸம் ஸம் ஸம் யம் யம் யம் என்று செபித்தால்) இன்பமெல்லாம் வந்தடையும்.

இது பன்னிரண்டு எழுத்தாகக் கூறப்படும் பஞ்சாக்கர மந்திரம் செபிக்கு முறையைக் கூறியதாகும்.

அட்ட மூர்த்தியா யனைத்துமாய் விளங்கிய வரனை
யிட்ட சித்தியி னிமித்தமா வின்னணங் கருதி
மட்டி லாரண மேழெனுங் கோடியா மறைகட்
கெட்டொ ணாதபஞ் சாக்கரஞ் செபித்திட வியல்
பாம். (14)

எட்டு மூர்த்தங்களை உடையவராகவும் எல்லாமுமாக விளங்குபவராகவும் உள்ள சிவபெருமானை விரும்பியன கிடைக்கும் பொருட்டாக மேலே கூறியபடி தியானித்து அளவில்லாத வேதங்கள், ஏழான பீஜங்களை முடிவிலே கொண்ட மந்திரங்களுக்கு எல்லாம் தம்மோடொப்பென்று கொள்ள முடியாத பஞ்சாக்கரத்தைச் செபித்தல் முறையாகும்.

எட்டு மூர்த்தங்கள், ஐம்பூதம் ஞாயிறு திங்கள் சீவன் என்பன. இவற்றை வடிவமாக இறைவன் கொண்டிருத்தலால் 'அட்டமூர்த்தி' எனப்படுகின்றனர் என்க.

வேறு.

எந்திர முதலாம் பிரணவ மதனை விருநிலத் திரேகை யுண்டாக்கிச், சந்திர பீசங் கலைமுறை மாத்ரா வேட்டனம் விதியினாற் சமைத்து, முந்துமோ ரெழுத்தான் முத்திரை யாமைந் தெழுத்தினை முற்றுற வளைத்துத், தந்த வெந் திரத்தை மாயையால் வளைப்பிற் சத்திநல் கியந் திர மதுவாம். (15)

எந்திரங்களுக் கெல்லாம் பீஜமாக நிற்பது பிரணவ மாக இருத்தலால் அதனை நடுவே எழுதி அதனைச் சுற்றி நாலு பக்கமாகிய இடத்திலும் ரேகையைக் கீறி, ரேகையைச் சுற்றி முறையாக சந்திரபீஜமாகிய 'டம்' என்பதை எழுதி அதைச்சுற்றிக் கலாபீஜமாகிய 'ஸௌ: என்பதை எழுதி அதன்மேல் வளைவாக 'அ' முதலிய ஐம்பத்தொரு எழுத்துக்களையும் எழுதி அதைச்சுற்றி மேம்பட்ட பிரணவத்தால் முத்திரை இடப்பட்ட (பிரணவத்தோடு கூடிய) பஞ்சாக்கரத்தை வளைவாக எழுதியமைத்த எந்திரத்தை அப் பஞ்சாக்கரத்தைச் சுற்றி மாயாபீஜமாகிய 'ஹ்ரீம்' என்பதனை வளைய எழுதியமைத்தால் அது நல்ல சத்தியைத்தரும் பஞ்சாக்கர யந்திரமாகும்.

முந்துமோரெழுத்தால் என்பதற்கு ஸௌ என்னும் ஒரெழுத்தாலெனத் திருக்களர். தி. மு. சுவாமிநாத உபாத்தியாயரவர்கள் எழுதி இருக்கின்றனர்; கதாசாரத்தில்.

இவர் 'ஸம்யம்' என்பவைகளைப் பிரணவத்திற்கும் பஞ்சாக்கரத்திற்கும் இடையில் சேர்த்துச் செபிக்கவேண்டும் என்பர். தமிழ்வல்ல பேரறிஞர் பின்னத்தூர் நாராயண சாமி ஐயரவர்கள் பாவில் ஸாந்தம் யாந்தம் என்றிருப்பதால் பஞ்சாக்கரத்திற்குப்பின்னர், ஸம் யம் என்பவைகளைச் சேர்த்துச் செபிக்க வேண்டும் என்று குறிப்புரையில் குறித்தனர். யானும் பின்னர்ச் சேர்த்துச் செபிக்குமாறு எழுதி இருக்கின்றனன்; அத் தமிழறிவு சான்ற ஐயரவர்கள் உரையைப் பின்பற்றி என்க.

திருக்களச் சுவாமிநாத உபாத்தியார் அவர்கள் எந்திரத்தில் ஐம்பத்தோர் அச்சரங்களைச் சுற்றி ஸௌ; என்பதை எழுதி அதைச் சுற்றிப்பிரணவத்தோடு கூடிய பஞ்சாக்கரத்தை எழுதல் வேண்டு மெனக் குறித்திருக்கின்றனர்.

பொற்பசுந் தகட்டி லாயினும் வங்கத் தகட்டொடு
பூர்ச்சமே யெனினு, முற்பகுத் துரைத்த வியந்திரம்
பொறித்து முறையின வாகனம் பண்ணி, யற்பொடு
பதினாருமுப சாரத் தொடுமிகுத் தருச்சனை புரிந்து,
மற்றது தரித்து மறையினற் சந்தி வந்தனை செயிற்பவ
மாளும். (16)

பொன்னாலாகிய பசுமையான தகட்டிலாவது ஈயத் தகட்டிலாவது '**பூர்ச்சம்**' என்னும் மரத்தின் தோலிலாவது முன்னாலே விளக்கிச் சொல்லிய எந்திரத்தை எழுதி விதிப்படி (இறைவனை) ஆவாகனம் செய்து அன்புடன் பதினாறு உபராசங்க (சோடசோபசாரங்க) ளுடன் மிக அருச்சனை செய்து (பூசித்துப்) பின்னர் அவ்வெந்திரத்தைத்திரித்துக் கொண்டு வேதாகமவிதிப்படி சந்திகளிற் செய்யும் சந்தியா வந்தனத்தைச் செய்தால் பிறப்பு அறும்.

சந்தி—காலை, மதியம் மாலை என்பனவாகும். பொறித்தல்=எழுதல் ஆவாகனம்=மனதினாலே மனதிலேயுள்ள இறைவனை வெளிப்படுத்தி நிலை நாட்டல். (எந்திரத்தில், வெளியாக்கி நிலை நாட்டல்).

கூறிய விதியா லியந்திரத்தகடு புனைந்துளோன்
குவலயமுழுது, நீறுசெய் திறையிற் றரித்திடுங் கவர்வாய்
நெட்டிலைச் சூலமொன்றேந்தி. யீறிலா னந்த நாடக
மியற்று மீசனா மென்பது சரதம், வேறுரை யுளதோ
வின்னணம் பலவு மெய்த்தவர்க் கறுமுகனுரைத்தான்.
(17)

மேலே சொல்லியபடி விதிப்படி எந்திரம் எழுதிய தகட்டை அணிந்து கொண்டவன் உலக முழுவதையும் ஒரு நொடியில் சாம்பராக்கிப் பூசிக்கொள்கின்ற, மூன்றாகப் பிரிவுப்பட்ட வாயையுடைய நீண்ட இலை போன்ற சூலாயுதம் ஒன்றைக்

கையிலே எளிதாக வைத்துக்கொண்டு முடிவில்லாத இன்பக்கூத்தைச் செய்தருளுகின்ற சிவபெருமானுவான் என்பது உண்மையாகும். சொல்வதற்கு வேறு வார்த்தை உண்டா? இல்லை என்று இப்படிப் பலவற்றை உண்மையான அந்தத் தபசிகளுக்கு ஆறுமுகக் கடவுள் உரைத்தருளினுர். நித்தியபஞ்ச கிருத்தியனுதலால் 'ஈறிலா' என்றனர்.

இறையில்—இறைப்பொழுதில்; நொடிப்பொழுதில் 'இறை' என்பது சிறுமையை உணர்த்தும் ஓர் உரிச் சொல்லாகும்.

உரைத்தமெய்ப் பஞ்சாக் கரத்தினைப் பரமன் சந்நிதி யினுமுமை முன்னுந், தரைக்குண் மிக் காய தெக்கணு மூர்த்தி சந்நிதி யினுமருந் தவத்தோ, ரருத்திசெய் துருவாசன் முத லெவரு மன்பொடு செபித்துவிண் புகழுந், திருக்கள ரீசன் வெளிப்பட வரங்கள் பெற்றனர் முத்தராய்ச் சிறந்தார். (18)

மேலே சொல்லியருளிய உண்மையான பயனை அளிக்க வல்ல பஞ்சாக்கரத்தைச் சிவபெருமான் சந்நிதியிலும் (திருமுன்பிலும்) உமையம்மையார் திரு. முன்பிலும் உலகத்திலே உயர்ந்த தெய்வமாகிய தக்ஷிண மூர்த்தியின் திருமுன்பிலும் அன்பு மிகுந்த துருவாசர் முதலிய அரியதவசிகளனைவரும் பக்தியுடன் செபம் செய்து, (அச்செபமகிமையால்) தேவர்கள் முதலிய யாவரும் புகழும்படியான திருக்களர்ப் பெருமான், தங்கள் கண்களின் முன் வெளிப்பட்டு நிற்க அப்பெருமானிடத்துப் பலவரங்களைப் பெற்றவர்களாய்ச் சீவன் முத்தர்களாகவு மேம்பட்டார்கள்.

மெய்ப்பொருளை உரைக்க அமர்ந்த மூர்த்தியாதலின், தக்ஷிணமூர்த்தியை "*தரைக்குண்மிக்காய தக்கணுமூர்த்தி*" என்றனர். "*தக்ஷிணம்*" என்பது '*தெக்கணம்*' என வடமொழியாயிற்று. '*தரை*' என்பது உலகம் என்னும் பொருளில் நின்றது. சிறத்தல்=தனித்தல்; மேம்படல்.

ஆதலா லுணர்வின் மிக்கமா தவத்தோ யாத்தசற் குருவினை யடைந்து, மோதிய தரங்கச் சுரநதி யழைப்பான் முயன்றவ னெனப்பல முயன்று, மேதகு மறையு

மறிவுரு வைந்தக் கரத்தையும் விதிமுறை கேட்டுத், தீதறச் செபிக்கி லொருவனுங் கவனே சிவனெனச் செப் பலாந் திண்ணம். (*19*)

மிகுந்த பெரிய தவத்தினையுடை சனற்குமாரனே தபசிகள் இப்படி ஆனமையினுலே, ஒருவன் உண்மையுரைக்கும் ஒரு குருபரரை அடுத்து, மோதுகின்ற அலைகளையுடைய கங்காநதியைப் பூமியில் அழைப்பதற்குப் பகீரதன் முயன்றது போலப் பலவாருக முயற்சிசெய்து, மேன்மையான வேதங்களும் அறியமுடியாத பெருமை வாய்ந்த பஞ்சாக்கரத்தையும் விதிப்படி கேட்டுக் குற்றமில்லாமற் செபித்தால் (அவன் சிவனுக ஆவனுதலால்) அப்பொழுதே அவனைச்சிவனென்று சொல்லாம் இஃது உறுதியான மொழியேயாகும்.

ஆத்தன் = உண்மையுரைப் போன். பஞ்சாக்கரத்தையும் உம்மை உயர்வு சிறப்பும்மை, தீது = குற்றம். அவை யாவன: பெரியோர்களை இகழ்தல், சிறியோர்களிடத்தில் (கயவரிடத்தில்) மந்திரமகிமையைச் சொல்லுதல், சிவ விஷ்ணு முதலிய தெய்வங்களை வெவ்வேருக எண்ணி வெறுத்தல், வேத மொழியில் நம்பிக்கை இல்லாதிருத்தல் நன்னூல்களின் வாக்கியத்தில் நம்பிக்கை இல்லாதிருத்தல், குருவாக்கியத்தில் நம்பிக்கை இல்லாதிருத்தல், ஈசுவர மந்திரத்தின் மகிமையைப் புனைந்துரையாகக் கொள்ளுதல், ஈசுரமந்திர செபம் எல்லாப் பாபத்தையும் போக்குமென்று தீய வினைகளைச் செய்தல் ஈசுரமந்திரஜெபம் பெரிய புண்ணியத்தை உண்டாக்கு மென்று வேறு நல்வினைகளைச் செய்யாதிருத்தல், மற்றைய நல்வினைகளுடன் ஈசுரமந்திர செபம் ஒப்பாகும் என்றல் முதலியனவாகும் என்க; இவையும் இவை போன்ற குற்றங்களு மின்றிப் பஞ்சாக்கரத்தைச் செபித்தல் வேண்டும் எனக் கொள்க.

சிவத்திஞ லன்றிச் சித்தியா தைந்தக் கரமறை தெரிக்குமித் தலத்திற், றவப்பெரும் பயனு லோருருச் செபிக்கிற் றகுமுருக் கோடியாய்த் தவிராப், பவக்கருக் களைந்து மலபரி பாகம் பண்ணி மேற் கதியினைப் பயக்கு, முவப்பொடு மகிழ்ந்து பலவுருச் செபிக்கி லதன்பய னுரைப்பவ ரிலையால். (20)

சிவபெருமானுடைய திருவருள் இருந்தாலொழிய செபிப்பதற்கு வாய்ப்பேற்படாத பஞ்சாக்கர மந்திரத்தை வேதங்கள் புகழ்ந்துரைக்கும்படியான இத்திருக்களரிலே, முன்' இயற்றிய தவத்தின் பெரும்பயனாக ஓருருச் செபித்தால் (ஒருதரம் மனதிலே சிந்தித்தால்;) அது தக்க கோடி உருவாகி, நீங்காத பிறப்பு இறப்பிற்குக் காரணமாக உள்ளனவற்றை நீக்கி இருவினை ஒப்பாகிய மலபரிபாகத்தைச் செய்து மேலானவீடு பேற்றைத்தரும். மகிழ்ச்சியுடன் பல உருச்செபித்தால் அச்செபத்தின் பயனை இன்னதெனச் சொல்லுபவர் ஒருவரும் இலராவர். (ஒருவராலும் சொல்லுதல் இயலாது என்பதாம்).

'சித்தியாத' என்பதில் அகரம் தொகுத்தல்விகாரம்

அஞ்செழுத் துபதேசம்பெறுங் கால மாதியாயாண்டுக
டோறு
மஞ்சினந் தவழும் பொழிற்றிருக் களருள் வருமுரு கனுக்
கபி டேகம்
விஞ்சிய சுவையா நிவேதனம் புரிந்து விசேடமாம் பூசனை
யயர்ந்து
நெஞ்சுறப் புகழ்வோர் தேவர்கோ னாகி நிச்சய முத்தரா
குவரால் (21)

முற்கூறிய பஞ்சாக்கரஉபதேசம் பெறுங் காலம் தொடங்கிப் பின்னர் யாண்டுகள் தோறும், மேகக் கூட்டங்கள் படிந்து செல்லும்படியான சோலைகள் சூழ்ந்த திருக்களரிலே எழுந்தருளி இருக்கின்ற ஆறுமுகப் பெருமானுக்கு அபிடேகம் செய்து,மிகுந்த சுவை அமைந்த பல வகைச் சோறும் பண்ணியங்களும் தேங்குழல் முதலியனவுமாகியவற்றை நிவேதித்து (நேர்வித்து)ச்சிறந்த பூசையைச்செய்து மனம்ாரப் புகழ்ந்து வழிபாடு செய்பவர்கள், தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனாகிச் செல்வத்தைச் இந்திர நுகர்ந்து, பின்னர் நிச்சயமாக தேவர்கோன் அறியாத்தேவ தேவனாகிய பரமனுடன் இரண்டறைக் கலந்து அப்பரமனாகி முத்தர்களாக ஆவார்கள்.

வள்ளிமென் களபப் புணர்முலைக் குவடு தைவரு மணிநெடும் பணைத்தோள், வெள்ளிலைச் சுடர்வே லறு முகக் கடவுண் முற்புகல் விதியுப தேசங், கொள்பவ ரெவரு முடிவில்பல் பிறவிக் குரை புனற் பரவையை நீங் கித், தெள்ளிய ஞானப் பெருவரம் பயக்குஞ் சிதைவிலா முத்தியைச் சேர்வார் (22)

வள்ளியம்மையாரது மென்மையான களபச்சாந் தணிந்த நெருங்கிய முலைகளாகியமலைகளைத்தீண்டுகின்ற அழகிய நீண்ட திருக்கைகளையும் வெற்றிலைபோன்ற வடி வும் ஒளியும் பெற்ற வேற்படையையுமுடைய ஆறுமுகக் கடவுள், முன்னாலே உபதேசித்தருளிய முறைப்படி உப தேசங் கேட்பவர்கள் எல்லாரும் அளவில்லாத பல பிறவிக ளாகிய ஒலிக்கின்ற நீரையுடைய கடலைவிட்டு நீங்கிப் பெரியவரப்பயனாகிய சிவஞானந்தரக்கூடிய அழியாத முத் தியை அடைவார்கள்.

வெற்றிலையானது, மற்றைய இலைகள் மாவிலை பலா விலை ,என்பன போன்ற அடை இன்றியதாதலால் வெற் றிலை' எனவும் 'வெள்ளிலை' எனவும் பெயர்பெறும் என்க. தைவரல்=தடவல் 'குரைப்புனல்' என்பது கடலுக்கு ஏற்ற அடையாகும்.

திருவெண்ணீ றணிந்தோ ருருத்திர வக்கத் தெரியல் பூண்டவர்சதா சிவன்பா,லுருகுமன் புடையோ ரீங்கிவர்க் கன்றி யைந்தெழுத் தோதுதறீதாங், குருவுப தேச முறை மையி லைந்தக் கரத்தையுஞ் செபித்திடக் குணிப்பி விருநிலத் தெவரு மெம்பிரான் கயிலை யெய்துவர் முத்த ராயிருப்பார். (23)

வெண்மையான திருநீற்றை அணிந்தவர்களும் உருத் திராக்க மாலையை அணிந்தவர்களும், சிவபெருமானிடத்தில் மனம் உருகும்படியான அன்புகொண்டவர்களும் ஆகிய இவர்களுக்கல்லாமல் வேறு எவர்க்கும் பஞ்சாக்கரத்தை உரைத்தல் தீயசெயலாகும். குருபரர் உபதேசிக்கும் முறை மைப்படிபஞ்சாக்கரத்தைச் செபிப்பதற்குக்கருதினால், அவர் கள்பூவுலகத்திலே யாராக இருந்தாலும் எம்

தலைவராகிய சிவபெருமானுடைய கயிலைம்பதியை அடைந்த வர்களாகி முத்தர்களாக இருப்பார்கள்.

குணித்தல்=மதித்தல்; கருதல்,

" **பூசுநீறுபோலுள்ளும் புனிதர்கள்** " (பெரியபுராணம்) எனச் சான்றோர்கள் வெண்ணீற்றையே பூசுதல் தகும் என வுரைக்கு நூலுரைப்படியும் பெரியோர்கள் நடைமுறைப் படியுங் கொண்டமையால், "**திரு வெண்ணீறு**" என்றனர். "**ஆரங்கண்டிகை**"(பெரியபுராணம்) என்றபடி "**உருத்திர. வக்கத் தெரியல்**" என்றனர்.

பூருவத் தெடுத்த வனந்தமாம் பிறப்பிற் புகலரு மிருதியும் பொருவி, லாரிய மறையு மியம்பிய நெறியிற் சேர்ந்துதூ யவர்களா யமைந்த, சீரியர் பரம ஊைந்தெழுத் திணையுஞ் செபித்திடப் பெறுகுவர் செபித்தோர், பேரிணை யுரைக்கி விரிந்திடும் பூதப் பிரேதமும் பேய்களும் வெருவி. (24)

முன்பு எடுத்த பலவாகிய சென்மங்களிலே, சொல்லு தற்கரிய பெருமை வாய்ந்த ஸ்மிருதிகளும், ஒப்பற்றவையும் உயர்ந்தவர்களால் ஓதப்படுகின்றவையுமாகிய வேதங்களும் சொல்லுகின்ற நெறியிலே நின்று மனந்தூய்மையுடைய வர்களாகப் பொருந்திய விழுப்பமுடையவர்கள சிவபெருமா னுடைய பஞ்சாக்கரத்தையும் செபிக்கத்தக்கவர்களாக ஆவார்கள். அப்படிச் செபித்தவர்கள் பெயரைச் சொன்ன லும் (சொல்லியமட்டிலே) பூதங்களும் பிரேதங்களும் பேய் களும் நீங்கிவிடும்.

சீர்மை=விழுப்பம் சீரியர்=கனமுற்றவர்; நொய்ம்மை யற்றவர்.

இணைத்தென அறியப்படுதலின் "**ஐந்தெழுத்தையும்**" என நீளமுற்றும்மையுடன் சேர்த்துக் கூறுகின்றனர் என்க.

அரிமுதற் றேவ ரெவரையும் புவன மணைத்தையு மிறுதியிற் றிரித்து, விரிகதிர்ச் சூல மேந்திநின் றுடும் விமலனை யன்றிவேறுலகிற், புரிவுறுங் கடவு ளுண்டெனு

மறிவில் புத்தரே யாதியாப் புகலும், பரசம யப்புன் னெறியடைந் தோர்க்குப் பரமனை ந் தெழுத்தையும் பகரார். (25)

திருமால் முதலிய தேவர்கள் எல்லாரையும் உலகமுழுவதையும் முடிவுக் காலத்தில் அழித்து, விரிகின்ற கிரணங்களையுடைய சூலாயுதத்தைத் திருக்கையிலே ஏந்திக் கொண்டு நின்று ஆடுதலைச் செய்கின்ற நிர்மலனாகிய சிவபெருமானை அல்லாமல் வேறாக உலகத்திலே விரும்பத்தக்க கடவுள் உண்டென்று சொல்லுகின்ற அறிவற்ற புத்தர் முதலாகச் சொல்லப்படுகின்றவர்களான வேற்றுமதமாகிய இழிந்த நெறியை அடைந்தவர்களுக்குச் சிவபெருமானுக்குரிய பஞ்சாக்கரத்தையும் சொல்லமாட்டார்கள் (பெரியோர்கள்).

புத்தர்கள் வேறு கடவுள் உண்டெனக் கூறாராயினும் வேறு கொள்கையுடைய குருவைக் கடவுளாகக் கொள்ளுதலால் அவரையும் வேறு கடவுள் உண்டென்பாருடன் சேர்த்துக் கூறினர்போலும்.

இறைவன் ஒடுக்கும் காலத்து, உலகம் தூல வடிவமாறிச் சூக்குமவடிவமாய்க் காரணமாகிய மாயையில் ஒடுங்கும்படி செய்தலானும் திருமால் முதலிய தேவர்களையும் பிறரையும் உடலைவிட்டு நீக்கி மாயையில் ஒடுங்கும்படி செய்தலானும் "திரித்து" என்றனர் என்ப.

திரித்தல் = முன்னிருந்த நிலையினின்று மாற்றுதல்.

மனுமுதன் மிருதி யாவையு நான்கு மறைகளும் புராணமூ வாறு, நனிவிதந் துரைக்கு மாகம மொருநாலேழையு முண்மையா நவிலும், புனிதரா யரன்பா லன்புளோர் தமக்குப் பொருவில்சற் குருமுயற்சியினாற், றனிமுதற் பரம னைந்தெழுத் தினையும் புகல்வது விதியெனத் தகுமால். (26)

மனுஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகள் எல்லாமும் இருக்கு முதலிய நான்கு வேதங்களும் ஸ்காந்தம் முதலிய பதினெட்டுப் புராணங்களும் பொருள்களை நன்றாக மிக எடுத்துவிளக்

கும்படியான காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்களு மாகிய இவைகளைப் பயிலுகின்ற மனத்தூய்மை உடைய வர்களாகிச் சிவபெருமானிடத்துப் பக்தி கொண்டொழுகு கின்றவர்களுக்கு, ஒப்பற்ற சற்குருபரரின் முயற்சியினுலே ஒப்பற்ற முதல்வராகிய சிவபெருமானுடைய பஞ்சாக்கரத் தையும் உபதேசிப்பது முறையாகும் என்றல் பொருந் தும்.

வேதாகமஸ்மிருதி முதலிய பயிற்சி உடையாரே சிவ பத்தியினின்று நீங்கார் என்பதும் சிவபக்தி உடையவரே தீயன செய்யாது ஸ்ரீ பஞ்சாக்கரத்தை நம்பிக்கையுடன் செபிப்பாரென்பதும், அவரே குருபரர் உபதேசிக்குமாறு ஒழுகுவா ரென்பதும், அப்படி ஒழுகிப்பெற்றுச் செபிக்கும் பஞ்சாக்கரமே பயனை அளிக்குமென்பதும், குருபரர் மன முவந்து உபதேசிக்காத மந்திரம் பயனை அளிக்காதென்ப தும் பெறப்பட இப்பாட்டு நிகழ்கின்றதென்னலாம்.

சரதவே தாந்த சாரமாம் பஞ்சாக் கரத்தினைச் சண் முகன் மகிழ, வரனுப தேசஞ் செய் தனன் புரக்கு மந்தமந் திரத்தினை மறையான், முருகனே ரிருபத் தைந்தெனும் விதமாப் பணிவிடை முயன்றிடு முனிவர்க், கிருளறப் புகன்ரு னம்முறை பேதா பேதத்தாற் பயன்களு மெய் தும். (27)

உண்மையான வேதாந்தம் எனப்படுகின்ற உபநிடதங் களின் சாரப்பொருளாக உள்ள ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஆறு முகக்கடவுள் மனமகிழுமாறு சிவபெருமான் அவருக்கு உப தேசித்தார். ஆறுமுகப்பெருமான் தாம் தம் திருவுள்ளத்தில் பொக்கிஷமாக வைத்துக் காப்பாற்றிவருகிற அந்த ஸ்ரீ பஞ் சாக்கரத்தை மறைக்காமல் உள்ளபடி இருபந்தைந்து வகை யாக, பணிவிடை செய்கின்ற முனிவர்களுக்கு ஐயந்திரிவுக ளாகிய இருள் நீங்கும்படியும், மும்மலமாகிய இருள் நீங்கும் படியும் விரும்பி உபதேசித்தார். அம் முறைகளால் (அம் மந்திரமுறைகளால்) பேதப்பயன் அபேதப்பயன் பேதா பேதப்பயன் என நிகழும் பயன்கள் வரும்.

சரதம்=உண்மை. பேதப்பயன், சுவர்க்கம் முதலிய வற்றில் நுகரும் நுகர்ச்சி இன்பம். அபேதப்பயன். ஆன்

மாவாகிய தன்னை இன்னரென அறிந்து இன்புறலாகும். பேதாபேதப்பயன், இறைவனோடு இரண்டறக்கலந்து இன்புறலாகும் என்னலாம் போலும்.

வேதாந்த சித்தாந்த மரபினர் இங்குப் பேதம் அபேதம் எனப் பிரித்துப் பேதப்பயன் சுவர்க்க முதலியவற்றில் நுகரும் நுகர்ச்சி இன்பம் முதலியனவாகும் எனவும் தன்னைச் சச்சிதானந்த சொரூபமாக அறிந்து இன்புறல் அபேதப் பயன் எனவும் கொள்வர். இனி அவர்கள் தன்னையும் தனக் கன்னியமாகத் தோற்றும் மாயை முதலியவற்றையும் சச்சிதானந்த சிவமாகக் கண்டின்புறல் அபேதப்பயன் எனவும் கொள்ளுவார்கள் என்னலுமாகும்.

அடிமுதற் சடில முடிபரி யந்த மக்கர ரூபமா னந்த,
நடமிடு மகேசற் காதலாற் பிரம தாண்டவ மாகுமா னடனஞ்,
சடைமுடி துளக்கிச் சச்சிதானந்தத் தாண்டவந் தனைப் புரி நடேசன்,
வடிவிலோ ரைந்து வண்ணமாங் காலை யாதியா மாலையி னளவும். (28)

ஆனந்தத் தாண்டவத்தைச் செய்தருளுகின்ற மகேசனாகிய சிவபெருமானுக்கு அடிமுதலாக முடிமுடிவாக உள்ள உறுப்புக்கள் யாவும் பஞ்சாக்கர வடிவமாகும் ஆதலால் அவர் செய்யும் அந் நடனம் பிரமதாண்டவம் எனப்படும். சடையுடன்கூடிய முடியை அசைத்து அந்தச் சச்சிதானந்த நடனத்தைச் செய்தருளுகின்ற அந் நடேசப் பெருமானுடைய திருமேனியானது காலை முதல் மாலை இறுதியாக உள்ள ஐந்து பொழுதிலும் மாறிமாறி ஐந்து நிறங்கள் தோன்றப் பெறும்.

ஐந்து அக்கரங்களும் பிரமான்ம ஐக்கியத்தைக் காட்டலால் அவ்வக்கரவடிவான உறுப்புக்களால் நடிக்கும் நடனம் பிரமதாண்டவம் எனவும் சச்சிதானந்தத் தாண்டவம் எனவும் கூறப்பட்டது எனவுரைக்கும்படி இப்பாட்டு நிகழ்கின்றது.

காலையோர் யாம நண்பக லபரா னியமிருட் கலந்தெழு
மாலை,
யேலுமிக் கால மைந்தினு மான்பாற் செந்துகிர் வெங்கன
லிலகுங்
கோலநற் பசும்பொன் மணியெனத் திகழுமாதலானடே
சனைக்குலவு,
ஞாலமும் விசும்புஞ் சங்கம மெனவே நவின்றிடு நாமமு
மாமால். (29)

காலை, முன்பகல், நடுப்பகல்,பின்பகல் இருளுடன்கலந் தெழுகின்ற மாலைஎன்று பொருந்துகின்ற இக்காலம்ஐந்தன் கண்ணும் முறையே பசும்பால்போலவும் செம்பவளம் போலவும், விளங்குகின்ற அழகிய பசும்பொன்போலவும், மாணிக்கம்போலவும் (அந்நிறங்கள்) விளங்குமாதலால் அவ்வாறு விளங்குகின்ற நடேசப் பெருமானை விளங்குகின்ற பூவுலகத்தாரும் தேவ லோகத்தாரும் சங்கமம் என்று பெயரிட்டு வழங்குவார்கள்.

காலை ஓர் யாமம் எனப்பிரித்து காலையும் அதன்பின் பின்பகலாகிய ஒரு யாமமும் எனக்கொள்க. 'சங்கமன்' என்பது வேறு காரணத்தாலிறைவற்குவந்த பெயராயினு மிங்கு நிறக்கலப்பினுல் வந்ததாக உத்பரேக்ஷை செய்துள்ளார்.

ஞாலமும் விசும்பும் என அஃறிணை வாசகத்தால் கூறினமையால் ''*நவின்றிடும்*'' எனச் செய்யுமென்னுமுற்று வந்தது.

'*சங்மம்*' என்பது சங்கமன் என்றிருப்பின் நன்ருகும், சங்கமன் = கலப்புடையவன். '*காலையோர் யாமம்*' என்பது '*காலை முன்பகல்*' என்றிருப்பின் நன்ருகும்.

இரவுபகல் என்பவற்றுள் பகற்பொழுதை ஐந்தாகப் பிரிக்கலாம் என்பது இங்கு அறியப்படுகின்றது.

மிகவரம் பயக்கு முலோக்கிய தீர்த்த வாவியில்
விருப்பொடு முழுகி, யகநெகிழ்ந் தொருகாற் றிருக்கள
ரீசன் றனைத்தரி சிக்கிலாங் கவர்க்குப், புகருறு மவித்தை

யால்வரும் போக வாழ்க்கையு மிருவினைப் புணர்ப்புந்,
தகவினு னீக்கி யரன்சிவ கதியைத் தருமிதற் கைய
மொன் றுளதோ (30)

மிகுதியாக மேன்மையை ஒழுகுவார்க்கு அளிக்கவல்ல உலோக்கிய தீர்த்தம் என்கிற திருக்குளத்திலே அன்புடன் குளித்து மனமகிழ்ந்து ஒருதரம் திருக்களர்ப் பெருமானைத் தரிசித்தால், அங்கே அவர்களுக்குக் குற்றம் பொருந்திய அஞ்ஞானத்தினுல் உண்டாகின்ற நல்வினை தீவினைகளின் சேர்க்கையையும் அவற்றினுலே இகலோக பரலோகங்களில் உண்டாகும் சுகதுக்கபோகங்களுடன் வாழுகின்ற வாழ்க்கையையும் அச் சிவபெருமான் தன்னருட்டன்மையினுலே நீக்கி வீடுபேற்றை அளிப்பர். இவ்விடத்தில் ஐயமென்பதொன்றுண்டோ? இல்லை (நீக்கி நிச்சயமாகத் தருவார்).

பல்லுயிர்க் குயிராம் பராபர னுருவே யைந்தெழுத்
துருவம்வேற்பகவ, னல்லதீண் டொருவ ரந்தமந்
திரத்தை யறிந்தியம் புநரிலை யரன்பான், மெல்லியல்
சிறிது மேலெழ வுணரு மதிற்கடு களவுவேல் விமலன்
சொல்லின னென்பா லத்துணை யுரைத்தேன் முற்றுநான்
சொற்றிட வரிதால். (31)

பல உயிர்களுக்கும் உயிராக விளங்குகின்ற பரம்பொருளான சிவபெருமான் வடிவமே பஞ்சாக்கரங்களின் வடிவமாகும். வேலாயுதத்தை உடைய பகவானுகிய ஆறுமுகக் கடவுளை அல்லாமல் இங்கு வேறெவரும் அந்தப்பஞ்சாக்கர மந்திரத்தின் இயல்பினைத் தெரிந்து சொல்லவல்லவரில்லை. ஆனுல் சிவபெருமானது இடப்பாகத்திலே விளங்கும் மென்மையான இயல்புடைய உமையம்மையார் முருகப்பெருமானைவிடக் கொஞ்சம் மிகுதியாக உணருவார். அப்படி அவர்களாலே உரைக்கத்தக்கதும் உணரத்தக்கதுமாகிய அம்மந்திரத்தின் இயல்பில் கடுகளவு என்னிடத்தில் வேலேந்திய நிர்மலராகிய முருகப்பெருமான் கூறி அருளினுர். அவ்வளவு யானும் உனக்குச் சொன்னேன். முழு இயல்பும் யான் சொல்லுதற்கு இயலாது. (முழு இயல்பையும் யானறிந்து சொல்லவல்லவனல்லன்.

*பாழிசால் பரமன் திருத்தல மனந்தம் பகரினும் பாரிசா
தவனங் கேழுறக் கிளர்ந்த தித்தல மிதனிற் கிளையொடும்
வாசமா யுறைவோ,ராழிசூ ழகிலத் தொருவரைப் பார்க்கி
லாங்கவர்க் காற்றுதற் கரிதா, மாழ்கிய பாவம் யாவையு
மொழிந்து மழுவலவா னுலகில்வீற்றிருப்பார்.* (32)

கடல் சூழ்ந்த இவ்வுலகத்திலே கோயில்கள் மிக அமைந்த திருத்தலங்கள் பலவென்று சொன்னாலும் அவற்றுள் பாரிசாதவனமாக விளங்கு மித்திருக்களரானது எல்லாத்தளங்களிலும் மேம்பட்டதாகும், இந்தத் தலத்திலே மனைவி முதலிய சுற்றத்தாருடன் உறைவிடமாகக் கொண்டுறைபவராக ஒருவரைப் பார்த்தால் அவர்களுக்குத் தாங்க முடியாமல் உள்ளவையும் மனதை மயக்குபவையுமாகிய பாபங்கள் எல்லாமும் நீங்குதலால், மழுவாயுதத்தை ஆள வல்லவராகிய சிவபெருமானுடைய கைலையுலகிலே இணையின்றி இருந்து இன்புறுவார்கள்.

பாழி=கோவில்.

*மாகமா மதியின் மார்கழி மதியின் வளர்திதி யாறுறி
னெவர்க்கு,
மோகையாந் தருமத் தினமதின் முருகற் குவப்புட னித்
தலத்துகந்து,
பாகமா மமிர்த மைந்திறுற்பலத்தாற் பான்மது முதலிய
பிறவும்,
யோகமாம் பொருளான் மஞ்சன மாட்டி நிவேதனம் விதி
முறை யுதவி.* (33)

ஒருவர் மாசிமாதம் மார்கழி மாதங்களில் பூர்வபக்கத்தில் சஷ்டி திதி வந்தபொழுது, அத்தினம் எல்லாருக்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய புண்ணியதினமாதலால் அத்தினத்திலே முருகப் பெருமானுக்கு மகிழ்ச்சியுடன், உயர்ந்து (மிகப்) பக்குவமாக அமைந்த பஞ்சாமிர்தத்தாலும் பிற பழச்சாறுகளாலும் பாலாலும் தேனுலும் பிறவாகப் பொருந்திய எண்ணெய் கருப்பஞ்சாறு பஞ்சகவவியம் முதலியவற்ருலும் அபிடேகித்தலைச் செய்து (சர்க்கரைப்

பொங்கல் முதலிய) நிவேதனங்களையும் விதிப்படி நிவே தித்து. யோகமாம்=கூடிய.

'ஒருவர்' என்பது பின்பாவிலிருந்து கொண்டுவரப்பட்டது குளகமாக இருத்தலால் என்க.

மதுவிரி நீலவுற்பலத் தெரியல்வனைந்துவேற் குகன் பதம் வணங்கித், துதிசெயி லொருவ ராங்கவர் தமக் கெண் ணெண்கலை முழுவதுந் தோற்றுங், கதிருமிழ்ந் தவிரு முழுமணிச் சுடிகைச் சேடனுங் கரஞ்சிரங் கம்பித், ததிசய முறநல் லறிவுறும் பின்பு கந்தசா லோக்கிய மணுகும். (34)

தேனொழுகும்படியான நீலோற்பல மலராகிய மாலையால் அலங்கரித்து வேலாயுதத்தை உடைய முருகப்பெருமானை வணங்கிப் புகழ்ந்து வழிபட்டால் அவருக்கு அறுபத்து நான்குகலைகள் எல்லாமும் தாமாக மனதிலே தோன்றும். கிரணங்களைவிட்டு விளங்கும்படியான முழுமாணிக்கக் கொண்டையை உடைய ஆதிசேடனும் கைகளும் தலையும் அசையப் பெற்று இறும்பூது கொள்ளும்படி பேரறிவு தானாகவந்து சேரும். பின்னர் கந்தசாலோக பதவியும் தானாக வந்து சேரும்.

வழிபடும் ஒருவர் அறுபத்து நான்கு கலைகளையும் பேரறிவையும் கந்தகாலோக பதவியையும் எளிதாக அடைவர் என்பதாம். ஆதிசேடன் கைகளையுடையான் என்பது பெறப்பட்டது.

ஒருவர் முருகப் பெருமானுக்கு.........அபிடேகித்தலைச் செய்து மாலையால் அலங்கிரித்து (சர்க்கரைப் பொங்கல் முதலிய) நிவேதனங்களை நிவேதித்து வணங்கித் துதித்தலாகிய வழிபாட்டைச் செய்தால் அவருக்கு அறுபத்து நான்கு கலைகளும் பேரறிவும் சாலோக பதவியும் தாமாக வந்தடையும் என இருபாவையும் கூட்டிப் பொருள் காண்க.

திங்களுக் கொருகான் மருவிடு முயர்கார்த் திகை வரு தினத்திலாயினும்பார், பொங்கொளி விரிக்கும் பிருகு வா ரத்தி லாயினும் புனிதமென் புனலாற், செங்கனித்

திரளாற் பஞ்சகவ் வியத்தாற் றெள்ளமு தைந்திஞற் சிறப்ப, வெங்கதிர் வடிவே லிறைக்கபிடேகம் விதிமுறை செய்துபின் வியப்பால். (35)

மாதத்தில் ஒரு நாளில் வந்து பொருந்துகின்ற கார்த்திகை நட்சத்திர நாளிலாவது பூமியிலே மிகுந்த ஒளியைப் பரப்புகின்ற வியாழக்கிழமையிலாவது தூய்மையான கனமற்ற நீரிஞலேயும் செந்நிறமாகப் பழுத்த பழக் கூட்டத்தின் சாறுகளாலேயும் பஞ்சகவ்வியத்திஞலேயும் தூய்மை மையான பஞ்சாமிர்தத்தாலேயும் சிறக்கும்படி விரும்பத்தக்க கிரணங்களை விடுகின்ற கூர்மையான வேற்படையையுடைய இறைவராகிய முருகப் பெருமானுக்கபிடேகஞ் செய்து பின்னர் வியக்கும்படியாக,

பிருகுவாரம்=வியாழக்கிழமை. திங்கள்=மாதம். மாசுற்றபுனல் தடிப்பாகக் கனக்கும். மாசற்றபுனல் மெல்லியதாக இருக்குமாதலால் "புனிதமென்" புனலால் என்றனர். இனி முழுகுவாருக்குப் புண்ணியத்தைக் கொடுத்துப் புனிதம் ஆக்குந் தெய்வத்தன்மையும் உடையதாக இருத்தலால் "புனித மென் புனல்" என்ருரெனினுமாம்.

சுவையிரு மூன்றுந் தருநிவே தனங்கள் செய்துபின் றூபமே முதலா, மவையெலா முறையாற் புரிந்துதண் ணலரா லருச்சனைவிதியுளி யாற்றிப், புவனமும் விசும்பும் புகழ்திருக்களருளறுமுகக் கடவுளைப் போற்றி, னவதலத் தெவருந் தனதனைப் போன்று நன்மலர்த் திருவொடு நயப்பார். (36)

இனிப்புப் புளிப்புக் கைப்புக்கார்ப்புத் துவர்ப்பு உவர்ப்பாகிய ஆறுசுவைகளைக் கொடுக்கத்தக்கனவாகச் செய்யப்பெற்ற சர்க்கரைப் பொங்கல் முதலிய சோற்று வகைகளும் அப்பம் முதலிய பண்ணிய வகைகளும் பானகம் பாயசம் முதலிய பருகுந்தன்மையுடையவைகளுமாகிய நைவேத்தியங்களை நிவேதித்துப் பின்னர்த் தூப தீப முதலியவற்றை முறைப்படி காட்டிக் குளிர்ந்த மணமுள்ள தாமரை முதலிய மலர்களால் அருச்சனையை, விதிப்படி செய்து பூவுலகமும் தேவ உலகமும் புகழ்ந்து கொண்டாடும்படியான திருக்கள

ரின் கண்ணே எழுந்தருளி இருக்கின்ற ஆறுமுகப் பெருமானைப் பூசித்தால், பூசிப்போர், எவராக இருந்தாலும் பரத கண்ட முதலிய ஒன்பது கண்டத்தினையுடைய இவ்வுலகத்தில் குபேரனைப்போல நல்ல தாமரை மலர் மேலே வீற்றிருக்கும் இலக்குதேவியின் அருளால் பல செல்வங்களுடன் விரும்பி வாழ்வார்கள்.

தனதன் = குபேரன். வேண்டும் பொருளைக் கொடுக்கும்படியான பாக்கியவான் என்பதச் சொல்லின் பொருளாகும்.

''விதியுளி'' என்ற விடத்து ''உளி'' என்பது மூன்றும் வேற்றுமைப் பொருளில்வந்த சொல்லுருபாகுமெனக் காண்க. இஃதோரிடைச் சொல்லாகும் ''இயல்புளிக்கோலோச்சும்'' (திருக்குறள்) என்ற விடத்து மிவ்வாறு வரல் காண்க. அருச்சனை செய்வதற்கு விதி கருவியாகலின் உளி மூன்றும் வேற்றுமையுருபாயிற் றென்க.

மகவிலா தவரு மகவினைப் பெறுவார் வறியவர் திருவொடும் வாழ்வர், மிகுபெரும் போகம் வேண்டினோ ரதனை மேவுவர் கல்வியை விரும்பி, மகிழ்வுற வேண்டு மவர்க்கது மருவும் வகுத்திவை யுரைப்பதென் முன்னம், பகர்விதி முருகற் கியற்றுவோர் வடிவேற் பகவன துருவினைப் பெறுவார். (37)

பிள்ளைப் பேறில்லாதவர்கள் பிள்ளைகளைப் பெறுவார்கள். வறுமையுடையவர்கள் செல்வமுடையவர்களாக வாழ்வார்கள். மிகுகின்ற பெரிய போகங்களை விரும்பியவர்கள் அவற்றை அடைவார்கள். கல்வியை அடைய விரும்பி மகிழ்ச்சியுடன் கேட்பவர்களுக்குக் கல்வி தானாக வந்து சேரும். எளியபயன்களாகிய இவைகளைப் பிரித்துச் சொல்வது எதற்கு? முன்னர்ச் சொல்லிய விதிப்படி முருகப்பெருமானுக்குரிய பூசை முதலிய வழிபாட்டைச் செய்பவர்கள் கூர்மையான வேற்படையுடைய பகவானாகிய முருகப்பெருமானது சாரூபப்பதவியும் பெறுவார்கள்.

''உருவினையும்'' என்பதில் உம்மை தொக்கது.

எயினர்தங் குலத்தி லேய்ந்தவன் றீயோ னெல்லை யில் கொலைத் தொழி லியற்றி, யுயிரெலாஞ் செகுத்து நாள்பல கழித்தோனொருவனித் தலத்தினி லொருநாட், பயின்மலர்த் தொடைய லறிவுறு தணிந்து பரமனுக் கன்னவன் பாவச், செயலாலெலா மகன்று நிருபனு யுதித்தா னித்தலப் பெருமையார் தெரிப்பார். (38)

கொடியவனும் அளவில்லாத கொலைத் தொழிலைச் செய்து எல்லா உயிர்ப்பிராணிகளையும் வருத்திப் பலநாள் வாழ்ந்தவனுமாகிய வேடர் குலத்திலே பிறந்திருந்த ஒருவன் இத் திருக்களரிலேவந்து சிவபெருமானுக்கு மலர் நெருங்கி அமைந்த மாலையை, அணியவேண்டும் என்று எண்ணமில்லாமல் அணிந்து அப்படி அணிந்தமையால் அவன் பாபச் செயல்களைவிட்டு இறந்து பின் அரசனாகத் தோன்றினன். ஆகையால் இச் சிவதலப்பெருமையை எவர்தாம் முற்றும் சொல்லவல்லவராவார்கள்.

'செகுத்தல்' என்பது ஈண்டு வருத்துதல் மேல் நின்றதென்க.

என்றிவை யனைத்து நந்திவா னவன்று னியம்பலு மகிலமற் றெவையு, மன்றுதந் தவனல் கியமுனித் தலைவ ளுர்வமீக் கொள மகிழ்ந் தனனீண், டொன்றிய காதை நவையற வுரைப்போருணர்த்துவோர் கேட்பவ ருலகி, லென்றும் வாழ்ந்தளவில் போகமுற்றிறவா முத்தியு மெய்துவ ரினிதால். (39)

என்று சொல்லிய இவை எல்லாவற்றையும் நந்தியம் பெருமானகிய மேலோன்சொல்லவும் இவ்வுலகமுழுவதையு மற்றையவைகளையும் படைத்த பிரமதேவன் ஈன்ற முனி சிரேட்டராகிய சனற்குமார முனிவர், ஆசைமேலிட மகிழ்ந்தனர். இத்தலத்திற்குரியனவாகப் பொருந்திய வரலாறுகளைக் குற்றமறச் சொல்பவர்களும் அறிவிப்பவர்களும் (விளக்குபவர்களும்) கேட்பவர்களும் இவ்வுலகிலே நல்லபடி என்றைக்கும் வாழ்ந்து அளவில்லாத போகங்களை

நுகர்ந்து இறுதியிலே அழியாத முத்தியை எளிதாக அடைவார்கள்.

நோயின்றி நீண்டநாள் வாழ்தலைக் குறிக்க ''என்றும் வாழ்ந்து'' என்றனர்.

பஞ்சாக்கரச் சருக்கம் முற்றிற்று.

வாழ்க நெறிமன்னர் வாழ்க ஒழுக்கமெல்லாம்
வாழ்க வரஙைந்தெழுத்து மன்னியே—வாழ்கவே
விஞ்சுபுகழ்க் களரும் வீரேசனற்றவரும்
எஞ்சலிலாதென்றுமிவண். சித. நா.

———

சிவமயம்

ஐந்தாவது

மாலாதாரகச் சருக்கம்

முருகவிழ் துளவத் தெரியன்மா யவனும் பிரமனு முறைமுறை பரவுந், தருவனத் தரனுக் கொலியலை வேடன் ருனுண ராதுமுன் சாத்த, வருண்மிகு பூசை யாகியாங் கவன்ருன் மன்னவ னுந்திறமடிகே, ளுரை யெனு மலரோன் றருமகன் கேட்ப நந்தியம் பகவனீ துரைப்பான். (1)

மணங்கமழ்கின்ற துளவ மலர் மாலையை யுடைய திருமாலும் பிரமனும் ஒருவர் பின்னொருவராக மாறிமாறித் துதிக்கப் பெறுகின்ற பாரிசாதவனப் பெருமானாகிய சிவபெருமானுக்கு மாலையை ஒருவேடன் பத்தி பூர்வகமாக வில்லாமல் சாத்த அது திருவருளை மிகப் பயக்கும்படியான பூசையாக ஆகியதால் அவன் அரசனாக ஆகிய தன்மையைச் சுவாமிகளே கூறியருளுவீராக என்று பிரமதேவன் மானசீகமாகப்பெற்ற புதல்வராகிய சனற்குமார முனிவர், கேட்ப, நந்தியம்பெருமான், கீழ் வருவதைச் சொல்லத் தொடங்கினார்:

ஒலியல் = மாலை. முருகு = மணம்; தேன். 'தேன்' எனப்பொருள் கொள்ளில் கட்டுவிட்டுத்தேனை யொழுக்கும்படியான துளவமலர் மாலை எனப் பொருள் கொள்க!

அவிழ்தல் = கட்டுவிடுதல். மணமாயின் அவிழ்தல் என்பது குறிப்பாகக் கமழ்தலை யுணர்த்து மென்க.

பகருமித் தலத்தின் முழுமணிச் சபையின் பான்மையைப் பரிவுறக் கேட்பி, னகலும்வல் வினையும் பிறவியும்

வாய்மை யாதலா லவற்றினை யுனக்குப், புகலுவன்கேட்டி
முன்னமோர் காலத் தவனியிற் புயன்மழை வறந்து மிகு
பயிர் சிறிது மின்றிமா நதியின் வெண்டிரைப் புனலுமஃ
கியதால். (2)

எடுத்துச் சொல்லப்படுகின்ற இப் பாரிசாதவனத் தலத்திலேயுள்ள முழு மாணிக்கக் கற்களைப் பதித்து செய்யப்பெற்ற பேரம்பலத்தின் தன்மையை (வரலாற்றை) அன்போடு கேட்டால் கொடிய (பிறவிக்கேதுவாகிய) வினைகளும் அவற்றால் உளவாகும் பிறவிகளும் நீங்கிவிடும். நீங்குதல் உண்மை யாதலால் அவ்வாறு பிறவி நீங்கிய வரலாறுகளை உனக்குச்சொல்லுவேன் நீ கேட்பாயாக முன்னொரு காலத்திலே பூமியிலே மேகங்களாற் பெய்யப்படு மழையின்மையால் வளர்ந்தோங்கிப் பயன்தரக்கூடிய நெற்பயிர் முதலிய பயிர்கள் கொஞ்மு மில்லாமற் போதலோடு நதிகளிலே வெண்மையான அலைகளையுடைய நீரும் சுருங்கியது.

புயல்=மேகம். அஃகுதல்=சுருங்குதல்

இப்பா முதலிய ஐந்துபாக்கள் திருக்குறள் வான் சிறப்பதிகாரத்திலுள்ள பாக்களை நினைப்பிக்கின்றன. வறக்க என்பது வறந்து எனவும், இன்றாக என்பது இன்றி எனவும் திரிந்தன.

வேறு

இலகு மாதரும் பால்குறைந் தனவுண விகந்து
பலவி லங்கொடு பறவையுங் குறைந்தன படிசூ
ழலையி னீர்மையுங் குறைந்தன வமரர்கட் காற்றுங்
குலவு பூசனை குறைந்தன குறைந்தன தருமம் (3)

தெய்வத் தன்மை யுடையனவாக விளங்கும் பசுக்கள் தரக்கூடிய பாலும் குறைந்துவிட்டன உணவு இல்லாமலொழிதலால் பலவகையான மிருகங்களும் பறவைகளும் குறைந்து விட்டன. பூமியைச்சுற்றிக் கிடக்கின்ற அலைகளோடு கூடிய நெடிய கடலும் மீன் முதலியன உண்டாகாமையாலும் மணி முதலியன தோன்றாமையாலும் தன்தன்மைகள் குறையப்பெற்றது தேவர்கட்கு மக்களாற் செய்யப்

படும் சிறப்பும் பூசையும் குறைந்துவிட்டன மற்றைய தரு மங்களுங் குறைந்துவிட்டன.

ஆற்ற ரும்பசி நோயினுன் மன்பதை யனைத்துங்
கூற்று வற்குண வாயின வுயிரெலாங் குலைந்த
போற்று போகமு மிருவகை யறங்களும் புவனத்
தூற்று வான்புன லில்லையே லெங்ஙன முளவாம். (4)

பொறுத்தற் கருமையாகிய பசி நோயினுலே மக்கட் கூட்டமெல்லாமும், கூற்றுவனுகிய எமனுக்குணவாகஆயின. (இறந்து விட்டன.) மற்றைய பிராணிகளெல்லாமும் வாடி மடிந்தன. போகங்களும் பேணிவளர்க்கின்ற இல்லற துறவறங்களிரண்டும் பூமியிலேபெய்கின்ற மழைநீர் இல்லா தொழிந்தால் எப்படி நிலைபெறுவன வாகும்.

(போற்று) என்பதை போகத்திற்கு அடையாகக்கூறலு மாகும்.

உன்னு வான்புன லொன்பது வருடமா வுதவா
தின்ன வாறெலாம் பல்லுயிர் முழுவது மிரங்க
வன்ன காலையின் மீன்றசை மாதின மருந்துந்
துன்னு கானவ ரெழுந்தனர் கொலைத்தொழில் சூழ்வோர்.

எல்லாவுயிர்களாலு மின்றியமையாததாகக் கருதப்படு கின்ற மேகமானது ஒன்பது ஆண்டுவரை நீரைப் பெய்யா மையால், மேலே கூறியபடி பயிர்களெல்லாம் வருந்த அப் பொழுது (அக்காலத்தில்) மீனிறைச்சிகளையும் விலங்கி னிறைச்சிகளையும் நாளும் தின்னுகின்றவர்களான நெருங் கிக் கூட்டமாக வாழ்கின்ற வேடர்கள், கொலைத் தொழிலி னுலே பொருளை யீட்டுவதற்கு ஆராய்கின்றவர்களாகி வாழு மூர்களை விட்டு வெளியேறினுர்கள்.

மா=விலங்கு. அஃதாகு பெயராக அவற்றினிறைச் சியை யுணர்த்திற்று.

வேறு

எழுந்து நான்மறை யாளர்த மில்லெலாஞ்
செழும்பொ ருட்கவர்ந் தும்புரி தீமையை

விழைந்தி யற்றியு மேதினி மாந்தர்க
ளழுங்க வேசில நாட்டிரிந் தாரரோ. (6)

வெளியேறி, நான்கு வேதங்களையு மோதி அவற்றின் வழி, நிலைபெறுகின்ற பார்ப்பனர்களுடைய வீடுகள் எல்லா வற்றிலுமுள்ள செழுமையான பொருள்களைக் கொள்ளை கொண்டும் இயல்பாகத் தாங்கள் செய்யக்கூடிய தீய செயல் களை திரும்பிச் செய்தும் பூமியிலே உள்ள மக்கள் வருந்தும் படி சில நாள் திரிந்தார்கள்.

அரோ, அசை

ஆய காலையி லித்தலத் தாலயம்
போயுலைந்து பொறியழற் போந்தகட்
சீய மும்புலி யுந்திரள் வேழமு
மேய கானக மாகி விளங்குமால் (7)

அந்தக் காலத்தில் இந்தத்தலமானது தன்னிடத் துள்ள கோயில் தன் நிலைமாறிக்கெட்டு நிற்கப்பெற்று நெருப்புப் பொறியைச் சிதறுகின்ற விழிகளையுடைய சிங்கங் களும், புலிகளும், வலிமையோடு கூடிய யானைகளும் பொருந்தி வாழ்கின்ற காடாக விளங்கியது.

செல்வி லங்கும் படிசினை யோங்கியே
பல்வி லங்கும் பறவையும் பம்பலா
லல்லி ருட்செறி யில்வனத் தாழிசூழ்
தொல்வி ரும்புவி மானவர் துன்னிடார். (8)

மேகங்களைத்தடுத்து நிறுத்தும்படியாகக் கிளைகள் ஓங்கி வளரப் பெறுதலாலும், பலவவகையான மிருகங்களும் பறை வைகளும் நிறைதலாலும் இரவைச் செய்கின்ற இருள் நிறை கின்ற இவ் வனத்திலே கடல் சூழ்ந்த பழமையான பெரிய பூமியிலேயுள்ள மனிதர்கள் ஒருவரும் அணுகமாட்டார்கள்.

பம்புதல் = நிறைதல்

இங்க ணிவ்வனத் தெய்தினன் முற்பகல்
வெங்கொ லைத்தொழில் வில்லெயி னர்க்குளோர்

செங்கண் வேட்டுவன் றீமை திருத்துவோன்
றங்கு யிர்க்குச் சமனெனத் தோன்றினன். (9)

முன்னர்ச் சொல்லிய கொடிய கொலைத் தொழிலையே தொழிலாகவுடைய வில் வேடர்களுக்குள்ளே தீமையைத் திருத்தமாக (விளக்கமாக)ச் செய்கின்றவனாகிய ஒரு செந்நிறமான கண்ணையுடைய வேடன் மேலே சொல்லியபடியுள்ள இவ்வனத்தை யடைந்தவனாகி, இவ்வனத்திலே தங்குகின்ற உயிர்களுக்கு (பிராணிகளுக்கு) எமனாகத் தோன்றினன்.

வேடன் = கொல்லுந் தொழிலுடையான், வேடு என்பது "பசுவேட்டெரியோம்" (சம்பந்தர்) என்பது முதலியவற்றாலப் பொருடருதலை யுணர்க.

உடுப்பு மெல்விர லாலுட லோம்புவோ
னெடுத்த வெஞ்சிலை யிற்றொடை யேற்றிமேல்
விடுக்கும் வாளியி னன்மிரு கங்களை
யடுக்கல் போலக் குவிக்கின்ற வாற்றலான். (10)

அவன் எத்தகைய யுடையானெனில் தன்னுடம்பையுயிரோடு கூடித்தங்கிச் செழிப்புறும்படி காப்பாற்ற எண்ணி உடும்புத் தோலைக் கவசமாகக் கோத்த மெல்லிய விரல்களாலே கையிலேந்திய கொடிய வில்லிலே நாணைப் பூட்டி அதன்மேலே வைத்தெய்கின்ற அம்புகளாலே மிருகங்களையெல்லாம் கொன்று அடுக்கிக் கிடக்கின்ற மலைகள்போலக் குவியும்படி செய்கின்ற வல்லமையை யுடையவனாவான்.

அடுக்கிக் கிடத்தலால் "அடுக்கல்" என அவ்வாருய மலை வழங்கப்படுமென்க.

மேவி யோர்பக லன்னவன் வெவ்விலங்
காவி கொன்று புலவுண வாசையான்
மாவி லம்பொடு மிந்த வரனுயர்
காவி னூடு கரந்துறைந் தானரோ. (11)

அத்தகைய அவன் ஒரு பகற்பொழுதில் சிவபெருமான் தங்குகின்ற உயர்ந்த இக்காட்டினுள்ளே நுழைந்து கொடிய

விலங்குகளின் உயிரைப்போக்கி அவைகளின் புலாலுணவை யுண்ண ஆசை கொண்டவனுகிப் பெரிய வில்லேயும் அம்பு களேயுமுடன் கொண்டு மறைவாகத் தங்கினுன்.

கரந்த வேடுவன் கண்ணுறுங் காட்சியிற்
புரிந்து தான்புனே வானப் புனத்திடை
நிரந்த நாண்மலர் கொய்து நிரையளி
பரந்த மாலே பலபல வீக்கியே. (12)

மறைவாகத் தங்கிய அவ்வேடன் தன்கண்ணுக்கு நல்ல காட்சிப் புலனுகத் தோன்றுகின்றபடியால், விரும்பி அணிந் துக்கொள்ளுவதற் கெண்ணி அக் காட்டின் கண்ணே நிறைந்து விளங்குகின்ற புதுமலர்களே யெடுத்துத் தேனேப் பருகுவதற்கு வண்டுகள் வரிசையாகவந்து பறந்துதிரிவ தற்கேதுவான பல மாலேகளாகக் கட்டி

நிரத்தல்=நிறைதல், இஃதிப் பொருளாதலே ''நிரந்த நீற்ருெளியால்'' (பெரிய புராணம்) என்பது முதலியவற்ரு லறியலாம் வீக்குதல்=கட்டுதல்.

கொய்தல்=கை நகத்தால் கசங்கா தெடுத்தல்.

மாலே யிற்கொடு வந்து மடிந்ததொல்
லாலே யத்தில்வைத் தானவன் கீழுற
ஞால மேவ மறைந்தது நன்குள
தேல வாங்க ணிலிங்க மிருந்ததால் (13)

மாலே நேரத்திலே கொண்டுவந்து பழுதுபட்டிருக் கின்ற பழைமையான கோயிலிலே வைத்தான் அங்கே கீழே பொருந்தும்படி மண்மூடுதலால் மறைவுற்றதாகப் பழுது படாமல் தகுதியாகச் சிவலிங்கம் இருந்தது.

மடிந்த பழுதுபட்ட. ஆலேயத்தில் இங்கு அகரத்திற்கு ஐகாரம் போலியாக வந்துள்ளது. நன்குளது. என்பது பழுதுபடாமல் இருத்தலேக் குறித்ததாகும். ஏல=தகுதி யாக. ஈண்டுத் தகுதியென்பது அருள் செய்வதற்குரிய தெய்வ சாநித்யத்தோடுள்ள தன்மையை யுணர்த்திற்று.

'அங்கு' என்னுமசை 'ஆங்கண், எனத்திரிந்து நின்றது. அல்லது 'அங்கண்' என்பது 'ஆங்கண்' என நீண்டதெனினுமாம்,

ஆங்கு றுஞ்சிவ லிங்கத் தணிமுடிக்
கீங்கி வன்றரு மாலே யியைந்தது
பாங்கில் வேட னறிந்திலன் பண்புறத்
தீங்கி லாநல் வினைப்பயன் செய்ததால். (14)

அங்குள்ளே விளங்குகின்ற சிவலிங்கத்தின் அழகிய திருமுடிக்குரிய கண்ணிமாலையாக அவ்வேடன்வைத்த மாலைகள் அமைந்தன. உள்ளத்திலே நல்ல குணங்கள் முன்பிறவியிலே அவனுக்குப் பொருந்தியிருத்த தன்மையினுலப் பொழுது அவன் தீமை சிறிதுங் கலவாமல்செய்த நல்வினைகளின் பயனுனவை, யவ்வாறு அமையும்படி செய்தன. அப்பொழுது நல்லொழுக்க மில்லாத அவ்வேடன், சிவலிங்கத்தின் தலை மாலைகளாக அம் மாலைகள் ஆகிய தன்மையை அறிந்தானில்லை.

'அழுக்காறவா வெகுளியின்ஞச் சொன்ஞன்கு மிழுக்காவியன்றதறம்'' என்பவாகலின் ''தீங்கிலா நல்வினை'' என்றனர். செய்வது நல்வினை யெனினும் தீங்கொடு கலப்பின் அது நிறைவேறிப் பயன்றரா தென்பதாம்.

போது போக்கத் தொடுத்திடும் பூமலர்க்
கோதை யைப்பின் கொணர்ந்து கிராதனு
மீது றப்புனைந் தோர்புற மேவியே
காத லோடு கரந்திருந் தானரோ. (15)

பொழுது போக்குவதற்காகத் தொடுக்கின்ற பொலிவு தங்கிய பூமாலையைப் பின்னர் எடுத்துக்கொண்டுவந்து அவ்வேடனும் தன்மேலே படியும்படி அணிந்துகொண்டு அக்காட்டில் வேருெரு பக்கத்திலே பொருந்தி விலங்குகளைக் கொல்லு மாசையுடன் மறைந்திருந்தான்.

வெம்பு னத்தினில் வேறு கரந்துவி
லம்பி ஞன்மரை பன்றி யழுங்குமா

னிம்ப ரோடு முயல்பல கொன்றிவை
நம்பு றக்கொணர்ந் தேகுடி னண்ணினன். (16)

கொடிய அக் காட்டிலே வேறோரிடத்தில் மறைந்து கொண்டிருந்து வில்லோடுகூடிய அம்பினலே மரை மான்களையும் பன்றிகளையும் என்றும் அச்சத்தோடு தங்குகின்ற மான்களையும் இங்கு மங்குமாக விரைந்தோடுகின்ற முயல்களையும் பலவாகக் கொன்று அவைகளைத் தின்னவேண்டுமென்கிற ஆசை பொருந்தக் கொண்டுவந்து அங்கே குடியாகத் தங்கினன்.

நம்பு = ஆசை

வாச மாலை யரன்முடி வாயத்தது
மீச னலைய மென்பது மோர்கிலா
னச மின்றி யுயிர்தொறு நண்ணிய
வாசி லெந்தை பெயரு மறிகிலான். (17)

(அவன்) மணமுள்ள அம்மாலைகள் சிவபெருமானுடைய திருமுடி மாலைகளாக அமைந்ததையும், அவ்வாலயம் சிவாலயமென்பதையும் அறியான். அழிவின்றி எல்லாவுயிர்களிடத்தும் பொருந்தி விளங்குகின்ற குற்றம் சிறிதுமில்லாத எந்தந்தையாராகிய சிவபெருமானுடைய திருப்பெயரிஃதாமென்பதையும் அறியான்.

புரிவ தென்றும் பிறர்மனைப் போகமே
தெரிவ தென்று முடற்குறுஞ் செய்கையே
பரிவ தென்றும் பழிதரும் பாவமே
திரிவ தென்றுமா சேர்வுறுங் கானமே. (18)

அவனல் எப்பொழுதும் விரும்பி நுகரப்படுவது பிறர்மனைவியரோடுகூடி நுகரும் போகமே யாகும். எப்பொழுதும் அவனல் தெரிந்து செய்யப்படும் செயல்களாவன உடலைக் காப்பாற்றுதற்குரிய செயல்களேயாகும். அவனல் அன்பு செய்யப்படுவது பழியையுண்டாக்கும் பாபச்செயலேயாகும். அவனல் திரியப்படுவது விலங்குகள் தங்கும் காடேயாகும்.

கொணர்வ தென்று மறையவர் கொள்பொரு
ளுணர்வ தென்றும் புலாலி லுணவதே
புணர்வ தென்றுங் கொடுவினைப் புன்மையே
யணிவ தென்றுங் கொலைத்தொழி லாண்மையே.. (19)

அவனால் கொள்ளையாகக் கொண்டுவரப்படுவது வேதியர்களின் நன்மையைக் கொண்ட பொருளாகும். அவனால் சிறந்த வுணவாக அறியப்படுவது புலாலுணவேயாகும். அவனால் பொருந்தப்படுங் குணமாவது தீயவினைகளைச் செய்வதற்கேற்ற இழிதகைமையே யாகும். அவனால் சிறந்த அணிகலமாக அணியப்படுவது கொலை செய்தற்கேற்ற ஆண்மையே யாகும்.

மறையவர் கொள்பொருள் என்பதற்கு, வேதியர்கள் நல் வழியிலே யீட்டிய பொருள் எனினுமாகும்.

இன்ன வாறுகி ராத னியற்றியே
முன்னை நல்வினை யின்பயன் முற்றலாற்
பன்னு நூறு பருவமும் பார்மிசைத்
துன்னி யிவ்வுட னீத்தனன் றூய்மையால். (20)

இப்படி அவ்வேடன் செய்துகொண்டு முன்பிறவிகளிலே செய்த நல்வினைகளின் பயன்கள் முதிர்ந்தமையால் மனிதர்கட்கு இவ்வளவு ஆயுளுண்டு என்று சொல்லக்கூடிய நூறு ஆண்டுவரையும் பூமியின் கண்ணே தங்கி நோய் முதலியன இன்றி வேட உடலைவிட்டு நீங்கினான். (இறந்தான்)

'பருவம்' என்பது யாண்டு.

மலங்கி வீந்த வனசரன் றன்னைமெல்
லலங்கல் வேய்ந்த வறப்பய னலரன்
கலிங்க தேசத்திற் காவல னய்ப்பிறந்
திலங்க நல்லரு ளீந்தன னன்பினால் (21)

வேறு

பொறிகளெல்லா நிலையழியப் பெற்று இறந்த அவ் வேடனை அவன் மெல்லிய மாலையைத் தன் முடிக்கணிந்த

புண்ணியப் பயனுலே, சிவ பெருமான் அன்பினேடு கலிங் கத்தேசத்து அரசனுகப் பிறந்து விளங்கும்படி நல்ல திரு வருளைக் கொடுத்தார்.

புண்ணியப்பயன் = புண்ணியமாகிய பயனுல் என வுரைக்க.

கற்பகப்பூந் தருவனத்தின் காரணமோ நான்மறை யுங் கருதொணுத, சிற்பரமாஞ் சிவலிங்கத் தின்பரிசோ வித்தலத்திற் சிறந்த மேலா, மற்புதமோ வித்திறமென் றறிந்திலேன் மாலயனு மமரர்கோனும், பற்பலரா மிமை யவரு மறிகுவரோ சிவனருளின் பான்மை தானே. (22)

வேடன், அரசனுகப் பிறந்தது பொலிவுதங்கிய பாரி சாதவனத்தின் சேர்க்கையாகிய காரணத்தா லாகியதோ நான்கு வேதங்களும் எண்ணி யுரைத்தற்கியலாத சிதாகாச சிவபரம் பொருளாகிய சிவலிங்கத்தின் மகிமையாகிய இயல்பினு லாகியதோ இத்தலத்திலே சிறந்து விளங்கு கின்ற மேன்மை பொருந்திய இறும்பூதெய்துதற்குரிய மகி மையினுலே யாகியதோ எதனுலாகியதெனத் தெரிந்தேன் இல்லை. சிவபெருமான் அருள் செய்தற்குரிய தன்மையைத் திருமால் பிரமன் தேவேந்திரன் பலவகைப்பட்ட தேவர்களு மாகிய இவர்களெல்லாரும் அறிவார்களோ அறியார்கள்.

வேடன், அரசனனது கற்பகமரங்களின் மாட்சிமையி னுலோ சிவலிங்கத்தின் மாட்சிமையினுலோ தலத்தின் மாட்சிமையினுலோ என்பது வினு.

முன்னமறி யாதமலன் சிவலிங்கத் திருமுடியின் முருகு நாறு, மென்மலர் மாலிகைவேய்ந்த வறப்பயனு லரன்கருணை விளைப்ப வேட, னின்னலுறுங் கொடும்பாவ வினையகன்று கலிங்கநாட் டிறைமைபூண்ட, மன்னவன் றன் குலத்துதித்து மாலாதா ரகனெனும்பேர் புனைந் தான் மாதோ. (23)

முன்னர் அறியாதபடி நிர்மலராகிய சிவலிங்க பெருமா னுடைய திரு முடியிலே மணங்கமழ்கின்ற மென்மையாகிய

மலராாலகிய மாலையை (கண்ணிமாலையை) அணிந்த புண்ணியத்தின்பயனுலே சிவபெருமான் அருளைச்செய்ய, வேடனுனவன் செய்த கொடுமையான பாவ வினைகளெல்லா நீங்கப் பெற்றுக் கலிங்க தேசத்திற்குத் தலைவராகிய அரசர்குலத்திலே தோன்றி மாலாதாரகன் என்கின்ற பெயரைச் சூட்டப் பெற்ருன்;

மாலா = மாலை, தாரகம் = பற்றுக்கோடு. மாலை பற்றுக்கோடாக மன்னவனுகத் தோன்றியவன் என்பதப் பெயரின் பொருள்போலும். '*கண்ணி*' என்பது தலைமாலைக்குப் பெயர். அப்பெயராதல் ''**கண்ணிகார் நறுங்கொன்றை** *காமர் வண்ணமார் பிற்ருருங் கொன்றை*'' (புற நானூறு) என வருவது முதலிய வற்ருற் பெறப்படும்.

அளிமுரலு மலர்மாலை முன்னமரன் றிருமுடியிலணிந்த வாற்ரு, லிளிவுறுமுற் பிறப்பதனில் வேட்டுவனுய்ப் பிறந்துகொலை யிழைத்தவாறுங், குளிர்மலர்மாலிகையுணரா தரன்முடியி லணிந்ததனுற் கொடியபாவம், விளிவுறமன் னவனுய்வந் துதித்ததுவு முணர்ந்தனன்மேல் விளைவு மோர்வான். (24)

வண்டுகள் தேனைப் பருகுவதற்குச் சுழன்று ரீங்காரம் செய்யும்படியான மலராலாகிய மாலையை முன்னர்ச் சிவபெருமானுடைய திருமுடிக்கண்ணி மாலையாகப் புனைந்த தன்மையாலே, முன்பிறவியிலே இழிந்த வேடனுகப்பிறந்து கொலைத் தொழில்களைச் செய்த தன்மைகளையும குளிர்ச்சிபொருந்திய மலர் மாலைகளைச் சிவன்முடியில் சூட்டுகின்ருமென்பதுந் தெரியாமல் சிவபெருமானுடைய திருமுடியிலே சூடிய செயலாலே, கொடுமையாகிய பாவங்களெல்லாம நீங்கப் பெற்று அரசனுக வந்துபிறந்த தன்மையையும் பின்னர்த் தனக்குண்டாகும் பயன்களையும் தெரிகின்றவனுனன்.

தெரியாது சூடினுலும் எல்லாப் பாவங்களையும் போக்குதலவனியல்பு (சிவபெருமானதியல்பு) என்பார் 'அரன்' என்னும் பெயராற் சிவனைக் குறித்தனர். முரலுதல் = ஒலித்தல்.

நீதிமனு முதலான மிருதிகளுஞ் சுருதிகளு நெறியி னோர்ந்தா, னாதிமனு முறைமையென வரசுரிமைத் திறம் புரிந்தா னருளிற் றூயோன், மாதொருபா கனையிரவு நன் பகலு மறவாமன் மனத்துளோர்வான், யாதுமர னுள மகிழ நல்லறமல் லாதுபிற வியற்றிடானால். (25)

(அவைகளையே யன்றி) அரச நீதியை நன்றாக வுணர்த்துகின்ற மனு மிருதி முதலிய மிருதிகளையும் வேதங்களையு முறையாகப் படித்துணர்ந்தான். (அவ்வாறுணர்ந்து) தூய்மையான அருளையுடையவனாகி முதல் மனுவின் நீதிபோல நீதி நடக்க உரிமையாகப் பெற்ற அரசாளுதலாகிய பெரும் பாரச் செயலைச் செய்துகொண்டிருந்தான். அப்படியரசாளுஞ் செயலிலீடுபட்டாலும் உமையொரு பாகராகிய சிவபெருமானை இரவு[illegible] நல்ல பகலும் மறவாதபடி எண்ணியவனாய்ச் சிவபெருமானுடைய திருவுளம் மகிழும்படியாக நல்ல புண்ணியச் செயலையல்லாமல் சிறிதும் பிற செயல்களைச் செய்யாதவனாக ஆயினான்.

கறைமிடற்றெம் பெருமானுக் காலய மு மணிக்கொடி நீள் கனகத் தேரு, நறைமகிழ்நந் தனவனமு நளினமலர் வாவிகளு நாளுமாக்கிக், குறைவில்சிவ னடியார்கள் வேண்டுவன பலவுதவிக் கொடிது நீக்கி, யுறுகலிங்க நாடளிக்கு மாலாதா ரகன்சின்னா ளொழுகும் வேலை. (26)

விடக் கறை தங்கிய திருக் கழுத்தையுடைய, எங்கள் தலைவராகிய சிவபெருமானுக்குரிய கோயில்களும் மணிகளழுத்திச் செய்யப் பெற்றதும் கொடிகள் நாட்டப்பெற்றது மாகிய நீண்ட பொன்வடிவான தேர்களையும், மணங்கமழுகின்ற பூக்கள் மலரும்படியான நந்தன வனங்களையும் தாமரை மலர்களையுடைய பொய்கைகளையும், என்று முண்டாக்கி அடியவர்களாவதற்கு வேண்டியதன்மைகளிற் குறைவற்றவரான சிவனடியவர்களுக்கு அவர் வேண்டிய பலவற்றையும் கொடுத்துத் தீமைகளில்லாதபடி (சாந்தி முதலியவற்றால்) நீக்கி வளமிகுந்த கலிங்கதேசத்தை அந்த மாலாதாரகன் காப்பாற்றினான். அப்படிக் காப்பாற்றிக் கொண்டு வருங்காலத்தில் சிலகாலம் கழிந்த பின்னர்

நறை = மணம். நளினம் = தாமரை. கொடிது என்பது சாதி யொருமையாகி அதிவிருஷ்டி அனுவிருஷ்டி முதலிய தீமைகளை யுணத்திற்றென்க.

நலந்தருமக் கினிகருப்பன் விசாலாக்க னற்றரும கீர்த்தி நாடு, மலங்கிருதி யெனநால்வர் மாலாதா ரகன் றவத்தா லரன்பா லன்புங், குலந்திறம்பா வொழுக்கமு நல் லறிவுமறத் திறந்தவருக் குணமுமெய்தி யிலங்கவு தித் தனர்முறையாற் றந்தையினு மளியரென வியம்ப லாமால். (27)

தனக்கு முலகிற்கு நன்மையைத் தரும்படியான அக்கினி கருப்பன் என்பவனும் விசாலாகன் என்பவனும் தரும கீர்த்தி என்பவனும் நல்லனவற்றை யாராய்ந்துசெய் யத்தகுந்தவனுகிய அலங்கிருதி யென்பவனும் ஆகிய நால்வரும், அம் மாலாதாரகனுடைய தவப்பயனுக, சிவபெருமானிடத்தில் வைக்கும் அன்பையும் பிறந்த குடிக்கேற்ற ஒழுக்கத்தையும் நல்ல அறிவையும் அறப்பகுப்புக்களை (பலவகையான தருமங்களை) விட்டு நீங்காத குணங்களையு மடைந்து விளங்கும்படியான தன்மைகளுடன் குழந்தைகளாக (மக்களாக) நீதியிலே தந்தையைப் பார்க்கிலு மிக அன்புடையவர்களென்று சொல்லும்படி பிறந்தார்கள்.

தனையரொரு நால்வரின்முன் னவன்றனக்கு மணி மகுடந் தரித்து மேனுள், வினைகயற்றி யருள்பாரி சாத வனத் தரன்கோயின் முடித்தனேக்கிப், புனைதன்முயன் றதுகரந்து கங்கைநதிப் புனலாடப் போவான் போன்று, நனிபொருளெண் கோடிகொணர்ந் தவ்வரசன் றரு வனத்தி னண்ணினுனல், (28)

அப்புதல்வர்கள் நால்வருள்ளே மூத்தவனுகிய அக்கினி கருப்பன் என்பவனுக்கு மணியழுத்திச் செய்யப்பெற்ற கிரீடத்தைச் சூட்டி அரசனுக்கிவிட்டு முன்பிறவியிலே தான் செய்த தீவினைகளை எல்லாம் போக்கி அரசனுகப் பிறந்தரசாளும்படி செய்தருளிய பாரிசாத வனத்தில் எழுந்தருளி இருக்கின்ற சிவபெருமானுடைய திருக் கோயிலைக் கட்டி முடிப்பதற் கெண்ணி அவ்வாறு அழகுபடக் கட்டிமுடிப்ப

தற்கு முயலுகின்ற செயலைப் பிறரறியாமல் மறைத்துக் கங்காநதியில் முழுகுவதற்குச் செல்கின்றவனைப் போல வெளிக்காட்டி எட்டுக் கோடியளவுள்ள மிக்க பொருளை யெடுத்துக்கொண்டு அம் மாலாதாரக வரசன் அவ்வனத் தில் வந்து சேர்ந்தான்.

கரந்து=மறைந்து. முயல்கின்ற செயல், விரைவு நோக்கி முயன்றது என இறந்த காலத்தாற் கூறப்பட்டது.

எய்தியடைந் தோர்க்கருளுந் திருக்களரு ளடவி யெலா மிறுத்துநூறித், துய்யதம னியத்தகட்டாற் பொதிந்தமுழு மணிச்சபையுஞ் சுடர்குலாவுந், தெய்வ விமா னமுமதிலுங் கோபுரமு மண்டபமுஞ் சிறப்பமேனு, ளுய்யமய னியற்றியதி னுன்மடங்காம் படியமைத்தா னுரவுத்தோளான். (29)

நெருங்கிச் சேர்ந்தவர்க் கருள்புரிகின்ற திருக்களரிலே நெருங்கித் தோன்றி விரிந்த மரஞ்செடி கொடிகள் எல்லா வற்றையும் வெட்டி யழித்து மாசற்ற பொன் தகடுகளைக் கொண்டு மூடி, மணிகள் பதித்துச் செய்யப் பெற்ற பேரம் பலமும் ஒளி விளங்கும்படியான தெய்வத் தன்மை பொருந்திய விமானங்களும் மதில்களும் கோபுரங்களும் மண்டபங்களும் சிறந்து விளங்குமபடி முன்னுளிலே தெய் வத் தச்சனுகிய மயன் செய்ததைப் பார்க்கிலும் நான்கு மடங்கதிகமாக விளங்க அந்த வன்மையான தோள்களை யுடைய மாலாதாரக அரசன், அமைத்தான்.

உரவு=வன்மை.

பொருள்களைப் பணிக்காக அள்ளிக் கொடுத்தலால் கைகள் வன்மை பெற்றன என்பதை, "வலிய வாகு நின்று டோய் தடக்கை" (புறநானூறு) என்பது போலக் குறிப் பிக்க "உரவுத் தோளான்" என்றனர்.

வகுத்தமுழு மணிக்கோயில் புனிதமுறும் வினை புரிந்து மறைகள் யாவும், பகுத்துணரு மறிவாளர் தமை யழைத்து விதிமுறையாற் பதிட்டை பண்ணி, மிகப்பர மன் றனக்கியைந்த பூசனையன் பாலியற்றி விழைந்து

நாளு, மகத்திருணீத் துணர்வுதரு மமலன்மகிழ் பணி விடைக ளாற்றி ஞனல். (30)

முழு மணிகளாலும் பொன்னுலும் அமைத்த கோயில் தூய்மையாகும்படியான செயல்களை (புண்ணியாசன முதலிய கிரியைக்களை) முதலிற் செய்து வேதங்களெல்லா வற்றையும் பிரித்துணருகின்ற அறிவுடைய அந்தணர்களை வரவழைத்து விதிப்படி பிரதிஷ்டை செய்து, (நிலை நாட்டச் செய்து) மேலான வற்றிற்கெல்லா மேலானவனுகிய சிவ பெருமானுக்குரிய பூசையை மிகுதியாக அன்போடு செய்து குருவாகி உள்ளிருளைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை யளிக்க வல்ல நிர்மலனுகிய சிவபெருமான் மகிழும்படியான பணி விடைகளைத் தினந்தோறும் விரும்பிச் செய்தான்.

"எண்ணரு மன்புளத்திலையே யெனிற் பண்ணிய பூசனை பயன்றராது" (பிரபுலிங்க லீலை) எனச் சான்ருேர் கருதுதலால் "*பூசனை யன்பினுல்*" எனவும் "*விழைந்து நாளும்...... பணிவிடைகளாற்றினுனல்*" எனவுங் கூறினர்.

அகத்திருள் = ஆணவமலம்; ஆவரணம். மலநீக்கு வோன் மலமற்றவனுக வேண்டுமென்பார் '*அமலன் மகிழ் பணிவிடை* என்றனர்.

முன்னவனுக் கரசனியற் றிடும்பூசை யரிபிரமன் முத லோரேனும், பன்னலரி தெனிற்பகரும் பரிசுளதோ வின் னனவாம் பணிகளாற்றி, மன்னுமறை யவர்களொடுந் தருவனத்தில் வதிந்தரசன் வாணுள் போக்கிப், பின்னர் மழ விடைப்பாக னனுக்கிரகத் தான் முத்தி பெற்ரு னன்றே. (31)

எல்லாவற்றிற்கு முதல்வனுகிய சிவபெருமானுக்கு அம்மாலாதாரக அரசன் செய்கின்ற பூசையானது திருமால் பிரமன் முதலியவர்களுக்குஞ் சொல்லுதற்கரிய சிறப்புடைய தாகுமோ? ஆகாது. இத்தகைய வாகிய பல பணிகளைச் செய்து கொண்டு நிலையான வேத மோதுகின்றவேதியர் களுடன் அப் பாரிசாத வனத்தில் அவ்வரசன் தங்கி வாழ் நாட்களைக் கழித்துப் பின்னர் இளமையான இடபத்தி

லேறிச் செலுத்துபவனுகிய சிவபெருமானுடைய திருவரு ளாலே முத்தியை யடைந்தான்.

உணராம லரன்முடியிற் றனக்கணியத் தான்றெ டுத்த வொலியல்சூட்டித், தணவாத கொலைபுரிந்த வேட் டுவன்முத் தியையடைந்தான் றகவி னேடு, மணநாறு மலரிலைதூய்த் தொழுதுசிவ பெருமானை மகிழ்ந்துநாளும் பணிவார்கள் பெரும்பயனுக் களவுளதோ வனந்தனுக் கும் பகரொ ணுதால். (32)

தன்னை விட்டு நீங்காத கொலைத் தொழிலைச் செய்த வேடன் ஒருவன், சிவபெருமான் முடியிலே யணிகின்றேம் அணிந்தால் அது நல்ல செயலாகும் என்பன முதலியன வெல்லாந் தெரியாமல் சிவபெருமானுடைய திருமுடியிலே அம் முடி பெறும்படி தான் கட்டிய மாலைகளைச் சூட்டி (அவ வாறு சூட்டியதால் அரசனுகிப் போகந் தூய்த்துப் பின்னர்ச் சிவ பணி செய்து) மோக்ஷத்தை யடைந்தான். ஆதலால் சிவப் பணி மேலான பயனைத் தருமென்றெண்ணித் தூய்மையுடன் அன்புகொண்டு செய்தலாகிய தகுதியுட்ன் அச் சிவபெருமானை மணங்கமழுகின்ற மலர்களையும் இலை களையுந் தூவி (அர்ச்சித்து)க் கும்பிட்டு மகிழ்ச்சியுடன் தினந் தோறும் வழிபடுகின்றவர்கள் பெறுகின்ற பயன் களுக்கு ஓரளவு சொல்ல முடியுமா ஆயிர நாவுடைய ஆதி சேடனுக்கும் சொல்ல முடியாததாகும்.

வேடர்களுக்குக் கொலைத் தொழிலியல்பாக அமைந் தென்பார் "தணவாத கொலை" என்றனர் தணவாத= நீங்காத.

துயர்புரியுங் கொலைவேட னுணராம லொருபகற் றூன் றெடுத்த கோதை, யயனிறைஞ்சு சிவன்முடியி லுறவவன்பே றிதுவானு லன்புநீத்தும், பயன்விழைந்துங் குலமுறையி னுயர்ச்சியைவேண் டியும்பலரும் பணியு மேன்மைச், செயனினைந்துஞ் சிவபூசை யாற்றுவோர் பெறும்பயன்யான் றெரிக்கற் பாற்றே. (33)

பிறர்க்குத் துன்பஞ் செய்யும் படியானவனும் கொல்லு தற் றொழிலையியல்பாக வுடையவனுமாகிய வேடனொருவன் தெரியாமல் ஒரு பகலிலேதான் கட்டிய மாலையானது, பிரமன் முதலியவர்கள் வணங்கும்படியான சிவபெருமானு டைய திருமுடியிலே பொருந்துதலால் அவ் வேடன் பெற்ற வேறு முன் கூறிய முத்தியானல், பேரன்பில்லாமலும் பயனைக் கருதியும் குல வரிசைக் கெல்லாம் உயர்ச்சி வரு தலைக் குறித்தும் எல்லாரும் தன்னை வணங்கும்படியான மேன்மை யடைதலைக் குறித்தும் தெரிந்து சிவ பூசையைச் செய்வோர்கள் பெறுகின்ற பயன் இத்தன்மையன வென யான் சொல்லுந்தன்மையுடைய னவாகுமோ, ஆகா.

துயர் புரியும் என்பதை "கொலைக்கு" அடையாக்கினு மாகும்.

ஊறுசெயும் வேட்டுவனுக் கிப்பயனீங் தனனன்பா லொருமையோடும், வேறுசிவ னறம்புரியிற் சிவன்றரும் பேற் றினையெம்மால் விளம்ப லாமோ, தேறுமுனி வரமற் றோர் யாவருமிக் காதைதனைத் தெரியக் கேட்கிற் பேறு தருந் திருக்கயிலை யெய்துவர்பின் முத்தியையும் பெறுவர் மாதோ. (34)

பிராணிகளுக்குத் துன்பஞ் செய்யும்படியான வேடன் ஒருவனுக்கு இந்தப் பயனைக் கொடுத்தான். அன்பினலே மனம் வேறு வழியிற் செல்லாமலிருந்து சிறப்பாக மற் றையவர்கள் சிவ புண்ணியச் செயல்களைச் செய்தால் சிவ பெருமான் அவர்களுக்குக் கொடுக்கும் பேறுகள் இத்தகை யன வாகு மென்று எம்மாலே சொல்லல் முடியுமா முடி யாது தெளிந்த முனி சிரேட்டனே மற்றையவர்கள் யாவரும் இவ் வரலாற்றை விளங்கும்படி கேட்பார்களே யானல் அவர்கள் எல்லாப் பேறுகளையும் தரும்படியான திருக் கைலையை யடைவார்கள். அதன் பின்னர் இரண்டறக் கலத்தலாகிய முத்தியையும் அடைவார்கள்.

மாதோ, அசை.

வேறு

நந்தி யீச னயந்திவை யாவையுஞ்
சிந்தை கூர மகிழ்வொடு செப்பலும்
புந்தி மீதுறக் கேட்டுப் புனைமலர்
வந்த நான்முகன் மைந்த னியம்புவான். (35)

நந்தியம் பெருமான் விரும்பி மேற் சொல்லிய எல்லாவற்றையும் மனதில் மகிழ்ச்சி யதிகரிக்கும்படி சொல்லவும் அவைகளை புத்தியிலே மிகப்படியும்படி கேட்டு அழகான தாமரை மலரிலே தோன்றிய பிரமதேவன் புதல்வரான சனற்குமர முனிவர் கீழ் வருவதைச் சொல்லத் தொடங்கினவராகி.

இயம்புவான் என்னும் வினைமுற்று எச்சப் பொருளினின்றது.

காய்ந்து முப்புரஞ் செற்றவன் காதலா
லேய்ந்த வித்தலத் தின்னு மடைந்துமேல்
வாய்ந்த பேறு மருவின ராயிடி
னுய்ந்து ரைத்தி யெனவறைந் தானரோ. (36)

திரிபுரங்களைக் கோபித்தழித்த சிவபெருமான் விருப்புடன் அடைந்துறைகின்ற இந்தத் தலத்திலே வந்து மேலாகப் பொருந்திய பேறு பெற்றவர்கள் இன்னும் இருந்தால் அவர்கள் வரலாற்றையும் ஆராய்ந்து சொல்லி யருள் வீராக எனக் கூறினர்.

ஈது கேட்டரு ணந்தி யியம்புவா
னாதி யாய தருவனத் தாங்கடைந்
தேத நீக்கி யிருப்பவர்க் கெல்லையப்
போத னேனும் புகன்றிட வல்லனே. (37)

சனற்குமர முனிவர் சொல்லிய சொல்லாகிய இதைக் கேட்ட அருணிறைந்த நந்தியம் பெருமானனவர் சொல்லத்தொடங்கினர். முதன்மையான பாரிசாத வனத்தலமாகிய அவ்விடத்தில் சேர்ந்து துன்பநீங்கி இன்புருவாக

இருப்பவர்களுக்கோர் எல்லையைச் சொல்ல அந்தத் தாமரை மலரிலே தோன்றிய பிரமனாக விருந்தாலும் வல்லவனாக முடியுமோ முடியாது.

நின்னை மானச புதல்வனாகப்பெற்ற, அல்லது நான்கு வேதங்களை யுணர்ந்த பிரமனெனினும் என்பார் "அப் போதன்" என்றார்.

ஆயி னுஞ்சிறி தோதுவ னூர்வமாய்த்
தூய மாதவ கேளெனச் சொல்லலுந்
தாயி லன்புடை யோயவை சாற்றென
மேய மாமுனி கூற விளம்புவான். (38)

தூய்மையான பெரிய தவத்தையுடைய சனற்குமரனே அப்படியானாலும் சில வரலாறுகளைச் சொல்லுவேன் நீ விருப்பத்தோடு கேட்பாயாக என்று சொல்லவும், தாயைப் போல அன்புடைய பெருமானே அவ்வரலாறுகளைச் சொல்லியருள் வீராக என்று வரலாறுகளைக் கேட்பதற்கு விருப்புடன் வந்து பொருந்திய சனற்குமார முனிவர் சொல்லவும் நந்தியம் பெருமான் சொல்லுவாராயினர்.

வேறு

பொன்னிலங் காவல் பூண்ட புரந்தரன் முதலா மற்றை
மின்மணி மவுலி வானோ ரனைவரும் வியாத னாதி
நன்முனி வரரு மேனா ணற்றரு வனத்தி னண்ணி
நின்மலன் றிருத்தாள் போற்றி நித்தலும் பணிந்து
பின்னர் (39)

பொன்னுலகமாகிய தேவலோகத்தைக் காவல் செய்கின்ற இந்திரன் முதலிய எல்லாருமான ஒளி பொருந்திய மணிகள் பதிக்கப் பெற்ற முடிகளைச் சூடியுள்ள தேவர்களனைவரும் வியாசர் முதலிய நல்ல முனிசிரேட்டர்களும் முன்னாளிலே பாரிசாத வனத்தை சேர்ந்து நிர்மலராகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்து தினந்தோறும் வணங்குதலைச் செய்து பின்னர்.

வேறு

மண்டி வான்றட வும்பணைக் கற்பக வனநான்
கெண்டி சைக்கட்கு ரோசமைந் துட்பட விலகும்
புண்டரீகமா புரமயி ராபத புரமட்
டண்டர் மாதவர் யாவரு மேவின ரதன்பால் (40)

நெருங்கிப் போய் மேக மண்டலத்தைத் தடவுகின்ற கிளைகளையுடைய பாரிசாத வனத்தின் நான்காக எண்ணு கின்ற திசையிலும் ஐந்து குரோசத்துக்குட்பட விளங்கு கின்ற புண்டரீகபுரம் அயிராவதபுர மளவாக அங்கே தேவர் களும் பெருந்தவசிகளும் ஆகிய எல்லாரும் தங்கினர்கள்.

மட்டு = அளவு.

அயிராபதபுரம் = கோட்டூர். குரோசம் என்பது இரண்டு மயில் அளவாகும்.

அங்கண் மேவியே யரன்றிரு வாலய மனந்த
மங்கு லெய்திய மயன்புனைந் தானென வகுத்துச்
செங்கண் மாலயன் றேடருஞ் சிவன்றிரு விலிங்கந்
தங்க ணமத்தா லியற்றினர் தனித்தனி தவத்தோர். (41)

அவ்விடத்தில் தங்கிக்கொண்டு சிவாலயங்கள் பல வற்றை மேக மண்டலத்தை யளாவும்படி தேவதச்சன் செய்தது போல அமைத்து செந்நிற விழியையுடைய திரு மாலும் பிரமனும் தேடிக் காணமுடியாத சிவபெருமானது அருவுருவாகிய இலிங்கங்கள் பலவற்றைத் தங்கள் தங்கள் பெயர்களமையும்படி தனித்தனியாக அவ்வாலயங்களிலே (நிலைபெறச் செய்தார்கள்.

எய்திய = எய்த.

அவ்வி லிங்கங்க ளனைத்தையு மாலயந் தோறுஞ்
சைவ நூன்முறை பதிட்டைசெய் தவரவர் தகவாற்
செவ்வி நாண்மலர் தூய்த்தொழு தாங்கவர் தீய
வெவ்வி னைப்பவம் வீட்டினர் வீடுபெற் றுய்ந்தார். (42)

அவ்வாறு செய்த சிவலிங்கங்கள் எல்லாவற்றையும் அங்கே யமைத்த சிவாலயங்கள் ஒவ்வொன்றிலும் சைவாகம விதிப்படி பிரதிஷ்டை செய்து அவரவர்களின் தகுதிக்குத் தக்கபடி அன்றலர்ந்த மணங்கமழுகின்ற தருணமுள்ள புதிய பூக்களைத் தூவி வழிபட்டு அங்கே அவர்கள் மிக்க கொடிய வினைகளா லேற்படும் பிறவிகளைப் போக்கினவர்களாகி முத்தியை யடைந்து இன்புருவாயினர்கள்.

உய்தல் = துன்பத்திங்னீகியின்புருவாதல்.

இந்த வாறுமுன் முனிவரர் வானவ ரெவரு
மந்த நற்கதி யெய்தின ரித்தலத் தமர்ந்த
முந்து தீர்த்தத்தின் மூழ்கிமேற் கதிபெற்ற முதலோர்
சிந்து விண்மண லினும்பல ரவரையார் தெரிப்பார். (43)

இந்தப்படி முன் காலத்தில் முனிவர்கள் தேவர்களாகிய எல்லாரும் அந்த நல்ல முத்தியை யடைந்தார்கள். மேலும் அத்தகைய இந்தத் தலத்தில் அமைந்த மேன்மையான தீர்த்தங்களிலே முழுகி மேலான மோட்சத்தை யடைந்த மேலோர்கள் கடல் மணலைப் பார்க்கிலும் பலராவார்கள். ஆதலால் அவர்களை யார்தாம் விளக்கமாகச் சொல்லவல்லவராவார்கள்.

சிந்து = கடல். அந்த என்பது இரண்டறக் கலத்தலா முத்தியைச் சுட்டியது.

எனப்பு கன்றரு ணந்தியம் பகவனை யிறைஞ்சி
யனைத்து நீயுணர்ந் தாயுனக் கறிவதற் கரிதா
நினைப்ப தொன்றிலை யவையுநீ விளம்பென நிகரில்
சனற்கு மாரமா முனிசொல நந்தியுஞ் சாற்றும். (44)

என்று சொல்லியருளிய நந்தியம் பெருமானை வணங்கி எல்லாவற்றையுந் தேவரீருணர்ந்தவராவீர் தேவரீருக்கு அறிதற்கரியதாக ஒன்றுளதென நினைப்பதற்கில்லை. ஆதலால் அந்தத் தீர்த்தங்களையும் இவையாகுமென்று திரு

வாய் மலர்ந்தருள்வீராக என்று ஒப்பற்ற சனற்குமார முனிவர் சொல்லவும் நந்தியம் பெருமானும் சொல்லத் தொடங்கினர்.

தீர்த்தநாமம்.

அற்புதமா யிமையவரு முனிவரரு மாலயனு மன்பா லேத்தத் தற்பரனு னந்நா டகம்புரியு முழுமணிப்பொற் சபையின் சார்பிற் சுற்றுறவோர் குண்டத்தி னளவேனும் புனல்காணிற் றெல்லைஞால, முற்றபல தீர்த்தத்தின் மேலான தீர்த்தமென வுரைக்கலாமால். (45)

தேவர்களும் முனிசிரேட்டர்களும் திருமாலும் பிரமதேவனும் அன்போடு துதிக்கும்படி தற்பரனுகிய சிவபெருமான் எல்லாரும் வியக்கும்படியாக ஆனந்தத் தாண்டவத்தைச் செய்தருளுகின்ற முழுமணிகள் பதித்துச் செய்யப்பெற்ற பொன்னம்பலத்தின் சார்பாக நாற்புறத்திலும் ஓர் குழியளவாகவாவது நீர் நிலையைக் காண்டாலுமது பழமையான பூவுலகிலுள்ள தீர்த்தங்களெல்லாவற்றினு மேலான தீர்த்த மென்று சொல்லத்தகும்.

ஆக என்பது ஆய் எனத் திரிந்து நின்ற தென்க.

தருவனத்தி லரன்கோயிற் சன்னிதியிற் றுருவாசன் றவத்தாற் செய்த, பொருவரும்லோக் கியதீர்த்த முளது தனிற் றினம்மூழ்கிற் போகம் யாவு, மருளுமதின் மூழ்கு தற்கு விசேடதினம் விதிபாதமயனத் தோடு, கிரண மருத் தோதயஞ்சங் கிராந்திகவி மதியெனுமிக் கிழமை யாமால். (46)

பாரிசாதவனமாகிய திருக்களரிலேயுள்ள சிவபெருமான் சந்நிதியிலே தூர்வாச முனிவர் தந், தவமகிமையினுலே யுண்டாக்கிய ஒப்பற்ற லோகாக்ஷயம் என்னுமொருதீர்த்த முண்டு. அதிலே தினந்தோறுங் குளித்தால் அது எல்லாப் போகங்களையு முழுகுவார்களுக்குக் கொடுக்கும். அத்தீர்த்தத்திலே குளிர்ப்பதற்குரிய சிறந்த நாள்கள்

யாவை யென்ருல் விதிபாத நாளும் தக்ஷிணயணம் உத்தரா யனந் தொடங்கும் நாட்களும், கிராணம் (கிரஹணம்) நாட்களும், அர்த்தோதயம் மகோதயம் ஆகும் நாட்களும், சங்க ராந்தி நாளும், வெள்ளிக்கிழமை திங்கட்கிழமை யென்னு நாட்களுமாகிய இந்த நாட்களாகும்.

கவி = வெள்ளி. (சுக்கிரன்)

ஈண்டுரைத்த தினங்களிலப் புனன்மூழ்கி யிட்ட முறும் பொருள்களேனு, நீண்டபுவி யோதனந்தா னிய மேனு முதவிலவர் நிமலராவார், வேண்டுமவர் வாவியத னிடைமூழ்கிப் பிண்டமுடன் விருப்பு நல்லான், மாண்ட திலோ தகம்வழங்கிற் றென்புலத்தோ ரின்பமுற்று மகிழ் வார் மன்னே, (47)

இங்கே சொல்லிய நாள்களிலே அந்தத் தீர்த்தத்திலே குளித்துத்தாம் கொடுக்க விரும்பிய எந்தப் பொருள்களாக இருந்தாலும் நீளமான பூமியாக இருந்தாலும் சோருக இருந்தாலும் உணர்விற்குரிய நெல் முதலிய தானியப் பொருள்களாக இருந்தாலும் சரி அவற்றிலெதைக்கொடுத் தாலும் கொடுத்தவர்கள் மும்மலமற்றவர்ளாக ஆவார்கள். பிதிர்களுக்கு நன்மை செய்து தாம் நன்மையடையவிரும்பு கின்றவர்கள் அத்தீர்த்தத்திலே முழுகிப் பிண்டமும், விரும்பத் தக்க நல்ல பசுக்களையும், மாட்சிமை பொருந்திய எள்ளுடன் கூடிய நீரையும் கொடுத்தால் பிதிரர்கள் இன்ப மடைந்து மகிழ்வார்கள்.

பிதிரர்—அயனுற் படைக்கப்பட்ட கடவுட் சாதியரா வார். அவர் வாழுமிடம் தென்றிசையாதலின் அவர் தென் புலத்தார் எனப்படுகின்றனர் என்க.

மாண்ட = மாட்சிமை பொருந்திய. இதுமாண் என் பதனடியாக வந்த இறந்த காலப் பெயரெச்ச வினைச் சொல்லாகும்.

உயர்பிரம தீர்த்தமென வீசனுக்குத் தென்றிசையி லுளதத் தீர்த்தத், தியன்மறையோர் பலர்மூழ்கி முத்தி

பெற்ரு ரீசனுக்கு மேல்பா லென்றும், பயிலு முருத் திர தீர்த்தங் கற்பாந்தத் துருத்திரர்கள் பலரு மூழ்கி, நய னுறுமத் தீர்த்தத்தின் மூழ்கிலுருத் திரலோக நண்ண லாமால். (48)

உயர்ந்த பிரமதீர்த்த மென்று ஓர் தீர்த்தம், அச்சிவ பெருமானுலயத்திற்குத் தென் திசையிலே உண்டு. அந்தத் தீர்த்தத்திலே முன்னர் என்று நின்று நிலவுகின்ற வேதங் களையோதி யுணர்ந்த வேதியர்கள் பலர் குளித்து முத்தியை யடைந்தார்கள். அவ்வாலயத்திற்கு மேற்றிசையிலே உருத்திர தீர்த்த பென்பதொரு தீர்த்த முண்டு அது, முன், கற்பமுடிவிலே உருத்திரர்கள் பலருங் குளித்து நன்மைகளை யடையப் பெற்றதாகியஅந்தத் தீர்த்தத்திலே குளித் தால் உருத்திரர் உலகத்தை யடைந்து சுகிக்கலாம்.

வேறு

ஆனவுருத் திரதீர்த்தத் ததனின் மாசி
யாமதியி லிரவியெழு மளவின் மூழ்கி
ஞானமருள் பரமனுக்கு மறையோர் கட்கு
நற்கலிங்க மிரண்டுதவி நம்பன் ருளிற்
றேனிமிரு மலரிலைதூய்த் தொழுது தூபந்
தீபமுத லுபசாரஞ் செய்வா ராயிற்
போனபவத் துறுவினையு நீங்கி நானா
போகமுமுற் றரனுலகம் புகுவர் மாதோ. (49)

அந்த உருத்திர தீர்த்தத்திலே மாசி மாதத்தில் சூரியோதய காலத்தில் முழுகி அபரஞான பர ஞானங்களைத் தருகின்ற சிவபெருமானுக்கும் வேதியர்களுக்கும் நல்ல ஆடைகள் இரண்டிரண்டாகக் கொடுத்து அச்சிவபெருமானு டைய திருவடிகளிலே வண்டுகள் முழங்குதற்குரியதேனேடு கூடியமலர்களையும் நல்ல பச்சிலைகளையுந் தூவிக்கும் பிட்டுத் தூப தீப முதலிய உபசாரங்களெல்லாவற்றையுஞ் செய் வார்களேயானல் முன் பிறப்புக்களிலே செய்த வினைகளும்

நீங்கப் பெற்றுப் பலவகையான போகங்களேயும் நுகர்ந்து சிவலோகத்தையடைந்து முடிவில் இரண்டறக் கலந்தின் புறுவார்கள்.

வினையென்றது நல்லவினை தீவினைகளாலுண்டாகிய பாப புண்ணியங்களிரண்டையுங் குறிக்கின்றதென்க; இரண்டும் பிறவிக்குக் காரணமாகலான்.

மொழியுமுருத் திரதீர்த்தந் தன்னிலோது
முறைமுழ்கி யெம்பெருமான் முளரித் தாளில்
வழுவினறு மலரிலைதூய்த் தொழுது தூப
மணித்தீப முதலியற்ற மாட்டா ராயிற்
பழுதின்மறை முழுதுமுணர்ந் தறியா ஞானப்
பராபரனுக் கப்பரிசாற் பணிந்து பூசித்
தழிவில்பதம் பெறுவோரை மகிழ்ந்து போற்றி
லரன்வெளிப்பட் டவர்க்குமுத்தி யளிப்பனன்றே.()

மேலே சொல்லிய அந்த உருத்திர தீர்த்தத்திலே மேலே சொல்லிய முறைப்படி முழுகி எம்பெருமானுகிய சிவபெருமானுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளிலே குற்றமில்லாத மணம் பொருந்திய மலர்களேயும் இலைகளையும் தூவிக்கும்பிட்டுத் தூபம் அழகிய தீபம் முதலிய உபசாரங்களைச் செய்ய முடியாதவர்களானுலும், குற்றமில்லாத வேதங்கள் எல்லாவற்றையு மோதி யுணர்ந்து கொள்ள முடியாத அறிவுருவாகியவனும் பரத்திற் கெல்லாம் பரனுமாக விளங்குகின்ற அச் சிவபெருமானுக்கு முன்னே சொல்லியபடி செய்து வணங்கிப் பூசித்துச் சிவலோகத்தை யடைந்து முடிவில் அழிவில்லாத முத்திப் பதத்தைப் பெறுதற்குரிய வராகவுள்ள பெரியோர்களை விரும்பிப் பணிவார்களேயானுல் அப்படி விரும்பிப் பணிகின்றவர்கட்குச் சிவபெருமான் வெளிப்பட்டு அம் முத்தியை அவ்வாறே அளித்தருள்வார்.

அன்றே என்பது அசை நிலைச் சொல்.

பரமனுக்கு வடதிசையி லுளது மேவிப்
படிந்தோர்க்கு மெய்ஞ்ஞானம் பயக்கு மாற்றாற்
திருஞான தீர்த்தமெனும் பெயரா மந்தத்
தீர்த்தத்திற் கார்த்திகையா தித்த வாரத்
திரவியெழுங் காலையினின் மூழ்கி மேலோர்க்
கினியநறும் பாற்குடமீந் திட்டா ராயி
னரியகுட்ட நோய்முதலா மனைத்து நோயு
மகன்றுசிவன் சாலோக மடைவா ரன்றே (51)

மேலானவற்றிற் கெல்லாம் மேலானவனை அச் சிவ பெருமான் திருக்கோயிலுக்கு வடதிசையிலுள்ளதும் அடைந்து முழுகினவர்களுக்கு பர ஞானத்தைத் தரு கின்ற தன்மையுடைமையாலே திரு ஞான தீர்த்தம் என் னும் பெயருடையதுமாகிய அத் தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமையில் சூரியோதய காலத்தில் முழுகி நற்குணத்தால் மேன்மை பொருந்திய சத்துக் களுக்கு இனிமையான நல்லபாற் குடத்தைக் கொடுப்பார் களே யானுல் மருந்து முதலிய வற்ருல் நீங்குத லருமை யான குட்ட நோய் முதலிய எல்லாக் கொடிய நோய்களும் நீங்கப் பெற்றுச் சிவபெருமானுடைய சாலோக பதவியை யடைந்தின் புறுவார்கள்.

பாலோடு கூடிய குடம் என்பார் ''இனிய நறும்பாற் குடம். என்றனர். பால் வைத்திருந்த குடமன் றென்க. இனிய நறும் என்றது, தண்ணீர் கலவாதபால், நோய் முதலியனவுடையனவல்லாத இளம் பசும் பால் என்பதைக் குறிப்பதற்காகு மென்க.

போதமீந் திடும்வாவி தன்னின் மூழ்கிப்
பொற்சபையி லீசனுக்கும் புவன மீன்ற
மாதினுக்கும் விதிமுறையாற் பூசை யாற்றில்
வாய்த்தபெரும் போகமெலா மளிப்ப ராமீண்

டோதியவா வியின்மாசித் திங்கண் மேவு
மோங்குசிவ நிசியினில்வந் தொருகான் மூழ்கிற்
பூதலத்தி லெவரேனு நிமல னென்றே
புகல்வதல்லான் மனிதரெனப் புகலொ ணுதால் (52)

அந்தத் திரு ஞான தீர்த்தக் குளத்திலே முழுகி பொன்னம்பலமாகிய பேரம்பலத்திலே திருக் கூத்தாடுகின்ற சிவபெருமானுக்கும் உலக மெல்லாவற்றையும் பெற்றெடுத்த உமாதேவியாருக்கும் விதிப்படி பூசை செய்தால் அத்தேவனும் தேவியாரும் இன்பம் பொருந்திய போகங்களெல்லாவற்றையும் முழுகியவர்களுக்குக் கொடுப்பார்கள். இங்கே சொல்லிய அந்தத் திருஞான தீர்த்தத்தில் மாசி மாதத்திலே வந்து கூடுகின்ற சிவராத்திரியிலே ஒருதரம் வந்து முழுகினுல் பூவுலகின்கண்ணே அவ்வாறு தீர்த்த மாடியவனை மலரகிதனுகிய சிவபெருமானென்று சொல்லும்படி மேனிலையை யடைவானல்லாமல் மனிதனென்று சொல்லும்படி அவனிருக்க மாட்டான்,

நிசி யென்பது இரவு என்னும் பொருளில் வந்திருக்கின்ற தென்க.

சிவநிசியின் ஞானவா வியினீ ராடிச்
சேரிரவிற் றுயினீக்கிச் செழுமென் போதா
லவிர்கயிலைப் பெருமானை யாமந் தோறு
மருச்சனைசெய் திரவியெழு மளவின் மீண்டும்
பவமாள வதின்மூழ்கிச் செம்பி னுற்செய்
பாத்திரந்தண் ணிறைத்தியன்ற பசும்பொ னேடுந்
தவிராமந் திரமறையோாக் கீந்து நீடுந்
தருவனத்திற் கனகமணிச் சபையைச் சார்ந்து. (55)

சிவராத்திரிச் சமயத்தில் திருஞான தீர்த்தக்குளத்திலே நீராடிப் பொருந்திய அந்தஇரவிலே தூக்கம் போக்கிச் செழுமையான மெல்லிய பூக்களாலே ஒளிவிட்டு விளங்குகின்ற வெள்ளிவடிவான கைலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை இங்கே சாமங்களிளெல்லாம் தவருதபடி

பூக்களைத் தூவிப் பூசித்து சூரியோதயத்திலே மீளவும், வந்து பிறப்புக்கெடும்படி அத் தீர்த்தத்தில், முழுகிச் செம் பினலே செய்த பாத்திரங்கள் நிறைய நீர் பெய்து வைத்து இயன்ற அளவு பசும் பொன்னுடன் சேர்த்து, அவற்றை, சந்தி முதலியவைகளில் தவருதபடி காயத்திரி மந்திரங் களைச் செபஞ் செய்கின்ற வேதியர்களுக்குக் கொடுத்து நீண்டு வளர்ந்த பாரிசாத வனத்திலே, பொன்னலு மணி களாலு மமைத்த பேரம் பலத்தை யடைந்து.

ஆனந்த நாடகஞ்செய் தருளுங் கோமா
 னடிக்கமலந் தனைத்தரிசித் தன்பி னேடு
ஞானந்த னுற்றுதித்தா லவர்க டம்மை
 நம்பன்மகிழ்ந் திடும்பசும்பொ னச்சி னேர்தாந்
தேனுண்டு மதுகரங்கள் கீதம் பாடுந்
 திருக்களரீ சனுக்கினிதிற் றிகழ்கண் ணுடி
தானல்கி லளகைநகர் புரக்கும் வேந்தன்
 றனைப்போன்மா நிதிபெறுவர் சரத மாமால். (54)

ஆனந்த நாடகத்தைச் செய்தருளுகின்ற தலைவனுகிய சிவபெருமானுடைய திருவடித் தாமரை மலர்களைக் கண் குளிரக் கண்டு அன்போடும் அறிவோடுந் துதிசெய்தால் துதித்தவர்களை அச் சிவபெருமான் மகிழ்வார், பசும்பொன் முதலிய பொருளைப் பெற விரும்பினவர்கள், மலர்களிலே யுள்ள தேனைப் பருகி வண்டுகள் கீதம் பாடுகின்ற திருக் களிரின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற பாரிசாதவனே சராகிய சிவபெருமானுக்கு விளக்கமாக விளங்கும் கண்ணுடி யைத் திருமுன்னர் வைத்தால் அளகா புரியை ஆளுகின்ற அரசனுகிய குபேரனைப் போல பெருஞ் செல்வத்தைப் பெறுவார்கள். இது சத்தியமாகும்.

சரதம் = உண்மை. சரதம்ஆம் = சத்தியமாகும்.

வேறு

திரண்டளிகள் வரிபாடுந் திருக்களரீ சனைப்பணியச் செல்குவோமென்,றிரண்டடிசென் றுலவர்க்கோ ரயமேத

பலனுளதாம் யாவ ரேனும், விரைந்தொருமூன் றடிசென் ஞற் சிவலோகம் பெறுவர்முற்று மேவிப் போந்தோர், பொருந்துபல னுரைக்கடங்கா தயன்றனக்கும் வரை யறுத்துப் புகலலாமோ. (55)

வண்டுகள் கூடி வரிப் பாட்டைப் பாடுகின்ற பாரிசாத வனமாகிய திருக் களரிலே எழுந்தருளியிருக்கின்ற சிவ பெருமானை வணங்குவோமென்று இரண்டடி தூரம் சென் ருல் அவர்களுக்கு ஒரு அயமேத யாகஞ் செய்த பலனுண் டாகும். யாராக இருந்தாலுஞ்சரி மூன்றடி தூரம் விரைந்து செல்வார்களேயானுலவர்கள் சிவலோக பதவியைப் பெறு வார்கள். ஆதலால் வழி முழுது நடந்து சென்றவர்கள் அடையும்படியான பலன்களிவை யெனச் சொல்வதற்குப் புகுந்தால் அவை சொல்லிற் கடங்காதனவாகும். பிரமா விற்கும்கூட வரையறுத்திவை யென்று சொல்லத்தான் முடியுமா முடியாது.

வரிப்பாட்டு=இசைப்பாட்டு.

பங்குனித்திங் களின்மருவு பவுரணையிற் கௌவியத் தாற் பாலாற்றேனுற், றிங்கள்புனை வேணியனுக் கபிடேக நன்பகலிற் செய்து மேன்மேற், பொங்கியெழுந் தார்வ மிகக் கனிந்துருகி விழிவழிநீர் பொழிய மூன்ருந், தங் கரணம் புனிதமுறப் பன்முறைபோற் றிப்பணிந்து சாற்றுங் காலை. (56)

பங்குனி மாதத்திலே வருகின்ற பவுரணை நாளில் பஞ்ச கௌவியத்தாலும் பாலினுலும் தேனினுலும் சந்திரனை யணிந்த சடா மகுடத்தையுடைய சிவபெருமானுக்குப் பகற் பொழுதிலபிடேகஞ் செய்து மேன்மேலாக வளர்ந்தெழுந்து அன்பான ததிகரித்தலால் உள்ள மிகப் பழுத்துருகப் பெற்று விழிகளின் வழியாக கண்ணீரானது சொரியும்படி நின்று தம்முடைய மனமொழி மெய்களாகிய முக்கரணங் களும் தூய்மை கொள்ளும்படியாகப் பலமுறை உபசரித்து வணங்கித் துதிக்கும் பொழுது.

விடையிவருந் தருவனத்தின் மேவுசிவ னிலிங்க மதின் மேன்மேற் ரோன்றுஞ், சடையுமர வுரியுமுயர் தண்டிஞெடு குண்டிகையுந் தாங்கி முத்தி, யடையுமருந் தவர்கடமைக் காணலாந் தரிசனத்தா லகலாப் பாவந், தொடருமெழு வகைப்பவமுந் தொலைந் துலகி லெவ ரேனுஞ் சுத்தராவார். (57)

இடப வாகனத்திலேறி வருகின்ற வராகிய பாரிசாத வனப் பெருமானுடைய அருவுரு வடிவாகிய சிவலிங்கத் திலே, மேன் மேலாகத் தோன்றுகின்ற சடையும் மரவுரியும் உயர்ந்த தண்டம் கமண்டலங்களும் ஆகிய இவற்றைத் தாங் கினவர்களாக மோட்ச மடையும் அரிய தவமுடைய துற வறப் பெரியோர்களைக் காணக் கூடிய காட்சி கிடைக்கும். அக் காட்சி கிடைப்பதால் எவராக இருந்தாலும் அவர்கள் தொடர்ந்து வருகின்ற ஏழுவகைப் பிறவிகளும் தொலைதற் குரியராகிய மலமற்ற சீவன் முக்தர்களாவார்கள்.

சிவலிங்கமதில் இரண்டறக் கலத்தலாகிய முத்தியடை யும் அருந்தவர் என்க.

அற்றவருக் கருள்புரியுந் திருக்களரீ சனைப்பணிய வன்பான் மேவு, மற்றொருவ ருடன்றமது காரியத்தாற் பத்தியின்றி மருவிக் காண்ட, லுற்றவருஞ் சிவலோக பதம்பெறுவ ரளவிலற முஞற்றினோரே, பெற்றிடுவ ரித்தலத்திற் சிவலிங்க தரிசனந்தான் பிறர்க்குண் டாமோ. (58)

பற்றற்றவர்களுக்கு அருள் செய்கின்ற திருக்களர்ப் பெருமானை வணங்குவதற்கு அன்போடு செல்கின்ற ஒரு வனோடுகூட தம் காரியத்தின் பொருட்டுச் சென்று சிவ பத்தியில்லாமல் பொருந்தித் தரிசித்தவரும் சிவலோகப் பதவியைப் பெறுவார்கள். இப்படியிருத்தலால் முன் பிறவி களில் அளவில்லாத சிவ புண்ணியங்களைச் செய்தவர்களே இத் திருக்களரிலேயுள்ள சிவலிங்கதரிசனத்தைப் பெறு வார்களே யல்லாமல் அப்படிச் செய்யாத பிறர்க்கு அத் தரிசனங் கிடைக்குமோ கிடைக்காது.

உஞற்றி=செய்து. அற்றவர்க்கு என்பதற்கு வேறு பற்றுக் கோடில்லாதவர்க்கு எனவும் பாபமற்றவர்களுக்கு எனவும் பொருள் கொள்ளலுமாகும்.

இன்னனபன் னியவனைத்து மதிகரக சியப்பொருளா மிதனை மேலோய், நின்மலனுக் கன்புமிகு பத்தியும்வாய் மையுநின்பா னிகழ்த லாலே, முன்னியுரைத் தனனீச னிலையென்று மிருக்கு முதன் மொழியு நூலிற். சொன்ன பொருள் பிரமாண மிலையெனவு மிசைப்பவர்க்குச் சொல்ல றீதாம். (59)

மேலான தவமுடைய சனற்குமாரனே சொல்லிய இவைகளெல்லாம் அதிக ரகசியப் பொருள்களாகும். அநாதி மல முத்தராகிய சிவபெருமானிடத்தில் அன்பும், மிகுந்த பத்தியும், உண்மையும் நின்னிடத்திலிருத்தலால் மேலாக நினக்கு இவைகளை கருதிச் சொன்னேன். இறைவனில்லை யென்றும் வேத முதலிய நூல்களெல்லாம் சொல்லும் பொருள்கள் பிரமாணப் பொருளாகா என்றும் சொல்லுகின்ற நாத்திகர்களுக்கு இவைகளைச் சொல்லுதல் கூடாது. சொன்னால் தீமைப் பயக்கும்.

இதனை யென்பது இவ்விடயத்தை யென்னும் பொருளதாதலின் ஒருமையாற் சுட்டல் பழுதற்றதாகும். "அன்பு மிகுபத்தியும்" என்றதால் தாய் தந்தையராகக் கருதி மீதூரச் செய்யும் விருப்பம் அன்பு எனப்படும். தெய்வமாகக் கருதி மீதூரச் செய்யும் விருப்பம் பக்தி எனப்படும் என இவர் கொண்டன ரென்பது பெறப்படுகிறது. எனவே உமையொரு பாகரைத் தாய் தந்தையராகவும் தெய்வமாகவும் சனற்குமாரமுனிவர் எண்ணி வழிபடுபவராவர் என்பது புலப்படுகின்றது.

உரைத்தல்பழு தெனப்புகலு மங்கவர்கேட் டுண்மையுரு ரதனுலோவா, தருத்தியில்பா தகமடையு மவர்க் கடையும் பாதகம்போலன்னோர்க் குன்னி, விரித்து

மொழி பவர்க்கடையு மாணுக்கன் பிழைகுரவன் மேற்ருந்
திண்ணங்' கருத்திலயிர்த் திடலதனுற் சிவனருளெய்
திடுமவர்க்கே கழறல்வேண்டும். (60)

மேலே சொல்லிய சிவசம்பந்தமான விடயங்களைச் சொல்லுதல் குற்றமாகும் என்று எவரைக் குறித்துச் சொன்னேனே அவர்கட்குச் சொன்னுல் அந் நாத்திகர் கேட்டு உண்மையான அவ்விடயங்களை யுண்மை யானவை யென்று கருதாமல் அன்பு மின்மையால் இகழ் வார்களாதலினுலே நீங்காத பாதங்களவர்கட்கு வந்து சேரும். அந்நாத்திகர்களுக்கு பாபம் வந்து சேருவது போல அவர்களுக்கு கருதி விரித்துச் சொல்பவர்களுக்கும் பாபம் வந்து சேரும்; மாணவன் பிழையானது ஆசாரி யனையும் வந்தடையும். இது உறுதியான மொழியாகும். ஆனதால் மனதிலே இது பற்றிச் சந்தேகங்கொள்ளாதே ஆதலால் சிவபெருமானுடைய அருளைப் பெறுதற்குரிய சிரத்தை முதலியனவுடையவர்களுக்கே சிவ சம்பந்தமான வரலாறுகளைச் சொல்லுதல் தக்கதாகும்.

வேறு

இப்பெருங் காதைப் பெருமையுங் கேட்போர் முறை
மையு மெமக்குமேல் விதியாற், செப்பிய குரவன் சொற்
பரி சேயான் செப்பின னீயுமித் திறத்தாற், றப்பற
வுரைத்து விளம்புதி யெவர்க்குஞ் சராசர முழுவதுந்
தானு, மொப்பிலா வொருவன் றிருக்கதை கேட்போ
ரொருமையேச டெழுபிறப் பொழிவார். (61)

இந்தப் பெரிய (மாலாதாரகன்) வரலாற்றின் பெருமையையும் கேட்பவர்களின் தன்மையையும் எனக்கு முன்னுளிலே முறைப்படி சொல்லி யருளிய ஆசாரியர் சொல்லியபடியே யான் நினக்குச் சொன்னேன் நீயும் இப்படியே அன்புள்ள யாருக்கும் பிழையின்றிச் சொல்லி விளக்குவாயாக. சராசரப் பொருள்கள் எல்லாவற்றிலுந் தானே

நிறைந்து அவ்வவ் வடிவாகத் திகழ்கின்ற ஒப்பற்ற ஒரு பரம் பொருளாகிய சிவபெருமான் சம்பந்தமான திருவமைந்த வரலாறுகளை ஏகாக்கிர மனதுடன் கேட்பவர்கள் முன்னைய வினைகளாலுண்டாகின்ற பிறவிகளில்லாமல் இறைவனை யடைந்தின்புறுவாவார்கள்.

எழு பிறப்பு என்பதற்கு ஏழுவகையான பிறவிகள் என்றுரைப்பினுமாகும்.

வேறு

பத்தியின்றி யுணவினுக்காக் கிருமியொடு சிறகரளி பறவை யேனுஞ், சித்திதருந் திருக்களரீ சனைமுக்கால் வலம்வந்தாற் றேவர் காணு, முத்திதனை யேயடையு மையுறலென் றபன்பயந்த முனிகேட்பச், சத்தியஞ்சத் தியமிதுசத் தியமென்று னந்தியெனுந் தவத்தின் மேலோன்.

(62)

கிருமிகளும் இறகோடு கூடிய வண்டுகளும் பறவைகளும் (முன்னைய தவத்தாலன்றிப்) பத்தி யென்பதைச் சிறிது மறியாதனவாதலால் அப்பத்தியில்லாமல் அவைகளுங்கூட உணவைக் கொள்ளுவதற்காகப் பாரிசாத வனப் பெருமானுலயத்தை மூன்றுதரம் வலமாகச் சுற்றி வருமேயாளுலும் அறிவிற் சிறந்த தேவர்களுங்கூட அறியமுடியாத முத்தியையே அடையும். இதில் யாதொரு சந்தேகமும் கொள்ளாதே. இது முக்காலுஞ் சத்தியம் என்று தவத்தினுலே யடையத்தக்க மேன்மை பொருந்திய நந்தியம் பெருமான் கூறியருளினுர்.

தவத்தின் மேலோன் என்பதற்குச் சிவ புண்ணியமாகிய தவத்திலே தலை சிறந்தவன் எனக் கூறலுமாகும்.

அளிபறவை கிருமியொடு மறியாமலுண வினுக்கா வமலன் றன்னை, வளையமுக்கால் வலம்வரினுஞ் சிவலோக மெய்துமென்றுல் வானோர் போற்று, மொளிகொடரு

வனப்பெருமை யிப்பரிசென் றுரைக்கவற்றே வுலவா
வின்பக், களிதருமிக் காதைதனைக் கேட்பவர்கற் போர்
பகர்வோர் கயிலைசேர்வார். (63)

வண்டுகள் பறவைகள் கிருமிகளுடன் மற்றைய விலங்கு களும் அறியாமலே (இன்னது செய்தாலின்ன தாகு மெனத் தெரிதல் இல்லாமலேயே) உணவைக் கொள்ளுத லொன்றைக் குறித்து அநாதி மல முத்தரான பாரிசாத வனே சுரரைச் சுற்றி முக்கால் வலமாக வந்தால் அவையும் சிவலோக பதவியை யடையும் என்றால் தேவர்களெல்லா ரும் போற்றும்படியான. ஒளியென்னும் புகழைக் கொண்ட பாரிசாதவன தலத்தின் பெருமை யித்தகையது என்று சொல்லத் தக்கதா அழியாத இன்ப மகிழ்ச்சியைத் தரும் படியான இவ் வரலாற்றைக் கேட்பவர்களும் படிப்பவர் களும் சொல்பவர்களும் கையிலையாகிய சிவ லோகத்தை யடைந்தின்புறுவார்கள்.

ஒளி யென்பது நேரே கேட்கப்படும் புகழ். புகழ் என் பது ஒருவன் தானில்லாத விடத்துச் சொல்லப்படுவ தாகும். "உண்ணு ளொளி நிருன் ஓங்கு புகழ் செய்யான்" (நாலடியார்) என வருவது முதலியவற்றான் வேற்றுமை காண்க. அல்லது ஒளி என்பது பொதுவாகப் புகழைக் குறித்து நின்ற தெனினுமாகும்.

ஐந்தாவது மாலாதாரகச் சருக்கம்
முற்றுப் பெற்றது.

௳

சிவமயம்

திருக்களர்ப் புராணம்

ஆறுவது

மகாரதன் புத்திரப் பேற்றுச் சருக்கம்

இன்னங் கனக தருவனத்தி லெய்தி யிறைவர்
கதிபெற்ளுேர்
தன்மை யுரையென் றயன்பயந்த சனற்கு மார
முனிகேட்ப
மின்னும் பவளத் தொளிததும்பும் வேணிப் பெருமான்
விரைக்கமலப்
பொன்னங் கழற்ரு ளிணைகருதி நந்தி யீச
னிவைபுகன்ருன். (1)

மேலும் பொன்வடிவான பாரிசாத வனத்தையடைந்து சிவகதியை யடைந்தவர்களின் வரலாறுகளைச் சொல்லி யருள்வீராக என்று பிரமதேவன் பெற்றெடுத்த புதல்வ ராகிய சனற்குமார முனிவர் கேட்டுக் கொள்ளவும், விளங்கு கின்ற பவளம் போன்ற செந்நிற ஒளி நிறைந்த சடா பாரத்தையுடைய சிவபெருமானுடைய பொன் போலச் சிறந்தவையும் மென்மையானவையும் தண்மையானவையும் செந்நிறமானவையும் வீரக்கழலை யணியப் பெற்றவையும் ஆகிய இரண்டான திருவடிகளையும் உள்ளத்திலே எண்ணி நந்தியம் பெருமான் கீழ்வருவனவற்றைக் கூறியருளினர்.

வீரக்கழல் அணியப்பெற்றது ஒரு திருவடியாயினும் இனமாகிய மற்றைய திருவடிக்கும அப்பெருமை யெய்துத லால் இரண்டு மணியப் பெற்றனவாகக் கூறின ரென்க.

வேறு

தவப்பயனி லாமனித ராயினுந்தற் பரன்சரிதை தன்னைக்கேட்கி, லவித்தையினு லிறுமாந்து பாசவலை யிடையகப்பட் டழுங்கா வண்ணம், புவிக்குளர னடி யாரின் மேலாகிச் சிவகதி யுற்புகுவார் நாளுஞ், செவிக் கமுதா மிக்காதை யுண்மையுறக் கேட்டியெனுச் செப்ப லுற்ருன். (2)

தவமாகிய பயனில்லாத மனிதர்களே யானுலும் சிவ பெருமானுடைய வரலாற்றைக் கேட்பார்களே யானுல், அவர்கள் அஞ்ஞானத்தினுலே தேக முதலியவற்றை யான் எனவும் என எனவும் உண்டாகின்ற அகங்கார மகாரச் செருக்கை யடைந்து அப்பாச வலையிலே சிக்கிக் கிடந்து துன்புருதபடி, இந்தப் பூவுலகின் கண்ணே சிவனடியார்கள் பலர்களுக்குள்ளே சிறந்தவர்களாகிச் சிவகதியை அடை வார்கள். ஆதலால் எப்போதும் காதுகளுக்கு அமிழ்தமாக விளங்கும் இவ்வரலாற்றை மெய்ம்மை பொருந்தக் கேட் பாயாக என்று சொல்லத் தொடங்கினுர்.

'இக்காதை' என்றது பின்வரும் வரலாற்றைச் சுட்டிய தாகும்.

தவப்பயன் = புண்ணியமாகிய பயன். இனித் தவமா கிய பயன் எனினுமாம். தவஞ் செய்தலாகிய தங்கருமம் செய்யவே மனிதப் பிறவி வேண்டப் பட்டதாதலால் "தவப் பயனிலா மனிதராயினும்" என்றனரென்பர்.

வேறு

பான றுந்தமிழ் சிறந்தது மேலறு பதுநான்
கான நல்வினை யாட்டினைக் கூடலி லமலன்
ருனு வப்புடன் புரிந்திட வுயர்ந்தது தலைமை
நானி லத்தினு மிகுந்தது பாண்டிநன் ஞடு. (3)

பால் போலு மினிமையான தமிழ் மொழி சிறந்து வளர்ந்து வழங்கப் பெற்றதும் தென் கூடல் நகரமாகிய மதுரைப் பதியிலே அநாதி மல முத்தரான சிவபெருமான் மகிழ்ச்சியோடு அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்யப்பெற்றதா லுயர்வைப் பெற்றதும் சிறந்த நான்கு நிலங்களினுலும் மேன்மை பெற்றதுமாக விளங்குவது பாண்டிய நாடேயாகும்.

நானிலத்தினும் = நான்கு நிலங்களாலும், மலயம், சிறுமலை முதலிய குறிஞ்சி நில நலனும், கொற்கை, சேது முதலிய நெய்தல் நில நலனும், பொருநை வைகையாறு முதலியவற்றைக் கொண்ட மருத நில நலனும், சோதிவன முதலியகாடுறை நில நலனும் பெருகுதலால் அவ்வாறு கூறினர்.

தமிழ், சேர நாட்டிலும் சோழ நாட்டிலும் வழங்குவதா யினும் பாண்டிய நாடே தமிழ் சிறப்பாக வழங்கு நாடாத லால் "பானறுந் தமிழ சிறந்தது" என்றனர். இவவாறே "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டக்கவி பாடிய" சேக் கீழார் பெருமானும் "செந்தமிழ நாடணையும் போது" என்பது முதலிய தொடர்களால் பாண்டிய நாட்டைச் செந் தமிழ் நாடு எனக் கூறித் தமிழ் சிறக்க வழங்கு நாடு. பாண் டிய நாடாகு மெனத் தெளிவித்தல் காண்க. "சந்தனப் பொதியச் செந் தமிழ் முனியும், சவுந்தரமாற னெனுந் தமிழ் நாடனும், சங்கப் புலவருந் தழைத்தினிதிருந்த, மங்கலப் பாண்டிவளநாடே செந்தமிழ் நாடாகும்" என நன்னூல். விருத்தியுரையாசிரியர் கூறுதலு மிக்கருத்தைத் தழுவியதேயாகும்.

அந்த நாட்டினை மனுமுறை நாடொறு மளிப்போன்
வெந்தி றற்சிலை மகாரத னெனும்பெயர் வேந்தன்
சிந்து ரம்பரி தேரொடுந் தானையிற் சிறந்தோன்
முந்தும் வென்றியி லிவனிக ருளர்கொலோ மொழியில்.(4)

அத்தகைய பாண்டிய நாட்டை மனுநீதிப்படி நாடோறுங்காப்பவன், பகைவர்கண் டஞ்சும்படியான கொடிய வலிமை படைத்தவில்லையுடைய மகாரதன் என்னும் பெயரையுடைய அரசனுவான். அவன் யானை, குதிரை, தேர் காலாள் என்னும் படைப் பெருமையினுலே சிறந்தவனுவான். அவனைப் பற்றிச் சொல்லத் தொடங்கினுல் மேம்பட்ட வெற்றி பெறுவதில் அவனுக்கு ஒப்பாக ஒருவருமில்லை.

சிந்துரம்=யானை. பரி=குதிரை.

செறியு மின்னுயி ரோம்பலிற் செங்கண்மா லொப்பா
னறிவி லாயிரம் பஃறலைச் சேடனை யனையா
னெறியி னீந்திடு மீகையிற் றருவினை நிகர்ப்பான்
மறுவி னீதியின் மனுவெனத் தகுவனம் மன்னன். (5)

அவ்வரசன், நெருங்கி விளங்குகின்ற இனிய வுயிர்ப் பொருள்களை நன்ருகக் காப்பாற்றுதலால் செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமாலை யொப்பான். அறிவினுலே ஆயிரந்தலைகளையுடைய ஆதி சேடனை யொப்பான். முறைப்படி கொடுக்கின்ற ஈகையினுலே கற்பக தருவினை யொப்பான். குற்றமில்லாத நீதி செலுத்துதலிலே மனுச் சக்கரவர்த்தி யென்று சொல்லத் தக்கவனுவான்.

இன்னுயிரென்றது இங்கே மக்களையும் மக்கட்குதவியாகவுள்ள உயிர்களையுங்குறிக்கும். அன்றி யவன் நீதியுடனரசு செய்தலால் மழை முதலியன அளவுடன் தவருது வழங்க உடம்போடு விளங்குமெல்லாமுயிர்களும் நலனுறுதலின் அவ்வெல்லாவற்றையும் குறிக்குமெனலுமாகும்.

சைவ நூனெறித் தகைமைசான் னறவன்றன
தனைப்போன்
மையின் மாநிதித் தலைவனல் லறத்திறம் வழாதோன்
பொய்யுந் தீமையும் புன்மையுங் கீழ்மையும் போக்கி (6)
மெய்யு நன்மையு மொழுக்கமு மேற்கொளும் விறலோன்.

அவன் மேலும் சைவாகம நூனெறியிலே நிற்றலாகிய தகுதி வாய்ந்தவனாகவும் குபேரனைப் போலக் குற்றமில்லாத பெரிய செல்வத் தலைவனாகவும் அறஞ் செய்தலில் வழுவதா வனாகவும் பொய்யுரைத்தலும் தீயன செய்தலு முதலிய புல்லியர் தொழில்களும் கயவர்கள் செய்யும் புறங்கூறல் முதலிய தொழில்களும் தன்னிடத்திலணுகாமல் நீக்கி மெய்ம்மை பேசுதலும் நல்லன செய்தலும் ஒழுக்க முடையனாதலும் ஆகிய தன்மைகளை மேற்கொண்டு நடக்கு மாற்றல் கொண்டவனாகவும் விளங்கினான்.

தனதன் = குபேரன்.

அன்ன காவல னரும்பெறற் புதல்வரற் றழுங்கிப்
பன்னு மோர்பதி னாயிரம் வருடமாப் பரிவுற்
றின்னல் கூர்ந்துத னமைச்சனாந் தன்மகீர்த் தியையீ
தென்ன காரண மெனத்தனி புலம்பலுற் றியம்பும். (7)

அத்தகைய அரசன் அருமையாகப் பெறுதற்குரிய புதல்வர்க ளில்லாமையினாலே பதினாயிரம் வருடமாக மனங் கலங்கி வருந்தித் துன்பங்கொண்டு தன் மந்திரியாகிய தர்ம கீர்த்தியைப் பார்த்துப் புதல்வர்கள் நமக்கில்லாமைக் குக் காரணம் இஃதென அறிகின்றிலேன் என்று வாய்விட்டு வருத்தஞ் தெரியச் சொல்கின்றான்.

தேவர் பூசனை முறைமையிற் றிரிந்ததோ சிவனா
ரேவ லாளர்தா மின்னலுற் றார்கொலோ விகழாத்
தாவில் வேதிய ரறப்புறங் குறைந்ததோ தகவான்
மேவு நற்குடி யிறைமுறை பிழைத்ததோ விளம்பில். (8)

புதல்வர்ப் பேறில்லாமைக்குக் காரணம் யாது என ஆராய்ந்து சொல்லத் தொடங்குவோமானால் (தேவ பூசை முறை தவறுதலும் சிவனடியார்கள் துன்புறுதலும் வேதியர் களுக்கு ஏற்பட்ட அன்ன சத்திர முதலியன ஒழுங்குற நடவாமையும் குடிகள் நீதி தவறி நடத்தலும் ஆகிய இவற்

றுள் ஏதாவதொன்றுங் காரணமாகலாம் ஆதலால்) தேவர்களுக்குச் செய்கின்ற பூசைகள் செய்ய வேண்டிய முறைப்படி செய்யப் படாமல் தவறு பட்டனவோ சிவனடியார்கள் துன்புற்றார்களோ ஒழுக்கத்தினின்றுந் தவறாத வேதியர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை அவர் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அன்ன சத்திர முதலிய அறப்புறங்கள் தஞ்செயல்களினின்றுங் குறைவு பட்டனவோ தங்கள் தங்கள் தகுதிகளுடன் தங்கி வாழ்கின்ற குடிகள் அரச நீதியினின்று தவறினவோ.

இனைய செய்தியி லெப்பிழை யுலகில்யா மிழைத்தோ
மனைய தீதென விளம்புதி யமைச்சனீ யெனலு
நினைவின் மேல்வரும் வினையெலாஞ் சூழ்ச்சியா
னிகழ்த்துந்
துனியில் கேள்விய னரசனைத் தொழுதிது சொல்வான். (9)

மந்திரியே! இத்தகைய தவறுகளான செய்திகளுக்களுக்குள்ளே எந்தத் தவறு உலகில் உண்டாகும்படி யாம் விழிப்பின்றி யிருந்தோம் அத்தவறு இஃதாகுமென்றறிந்து சொல்லுவாயாக என்றரசன் சொல்லவும் முன்னுலகில் நடந்தவற்றை கேட்டதினாலும் நூல்களாலறிந்ததினாலுமுண்டாகும் நினைவினாலும் (ஸ்மிருதியாலும்) தன் ஆராய்ச்சியினாலும் பின் வருவன வற்றையெல்லா முன்னறிந்துரைக்க வல்லவனும் வருத்தமின்றிக் கற்றுத் தெளிந்த நூலறிவுடையவனுமாகிய அம்மந்திரியானவன் வணங்கிக் கீழ்வரும் விடயத்தைச் சொல்பவனானான்.

கேள்வி = நூலறிவு. அது "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்" (புறநானூறு) எனவருவது முதலியவற்றாற் புலப்படும். பல பிறப்புக்களில் பயின்றவனுக்கு எடுத்த பிறவியில் எளிதாகப் பயிற்சியேற்படும். அதனால் பல வகை நூல்களையும் பயில இயலும் அதனாலவனறிவு விரியும் அத்தகையானே செயலாற்றுதற்குரியவனாவான் என்பன வெல்லாம் பெறப்பட "துனியில் கேள்வியன்" என்றனர்.

ஐய நீமனு முறையளித் தாயறந் திறம்புஞ்
செய்கை யிற்சிறி தாயினும் புரிந்திலை திறத்தா
லெய்த முன்னை நா ளியற்றிய புண்ணிய மிகத்தி
லுய்ய நல்லற மயர்ந்திடு மதலையா யுதிககும். (10)

ஐயனே! தேவரீர் மனு நீதிப்படி உலகத்தைக் காப் பாற்றினீர். அறத்தினின்று மாறுபட்ட செயல்களில் (தீய செயல்களில்) சிறிதுங்கூடச் செய்தீரில்லை. தக்க புதல்வர் களைப் பெறுதற்கு வேண்டி முற்பிறவிகளிலே செய்த புண் ணியமே இங்குத் தங்குலமும் குடிகளும் உய்யும்படி நல்ல அறச் செயல்களைச் செய்யவல்ல புதல்வர்களைத் தோன்றும் படி செய்யும்.

அறிவறிந்த மக்கட்பேறே பெரும் பேருதலால், "உய்ய நல்லறம் புரிந்திடு மதலை" என்றனர். உதிப்பிக் கும் என்பது உதிக்குமென நின்றது. இதனை அர்தர்ப்பா விதணிச் வினையென்பர்.

ஆய வாற்றினுன் மகப்பெறும் புண்ணிய மதனை
நீயி யற்றிலை முற்பவத் தளப்பரு நிதியாற்
றூய தானமற் றியாவையு மாற்றினை தொன்னு
ளேய வப்பய னுலுதித் தனையுல கிறையாய். (11)

அவ்வாருன தன்மை புண்ணியத்திற் கிருத்தலால் புதல்வர்ப் பேற்றுக்குரிய புண்ணியத்தை முற்பிறவிகளிலே தேவரீர் செய்தீரில்லை. முற்பிறவிகளிலே அளவில்லாத செல்வங்களைக் கொண்டு தூய்மைமான தானங்களைச் செய் தீர் அத்தானங்களாலுண்டான புண்ணியப்பயனுக இவ் வுலகிலே உலகாளு மரசனுகப் பிறந்தீர்.

தயங்கு நன்மணித் திரள்களுந் தமனியக் குவையு
முயர்ந்த தொல்குல மகளிரு மறுவகை யுறுப்பு
மியைந்த செல்வமு மெய்தினை மகப்பெற வின்னு
முயன்றி லாயற மினியஃ தியற்றுதன் முறையால். (12)

அதுவேயுமின்றி மாசற்று விளங்கும் நவ மணிக்கு வியல்களையும், பொற்குவியல்களையும் நற்குண நற்செயல்களாலுயர்ந்தவர்களும் எட்டடியுஞ் சுட்டடியுங் குற்றங் கூறப்படாத பழங்குடிகளிலே பிறந்தவர்களுமான பெண்களையும் (மனைவிகளையும்) படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனப்பட்ட ஆறங்கங்களையும் முன்னரே அமைந்து கிடக்கின்ற பிற செல்வங்களையும் அடைந்தீர் புதல்வரைப் பெறுவதற்குரிய புண்ணியங்களைச் செய்ய இன்னு முயற்சி செய்தீரில்லை. இனிஅப் புண்ணியச் செயல்களைச் செய்தல் தக்கதாகும்.

இங்கு "இருவேறுலகத்தியற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு" (வள்ளுவர்)

என்பது நினைவிற்கு வருகின்றது; ஒவ்வொரு பேற்றிற்கும் ஒவ்வொரு புண்ணியம் காரணமாகும் என்பதைக் குறிப்பித்தலா லென்க. ஒருவன் அழகினைப் பெறுதற்குப் புண்ணியம் வேறு. அறிவினைப் பெறுதற்குப் புண்ணியம் வேறு வேண்டுமென்பதாம். இவற்றை "நுண்மாணுழை புலமில்லானெழினலம், மண்மாண்புனை யாவையற்று" "உருவு கண்டெள்ளாமை வேண்டுமுருள் பெருந்தேர்க், கச்சாணியன்னாருடைத்து" (வள்ளுவர்) என்பன போன்ற பாக்களுங் குறிப்பிக்கின்றன என்க.

வேறு

எனவெடுத் துரைக்குந் தன்ம கீர்த்தியை யினிதி னோக்கி
யினிமகப் பெறுதற்கேய்ந்த நல்லற மிசைப்பா யென்னப்
பனிமதிக் கவிகை வேந்தன் பகர்தலும் பரிவான்மன்னன்
றனதடி வணங்கி மேலா மந்திரத் தலைவன் சொல்வான்.
(13)

என்றெடுத்துச் சொல்லுகின்ற தர்ம கீர்த்தி யென்னு மந்திரியை முக மலர்ச்சியுடன் பார்த்து, இனி நீ புதலவ

ரைப் பேறுதற்குரிய நல்ல புண்ணியச் செயலிது வாகு மென்று சொல்லுவாயென்று, குளிர்ச்சி பொருந்திய நிறைந்தகலைத்திங்களை யொத்தவேண்கொற்றக்குடையை யுடைய அரசன் சொல்லவும் அன்போடு அரசனது பாதத்தை வணங்கி மேலான சூழ்ச்சித் தலைவனாகிய அவ் வமைச்சன் சொல்லுவானாயினான்.

அரசன் குறிப்பறிந்து ஆவன தெரிந்து சொல்லுந் திறமுடையவனாதலால் "மேலா மந்திரத் தலைவன்" என் றனர் என்க.

பூந்திரை விரிக்குந் தெய்வப் பொன்னிநன் னாட்டிற் போத
மீந்திடும் பாரிசாத வனமுள ததனி லெய்தின்
மாந்தர்வா னவர்க ளாவார் மதிபுனை மகேச னோடு
மேந்தெழிற் றலமத் தானத் திணைபிறி தில்லை மன்னே.
(14)

பொலிவு தங்கிய அலைகளை பரக்கவுண்டாக்குகின்றதும் தெய்வத் தன்மை பொருந்தியதுமாகிய காவிரி நதி சூழப் பெற்ற நல்ல சோழவளநாட்டிலே அபரஞானம் பரஞானங் களை வழிபாடு செய்பவர்களுக்குக் கொடுக்கும்படியான பாரிசாதவன மென்கின்ற ஒரு திருத்தல மிருக்கின்றது. அந்தச் சிவதலத்தைப் பக்தியுடனடைந்தால் அடைந்த மனிதர்கள் தேவர்களாவார்கள். அங்கு எழுந்தருளி விளங்குகின்ற திங்களை யணிந்த சடாமுடியையுடைய சிவ லிங்கப் பெருமானுக்கும் எழுச்சிகள் எல்லாவற்றையு மேற்கொண்ட பாரிசாத வனமாகிய அத்தலத்திற்கும் நிக ராக வேறொரு சிவலிங்கமும் வேறு தலமும் இல்லை.

திரை=அலை. *இணை*=நிகர்; (சமம்) பொன்னுடன் கலந்துவருதலால் காவிரியாறு **பொன்னி** என வழங்கப் பெறுகின்றது. *பிறிது* என்பது ஒருமை மேனோக்கமின்றி வேறு என்பதை யுணர்த்து நோக்குடையதாக நின்ற தென்க. *தானத்துக்கும்* என வரல் வேண்டியது "உருபு மும்மையுந்" தொக வந்தது; விகாரத்தாலென்க.

அந்தநற் றலத்தி னீசென் ருனந்த நடன மாடு
மிந்துசே கரனுர்க் கேற்ற வபிடேக மினிதி னுற்றி
மந்திர விதியான் மிக்க நிவேதனம் புரிந்து மாறில்
சிந்தைநைந் துருகி யன்பாற் றிருந்தவே பூசை செய்து.
(*15*)

தேவரீர் அத்தகைய பாரிசாத வனமென்னுந் திருக்களராகிய சிவதலத்திற்குப் போய் ஆனந்தத் தாண்டவ மென்னுந் திருக்கூத்தைச் செய்தருளுகின்ற பாரிசாத வனேசுரராகிய திங்களைச் சூடிய சடா முடியை யுடைய சிவ பெருமானுக்குத் தக்க அபிடேகங்களை அன்பாகிய இனிமை பொருந்தச் செய்து மந்திர வடிவமான வேதாகம விதியின் படி மிகுந்த நிவேத்னங்களை நிவேதித்து நம்பிக்கை யினின்று மாறுபடாத அன்பினுலே மனங்கனிந்துருகப் பெற்றுக் குறைவின்றிப் பூசை செய்து,

வேதங்களில் வரும் ஒவ்வொரு தொடர்பும் மந்திரம் எனப்படுதலால் **மந்திர விதியால்** என்பதற்கு மந்திரவடிவ மான வேதாகமங்களின் விதிப்படி யெனவுரை யெழுதப் பட்டதென்க.

மந்திரலோபம் கிரியா லோபங்கள் வராம லென்பார் "**திருந்தவே**" என்றனர்.

அலகின்மா தவர்கள் போற்று மந்நக ரதனி லாய்ந்த
புலமிகு மறைவல் லோர்க்குப் புரிவொடுந் தான நல்கிற்
பலநனி யுளதா மந்தப் பலத்தினு லுனக்குப் பார்மேற்
றலைமைசான் றறிவிற் றூய தனையரு முளரா மன்னே.
(16)

அளவில்லாத பெருந் தவசிகள் வழிபடுகின்ற அந்தச் சிவதலமாகிய பாரிசாத வன நகரிலே, தங்கித் துருவி யாராய்கின்ற நூலறிவு மிகுந்த, வேதம் வல்ல வேதியர்கள் என்னும் பனவகுலத்தினருக்கு விருப்புடன் பொருள்களை

(த்தானமாக;க் கொடுத்தால் அந்த நற்செலியன் பயன் மிகப் பெரிதாகப் பெருகும். அந்தப் பண்ணியப் பயனாலே தேவரீருக்குப் பூவுலகத்திலே, குற்றமில்லாதபடி அறிவு நிறையப் பெறுதலால் உயர்வுடையவராக விளங்கத் தக்க புதல்வர்களுந் தோன்றுவார்கள்.

திருக்களர் அன்று மின்று மென்றும் பலப்பல மாதவர் களாகிய சாதுக்கள் போற்ற விளங்குந் தலமாதலால் "அலகில் மாதவர் போற்றுமங் நகர்" என நிகழ்காலப் பெயரெச்சவினையிட்டுக் கூறினரென்க. அலகு=அளவு. "தனையரும்" என்றதில் உம்மை உயர்வு சிறப்பும்மை யாகும்.

புதல்வரைப் பெறுவ தொன்றோ புரிசடை முடியிற்
பொன்னு
ரிதழியும் பிறையும் வேய்ந்த வெம்பிரான் வெளிப்பட்
டியார்க்கு
மதிசய மளிக்கு மேலாம் வரமுமாங் களிப்ப னீதென்
மதியினு லுணர்ந்து கூறு மாற்றமன் றஃதுங் கேட்டி.(17)

புதல்வர்களைப் பெறுதல் ஒன்றுமட்டுமா முருக்குண்ட சடை முடியிலே பொன்னை யொத்த மஞ்சள் நிறமுள்ள கொன்றை மலரையும் பிறைத்திங்களையும் அணிந்த எம்பெருமானாகிய சிவபெருமான் வெளிப்படையாகத் தோன்றி வந்து எல்லாருக்கும் ஆச்சரியத்தை யளிக்கும் படியான மேலான வரத்தையும் அங்கேயே கொடுத்தருளு வார். இவ்வாறுயான் கூறுவது என்புத்தியினாலே ஆராய்ந்து சொல்லுகின்ற கூற்றாகாது. வேறெப்படி யென்றால் அத னையுஞ் சொல்லுவேன் கேட்பீராக.

புனைமணி வயிரத் தோளாய் முன்னர்யான் புதல் வரின்றி
மனனுறுந் துயரால் வாடு மெல்லையின் மறைக ளாய்ந்த
நினைவருந் தவத்தின் மிக்கோ னிரையிதழ்க் கமலத்
தண்ண
லனையவன் சுமந்தென் றோது மரும்பெயர் முனிவன்
வந்தான். (18)

மணிக்கோவைகளாலலங்கரிக்கப் பெற்ற வலிமை பொருந்திய தோள்களையுடைய பெருமானே! முன்னர் யான் புதல்வரில்லாமையாலே நிலைத்த துயரினலே வாட்டங்கொண்டிருக்கும் போது வேதங்களையாராய்ந் துணர்ந்தவனும், எண்ணுதற் கருமையான தவத்திலுலே மேம்பட்டவனும், அடுக்காக அமைந்த இதழ்களையுடைய தாமரை மலரிலே எழுந்தருளி யிருக்கின்ற தலைவராகிய பிரமதேவரை ஒத்தவனும் ஆகிய **சுமந்து** என்னும் பெயரையுடைய காணுதற் கரிய முனிவன் ஒருவன் வந்தான்.

வயிரம் என்பதிங்கு வலியை யுணர நின்றது.

பாரத கண்டந் தன்னின் மகிழ்வொடும் பரமன் வைகுஞ்
சீரிய தலங்கள் பேசி லனந்தமாச் செப்பு வாரப்
பேரெழிற் றலங்கள் யாவுஞ் சரித்தவப் பெரியோன் வந்தெ
ஞரனுர் நோக்கி யென்னே வாகுலங் கோடி யென்ருன். (19)

பரத கண்டத்திலே சிவபெருமான் மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்கின்ற உயர்ந்த சிவதலங்கள் இவைகளென்று சொல்லத் தொடங்கினுல் பல தலங்கள் உண்டென்று சொல்லுவார்கள். அந்தப் பெரிய எழுச்சி படைத்த எல்லாத் தலங்களிலும் யாத்திரையாகச் சென்று தங்கிச் (சிவபெருமானைத்தரிசித்து) யாத்திரை வாசியாக நிகழ்கின்ற அந்த முனிவன் என்பால்வந்து என்னுடைய நிறைந்த துயரத்தைப் பார்த்து ஏன் துயரத்தையுடையவனுகக் காணப்படுகின்ருய் என்று கேட்டான்.

எழில் = எழுச்சி; அழகு.

என்றவ னுரைப்பக் கேட்டாங் கிப்பரி சியம்பி னேற்கு
மன்றலங் கமலப் புத்தே ணிகர்த்திடு மறைவ லாள
னன்றெனக் கியம்பி னனித் திறமெலா மதனைக் கேளாச்
சென்றனன் பாரி சாதத் தெய்வமா நகரி லுற்றேன். (20)

என்று அம்முனிவன் சொல்லக் கேட்டு, அப்போது புதல்வர்ப் பேறில்லாமையினுலே வாடுகின்றே னென்னு மித் தன்மையைச் சொன்னேன். சொல்லிய எனக்கு மணங்கமழ்கின்ற தாமரை மலரிலே எழுந்தருளி யிருக்கின்ற தேவனுகிய பிரமனை யொத்துத் தோன்றியவனும் வேதங்களிலே வல்லவனுமாகிய அம்முனிவன், விளக்கமாக, மேலே யான் கூறிய பாரிசாத வனப் பெருமைகள் எல்லாவற்றையும் இனிமையாக எனக்கு எடுத்துக் கூறினுன். அப்பெருமையைக் கேட்டுச் சென்று அப்பாரிசாத வனமாகிய தெய்வ நகரை யடைந்தேன்.

'இயம்பினேற்கு'த் தோன்றிய முனிவன் எனக்கியம்பினுன் என இயையும் இயம்பினேற்கு என்ற விடத்து இயம்பினேன் கண் என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளில் 'கு' உருபு மயங்கியதாகக் கொள்ளல் நன்று. சென்றனன் என்பது வினையெச்ச முற்ருகும்.

உற்றியான் சுமந்து மேனு ளுரைத்திடும் படியே யாற்றிப்
பெற்றனென் மகப்பே றென்னும் பெருவர மதனைப் பேணி
யிற்றைநா ளளவு நீகேட் டிலையென வியம்பி லேன்யான்
பற்றுறக் கேளா முன்னம் பகர்ந்திடி லுண்மை யாமோ. (21)

அடியேன், அடைந்து சுமந்து என்னும் அம்முனிவன் முன்னர்ச் சொல்லியபடியே பூசையுந் தானமுஞ் செய்து புதல்வர்ப் பேருகிய பெரிய வரத்தைப் பெற்றேன். விரும்பி அவ்விடயத்தைப் பற்றித் தேவரீர் இவ்வளவு நாள் வரையிலும் கேட்டீரில்லையென்று யானும் நமக்குச் சொல்லவில்லை, எதையும் விருப்பமுடன் கேட்பதற்கு முன்னர் ஒருவன் சொல்லுவானுனல் அது நும்பிக்கையைத் தருகின்ற மெய்யுரையாக மாட்டாது.

"*மயக்குறு மக்களையில்லோர், பயக்குறையில்லை தாம் வாழுநாளே*" (புறநானூறு) என்பவாகலின் புதல்வர்ப் பேற்றையளிக்கும் வரத்தைப் பெருவரம்" என்றனன்.

17

வேறு

மாதவ மியற்றல் பூசனை புரிதன் மாமறை மந்திரஞ்
செபித்த
றீதக றெய்வ நதியொடு தீர்த்த மாடுதல் சிறப்புறுந்
தான
மீதனல் லொழுக்க மாற்றிடலுணர்த லின்னன யாவையு
மியல்பான்
மேதக வுரைக்கு முண்மையா லன்றிப் பயன்றரா
வெனமறை விளம்பும். (22)

பெரிய தவங்களைச் செய்தலும், சிவபூசையைச் செய்தலும், சிறந்த வேதங்களிற் கூறிய மந்திரங்களைச் செபித்தலும், குற்ற மற்ற தெய்வ நதிகள் முதலிய தீர்த்தங்களிலே முழுகுதலும், சிறந்ததானங்களைச் செய்தலும், நல்ல ஒழுக்கந்தவருமல்' நடத்தலும், நல்ல நூல்களைப்படித்தலும் (பெரியோர்கள் சொல்லக் கேட்டும் நூல்களைப் பார்த்தும் நல்லன இவை தீயன இவையென) உணர்தலும் இவை போன்றவற்றை ஆசரித்தலுமாகிய இவைகளை (நம்பிக்கையினுலே) மேன்மையுடையதாகச் சொல்லப்படுகின்ற உண்மை வழியிலே செய்தால் அவை பயன்றருவனவாகு மன்றி வேறு வழியிலே செய்தால் பயன்றரமாட்டாதனவாகும்.

சிலையொடு கனக மிந்தன மிவற்றிற் றெய்வமு மிலைமறையனைத்து, மலகில்பல் லெழுத்தா லியன்றதே யன்றி யதிற்பய னிலையென வறையுங், கலர்தமக் கவர்கள் கருதிய படித்தாங் காண்குறும் பயனுரு ததனு, னலனுறு மொருமை காரண முலகி னல்லறங் கட்கெலா நவிலில். (23)

கல்லும், பொன்னும், கட்டையுமாகிய இவற்றில் தெய்வங்களுமில்லை வேதங்களெல்லாம் அளவில்லாத பல எழுத்துக்களாலே ஆகிய வெறும் வாசகங்களாகும். ஆதலால் அவற்ருலே யாதொரு பயனுமில்லை என்று உரக்கச் சொல்கின்ற கீழ் மக்களுக்கு அவர்கள் கருதிய

படியே அவைகள் பயனற்றனவாகும். அறிந்தடையக் கூடிய பயன்கள் வந்து சேரமாட்டா. ஆதலால் சொல்லு மிடத்து நல்ல அறங்களைச் செய்யும் போதெல்லாம் நன்மை பொருந்திய நம்பிக்கையே அவ்வறங்கள் பயன்களைத் தருவதற்குச் சிறந்த காரணமாகும்.

நம்பிக்கை யானது இது பயன்றரும் என்னுமொரே எண்ணமாக இருத்தலால் 'ஒருமை' எனப்பட்டது.

அனந்தகா லமுநன் மந்திர மொருமை யகன்றவ
ராயினுமறையின், மனங்கவர் பயனுங் கவர்பெறூர்
சின்னாண் மருவரு முண்மையான் மகிழ்ந்து, நினைந்தியம்
பினரா லளப்பரும் பயன்க ணிகழ்ந்திடு மாதலா னிருப,
நனந்தலை யுலகிற் றெய்வமு மறையு முண்மையாற்
பயனெலா நல்கும். (24)

நம்பிக்கை யற்றமையால் உண்மையாக இல்லாமல் அளவில்லாதகாலம் இடைவிடாமல் மந்திரங்களைச் செபித்தாலும் மனதிலே கொண்ட பயன்களை யெண்ணியபடி பெற மாட்டார்கள். பெறுதற்கருமையான நம்பிக்கையினாலே உண்மையாக மகிழ்ச்சியுடன் பயன்றருமென் றெண்ணிச் சில நாட் செபித்தாலும் அச்செபத்தால் அளவில்லாத பயன்கள் தோன்றி யின்பந்தரும். ஆதலால் அரசரேறே! இவ்வுலக மத்தியிலே தெய்வங்களும் மந்திரங்களும் நம்பிக்கையினாலே உண்மையாகக் கருதி வழிபாடு முதலியவற்றைச் செய்தால் எண்ணிய பயன்களை அவைகள் தரும்.

'ஆயினும்' என்பதிலும் மையை '*அறையினும்*' எனப் பிரித்துக்கூட்டி யுரை யுரைக்கப்பட்டது. நனந்தலை = நடு. '*உலகதனந்தலை*' என மாற்றியுரை யுரைக்கப்பட்டது. இப்பாவில் ''*நினைந்தியம்பினராலளப்பரும்*'' ''*நினைந்தியம் பினரேல் அளப்பரும்*'' எனத்திருத்தினலமாகும். இன்றேல் கருதிய பொருடர இயலாது போகும் என்க.

இன்னண முரைத்த பொருளெலா மொருமை யாய் மனத் தெண்ணிநீ யியற்றி, லன்னநல் லறமும் புதல் வரும் பயனு மடைந்திடு மரசவென் றமைச்சன், றன்னமர் காத லொடும்புகன் றிறைஞ்சத் தகுவன விவை யெனத் தரளப், பன்மணி மவுலிப் பார்த்திபன் றரும கீர்த்தியை மகிழ்ந்தனன் பரிவால். (25)

அரசரேறே இவ்வாறு உரைத்த பொருளெல்லாவற்றையு நம்பிக்கையினுலே உண்மையாக நீவிர் மனதிலே பயனறு மென்றெண்ணிச் செய்தால், அச்செயல்களாலேற்படுகின்ற நல்ல பயன்களாகிய புண்ணியங்களும் அவற்ருலே புதல் வர்ப்பேறுகளும் மற்றைய வரமாகிய பயன்களும் கிடைக்கு மென்று மந்திரியானவன் தன்பாலமைந்த அரசவிசுவாசத் திருலே சொல்லி வணங்கவும், பல முத்துமணிகளாற் செய்யப்பெற்ற முடியைச் சூடியுள்ள மகாரத அரசன், தரும கீர்த்தியாகிய அம்மந்திரியைப் பார்த்து நீ சொல்லிய எல்லாமுந் தக்கவைகளே என்று அன்பினேடு மகிழ்ந்து ஒப்புக்கொண்டான்.

இப்பாவினிறுதி யடிகளில் உள்ள சொற்களை முன்னும் பின்னுமாகக் கூட்டியும் இசையெச்சமாக சில சொற்களைச் சேர்த்து முரையுரைக்கப்பட்டது.

சொல்லா லுணர்த்தப்படுவன எல்லாம் சொற்பொரு ளெனப்படுதலால் **"உரைத்த பொருளெலாம்"** என்றனன் **'பொருளெலாம்'** என்றது பூசை முதலிய செயல்களையும் பயன்களையும் செய்யுமுறைகளையுமடக்கி நிற்கின்ற தென்க. மகாரதன் என்பவன் பாண்டி நாடனுதலால் **"தரளப்பன் மணிமவுலிப் பார்த்திபன்"** என அவனைக் கூறல் ஏற்புடைய தாகும். தரளமணி=முத்துமணி. மவுலி=முடி. பார்த்திபன் =அரசன்.

மகிழ்ந்துநல் லமைச்ச னெடுந்தரு வனந்தான் மருவுதற் கியைந்துமா நிதியு, மிகுந்தநன் பொருளும் பலபல கொணர்ந்து நால்வகைச் சேனையு மேவப், புகுந் தனன் விரைவிற் ருூம்பிர நதியிற் போந்துபொங் கலைப்

புனன் மூழ்கி, யகங்கனிந் தளவி ருனமீந்தப்பாற் போயின னரசரின் மிக்கான். (26)

மகிழ்ந்தொப்பிய அவ்வரசரேருகிய மகாரதனுனவன் அத்தரும கீர்த்தியாகிய அமைச்சனேடும் பாரிசாதவனத் திற்குச் செல்ல ஒருப்பட்டு பெரிய பணப்பொக்கிஷங்களை யும் பிற நல்ல பொருள்களையும் மிக எடுத்து கொண்டு நால்வகையான படைகளுடன் விரைவாக தாமிரபரணி யென்னும் யாற்றை யடைந்து அந்த யாற்றிலே ஓங்கி யெழுகின்ற அலைகளோடு கூடிய நீரிலே முழுகி மனமிளகப் பெற்று அளவில்லாத தானங்களைச் செய்துவிட்டு அந்த யாற்றைக் கடந்து அதன் புறம்பாகப் போனுன்.

தாமிரபரணியை யடைந்ததில் முழுகி அதற்கப்புறம் போனுன் எனக்கூறுவதாலும் பின் மதுரையை யடைந்தான் எனக் கூறுவதாலும் தாமிரபரணியாற்றிற்குத் தெற்கே யமைந்த நகரிலிருந்து புறப்பட்டானென்பது புலப்படும்.

உணவு முதலியவற்றிற்குதவலாலும் நல்வழியிலே வந்தனவாதலாலும் "*நன்பொருள்*" என்றனர்.

சென்றவன் கருப்பா ரணியமுங்கடந்து சிறந்த தீத்திகிரியிற்சிவணி, யொன்றிய நிதிகண் மறையவர்க் குதவி யோதன மறுசுவை யோடு, மன்றுவே தியர்கள் பலர்தமக் கினிதி னளித்தறம் பலபல வாற்றிப். பொன் றிக ழெயில்சூழ் மதுரைமா நகரிற் போந்தனன் புரவலன் பரிவால். (27)

தாமிரபரணியைக் கடந்து அதற்கப்பாற் சென்ற அரசன் கரும்பாரணியத்தையடைந்து அதையுங்கடந்து போய்ச் சிறப்பாக இருக்கின்ற தீத்திகிரி யென்னும் தலத்தையடைந்து அங்கே தன்பாலுள்ள பொன்களை வேதியர்களுக்குக் கொடுத்து அன்னத்தை ஆறுசுவை யமைந்த கறிவகைகள் முதலியவற்றுடன் அனறைக்கு அவ்வேதியர் பலருண்டு மகிழும்படி யுபசரித்து உவந் தளித்து மிகப் பலவாகிய தருமகாரியங்களையும் செய்து

விட்டுப் பொன்னுலாகிய மதில்களையுடைய மதுரையாகிய பெரிய நகரத்தை அன்புடன் போய்ச் சேர்ந்தான்.

"பொன்றிகழ்" என்பதற்குத் 'திருமகளுறைந்து' விளங்குகின்ற, எனவுரை யுரைப்பினும் பொருந்தும்.

கரும்பாரணியம், தீத்திகிரி என்பன சிவதலங்களாகும்.

கூடலின் மருவிக் கொடுவினை யகற்றுங் குலவுபொற்
றுமரைத்தடநீ
ராடியன் றரனூர் மண்சுமந் தணைத்த வருங்கரை யோங்கிய
நதியிற்
பீடுறப் படிந்து சுந்தர நடன மியற்றிய பிரான்பதம்
வணங்கி
யீடினற் றுன மளவற வுதவிக் கந்தமால் வரையிடை
யெழுந்தான். (28)

மதுரையை யடைந்து தன்பால் வந்து முழுகுகின்றவர்களுக்கு அவர்களின் கொடுமையான வினைகளைப் போக்கி விளங்குகின்ற பொற்றுமரைக்குள நீரிலே முழுகிப் பின்னர், முன்காலத்தில் சிவபெருமான் (மாணிக்கவாசகர் துன்பந் தீரப் பிட்டு வாணிச்சியம்மையா ராளாய்) மண்ணைச் சுமந்து கொண்டு அணையாகப் போட்ட உயர்ந்த கரையையுடைய வைகை நதியிலே பெருமை பொருந்தும்படி முழுகிச் சுந்தரத் தாண்டவத்தைச் செய்தருளுகின்ற வெள்ளியம்பலவாணராகிய சொக்கலிங்கப் பெருமானை வணங்கி வழிபட்டு நிகரில்லாத தானங்களை அளவில்லாமற் செய்து திருப்பரங்குன்றத்தை அடைவதற் கெண்ணி யெழுந்தான்.

கந்தன்மால்வரை என்பது **கந்தமால்வரை** எனப் புணர்ச்சியிலாயது என்க, அது திருப்பரங்குன்றமேயாகும். மால்வரை = பெரியமலை. அது பெருங்குன்றம் என்றபடியாம்.

கந்தமால் வரையிற் போந்துபின் யிடப கிரியினிற் காவல
னெய்தி
யந்தர கங்கை யெனும்பெய ருடைய தீர்த்தத்தில்
விதிமுறை யாடி

முந்துறு தான மறையவர்க் குதவி முதன்மையாந்திரி
சிரேச்சுரத்தில்
வந்திப வனமுற்ருமிரா ரணிய மாநகர் கடந்தனன்
மாதோ. (29)

திருப்பரங்குன்றத்தையடைந்து பின் இடபமலை யென்னு மழகர்மலைக்கு அவ்வரசன் போய் (மலையினுள்ளிருந்துவருதலால்) அந்தரகங்கை (சிலம்பாறு) என்று சொல்லப்படுகின்ற தீர்த்தத்திலே விதிப்படி முழுகி, மேம்பட்ட தானங்களை வேதியர்களுக்குச் செய்து பின்னர் தலைசிறந்த திராசிராப்பள்ளி யென்னும் திருத்தலத்தை யடைந்து அங்கிருந்து திருவானைக்கா வென்னும் தலத்திற்குப் போய் அங்கிருந்து பின்னர் ஆமிராரணியம் என்னும் பெரிய நகரை யடைந்து அதனையுங் கடந்தனன்.

அந்தர் கங்கா என்பது அந்தரகங்கை எனத்திரிந்து வடமொழியாயிற்று 'அந்தர்' என்பது **உள்** என்னும் பொருளதாகும். இதனைச் சிலம்பினுள்ளிருந்து வருதலால் **சிலம்பாறு** என வழங்குவர் தமிழர். அதனையே ஆரியர் அந்தர்கங்கா எனவழங்குவர். இந்நுட்பமறியாதார் சிலம்பு என்பதை மலையெனக் கொள்ளாது **நூபுரம்** எனக்கொண்டு **நூபுரகங்கா** என ஆரியச் சொல்லாக்கித் தமிழில் நூபுர கங்கை எனவடமொழியாக வந்து வழங்குமாறு திருத்தியிருக்கின்றனர். திரிசுரேசுரம்=திரிசிராப்பள்ளி. இபவனம் =திருவானைக்கா. இபம்=யானை, ஆமிராரணியம்=மாங்காடு ஆமிரம்=மாமரம்; ஆமரம் என்பது ஆமிரம் எனத்திரிந்த வடமொழி. அழகர் மலையில் சிலம்பாறுள்ளது.

கடந்துசெல் வடிவேற் காவலன் பீமவனத்தொடு
கனவடாரணிய, மடர்ந்திடும் பலாச வனத்தொடு
முயர்ந்த வக்கினீச் சுரமருந் தவர்கண், மிடைந்திடுஞ்
சந்த்ர ரேகைவான் மகிழுஞ் சிரக்கண்டேச் சுரமலர்
விரியுந், தடம்பயி லன்னேச் சுரமுயர் வசிட்டேச் சுரமெ
னும் பதியெலாந் தணந்தான். (30)

அதனைத் தாண்டிச் செல்கின்ற கூர்மையான வேலாயுதத்தையுடைய அவ்வரசன் **பீமவனம், வடவாரணியம்,** நெருங்கி விளங்கும் **புரசவனம்** உயர்வாகிய **அக்கினீச்சுரம்** அரிய தவசிகள் நெருங்கி வாழுகின்ற சந்திரரேகை தேவர்கள் வந்து வேண்டுவன பெற்று மகிழும்படியான **சிரகண்டேச்சுரம்,** மலர்கள் விரிந்து விளங்கும்படியான பொய்கைகள் சூழ்ந்த **அன்னேச்சுரம்,** உயர்ந்த **வசிட்டேச்சுரம்** என்கின்ற தலங்களெல்லாவற்றிற்கும் போய் (மேலே வடக்கே செல்லாமல்) மீண்டான்.

கனவடவாரணியம் = திருவாலங்காடு, திருவானைக்காவிலிருந்து வடபக்கமுள்ள தலங்களுக்குப் போய் மேலும் வடக்கே செல்லாமல் மீண்டான் என்பது புலப்படுகிறன்து; அதன்மேல் வடபாகத்திற் சென்ருன் என்பதற்கு வடபாகத் தலங்களைக் குறிப்பிடாமையாலென்க.

தணந்துபி னரிவ ராகவாக் கியமுந் தண்பயில் காசிகா
வனமு
மணங்கமழ் வில்வ வனமுயர் வேத்ர வனத்தொடு
விகற்பகா ரதமு
மிணங்கிய நயனப் பிரதமும் புகழுந் திருவிரா மீச்சர
மிவற்ரே
டணங்கறும் பிரம ரேச்சுர மயூர நாதமா நகருமுற்
றகன்ருன் (31)

அத்தலங்களை விட்டு மீண்டு பின்னர் **அரிவராக வாக்கியம்,** குளிர்ச்சி பொருந்திய **காசிகாவனம்,** மணக்கின்ற **வில்வவனம்,** உயர்வான **வேத்திரவனம், விகற்பகாரதம்,** வளங்கள் இயல்பாகப் பொருந்திய **நயனப் பிரதம்,** எல்லாருமென்றும் புகழும்படியான **திருவிராமீச்சுரம்** என்பவற்றுடன் வருந்துதலற்ற **பிரமரேச்சுரம், மயூரநாதம்** என்னும் பெரிய நகரும் ஆகியவற்றையடைந்து நீங்கினன்.

நயனப் பிரதம் = திருவீழிமிழலை, பிரமரேச்சுரம் = திருவண்டுதுறை, *திருவிராமீச்சுரம்* என்பது அச்சோழ நாட்டிலுள்ள ஒரு சிவதலமாகும்.

அப்பதி யனைத்துங் கடந்துசெல் பொழுது மந்நகர்
தோறுமவ் வரசன், செப்பிய செல்வ மியைந்தநற்
குணத்தாற் சிவனையு முமையையுந் திறத்தா, லொப்
பில்பூ சனைசெய் தன்றியாங் ககலா னன்னவ னவை
யெலா மொருவி, விப்பிரர் குலவு முனிநதிக் கரையின்
மேவினன் பூசனை விழைவால். (32)

மேலே சொல்லிய தலங்களெல்லாவற்றையுந் தரிசித்துப் போகும்போது அந்தத்தலங்க ளெல்லாவற்றிலும் அம்மகாரத அரசனானவன் முன் கூறப்பட்ட செல்வத்தோடு இயல்பாக அமைந்த நற்குணங்களினாலேயும் சிவபெருமானையும் உமையம்மையாரையும் முறைப்படி இணையற்ற பூசை செய்யாமல் நீங்கமாட்டான். (பூசை செய்துவிட்டே நீங்குவான்.) அத்தகைய அத்தலங்களிலுள்ள உமையொரு பாகரைப் பூசை செய்து அவ்வெல்லாத்தலங்களையும் விட்டு நீங்கி மறையவர்கள் விளங்குகின்ற அகத்திய நதிக்கரையிலுள்ள தலங்களிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பூசிக்க வேண்டும் என்னும் விருப்புடனே அந்நதியின் கரையை யடைந்தான்.

முனிநதிக் கரையிலெய்தியந் நதியின் முறைமை
யான் மூழ்கியாங் கியைந்த, பனிமதிச் சடையோன்
மகிழுயிராப தேச்சுர நகரினைப் பரவித், தனிமுதற்
பரனோ டுமையையும் விதியாற் றக்கபூ சனைபுரிந் தரசன்,
மனமுறத் தொழுது பாரிசா தவன மாநகர் மருவினன்
வணங்கி. (33)

அந்த அகத்திய நதிக்கரையிலே சேர்ந்து அந்நதியிலே யிறங்கி விதிப்படி முழுகி அங்கே பொருந்தி விளங்குகின்ற, குளிர்ச்சி பொருந்திய சந்திரனையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமான் திருவுள்ள மகிழ்ச்சியோடு எழுந்தருளியிருக்கின்ற கோட்டூர் என்னுந் திருத்தலத்தைப் புகழ்ந்து அங்கு அவ்வொப்பற்ற முதல்வராகிய அச்சிவபெருமானை யுமையம்மையாருடன் விதிப்படி தக்க

மேற்கொண்டு விருப்பமுடன் வலம் வரவும், மகிழ்ச்சி யினுலே நிறைந்த முனிவர்களின் கூட்டமனைத்தும் நெருக்க மாக எல்லாத் திசைகளிலும் நின்று வணங்கவும்,

பாதல முழுவதும் பொன்னடித் துணையா வம்பர மருங்குலாப் பரந்த, மாதிர மனைத்துங் கரங்களா வயங்கத் தாரகை மாலிகை வனைந்து, மீதுயர்ந் திலங்கும் பிறைகுலா மவுலி யண்டத்தி னப்புறம் விளங்க, வாத வன் கனற்று மெரிமதி யெனுமூன் றருள்விழி சுரந்தருள் விளைப்ப. (26)

பாதாள உலக முழுதும் பொன் போன்ற அருமை யான இருதிருவடிகளாகவே விளங்கவும் ஆகாயத்தின் பக் கங்களின் விளங்கி விரிந்த திசைகள் எல்லாவற்றிலும் கைகளாகவே விளங்கவும் நக்ஷத்திரங்கள் எல்லாவற்றை யுஞ் சிறு மாலையாக அணிந்து, மேலேயுயர்ந்து விளங்கும் சந்திரனைச் சூடி விளங்குகின்ற முடியானது, அண்டத்திற்கு வெளிப்புறம் போய் விளங்கவும் சூரியன், சுடுகின்ற அக்கினி, சந்திரன் என்னும் மூன்ருகிய அருள் விழிகளும் அருளைப் பெருக்கிப் பொழியவும்,

மாலிகை=சிறுமாலை. 'விளைப்ப' என்பது பொழி தலின் மேனின்றது.

மருவிரி முளரித் தாளிலொன் றூன்றி யொருபதந் தூக்கிவான் முகட்டிற், றிரிதரு மிரவி யாயிர முதித்தாங் கெனவுமிழ் சேயொளி பரப்பத், தருவனத் திலகு மாமணிப் பொதுவிற் சக்கரச் சுழலெனத் தயங்கப், பிரம தாண் டவஞ்செய் தருளினுன் றவளப் பிறைகுலா மவுலி யெம் பெருமான். (27)

மணம் விரிகின்ற தாமரை மலர் போன்ற இரு திரு வடிகளில் ஒரு திருவடியை முயலகன் மேலே மிதித்து ஒரு திருவடியை வானத்தின் உச்சியிலே திரிகின்ற சூரியன் ஆயிரமாகத் தோன்றினுற்போல வெளி விடுகின்ற செந்நிற வொளியை விரிக்கும்படி மேலே தூக்கிப் பாரிசாத வனத் திலே விளங்குகின்ற பெரிய சிறந்த மணிகளாலமைக்கப் பெற்ற பேரம்பலத்திலே சக்கரம் சுழலுவதுபோல விளங்

கப் பிரமதாண்டவம் என்னும் நடனத்தை, வெண்மையான பிறைச் சந்திரனை யணிந்த முடியையுடைய எங்கள் தலைவராகிய சிவபெருமான் செய்தருளினர்.

பூவரும் பிரம னுயிர நயனப் புரந்தரன் புணரியை
யுழக்கித், தேவர்கட் கமுத முதவிய திகிரிச் செங்கண்மா
யவனெனுந் திறத்தோ. ரேவரு முணர வரியவா னந்த
நடம்புரி வேலையி னெவரு, மோவியப் படிவ மொத்தனர்
கரண காரிய மனைத்தையு மொழிந்தார். (28)

தாமரை மலரிலே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவரும் ஆயிரம் விழிகளையுடைய இந்திரனும் கடலைக் கலக்கித் தேவர்களுக்கு அமிழ்தத்தை அளித்த சக்கராயுதத்தையும் செந்நிறமான விழிகளையும் கரிய திருமேனியையுமுடைய திருமாலும் ஆகிய இவர்களும் இவர்களை யொத்த தன்மையுடைய எல்லாரும், தெரிந்து இன்புறும்படி, செய்தற் கருமையான ஆனந்தத்தாண்டவத்தை செய்யும் பொழுது அகக்கரண புறக்கரணங்களாற் செய்யப்படும் செயல்களற்று எல்லாரும் சித்திரப்பதுமைபோல அசைவற்றுப் போயினர்.

வேறு.

வெவ்வரா வுலவிய வேணி யான்புரிந்
தெவ்வுயிர் முழுவதும் மியக்கு மிந்நட
மவ்வியந் தவிர்துரு வாச னன்பினுற்
செவ்விய மனமுறத் தெரிசித் தானரோ. (29)

கொடிய பாம்புகள் உலவுகின்ற சடைமுடியையுடைய சிவபெருமான் செய்து எவ்வகைப்பட்ட உயிர்களாயினும் அவை யெல்லாவற்றையும் இயங்கும்படி செய்கின்ற இந்த நடனத்தைக் குற்றமற்ற தூர்வாசர் அன்பினேடு நேர்மையான மனம் பொருந்தும்படி தெரிசித்தார்.

அரோ—அசை.

இறைவன் செய்யும் ஐந்தொழிற்குஞ் செயப்படுபொருளாகச் சீவர்கள் இருத்தலால் "எவ்வுயிர் முழுவது மியக்குமிந்நடம்" என்றனர்.

மற்ளெரு பாதி யோடுபூசனிக்காய் பாகிலை வளத் தினுக் கியைந்த, நற்பொரு ளமைத்து மறையவர் தமக்கு நல்கிநான் பரனருண் மிகவும், பெற்றிட வேண்டு மென முறை பரவிப் பிஞ்ஞகன் றனக்கபிடேக, முற்றவா றயர்ந்து நிவேதனம் புரிந்து மறையவர்க் கோதன முதவி. (38)

மற்ளெரு பாதியைப் பூசனிக்காயும் வெத்திலையும் பாக்கும் செல்வத்திற்குத் தக்கபடி நல்ல பொருளுமாகிய வைகளையும் அதனேடு சேர்த்து வேதியர்களுக்குக் கொடுத்து அடியேன் சிவபெருமானுடைய திருவருளை மிகவும் பெறல் வேண்டும் என்று விதிப்படி துதித்துப் பின்னும் அச்சிவபெருமானுக்கு அபிடேகத்தை ஆகமங் களிற் கூறியபடி செய்து நிவேதனஞ் செய்து அப் பிராமணர்களுக்கும் அன்னத்தை யுண்ண வளித்து.

வேறு

விடமுமிழ் தாரை வெள்வேல் வேந்தநீ யின்ன வாற்ருன்
முடிவுற விரத மாற்றின் முக்கண்மா முதல்வற் காளாய்ப்
படிபுகழ் குணமுந் தூய வொழுக்கமு மருவிப் பாங்காம்
வடிவுறு சிறுவர் தம்மை யெம்பிரான் மகிழ்ந்து நல்கும். (39)

விடத்தைக் கக்குகின்ற (பொழிகின்ற) கூர்மையான அழுக்கற்ற வேலாயுதத்தையுடைய அரசனே நீ யான் சொல்லியபடி விரத்தை முடிவுபோகச் செய்துவருவாயேயா ஞல் மூன்று திருவிழிகளையுடைய சிவபெருமானுக்கடியவனுக ஆவாய். அவ்வாறு ஆதலால் உனக்கு உலகம் புகழத்தக்க நற்குணங்களும் மாசற்ற குலவொழுக்கங்களும் வாய்க்கப் பெற்ற நல்ல அழகு பொருந்திய குழந்தைகளாகிய புதல் வர்களை எம்பெருமாணுகிய சிவபெருமான் திருவுள மகிழ்ந் தளிப்பார்.

தானமுந் தவமு நோன்புஞ் சாற்றுமந் திரமு மீசற்
கானபூ சனையு மிந்த நற்றலத் தாற்றி ஞரேல்

மேன்மையாம் பதங்க ளெல்லாம் விரைவினி லவர்க்கு
மேவும்
நானுவல் விரத மின்னே நயந்துநீ புரிதி யென்றான். (40)

அன்னதான முதலிய தானங்களும் கிருச்சிரசாந்தராயண முதலிய தவங்களும் பிறவிரதங்களும் வேதாகமங்கள் உரைக்கின்ற மந்திர செபங்களும் சிவபெருமானுக்குரிய பூசைகளுமாகிய இவற்றை இந்த நல்ல பாரிசாதவனதலத்திலே செய்வார்களானால் உயர்வாகக் கருதப்படுகின்ற பதவிகளெல்லாமும் அவர்கட்குக் கிடைக்கும். ஆனதால் யான் சொல்லிய விரதத்தை இன்றைக்கே நீ விரும்பிச் செய்வாயாக என்று கூறினர்.

நுவலுதல்=சொல்லுதல்

மிருகண்ட முனிவன் மைந்த னின்னன விளம்பக்
கேட்டுப்
புரவலன் மனைவி யோடு முலோக்கியப் புனலின் மூழ்கி
யுரியபா லடிசி லட்டாங் கிலக்கம்பூ சனிக்கா யோடு
பரவுதக் கணைய டைகாய் பலபல மறையோர்க்
கீந்தான். (41)

மிருகண்டு முனிவர் புதல்வராகிய மார்க்கண்டமுனிவர் மேலே சொல்லியபடி சொல்லக்கேட்டு, மகாரதன் என்னு மவ்வரசன் தன் மனைவியுடன் லோக்கியம் என்னும் பெயருடைய தீர்த்தத்தில் நீராடி நிவேதனத்திற்குரிய பாற்சோற்றைச் சமைத்து (பாரிசாதவனேசுரருக்கு நிவேதித்து) அங்கே மீதமான மிக்க அப்பாற்சோற்றை அளவில்லாத பூசனிக்காய்களுடனும் உயர்வான தானமாகச் சொல்லப்படுகின்ற தக்ஷிணைப் பொருள்களையும் வெத்திலை பாக்குகளையும் சேர்த்து மிகுதியாக அளவில்லாத வேதியர்களுக்குக் கொடுத்தான்.

இலக்கம்=இலக்ஷம், இது அளவின்மையைக் குறிப்பதாகும்,

மீண்டுமவ் வரசன் றன்ம கீர்த்தியோ டினிதின் வெவ்வே
ருண்டுப்பஃ ருன நல்கி யானந்த நடேசற் கன்பின்
வேண் றும் பூசை செய்து மறைவர் விளம்பு மாசி
பூண்டுவே லிறைவன் சின்னுட் டருவனத் துறையும்
போழ்தில். (42)

மறுபடியும் வேலேந்திய அம்மகாரத அரசனானவன் தருமகீர்த்தி யென்னும் அமைச்சனுடன் அத்தலத்திலே பல தானங்களைத் தனித்தனியாகச் செய்தும் ஆனந்த நடேசப் பெருமானுக்கு அன்போடு பூசைகள் செய்தும் வேதியர்கள் வாழ்த்துகின்ற வாழ்த்துரைகளை மேற்கொண்டும் கொஞ்ச நாள் அந்தப் பாரிசாதவன தலத்திலேயே தங்கினான்.

மல்கிரு டிரக்கும் வெய்யோ னெனக்கதிர் வயங்க
வெல்லாப்
பல்லிலக் கணமு மேய்ந்த பாலரோ ரிருவர் தம்மை
வெல்படை யிறைவன் றேவி பயந்தனண்
மகிழ்ந்து வேந்த
னெல்லையிற் றரங்க நன்னீ ராடின னுவகை
பூண்டான். (43)

நிறைந்த இருளைப் போக்கும்படியான ஞாயிற்றைப் போலத் தேசசு விளங்கவும் எல்லா அரச இலக்கணங்களும் அமையவும் பெற்ற இரண்டு குழந்தைகளை அவ்வரசன் மனைவி மகிழ்ச்சியுடன் பெற்றெடுத்தாள். அதை யறிந்த அரசன் விரைவிலே அலைகளோடு கூடிய நீரிலே முழுகி மகிழ்ச்சி மிகப் பெற்று விளங்கினான்.

தண்புனல் படிந்து வேந்தன் சதுர்மறை யவர்க்குத் தான
மெண்பயி னியுத மான நிதிகொடுத் தீச னார்க்கும்
பண்பின லபிடே கங்க ணிவேதனம் பரிவி னாற்றிக்
கண்கவர் மணிகள் வேய்ந்த கலன்பல வுதவிப்
பின்னும். (44)

அவ்வாறு குளிர்ந்த நீரிலே மூழ்கி மகிழ்ச்சி கொண்ட அவ்வரசன் நான்கு வேதங்களையுமோதுகின்ற வேதியர்களுக்குத் தானமாகப் பத்துலக்ஷம் என்னுமளவைக் கொண்ட பொன்னைக் கொடுத்து (தேனொழுகுகின்ற பூக்களையுடைய) பாரிசாதவனேசுரர்க்கும் நல்ல முறையோடு அபிடேகங்களும் நிவேதனங்களும் செய்து, கண்களைக் கவரத்தக்க அழகு மொளியுங் கொண்ட மணிகளைப் பதித்துச் செய்யப் பெற்ற அணிகலன்கள் பலவற்றையும் அணிவிக்கச் செய்து பின்னரும்

நியுதம் = பத்துலட்சம்.

காமர்வெண் டரள மாலைக் கவிகையோ ரிரண்டும் வீசுஞ்
சாமரை யிரண்டு நல்கித் தமனிய நியுத மீந்து
தேமலி பாரி சாத வனத்தரன் றிருத்தா ளுன்னித்
தாமவேற் றடக்கை வேந்தன் றலத்தினை வியப்ப
தானான். (45)

அழகிய மாலைசூட்டப் பெற்ற வேலாயுதத்தையுடைய அவ்வசரன் அழகிய வெண்மையான முத்து மாலைகள் தொங்குகின்ற குடைகளிரண்டையும் வீசுகின்ற வெண்சாமரமிரண்டையும் கொடுத்துப் பத்துலட்சம் பொன்னையும் கொடுத்து அந்தத் தேன் மிகுந்தொழுகுகின்ற பூக்களையுடைய பாரிசாதவனத்திலே எழுந்தருளி யிருக்கின்ற இறைவருடைய திருவடிகளைச் சிந்தித்து அந்தப் பாரிசாத வனதலத்தைப் பற்றி இறும்பூது கொள்ளலானான்.

தமனியம் = பொன்

'தவத்தினைவியப்பதானான்' எனபது பாடமாயினால், அந்தமார்க்கண்டமுனிவர் சொல்லிய விரதத்தைப்பற்றி இறும்பூது கொள்ளாலாயினான் எனவுரைக்கலாம்.

வயங்கெழிற் புதல்வர்க் கேய்ந்த மங்கல வினைக ளாற்றி
வியந்திடு மரசன் பின்னர் மேவுமோர் பதினு ருநாட்

டயங்கமுன் பிறந்த சேய்க்குச் சிவதத்த னெனும்பேர் சாத்தி
யியைந்திடு தேவ தத்த னெனும்பெய ரிளையோற் கீந்தான். (46)

அவ்வாறு தலத்தை வியந்து நிற்குமவ்வரசன் விளங்குகின்ற அழகு மெழுச்சியும் கொண்ட புதல்வர்களுக்குத் தக்கபடி மங்கலகரமான செயல்களெல்லாவற்றையும் செய்து பின்னர் பதினும் நாள் வந்து பொருந்துகின்ற வேளையிலே, விளக்கமுடன் முன்னர்ப் பிறந்த பாலகனுக்குச் **சிவதத்தன்** என்கின்ற பெயரை வைத்து இளையபாலகனுக்குப் பொருத்தமான **தேவதத்தன்** என்கின்ற பெயரை வைத்தான்.

இருபாலகர்களும் சிவனுலளிக்கப்பட்டமையால் "**சிவதத்தன்**" என்றே இருவர்க்கும் பெயர் வைத்தல் வேண்டும். அப்படியானுல், வேற்றுமை விளங்காது போய்விடும். ஆதலால், வேறுபெயராகவும் சிவனளித்தான் என்பது தோன்றவும் அமைந்த பெயராக "**தேவதத்தன்**" என்பது இருத்தலால் "**இயைந்திடுந்தேவதத்தன் எனும் பெயர்**" என்றனர். (பஞ்சகிருத்திய விளையாட்டையவனே செய்கின்றவனாக இருத்தலால்.) "**தேவன்**" என்பது அவனுக்கே சிறப்பாகச் செல்லும் என்க.

வேதியர் புதிய நாம வினைமுதற் கரும மெல்லாந்
தீதற முடிப்பப் பாலர் திருமுக நோக்கி மன்னன்
மாதவந் தருமஞ் செல்வ மாநிதி முழுதும் பெற்றேன்
யாதெனக் கரிய தென்னு மகிழ்ந்தன னினன்பங் கூர்ந்தான். (47)

வேதியர்கள், புதிய பெயர் வைத்தல் முதலிய கருமங்களெல்லாவற்றையும் குற்றமில்லாமல் குறைவின்றிச் செய்து முடிக்கவும் அவ்வரசன் அவ்விருபாலகர்கள் முகங்களைப் பார்த்து, பெருந்தவமென்ன தருமம் என்ன செல்வம் என்ன பொற்குவியல்களென்ன எல்லாவற்றையும் பெற்றவனுயினேன் இனி எனக்குப் பெறுதற்கரியது என்ன இருக்கிறது என்று சொல்லி மகிழ்ச்சி கொண்டு மிக இன்புற்ருன்

பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற், றென்னுடையரேனுமுடையரோ' (நளவெண்பா) என்பதனுல் புதல்வரைப் பெறின் எல்லாம் பெற்றனவாகும் என்பது கருதி யிவ்வாறு கூறினன் என்க.

இன்புறு மரசர் கோமா னிறைவனுக் கியைந்த பூசை
யன்பிறைற் புரிந்து தானு ளரும்பெற னட்டி லைந்தூர்
வன்கலிற் சூலந் தீட்டி மகேசனுக் குதவி மாலா
லென்புநெக் குருக வேத்திப் பன்முறை யிறைஞ்சி
னுனல். (48)

இவ்வாறு இன்புறுமரசர் தலைவன் பாரிசாதவன நாதருக்குத்தக்க பூசையை அன்போடு செய்து தான் ஆளுகின்ற பெறுதற்கருமையான பாண்டிய நாட்டிலேயுள்ள ஐந்தூர்களை வலிமையான கருங்கல்லிலே சூலக்குறியைப் பொறித்து எல்லைக்கல்லுகளாக அடையாளம் விளங்கப் பூமியிலே நாட்டி அவ்விறைவர்க்கு (இறையிலி நிலமாக)க் கொடுத்து அன்பினுலே எலும்பு நெகிழ்ந்துருகும்படி துதித்துப் பலமுறை வணங்கினுன்.

"வன்கல்லிற் சூலந்தீட்டல் = சிவச்சின்னமாகிய சூலக் குறியை அமைத்து அதன் கீழ் இன்ன கிராமம் இன்ன கோயிலுக்கு இன்னுரால் விடப்பட்டது என்று எழுதி அந்தக் கிராமத்தின் எல்லைகளில் நாட்டுதல் பண்டை வழக்கு" என்பது மறைத்திரு பின்னத்தூர், **நற்றிணையுரையாசிரியர் நாராயணசாமி** ஐயரவர்கள எழுதிய குறிப்பாகும். நாட்டி என்பது ஆளனுப்பி நாட்டச் செய்து என்னும் பொருளது.

இறையிலிநிலம் = வரியின்றிய நிலம். இறை = வரி.

பலமுறை வணங்கி யேத்திப் பரமனை விடைகொண்
டப்பாற்
புலமிகு மார்க்கண் டன்பாற் போந்தடி பணிந்து போற்றி
யலகின்மா தவர்கண் மற்ருேர் பலரையும் விடைகொண்
டப்பா
னலனுறு பாண்டி நாட்டின் மகாரத னண்ண
லுற்ருன். (49)

பாரிசாத வனநாதரைப் பல தடவையாக வணங்கித் துதித்து விடைபெற்றுப் பின்னர் அறிவு மிகுந்த மார்க்கண்ட முனிவரிடம் போய் அன்போடு அவர் திருவடிகளை வணங்கித் துதித்து அளவில்லாத மற்றைய பெருந்தவமுனிவர்களையும் வணங்கி விடை பெற்றுப் பின்னர் வளமிகுந்த பாண்டி நாட்டின் கண்ணே அம்மகாரதன் போய்ச் சேரலைத் தொடங்கினன்.

அரும்பெறற் றவத்தாற் பெற்ற பாலர்நல் லமைச்ச
ரோடும்
பெருங்கடற் றனை சூழ மகாரதப் பெயரின் வேந்தன்
றிருந்திய மனத்தை யீசன் பாலுற விருத்தித் தேறல்
பொருந்திய மலர்க ளுறுந் தன்றிரு நாட்டிற்
புக்கான். (50)

பெறுதற்கரிய விரதத்தாலே பெற்றெடுத்த பாலகர்களும், நல்ல தர்மகீர்த்தி முதலிய மந்திரிகளும் ஆகியவர்களோடு பெரிய கடல் போன்ற படைகள் சூழ்ந்துவர மகாரதன் என்னும் பெயரையுடைய அம்மன்னவன் திருத்தமான மனதை அவ்வீசுரனிடத்திலேயே நிலைபெறுமாறு வைத்துத் தேனொழுகும்படியான மலர்களின் மணம் வீசுகின்ற தன்னுடைய வளமான நாட்டை அடைந்தான்.

"பொருந்திய" என்பது ஒழுகுதலைக் குறிக்கின்றதென்க. தான் பாரிசாதவன நாதனைப் பிரிந்து சென்றலும் தன்மனம் அவ்விறைவன்றிருவடி நினைப்பின்றியகலாமல் என்று மத்திருவடியை நினைக்கும்படி செய்து கொண்டு சென்றன் (சதாத்தியானித்துக் கொண்டே சென்றன்) என்பார் "திருந்தியமனதை ஈசன் பாலுற இருத்தி" என்றனர். இறைவன்றிருவடியில் மாசுற்றமன நிலை பெருது, மாசற்றமனதே நிலைபெறுமென்பார், "திருந்திய மனதை" என்றனர்.

மகவினை வேண்டி நோற்று மகாரதன் பெறுமா போல
மிகுபுகழ் பாரி சாத வனத்திடை மேவி மேலாந்

தொகுமறை விரதம் பூசை தூயநல் லறங்கள் சின்னட்
டகவொடும் புரியில் வல்லோர் சார்வரும் பயன்கள்
சாரும். (51)

மகாரதனுகிய அரசன் புதல்வர்ப் பேற்றினை விரும்பி பாரிசாதவனத்தையடைந்து விரதத்தை மேற்கொண்டு செய்து மகப்பேற்றைப் பெற்றுவாழ்கின்றது போல மிகுகின்ற புகழைக் கொண்ட அப்பாரிசாதவனத்தின் கண்ணே போய்த்தங்கி மேன்மையானவையும் பலவகை யாகப் பொருந்தியவையும் வேதங்களிலே சொல்லப்பட்ட வைகளும் ஆகிய விரதங்களும் சிவபூசைகளும் தூய்மையான நல்ல தருமங்களும் ஆகியவற்றைச் சிலகாலம் தக்கபடி செய்து வந்தால் வல்லவர்களாலேயுமடைய முடியாத நல்ல பயன்கள் (எல்லாம்) தாமாகவே வந்து அவரை யடையும்,

"*அழுக்காறவாவெகுளியின்னுச் சொல்*" முதலிய குற்றமின்றிச் செய்யும் அறமே அறமாகுமாதலால், "**தூயநல்லறங்கள்**" என்றார்.

வெண்டிரைப் புவனத் தோங்கு மித்தல மன்றி வேரு
மெண்டல மவற்றிற் ருன மந்திர மீசற் கேற்ற
தொண்டுறும் பூசை தூய விரதங்க டொலைவில் பன்னுட்
கொண்டியற் றிடினும் போகப் பயன்மறு பவத்திற்
கூட்டும். (52)

வெண்மையான அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற இந்தப்பூவுலகத்திலே மேன்மையுடையதாகச் சிறந்து விளங்குகின்ற இந்தப் பாரிசாதவனத்தலத்தல்லாமல் வேருகக் கருதுந்தலங்களிலே தானங்களையும் மந்திர செபங்களையும சிவபெருமானுக்கேற்ற பணியாகப் பொருந்திய பூசைகளையும் தூய்மையான விரதா நுட்டானங்களையும் இடைவிடாமல் பலகாலம் மேற்கொண்டு செய்தாலும் அநுபவிக்கும் பயன்களை மறுபிறவிகளிலே பெறும்படிதான் செய்யும். (இப்பிறவியிலேயே அநுபவிக்கும்படி அத்தலங்கள் செய்யமாட்டா.)

ஆதலா லுலகின் மேலா மித்தல மதனை வேதப்
போதனும் புகழு நாளும் புண்டரீ கக்கண் மாலுங்
காதலாற் றுதிக்கு மற்றைக் கடவுளர் கருதுந் தோறுந்
தீதகல் பாரிசாத வனமெனத் தெரிப்பர் திண்ணம். (53)

இப்படி யிருத்தலால் பூவுலகிலே மேன்மை பொருந்தி விளங்குகின்ற இந்தப் பாரிசாதவனத் தலத்தை வேதங்களையுணர்ந்தோதுதலும் ஓதுவித்தலுஞ் செய்கின்ற பிரமதேவர் என்றும் புகழுவார். தாமரை மலர் போன்ற விழிகளையுடைய திருமாலும் அன்போடு துதிப்பார். வேறு தேவர்களும் எண்ணுந் தோறும் குற்றமெல்லாம் நீங்குதற் கேதுவாக இருப்பது பாரிசாதவனமாகும். என்று சொல்லிப் புகழுவார்கள். இவ்வுரை நிச்சயமாகும்.

"தீதகல்" என்பது தீமைகளை யகல்விக்கும் என்று பொருள் கொள்ள அந்தர்ப்பாவித ணிசந்தமாக இருத்தலால் போந்த பொருளாகக் "குற்றமெல்லாம் நீங்குதற்கு ஏதுவா இருப்பது" எனவுரை யுரைக்கப்பட்டது.

மகாரதன் மகவு வேண்டி வான்றவ மிழைத்த காதை
பகாரமாய்ப் பகர்வோர் கேட்போர் பயன்வகுத் துரைப் [போரன்னோர்
தகாநெறி தவிர்ந்து நோற்ற தவத்தினைப் புரிவோர் யாரு
நகாவரு மழலைத் தீஞ்சொ னன்மகப் பெறுவர் மாதோ. (54)

மகாரதன் என்னுமவ்வரசன் புத்திரப் பேற்றை விரும்பிச் சிறந்த விரதத்தைச் செய்து அப்பேற்றைப் பெற்ற வரலாற்றை உபகாரமாக உலகத்தவர்களுக்குச் சொல்லுகின்றவர்களும் கேட்பவர்களும் பயனை யெடுத்துரைக்குமவர்களும் தீயவழியிற் செல்லாமல் அம்மகாரதன் செய்த விரதத்தை மேற்கொண்டு செய்தவர்களும் ஆகிய எல்லாரும் புன்சிரிப்புடனும் மழலைமொழிகளாகிய இனிய சொற்களுடனும் மடியின் மேல் வந்தேறுகின்ற நல்ல புதல்வர்களைப் பெறுவார்கள்.

உபகாரமாய் என்பது 'பகாரமாய்' எனச் செய்யுளுக்கித்தலைகுறைந்தது. பகாரமாக என்பது பகாரமாய் எனத்திரிந்தது. 'உரைப்போரன்னோர்' என்பது உரைப்பவராகிய அவர்கள் என்பது படநின்றது.

நல்லறத் துறையு ளாய நவமணி மன்ற நாநாப்
பல்பெரும் போக மோக்கம் பயக்குமோர் கணத்தின் பாதிச்
செல்பொழு தேனு மிந்தத் திருநகர் வைகிற் றீய
வல்லல்போ மணுக வொண்ணு மனோரத மனைத்து நல்கும். (55)

நல்ல தர்மங்கள் எல்லாவற்றிற்கும் உறைவிடமாகிய, நவமணிகளைப் பதித்துச் செய்யப் பெற்ற பேரம்பலத்தோடு கூடிய இந்தத் திருநகரமானது தென்பாலுறைகின்றவர்களுக்குப் பலவிதமான போகங்களையும் மோட்சத்தையும் தரும். அரைக்கணப் பொழுதாவது தன்னிடத்திற்றங்கினலும் அப்படித் தங்கினவர்களுக்கும் துன்பங்களெல்லாம் தாமாகவே நீங்கும். மேலும் இது, அடைதற்கரியனவாக விருந்தாலும் மனதில் விரும்பியபொருள்கள் எல்லாவற்றையும் அவர்கட்குக் கொடுக்கும்.

இத்தல மான்மி யத்தை யொருதரங் கேட்கில யார்க்கும்
பத்தியுஞ் சிவனுக் கன்பும் புனிதமும் பயக்கு மூவா
முத்தியு மளிக்குங் கோடி சனனத்தின் முயன்ற பாவ
மெத்தனை யெனினு நீங்கு மெய்துதற் கரிய துண்டோ. 56

இந்தப்பாரிசாதவன தலமான்மியத்தை யொருதடவை கேட்டால் கேட்பவர் எவராக விருந்தாலு மவர்கட்கெல்லாம் தெய்வபக்தியும் உயர்ந்த சிவபக்தியும் உள்ளத்தின் தூய்மையும் ஆகியவறறை அச்சிரவணம் கொடுக்கும். மேலும் அழியாத மோட்சத்தையும் கொடுக்கும். முன்கோடி (பல) பிறவிகளிற் செய்த பாவங்கள் எவ்வளவோ அவ்வளவும் நீஙகிவிடும். ஆதலால் அவர்கட்கு அடைதற்கரியனவாக ஒரு பொருளாவ திருக்குமா இராது.

உயர்ந்ததீர்த் தங்க ளாடித் தலத்தினை யொருகாற் சூழ்ந்தா
லியைந்தபூ வலம்வந் தாற்போன் றெய்திடும் பயன்க ளீறில்
பயன்றரு பகிரண் டத்திற் தலமெலாம் பணிந்து பார்மே
லியங்கிய தீர்த்தம் யாவு மாடிய பலனு மெய்தும். (57)

இந்தப் பாரிசாதவனத்தலத்திலே உயர்வாகச் சொல்லப்பட்ட உலோக்கிய தீர்த்த முதலிய தீர்த்தங் களிலே நீராடி இத்தலத்தை ஒரு தடவை வலமாகச் சுற்றி வந்தால், வலம்வரும்படி பொருந்திய பூமியை வலமாகச் சுற்றி வந்தது போலப் பயன்கள் எல்லாம் வந்து சேரும். அழிவில்லாத மோட்சமாகிய பயனையும் கொடுக்கும். வெளியாகவுள்ள இவ் அண்டத்திலுள்ள தலங்களெல்லா வற்றையும் போய் வணங்கிப் பூமியின் மேலே நிகழ்கின்ற தீர்த்தங்களனைத்திலும் நீராடின தன்மையாலுண்டாகும் பயன்களும் வந்து சேரும்.

பகி: அண்டம் பகிரண்டமெனப்புணர்ந்தது. பகி:= வெளி.

ஆயவித் தலத்திற்செம்பொன் முட்டையி னளவையேனு
மீயிலோர் சுவண மேரு வுதவிய பலன்வந் தெய்துந்
தூயன மொருவர்க் கீந்தாற் கோடிநான் மறையோர் துய்க்கு
மேயநற் பலமாஞ் செய்யுந் தருமமு மினைய வாமால்.(58)

இவ்வாறு விளங்குகின்ற இந்தப் பாரிசாதவனத் தலத்திலே செம்பொன்னை ஒரு முட்டையளவுள்ளதாக வாவதுகொடுத்தாலும் அப்பொன்னை மகாமேருகிரியளவுள்ள தாகக் கொடுத்ததினுலேற்படும் பலன் வந்து கைகூடும். தூய்மையான அன்னத்தை ஒருவர்க்குக் கொடுத்தால் கோடியளவுள்ளவராகிய வேதியர்கள் உண்ணுதலாலேற் படும் பலனுண்டாகும். வேறு செய்கின்ற தருமங்களும் இவ்வாறே பெருகிப் பயனளிக்கும்.

வான்றவ மீசற் கீந்த பூசனை மகிழுந் தான
மேன்றவிச் செயல்க ளெல்லா மித்தலத் தியற்றி னுரே
லான்றதோர் கோடி யாக விருத்தியா யடையும் போகஞ்
சான்றவ ருவக்கு மேலா முத்தியு மளிக்குஞ்
சால்பால். (59)

சிறந்த தவங்களும் சிவபெருமானுக்குரிய பூசைகளும் மகிழ்ச்சியைப் பெறுவோர்க்கு ஊட்டும்படியான தானங்களும் ஆகிய தங்கள் தங்களுக்கியன்ற வரையிலே செய்கின்றஇச்செயல்களனைத்தையும் இந்தப்பாரிசாதவனதலத்திலே செய்வார்களேயானுல் நிறைந்த கோடியளவாக அவைகள் பெருகும். அப்படிப் பெருகிப் போகங்களையும் அறிவு சான்ற பெரியோர்கள் விரும்புகின்ற மோக்ஷத்தையும் அது தன் மகிமையினிறைவினுலே கொடுக்கும்.

இங்கு, "தான் சிறிதாயினுந்தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்து விடும் என்பது நினைவிற்கு வருகின்றது.

இன்னன வியம்பி மேலா மித்தல மதனி லெய்து
நன்முனி வரர்கள் யாருஞ் சிவனரு ணயந்தோர் நாளு
மன்னிய சிவனுக் கன்பாய் வழிபடுந் திறத்தோர் நாளுந்
தன்னிக ருருத்தி ராக்க மாலையுந் தரிக்குந் தூயோர். (60)

இவைகளையும் இவைகள் போன்ற மகிமைகளையுஞ் சொல்லி, மேன்மையையுடைய இத்தலத்திலேயுறைகின்ற நல்ல முனிசிரேட்டர்களெல்லாரும் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு விரும்பினவர்களாகியும் தினந்தோறும் நிலைபெற்ற சிவபெருமானிடத்தில் அன்புபூண்டு வழிபாடு செய்யும் தன்மையுடையவர்களாகியும் எப்பொழுதும் தமக்குத்தாமே இணையான உருத்திராக்ஷமாலைகளையணிகின்ற தூய்மையுடையவர்களாகியும் இருப்பார்கள்.

அனைய நன் முனிவர் நாளு மத்தலத் தமர்ந்தோ ரெம்மா
லினையரென் றுரைக்க லாகா ரித்தலப் பெருமை யிந்தப்
புனையுரை கேட்போர்க் குள்ளம் புனிதமாம் பவமுந்
தூய்தா
நனிபுரி கருமந் தூய்தா ஞானமு நண்ண லாமால். (61)

அத்தகைய நல்ல முனிவர்கள் நாள் தோறும் அப்பாரிசாதவனதலத்திலே தங்கினுர்கள். அவர்கள் என்போல்வார்களால் இத்தகையர் என்று சொல்லத்தக்க வரல்லர் அத்தகையவர் தங்குந்தலமாகிய பாரிசாதவனத் தலத்தின் பெருமையாகிய இந்த அலங்காரமான வரலாற் றைக் கேட்பவர்களுக்கு மனம் தூய்மையாகும். பிறந்த பிறப்பும் நல்லனவற்றைச் செய்தற்குரிய பரிசுத்தமான பிறப்பாக ஆகும். மிகுதியாக செய்யக்கூடிய செயல்களும் நல்லனவாக அமையும் அபரஞான பரஞானங்களைப் பெறும் தன்மையும் வாய்க்கும்.

எனப்பல வனைத்து நந்தி யீசனுங் கியம்பக் கேட்டுச்
சனற்குமா ரன்ரு ஞர்வ மீக்கொளத் தகவு பூண்டு
மனக்கினி யுளதோ துன்ப மிலையென மகிழ்ந்து நம்பன்
றனக்கிணை யாய நந்தி தாண்மலர் வணங்கி ஞனல். (62)

என்று பலவிதமாக எல்லாவற்றையும் நந்தியம் பெருமான் அங்கே சொல்லக் கேட்டுச் சனற்குமாரமுனிவர் அன்பு மேலிட நல்ல தன்மையை மேற்கொண்டு, மனதிற்கு இனிவேண்டுமென்பது ஒன்றுண்டோ? துன்பமோ இல்லை. என்று மகிழ்ந்து சிவபெருமானுக்கு நிகரான நந்தியம் பெருமானுடைய திருவடித் தாமரை மலர்களை வணக்கஞ் செய்தார்.

வேறு

நந்தி யீசனு மயன்றரு சனற்குமா ரனுநயந் துரையாடி
முந்து சங்கையாற் பயனுறப் புகன்றது முதுமறை யொருநான்கு
மந்த மில்புரா ணங்களு மிருதியு மகனுறத் தொழற்காய
விந்த மாக்கதை மான்மிய மளவறுத் தியம்புதற் கரிதாமால் (63)

நந்தியம் பெருமானு பிரமனீன்ற சனற்குமார முனிவரும் பேசி மேம்பட்ட ஓரளவினுலே பயன் பெறும்படி முடிவு கட்டியதாகிய மனம் பொருந்தத் தொழுவதற் கேற்ற

இந்தப் பாரிசாதவனதலவரலாருகியமான்மியமானது ஒப்பற்ற பழமறைகள் நான்கினுலும் அளவில்லாத புராணங்களினுலும் ஸ்மிருதிகளினுலும் கூட, இவ்வள வென்று அளவிட்டுச் சொல்வதற்கியலாத தொன்ருகும்.

பயனுறப்புகன்றது இந்த மாக்கதைமான்மியம எனக் கூட்டுக.

இனைய மாக்கதை யுரைப்பவர் கேட்பவ ரீங்கிவர் தமையேத்திக்
கனிவு கூர்ந்தருள் சிறப்பவர் யாவருங் கயிலைமால் வரைமேவித்
துனியி லைம்பெரும் பூதமு மரிமுதற் சுரர்களும் மிறத்தோன்றி
யனலு லாவிய காலையு யழிவில்பே ரின்பவீ டடைவாரால் (64)

இத்தகைய பெரிய வரலாற்றைச் சொல்பவரும் கேட்ப வரும் இவர்களை நல்ல புண்ணியவான்களென்று உள்ள மிகவுமிளகப் பெற்று அன்பு தலை சிறக்கப் புகழ்கின்றவரும் ஆகிய எல்லாரும் பெரிய கயிலையங்கிரியை யடைந்து, பஞ்சபூதங்களும் திருமால் முதலிய தேவர்களும் அழியும்படி உகாந்த காலாக்கினி தோன்றி விளங்குகின்ற காலத்திலும் துன்பமில்லாத அழிவற்ற பேரின் வடிவாகிய வீட்டை அடைவார்கள்.

'துனியில்' என்பதை வீட்டிற் கடையாக்குக. அனல் = உகர்ந்த காலாக்கினி.

மகாரதன் புத்திரப் பேறுபெற்ற சருக்க முற்றிற்று.

உ
சிவமயம்

ஏழாவது

தீர்த்த மான்மியச் சருக்கம்

தவம்புரி சனற்கு மாரன் றருவனத் தகைமை யெல்லா
நவின்றன னந்தி யீச னவிலலு நயந்து கேட்டுப்
பவங்கெட மகிழும் போழ்திற் பாங்கரி னிருந்த சூத
னுவந்திடு சனற்கு மாரற் கின்னன வுரைக்க லுற்றான் (1)

பாரிசாத வனமாகிய திருக்களர்த் தலத்தின் பெருமைகளெல்லாவற்றையும் நந்தியம் பெருமான் சொல்லியருளினர். அவர் சொல்லியருளவும், தவத்தை எப்பொழுதும் செய்கின்ற சனற்குமார முனிவர், விரும்பிப், பிறவித்துன்ப நீங்கும்படி கேட்டு மகிழுகின்ற சமயத்தில், பக்கத்திலே இருந்த சூதமகா முனிவர், மகிழ்ச்சி கொள்கின்ற அச்சனற் குமாரமுனிவர்க்கு, இவ்வாறு (கீழ்வரும்படி) சொல்லத் தொடங்கினர்.

தருவனத் தியல்புந் தீர்த்தத் தன்மையுஞ் சாற்று ஞானத்
திருநடம் பரமன் மேனட் செய்தது நந்தி யீசன்
பரிவொடு முரைப்பக் கேட்டா யாயினும் பண்பால் யானும்
புரிவுற வுரைப்ப னென்னாப் பின்னரும் புகல்வ தானன், (2)

பாரிசாத வனமாகிய திருக்களரின் தன்மைகளையும் அங்குள்ள தீர்த்தங்களின் தன்மைகளையும் ஞானத்தை யளிக்க வல்ல ஆனந்தத் திருநடனத்தை முன்னாளிலே சிவபெருமான் செய்தருளிய தன்மையையும், நந்தியம் பெருமான் அன்போடு சொல்லியருள நீ கேட்டாய் அவ்வாறு கேட்டறிந்திருந்தாலும் யானுமன்புடன் விளங்கச் (சிறிது) சொல்லுவேன் என்று மேலும் சொல்லத் தொடங்கினர்.

பண்பு=அன்பு இங்குப் பண்பென்பது அன்பை யுணர்த்திற்றென்க; அன்பும் பண்பாதலால். புரிவுற= விளங்க விருப்பமுற எனினுமாகும்.

அத்தலப் பெருமை யெல்லா நந்திமா தவனுக் கல்லா
லெத்தலத் தினிலும் பாங்கா லியம்புதற் கொருவருண்டோ
வித்துணை யெனவத் தானத் தியல்பெலா மிசைக்கமாட்டேன்
பத்தியாற் சிறிது தீர்த்தப் பரிசினை யுரைப்பேனென்றான். (3)

அந்தப் பாரிசாதவனதலப் பெருமைகளெல்லாமும் நந்தியம் பெருமானால் சொல்லியருள முடியுமேயல்லாமல் வேறு எந்த வுலகத்திலாவது முறையாகச் சொல்லு வதற்குத் தக்கவராக ஒரு வருண்டா. (இல்லை) ஆகையால் அந்தத் தலத்தின் தன்மை களெல்லாவற்றையும் எடுத்து இவ்வளவு வென்று சொல்ல மாட்டேன். பத்தியினாலே கொஞ்சம் தீர்த்தப் பெருமையை மட்டும் சொல்லுவேன் என்று சொன்னார்.

என்றவ னுரைத்த லோடு மீரெழு புவியு மீந்த
மன்றலங் கமலப் புத்தே டருமுனி மகிழ்ச்சி பொங்கித்
துன்றிய தவத்தின் மிக்க சூதனைத் துதித்து நோக்கி
யின்றெனக் குரைப்பா யென்னச் சூதனு மியம்பலுற்றான். (4)

என்று அச்சூத முனிவர் சொல்லவும் பதினான்கு வகையான பூலோக முதலிய வுலகங்க ளெல்லாவற்றையும் படைத்த பிரமன் பெற்ற புதல்வராகிய சனற் குமார முனிவர், மகிழ்ச்சி மிகப் பெற்று நெருங்கிய தவத்தினாலே மேம்பட்ட சூத மகா முனிவரைப் புகழ்ந்து அவரைப் பார்த்து ஐய தீர்த்த மான்மியத்தை இப்போ தடியேற்குச் சொல்லி யருள் வீராக என்று கேட்கவும் அச்சூத மகா முனிவரும் சொல்லத் தொடங்கினார்.

வேறு

தங்கொளி விளங்கும் பாரிசா தவனத் தெம்பிரான் சந்நிதி முன்னர், மங்கலப்படிவ மாயது நாளு மன்னிய நல்லறக் கடவு, டிங்களிற் றயங்குந் திருமுக மலரச் சிறந்தினி திருப்பதோர் தீர்த்த, மங்கண்வா னமர ரனைவருந் துதிக்கு முலோக்கிய மதன்பெயரறையில். (5)

நிலைத்த புகழுடன் விளங்கும்படியான அந்தப் பாரிசாத வனதலத்திலே எழுந்தருளி யிருக்கின்ற எம் தலைவராகிய சிவபெருமானுடைய சந்நதிக்கு முன்பிலே, மங்கள வடிவமாக விளங்குவதும், நாடோறும் நல்ல தரும தேவதையின், சந்திரனைப் போல விளங்கும் திருமுகமானது மலர்ச்சியடையும்படி (முழுகுவாருடைய பாவங்களை யெல்லாம் முழுகின அளவிற் போக்குஞ்) சிறப்பினோடு எல்லாருக்கு மினிமையையே யளிப்பதுமாகிய ஓர் தீர்த்தமுண்டு, அழகிய இட மகன்றவானுலகத்திலேயுள்ள தேவர்களனைவரும் துதிக்கும்படியான அத்தீர்த்தத்தின் பெயர் உலோக்கியம் என்பதாகும்.

அப்பெருந் தீர்த்தந் தன்னின்மா ஞாலத் தெய்திய மன்பதை யனைத்து, மெப்பொழு துவந்து மூழ்கினும் போகத் தோடுவீட்டின் பமும் பயக்கு, மிப்பரி சுடைய தாயினுங் கால விசேடமுண் டெண்ணிய பலன்க, டப்பறத் தருவ தவையிவை யெனவே சாற்றுவன் கேட்டிமா தவத்தோய். (6)

பெரியதவமுடைய சனற்குமாரனே ! அந்தப் பெரிய தீர்த்தத்தின் கண்ணே பெரிய பூவுலகிலே உள்ள மக்களனைவரும் எந்தக் காலத்தில் வந்து மகிழ்வுடன் முழுகினாலும் எல்லாப் போகங்களையும் மோக்ஷ இன்பத்தையும், தரவல்லதாகும். அது இத்தகையதாக இருந்தாலும், எண்ணிய பயன்களை எண்ணியபடியே தப்பாமல் தருவனவாகிய கால விசேடங்களுண்டு. அதில் முழுகுதற்குரிய அக்கால விசே

டங்களை (விசேடகாலங்களை) யிவையாகுமென்று விளங்கச் சொல்லுவேன் கேட்பாயாக.

விசேடகாலம் = சிறந்த நாள். 'எப்பொழுது வந்து' என்பது 'எப்பொழுது உவந்து எனவும் எப்பொழுது, வந்து' எனவும் பிரித்துப் பொருள் கொள்ள நின்றதாகலின் இருபொருளும் படவுரையுரைக்கப் பட்டது.

தேளில்வா னிரவி யெய்திய மதியிற் றினகரன் பெயருடையத் தினத்திற், கோளறும் புனித வான்றிரு மெழுக்குந் தூர்வையுங்கரத் திடைக் கொணர்ந்து, மூளுமன் பெழக்கா யத்திரி மறையை மொழிந்துலோக் கியப்புனன் மூழ்கி, ஞளுமெப் பவத்து மியற்றிய பாவ மகற்றிமேற் கதியினை நல்கும். (7)

விருக்ஷிகராசியில் சூரியன் வந்து கூடுகின்ற கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக் கிழமையிலே, குற்றங்களைப் போக்கு கின்ற தூய்மையான சாணத்தையும அறுகம்புல்லையும் கையிலே எடுத்துக் கொண்டு வந்து பற்றுகின்ற அன்பை வளரச்செய்து காயத்திரி மந்திரத்தைச் சொல்லி அந்த உலோக்கிய தீர்த்தத்திலே முழுகினுல் எல்லாப் பிறவிகளி லும் என்றும் செய்த பாவங்களை யெல்லாம் போக்கி மேலான சுவர்க்க முதலிய கதிகளையும் முழுகினவர்களுக்கு அத்தீர்த்த மளிக்கும்.

தேள் = விருக்ஷிகம், அது ராசியையுணர்த்திற்று, இரவி, தினகரன் என்பன சூரியனை யுணர்த்தின. 'வானிரவி' என்பது சூரியன் என்னும் பொருளதாய் நின்றது. தினகரன் பெயருடைத்தினம் = ஞாயிற்றுக்கிழமை. தினகரன் ஞாயிறு என்பன ஒரு பொருட் சொற்கள்,

முன்புகன் மதியிற் றிங்கள்வா ரத்தி னன்பக லிடைமுனி தீர்த்தத், தன்புற மருவிச் சோமமந் திரமுச் சரித்து நீராடி நீறணிந்து, பொன்புனை யுருத்தி ராக்கமா லிகையைப் பூண்டுபஞ் சாக்கர மறையை, நன்பொருள்

விதிநூன் முறையினுற் செபித்து நம்பனைத் துதியினு னவின்று. (8)

முன்னே சொல்லிய மாதத்திலே திங்கட்கிழமையிலே நடுப்பகலிலே அத்துருவாச முனிவர் தீர்த்தமாகிய உலோகிய தீர்த்தத்திலே போய் சந்திரனுக்குரிய மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு முழுகித் திருநீறணிந்து பொன்வேய்ந்த (பொன் கட்டிய) உருத்திராக்ஷ மாலையைத் தரிக்க வேண்டிய இடங்களிலே தரித்துக் கொண்டு சிவபஞ்சாக்கர மந்திரத்தை நல்ல பொருள்களை யெடுத்து விளக்குகின்ற சிவாகமநூல் விதிப்படி செபித்துச் சிவபெருமானை துதிப்பாக்களாற் புகழ்ந்து.

உளப்பொருட் கியன்ற தக்கணை யடைகா யிருதுகி லொருதுகி லேனு, மளப்பிலா னந்த நாடகம் புரியு மமலனுக் கீதென மறையோர், கொளக்கொடுத் தீசன் றனக்குமம் பிகைக்கு மியன்றவான் பொருளினுற் குளிரத் தினைத்தபி டேக மாட்டியா யிரமிந் தீவர மலர்த்தொடை யணிந்து. (9)

தம்மிடத்திலேயுள்ள பொருளளவிற் கேற்பப் பணத் தக்ஷணையையும் வெற்றிலை பாக்கு இரண்டாடை அல்லது ஒரு ஆடை ஆகியவற்றையும் அளவில்லாத இன்பத்தைத் தரும் நடனத்தைச் செய்தருளுகின்ற நிர்மலராகிய சிவ பெருமானுக்குக் கொடுக்கின்றேன் என்று சிவபெருமானுகப் பாவித்து வேதியர்களுக்கு அவர்கள் மகிழ்வோடு கொள்ளும் படி அன்புடன் கொடுத்து அச் சிவபெருமானுக்கும் உமை யம்மையாராகிய அமிர்தவல்லியம்பிகைக்கும் குளிரும்படி பொருத்தமான பால் முதலிய சிறந்த பொருள்களைக் கொண்டு அபிடேகித்து ஆயிரமளவுள்ள (மிகப் பல) கரு நெய்தல் மலர் மாலைகளைச் சூட்டி

இந்தீவரம் = கரு நெய்தல் ; நீ லோற்பலம்.

உளபொருள் என்றிருக்க வேண்டியது எதுகை நோக்கி உளப்பொருள் என விரித்தல் விகாரம் பெற்றது.

அறுசுவை யடிசி னிவேதன மாற்றி யானந்த நாடக மாடுங், கறைமிடற் றெந்தை பூங்கழல் வணங்கிக் காதர வாதரம் பெருக, முறைமுறை பரவின் மறிதிரைப் புவன முழுவது முடிபுனைந்தளித்து, மறுவில்பல் போக நுகர்ந்துபி னெவர்க்கு மருவரு முத்தியில் வாழ்வார். (10)

ஆறுசுவைகளையுடைய புளியோதன முதலிய வருக்கான்னங்களை நிவேதித்து, ஆனந்தத் திருக் கூத்தைச் செய்தருளுகின்ற விடக்கறை படிந்த திருக்கழுத்தையுடைய எங்கள் பரம தந்தையாராகிய பாரிசாதவனேசுரரின் பொலிவு தங்கிய வீரக்கழலை யணிந்த திருவடிகளை வணங்கி அச்சமு மன்பும் பெருகிநிற்க அடிக்கடி துதித்தால்,சுருண்டு வீசுகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூவுலக மெல்லா வற்றிற்குந் தலைவனாக முடி சூடி அமர்ந்து அருளாற் காப்பாற்றிக் குற்றமில்லாத போகங்களை யனுபவித்துப் பின்னர் தத்துவ ஞானிகளைத் தவிர மற்றைய எல்லோருக்கும் அடைதற்கரிய தாகிய மோக்ஷத்தை யடைந்து (சீவன் முக்தராகவும்) வாழ்வார்கள்.

பாவமும் பழியும் எய்தும்படியான பிறர் மனை நயத்தல் தலிய போக மின்றி அறமும் புகழு மீய வல்லவா யின் பமுந்தருவன வாய சுயமனை நயத்தல் முதலிய போக மென்பார் "மறுவறு போகம்" என்றார். இக்கருத்து "அறத்தான் வருவதே யின்பம்" என்னும் திருக்குறளையும் அதன் பரிமேலழகருரையையும்நோக்கினன்கு புலப்படும் என்க.

மொழியுமத் தினத்தி லீசனுக் கபிடே கந்நிவே தனம்விதி முறையால், வழுவறப் புரியி லவர்க்கொரு கோடி சிவநிசிப் பெரும்பயன் மருவு, மழுவலா னடியார்க் கனம்புன லடைகாய் வழங்கிலத் தினத்திலோர் கோடி, விழுமியோர்க் களித்த பலனுறு மீது சத்தியஞ் சத்தியம் விளம்பில். (11)

இன்னுஞ் சொல்லத் தொடங்கினல் முன்னே கூறிய மாதத்திலே திங்கட்கிழமையிலே (சந்திரனுக்குரிய மந்திரத்தைச் சொல்லி அந்தத் தீர்த்தத்திலே நீராடி) அங்கேயுள்ள

பாரிசாதவனே சுரருக்கு இயன்ற அளவு விதிப்படி அபிடேகஞ் செய்து நிவேதனமும் செய்தாலும் அவர்களுக்கு ஒரு கோடி சிவராத்திரிப் பூசை செய்த பெரிய பலத்தைக் கொடுக்கும். மழுவாயுதத்தைச் செலுத்தும் வல்லமையுடைய அச்சிவபெருமானுடைய அடியவர்கட்கு அற்றை நாளில் அன்னமிட்டு நீரை நுகர்வித்து வெற்றிலை பாக்கும் கொடுத்தால் அச்செயல் ஒரு கோடியளவுள்ளவர்களும் குணத்தால் கனமானவர்களுமாகிய பெரியோர்களுக்கு அவற்றைக் கொடுப்பதாற்படும் பயன்கள் எவ்வளவோ அவ்வளவும் தாமாகவே வந்து சேரும். இது சத்திய வசனமேயாகும், சத்தியவசனமே யாகும்.

சுரபியி னறுநெய் யாயினு மெள்ளின் றயிலமே யாயினுஞ் சொரிந்து, மருவுநூ லைந்தா லொருதிரி யிணக்கி மணங்கமழ் திருக்களர் மகேசற், கிருளற விமைப்ப விருசுட ரேனு மொருசுட ராயினு மேற்றிற், பரனரு ளுறுவ ரவர்பிதிர் மரபிற் கோடிமன் னுயிர்பெறும் பதவி. (12)

பசுவினெய்யையாவது எண்ணெய்யையாவது நிறைய ஊற்றிச் சுத்தமாகப் பொருந்திய நூல் ஐந்தினாலே ஒரு திரியை அமைத்து பூ முதலிய மணமும் இயற்கை மணமும் மணக்கின்ற திருக்களர் நாதருக்கு இருள் நீங்கும்படி ஒளி செய்யத் தக்க இரு விளக்காவது ஒரு விளக்காவது ஏற்றினால் அந்தப் பரனாகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவார்கள். அவர்களுடைய மரபிலே தோன்றிப் பிதிர்க்களுலகில் வாழ்கின்ற பல சீவர்களும் மேலான பதவிகளைப் பெறுவார்கள்.

மணம் என்பதைத் திருக்களருக் கடையாக்கி மலர் மணங்களும் ஆடவரும் பெண்டிருமணிகின்ற கலவைச் சேறு முதலியவற்றின் மணமும் அவர் மணக்கின்ற திருமணங்களும் விளங்குகின்ற திருக்களர் எனினுமாகும். கமழ்தல் = மணத்தல். அது குறிப்பாக, விளங்குதல்; பொருந்துதல் களையும் விளக்குதலுமுண்டு. 'நாமணக்கும்' 'பாமணக்கும்' என அதன் பரியாயப் பெயர் அப் பொருளில் வருதல் காண்க.

'மன்னுயிர்—என்பதற் கேற்ப "பெறும்" என்றனர்.

வருதகர் மதியிற் பௌரணைத் திதியி லிரவியின் மந்திரஞ் செபித்துப், தொருவிலேந் தெழுத்தும் புகன் றரன் றனக்குத் தென்றிசை மருங்கில்வான் புகழு, முருகனு லயத்தி லாடகத் தான முதுமறையவர்களுக் குதவிப், புரிவினு லயில்வே லிறைவனுக் கபிடே கஞ் செய்து புதுமலர் புனைந்து. (13)

மேடமாதமாகிய சித்திரையிலே வருகின்ற பௌர்ணை திதியிலே சூரிய மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு ஒப்பற்ற பஞ்சாக்ஷரத்தையும் உச்சரித்து அதில் நீராடி அங்குள்ள சிவபெருமானுக்குத் தென்திசையிலே எழுந்தருளியிருக் கின்ற தேவர்கள் புகழ்ந்து வணங்குகின்ற முருகப் பெருமானுலயத்திலே பழமையான வேதங்களையோதுகின்ற வேதியர்களுக்கு பொன்னுகிய தானத்தைச் செய்து அன்போடு கூர்மையான வேற்படையையுடைய தலைவ ராகிய முருகப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்து புதிய மலர்களைச் சூட்டி.

தகர், மேடம், ஆடு என்பன ஒரு பொருட் சொற்கள். ஆடகம்=பொன், அயில்=கூர்மை.

இன்னமு தனைய வாலரி யடிசில் விதிமுறை நிவேதன மியற்றி நன்னறுந் தூப முதலுப சாரத் தொடுநயந் தருச்சனை செய்து, துன்னியாங் கவன்ருள் போற்றிடிற் றனையர் மாதர்மற் றுறும்பொருளோடு, முன்னரும் போக நுகர்ந்துபின் பிறவா மொழிதரு முத்தியே பெறுவார்.

வெண்மையான அரிசியினுலாகிய இனிமையான அமிழ் தம்போன்ற சோற்றை விதிப்படி நிவேதித்து நல்ல மண முடைய தூப முதலிய உபசாரங்களைச் செய்து விரும்பி அர்ச்சனையும் செய்து நெருங்கிநின்று அம் முருகப் பெரு மானுடைய திருவடிகளைத் துதித்தால் பிள்ளைகளையும் நல்ல மனைவிகளையும் மிக்க பொருள்களையும் பெற்று, கிடைக்கு மென்று கருதுதற்கியலாத போகங்களை யெல்லா மநுபவித்துப் பின்னர் பிறப்பற்ற நிலையென்று சொல்லு கின்ற முத்தியையும் பெறுவார்கள்.

வால்=வெண்மை அரி=அரிசி. மலையாளத்தில் அரி எனவே வழங்குவார்கள்.

பாதுகஞ் செருப்புக் கவிகைசாந் தாற்றி பரமனுக் குவப்புறப் பரவித், தீதகல் சிவநே சருக்களிப் பவர்பின் செனனமு மரணமு மகல்வா, ராதவன் விடையில் வந்துறு மதியி லிந்துவு மிரவியு மணுரு, மேதகு தினத்தி லிருவினை கடியு முருத்திர தீர்த்தத்தின் மேவி. (15)

(மேலும்) கட்டை மிதியடியும் தோல் மிதியடியும் குடையும் சிவிறியும் (விசிறியும்) சிவபெருமானுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி சிவனடியார்களைத் துதித்து அவர்களுக்குக் கொடுத்தால் கொடுப்பவர்கள் பின்னர் பிறப்பிறப்பு நீங்கப் பெறுவார்கள். சூரியன் இடபத்தில் வந்து சேருகின்ற வைகாசி மாதத்திலே அமாவாசித் தினத்திலே இருவினை களையும் போக்க வல்ல உருத்திர தீர்த்தத்தை யடைந்து.

தம் மடியவர்களுக்குக் கொடுத்தாலும் தனக்குக் கொடுத்தது போலச் சிவபெருமான் மகிழ்வாராதலால், " பரமனுக்குவப்புற " என்றனர்.

பாதுகம்=கட்டை மிதியடி, செருப்பு=தோல் மிதியடி.

சொல்லுமந் திரத்தின் முதன்மையா வுரைக்குந் துமக்கினே ருருத்திர மென்னு, நல்லதொன் மறையை நவின்றுநீ ராடி நகைமதிக் கண்ணிநம் பனுக்கும், வல்லிய முரித்தோன் றனதடி யவர்க்கும் வெண்ணிறக் கோவினை வழங்கிற், பல்வினைப் பிறவி தீர்ந்துருத் திரர்கள் பதவியிற் செல்குவர் பாங்கா. (16)

வேதங்களிலே சொல்லப்படுகின்ற மந்திரங்களிலே மேலான மந்திரமென்று சொல்லப் படுகின்ற உருத்திர மென்கின்ற நன்மையைப் பயக்க வல்ல தான பழைய மந்திரத்தை இடைவிடாது சொல்லி நீராடி ஒளியோடு கூடிய சந்திரனைத் தலைமாலையாகவுடைய சிவபெருமானுக் கும் புலியை யுரித்து அதன் தோலை யாடையாக வுடுத்திய

அச்சிவ பெருமானுக்குரிய அடியவர்களுக்கும் வெண்மை நிறமுள்ள பசுவைத் தானமாகக் கொடுத்தால், பலவினை களையும் அவற்ருலேற்படும் பிறவிகளையும் நீக்கி உருத்திரர் களுடைய பதவியிலே போய்ச் சேர்ந்து சுகிப்பார்கள்.

துமக்கினேர் என்பதன் பொருள் விளங்கவில்லை, துமிக்கி நேர் எனக் கொண்டு 'அழிக்கும் உருத்திரனுக் குரிய தாய்த் தனக்குத் தானே சமானமானதாகவுள்ள' எனப்பொருள் கூறலாம். துமித்தல்=அழித்தல். துமிக்கி= அழித்தலைச் செய்பவன்; உருத்திரன். இவர், இவ்வாறு மாற்றம் என்பதனடியாக மாற்றிய எனக்கொண்டு சொல் லிய என்பதன் பரியாயமாக பின்னர்க் கூறியுள்ளார். அது போலத்துமிக்கி எனக் கொண்டன ரெனலாம்.

ஆவினை யளிக்க வியன்றிடா தாயி லப்பெருந் தீர்த் தத்தி லாடிக், கோவினை வழங்க வாங்கஃ திலையேற் கொடுத்திட வராகனென்றஃது, மேவிடா தென்னில் வராகனிற் பாதி யீந்திட வெண்ணிறப் பசுவொன், றீவ தற் கிணையாப் பயன்றருஞ் சுரபி யுலகமு மெய்தலா மினிதின். (17)

அவ்வாறு வெண்மைப் பசுவைக் கொடுக்க முடியாது போனல் அந்தப் பெரிய தீர்த்தத்திலே முழுகி எந்த நிற முள்ளதாயினுஞ்சரி ஒரு பசுவைத் தானமாக அங்கே கொடுப்பாராக. அப்படியும் கொடுக்க முடியாது போனல் ஒருவராகன் பொன்னைக் கொடுப்பாராக. அப்படியுங் கொடுக்க முடியாதிருப்பின் அரைவராகன் பொன்னையாவது கொடுப்பாராக. அப்படிக்கொடுத்தால் அவை முற்கூறியபடி வெண்மையான பசுவைக் கொடுப்பதற்குச் சமமாகி நல்ல பயனையளிக்கும், எளிதாக கோவுலகத்தையு மடைந்து சுகிக்கலாம்.

வராகன், மூன்றரை ரூபாய் அளவுள்ளது.

மாசியாந் திங்க ளொடுபுரட் டாதி யாடிமார் கழி யெனு மதியி, லீசனுக் கிடபம் பிதிர்களுக் குவகை யெய் திட விதிமுறை யீந்தோர், வீசிய விடையின் மெய்ம்மயி

ரொன்றுக் குகமொரு கோடியா மிகுநா, ணசமில் கயிலைப் பெரும்பத மடைந்து நம்பனுக் கன்பரா இருப் பார். (18)

அந்தத்தலத்திலே மாசி மாதத்தோடு புரட்டாசி ஆடி, மார்கழி என்னு மாதங்களிலும், நீராடித் தங்கள் பிதிர்த் தேவதைகளுக்கு மகிழ்சி யுண்டாகும்படி, சிவபெருமானுக்கு இடபங்களை (காளைகளை) விதிப்படி நேர்ந்து விட்டவர்கள் நேர்ந்து விட்ட காளையின் மேனியிலேயுள்ள உரோமம். ஒன்றுக்கு ஒரு கோடியுக அளவாக மிகுகின்ற நாள் வரை யில் அழிவற்ற கயிலையாகிய பெரிய பதவியிலே போய்ச் சேர்ந்து சிவபெருமானுக்கு அன்புடையவர்களாக இருப் பார்கள்.

சிவபத மாதலால் "*துஞ்சா தொன்றே பரமபதம்*" (மஹாராத்துறவு) என்றது. போல "*நாசமில் கைலை*" என்றனர். இனி அழிவில்லாத பேரின்பத்தை யளிக்குங் கைலை என்பார் "நாசமில் கைலை" என்ருரெனினுமாம்.

விதந்துரைத் திடுமார் கழித்திரு மதியி னடேசனுக் கருமறை விதியாற், பொதிந்திடு நறைமென் சந்தனக் குழம்பா னனியபிடேகமும் புரியின், மதம்படு கபோலக் கரியுரி போர்த்த மழுவலான் மகிழ்ந்துதான் மருவி, வதிந்திடுங் கயிலைப் பெரும்பத மருளி முத்தியு மன்பிஞல் வழங்கும். (19)

சிறப்பித்து எடுத்துச் சொல்லு மார்கழியாகிய நல்ல மாதத்திலே நடராசப் பெருமானுக்கு அரிய வேத விதிப்படி மணம் நிறைந்த சந்தனக் குழம்பிஞலே மிகவும் அபிடேகஞ் செய்து நிவேதனமுஞ் செய்தால் மதம் உண்டாகும் கன்னத்தையுடைய யானைத் தோலைப் போர்வையாகக் கொண்டு போர்த்தியவராகிய மழுவாயுதத்தைச் செலுத்த வல்ல சிவபெருமான், மகிழ்ச்சியுற்றுத் தாம பொருந்தி வாழ்கின்ற கைலையாகிய பெரும் பதவியில் தங்குதலைக் கொடுத்து இறுதியில் தம்முடன் கலந்தின்புறு முத்தியையும் அருளிஞலே கொடுப்பார்.

"மாதங்களிலே மார்கழியாகுகின்றேன்" (பகவற் கீதை) என்பது போல நூல்களிலே சிறப்பித்துக் கூறப் படுவது மார்கழியானதால் "விதந்துரைத்திடு மார்கழி" என்றனர். விதத்தல்=பிரித்தெடுத்துக் கூறல், படுதல்= தோன்றுதல்.

ஞானவா வியினின் மாகமா மதியி னண்ணிய பரணி நாண் மருவப், பானுவின் புதல்வ னருமறை மொழிந்து படிந்துவேய்ப் பாத்திர மெனினு, மானவேத் திரத்தாற் செய்கல மெனினு மட்கல மாயினு மமைத்து, மேனிறைத் துழுந்து மூவிரு குறுணி விமலனுக்குவகையால் வழங்கி. (20)

அங்குள்ள ஞானதீர்த்தத்திலே மாசி மாதத்திலே பொருந்திய பரணி நட்சத்திரத்தினத்திலே பொருந்தி எமனுடைய அரியமந்திரத்தைச் சொல்லிக் கொண்டு முழுகி மூங்கிலினலே கூடை முதலிய பாத்திரமாகச் செய்தாவது அல்லது பெருமையமைந்த பிரம்பினலே கூடை முதலிய பாத்திரமாகச் செய்தாவது அல்லது மண்ணலே ஒரு பாத்திரமாகச் செய்தாவது ஆறு குறுணியளவுள்ள உழுந்தை அந்தப் பாத்திரம் ஏதேனுமொன்றில் நிறையப் போட்டு நிர்மலராகிய சிவபெருமானுக்கு மகிழ்ச்சியுடன் கொடுத்து,

பானு=சூரியன், பானுவின் புதல்வன்=எமன்.

பொருந்திய பொருளாற் றருவனத் திறைக்கு மலை மக டனக்கு நன் புனித, வருந்தவர் பணிய நடம்பயின் மகேசன் றனக்குமா ராதனை யயர்ந்து, சுரும்பருண் டுவக்குஞ் சண்பக நறும்பூத்தொடுத் தணிந் திடினமன் றுரக்கும், பெரும்பயம் பிணியற் றிரவியு மதியு முளபகல் விருத்தியைப் பெறுவர். (21)

பூசைக் கேற்பப் பொருந்திய பால் முதலிய பொருள் களைக் கொண்டு பாரிசாதவன நாதருக்கும் இமயமலையரசன்

புதல்வியாராகிய பார்வதிதேவியாருக்கும் (அமுதவல்லி யம்மையாருக்கும்) அரியதவமுடைய முனிவர்கள் வணங் கும்படி திருக்கூத்தாடிய நடராசப் பெருமானுக்கும் வண்டுகள் மதுவையுண்டு களிக்கும்படியான சண்பக மலர் களை மாலையாகக் தொடுத்துச் சூட்டிப் பூசை செய்தால் எமன் பிடிப்பதற்குத் துரத்தி வருதலாலேற்படும் பேரச் சமும் நோய்களும் இல்லாமல் சந்திரசூரியர்கள் வழங்கு நாள் வரையில் நிலை பெற்று வாழ்தலைப் பெறுவார்கள்.

'பகல்' என்பது நாள் என்னும் பொருள்பட நின்றது சிரஞ்சீவிகளாக வாழ்வார்களென்பதாம்.

குறையிலா தமைந்த நாடோறு முன்னர்க் கூறிய தீர்த்தத்தின் மூழ்கி, யறுசுவைப் பொருளான் மகாள யஞ் சிராத்த மாற்றிடி லளப் பருஞ் செல்வஞ், செறிவுறு மந்நாட் டிலோதகம் பிண்டம் விசேடமாச் செய்திடிற் கயையை, யுறுபய னினுமோர் கோடியின் மடங்காப் பிதிரரோ டுயர்கதி யடைவார். (22)

புண்ணிய தினங்களாக அமைந்த மகாளய பக்ஷத்திதி திதிகளிலே தவருமல் மேலே கூறிய ஞானதீர்த்தத்திலே முழுகி ஆறு சுவை களமைந்த பொருள்களாலே மகாளய சிரார்த்தத்தைச் செய்தால் அளவில்லாத செல்வம் வநது சேரும். அந்த நாள்களிலே எள்ளுடன் கூடிய நீரையும் பிண்டத்தையும் சிறப்பாகப் பிதிர்க்கள் பொருட்டுக் கொடுத்தால் அது கயாவிலே போய் எள்ளுடன் நீரைக் கொடுத்துப் பிண்டம் போடுங் கிரியைப் பார்க்கினும் கோடிமடங்குள்ள கிரியையாகப் பெருகுதலால் போடுப வர்கள் பிதிர்க்களோடுகூட உயர்ந்த பதவிகளைப் பெறுவார்கள்.

திலம்=எள்ளு, உதகம்=நீர். தில உதகம் என்பது **திலோதகம்** எனக் குணசந்தி பெற்ற ஆரியச்சொல் வடசொல்லாகத் தமிழில் நிலவுகிறது.

சிவநிசி விரத முண்டிரீத் திருந்து கன்னலின் சாறு செந் தேற, லவியொடு நறும்பா னனி யபி டேகஞ் செய்

தம லன்றனக் கங்நாட், புவியிடை விளைந்த தானியப் பொருளை மனையறம் பூண்டரன் பொற்ருட், குவகைபெற் றுயர்ந்தோர்க் குதவிலோர் கோடி குலத்தொடுங் கயிலையி லுறைவார். (23)

சிவராத்திரி விரதத்தை மேற்கொண்டு உணவுண்ணு மலிருந்து கருப்பஞ்சாறு, செந்நிறமானதேன், அவிசாகச் சிறந்த நெய், நல்ல பால் இவைகளைக் கொண்டு நிர்மல ராகிய பாரிசாதவன நாதருக்கு அபிடேகஞ் செய்து அந்தச் சிவராத்திரி நாளிலே சொந்தப் பூமியிலே விளைந்த தானி யத்தைச் சிவபெருமானுடைய திருவடியை வணங்கி மகிழ் கின்ற அன்பர்களாகிய இல்லறப் பெரியோர்களுக்குக் கொடுத்துதவினுல், தங்குலத்திலே தோன்றிய கோடி யளவுள்ளவர்களுடன் தாமும் கயிலையை யடைந்து சுகமாக வாழ்வார்கள்.

சிவநிசி=சிவராத்திரி. நிசி=இரவு, கன்னல்=கரும்பு, "அவி" என்பது அவிசுகளிற் சிறந்த நெய்யை யுணர்த்தி நின்றதென்க.

சாத்திரம் பயின்ருே ராதுல ரநாதர் சான்றவர் தாமொருமூன்று, நேத்திரத் தமல னடியவ ராயி னிகரி லித் தலத்திலாங் கவர்க்குக், கேத்திரந் தனதா னியத் துடன் சமைத்த கிருகமீந் திடினிதி கிளர்ந்து, பூத்திடுஞ் செல்வ மணிமுடி யரச ராகியிப் பூதலம் புரப்பார். (24)

நன்னூல்களை யிடைவிடாது படித்துணர்ந்தவர்களும் வறியவர்களும் நாதனற்றவர்களும் குணங்கள் நிறைந்த வர்களும் ஆகிய இவர்கள் மூன்று திருவிழிகளையுடைய சிவ பெருமானுக்கு அடியவர்களாக இருந்தால் ஒப்பில்லாத இந்தப் பாரிசாதவனதலத்தில் அவர்கட்கு விளைநிலங் களையும் தனத்துடனும் நெல் முதலிய தானியங்களுடனும் கூடியதாக விளங்கும் மனைகளையும் இனுமாகக் கொடுத்தால், எளிதாக வளர்ந்து பொலிகின்ற செல்வத்தையுடைய, மணி யழுத்திய முடிசூடிய அரசர்களாக ஆகி இப்பூவுலகைக் காப்பாற்றுபவர்களாவார்கள்.

அநாதர்=நாதனற்றவர்கள்; காப்பாற்று நாதனில்லாத பெண்கள், குழந்தைகள் முதலியோர்கள். சாத்திரம் பயின்ருலும் குணம் நிறம்பப் பெறினும் பூர்வ புண்ணியமில்லாதவர்கட்குச் சிவபக்தி யெய்தாது எனபது இதனுற் குறிப்பிடப் படுகின்றது. இனிது, என்பது வருந்தியீட்டப் படாமல் தானுகவே புண்ணியத்தாற் பெருகுதலை யுணர்த்துகின்றது.

நிமலன்மெய் யடியார்க் கித்தல மதனி னிகரிலா நன்கலை யளிப்போ, ரமலனு ளுலக மெய்திவீற் றிருப்பா ராய்ந்தபைந் தேறலுண் டறுகாற், றமரவண் டிமிரு நறுமல ரவிழு நந்தன வனம்வகுத்தவர் தா, முமையவள் கணவன் ருனெனப் படும்வே றுவமையாங் கவர்க்கிலை யுலகில். (25)

நிர்மலராகிய சிவபெருமானுக்கு மெய்ம்மையான அடியவர்களாக உள்ளவர்களுக்கு இந்தத் தலத்திலே ஒப்பில்லாத நல்ல ஆடைகளைக் கொடுப்பவர்கள், அப்பெருமானுளுகின்ற கைலைப் பதியை யடைந்து இணையற்றவர்களாக இருப்பார்கள். நல்லதெனத் தேடியுணர்ந்த புதுத் தேனைப் பருகி ஒலி செய்கின்ற ஆறு கால்களையுடைய வண்டுகள் முழங்குகின்ற மணங்கமழ்கின்ற மூவகை மலர்களும் மலர்தற்கேற்ப நந்தன வனத்தை அமைத்தவர்கள், சிவபெருமான் எனப்படுவார்கள். ஆதலால் அவர்களுக்குலகிலே உவமையாக வேறு ஒருவருமில்லை யென்றே சொல்லலாம்.

பசுந் தேறல்=புதிய தேன். 'பசுமை' இங்குப் புதுமையையுணர நின்றது. உண்டு தமர அறுகால்வண்டு இமிரும் எனக்கூட்டிப் பொருள் காண்க. உண்டிமிரும் என முடியும், "உண்டு என்பது பசிப்பிணிதீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவு எனப்படுதலின் பொதுவினையாயிற்று" எனச் சேனு வரையர் தொல்காப்பியத்திற் குறித்தபடி இங்கேயும் பொது வினையாக வருதல் காண்க, "மூசுவண்டு தேனையுண்டு மோகன முகாரி ராகம்பாடும் (அண்ணமலை ரெட்டியார்) என்பது போல "பசுந் தேறலுண்டு.........இமிரும்" என்றனர். "உமையவள்

கணவன்ருன்" என்பது ஈண்டுச் சிவன் என்னும் பொருளதாக நின்றது. என்க. தான் என்பது தேற்றப் பொருளில் வந்தது "வகுத்தவர் தாம்" என்பதில் தாம் என்பது சுட்டுப் பொருளதாக வந்தது. கட்டுரைச் சுவைபட நின்றதெனினுமாகும்.

கொழுமலர் கமழுந் திருக்களர் மருங்கிற் குரோசமைந் துட்படக் குறுகிச், செழுநிழற் பந்தர் வைத்தவர் வாவித் தீம்புன லல்கினேர் சிறப்பாற், ருெழுமதி யுலகிற் றெள்ளமு தருந்திச் சுரர்களாய் வாழ்குவர் தொல்லைப், பழமறை புகழு மித்தலப் பெருமை யுரைப்பவர் யாவரோ பரிசால். (26)

செழித்த மலர்கள் மணக்கின்ற மணத்தையுடைய திருக்களரின் பக்கத்தில் ஐந்து குரோத்துக்குட் பட்ட எல்லையிலே போய்ச் செழுமையான நிழலோடு கூடிய தோப்புக்களை யமைத்து வைத்தவர்களும் குளங்களை யமைத்து அவற்றிலே நல்ல நீரைப் பருகும்படி நிறைத்து வைத்தவர்களும் சிறப்போடு எல்லாரும் தொழும்படியான சந்திரவுலகத்திலே தெளிந்த அமிழ்தத்தைப் பருகிக் கொண்டு தேவர்களாக வாழ்வார்கள், ஆதலால் பழமையான வேதங்கள் புகழும்படியான இத்தலத்தின் (திருக்களரின்) பெருமையை அன்போடு எவர் தாம் முற்றுமுரைப்பவராவார்கள்.

குரோசம் ஐந்து=பத்து மைல். பந்தர் என்பது தோப்பு. அல்லது "*நிழற் பந்தல்*" என்பதற்கு நிழலைச் செய்கின்ற காவணம் எனினும்; நிழலைச் செய்கின்ற தண்ணீர்ப்பந்தல் எனினுமாகும்.

மாதொரு பாக னமர்திருக் களருண் மறுவறு தானமீந் திடுவோர், மேதினி முழுதும் புரப்பர்நற் புனித ராகுவர் வேறுவே றெடுத்தாங், கோதினு மடங்கா தித்தலப் பெருமை யெமக்குரைப் பரிதென வுணர்வாற், சூதமா

முனிவ னிவையெலாஞ் சனற்கு மாரற்கு மகிழ்வுறச் சொன்னன். (27)

உமையம்மையாரை ஒரு பாகத்திலே கொண்ட சிவ பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருக்களராகிய இத்தலத்திலே குற்ற மற்ற தானத்தைச் செய்வோர்கள், இப்பூவுலக முழுவதையும் ஆளுவார்கள். அதன் மேலும் முக்திசாதனமாகிய சிவஞானத்தைப் பெறுதற்குரிய சித்த சுத்தியையு முடையவர்களாவார்கள். இத்தலத்தின் பெருமைகளைத் தனித்தனியாக எடுத்துக் கூறினும் அவைகள் முடிவு பெருமல் மேலு மெஞ்சி நிற்கும் ஆதலால் எம்மாலே முற்ற முடிய எடுத்துச் சொல்வதற்கியலாது என்று அறிவோடு சூதமகா முனிவர், மேலே சொல்லியவைகளை யெல்லாம் சனற் குமரமுனிவருக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி சொன்னர்.

மாமறைக் கிழவன் றருமுனி சூத மாதவன் மாற்றிய வனைத்துங். காமுற வுவந்து கேட்டலு மகிழ்ந்து காதர வாதரம் பெருகி, யாமுறை யுணர்ந்து திருக்களர்ப் புராணத் தொன்மையு மாங்கதன் சிறப்பு, நீமொழிந் தருளென் றருந்தவன் கேட்பச் சூதனுங் கேளென நிகழ்த்தும். (28)

பெரிய வேதங்களை யோதுதற்கு மோதுவித்தற்குமுரிய பிரமதேவன் பெற்றருளிய சனற்குமர முனிவர், சூதமகா முனிவர் சொல்லியருளிய எல்லாவற்றையும் மிக்க ஆசையுடன் கேட்டவுடனே மகிழ்ச்சி கொண்டு அச்சமு மன்பும் பெருகப் பெற்று, அமைந்த முறைகளைத் தெரிந்து பின்னரத் திருக்களர்ப் புராணத்தின் பழமையையும் அதன் சிறப்பையும் தேவரீர் திருவாய் மொழிந்தருள் வீராக எனச்சனற் குமர முனிவர் கேட்கச் சொல்லுவேன் கேட்பாயாக வென்று சொல்லிச் சூதமகாமுனிவரும் சொல்லுவாராயினர்.

காமுறவுவந்து=ஆசை பெருகும்படி விரும்பி.

மறைதெரி வியாதன் முதலிய முனிவ ரோதிய மூவறு வகையா, வறைதரு புராணங் களிற்பவு டியமென்

ருங்கொரு புராணமுண்டதனிற், செறியுமுத் தரகாண் டத்தினோர் சாரிற் கேத்திர கண்டத்திற் சேர்ந்து, பிறிவருங் காதை முதற்றரு வனத்தை விதந்துதான் பேசிய வாறும். (29)

வேதங்களை யுணர்ந்து நான்கு கூருகப் பகுத்த வியாச முனிவர் முதலிய முனிவர்கள் முறையாக ஓதப் பெற்ற பதினெட்டுப் பிரிவுடையனவாகச் சொல்லப்படுகின்ற புரா ணங்களுக்குள்ளே பவுடிக மென்கிற புராண மென்றொன் றுண்டு. அதிலே பொருந்திய உத்திரகாண்டத்திலே ஓர் பக்கத்தில் உள்ள க்ஷேத்திரத்தைக் கூறும் பகுதியில் ஒன்ருகப் பொருந்திப் பிரிவின்றி முதற் காதையாக விளங்கப் பாரிசாதவனத்தை எடுத்துத் தான் சொல்லி யருளிய தன்மையும்.

பாரிசா தவன வரவெனுங் கதையும் பண்ணவர் பணிந்திடப் பரமன், சீரிய நடனஞ் செய்திடு மாறு முத்தி பஞ் சாக்கரச் சிறப்புந், தேர்வுறு விதமுந் தெரித்திடு மாறுந் தீம்புனற் றீர்த்தநா மத்தின், காரண மொழியு மகாரதன் றவத்தாற் காதலர் தமைப்பெறு மாறும். (30)

பாரிசாதவனந் தோன்றிய வரலாறும் தேவர்கள் வணங்கி வழிபடும்படி சிவபெருமான், விழுமியதான திருக்கூத்தை செய்த வரலாறும் மோட்சத்தை யளிக்கின்ற சிவ பஞ்சாச் க்ஷரத்தின் மேன்மையும். அவை இவ்வளவு வகையாக வுள்ளன எனத்தெரிந்து கொள்ளும் தன்மையும் அவற்றை யுபதேசிக்கின்ற முறையும் இனிய நீரையுடைய தீர்த்தங் களின் திருப் பெயர்களும் அப்பெயர்களமைதற்குரிய காரணங்களும் மகாரதன் என்பவன் விரத மனுட்டித்துப் புதல்வர்களைப் பெற்ற வரலாறும் (ஆகிய இவை முதலியன வெல்லாம்)

ஏய்ந்தவிச் சருக்க மாறு முன் னந்தி யீசனிற் கியம் பிய வீற்றில், வாய்ந்தவிக் காதை யான்புக றீர்த்த மான் மியச் சருக்கமேழ் வகையா, மாய்ந்தவிச் சருக்க மப்

பெருங் காண்டத் தாதியி லறுபதோ டிருபான், வேய்ந்த வேழ் சருக்க மாதியா வுரைக்குந் தகையதிக் கதையென விரிப்பார். (31)

பொருந்தியுள்ள மேலே வந்த சருக்கங்கள் ஆறையும் நந்தியம் பெருமான் உனக்குச் சொல்லியருளிய பின்னர் முடிவிலே பொருந்திய இவ்வரலாற்றுப், பகுதியானது யான் சொல்லிய தீர்த்த மான்மிய சருக்க மெனப்படும்; இதனோடு சருக்க மேழு பிரிவாகும். இவ்வேழு சருக்கங்களாலாராய்ந்து சொல்லப் பட்ட பாரிசாதவன சம்பந்தமான இவ்வரலாறுகள் அந்தப் பெரிய உத்தர காண்டத்தின் முதலிலே எண்பத்தேழு சருக்கங்களால் முதன்மை பெற்றனவாகச் சொல்லப்படுந் தகுதிவாய்ந் தனவாக ஆகியன என்று விரிவாகக் கூறுபவராயினர்.

அறுபதோடு இருபான் வேய்ந்த ஏழ்=அறுபதோடு இருபது=அறுபது மிருபதுங்கூடிய எண்பது. அவ்வெண்ணே முன்னே வரும்படி, வேய்ந்த ஏழ்=எண்பத்தேழு. ஆதியா=முதன்மை பெற்றனவாக. அவை. முன் கூறிய வரலாறுகள். இக்கதை=இப்பாரிசாதவன சம்பந்தமான வரலாறுகள்.

இன்னநற் காதை யொருமுறை முழுதுங் கேட்கல ராயினு மிதனிற், பன்னுமோர் சருக்க மாயினு மதனிற் பாதியா யினுமொருபாட, லென்னினு மாங்கோர் பத முரை யேனும் பதத்தினி லோரெழுத் தேனு, முன்னுறக் கேட்போ ரளப்பரும் போக நுகர்ந்துபின் முத்தியை யடைவார். (32)

இத்தகைய பாரிசாதவன சம்பந்தமான வரலாற்றை ஒரு தரம் முழுவதையுங் கேளாதவர்களாக இருந்தாலுங் குற்றமில்லை. இதில் பாதியைக் கேட்டாலும் அப்படிப் பாதி கேட்க இயலாமல் ஒரு சருக்கத்தில் கூறும் வரலாற்றுப் பகுதியை மட்டும் கேட்டாலும் அப்படி ஒரு சருக்க வரலாற்றைக் கேட்க இயலாமல் அச் சருக்கங்களிலே வரும் ஏதாவது ஒரு பாடலைக் கேட்டாலும் அப்படி ஒரு பாடலை

யுங் கேட்க இயலாமல் ஏதாவது ஒரு பாடலிலேயுள்ள ஏதாவது ஒரு பதமாகிய சொல்லைக் கேட்டாலும் அப்படிக் கேட்பவர் எல்லாரும் இம்மை மறுமைகளிலே அளவில்லாத இன்பங்களை நுகர்ந்து பின்னர் அழிவில்லாத முத்தியை யடைவார்கள்.

முன்னுறக் கேட்போர்=இவர் தக்கவரென்று கருதும் படி அன்பினோடு கேட்பவர்கள் என்று பொருள் கொள்க. நுகர்தல்=அநுபவித்தல்; அறிதல். போகம் என்பது இங்கு இன்பத்தை யுணர நின்றது. இன்ப ஜனகங்கள் பலவாத லின் அளவில் போகம் என்றனர்.

இந்தநற் கதையை மகிழ்ந்து புத்தகத்தி லெழுதினோ ரதனிலோ ரெழுத்துக், கந்தமில் கோடி யுகமரி பிரமர் புகழ்திருக் கயிலையை யடைவார், முந்துறும் புராண முழு வது மளந்த முறையினிற் றீட்டியாங் களிப்ப, வந்துறும் பலனு மிதனிலே டொன்று வரைந்தடியார்கட்கு வழங்கில். (33)

இந்தப் பாரிசாதவன புராணத்தை அன்பினாலே மகிழ்ச்சி கொண்டு ஏட்டிலே முழுவது மெழுதினவர்கள் ஒவ்வொரு எழுத்திற்கும் அளவில்லாத கோடியுக அளவாகப் பல கோடியுகங்கள் வரையில் பிரம விஷ்ணுக்களாலே புகழப் பெறுகின்ற கைலைப் பதியை யடைந்தின்புறுவார்கள். இப்புராண வரலாற்றுச் சம்பந்தமான (சில பாடல்களை) ஏடு ஒன்றிலே எழுதி அன்புள்ள அடியவர்களிடங் கொடுத் தால் அக் கொடுத்தவர்கட்கு, மேன்மையான இந்தப் புராண முழுவது மளவிட்டுக் கூறும் பாடல்கள் எல்லா வற்றையும் முறைப்படி எழுதி பிறர்க்குக் கொடுப்பதனால் ஏற்படும் பலனுக்கு நிகரான பலன் பெருகும்.

ஆகும் என்பது ஆமௌத்திரிந்து பெருகும் என்னும் பொருளில் நிற்கின்றது.

கொலைபுரிந் திடினும் பிறர்மனைப் போக நுகரினுங் குரவரைப் புரவா, தலைதுயர் செயினு மயலவர் பொரு ளைக் கவரினு மதியினை யகற்று, புலைமது வினிதி னருந்

தினும் பகராப் பொய்ம்மொழி யுரைக்கினு மொருகா, லுலகெலாம் புகழு மிக்கதை யுரைக்கி லவையகன் றுயர் கதி யுறுவார். (34)

கொலைத் தொழிலைச் செய்தாலும் பிறர் மனைவியர் களிடத்தில் இன்பத்தை நுகர்ந்தாலும் தாய் தந்தையர் களைக் காப்பாற்றுமல் அவர்களுக்கு வருத்துகின்ற துன்பச் செய்கைளைச் செய்தாலும் பிறர் பொருளை யபகரித்தாலும் புத்தியை மயக்கும்படியான இழிந்த கள்ளை மகிழ்வோடு பருகினாலும் சொல்லக் கூடாத பொய்வார்த்தைகளை (பிறர் துன்புறும்படி) சொன்னாலும், உலகமெல்லாம் புகழும்படி யான இப்பாரிசாதவன புராணத்தை ஒரு தரம் சொன்னல் அப்பாபச் செயல்களாலுண்டாகும் பாவப்பயனெல்லாம் நீங்கப் பெற்று உயர்வான சிவசாயுச்சியப் பதவியை யடைவார்கள்.

குரவர்=தாய்தந்தையர்கள். புரத்தல்=காப்பற்றல், அலைத்தல்=வருத்துதல்; கொல்லுதல்.

எனவிவை யனைத்து மளவறு புராண மியம்பிடுஞ் சூதமா முனிவ னனைவிரி கமல நறுமல ரமளி நான்முகத் தெம்பிரா னல்குந், துனியறு சனற்கு மாரமா முனிக்குச் சொல்லினன் சூழுறக்கேட்டே, யினியமாதவங்கள் புரி சனற்குமாரனெய்தருமுத்தியையடைந்தான். (35)

என்று மேலே சொல்லிய எல்லாவற்றையும். அளவில்லாத புராணங்களைச் சொல்லுகின்ற சூத மகா முனிவர் அரும்பாக இருந்து மலர்கின்ற தாமரை மலராகிய நல்ல ஆசனத்திலே எழுந்தருளி=யிருக்கின்ற நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன் பெற்ற, துன்பஞ் சிறிது மின்றிய சனற்குமார முனிவர்க்குச் சொன்னுர். அவர் சொல்லிய திருக்களாப் புராண வரலாறுகளை மனதிலே பரவிப் பதியும்படி கேட்டு, நல்ல பெரியதவங்களைச் செய்கின்ற அச்சனற் குமார முனிவர், பிறராலடைதற்கரிய மோட்சத்தை யடைந்தார். (சீவன் முக்தியை யடைந்தார்.)

நனை = அரும்பு, பிறரலர்த்தாமல் அரும்பாக இருந்து தானாகவே மலர்ந்த மலர் என்பார் 'நனைவிரி .... மலர்' என்றனர். பிறரலர்த்தவலருதலுமுண்டு அது. திருமுருகாற்றுப்படையை நோக்கிற் புலப்படும். அது "விரலுளர்ப் பலர்ந்த கீழ் நீர்ச்செவ்வரும்பு" என்பது. தானாக விரிவது நறுமணமுடையதாகும் என்பதாம்.

வேறு

வானவர் வாழ்க முத்தீ மறையவர் மகிழ்ந்து வாழ்க
வானின மிகவும் வாழ்க வலைபுனல் சொரிக நாளுந்
தேனிமி ரலங்கல் வேந்தன் செழுமணிக் குடைமீ தோங்க
நானிலத் திலகுஞ் சைவ நன்னெறி சிறக்க மாதோ. (36)

தேவர்கள் எல்லாரும் (உலகத்தில் துன்பங்கணீங்குதற்குக் காரணர்களாக இருத்தலால்) வாழ்வார்களாக. மூன்று வகையான நெருப்பை வளர்க்கின்றவர்களும் வேத முதலியவற்றை யோதி யொழுகுகின்றவர்களுமாகிய வேதியர்கள், (மழை வளத்தையுலகிற்குதவுகின்ற தேவர்களுக்கு ஆகுதி செய்கின்றமையால் அவர்கள் ஆகுதி செய்யத் தக்க) மகிழ்ச்சியுடன் (எல்லாம் பெற்று) வாழ்வார்களாக. பசுக் கூட்டங்கள் (ஆகுதி முதலியனவற்றிற்குரிய நெய் முதலியவற்றைத் தருதலால்) வாழ்வனவாக (தேவர்களாலும் மறையவர்களாலும் எப்பொழுதும் (மாதந்தோறும்மாரியாக) மேகங்கள் நீரைப் பொழிவனவாக (எல்லாரையும் காப்பற்றுகின்றவனாதலால்) வண்டுகள் முழங்கும்படியான தேனொழுகுகின்ற மலர் மாலையை அணிந்துள்ள அரசனுடைய செழுமையான மணிகள் தொங்குகின்ற குடையானது என்றும் அவன் முடிமேலே யோங்கி நின்று நிழலை செய்வதாகுக. அவன் காவலாலே மக்கள் உடலைமட்டு யோம்பி விலங்கினம் போல நிலவிப் பிறந்திறந்துழலாமல் என்றுமழியா தின்பந்துய்த்துச் சிறுமானேந்தியின் சேவடிக்குக் கீழ் இரு மாந்திருக்கச் செய்கின்ற சிவாகம நெறிவாழ்வதாகுக.

செழுமணிக்குடை=செழுமையான மணிகளழுத்திய குடை, பிறவிப் பிணியை யறுத்தலின், சைவநெறியைச் "சைவ நன்னெறி" என்றனர். சைவம்=சிவசம்பந்தமான ஆகமங்கள் (சிவாகமங்கள்) அலைபுனல் என்பது புனலுக் கேற்ற அடையாகும்.

ஏவாவது தீர்த்த மான்மியச் சருக்கம் முற்றும்.

திருக்களர்ப்புராணமும் உரையும்
முற்றியன.

உ

சிவமயம்

திருக்களர் ஆண்டவர் என்னும்
ஸ்ரீவீரசேகர ஞானதேசிக சுவாமிகள்
சரித்திரச் சுருக்கம்

★


திருக்களர், கோ. ஆ. வீர. மடம்,

கோவிலூர், ஸ்ரீ மகாதேவ ஞாந தேசிகர் மாணாக்கர்

ஸ்ரீ கிருஷ்ணாநந்த சுவாமிகள் எழுதியது.

★

ஸ்ரீ திருக்களர் ஆண்டவ ரென்று வழங்கும் ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக சுவாமிகள் மோக்ஷ தசையடைந்த 50-வது வருஷத்திய பொன் விழாவின் போது 27 நக்ஷத்திரக் குறிப்புடன் பாராட்டிய சரித்திர ரூபப் புகழுரை.




திருக்களர்


ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்.




ஸ்ரீ வீர சேகர ஞானதேசிகர்
வெளிக் கோவில் தோற்றம்.




ஸ்ரீ வீர சேகர ஞான தேசிகர்
அதிஷ்டான உள் கோயில் தோற்றம்.



ஸ்ரீ வீர சேகர ஞான தேசிகர்
அதிஷ்டான மூலஸ்தானம்.



ஸ்ரீ வீர சேகர ஞான தேசிகர்
உத்சவ விக்கிரகம்.



திருக்களர் ஸ்ரீ வீர சேகர ஞானதேசிக சுவாமிகள்
மடாலயம்.

ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

1. நம் ஸ்ரீ வீர மகா முநிவர் பல சிறப்புகள் பொருந்திய பாண்டி நன் னுட்டில் அழகா புரி போலப் பல வளங்களுடன் அமைந்த புது வயல் என்னும் திவ்ய நகரில் வசிட்டர் அருந்ததி போல், இல் லொழுக்கம் நடத்தி வந்த சிறப்பு மிக்க அருணுசலம் செட்டியார் உமையம்மையாரின் அநேக தவங்களினுலும், சாக்கையில் எழுந்தருளியிருக்கும் வீர சேகரேசப் பெருமானையும், உமையாம்பிகையையும், வேண்டிய வேண்டுகோளினுலும், அவ் வீர சேகரேசரே, இவ் வீர சேகர முநிவ ராக சாத்திரங்களிற் கூறிய புருஷ இலக்ஷணங்களோடும் அவதரித்தனர். அக் குழவியினிடத்தில், கண்ண பிரானைப் போன்றும், சங்கரரைப் போன்றும், அளவற்ற ஆற்றலும், அநேக அதிசயங்களும், ஒரு ஆண்டு பூர்த்தி யாவதற் குள்ளேயே அகர முதலிய எழுத்துக்களைக் கசடற யாவரும் ஆச்சரியப்படும்படி வழங்கி வந்ததுடன், இன்னும் அநேக அரிய செயல்களும் காட்டி வந்தனர். அவதார அச்சிறு குழந்தையின் ஆற்றல் தான் என்னே! அத்தகைய தெய்வீகக் குழந்தையின் திருச் செயல்களைக் கண்டு திருப்தி யடைந்த திருத் தந்தை சங்கரருக்கு-சிவ குரு போன்று. செய்வனவற்றைச் செய்து சிவ பதவி யடைந்தனர். பின்னர், அவ் வீரேச

முநிவர் செய்வனவற்றைச் செய்து, ஐந் தாண்டும் நிறையப் பெற்று அவ்வவ் வாசிரியரிடத்தில், அவ்வாறு திங்களில், ஐயந் திரிபு அறியாமை யென்னும் முக் குற்றமு மற எல்லாக் கலைகளையும் பூர்ணமாக அடை வுற்றனர். அத் தருணத்தில், பத் தாண்டு நிறைவுற்றது. தாம் எல்லா ஆற்றலும் படைத்த அருளவதார ராயினும், குலாசாரத்தை விளக்க, "திரைகட லோடியும் திரவியம் தேடு" என்ற வாக்கியப்படி பொரு ளீட்டியும் "பெரி யாரைத் துணைக்கொள்" என்ற பெரியோ ராசாரத்தைக் காட்டக் கோவிலூர் மரபில், உணரவேண்டியதை முழுதும் பாட முறையி லுணர்ந்த பெரியாரிடத்தில் உணர வேண்டிய வேதாந்த நூல்களை முழுதும் முக் குற்ற மறவுணர்ந்தும், அதிகாரிக் குரிய எல்லா இலக் கணங்களையும் பூர்ணமாக அடைந்தும், இராம பிரானைப் போன்று, விளங்கிக் கொண்டிருந்த பெருமை தான் என்னே! இவ் வீரேசரது அருள் நிலையைக் கண்ட வீரப் பய்யா என்ற பெரியவர். "அன்ப! நீர் ஆதி சேடனாலும் அளவிட்டுக் கூறற் கரிய பல வளங்களும் பொருந்தித் தவ வலி ஞாந வலி மிகவும் பொருந்தியதும், அடியார் குழாங்களுடன் கூடியதும், வட ஆலின் கீழ் எழுந்தருளி யிருக்கும் குரு தெட்சண மூர்த்தியைப் போன்று, சிறந்த ஆசிரியத் தன்மை பொருந்தியிருக்கப் பட்ட ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகர் எழுந்தருளி யிருப் பதும், யாம் அடிமை புகுந்தது மாகிய, கோவிலூர் மடத்தை அடைவீரேல், நீர்' அடைய வேண்டிய பயன் முழுவதையும் அடைந்தவ ராவீர்" என்ற உரையைக் கேட்டலும், சங்கரர் சந்நியாசத்தை முன்னரே விரும் பித் தாயின் கட்டளையை எதிர் நோக்கிக் கிடைத்த வுடன் விரைந்து சந்நியாசத்தை அடைந்து, அவர் ஆசிரி யரை அதிவிரைவில் தேடிச் சென்றதுபோல், நம்

வீரமா முநிவரும் அத்தகைய செய்கையுடன் ஆசிரியரை யடைய கோவிலூர் மடத்தை நோக்கி விரைந்து சென்றனர். இவ் வீரேச முநிவர்பால் வீட்டின் வேட்கையும், விமல போத ஆசிரியனை விரைந் தடையும் விருப்பமும், இருந்த வாறு என்னே! தாம் எல்லாம் கை வந்த அவதார புருடரே ஆயினும், ராம பிரானைப் போன்றும், கிருஷ்ண பகவானைப் போன்றும், மற்றையோர்க் குணர்த்தச் சிறந்த அதிகாரி புருடனாக நடித்துக் காட்டிய பெருமை தான் என்னே!

2. இராம பிரான் வசிட்டரை யடைந்ததைப் போன்றும், சங்கரர், ஆசிரியர் குகை வாயிலை யடைந்ததைப் போன்றும், இவ் வீரேச முநிவரும், கோவிலூர் மடத்தை யடைந்து, ஸ்ரீ ஆண்டவரையும். துற வாண்டவரையும், தெரிசித்து, மேற்படி ஆண்டவரின் சீடராயும், தவ யோக ஞானங்களில் பூர்ண சித்தி யடைந்து, தம்மை யடைந்த அடியார்களின் அகலாப் பிறப்பை அகற்றும் அருளாள னென்னும் கருணை நிதி என்ற பெயரோடுங் கூடிய ஸ்ரீ சிதம்பர ஞான தேசிகரை முன்னர்ச் சரணடைந்து, அவ் வாசிரியரது பூர்ண அநுக்ரகத்துக்கு முழுப்பாத்திரமாகி, எல்லா உரிமைகளுடனும் இரண்டா முறை பாட மோதுவிக்கும் முறை உடையவராக இருந்ததனால், 'பெரிய சாமிகள்' 'இரண்டாம் பாடச் சுவாமிக' ளென்னும் பெயர்களோடும் கூடிய, பொன்னம்பல ஞான தேசிகரை முறைப்படி வணங்கி நின்றனர்.

அப்போது, இருவருக்கும் நடந்த சம்பவத்தில், இந்த வீரசேகரனிடத்தில் உள்ள, அவதார புருடவிலக்கணமும், இராமபிரானைப் போன்று எல்லாக்குணங்களும் சிறப்பாகப் பொருந்தியிருந்தும், அளவு கடந்த அடக்க முடைமையையும், விநய முடைமையையும்,

கண்டு அப் பெரியார் மரம் போல் அசைவற்றவரே யாயினர். அத்தகைய வீரேசரது பெருமைதான் என்னே!

3. அப் பொன் னம்பலக் குருபரனுர், இவ் வீர சேகர முநிவரது விசேட அதிகாரி யிலக்கணத்தைக் கண்டு, கை யடையோடு தமது ஆசிரியரிடத்தில் அழைத்துச் சென்று, அறிஞர் உண்ணும் அத்வைத தேன் 'ஒழுகும் அரிய செந் தாமரைத் திரு வடிகளை வணங்கச் செய்து, தம் ஆசிரியரை நோக்கி, இவ் வீர சேகர ருடைய குணங்க ளனைத்தையும் வியந் துரைத்து, எந்தையே! தேவரீர் திரு வுள மிரங்கி இச் சிறுவரையும் அடிமை கொண்டருள வேண்டு மென்று, பல வாறு பிரார்த்தித்தனர். அவ் வாசிரியரும் கருணை கூர்ந்து, ஆமை போன்றும், மீன் போன்றும், பறவை போன்றும் தடுத்தாட் கொண்டனர். பல் லாயிரப் பக்குவிகளை ஒரு மொழியால் உய்விக்கும் ஒப் பிலா வுயர்வும், அதி கார உண்மையும் பொருந்திய, இவ் வீரேச முநிவரைக் கோவிந்த பகவற் பாதர் சங்கரரை மாணுக்கராக்கிக் கொண்டது போ லாக்கிக் கொண்டனர். இவ் வீரேச முநிவரும், ஆசிரியர்பால் அள விலா அன்பு கொண்டு, ஆப்தாதி பணிகளை அளவு கடந்து செய்து வந்தனர். இவரது குருபக்தியின் பெருமைதான் என்னே!

4. அச் சமயம் அவ் வீரேச முநிவருக்கு இராம பிரானைப் போன்றே வயதும், 16 நிரம்பியது. இவரது அற்புத அதிகார நிலையைக் கண்டு, அக் குருமரபில் அறிவுறுத்தும் அத்வைத நூல்களினுல் முறையாக நுண்ணிய பொருள் வெளியாம் வண்ணம் போதித் தருளினர். இவ் வீரமா முநிவரும் அடியார் கூட்டத்தில், அன்புடைய ராய்க் காம தேநுவின் கன் றென எல் லோரும் விரும்பும்படி ஒழுகி வந்தனர். அதிகார புருட

ராக விருந்தும், அடக்க முடன் ஒழுகிவந்த பெருமை தான் என்னே!

5. இவ் வீரமா முநிவர், இங்ஙனம் விருப்புடன் ஒழுகிவரும் நாளில், பந்துக்கள் வந்து இல்லறம் நடத்த வேண்டலும், ஆசிரியரின் குறிப்புப்படி ஒருவரும் அறியாது சிக்கலுக்குச் சென்று, சட்டயப்பமுநிவரிடத்தில் சந்நியாசம் பெற்று, மீண்டும் தம் ஞாநாசாரியார் எழுந்தருளியிருக்கும் கோவிலூர் மடத்தையடைந்து, ஆவைப் பிரிந்து மீண்டு வந்தடைந்த கன்றைப் போலவும், ராம பிரானைப் பிரிந்து மீண் டடைந்த இலக்குமணனைப் போலவும், தம் குருவை, ஆரா அன்பு மேலிட்டு, ஆருய் ஒழுகத் தரிசித்து, வணங்கித் துதித்து வாய் பொத்தி நின்று, "மும்மை மலம் அறுக்க வந்த முத்தனே! எம்மையாள வந்த முத்தனே! எம்மையாள வந்த எந்தையே! செய் வகையறியாச் சிறியேன் தேவரீர் திருவுளப்படி சந்நியாசம் பெற்றுத் திரு வடியைச் சரணக அடைந்தேன் ஆதரித் தருளும் ஐயனே!" என்ற அவ் வீரேச முநிவரது அருள் மொழியைக் கேட்ட அவ் வாசிரியர் அருமந்த தந்தை அரு மகவின் அரு மழலைச் சொல்லைக் கனல் மெழு கென மநங் கசிந்து, கேட்பது போலக் கேட்டு, அருள்பாலித்தருளினர். அவதார புருடராகிய இவ் வீர மா முநிவரது குரு பக்தி தான் என்னே!

6. அருள் சுரந்த அவ் வாசிரியர், அவ் வத்வைத மரபின் கண் ணுள்ள, நாநா சீவ வாதக் கட்டளை முதல் ஞாந வாசிட்டம் வரையி லுள்ள 16 நூல்களையும் இனிய கருணையுடன் முறையாக உபதேசித்தருளினர். அவ் வீரேச முநிவரும், அவை யனைத்தையும் ஐயந் திரிபு அறியாமை யென்னும் முக் குற்ற மறச் சிரவணித்தும், மநநம் செய்தும்; நிதித்யாசநம் செய்தும், சந்தேக விபரீதங்கள் நீங்கி, சுவாநுபவத்தில் திடமாக நிலைபெற்று,

முநிவராய் விளங்கி அவ்வடியார் கணங்களுக் கெல்லாம் கண்மணி போன்று, ஆசிரியர் சேவை செய்து கொண்டி ருந்து வந்தனர். இங்ஙனம் இவ் வீர முநிவர், விமல போதத்தில் விழிப்புட னிருந்தமை என்னே!

7. இங்ஙனம் ஒழுகி வந்த வீர மா முநிவர், ஜீவன் முத்தியின் விலக்ஷணாநந்தத்தை விசேஷ மாக அநுப விக்கவேண்டு மென்று கருதி, ஞாநாசிரியரிடத்தில் நல் லாஞ்ஞை பெற்று, நாநா வித மகத்துவத்தோடுங் கூடிய நாநா வித ஸ்தலங்களை நன் முறையில் தெரிசித்துக் கொண்டு, நன்மை பல பயக்கும் ஸ்ரீ நட ராஜப் பெரு மான் நாள் தோறும் நடனம் செய்தருளும் தில்லை யென்னும் நற் பதியை யடைந்து, அந் நடராஜப் பெரு மானின் நற் கழல்களை நாடித் தொழுது துதித்து நல் லடியார்களுக்கு உறைவிட.மாகிய மௌநதேசிகர் மடா லயத்தை நண்ணி, நற் சிற்றறை ஒன்றை யடைந்து, நன்மை பயக்கும் நற் சமாதி யடைந்தும் நம்மை பயக்கும் நற் பிச்சை யேற்றும், நல் லொழுக்கங் களுடன் 12 வருஷம் கிரமப்படி ஒழுகிவர லாயினர். இவரது நீங்காத நித்திய நிமல வடிவ மாகிய நிஷ்டை யைக் கண்டு, நின்மலர்கள் நித்யமும் தெரிசித்து நிரம் பிய மநமுடையவர்களாய், நிரந்தரமும் தாமும் அது போல், ஒழுகிவர லாயினர். இவ் வீரசேகரனுர், தாமும் ஜீவன் முத்தி தசையில் நிலைத் திருப்பதுடன், தம்மைத் தெரிசித்தவர்களும், அந் நிலைக்கு வர நினைக்கும்படி நிகழச் செய்த நிலைமை யான பெருமை தான், என்னே!

8. இங்ஙனம் ஒழுகி வரும் நாளில், முன்னர்க் கோவி லூர் மடத்தில், நம் வீர சேகரனுருக்கு முன் னின்று குரு பரனுரின் திரு வடியை அடைவித்தவரும், மேற்படி மடத் தில் முறை வகுத்துள்ள 16 நூல்களையும், நம் வீர சேகர னுருக்கு இரண்டாங் குரு மூர்த்த மாக விருந்து இரண்டா முறை பாடம் ஓதுவித்தவரும் ஆகிய

ஸ்ரீ பொன் னம்பலக் குருபரனர் தம் ஆசிரிய ராகிய ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகள் விதேக கைவல்ய மடைந்து; காரைக்குடி இராமசாமி ஞானதேசிக சுவாமி கள் மடத்தின் தலைமை வகித்த பின்னர், தம் ஆசிரியருக் குச் செய்ய வேண்டிய விசேடங்க ளனைத்தையும் குறை வின்றிச் செய்து முடித்த பின்னர், அன்னுர் திருவடிப் பாதுகைகளை அன்போடு அங்கத்தில் தாங்கிக்கொண்டு. அமல மான அநேக ஆலயங்களை ஆதரவோடு வழி பாடு இயற்றியும் உறைந்தும், ஆன பின், அம்பல வாணன் ஆநந்த நிர்த்தனம் செய்யும் அம்பலப் பதியை அன்புடன் அணுகி, ஆதரத்துடன் அன் பொழுக ஆரா தித்து, அவ் வாண்டவன் அருளால், ஆங்கு உறைந்து, அடியார்களுடன் அன்புடன் ஒழுகி வர, ஆநந்த நடனன் அருளால், அன்பர்கள் உதவிய ஆதாரப் பொருளால், ஆங் கோர் மடமியற்றி, அடியார்கள் அன்புடன் ஆரணப் பொருள் கேட்டு மனன நிதித்யாசனம் செய்து, நிமல நிட்டையில் நிகழும்படி செய்து, நியமமாக நிகழும் படி செய்தனர். அங்ஙனம். இயற்றி நடத்தி வந்த இயல்பு மிக்க நம் ஸ்ரீ பொன் னம்பலக் குருபரனர், நம் வீர சேகரனரது வியன் னிலையைக் கேட்டு வியப்புற்று வியந்து, வீரேசரை விருப்புடன் காண விரைந்து அழைப் பித்தனர், அழைப்பைக் கேட்ட நம் வீரசேகரனர், விரைந்து வந்து விமலருடைய விமலப் பதங்களை விநய முடன் வணங்கி விருப்புற்று முன் நிற்கவும் அங்ஙனம் நின்ற வீரமா முநிவரை, விமல போத வித்தகராகிய பொன்னம்பலக் குருபரனர் நோக்கி, அன்ப நீ அடைந்து அநுபவிக்கும் அருமை நிலை அரிது அரிது.

மூவர்க்கும், முநிவர்க்கும், முதன்மைச் சுருதிகளுக்கும் எமக்கும், அரிது அரிது அங்ஙன மாயினும், "உமது தவ நிலைக்கு இடையூ றின்றி அநுகூலமாக விருக்கும் ஒரு

இதமான காரியத்தை உரைக்கலா மென்று உன்னு கிறோம் கேட்க மனமுளதேல் இயம்புவோ" மென்றனர். வீரமா முனிவர், சுவாமின் பெரியோர் உரை வேத குரு வாக்கியம் போல் கொள்வேன் எனலும், 'அன்ப! நமது மடத்தில் இரவு தோறும் இடையருது நடந்து வரும் இயல்புடைய வேதாந்த சிரவணத்தை உட னிருந்து கேட்டு இரவில்பிக்ஷையை இவ்விடத்திலேயே ஏற்று, பகலில் உமது நியமப்படி ஒழுகிவர வேண்டுமென்பதே! எமது வேண்டுகோள்' என்றனர். தமது தவத்துக்கு அநுகூலமாக அமைந்த அவ் வுரையைக் கேட்டு ஆநந்த மடைந்து, அவ்வாறு ஒழுகிவர லாயினர். ஆன்றோர் உரையின் கண்ணும், அமல வானந்தத்தின் அனுபவத் தின் கண்ணும், ஆர்வம் அமைந்த அருமை, என்னே!

9. அங்ஙனம் அமர்ந்து வரும் நாளில், கோவிலூர் மடத்தில் தலைமை தாங்கி வந்த. காரைக்குடி இராம சுவாமி ஞான தேசிக சுவாமிகள் பரிபூர்ண நிலை யடைந் தமையைக் கேள்வியுற்று, அத் திருக் கூட்டத்தில் அமர்ந்திருந்த ஆசிரியர் பொன்னம்பலவர் வாக்கில் நின்றும் அசரீரி யெழுந்தவாறு, நமது கோவிலூர் குரு சந்நிதாநத்தை எல்லா வகையிலும் வள முறச் செய்யத் தகுந்தவர் நம் வீர சேகரனாரே யன்றி, திரி வித உலகத் தும் வேறொருவருமில்லை யென்று உதித்தது. மேற்படி உரையைச் செவி மடுத்த நம் வீர சேகரனார் 'கானவர் வலையிற்பட்டுக் கை தப்பி யோடும் மான் போல்' என்ற வாக்கியப்படி விசிராந்தியின் கண் உள்ள விசேடத்தை யும், வியவகாரத்தின் கண் உள்ள விசேட மின்மையை யும், விவரமாக விசாரித் தறிந்தவ ராதலின், விசிராந் தியை விட்டு வியவகாரத்தில் புக வெருண்டு. விரை வாக இரவே ஒருவரும் அறியாது மறைந்து வளவனூர் மடத்திற் சென்று விமலாநந்தத்தில் வீற்றிருந்தருளினர்.

விமலாநந்தத்தில் விருப்பமும், வியவகாரத்தின்கண் விருப்ப மின்மையும், மிகுந் திருந்த பெருமை தான், என்னே!

10. இவ் வீர சேகரனுரது விருத்தாந்தத்தை விமல மாதவராகிய பொன் னம்பலவர் கேட்டு வியந்து, தம் ஆசிரியர் ஸ்தானத்தில் உள்ள அபிமாந ஆர்வ மிகுதியால், அருளடியார் அநேகரை அநுப்பி அமல வீரரை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தனர். அடியார்கள் அருளியதை அவ் வமல வீரர் கேட்டு ஆன்ரூேர் உரை, அரு மருந் தென்னக் கொள்ளும் அன்பு வாய்ந்தவ ராதலின், அஞ்சியும் அஞ்சாது, அவ்விடம் வந்து பொன் னம்பலக் குருபரன் அடியிணையை ஆரு அன்போடு அணுகினர்.

அவ் வன்பரைப் பார்த்து, ஆருமையோடு பொன் னம்பலக் குருபரனுர், 'அன்ப! உனது அரு நிலைமை ஆரணங்களுக்கும், ஆன்ரூேர்க்குர், அமல மூவர்க்கும். எமக்கும் ஆழ்ந்து அருமை யாகக் கொள்ளத் தகுந்ததே யாயினும், ஆசிரியர் ஸ்தாநத் துள்ள அபிமாந மிகுதியால், எம்மையும் அறியாது பேசுவிக்கின்றது. நாமும், நீவிரும், நமக்கு முன்னுள்ளவர்களும், அந்த ஸ்தாநத்தைக் கொண்டல்லவா, யாராலும் அடைய முடியாத அருமை நிலையை யடைந்தோம். இனி மேல் வருபவர்களும் அத் தகைய நிலையை யடைய வேண்டு மல்லவா? அத் தாநத்தை ஆதரிப்பாரின்றி அழிவுற விடுவோமேயானல், செய்ந் நன்றி மறத்த லென்னும் குற்ற முண்டாகுமன்ரூே! ஜீவன் முத்த னுயினும் குரு ஸ்தாநத்தைக் காக்க வேண்டு மென்ற ஆரண வுரையும், ஆன்ரூேருரையும் உள்ளனவே. அவ் வுரையைக் கடத்தல் நம்மனேர்க் கியலுமோ! பகவத் வாக்கியம் போல் திடப் பிரக்ஞனுக்குச் சமாதியும், வியவகாரமும், ஒன்றே யன்ரூே?

வேருக நினைத்தல், அந்த பிரக்ஞைக்கு இழுக்காகு மன்ருே, "வெறிதி ருக்கினும் தொழிலினை மேவினும் அறிஞன் என்று தான் சமாதி விட்டகன்றவனுகும்" என்று கருதிய ராம பிரான் பகவான் ஜநகர் சுரகுபோல் நீவிரும் திருஷ்டி யுடையவராய் ஒழுகல் வேண்டும் என்று அநேக சுருதி, ஸ்மிருதி முதலிய அநேக பிர மாணங்களையும், ஆன்ருேர் ஒழுக்கங்களையும், விரி வாக எடுத்துக் காட்டி, எமதுரையை தடுக்காது ஏற்றுக் கொள்ளவேண்டு மென்றும், யாமும் உமக் குபகார மாகக் குரு ஸ்தாநத்தின் வியவகாரங்களை யுடனிருந்து கவனித்து வருவோம் நீவிர் அஞ்சற்க எனவும், அநேக விதமாகக் கூறி விரும்பலும், நம் வீரமா முநிவரும் ஆன்ருேருரை பிரமாண வுரைகள் ஆன்ருே ரொழுக்கம் ஆசிரியர் ஸ்தாநம் இவற்றில் மிகுந்த அபிமாந முடைய வர்களாதலின், அப் பொன்னம்பலக் குரு பரரின் விருப் பத்துக்கு இசைந்தனர். இத் தகைய நம் வீரசேகரனுர் சீலம் தான், என்னே!

11. தேவர் வேண்டுகோளுக்கு மஹா தேவன் இரங்கியது போலவும், அன்பர் வேண்டுகோளுக்கு கலைக்கோட்டு மகரிஷி இரங்கியது போலவும், பொன் னம்பலக் குருபரனுர் வேண்டுகோளுக்கும், இன்னும் அநேக அன்பர்களின், வேண்டுகோளுக்கும் மனம் ஒப்பி நம் வீர சேகரனுர் மடத்தின் தலைமைப் பதவிக்கு இசைந்து, இராம பிரான் இலட்சுமணருடனும், இன் னும் இதர பரிசனங்களுடனும், அயோத்தியை அடைந் ததைப் போல, நம் வீர சேகரனுரும், பொன்னம்பலக் குருபரனுடனும், இன்னும் அநேக அடியார்களுடனும், கோவிலூர் மடத்தை யடைந்தனர். அங்ஙனம் சுப தினத்தி லுற்று முறையே லிங்கம் நந்தி பலிபீட வடிவமா யுள்ள மூலக் குருவரர்களுக்கு அபிஷேக நைவேத்திய

ஆராதனைகளை விசேஷமாகச் செய்தும், தசரதர் ராம பிரானுக்கே முடி சூட்டவேண்டு மென்று உணர்த்திய வாறு, பரிபூர்ண தசை யடைந்த ராமசுவாமி ஞாந தேசிகர், வீரமா முநிவரையே கோவிலூர் மடத்தின் தலைவ ராக்க வேண்டு மென்றுணர்த்திய தன்மையை ஆங் குள்ள, தநவைசியர், அன்பர்கள், அடியார்கள், அனை வருக்கும் உணர்த்தி, அவர்களனைவர்கள் உடன்பாட்டின் பேரிலும் ராமபிரானுடைய மகுடாபிஷேகம் போன்று, சுபாநுஞு, மார்க்கழிமீ சுப முகூர்த்தத்தில் அங்குள்ள, வேதாந்த போதகாசாரியர் பீடத் திருத்தி, பட்டாபி ஷேகம் செய்து, பூசித்துப் போற்றி, வாழ்த்தி, வேதாந் தோபதேசம் செய்யுமாறு, செய்து, 'வீர சேகர ஞாந தேசிகர்' என்னுந் திருநாமத்துடன் விளங்குமாறு ஏற் பாடு செய்தனர். இங்ஙனம் பொன்னம்பலக் குருபரர், லெட்சுமணர் ராம பிரானுக்குப் பட்டாபிஷேகம் செய் வித்து, அவருக்கு, உறு, துணையாக இருந்து, எல்லா வியவகாரங்களையும், இனிதுற நடத்தியவாறு, நம் வீர சேகர ஞாந தேசிகருக்கும், உறுதுணையாக விருந்து, எல்லா வியவகாரங்களையும், இனிதுற நடத்திவந்தனர். அவ் விருவர் மநமும், இராம லெட்சுமணரைப் போலவும், சம்பந்தர் அப்பரைப் போலவும், யாக்யவல்கியர் கார்க்கியைப் போலவும், அன்பு இணைபிரியாது, அமைந்திருந்தன. மூவுலக வியவ காரமும் ஒருங்கே யமையினும் சிறிதும் சலிப் பற்று, ராம பிரானையும், ஜநகரையும், அஜாத சத்துருவையும் போன்றும், சூடாலை, சிகித்துவசனைப் போன்றும், திட ஞாநத்துடன் கூடியிருந்த தன்மையையும், சுரகுவைப் போன்று, வியவகார வேளையெல்லாம் சமாதியோடு கூடியிருக்கும் தன்மையையும், வியவகாரங்களை எல் லாம் கிருஷ்ண பகவானைப் போன்று, சலிப் பின்றி

விநோத மாகச் செய்யும் தன்மையையும், சில நாளில் கண்டு, பொன்னம்பலக் குருபரர், மடத்து வியவகாரங் களை யெல்லாம், வீரசேகரனரையே ஏற்கும்படி இசையச் செய்து விட்டு, எழில் மிக்க தமது இருப்பிடம் சேர்ந் தனர். வீரசேகரனரது ஞாந வலிமையோடு கூடிய வியவகார வலிமையிருந்தவாறு தான் என்னே!

12. இவ்வாறு, குரு ஸ்தாநத்தை யேற்று நடத்த இசைந்த போது, வேதாந்தத்தில், 35 தத்துவங்களே உள்ளன. 36 ஆம் தத்துவமே தானெனக் காட்ட, நமது வீரசேகரனருக்கு 36 வயது நிரம்பிய அறிகுறி தான், என்னே!

13. இவர் அவதார புருடர் ஆனதினலும், திரு நெல்லை யம்மன் அருளும், மூல குருபரர் மூவரின் அருளும் ஒன்று சேர்ந்து, இவரிடத்தில் பொருந்தி யிருத்தலின லன்றே, இவர்பால் அருள் வலி, ஞாந வலி, பாட மோது விக்கும் வலி, அபக்குவிகளை பக்குவிக ளாக்கும் வலி வியவகார வலி, முதலிய பல சத்திகளும் ஒன்று சேர்ந்து விளங்கின. எல்லாச் சத்திகளும் ஒருங்கு அமைந்திருத் தலி னன்றே ஆசாரிய பரம்பரையிலுள்ள, ஒழுக்க வ்தி முறைகள் அணைத்தையும் சிறந்த முறையில் நடத்திச் சங்கரக் குருபரன் போல், குருபர மணியாக விளங்கினர். இந்திரனும் நாணும்படி, இந்திர சபை போன்று, கைலாசக் கொட்டகை முதலியன இயற்றியும், சத்திய லோகப் பிரமனும் நாணும்படி, பிரம விசாரம் செய்யும் பிரம சபை யியற்றியும் விசுவகர்மாவும் நாணும்படி, அநேக விசித்திர சிற்பங்களோடுங்கூடக் கைலாசம் போன்று, விளங்கத் திரு நெல்லை யம்மை, கொற்றவா ளீசர் ஆலயங்களையும் நிர்மாணித்தனர். முன்னுள்ளவர் களும், இப்போ துள்ள விஞ்ஞாநிகளும், இனி மேல் வரும் விஞ்ஞாநிகளும், கண்டு பிரமிக்கும்படியான முறை

யில் சிவாலயமும், மடமும், குரு ஆலயங்களும், புதுச் சிருஷ்டி போலத் தோற்றமுற்று விளங்கின; பிரம லோகம் ஒன்றே, அந் தந்த உபாசகர்களுக்கு அந்தந்த உலக மாகத் தோற்றுவதைப் போலக், கோவிலூர் ஒன்றே, எந் தந்த அடியார்கள், எந் தெந்த விதமாகப் பாவிக்கிறுர்களோ, அந் தந்த வடிவமாகத் தோற்ற மளிக்கும் நிலைமையி லிருந்தன; பிரமனே நம் வீரசேகரனு ராக வந்து பல வளங்களோடுங் கூடிய கோவிலூர் என் னும் நகரைச் சிருஷ்டித்தனரோ வென்று, எண்ணும்படி யாக விளங்கியது, இவ்வாருக்கிய இந்த வீர சேகரனர் ஆற்றல் தான், என்னே!

14. ஸ்ரீ கொற்றவா ளீசர், திரு நெல்லை யம்மை யின் கும்பாபிஷேகமும், முன்னுள்ளவர்களும், இப்போ துள்ளவர்களும், இனி மேல் வருபவர்களும், இத் தகைய வைபவத்தோடு, மனித சுபாவ முடையவர்களாற் செய்ய முடியாது என்று கருதும்படியும், கும்பாபிஷேகத்தைப் பற்றிக் கூறும் சாஸ்திர விதி முறைகளில் சிறிதுங் குறை வின்றி, அதி விசேஷ மாகச் செய்து முடித்தனர். கும் பாபி ஷேகத்தில் யார் யாருக்கு எது எது செய்ய வேண்டுமோ அவை யனைத்தையும் கொண்டல் போல் போதும் போது மென்னப் பொழிந்தனர். இவ் வினிய வீரேசரது இனிய பெருமை இருந்த வாறு தான், என்னே!

15. இவ் வீரமா முனிவர் முன்னொரு முறை சிருங்க கிரிச் சங்கராச்சாரிய சுவாமிகள், இராமேச்சுவரம் யாத் திரையாக வந்து, இராம நாதபுரத்தில் தங்கியிருந்த போது, பொன்னம்பலக் குருபரனின் வேண்டுகோளின் படி, கோவிலூர் மடத்துக்கு அநேக உபசார மரியாதை களுடன் அழைத்து வந்து, ஆரு, அன்பால் அளவுகடந்து

ஆராதித்த அருமையைக் கண்டு, 'ஆசிரியர், அன்பர்காள் சிருங்க கிரியில் எழுந்தருளியிருக்கும் சாரதா தேவிக்கு கருங் கல் திருப்பணி யாக்கித் தரல் வேண்டும்' எனலும், அந்த ஆக்ஞையைச் சிரமேற் ருங்கி, அன்பர்கள் பொருளுதவியால், அச் சாரதா தேவியின் ஆலயத்தை இழைத்த கருங் கல்லால் கோவிலூர்த் திரு நெல்லை யம்மை ஆலயம் போல், ரூபாய் ஐம்பதினுயிரம் செலவில் அழகுற அமைத்து கும்பாபிஷேகமும் சிறப்புறச் செய்து முடித்து வைத்தனர். மறு முறை கீலக வருஷம் சித்திரை மாதம் 11வ குரு வாரம் சப்தமி திதி உத்திராட நக்ஷத்திரம் மிதுன லெக்கிநத்தில், திரு நெல்லை யம்மனுக்கு நடத்த கும்பாபிஷேக விசேஷத்துக்கு அழைத்து வந்து தெரிசநம் செய்து வைத்தார்கள். அவ் வாசிரியர்? கோவிலூர் கோவில் மடத்தின் நிர்மாணத்தையும், கும்பாபிஷேகம் நடந்த வைபவத்தையும், ஆயிரக்கணக்கான அடியார்களை வைத்து ரக்ஷிக்கும் கருணை வலி, ஞான வலி, வியவகார வலி, எல்லா வழி பாட்டின் வலி, எல்லாம் ஒருங்கே யமைந்திருப்பதையும் நோக்கி, மனிதப் பிறவியால் இவைகள் இயல்வ தல்ல. அவதார வடிவமே யென வியந்து பூரிப்பை யடைந்தனர். அக் கோவிலூரின் வளங்களைக்கண்டு அவ் வருஷம் சித்திரை மாதம் நடத்த வேண்டிய சங்கர ஜயந்தியையும், வீரேசன் உதவியால் வெகு விமரிசையாக நடத்தி, அங்குள்ள வேத பாடசாலையில் தங்கியிருந்தார்கள், அதன் பின், மடத்தில் அமைக்கபட்ட பிர்ம சபைக்குப் பல வைபவங்களுடன் எழுந்தளிவந்து நம் வீரசேகரனுரால், அளவு கடந்த அன்போடு, அளவற்ற முறையில் ஆராதனை செய்யப் பெற்று, மனக் களிப்புற்ற அவ் வாசிரியக் கோமானுர், முன்னர் சிருங்க கிரி ஸ்ரீசாரதா தேவியின் திருப்பணியை அழகுடன்

முடித்து வைத்துக் கும்பாபிஷேகமும் செய்து வைத்தமைக்கும், இப்போது தமக்குச் செய்த ஆராதனைக்குமாக அன்பு மேலிட்டு இவை மனிதப் பிறவியால் செய்யத் தகுந்தவை யல்ல, இவ் வீரேசர் தெய்வப் பிறவியே என உணர்த்தச், சாரதா, தேவியைப் பார்த்து, இவ் வீரேசனுக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டு மென்று, வீரேசன் என, மகுடம் வைத்து, ஆசீர்வாத பஞ்சரத்தினத்தைச் செய்தருளினர். நம் வீர சேகரனுர் அவ் வாசீர்வாதத்தை அன்போடு ஏற்று, அவர்கட்கு வேண்டிய சத்காரங்களைச் செய்து, மற்றும் பல வாழ்த்துக்களையும் பெற்று, ஜீவன் முத்தராய் வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் சுபாநு வருஷம், மார்கழி மாதம் முதல் விரோதி கிருது வருஷம் வைகாசி மாதம் வரை 27½ வருஷம் மடாதிபத்தியம் வகித்து மனிதற்கியலாத காரியங்களை எண்ணிறந்த வகையில் இயற்றி, வாழ்ந்து வந்த புதுமைதான், என்னே!

அநுக்ரக நிக்கிரகச் செயல்களைக் கூறின் விரியுமென்னும் பயத்தால் கூற இயலவில்லை.

16. இங்ஙனம் தாம் அவதரித்த காரியங்கள் முற்றும் பூர்த்தியாகி விட்டன வென்று எண்ணும் போது, பின் பயனைப் பயக்கும் நல் வினை பிரகடனமாக இன்னுமொரு காரியம் குறைவுற் றுளது என்னும் எண்ணம் உதயமாயிற்று. அது யாதெனில், பல சிறப்புக்களும் பொருந்திய, சோழ வள நாட்டில், மூவரால் தேவாரப் பாடல் பெற்ற சிறந்த ஸ்தல மொன்றைச் சிறப்புறப் பணி செய்து, சிறந்த முறையில் கும்பாபிஷேகமும், திரு விழாவும், புதிய பெருவிழாக்களையும், சிறப்புறச் செய்து தெரிசிக்கவேண்டு மென்பதேயாம், சங்கர பகவற் பாதர், தான் அவதரித்துச் செய்ய வேண்டிய

காரியங்கள் முழுதும் முற்றுப் பெற்றன வென்று முடிவுற வெண்ணும் போது, முறையாகச் செய்யும் மீண்டுமோர் காரியம் எஞ்சி யுள்ளது என்று எண்ணினர். அது 'சர்வக்ஞ சிங்காசந மேறிச் சகல பூமண்டலாபி ஷேகர்' என்னும் விருது பெற வேண்டியதேயா மென்று கருதி, யக் காரியத்தையும் விரைவாகச் செய்து அமல பதத்தை யடைந்தவாறு, நம் வீர சேகரனுருக்கும் தோன்றியது வியப்பாங் கொல்லோ, இருவரும் சிவாவ தார மாகலின், வியப்பன்று என்க. சங்கர பகவற் பாதர் அவதரித்த பின்னர், 'அநேக தேவர்களும், மால் பிரமன் முதலியோர்களும், அவதரித்து, மாணுக்கராக வந்தடைந்த பல்லாயிரவர்களுள், ஒவ்வொரு திசையை வெல்லும் கல்வி யாற்றலும், ஞான வலியும், தவ வலியும், யோக வலியும், உடையோரா யிருந்தனர். அவருள்ளும், பத்ம பாதர், முதலிய நால்வரும், மும்மூர்த்தி வடிவ விசேஷ தேவதைகளின் அவதார மாகலின், விரிக்க முடியாத, விசேஷ ஆற்றலுடையோரா யின்றளவும், இனி மேலும், விசேஷமாக விளங்கி வருதல் போல, நம் வீர சேகர முநிவருக்கும், பல்லாயிர மாணவர்கள், பல தேவதைகளி னம்ஸமாக வந்தவதரித்து, பரனுகிய வீர சேகரரது மாணுக்கராய் முன் கூறிய பல ஆற்ற லுடையோராய் விளங்கினர். அவருள்ளும், வேங்கட்ட மாமுநிவர், வெள்ளி யங்கிரி மாமுநிவர், அண்ணுமலை மாமுநிவர், நாராயண மாமுநிவர், மகா தேவமாமுநிவர், சிவாநந்த மாமுநிவர், இவ்வெண்மரும், விசேஷ அவதார வடிவ மாதலின், விசேஷ எல்லா ஆற்ற லுடையோரால் விளங்கினர். அவருள்ளும், வேங்கட்ட மாமுநிவர், சுப்பையயா மாமுநிவர், காசிகாநந்த மாமுநிவர், சிவா நந்த மாமுநிவர், ஆக இந் நால்வரும், நாற்றிசையிலு வெல்லும் எல்லா ஆற்றலு முடையராய் விளங்கினர்.

சங்கரர் மாணுக்க ருடைமையைப் பார்க்கிலும், வீரமா முநிவர், மாணுக்க ருடைமை, ஒருபடி மேலாகக் கருதும் படியாகவே யிருந்தன. அன்னுரின் மாணுக்கர்களே யுடைய தன்மைதான், என்னே!

17. இங்ஙனம், நம் வீர சேகர முநிவர், வாழ்ந்து வரும் நாளில், வாத வூரர் திருப் பெருந் துறையில். திருப் பணி முடித்துத் திருந்திய பத மடையத் திருத் தில் லேயை யடைந்தவாறு, நம் வீரசேகரனுரும், பல வளங் கள் பொருந்திய பாண்டி வள நாட்டில் முன் பல முறை மொழிந்தவாறு பலவும் செய்து முடித்துப் பரமான்ம லாபத்தைப் பயக்கும் பல வளங்களும் பல சிறப்புக் களும் பொருந்திய, சோழவள நாட்டில் முன் கூறியபடி, மூவரால் பாடல் பெற்ற முதன்மையான ஸ்தல மொன்றை முற்றுப் பெறச் செய்யவேண்டு மென்ற முதன்மையாகிய எண்ணம் முடிவிலாது உதித்துக் கொண்டிருந்தது. மேற்கூறிய சோழவள நாட்டின்கண், பூ, தேவியின் திலகம் போல, இலகும் பல வளங்களும் பொருந்திய திருக்களர் என்னும் ஒரு திவ்ய ஸ்தலம் திருவுடனிருந்து வந்தது. அத்தலமானது, தில்லேயில் பதஞ்சலி வியாக்ரபாதர் முதலிய முநிவர்களுக்கு, ஒரு நாள் தெரிசனம் கொடுத்த காலத்தில் அத் தெரிசனத் தைப் பல காரணங்களேக் கொண்டு பார்க்க இயலாத, துார்வாசர் மனக் குறையை நீக்க, முன்னூற் றறுபது நாளும் தெரிசனம் கொடுப்பதாக வரமருளி, அது போல, தெரிசனம் கொடுத்தருளியதும், கந்தமாதன பர்வத வாசிகளாகிய. அறுபதினுயிரம் இருடிகளுக்கும், பதினுயிரவருக்கு ஒரு முகமாக, அறுபதினுயிரவருக்கும், பஞ்சாக்ஷரத்தை, 21 முறை, எழுத்து மாற்றி, மாறிமாறி, உபதேசித் தருளிய சிறப்புடையதும், அத் துருவாச

ரால், தெய்வ கம்மியனைக் கொண்டு எல்லாப் பணிகளை யும், மாடமாளிகையுடன் வா னளாவ இயற்றியும், பெரு விழா முதல் எல்லா விழாக்களையும், வரன் முறையாக நடத்தியும், வரை யறுக்க முடியாத பல காரியங்களைச் செய்தும், தெரிசித்தும், பல வரங்கள் பெற்றும், இன் றளவும், இனிமேலும், ஆநந்த தெரிசனம் பெற்று, அமர்ந்து வரும் தன்மை வாய்ந்ததும், துருவாசராலும், மாலாதாரகன் முதலிய அநேக அரசர்களாலும், வணங்கி, அநேக மானியம் வழங்கி, அமல பதமடையப் பெற்றதும், மூவரில் சம்பந்தர் அப்பரால் தேவாரப் பாடல் பெற்றதும், அத் தேவாரப் பாடலில், அறைந்த படி அநேக வளங்கள் பொருந்தியதுமாகும். அத் தகைய தலம் காலாந்தரத்தில், காப்பா ரின்றி ஜீரண முற்று, மானியங்களையும், அநேகர் எடுத்துக்கொண்டும், பூசை நைவேத்யம்கூடச் சிறந்த முறையில் நடக்கா மலும், பகலிலேயே, கோவிலுக்குள் செல்வதுக்கும் இயலாத முறைமையில், காடுகள் மூண்டு, மிகவும் ஜீரண முற்றிருந்தது; இந்தப் பரிதாப நிலையைப் பூவ னூர் என்னும் தலத்தில் அவதரித்து ராசு முதலியார் என்னும் சிவத்தொண்ட ராய்ப் பூசலார் நாயனாரைப் போன்று அத் திருக்களர் ஸ்தலத்தை முன் போலவே, திருப்பணி செய்வதாக சதா பாவித்துக்கொண்டும், "திருக்கள ரீசன் றிருப்பணியை எவரைக் கொண்டு முடித்துக் கொள்வம்" என்ற இடையறு எண்ணத் துடன் இருந்து வந்தனர். முருகப் பெருமான் கலியுக வரதரும் சிவ சொரூபரு மாதலின்; தம் இரு தொண்டர் களாகிய வீரமா முநிவர், இராசு முதலியார்களின், எண் ணம் முற்றுப் பெறச் செய்யவும், அவ் வீரமா முநிவரும், தாமும், சிவ வடிவமே யாதலின், தம்முடன் ஐக்யப்படுத் திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினால், தமக்குச் சுவாமி மலையில் கும்பாபிஷேகம் செய்ய வியற்றி

யருளினர். இத்தகைய, ஈறிலாச் சங்கற்பத்தால், இணை யடியார்கள், ஈறிலா முயற்சியினுல், இணையற்ற கும்பாபி ஷேகம் செய்ய வேற்பாடு செய்தார்கள். அக் கும்பாபி ஷேகத்திற்குத் தந வைசியர்கள், நம் வீரமா முநிவரை, விருப்புடன் வர வேண்டு மென்று விழைதலும், விமலனும், விருப்புடன் வருவதாக, இசைந்து வந்தருளி னர். அக் கும்பாபிஷேகத்துக்கு முற்கூறிய இராசு முதலியாரும், சென்றிருந்தனர். இருவருடைய நல்வினை யும் கூட்டுவிக்க, இருவருக்கும் சந்திப்பும் ஏற்பட்டது. இவ் வீரமா முனிவரது, அவதார விசேஷத்தின் பொலிவு, அந்த இராசு முதலியாருக்குச் சிவமே யெனத் தோன்றியது. "இப் பெருந்தகையாரே, நமது எண் ணத்தை இடை யின்றி முடிக்கச் செய்யத் திருக்கள ரீசன் நமக்கு ஈந்தனர்" என்று தெரிந்து, வீரமா முனி வரை, விதிப்படி வணங்கி, வினய பாவத்துடன் நிற்க, முனிவரர், யாரென்று வினவத் தமது வரலாற்றைச் சிறிது உரைத்ததுடன் திருக்களர்த் தல வரலாற்றைப் பலவகையாக விரித்துரைத்தும், இப்போதுள்ள மேற் படி ஸ்தலத்தின் நிலைமையையும், தெரிவித்தும், "சுவாமி கள் வந்து ஒரு தரம் தெரிசிக்கின், எமது மனக் குறை நிவர்த்தியா" மென்றனர். அவ் வீரமா முனிவரும், திரு வுளமுளதேல், ஆகுக, "எமக்கும் தாம்மொழிந்தது போல், சிறிது எண்ணமுண்டு." என்று மொழிந்து, கோவிலூர் சென்றனர், ராசு முதலியாரும், தமது இருப்பிடம் சென் றனர். அது முதல் வீரமா முனிவருக்கு திருக்களர் திருப்பணியின் எண்ணம் அதிகமாக வளர்ந்து கொண்டே யிருந்தது. அதற்கு இயைய, ராசு முதலி யாரும், கோவிலூர் சென்று விதிப்படி வணங்கி, முருகன் சந்நதியில் சந்தித்து பேசியதை நினைவூட்டித், "திருக் களர் ஷேத்திரத்துக்கு எழுந்தருள வேண்டு" மென்று பலவாறு வேண்டினர்.

அதற் கியைந்து சுபதினத்தில், அமரர்கள் வேண்டு கோளுக்கு இரங்கி, அறுமுகன் வந்தது போன்று, அவருடன் திருக்களர் ஷேத்திரத்துக்கு வந்து, ஸ்ரீ பாரிஜாத வனேசுரரையும், அமிர்தவல்லி யம்மையாரையும் தெரிசித்து, இரண்டொரு நாட்கள் தங்கி திருப்பணி செய்யத் திருவுளங் கொண்டு, அத் தொண்டரிடம் சிறு பான்மை செய்யலா மெனக்கூறி, அவர் மனதைச் சந்தோஷிப்பித்துக் கோவிலூருக் கெழுந்தருளினர்.

அதன் பின்னர், முத்தர் வணங்கும் வித்தகரின் சத்திய சங்கற்ப மானது, பயனை ஈயும் பொருட்டு நெருங்கிவர, முன்னர் வந்து சென்ற தொண்டர், மீண்டும் கோவிலூர் வந்து, "வீரமா முநிவரை விதிப்படி வணங்கி எல்லா ஆற்றலும் எளிதிலமைந்த இறைவனே, நீவிர் வந்து திருப்பணி தொடங்கின், இறைவனருளால் இனிது முடியும்" என, இனிது வேண்டலும், அதற் கிசைந்து, சௌமியஞு ஐப்பசிமீ 7உ ஆகிய சுபதினத்தில் திருக்களர் வந்து, சோம சுந்திரத் தபதி துணையுடன் பவத்திற் கஞ்சிய பக்குவிகட்கு அபயஸ்தம் கொடுத்தருளும் தம் திருக்கரங்களால், உளிகொண்டு கொத்தித் தச்சு செய்து, வேலை, ஆரம்பித்தருளிச் சுவாமி அம்மன் மற்றை பரிவார முகூர்த்தங்களையும், வசந்த மண்டபத்தில் பாலர்லயம் செய்து நாலு கால பூசையை நன் முறையில் நடத்தி வரச் செய்தனர். அது முதற்கொண்டு, திருக்களரை ஆளவந்ததனால், திருக்களர் ஆண்டவ ரென்னும் காரணப் பெயருடன் விளங்கிய தெய்வீகத் திரு வவதாரத் தேசிகோத்தமர் எடுத்த திருப்பணி, இனிது முடிவுறத் தமது அருள் வலியால். அன்பரிடத்தில், அநேகம் பொருளீட்டி. இடையறுது முட்டின்றி, அண்ணிய தொண்டர்களின் அங்கப் பணியை அணியாகக் கொண்டு, அரும்பணியை, அழகாகச் செய்து வந்தனர்.

இங்ஙனம், ஆரம்பித்த மூன்றுண்டுக் குள்ளேயே, அந்தண ருருவாய் வந்து, ஸ்ரீ பாரிஜாதவநேச்சுரர் கனவிற் சொன்ன, குறிப்பின்படி, பெரியராஜ கோபுரமும், பெரிய திரு மதில்களும், அல்லாது, மற்றை, எல்லாத் திருப்பணிகளையும், கருங் கல்லால் கண்டாரும், விசுவ கர்மாவும், வியக்கப் புதிதாகக் கட்டியும், பெரிய ராஜ கோபுரம், பெரிய திருமதில்கள் இவைகளைப் பழுது பார்த்தும், சுவாமி அம்மன் முதல் எல்லா மூர்த்தங்களுக்கும் வெள்ளிக் கவசங்களும், தங்க அங்கியும், வெள்ளி தங்கக் கிரீடங்களும், உத்ஸவத்துக்கு வேண்டிய தங்க வயிர நகைகளும், அமோகமாகச் செய்தும், சோடசோபசார, பூசை முதலியவைகளுக்கு உரித்தாகிய எல்லா உபகரண சாமான்களும், எல்லாத் தீப வகைகளும், எடுபிடி உபசாரத்துக் குரித்தாகிய, குடை சுருட்டி முதலிய, எல்லா வகைச் சாமான்களும், நித்ய பூசை விசேஷ பூஜைகளுக்கும், பெரு விழா முதலிய, எல்லா விழாக்களுக்கும், வேண்டிய எல்லாச் சாமான்களும், இன்னுென்று வேண்டுமென்று கருதுவதற் கிடமில்லாது, பூர்ண மாகச் சேகரித்தும், பெருவிழாப பத்து நாளைக்கும் உரித்தாகிய (24) இருபத்து நான்கு வகை வெள்ளியிலும், மரத்திலும் வாஹனங்கள், தெய்வ லோகத்திலிருந்து உயிருடன் வந்தனவோ, என்று நினைக்கும்படி, அணிபெற வியற்றியும், பஞ்ச மூர்த்திகளுக்கும் பஞ்ச ரதங்களும், ஐந்து தேர் முட்டிகளும், துர்வாச தீர்த்த முதலிய தீர்த்தங்களுக்கு, கற்படித் துறை முதலியபடித் துறைகள் கட்டியும், வேதாந்த மடம், குரு பூஜை மடம், (3) மூன்று வேதங்கட்கு பாட சாலைகள். பசு மடம், நந்தனவனம், அக்ரகாரம், மற்றும், பல மாளிகைகளைச் சிறப்புறச் செய்தும், தேரோடும் வீதிகளைப் புதிதாக சிறப்புற அமைத்தும், திருக்களர் க்ஷேத்திரத்தைக், "கருத்துயர் அறுக்கும் கைலாச" மென ஆக்கினர்.

நோக்கும் மற்றைய மதஸ்தர்களுக்கும், மற்றைய வுலகங்களாக கருதும்படியும், தோற்றமளித்தன. வருஷ மூன்றுக்குள் பல லெட்சம் ரூபாய் செலவு செய்து, வாதவூரடிகள் போன்று, தெய்வ சிப்பி யமைப்பிற் கொப்ப, செயற் கரிய சித்திரங்களுடன் திருப் பணி யாற்றி யருளிய வீர சேகரனர், அருள் வலி யிருந்த வாறுதான், என்னே !

18. இத் தகைய செயல், அவதார புருடர்க் கன்றி, மற்றையோர்க்கியலுங் கொலோ! அன்னரது அநுக்ரகச் செயலும், நிக்ரகச் செயலும், அளவிடர்க்கு அரிய முறையிலிருந்த வாறுதான், என்னே !

19. இங்ஙனம் திருக்களர் க்ஷேத்திரத்தை தருக்கிளர் தண் சோலை சூழ்ந்த தெக்ஷிண கைலாசம்போல், ஆக்கி, இறைவன் றிரு வருளால், கும்பாபிஷேகம் செய்ய வெண்ணி, ஆலயம், யாகசாலை, முதலியவற்றை, சாத்திர முறைப்படி, அள வற்ற விசேஷங்களோடு கூட அலங்கரித்தும், யாககுண்ட முதலியவற்றை யமைத்தும். எல்லா மங்கல ஒலிகளும் ஒலிக்க, விரோதி கிருது ௵ சித்திரை மாதம் 22௳ வியாழக் கிழமை பூர்வ பக்ஷம் சஷ்டி திதி சித்த யோகம் மிதுன லெக்னம் புனர் பூச நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில ஆதிசேஷனாலும், அளவிட்டுக் கூறற் கரிய முறையில், மிகுந்த விசேஷங்களோடு, கும்பாபிஷேகம் செய்தருளி, வேண்டுவர்க்கெல்லாம் வேண்டுவன, போதும் போது மென்னக் கொண்டல் போல் பொழிந்தனர். கும்பாபிஷேகத்தைக் கண்டு களிப்புற்றோர்கள் ரிவித திகாலத்தும் எத்தகையோராலும், இத்தகைய கும்பாபிஷேகத்தை இயற்ற இயலா தென்று, வியந்து பாராட்டினர். இத்தகைய அருள் வலி யிருந்தமைதான், என்னே !

20. மேற்படி வைபவம் முடிந்தவுடன் கோவிலூருக்குச் சென்று, தன்னிலை யுணர்ந்து, முன் பல விசேஷங்களோடு நடத்திவந்த திரு நெல்லையம்மையின் ஆடிப் பூர உத்ஸவத்தின் முறைகளைப் பல முறையாக வகுத்துச் சிறிதும் தவறாது, ஆராதனை முதல் வீதி வுலாவரையிலும் அனைத்தையும், ஏட்டில் எழுதுவித் தருளினர் இஃது சிவப்பணி குறையாது நடைபெற வேண்டுமென்ற சிவ நேசமும், தனக்குப் பின் வருபவர்கள் மனக் கிலேச முறாதிருக்க வேண்டுமென்ற கருணையுமன்றோ? அங்ஙன மியற்றியது. மற்றும், அங்குத் தன் மாணக்கர்களுக்குப் பாட மோதிவந்த வாசிட்ட ஞான நூலினைப் புண்ணிய பாவனர் கதையில், தீர்க்கதவனுகிய தந்தை வியோக மாகும் சந்தர்ப்பத்தில், நிறுத்தியருளினர். அதனை 'நோக்குமிடத்து மாணக்கர்களுக்கு பாட மோதுவித்தலி னின்றும் நீங்கித் தேக வியோக மாகு மென்பதைக் குறிப்பினல் உணர்த்தியதாகும். அஃதன்றியும், திருக் களர் பிர்மமோத்ஸவத்துக்கு வருங்கால், தமது சகடத்தில் பூட்டிய இடபங்களை குறைந்த விலைக்கு விற்கும்படி செய்தருளினர். இனி மேல், "தாம் சகடம் ஏறுவதில்லை" யென்பதைக் குறிப்பதாகும். இத்தகைய வுணர்ச்சி, ஏனையோர்க்கு யியலுமோ, நம், வீர சேகரனருக்கு இருந்த வாறு தான், என்னே!

21. பின்னர், வீர சேகரனர் திருக் களர் வந்து, துரிதத்துடன் கும்பாபிஷேகத்தி லிருந்து 45ம் நாள் நடத்த வேண்டிய மண்டலாபிஷேகத்தை, வைகாசிமீ 13வ வெள்ளிக்கிழமை யாகிய இருபத்தைந்தாம் நாளிலேயே, நடத்த வேண்டுமென்று, ராசு முதலியார் முதலிய அன்பர்களிடத்தில் அருளாலும், அவ் வன்பர்கள், அந்தோ! திருப் பணியிலும், கும்பாபிஷேகத்திலும், அனைவரும் மிகவும் நொந்திருக்கின்றன ராதலின், நாற்பத்தைந்து

நாளும் செல்ல விடின் நய மென நவின்றனர், அதற்கு நம் முனிவர் இருபத் தைந்தாம் நாளிலேயே நடத்துவது திரு வுளக் கருத்தா மெனவும், அருட் சங்கற்ப முன், மருட் சங்கற்பம் நிற்குங் கொலோ! ஆதலி னனைவரு முடன்பட்டனர். இவ்வாலயத்தில் சித்திரை மாதம் நடைபெற வேண்டிய பிரம்மோத்ஸவமும் இத்தருணமே நடைபெற வேண்டு மென் றியம்பலும், அந்தோ! சுவாமிகள்! அவதார புருட ராதலின், சிரமம்தோன்ரு துறினும், எம்மனோர்க்கும், பணி யாட்களுக்கும், இயலாத தாக விருக்கின்றதே, தமது திரு வுளப் பாங்கின்படியே, மேல் வருடம் திரு வுலா நடத்தின் யாமனைவரும் உடனிருந்து சிறப்பாக நடத்துவிக்கின்ரேம்'' என்றனர். விருத்த ராகிய அருள் வலிச் சிவன்முன், மருள்வலிச் சுந்தரரின் வாதம் நிற்காதது போல மருள், நோக்கமுடைய மற்றை யோர்களின் நோக்கு, அருள் நோக்குடைய வீர முநிவரின், நோக்கின் முன் நிற்குங் கொலோ! மேலாண்டு நடக்கும் விழாவை யாமிருந்து காணல் நிலையாமோ வெனலும், எல்லா அன்பர்களும் ''அங்ஙனமே ஆகுக' வென விசைந்தனர். பின், வீர மாமுனிவர், அவ்வை காசி மாதம் பூர்வ பக்ஷம் சதுர்த்தி திதி புநர் பூச நக்ஷத்திரம் கூடிய சுபதிநத்தில். ஸ்ரீ அமிர்த வல்லி யம்மை சமேத பாரிசாத வனேசுவரருக்கு பெரு விழா நடத்தற் பொருட்டு ரிஷபக் கொடி யேற்றியருளினர். இவ் வீர சேகரேசரது, முன்னுணர்ச்சியிருந்த வாறு, தான் என்னே!

22. தாம் உத்தமாம் பதவடிவா யுறையும் காலத்தை உணர்ந்த உத்தம ராம் வீரேச முநிவர், ராசு முதலியார் முதலிய வன்பர்களுடன் பத்து நாள் உத்ஸவத்தையும், பல சிறப்புக்களுடன் பஞ்ச மூர்த்திகளையும், பலவகை வாஹனங்களில், பலவகை யலங்காரங்

களோடும், பலவகைச் சிறப்போடு பலருங் கண்டு பாடும்படியான முறையில், பல் பல நாத முழக்கங் களுடன் பாங்குற, நாலிரு விழா வரை நன்ருக வியற்றி யும் ஒன்பதாம் விழாவில் பஞ்ச மூர்த்திகளேயும், பஞ்ச ரதங்களில் எழுந்தருளச் செய்து, ராசு முதலியார் முதலிய பல பக்தர்களேக்கொண்டு, பல ஆட்களேச் சேர்த்துப், பஞ்ச ரதங்களும், பவனி வரத் திரு வீதியில் ஈர்க்கச் செய்தனர் தாமும், தமது அபயத் திருக் கரத் தால். திரு வடத்தைப் பற்றி ஈர்க்கலும், கணேசர், முரு கேசர், தேர்கள் கரைபுரண்டோடி வடக்கு வீதியின்கண் நிற்கவும், சுவாமியின் தேர் அதிவிரைவாகச் சென்று, தென்வீதியின் கீழ்க்கோடியில் நிலேத்து நின்று விட்டது. அன்பர்கள் அதிகமாக முயன்றும் அசையவேயில்லே. அதனுல் அருள் முநிவருக்கு அருள் முத்தியளிக்கும் நாள், அடுத்த நாள் என்பது உணர்த்தியது என்க. நம் வீரமா முனிவரும் அக் குறிப்பை முன்னரே யுணர்ந்தவ ராதலின், அங்ஙன மாயதென்றறிந்து அருள் நோக்குடன் அருளிறையை அன்புடன் பணிந்து, அடியார்களுடன் ஆசிரமத்துக் கெழுந்தருளினர்.

அன்றிரவு, தம் மாணுக்கர்களுக்கு மறுநாள் நடக்க வேண்டிய அனேக குறிப்புக்களே யுணர்த்தினர். இராசு முதலியார் முதலிய வன்பர்களுக்கு இனி மேல் தேவால யத்தில் நடக்கவேண்டிய காரியங்களே, நடத்திவரப் பணித்தனர். தினந்தோறும் பால்கொண்டு வந்து கொடுக்கும் கிருஷ்ணன் என்னும் யாதவனிடத்தில், அன்ப, "இரண்டு தினம்தான் பால் தேவை நேரம் தவ ருது கொடுத்தி" யென வியம்பினர். கோவிலின் ஈசா னிய திசையில், தமது திரு மேனியைச் சமாதிவைக்கும் மிடத்தையும், பரிவர்த்தனே செய்து, மடத்துக்குச் சொந்தமாக்கினர். குகைக்கு வேண்டிய கருங்கற்களே யும், கணக்காக முன்னரே சேகரித்து வைத்தனர். அடி

யார்களிடத்தில், "நாளேக் கற்புரமும், பூ மாலேகளும் அதிகமாக வேண்டிய திருக்கும்" என்றனர். இன்னும், பாரிசாதவனேசுரருக்குத் தெப்போத்ஸவம் நடத்த எல்லாச் சாமான்களேயும் சேகரித்தனர். தெப்போத்ஸவம் எப்போது என்று வினவினவர்களுக்கு, "இவ் வருஷம் நடத்த இயலாததால் நிறுத்தினேம்" என்றனர். "வீரமா முநிவர், தொடங்கிய பணிகளில், இங்ஙனம் இயம்பியது என்றுமில்லே, இன்று இவ் வணம் இசைத்தது என்னேயோ" வென்று ஒன்றும் தோன்ருது, அசைவற்றவரே யாயினர். இங்ஙனம், அனேக அறிகுறிகளே அறிவித்ததும், அனேவரும் அனேக விதமாக ஆலோசித்து அனேக ஐயப்பாடுகள் அடைந்தார்கள். முன்னுணர்வால், முற்றும் குறிப்பால், உணர்த்திய முழுக் கருணே தான் என்னே!

23. சண்முகப் பெருமானே பட்டபாதராகவும், திருஞான சம்பந்தராகவும், அவதரித்து முறையே கரும பத்தி மார்க்கங்களே ஸ்தாபித்தும், சங்கரரே சங்கரராக வந்தவதரித்து, அனேக மகிமைகளேக் காட்டி, ஞான மார்க்கத்தை உலகின்கண் ஸ்தாபித்தும், தம் எதார்த்த வடிவங்களே, எய்தியதைப் போலச் சாக்கை வீரேசப் பெருமானே, நம் வீரமா முநிவராக, அவதரித்து, அனேவருக்கும் கர்ம பக்தி மார்க்கங்களே உபதேசித்து, நிலே பெறும்படிச் செய்தும், முடிவாகிய சங்கர கோவிலூர் அத்வைத ஞானமார்க்கத்தை, அசைக்க முடியாத முறையில் அமைத்தும், அநேக மகிமைகளேக் காட்டியும், தமது அமல பத வடிவமாக அமரவேண்டு மென்ற சங்கற்பம் பூண்டபடி செய்து உத்ஸவப் பத்தாம் நாள் காலேயில், ராசு முதலியார் முதலிய அன்பர்களே அழைத்து அன்பர்காள், "இன்று உச்சியம் போதுக்குள் ஐந்து ரதங்களும்

அமரு மிடத்தில் வந்து அமரவேண்டும். ஆகையால், ஆட்களைச் சேர்த்து அதிவிரைவாக இழுமின்'' என்று ஆஞ்ஞாபித்து, தாமும் எழுந்தருளித் தேர் வடத்தைத் தமது அபயத் திருக்கரத்தால் அன்போடு பற்றி ஈர்க்கலும், அதிவிரைவாக அருமை ரதமும், அங்ஙனே சென்றது. வீரமா முநிவரும் விமல ஆநந்தத்தால், விரிந்த முகத்தோடும் விரைவாகத் திருமடம் வந்து, சிறிது இளைப்பாறி, அருள் நீராடி, பேறுமிக்க பெரு நீறிட்டுச், சிவாநந்தச் சிற்றுண்டி யுண்டு, பாரிசாதவனேசுவரர் தேர் ஊர்வதில் நேரிலா ஆநந்தம் பொங்க, வந்த வூரர் மன்றத்துக்குச் சென்றது போன்று, திருத்தேரை நோக்கிச் சென்றருளினர். செல்லுங்கால் லயக் குறிப்பைக் காட்டுவதாக ரதமானது, தெற்கு வீதியின்கண், துருவாச முநிவருக்கு, பாரிசாதவநேசுவரர் அருள் சுரந்து, ஆநந்தத் தாண்டவம் காட்டி யருளிய; நடராசப் பெருமான் சந்நதியும், பிரம்ம தீர்த்த மேல் கரையுமாகிய, முத்தி ஸ்தாநத்துக்குச் சென்று விட்டது. அச் சமயத்தில், அவ் விடம் எழுந்தருளிய, நம் வீரமா முனிவருக்கு, அரன்றன், அருமை யடியார்கள் அறுபத்து மூவர் அருந்தொகையானது போல், நம் அமலமா முனிவருக்கும், அருமையாகிய வருஷம் அறுபத்து மூன்றும் அமையப் பெற்றன.

அத்தகைய விரோதி கிருது வருஷம் வைகாசி மாதம் இருபத்தேழாம் தேதி, சுக்ர வாரம், விசாக நக்ஷத்திரம், சுக்ல பக்ஷம், திரயோதசி திதி. உச்சிப் போதாகிய சுப தினத்தில், பாரிசாதவனேசுரர் ரதத்துக்கு முன் சென்று, பல்லாயிரம் சனங்கள் சூழ, வேதங்கள் ஒலிக்க, பஜனை ஒலிகள், சிவநாம ஒலிகள், தேவார ஒலிகள், சங்க முதலிய எல்லா வாத்திய ஒலிகளும், ஏககாலத்தில் கடல் ஒலி போல் ஒலிக்க, அப் பாரிசாத

விறை இரதத்தின் வலப்பாகத்தினின்று, "அரகர மஹாதேவா" வெனப் பன்முறை புகன்று, ஆநந்தக் கூத்தாடிக் கொண்டு, இரண்டு திருக்கரங்களையும் சிரசின் மேல் குவித்துக் கொண்டு, இவ் வுடலை நீத்து, ஜோதி வடிவ சிவமே யாயினர். அத் திரு மேனியானது பூமியில் சாயும் போது, அருகில் நின்ற அந்தணர், தாங்கிக்கொண்டனர். கீழ் விழும் தருமங்களைத் தாங்குபவர் தக்கவரே யென்னும் குறிப்பும், தமக்குப் பின் தம் குரு ஸ்நானத்தை இவ் வணமே யாவரேனும் தாங்கிக் கொள்வரென்னும் குறிப்பு மாம். இத் தகைய அற்புத மான நிர்வாண பத மாதலி னன்றோ! அந்தரியாமீ யாகிய, பரமான் மாவின் அருளினல், சிருங்ககிரி ஜகத் குருபீடம் ஸ்ரீ சிவாபி நவ நரசிம்ம பாரதி சுவாமிகள் அவர்கள்பால் தோன்றலும், அன்னர் "இன்று நமது மரபை வளர்க்கும் பெரியார் விதேக முத்தியை எய்துவர்" என்றருளினர். வாத வூரடிகள் முதலியோர், ஜோதியுட் சென்று கலந்தனர்" என்பது நூல்களால் உணரப்படுகின்றது. அத் தகைய நிலையை ஆஸ்திகர் நம்புவரன்றி, நாஸ்திகர்கள் நம்பாது விடுவர். அத் தகையோர்க்கும் கண் கூடாக நம் வீர சேகரனர் விமல முத்தியை அடைந்தமை, அத் தகைய நாஸ்திகரையும் அப்பெரியாரது அருள் நிலையை அங்கீகரிக்கும்படி வைத்தது, இவ் வீரேச முநிவரது, விமல மூர்த்தியின் பெருமைதான், என்னே!

24. இவ் வண்ணம், இவ் வீர முனிவரது, விமல முத்தியைக் கண்ட பல கணங்கள், பல நிமிட நேரம் பரவசமாய் ஒன்றுந் தோன்ருது, அசை வற்றவாரே யாயினர். பின் விழிப்புற்றுப், பல்லாயிரவரும், பறபல வாருக இரங்கற் பாக்களைப் பாடினர். அவ் வனைத்தும் ஒன்று சேர்ந்து பெருங் கடலொலி போலக் காணப்

பட்டன. அத்துடன் பிரமன் சபைக்குச் சிவ பெருமான் எழுந்தருளித் தேவரும், ரிஷிகளும், அன்பு மிகுதியினுல், செய்வ தின்னது என் றறியாது, ஆநந்த பரவசர்களாய், எப்படி நடித்தார்களோ, அதைப் போல, முன் சொல் லிய பல்லாயிரம், பல இரங்கற் பாக்களைக் கூறியும்: நினைத்தும், கசிந்தும், விழுந்தும், புரண்டும், ஆடியும், பாடியும், தேடியும், பிரலாபித்தும், இன்னும் பல விதச் செய்கையு முடைய ராயினர். அன்று தினம் திருக்களர் களரியாகவே காணப்பட்டன. வித்தக ராகிய விரசேகரனுரிடத்துப் பல ஜனங்களுக்கு இருந்த அன்புதான்' என்னே!

25. இங்ஙனம், துருவாச முநிவர் போன்று, வந்து அருள் வலியால். அடைந்தவர்க் கருளும் பாரிசாத வநே சுரப் பெருமானுக்கு, அரும் பணிகள் செய்து, வாதவூரடி கள் போல், அவ் விறைவனது வடிவமே யான வீரேசப் பெருமான் விமல முத்தியின் பின்னர், வீரேசரது பல வடியார்களிலும், தலைமை வாய்ந்தவரும், இரண்டா முறை பாடம் போதித்துக் கொண்டிருந்தவரு மாகிய அண்ணுமலை ஞான தேசிக சுவாமிகளை, ஸ்ரீ ஆண்டவரின் குறிப்பின்படி வெள்ளி யங்கிரிச் சுவாமிகள் முதலிய அடியார்களும், தேவகோட்டை முருகப்ப செட்டியார் முதலியன வைசியர்களும், சேர்ந்து, கோவி லூர் மடால யத்துக்கு ஆசிரியராக விருக்க வேண்டு மென்று வேண் டிக் கொள்ளலும், அன்னுர். அதற் கிசைந்து, ஆசிரியர் ஸ்தாநத்தில் அமர்ந்தனர். அவ்வண்ணுமலை ஞாந தேசி கர், வீர மாதவரது விமலத் திருமேனியை, அரியபீடத் தின் மே லிட்டு, பல்லாயிர அடியார், அன்பர் குழாங் களுடன், அநேக வித அபிஷேகங்களை அள வின்றிச் செய்து, அநேக வித புஷ்ப மாலை முதலியவைகளால் அளவிட்டுக் கூறற் கரிய முறையில், அலங்கரித்தும்,

அநேகவிதமான நைவேத்தியங்களுடன் சோடசோபசார பூசை முதலியவற்றை நடத்திப் போற்றி வணங்கிய பின்னர், பல வித புஷ்பங்களால் அலங்கரிக்கசப்பட்ட புஷ்ப விமாநத்தி லேற்றி, பல வைபவங்களுடன், வீதி வுலாச் செய்ய நிச்சயித்த போது, அது சமயம் ராசு முதலியார் முதலிய அன்பர்கள் வந்து, ரதங்கள் ஐந்தும், வடக்கு வீதியிலும், தெற்கு வீதியிலும், நிற்கின்றமை யின், வீதி வுலாச் செய்வது, தடைப்படுமென்று கருதி, வீரேசர் சந்நதியில், தண்டம்போல் விழுந்து நமஸ் கரித்து, "வாதவூ ரடிகள் போல, தாங்கள் மஹானுய் யாங்க ளனைவருங்காண முத்தி யடைந்தது உண்மையா யிருக்கின், இந்த ரதங்கள் ஐந்தும் உச்சிப் போதுக்குள் நிலைக்கு வந்துவிடல் வேணடு" மென்று பிரார்த்தித் தனர். அதன் பின்னர், ரதங்களை இழுக்கச் செய்தனர். வீரேச னருளால், ஐந்து ரதங்களும் நிலைக்கு வந்து விட்டன. அதன் பின்னர், வீரேசரது திருமேனியைப் பொலிவு மிக்க புஷ்ப விமாநத்தில், பொலிவுற எழுந் தருளச் செய்து, செந் தூள் பறக்க, அன்பர்க ளனைவரும், ஆடியும், பாடியும், அமோக மாகத் திருவுலாக் கொண்டு சென்று, ஐந்து ரதங்களின் முன் நிறுத்தி, கற்பூர ஆரத்தி செய்யப்பெற்ற போது, பாரிசாத விறையின் ரதத்தி லிருந்து, உபய கருடன் தோன்றி, வீர முனிவரது விமா நத்துள் சென்று பரிசித்து மறைந்தன. அம்மையும் அய் யனும், அங்ஙனம் தோன்றி, தன்னேடு ஐக்கியப் படுத் திக் கொண்டதை, குறிப்பா லுணர்த்திய தென்க. பின்னர், நான்கு வீதிகளிலும், கோலாகல வைபவத் துடன் திரு வுலாக் கொண்டுவந்து, முன்னரே முனிவர னர் திருவுளங் கொண்டிருந்த திருத் தலத்தின் ஈசானிய திசைக்கண் தேரோடும் வீதிக்கு வடபுற முள்ள பூமியில் வேத ஆகம விதிப்படி முன்னர் குறிக்கப் பெற்ற கருங் கற்களாலமைக்கப் பெற்ற குகையில், அடக்கம் செய்து, பலவிதமான பொன், தங்கம், வெள்ளி, ரெத்தினங்கள், அதி லிட்டு, விபூதி, கற்பூரம், மஞ்சள், செந்தூள் முதலிய வற்ருல் பந்தநம் செய்து, பல விதமான ஆராதனைகள் செய்து; வணங்கிப் போற்றினர், அன்று தேவர்கள் பூ

மாரி பொழிந்தது போல், சிறு மழைத்துளிகள் இடையறுது தூரிக்கொண்டேயிருந்தன. அன்று, திருமேனிக் கபிஷேகம் செய்த தீர்த்த மணத்தையும், துளி கூட விடாது, எல்லா ஜநங்களும் எடுத்துக் கொண்டு தம் தம் இருப்பிடம் சேர்ந்தனர். வீர முனிவர் விதேக முத்தியடைந்த பின்னரும், விசேஷமாக வைபவம் நடக்கும்படிச் செய்த அருட் சத்தியின் வலிமை தான் என்னே!

26. பின்னர், அண்ணுமலை ஞான தேசிகர், மூன்றுந் தினத்தில் செய்ய வேண்டிய மூன் றுங் கிரியையும் செய்து, மோக்ஷ தீப மென்னும் பத்தாங் கிரியையும் அளவிடற்கரிய அடியார் குழாங்களுடன் அமோக மாக அபிஷேக அலங்கார நைவேத்திய ஆராதனைகளைச் செய்தும், மகேசுவர பூசை நடத்தியும், அடியார்கள், மற்றும் ஏனைய அனைவருக்கும், ஈய வேண்டியதை இயல்புடன், போதும் போதுமென்ன கொண்டல் போலக் கொடுத்தனர். மற்றும், பலர் லிங்க வடிவ மாகிய நம் வீரேசருக்குப் பல வித உபயங்களும், பிராத்தனைகளும் நடத்தினர். பின்னர், சில மாணுக்கர்களாலும், தந வைசியர்களாலும், கொடுக்கப்பட்ட திரவியங்களைக் கொண்டு, அவ் வண்ணுமலை ஞாந தேசிகர், வீர முனிவரின் அதிஷ்டாநத்துச்குக் கற்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், விமான முதலானவற்றை மிகவும், அழகு பொருந்தும்படி செய்து முடித்து, ஆநந்த வருஷம் தை மாதம் 21உ புதன் கிழமை சதுர்த்தி திதி உத்திர நக்ஷத்திரம் அமிர்த சித்த யோகம் மீன லெக்னத்தில், கும்பாபிஷேகமும் பல, வகை வைபவங்களுடன் பாங்குறச் செய்து முடித்துப், பற் பல அடியார்களுக்குப் பற் பல தானமும் செய்து, இரண்டு கால பூசையும் நடத்தியும், மேற்படி பூசை நைவேத்யத்துக்கும், அடியார்களின் பிக்ஷைக்கும், பாரிசாத வனேசுவரர் கோவில் அமுது படிக்கும், விளை நிலம் வாங்குவித்து நடாத்திவந்து விதேக கைவல்ய மடைந்தனர்.

அதன் பின்னர், மகா தேவ ஞான தேசிக சுவாமிகள் கோவிலூர் மடாலயத்தின் தலைமை ஏற்றுக்கொண்டு,

பல வாறு விருத்தி செய்து கொண்டு, வேதாந்த போத காசிரியராக இருந்து வந்ததுடன், தம் ஆசிரியராகிய வீர மாமுனிவரின் அதிஷ்டானத்துக்கு திருப்பணி செய்யக் கருதி பிரகார மண்டபம், உத்ஸவ மூர்த்தி ஆலயம் முன் ராஜ கோபுரம், முன் 16 கால் மண்டபம், முதலிய பல திருப் பணிகளை, அரிய பெரிய உரிய நய மிக்க கற்பணி யாக்கிப் பல, வகைத் தீபங்களை அழகு வாய்க்க அலங்கரித்து, கண்டார்க்குக் கைலாச மெனவும், சிவாலயம் போலச் சிறக்கச் செய்து, பல வித வைபவங்களுடன் முன்னர் திருக் களர் ஆண்டவர் சிவபெருமானுக்கு நடத்திவந்ததைப் போல, நடத்தி வந்து கும்பாபிஷேகமும், பல சிறப்புகளுடன் செய்து முடித்து, அன்பர்களுக்கும், அடியார்களுக்கும், வேண்டிய வாறு கொடுத்து, விசேஷ சந்தோஷத்தை யடையும்படிச் செய்தனர். சாதுக்கள் போசநத்துக்கு விளை நிலங்களும் வாங்கி வைத்தனர். பின்னரும், அநேக அன்பர்கள், அநேக பிரார்த்தனைகள் செய்து, பிரார்த்தனைகள் ஈடேறி, அநேக கட்டளைகளும் நடத்தி வருகின்றனர். வீரமா முநிவர், ஜிவந் முத்தி தசையோ டிருக்கும்போது நடந்த, அநுக்ரக நிக்ரகச் செயல்களைக் காட்டிலும், விதேக முத்தி யடைந்து சமாதி கொண்டிலகும் அதிஷ்டானத்தில், நடக்கும் அநுக்ரக நிக்ரகச் செயல்கள் எளியன் மநதுக்கு எட்டிய வரையில், எழுத ஆரம்பிக்கின், ஏட்டி லடங்கா. எட்டாதவை, எண்ணக் கூடியவை அல்ல, இவ் வீரேசரது தவ வலிமை இருந்த வாறு தான், என்னே!

27. இவ் வீரேசரது அதிஷ்டானத்தில், எல்லா அதிஷ்டானங்களைப் பார்க்கிலும், செல்வமும், சிறப்பும் ஓங்கியும், ஓங்கிக்கொண்டும், ஓங்கவும் இருப்பது, எல்லோருக்கும் கண்கூடே. இதற்கு விளக்கம் வேண்டாம். இவ் வீரேசரது விசித்திர மான அருள் வலியிருந்த வாறு தான், என்னே!

வாழ்க, வீரேசர் பொற் கழல்கள்!

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றும்.

பிழைதிருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	17	ப	ஒருமா (ப)
6	21	வப	காலே ஒருமா (வப)
12	23	பிராகெட்டு	பிராக்கெட்டு
15	18	பரில்ரமும்	பரிகரமும்
16	19	திருவெண்ணக் காப்பும்	திருவெண்ணெய்க் காப்பும்
18	9	வெள்ளைபணம்	வெள்ளைப்பணம்
19	13	இக்கோயிலிக்கு	இக்கோயிலுக்கு
20	7	கருனை	கருணை
,,	19	தரபப்டி	தரப்படி
,,	26	கீழக்கு	கிழக்கு
,,	29	திய்தி	தெய்தி
23	14	பூவிம்	பூவும்
,,	15	அரைந்பணமும்	அரைப்பணமும்
,,	19	கூட்டிக்கொள்ளவும்	கூட்டிக்கொள்ளவும்
24			
,,	27	இக்குகிற	இருக்கிற
,,	29	சிதையுன்	சிதையுண்
25	25	முநலியாரை	முதலியாரை
30	10	மாலையனிந்த	மாலையணிந்த
31	13	நாண்கு	நான்கு
37	21	யென்ணர்க	யென்க.
,,	22	பெருருவடமருதூர்	பெருவடமருதூர்
,,	22	பெரும்பலமதூர்	பெரும்பலமருதூர்
38	10	தாரை	தாமரை
39	5	குழவு	குலவு
,,	28	அந்தரப்பாவித	அந்தர்ப்பாவித
43	23	வணங்குவல்	வழங்குதல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
45	2	தர்திவ	தாதிவர்
47	20	துவதறத்தார்	துறவறத்தார்
48	14	பொழிவு	பொலிவு
,,	19	அது சென்னி	எமது சென்னி
50	10	நூல்களை	நூல்களையு
,,	19	களப்பால்	களப்பாள்
,,	20	களப்பால்	களப்பாள்
51	12	னரன்ரு	னரன்ருன்
,,	22	இருவிணை	இருவினை
,,	26	புலநானூறு	புறநானூறு
52	13	பிறம்பினுலே	பிரம்பினுலே
,,	15	விறைவாக	விரைவாக
,,	26	சீரயோற்	சீரியோர்
,,	29	தன்னளி	தண்ணளி
53	3	துவே	மிதுவே
,,	5	பய	பைய
,,	6	ய்ய	உய்ய
,,	7	மெய்மையான அருளைப்பெருவ	மெய்ம்மையான அருளைபெறுவ
54	32	றும்பொருளை	றுப்பொருளை
57	4	பெறுகின்றத்	பெறுகின்ற
59	2	குதிப்பார்	குரிப்பார்
65	9	யணித்த	யணிந்த
68	21	நத்தியம்	நந்தியம்
69	17	வீழு	விழு
72	4	தீக்கர—வீசும்	தீச்சுர—விசும்
,,	8	சில	சிவ
74	14	பசனை	பனை
75	30	கரகோக நகர்	காகோல நகர்
76	2	பணிச்	பணீச்
81	16	வேலே	வேளை
82	13	ஞானசிவ	ஞானச்சிவ
96	19	யுயரித்	யுயரித்தலமதனிற்
,,	21	சென்றணைந்துத லமதினிற்	ென்றணைந்து
100	11	கூடினவகா	கூடினவாக
112	23	ஒரு	ஓடு
115	21	படுக்கையில்ல	படிக்கையிலே

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	23	அந்நற்	அந்தப்
123	8	எட்டு நான்	எட்டு நாள்
131	5	திட்டான	அதிட்டான
139	3	பரமானந்த	பரமானந்தப்
,,	4	கயிலைப்புத்தேன்	கயிலைப்புத்தேள்
,,	14	சிவலிங்கத்திலேர் மறைந்த	சிவலிங்கத்திலே மறைந்தனன்.
141	21	யடைந்துப்	யடைந்து
143	30	உசிநரன், திருவன,	உசிநரன் திருவன்,
146	8	சச்கிதானந்த	சச்சிதானந்த
,,	19	தேவருளவா	தேவருணவா
148	23	பவர்கள்ள	பவர்கள்
149	20	ரறுபகற்	ரறுபகல்
155	2	யாழினினின்றும்	யாழினின்றும்
,,	25	முழுவதை	முழுவதையும்
157	10	அன்னைப்	அன்னப்
,,	19	நெற்றியையுடைய	நெற்றியையுமுடைய
160	3	களுள்ளே	களுள்
161	11	குறிப்பதாக	குறிப்பதாகவே
,,	,,	இருப்பதால்	இருப்பதாலப்
167	12	வைந்தெழுந்	வைந்தெழுத்
,,	27	இப்பாரித	இப்பாரிசாத
168	29	களின்று	களினின்றுந்
169	24	மானைப்	மாலைப்
171	12	வவைகளின்றுந்	வவைகளினின்றுந்
177	21	பிரம்தேவரால்	பிரமதேவாரல்
179	10	ரன்குணமென	நன்குணமென
,,	29	சுவர்க்குச்	கவர்க்குச்
181	3	அகமகிழ்தன்பு	அகமகிழ்ந்தன்பு
182	1	மோஷ	மோக்ஷ
183	22	ருந்தயதி	ருந்திய
188	12	சொல்லாம்	சொல்லலாம்
189	25	இந்திரனுகிச் செல்வத் தை இந்திர நுகர்ந்து	இந்திரனுகி, இந்திர செல்வத்தை நுகர்ந்து
191	16	விரிந்திடும்	விரிந்திடும்
196	4	ஒழுகுவார்க்கு	முழுகுவார்க்கு
,,	12	இவ்விடத்தில்	இவ்விடயத்தில்
204	14	கொஞ்மு	கொஞ்சமு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
206	20	யில்வனத்	யிவ்வனத்
207	17	எந்தகைய	எத்தகையினே
209	11	போருந்தியிருத்த	பொருந்தியிருந்த
210	2	னண்ணினுன்	நண்ணினுன்
213	26	சூடிய	சூட்டிய
217	11	கிவபெருமான்	சிவபெருமான்
218	24	தண்வாத	தணவாத
219	6	வேறு	பேறு
224	30	குளிர்ப்தற்குரிய	குளிப்பதற்குரிய
228	21	இிளிய	இனிய
230	1	மளவும்	மீளவும்
,,	30	ரயமேத	ரயமேதப்
232	20	சிவலோக	சிவலோகப்
,,	32	கிடைக்காது	கிடைக்காது
236	15	யடைந்தின்புரு வார்கள்	யடைந்தின்புறு வார்கள்
238	6	சிவகதியுற்	சிவகதியிற்
240	28	ன்றவன்றன	லவன்றன
248	1	பேறுதற்குரிய	பெறுதற்குரிய
249	24	நமக்கு	நுமக்கு
,,	26	நும்பிக்கை	நம்பிக்தக
260	22	விரத்தை	விரதத்தை
269	11	தென்பாலுறை	தன்பாலுறை
270	22	அப்பென்னே	அப்பொன்னே
273	20	உகர்ந்த	உகாந்த
279	14	யனுபவித்துந்	யனுபவித்துப்
281	3	தொருவிலேந்	பொருவிலேந்
284	29	தாம பொருந்தி	தாம்பொருந்தி
294	2	சொல்லேக் கேட் டாலும்	சொலேக்கேட்டாலும், சொல்லில் ஒரெழுத்தைக் கேட்டாலும்